# ஒரு வேண்டுகோள்



அன்பான வாசகரே...!

அடிக்கடியோ, எப்போதாவதோ குடிக்கும் பழக்கம் உங்களுக்கு இருக்கிறதா? அப்படியென்றால் [illegible] பட்டிருக்கும். கேள்விகளுக்கு உங்களுக்குள்ளேயே நீங்கள் ஆம், இல்லை என்று மனப்பூர்வமாகப் பதில் சொல்ல முடியுமா? ப்ளீஸ்...! எனக்காக...!

1. குடித்த பிறகு திறமையாக வேலை செய்ய முடிகிறது என்று நீங்கள் நம்புகிறீர்களா?
2. தனியாகக் குடிக்கும் பழக்கம் உங்களுக்கு உள்ளதா?
3. பகல் பொழுதிலும் குடிக்கும் பழக்கம் இருக்கிறதா?
4. குடித்த பிறகு நடக்கும் சம்பவங்கள் நினைவில் தங்குவதில்லையா?
5. முன்பு இரண்டு [illegible] போதையைப் பெற இப்போது இன்னும் அதிகமாகக் குடிக்க வேண்டியுள்ளதா?
6. சமீபத்தில் உங்களுக்கு [illegible] வந்திருந்ததா?
7. கை நடுக்கம் உள்ளதா?
8. சக்திக்கு மீறிக் குடிக்காகச் செலவழிப்பதுண்டா?
9. வலிப்பு, வயிற்று வலி வருகிறதா?
10. காரணமில்லாமல் [illegible]

ப்ரிய வாசகரே! [illegible]

நன்றி!

அன்புடன்,
சிவசங்கரி

கங்கை ★ ஒரு மனிதனின் கதை சிவசங்கரி

# சிவசங்கரி

# ஒரு மனிதனின் கதை



# ஒரு மனிதனின் கதை

சிவசங்கரி

கங்கை புத்தக நிலையம்

13, தீனதயாளு தெரு,
தியாகராய நகர், சென்னை – 600 017.

| | | | |
|---|---|---|---|
| முதற் பதிப்பு | : | ஏப்ரல், | 1981 |
| இரண்டாம் பதிப்பு (கங்கை) | : | டிசம்பர், | 1989 |
| மூன்றாம் பதிப்பு (கங்கை) | : | ஆகஸ்ட், | 1996 |
| நான்காம் பதிப்பு (கங்கை) | : | டிசம்பர், | 2002 |
| ஐந்தாம் பதிப்பு (கங்கை) | : | அக்டோபர், | 2003 |
| ஆறாம் பதிப்பு (கங்கை) | : | மார்ச், | 2008 |

© ஆசிரியருக்கு

**விலை : ரூ.85.00**

- TITLE : **ORU MANITHANIN KATHAI**
- AUTHOR : SIVASANKARI
- LANGUAGE : TAMIL
- EDITION : SIXTH EDITION, MARCH - 2008
- SUBJECT : NOVEL
- No. OF PAGES : 308
- PUBLISHED BY : **GANGAI PUTHAKA NILAYAM**
  23, Deenadayalu Street,
  Thyagaraya Nagar, Chennai-17.
  ☎ 24342810, 24310769
- PRICE : **Rs.85.00**

Typesetter : AMARAVATHI Chennai-33, Ph. 2485 04 84

Printed at : NOVENA OFFSET PRINTING CO., Chennai-5 ☎ 28446891, 28446166

தெரிந்தோ, தெரியாமலோ குடிப்பழக்கத்துக்கு ஆளாகி, அதன் பாதிப்புக்களால் தாக்கப்பட்டு, அல்லலுற்று, அமைதி இழந்து, 'எப்படியாவது இதிலிருந்து மீள வேண்டும்' என்று இக்கதையின் கதாநாயகன் போலத் தவித்துப் பரிதவிக்கும் பல மனிதர்களின் வாழ்க்கை வெகு சீக்கிரமே நிம்மதி நிறைந்ததாய், இன்பம் பொங்குவதாய் மாற வேண்டும் என்ற ஆத்மார்த்தமான பிரார்த்தனையோடு இந்தப் புத்தகத்தை உலகெங்கும் வாழும் 'த்யாகு'க்களுக்குச் சமர்ப்பிக்கிறோம்.

ஆசிரியர், ஆனந்தவிகடன் — சிவசங்கரி

# என்னுரை

**1976-ம்** ஆண்டு, ஒரு நாள் காலை 'ஹிந்து' பேப்பரைப் புரட்டின நிமிஷத்தில் அந்த விளம்பரத்தை நான் பார்த்தேன். எண்ணி நாலு வரிகள்தாம். ஆனாலும் அதனுள் அடங்கியிருந்த சேதி வித்தியாசமாக இருந்தது. 'நீங்கள் ஒரு ஆல்கஹாலிக்கா? குடிப் பழக்கத்தை எப்படியாவது விட்டுவிட வேண்டும் என்று நினைக்கிறீர்களா? கவலைப்படாதீர்கள், உங்களுக்கு உதவி செய்ய நாங்கள் இருக்கிறோம், இவ்வளவுதான். அடியில் சென்னை ஆல்கஹாலிக்ஸ் அனானிமஸ் சங்கத்தின் விலாசம்.

'ஆல்கஹாலிக்ஸ் அனானிமஸ்'ஸா?

அப்படியென்றால்?

அனாமதேயக் குடிகாரர்களா?

அப்படியென்றால்?

இதைப்பற்றி இன்னும் கொஞ்சம் விரிவாய் அறிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணம் எழ, அன்றே அந்த விலாசத்துக்குக் கடிதம் எழுதினேன்.

நாலாம் நாள் பதில் வந்தது.

என் கணவரோ, நானோ குடிக்கும் பழக்கம் உள்ளவராக இருக்கலாம் என்ற ஊகத்தில் சங்கக் காரியதரிசி குடியின் கொடுமைகளை விளக்கி, எப்படி படிப்படியாய் அதிலிருந்து மீளலாம் என்ற பாம்ஃப்லெட்டுகள் பலவற்றை எனக்கு அனுப்பியதோடு, 'சென்னைக்கு வந்தால் என்னைச் சந்தியுங்கள், உங்களுக்கு எந்த விதத்திலும் உதவ நான் தயார்' என்றும் எழுதியிருந்தார்.

இரண்டு நாட்களுக்கு வேறு எந்த சமாசாரத்திலும் புத்தி போகாமல் அவர் அனுப்பியிருந்த பாம்ஃப்லெட்டுகளைத் திரும்பத் திரும்பப் படித்தேன்.

சாதாரண குடிகாரருக்கும், ஆல்கஹாலிக்குக்கும் உள்ள வித்தியாசங்கள் என்னென்ன?

ஆல்கஹாலிஸத்தை வியாதி என்று குறிப்பிடுவது ஏன்?

ஆல்கஹாலிஸத்தை இனம் கண்டு கொள்வது எப்படி?

ஆல்கஹாலிக்ஸ் அனானிமஸ் அமைப்பு எப்போது, ஏன் உருவானது?

குடியை விட்டுவிட விரும்பும் நபருக்கு ஏ.ஏ. அமைத்திருக்கும் பன்னிரண்டு விதிமுறைகள் என்னென்ன?

ஒரு குடிகாரன் மட்டுமல்லாமல் அவனைச் சார்ந்த அனைவரும் கூட்டு முயற்சியாய் எப்படிச் செயல்பட வேண்டும்?

இப்படி - இதுநாள்வரை நான் கேள்விப்பட்டிராத விஷயங்கள்.

ஆல்கஹாலிஸம் என்பது வியாதியா?

சர்க்கரை வியாதி மாதிரி, ஒத்துக் கொள்ளாதவருக்குக் குடி வியாதியாகி விடுகிறதா?

இது என்ன புது கண்ணோட்டம்?

ஏன் இதுநாள்வரை இது பற்றி யாரும் விரிவாக எடுத்துச் சொல்லவில்லை?

'ஐயோ! குடிகாரனா?' என்று முகம் சுளிக்கும் சமூகம் குடி வியாதியாகி விடுகிற பலருக்குத் தீவிர சிகிச்சை, அலாதி கவனிப்புத் தேவை என்பதை விளக்க ஏன் முன்வரவில்லை?

திடுமென்று பல வருஷங்களாய் நான் சந்தித்திருந்த சில குடிகார நண்பர்கள் என் நினைவில் எட்டிப் பார்த்தார்கள்.

பரம சாதுவாக இருந்தாலும், இரண்டு பெக் உள்ளே போய்விட்டால் மனைவியை நாலு பேர் முன்னால் 'திமிர் பிடித்த கழுதை' என்று திட்டி அனாவசியமாகச் சண்டை போட்ட நண்பர்-

பத்து பேர்கள் நடுவில் வடைகளை பாண்ட் பாக்கெட்டில் போட்டுக்கொண்டு விடியவிடிய சாப்பிட வராமல் பாடிய நண்பர்-

தன்னை நினைத்தே சுயபச்சாத்தாபத்தில் அழுத நண்பர்-

''நானா? ராத்திரி அப்படியெல்லாம் சொன்னேனா, நினைவு இல்லையே!'' என்று காலையில் கண்களை விரித்த நண்பர்-



வேலைக்குப் போகாமல், க்ளப்பில் இருபத்திநாலு மணி நேரமும் குடித்து, பித்துக்குளித்தனமாக நடந்து மானம், மரியாதை இழந்த நண்பர்-

இன்னும்...இன்னும்...

கடவுளே!

அவர்கள் அத்தனைபேரும் வெறும் மிடாக் குடியர்கள் இல்லையா? மனபலம் இல்லாமல் கோழைகளாக, குடிகாரர்களாய் மாறியவர்கள் இல்லையா? குடி வியாதியாக மாறி அவர்களைப் பாதித்ததால்தான் அந்த மட்டமான நடத்தையா?

நிஜமாகவா?

தாங்கள் ஆல்கஹாலிக்ஸ் என்பதை அந்த நண்பர்கள் உணர்ந்திருந்தார்களோ? 'கணவர் வியாதியஸ்தர்; இதிலிருந்து மீள அவருக்கு நம் ஒத்துழைப்பும் தேவை' என்று அவர்களின் மனைவிகள் நினைத்தார்களோ?

ஆயிரமாயிரம் கேள்விகளும் சந்தேகங்களும் மனதைப் பிறாண்ட, அந்த முறை சென்னைக்குச் சென்றபோது ஏ.ஏ. செயலாளரைச் சந்தித்தேன். நிறையப் பேசினேன். ஏராளமான புத்தகங்களைப் படித்தேன். மனோதத்துவ நிபுணர் டாக்டர் வி. ராமச்சந்திரனைச் சந்தித்தேன். பல குடிகாரர்களின் கேஸ்களைப் பற்றி விவாதித்தேன். அவர் சொன்னவற்றையெல்லாம் புரிந்துகொள்ள முயற்சித்தேன்.

விவரங்களைத் தெரிந்துகொள்ளத் தெரிந்துகொள்ள, புதுக் கண்ணோட்டத்திலிருந்து குடிகாரர்களைப் பார்க்கப் பார்க்க, நாம் புரிந்துகொண்டதை, உணர்ந்துகொண்டதை மற்றவர்களிடம் பகிர்ந்துகொள்ள ஆசை உண்டானது. ஆக்கபூர்வமாக எதையாவது செய்யவேண்டும் என்ற வெறி உண்டானது.

விகடனில் தொடர்கதை எழுதச் சந்தர்ப்பம் எழுந்தபோது ஆசிரியர் திரு. பாலனிடம் ஐந்து வருஷங்களாய் என்னுள் ததும்பிக்கொண்டு, ஓர் உருவமாய் வெளிப்பட்டு வரட்டுமா என்று தவித்துக் கொண்டிருந்த ஆல்கஹாலிஸத்தைப் பற்றிச் சொன்னேன்.

கண்களை மூடி நான் கூறியதைக் கேட்டபின், சற்றே கலங்கின கண்களோடு என் கருத்தை ஆசிரியர் ஆமோதிக்க, த்யாகு பிறந்தான், கங்கா பிறந்தாள், ஒரு மனிதனின் கதை பிறந்தது.

'த்யாகுவின் வாழ்க்கை ஒரு குடிகாரனின் மனதைத் தொட்டுச் சிந்திக்க வைத்தால்கூடப் போதும்; என் எழுத்துக்கு வெற்றி கிடைத்துவிட்டது' என்று நினைத்திருந்ததால் 'நான் த்யாகுவாக இருந்தேன் - இன்று மாறிவிட்டேன்,' 'என் கணவர் த்யாகுவைப் போல வாழ்ந்தார், இன்று திருந்திவிட்டார்', 'கங்காவிடமிருந்து நான் ஒரு பாடம் கற்றேன்' - என்று பல கடிதங்கள் வந்தபோது நான் நெகிழ்ந்துதான் போனேன்.

தொடராக வெளியிட்டதும் அல்லாமல் சாதாரணமாக யாருக்குமே கிடைக்காத கௌரவமாய், இக்கதையை உடனடியாக அழகிய புத்தகமாக வெளியிட முன்வந்த விகடனுக்கும், ஆசிரியர் பாலன் அவர்களுக்கும் நான் நிறையக் கடன்பட்டிருக்கிறேன். தொடர்ந்து, மறுபதிப்பாக வெளியிட ஆர்வத்துடன் முனைந்திருக்கும் கங்கை புத்தக நிலையத்தாருக்கு, என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இக்கதை உருவாக எனக்குத் தேவையான ஆலோசனைகளைத் தந்த டாக்டர் வி. ராமசந்திரன், ஆல்கஹாலிக்ஸ் அனானிமஸ் சென்னை அமைப்பின் செயலாளர் - இருவருக்கும் என் தனிப்பட்ட நன்றி.

கதையைப் படிக்கத் தூண்டுகோலாக சிறப்பான படங்களை வரைந்து சிறப்பூட்டிய ஓவியர் திரு. ஜெயராஜ், விகடன் ஆசிரியர் திரு. பாலன் இவர்கள் அனைவரோடும் எனக்குக் கிடைத்த பெருமை, பாராட்டுக்களைப் பகிர்ந்து கொள்வது மனசுக்கு ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது.

சென்னை, அன்புடன்
6-12-89 சிவசங்கரி

# ஒரு மனிதனின் கதை

## 1

த்யாகு கண்களை மூடிக்கொண்டான்.

தொண்டை சுத்தமாய் வரண்டு போயிருந்தது. நாக்கு துணி மாதிரி துவண்டுவிட்டது.

தலைக்குள் மரங்கொத்தி ஒன்று உட்கார்ந்துகொண்டு ஓயாமல் கொத்திப் பிடுங்கும் வேதனை.

காதுக்குள் பறவைகளின் படபடா.

இந்த அவஸ்தை இன்னும் எத்தனை நாழிகைக்கு?

தலையைத் தூக்காமல் பார்வையை மட்டும் நிமிர்த்தி இந்தப் பக்கமும், அந்தப் பக்கமும் பார்த்து யாரும் தன்னை ஊன்றிக் கவனிக்கவில்லை என்ற தைரியம் எழ, வலது கையை மெதுவாய் முன்னால் நீட்டி விரல்களைச் சற்றே பிரித்துப் பார்த்தான். நீட்டிய விரல்கள் குளிர் கண்ட இனுசில் நடுங்குவது புரிய, சடக்கென்று கையை மடித்துத் தொடைக்கும் நாற்காலிக்கும் நடுவில் செருகிக்கொண்டான்.

இந்த அவஸ்தை இன்னும் எத்தனை நாழிகைக்கு?

பேசாமல் மாடிக்குப் போய் ஒரு வாய் விஸ்கி குடித்துவிட்டு, போன வேகத்திலேயே திரும்பி வந்துவிட்டால் யாருக்கு என்ன தெரியப் போகிறது.

ஒரே ஒரு வாய்....

சின்ன மடக்காய்...

தவித்து வரண்டு போகும் தொண்டைக்கு இதமாய்....

கொஞ்சம் உள்ளே போனால்கூடப் போதும்; அப்புறம் இந்த வரட்டல் இருக்காது. இந்த தவிப்பு இருக்காது. இந்த மரங்கொத்திக் கொத்தல் இருக்காது....

ஒரே ஒரு வாய்.....

நாற்காலியை விட்டு எழுந்த த்யாகு யாரோ பிடித்து அமுக்கின மாதிரி மீண்டும் உட்கார்ந்துகொண்டான்.

பெத்த தகப்பன் பிணமாகக் கிடக்கும்போது என்ன இழவு அவஸ்தை இது?

இந்தச் சில மணி நேரங்களைக்கூடத் தாக்குப் பிடிக்க முடியாவிட்டால் அப்புறம் என்ன மனுஷன் நான்?

இரண்டு கைகளாலும் நாற்காலியின் கீழ்ச் சட்டங்களை அவன் இறுகப் பற்றிக் கொண்டான்.

நோ - நாட் நௌ...

இன்னும் கொஞ்ச நேரத்தில் சித்தியும், குழந்தைகளும் வந்துவிடுவார்கள்; அப்புறம் சுடுகாட்டுக்குப் போய் வந்து குளித்த பின் கங்கா, சித்தி, மற்றவர்களுடன் கீழே இருக்கும் நாழிகையில் தைரியமாய் - பாதியில் அவள் வந்து விடுவாளோ என்ற பயம் இல்லாமல் - மாடியில் குடிக்கலாம்.

மனசை அது சப்புக் கொட்டிக்கொண்டு ஏங்கும் ட்ரிங்கிலிருந்து பிடுங்கும் முயற்சியோடு த்யாகு தன்னைச் சுற்றிக் கவனித்தான்.

சாமிநாதனை நடுக்கூடத்தில் தெற்கு வடக்காகக் கிடத்தி இருந்தார்கள்.

கால், கை கட்டை விரல்களில் கட்டு. சித்தி வர முன்னே பின்னே ஆகலாம் என்பதால் முன்யோசனையுடன் இரண்டு பக்கமும் நீள நீளமான ஐஸ் கட்டிகள், அவற்றிலிருந்து உருகி ஓடும் ஜலத்தைத் தடுத்து நிறுத்தும் சாக்கு அணைகள். பிணநெடி எழாமல் இருக்க ஏராளமாய்த் தெளிக்கப்பட்ட யூடிகோலோன். பூ மாலைகள்.

நாட் பேட் அட் ஆல்!

மனுஷன் உசிரோடு இருந்த காலத்தில் சூடாக ஒரு தம்ளர் காபி கலந்து கொடுக்கக்கூட முகத்தைக் காட்டின கங்கா இன்று சவமாகிப்



போனவருக்கு விழுந்துவிழுந்து உபசாரம் செய்திருப்பதை உணர்ந்தபோது அழுத்தமாக இறுகிக் கிடந்த உதடுகளின் உட்புறத்தைச் சின்ன முறுவல் ஒன்று கீறியது.

சிரிப்பா? இப்போதா?

சே! - என்ன விவஸ்தை இல்லாத மனசு இது?

அப்பனைத் தெற்கு வடக்காகக் கிடத்தியிருக்கும்போது ஒரு பிள்ளைக்கு சிரிக்கத் தோன்றுமா என்ன?

தோன்றுகிறதே! அப்புறம் என்ன செய்ய?

அப்பாவின் மேல் படிந்திருந்த கண்களை த்யாகு வாசப் பக்கத்துக்கு விரட்டினான்.

சாஸ்திரிகள், பச்சை மூங்கில், தென்னம் மட்டைகள், இதர சாமான்கள், ரொம்ப சிரத்தையுடன் கிட்டத்தில் நின்று மேற்பார்வை பார்க்கும் சேஷன் - கங்காவின் தகப்பனார்.

உயரமாய், தொந்தி தொப்பையுடன் நின்றுகொண்டு கன அக்கறையுடன் வேலை வாங்கும் மாமனாரைப் பார்க்கையில் த்யாகுவினுள் பளிச்சென்று கோபம் சீறிக் கொண்டு மின்னியது.

எல்லாம் இந்த மனுஷனால்தானே?

சும்மா கிடந்த கங்காவைத் தூண்டிவிட்டவர் இவர்தானே?

நேற்று வரை தன் வேலையைப் பார்த்துக்கொண்டிருந்த மனுஷன் இன்று பிணமாகக் கிடப்பதற்கு இவர்தானே காரணம்?

ஒன்றுமேயில்லாத விஷயத்தை அப்பாவும் பெண்ணுமாய்ப் பெரிசு பண்ணியதும் அல்லாமல் இந்த மனுஷனை வரவழைத்துச் சொல்லி, இவரை உணர்ச்சி வசப்படுத்தி, ஏற்கெனவே ஹார்ட் பேஷண்டானவரை வாச் வாச்சென்று கத்தச் செய்து... இப்படிப் படுக்க வைத்துவிட்டு அப்புறம் இந்த அக்கறை என்ன, முகத்தில் வண்டி வேதனை என்ன?

எல்லாம் வேஷம்தானே?

தொடைக்கு அடியில் அமுக்கி வைத்திருந்த கைவிரல்கள் இப்போது நன்றாகவே நடுங்கத் தொடங்கிவிட்டது புரிய த்யாகு கால்களைப் பலமாக அழுத்திக்கொண்டான்.

திடும்மென்று தொண்டை வரட்சி அதிகமாகி, மூச்சு விடுவது சிரமமாக இருப்பது போலத் தோன்ற, அவசரமாய் கொஞ்சம் எச்சிலைக் கூட்டி விழுங்கிக்கொள்ள முயற்சித்தான்.

ம்ஹூம், பிரயோஜனம் இல்லை.

காதுக்குள் எழுந்த இரைச்சலின் சப்தம் யாருக்காவது கேட்டு விடுமோ என்று பயமாக இருந்தது.

ஒரே ஒரு பெக்...

சின்னதாய்...

ஒரு வாய்... தட்ஸ் ஆல்...

இனியும் தாங்கமுடியாது என்று ஆனதும் த்யாகு எழுந்தான். கால்களை அகலஅகலமாக வைத்து, மாடிப்படிகளை இரண்டிரண்டாய்க் கடந்து தன் அறைக்குள் இருந்த பாத்ரூமுக்குள் நுழைந்து கதவைத் தாள் போட்டுக்கொண்டான்.

மார்புக்கூடு ஏறி இறங்கி, மூச்சு 'புஸ்' ஸென்ற சப்தத்துடன் வெளிவந்தது.

டாய்லெட் ஃப்ளஷிங் டாங்கின் மூடியைத் திறக்க முடியாதபடி கை ஏகமாய் நடுங்கியது.

திறந்தான், வலது கையை உள்ளேவிட்டு நீரில் துழாவினான். மிதக்கும் ஃப்ளோட் பந்துக்கு அடியில், லைஃபனுக்குப் பக்கத்தில், பட்டையாய்ப் படுத்துக் கிடந்த பாட்டிலை எடுத்தான்.

ஒருவித அவசரத்துடன் மூடியைத் திறந்து மூக்குக்கு முன் அந்தத் திரவத்தை நீட்டி சுவாசித்த பின் ஒரு மிடக்கு குடித்தான்.

அம்மா...

இது என்ன மணம்...

இது என்ன இன்பம்....

பொங்கிவரும் பால் ஒரு துளி ஜலத்தை ஸ்பர்சித்ததும் அடங்குவது போல, அந்தப் படபடப்பும், இரைச்சலும் மாயமாய்த் தேய்ந்து ஓய்ந்தன. மூளையின் ரத்தநாளங்களைக் கொத்திக் கொண்டிருந்த மரங்கொத்தி பறந்து மறைந்தது.

நாலைந்து மணி நேரங்களாய்க் கிட்டாத நிம்மதி வாடா ராஜா என்று இரு கைகளாலும் அணைத்துக்கொண்டது.



நின்று நிதானித்து அந்த இதத்தை அனுபவிக்க விடாதபடி கதவு தட்டப்பட்டதும் பயத்துடன் த்யாகு 'யாரு?' என்றான்.

கண்ணன் - அவன் மகன்.

''விசு மாமா வந்திருக்கார், அம்மா உங்களை உடனே கீழே வரச் சொன்னா...''

''வரேன் - நீ போ...''

பெரிய வாயாய் ஒரு தரம் குடித்த பின், பாட்டிலை பழையபடி டாங்கின் அடியில் படுக்க வைத்துவிட்டு ஓசைப்படாமல் மூடியை மூடினான்.

கங்காவை எத்தனை வருஷங்களாக, எத்தனை சுலபமாக, ஏமாற்ற இந்த பாத்ரூம் டாங்கும், தன் சாமர்த்தியமும் உதவுகின்றன என்பதை நினைத்துப் பார்த்தவனுக்குச் சந்தோஷமாக இருந்தது.

கங்காவுக்கு வெஸ்டர்ன் க்ளாஸெட்டை உபயோகிப்பது பிடிக்காது.

''ஸ்டூல் மேல உட்கார்ந்துண்ட மாதிரி.. தூ ‧ எனக்கு அதெல்லாம் வாண்டாம்ப்பா...''

அவளுக்குக் கீழே இருக்கும் இண்டியன் ஸ்டைல் டாய்லெட்தான் சரிப்பட்டுவரும். மாடி பாத்ரூமுக்குள் அவள் நுழைவது அத்தி பூப்பதற்குச் சமம்.

கணவனின் குடிப்பழக்கம் அதிகமாகிவிட்டது என்பதைப் புரிந்துகொண்ட பிறகு கங்கா அவனுடைய மாடி அறையை அக்கு வேறு ஆணி வேறாக அலசி, பாட்டில் வேட்டை ஆடியது உண்டுதான். ஆனாலும் இந்த இடம் இன்று வரை ஏனோ அவளிடம் அகப்பட்டுக் கொள்ளவே இல்லை.

பாத்ரூமை விட்டு வெளி வருமுன் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்து நாலுதரம் புகையை உள்ளுக்கு வாங்கி வெளியில் விட்டான். விஸ்கியின் நெடி இல்லாமல் இருக்கவேண்டி எரியும் நிலையிலேயே சிகரெட்டை ஒரு பக்கமாகக் கீழே போட்டு விட்டுக் கதவைத் திறந்தான்.

அறையில் இருந்த ட்ரெஸிங் டேபிள் முன் நின்று சென்டா, ஆஃப்டர் ஷேவ் லோஷனா, இல்லை நீலகிரித் தைலமா என்று அரை நிமிஷம் யோசித்தவனுக்குத் தகப்பனின் பிணம் கிடக்கும்போது

முதல் இரண்டும் அசட்டுத்தனமாய்த் தெரியும் என்பது புரியவே, நீலகிரித் தைலத்தை எடுத்து காலர் மேல் இரண்டு சொட்டுக்களை விட்டு நெற்றியிலும் தேய்த்துக் கொண்டு கீழே வந்தான்.

விக மாமா சென்னையில் அவர்களுக்கு இருக்கும் சொல்ப உறவுக்காரர்களில் ஒருவர்.

அவரோடு கங்கா நின்றிருந்தாள்.

கண்களில் ஜலம், முகத்தில் வேதனை, புடவைத் தலைப்பில் கை.

''அடுத்த வருஷம் ஷஷ்டியப்த பூர்த்தி வர்றதும்மா, சாஸ்த்ரோக்தமா பண்ணிக்கணும்னு வாய்க்கு வாய் சொல்லுவார்.... இப்படி நினைச்ச நினைப்பில்லாம போயிட்டாரே மாமா... எனக்கு மனசு ஆறலியே... பிள்ளை காலடிலே உசிரை விடணும்னு கங்கணம் கட்டிண்டாப்பல ராத்திரி போட்மெயில்லே புறப்பட்டு இங்கே வந்து இப்படிப் பொசுக்குனு போயிட்டாரே... சித்திய நா எப்படிப் பார்ப்பேன்... ஐயோ...! என்னால தாங்க முடிலையே மாமா...''

கங்காவின் பேச்சும் குரலும் போலியாய் ஒலிக்க, த்யாகு முகத்தைத் திருப்பிக்கொண்டான்.

பத்து நிமிஷத்தில் விக மாமா புறப்பட்டுப் போனார்.

அவர் தலை மறைந்ததும் கிட்டத்தில் வேண்டியவர் யாரும் இல்லை என்பதை ஊர்ஜிதப்படுத்திக் கொண்டு, கங்கா சிடுசிடுப்புடன் கேட்டாள்:

''என்ன, என்னமோ வாசனை வர்றது?''

''தலை வலிச்சுது... தைலம் தேச்சிண்டேன்...''

மேற்கொண்டு பேசினால் விஸ்கி வாசனையைக் கங்கா அடையாளம் கண்டு கொள்வாள் என்ற பயத்துடன் த்யாகு நகர்ந்து போய் வாச வராந்தாவில் உட்கார்ந்துகொண்டான்.

தெரு மனிதர்களும், நண்பர்களும், இருந்த ஓரிரண்டு உறவுக்காரர்களும் வந்து போய்விட்டார்கள். வாசலில் எல்லாம் ரெடி. சித்தி வந்துவிட்டால் எடுத்து விடலாம்.

''வேறே யாராவது வர்றத்துக்குள்ள வந்து ரெண்டு வாய் போட்டுண்டு போங்களேம்ப்பா...'' - கங்கா ரகசியமாய் அழைக்க, சேஷன் உள்ளே போனார்.



குத்துக்கல் மாதிரி நான் உட்கார்ந்துகொண்டு இருக்கிறேன், மதித்து ஒரு வார்த்தை ஏதாவது சாப்பிடுகிறீர்களா என்று கேட்டால் என்னவாம்?

அப்பாவைக் கவனிக்கத் தெரியும்போது இது மட்டும் தெரியாதா?

கழுதை - திமிர் பிடித்த கழுதை.

தங்களுக்குத்தான் பணம் இருக்கிறது என்கிற அகம்பாவம்.

எரிச்சலுடன் த்யாகு கடிகாரத்தைப் பார்த்தான்.

இரண்டா?

பத்து மணிக்கு சித்தி கிளம்பிவிட்டதாய் சேதி வந்திருக்கிறது. பத்தும், ஆறும், நாலு ஆக, நாலு. மணிக்கு முன்னால் சித்தி இங்கே வர முடியாது.

மேலே போய் இன்னொரு ட்ரிங்க் அடித்தால் என்ன?

ருசி கண்டுவிட்ட நாக்கு விஸ்கிக்குப் பறவாய் பறக்க த்யாகு எழுந்தான்.

கூடத்தில் நின்றிருந்த கங்காவிடம் ''தலை வலிக்கிறது. நா மாடிலே இருக்கேன். சித்தி வந்துட்டா கூப்பிடு'' என்று சொல்லிவிட்டு, அவள் பதிலுக்காகக் காத்திராமல் மேலே போனான்.

பாத்ரூம் கதவைச் சாத்திக்கொண்டு பாட்டிலை எடுத்து இன்னும் ஒன்னே ஒன்னு, தட்ஸ் ஆல் என்று தீர்மானத்துடன் குடிக்கத்துவங்கியவனின் மனசில் கங்காவின் அலட்சியம் பூதமாய்ப் படர்ந்திருந்தது.

இரண்டாவது பெக் உள்ளே போனதும் என்றோ செத்துப் போய்விட்ட அம்மாவின் நினைப்பு வந்தது.

கொதிக்கும் ரசத்தை அப்பா அம்மா முகத்தில் விசிறி அடித்ததும், நகம் பதியத் தொடையில் தன்னைக் கிள்ளியதும், அம்மா செத்த மறு வருஷமே வெட்கமில்லாமல் சித்தியைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு வந்ததும் நெஞ்சை அடைக்கத் தொடங்க, சீக்கிரமே அந்த விஸ்கி பாட்டில் காலாகக் குறைந்து போனது.

இரண்டு மூன்று முறைகள் பிள்ளையை அனுப்பி அழைத்தும் கணவன் கீழே வராததால் தானே மேலே வந்து 'என்ன பண்றேள் பாத்ரூம்குள்ளே? சித்தி வந்தாச்சு, வெளியே வாங்கோ' என்று கங்கா படபடப்புடன் அதட்டவும், 'இவள் என்ன என்னை விரட்டுவது, நானும் நாய்க்குட்டி போலப் பின்னால் ஓடுவது?' என்ற கடுஞ்சினம் எழுந்ததன் காரணமாய் வழக்கம் போலக் குடிபோதை அதிகமாகி விட்டால் சாதுவான த்யாகுவுக்குள்ளிருந்து ஒரு முரட்டு த்யாகு பிரசவமாகும் தினுசில் அந்த கணத்திலும் ஒரு ஜனனம் நிகழ்ந்தது.

## 2

"டே......த்யாகூ... ஊ...!"

தோளில் பையை மாட்டிக்கொண்டு விறுவிறுவென்று நடந்த த்யாகு நின்றான்.

சற்றுத் தள்ளி இருந்த மைதானத்தில் கோபு, காசி, நாணா, கைகளில் கில்லித் தண்டு.

"வாடா இங்க...!"

அரை நிமிஷம் தாமதித்துவிட்டு த்யாகு மைதானத்தைப் பார்க்க நடந்தான்.

"வேகு வேகுனு இத்தனை வேகமா எங்கடா போறே? நாங்க கூப்பிடறது கூடக் காதுலே விழாம?"

"..............."

"ஸ்கூல் விட்டதுமே என்னடா நேர வீட்டுக்கு ஓடறே? வந்து எங்களோட கில்லி ஆடிட்டுப் போனா என்னவாம், ம்?"

"ஐய - கில்லியும் கோலியும் விளையாடறதுக்கு நல்ல ஆளைப் பார்த்தேடா! இவரு க்ளாஸ்லே ஃபர்ஸ்டுடா, நம்ப மாதிரி மக்குப் பசங்களோட விளையாட மாட்டாரு..."

எதற்கும் பதில் பேசாமல் த்யாகு நின்றான். நித்தமும் நடக்கும் சீண்டல்தானே?



"நாங்கல்லாம் பண்ணையார் தோப்புக்குப் போய் மாங்கா அடிச்சித் தின்னப் போறோம்... வர்றியாடா?"

"நா வரலை".

"ஏன்டா வரலை?... மாட்டிக்கிடுவோமேன்னு பயமா? பயப்படாதேடா...நீ பொட்டைப் புள்ளை மாதிரின்னு எங்களுக்குத் தெரியும்... நீ வேலி தாண்டி தோப்புக்குள்ளார வரவாணாம் . வெளியிலே நில்லு, என்ன?"

"இல்லேடா, நா வரலை..."

"ஏன்டா?"

"எங்கப்பா திட்டுவார்டா..."

"ஏன்டா திட்டுவாரு? நாங்க உன்னை என்ன பண்ணிடுவோம்?"

"அதுக்கில்லே காசி, வந்து..." த்யாகுவின் சங்கடம் புரிந்த தினுசில் நாணா அவன் சப்போர்ட்டுக்கு வந்தான்.

"தினமும் உங்களோட இதே ரோதனையா போயிடுத்துடா.. அவன் வந்தா வரான், வராட்டாப்போறான், விடுங்களேன்... ஏன்டா தொணதொணனு அவன் பிராணனை வாங்கறேள்?"

"பின்னே என்ன நாணா... நீயும் ஐயர் வீட்டுப்பிள்ளை தானே, எங்களோட குஷாலாவிளையாடலை? அப்புறம் இவனுக்கு மட்டும் இத்தனை ராங்கி எதுக்கு?"

"ராங்கி இல்லேடா காசி... எனக்கும் உங்களோட சேர்ந்துண்டு விளையாடணும்னு ஆசையாத்தான் இருக்கு.... ஆனா ஆத்துக்கு லேட்டாப் போனா அப்பா உதைப்பார். பொழுதோட சந்தி பண்ணிட்டுப் படிக்க உக்காரலைன்னா முதுகுத் தோலை உரிச்சு உப்பு தடவிடுவார்டா..."

த்யாகுவின் கெஞ்சல் புரிந்த விதத்தில் நண்பர்கள் மௌனமானார்கள்.

"நா போகட்டுமாடா...?"

நாணா தலையை அசைக்க, த்யாகு திரும்பி நடந்தான்.

பத்தடிகள் போனவனைக் காசி உரத்த குரலில் கூப்பிட்டான்:

"டேய் உனக்குப் பச்ச மிளகா கதை தெரியுமில்லே? ஒரு அப்பா, அம்மா, அவங்களுக்குப் பசங்களே இல்லியாம். ஒரு நாள் அந்தம்மா தோட்டத்துக்குப் போனாங்களாம். பச்ச மிளகாச் செடி கொத்துக்கொத்தா காச்சிருந்ததைப் பார்த்திட்டு 'இந்தப் பச்சமிளகா மாதிரியாவது நமக்கு ஒரு குழந்தை பிறக்கக் கூடாதா'னு ஆசைப் பட்டாங்களாம். கொஞ்ச நாள்லே நிஜமாகவே அவங்களுக்குப் பச்ச மிளகாய் ஒண்ணு பிள்ளையா பிறந்திடிச்சின்ற கதை உனக்குத் தெரியுமில்லே? பார்த்திட்டே இரேன் - உங்க வீட்டுலேயும் இப்படியேதான் நடக்கப் போகுது - சதா படிபடினு உன்னைப் புஸ்தகப் புழுவா உங்கப்பா ஆக்குறார் இல்லே... ஒருநாள் இல்லாட்டி ஒரு நாள் தூங்கி எழுந்தா நீ இருக்கமாட்டே. நீளமா, கருக்கஞ் கருக்கமாக ஒரு புழுதான் உன் பாய்ல படுத்துட்டு இருக்கப் போவுது..."

காசி பிரமாதமாகப் பேசிவிட்ட திருப்தியில் மற்றவர்கள் கையைக் கொட்டிக்கொண்டு சிரிக்க, த்யாகு வேகமாய் அந்த இடத்தை விட்டு நகர்ந்தான்.

த்யாகுவின் தந்தை சாமிநாதன் ஒரு சம்ஸ்கிருதப் பண்டிதர். வேத பாடசாலையில் அத்யயனம் பண்ணிப் படிக்காவிட்டாலும், சம்ஸ்கிருதத்தில் நல்ல பாண்டித்யம். வேதம், புராணம் இத்யாதிகள் மனுஷனுக்கு அத்துப்படி.

ஹைஸ்கூலில் வாத்தியார் வேலை பார்த்துக்கொண்டே, லீவு நாட்களில் உபன்யாசங்கள் செய்வதும், ஒழிந்த நேரத்தில் தெரிந்த பெரிய மனுஷர்களுக்கு சம்ஸ்கிருதப்பாடம் எடுப்பதும் உண்டு என்பதால் ஊரில் அவருக்கு நல்ல மதிப்பு.

சாமிநாதன் ரொம்ப உயரமில்லை. ஒஹோ என்ற ஆகிருதியும் இல்லை. சரியாகச் சொல்ல வேண்டுமென்றால் நரையான் மாதிரி உடம்பும், மாநிறத்துக்கும் மட்டமான நிறமுமாய்த்தான் இருப்பார். ஆனாலும் பஞ்சக்கச்சம், குடுமி, பட்டை விபூதி, கழுத்தில் ருத்திராட்சம், தோளில் பனாரஸ் சால்வை என்று வந்து நின்று விட்டால் சொல்லத் தெரியாத ஒரு கம்பீரம் தானே வந்துவிடும்.

இந்த சாமிநாதனுக்கு அக்கால வழக்கப்படி இருபத்தோராம் வயசில் கல்யாணமாயிற்று.



என்ன தெய்வ குத்தமோ தெரியவில்லை; சரியாய் இரண்டாம் வருஷம் அந்தப் புண்ணியவதி காமாலை ஜுரத்தில் இந்த உலகத்தின் பந்தம் போதும் என்று தீர்மானித்து மண்டையைப் போட்டதும், போனவளையே நினைத்துக் கொண்டு ஏங்கித் தவிக்க விரும்பாத சாமிநாதன், பெற்றவர்கள் உடனுக்குடன் இரண்டாவது திருமணத்துக்கு ஆயத்தம் செய்தபோது கம்மென்று இருந்து விட்டார்.



ராஜாம்பாளை இரண்டாந்தாரமாகக் கைப்பற்றியபோது அவருக்கு வயசு இருபத்திநாலுதான்.

ராஜாம்பாளைப் பற்றி இங்கே கொஞ்சம் தனியாப்ச் சொல்லவேண்டும்.

மொழுமொழுவென்று பூசின உடல் அமைப்பால் சற்றுத் தூக்கலாகவே தெரியும் தாழம்பூ நிறம். மையைப் பட்டையாப்த் தீட்டித் தீட்டி மான்குட்டிக் கண்களாகப் படபடக்கும் விழிகள். சந்தனப் பேலாவைக் கவிழ்த்தது போன்ற மார்பகங்கள். தொடையை இடிக்கும் பின்னல்.

நிஜமாகவே ராஜாம்பாள் அழகிதான். அப்புறம், சமர்த்தும் கூட.

கல்யாணமான மறு வருஷம் த்யாகராஜன் பிறந்தபோது அவள் அழகு கூடிப் போயிற்றே தவிரவும் குந்துமணி குறையவில்லை.

த்யாகுவுக்குப் பிறகு இரண்டு குறைப் பிரசவங்கள். அவனுக்கு ஐந்து வயசாகும்போது வசந்தா பிறந்தாள்.

நினைவு தெரிந்த நாளாய் அம்மாவின் அழகையும், குணத்தையும் தெரு ஜனங்கள் விமர்சிப்பதைக் கேட்டுப்பழகியிருந்த த்யாகுவுக்கு அம்மாப்பித்து அதிகம்.

அப்பாவிடம் எத்தனைக்கெத்தனை பயமோ, அத்தனை அம்மாவிடம் சுவாதீனம், கொஞ்சல் அதிகம்.

ராத்திரி சமையல்கட்டிலேயே உட்கார வைத்துக் கல்லுச் சட்டியில் தயிர்சாதம் பிசைந்து, கையை நீட்டச் சொல்லி ஒரு உருண்டை சாதத்தை வைத்து, சொட்டு வத்தக் குழம்பையும் ஊற்றி அம்மா சாப்பிடச் சொன்னால் சாதத்தை வாய்க்குக் கொண்டு போகாமல் 'நீ பாடும்மா, நா கேட்டுண்டே சாப்பிடறேன்' என்பான்.

அம்மா கன்னம் குழியச் சிரிப்பாள், சப்தமில்லாமல்.

''நல்ல பிள்ளைடா நீ - சாப்பிடறப்போகூடவா பாட்டு வேணும்?''

அடுத்த உருண்டை கைக்கு வருவதற்குள் 'த்யாகராஜ யோக வைபவம்' கீர்த்தனை நிதானமாய் டி.கே. பட்டம்மாள் பாடுகிற தொனியில் வெளிப்பட்டு விடும்.



'த்யா......ஆ......க ரா........ஆ......ஜ........

யோ......ஓ......க வைபவம்......

வைபவம், பவம்....... வம்.......'

ஆனந்தபைரவி குழையும், நெளியும், துள்ளும், ஜலஜல வென்று ப்ரவாகமெடுக்கும்.

த்யாகுவுக்குக் கண்களில் நீர் துளிர்த்துவிடும். சாதம் தொண்டையில் இறங்காமல் அந்தரத்தில் தவிக்கும். இந்த லயிப்பெல்லாம் அம்மாவும், பிள்ளையும் தனியாக இருக்கும் போதுதான்.

அப்பா வீட்டில் இருந்தால் இந்த பாட்டு இருக்காது. இந்த நிம்மதி இருக்காது, ஒரு மண்ணும் இருக்காது.

சதா புலியை சர்க்கஸ்காரன் விரட்டுகிற மாதிரி உர் உர் என்றிருந்தால் பாட்டாவது, கொஞ்சலாவது?

''என்ன பாட்டு வேண்டிக் கிடக்கு எப்பப் பார்த்தாலும்?... தேவடியா வீடா இது?'' என்பார்.

''காலம் நேரம் இல்லாம என்ன கூத்து இது?'' என்பார்.

''ஸ்வாமி அறைலே நின்னு ஒரு பாட்டுப் பாடினா விசேஷம். அதை விட்டுட்டு சமையக்கட்டுலேயும், கொல்லைப் பக்கமும் உட்கார்ந்துண்டு விவஸ்தை கெட்ட காரியமா என்ன இது?'' என்பார்.

பாட்டு மேல் அப்பாவுக்குக் கோபமில்லை. அம்மாவின் அழகு மேல், அவளை நாலு பேர் புகழ்வதன் மேல், அவள் கெட்டிக்காரத்தனத்தின் மேல்தான் அவருக்கு ஆத்திரம் என்பது அந்த வயசில் த்யாகுவுக்குப் புரியவில்லை. பின்னால் விளங்கியது.

காலையில் ஐந்துக்கு அவனை சாமிநாதன் எழுப்புவார். தான் எழுந்து பின் பக்கம் போகுமுன் காலால் இவனை நெரடி 'டே! எந்திரு' என்று அதட்டி விட்டுப் போவார்.

எழுந்து முகம் அலம்பி, விபூதி இட்டுக்கொண்டு ஸ்லோகம் சொல்ல உட்காரவேண்டும்.

உச்சரிப்பு கொஞ்சம் தப்பியதென்றால் தொடையில் நகம் பதியக் கிள்ளுவார்; மண்டையில் புடைக்கும்படி குட்டுவார்.

ஒரு தரம் சொல்லிக் கொடுத்ததை உடனே சரியாகச் சொல்லாவிட்டால் காது கையோடு கழன்று வந்துவிடும்படி திருகிக்கொண்டே பத்து தரம் சரியாகச் சொல்லச் சொல்லுவார்.

''நாக்குலே தர்ப்பையைப் போட்டுப் பொசுக்கினாத்தான் நீ உருப்படுவே போல இருக்கு... சோறு திங்கத் தெரியறதோன்னோ? கவனம் எங்கடா இருக்கு...?'' என்று உறுமி, தொடையைக் கிள்ளினால் த்யாகு கண்ணில் குளமாக ஜலம் ஊறிவிடும்.

''பொம்மனாட்டிக் குழந்தையாட்டம் மனுக்குனா கண்ணுலே ஜலம் வந்துடறத்துக்குக் குறைச்சல் இல்லே... பேமானி.. வயசு ஆச்சு குட்டிச்சுவராட்டம், ஏழு. அந்தக் காலத்திலே ஒரு அட்சரத்தைத் தப்பா உச்சரிச்சா, நாள் பூரா எங்களை முட்டி போட்டு நிக்க வைச்சு சொல்லச் சொல்லுவா... நாங்க அப்படிப் படிச்சோம், அதான் அஸ்திவாரம் பலமா இருக்கு... ஹூம்... நீ எங்கே உருப்படப் போறே... அபஸ்மாரம். ப்ராரப்தம்...''

நல்லவேளையாக சுபாவத்தில் சாதுவாக இருந்தாலும், மண்டையில் நிறைய மூளை இருந்ததன் காரணமாய் த்யாகு படிப்பில் அந்த வயசிலேயே சோடை போகவில்லை.

உருப்படமாட்டே, உருப்படமாட்டே என்றே தன்னை அப்பா கரித்துக் கொட்டுவதோ, இல்லை தெரிந்தவர்கள் 'உங்க பையன் சமர்த்து, புத்திசாலி' என்று பாராட்டினால் 'என்ன பெரிய புத்தி... நா இத்தனை பெரிய பண்டிதனா இருக்கறத்துக்கு அவன் இருக்கறது போறாது' என்று அலட்சியமாகப் பேசுவதோ த்யாகுவை வாஸ்தவத்திலேயே அதிகம் பாதிக்கவில்லை. ஆனால், அம்மாவின் அருமை புரியாமல் அவளையும் அவர் ஓடஓட விரட்டுவதைத்தான் அவனால் சுத்தமாகத் தாளமுடியாமல் இருந்தது.

அது என்ன கோவம்?

அது என்ன ஆத்திரம்?

தொட்டால் குத்தம், நின்றால் குத்தம் என்று ஒரு மனுஷனுக்கு இப்படிக்கூடவா ஆவேசம் வரும்?

ஒன்றுமில்லை - அன்றைக்கு அம்மா குனிந்து பரிமாறும் போது பின்னல் சற்றும் எதிர்பாராத நொடியில் முன்னால் வந்து அப்பாவின் இலையைத் தொட்டுவிட்டது. இத்தனைக்கும்



அம்மாவுக்குக் கவனம் அதிகம். இப்படித் தாறுமாறாய் ஏதாவது நடக்கக்கூடும் என்ற பயத்தோடு இடுப்பில் பின்னலைச் செருகிக்கொண்ட பிறகே பரிமாற வருவாள். அன்றைக்கு என்னமோ போறாத காலம்.

இலையைப் பின்னல் தடவி, சாதத்தைஸ்பர்ஸித்ததும் அப்பா 'என்னை ராபசமாடறே?' என்ற சத்தத்துடன் தலையை நிமிர்ந்தாரே, அதோடு சும்மா இருக்கக் கூடாதா?

சடாரென்று எழுந்தார். கவரோரமாய் இருந்த அரிவாள் மணையை எடுத்தார். சாட்டையாய்த் தொங்கின பின்னலை ஒரே நொடியில் பாதியாய் அறுத்தெறிந்து விட்டார்.

''தேவடியா நாயே, பொம்மனாட்டிக்கு அடக்கம் வேணும்டீ... ஞாபகம் வைச்சிக்கோ...''

சுமங்கலியின் தலை மயிரை அறுத்தெறிந்து, நாக்கில் நரம்பில்லாமல் பேசும் அளவுக்கா ஒரு மனுஷனுக்குக் கோபம் வரும்? வந்ததே...!

சாஸ்திரம் படித்தவர். நல்லது கெட்டதை ஊருக்கு எடுத்துச் சொல்பவர்.

என்ன இருந்து என்ன?

இப்படித்தான் - ஒரு சமயம் ரசத்தில் உப்பு இல்லை என்று சொம்போடு கொதிக்கும் ரசத்தை முகத்தில் வீசியடித்தார், அன்றைக்கு கீரையில் மண் நறநறவென்று நெருடியது என்பதற்காக அதை வழித்து சுவரில் எறிந்தார். இன்னும்...

வீடு வந்து விட்டது.

தோளில் பையுடன் த்யாகு வீட்டுக்குள் நுழைந்தபோது ரேழியில் அப்பா, ஆடிட்டர் தம்பிகளுக்குப் பாடம் எடுத்துக் கொண்டிருந்தார். ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பலஸ்ருதி வியாக்யானம்.

ரேழியைக் கடந்தவனுக்கு அப்பாவின் குரல் கணீர் என்று கேட்டது.

'ந க்ரோதோ நச மாத்ஸர்யம்
ந லோபோ நா சுபாமதி:

பவந்தி க்ருத புண்யானாம்
பக்தானாம் புருஷோத்தமே'.

புண்ணியத்தைச் செய்து வாசுதேவனிடத்தில் பக்தி கொள்பவர்களுக்கு கோபம், த்வேஷம், ஆசை, கெட்ட புத்தி உண்டாவதில்லை என்கிறார் பகவான்.

'ந க்ரோதம் - கோபம் இல்லை

ந ச மாத்ஸர்யம் - த்வேஷம் இல்லை...'

பையை வைத்துவிட்டுக் கிணற்றடிக்குப் போன த்யாகு ஒரு நிமிஷம் அப்படியே நின்றான்.

வாசுதேவனை ஆராதிக்கிறவர்களுக்குக் கோபம் இல்லை என்கிறாரே அப்பா, இது நிஜமென்றால் வருஷ வருஷமாய் மணி அடித்து, வாய் ஓயாமல் பாராயணம் பண்ணி, பிரமாதமாய்ப் பூஜை செய்து கடவுளை ஸ்மரிக்கிற இவருக்கு மட்டும் ஏன் காரண மில்லாமல் இத்தனை கோபம் பொத்துக் கொண்டு எழுகிறது?

இல்லை, அப்பா சொல்வது நிஜமில்லை. பொய், அப்பட்டமான பொய்.

யோசனை மாறாமலேயே வாளியைக் கிணற்றில் இறக்கி நீர் மொண்டு கை, கால்களை அலம்பிக்கொண்ட பின், அம்மாவையும் தங்கையையும் தேடிக்கொண்டு த்யாகு உள்ளே போனான்.

## 3

காவேரி நிறைய சோப்புப் போட்டு தேய்த்துக் குளித்த திஜுசில், நுப்பும் நுரையுமாய் இருந்தாள். லேசான செம்மண் நிறத்தில் இந்தக் கரைக்கு அந்தக் கரை தொட்டுக்கொண்டு ஓடினாள். கண்ணில் எட்டிய மட்டும் ஜன சமுத்திரம்.

படிகளில், மண்டபங்களில், நாணற் புதர்களின் மறைவு களில்...

இரண்டு பேராய், நாலு பேராய், கூட்டங்கூட்டமாய்...

மூங்கில் கூடைகள், அலுமினிய, எவர்சில்வர் டிபன் காரியர், தூக்குகள், வாழை இலைகள்.



புளியோதரை, பொங்கல், தயிர் சாதம், வடை, வறுவல், கருவடாம் இத்யாதிகள்.

காற்று பலவித வாசனைகளைத் தன்மேல் பூசிக் கொண்டு மந்தஹாசமாய் ஜனங்களைத் தழுவியது.

வாழை இலை ஒன்றை இடக்கை உள்ளங்கைமேல் பரத்திக் கொண்டு அதில் அம்மா பரிமாறி இருந்த புளியஞ்சாதத்தையும், வறுவலையும் ஒருகை பார்த்துக்கொண்டிருந்த த்யாகுவுக்குச் சந்தோஷமாய் இருந்தது.

நல்லவேளையாய் அப்பா வரவில்லை. வந்தால் இப்படி அக்கடா என்று உட்கார எங்கே விடுவார்?

ஹெட்மாஸ்டர் வீட்டு மாமி 'நாளைக்கு ஆடிப்பெருக்கு, நாங்கல்லாம் ஆத்துக்குப் போறோம். ராஜத்தையும் குழந்தை களையும் அனுப்புங்களேன்' என்று கேட்டதும் அப்பாவால் தட்டமுடிய வில்லை.

ஹெட்மாஸ்டர் மனைவியாயிற்றே, மறுக்கமுடியுமா?

''நா வரலை - நீங்க அவாளோட போயிட்டு சட்டுப் புட்டுனு வந்து சேருங்கோ, போனோன் போனோன் டோய்னு அங்கேயே ஐக்கியமாயிட வேண்டாம், என்ன?''

பெரிசாய்த் தலை ஆட்டின அம்மா அப்போதே புளிக் காய்ச்சலைக் காய்ச்சி வைத்தாள். உருளைக்கிழங்கைச் சீவி அதையும் மோர்மிளகாயும் வறுத்து வைத்தாள்.

கடுகு, பருப்பு வகையறாக்களையும் பெருங்காயம் மிளகாயும் தாளித்துப் புளி ஜலத்தைக் கரைத்து விடுகையில் வீடே மணத்துப் போயிற்று.

இந்த அம்மா கைக்குத்தான் என்ன வாசனை?

மூன்று வயசு தங்கை வசந்தா அம்மாவைத் தொந்தரவு செய்யாமல் பார்த்துக்கொண்டு த்யாகு சமையல்கட்டிலேயே நின்றான்.

காலையில் நாலு மணிக்கு எழுந்து சாதம் வடித்துப் புளியஞ்சாதம், தயிர்சாதம் கலந்து, சர்க்கரைப் பொங்கலையும் தயாரித்து ஏழு மணிக்கெல்லாம் வீட்டைவிட்டுக் கிளம்பி விட்டார்கள்.

ஆத்தங்கரை கொஞ்சம் தள்ளி என்பதால் ஹெட்மாஸ்டர் வீட்டு வண்டியில் பெண்களும் குழந்தைகளும் சாமான்களுடன் ஏறிக்கொள்ள, ரொம்பப் பெரிய மனுஷன் மாதிரி த்யாகுவும் ஹெட்மாஸ்டர் மாமி தம்பியும் கம்பிளையைப் பிடித்துக்கொண்டே நடந்தனர்.

''இன்னும் எத்தனை நாழி புளியஞ்சாதத்தையே சாப்டுண்டு இருப்பே? ஒரு பக்கமாய் பொங்கலைப் போடட்டுமா?''

இடுப்பில் வசந்தாவைத் தூக்கி வைத்துக்கொண்டு ஒரு கையால் பொங்கலைப் பரிமாறின அம்மாவைத் திரும்பிப் பார்த்த த்யாகு, ''நீ எங்கிட்ட வா வசு'' என்று கை நீட்டி, தங்கையை இழுத்துத் தன் மடியில் இருத்திக்கொண்டான்.

வசுவைப் பார்க்கும்போதெல்லாம் அம்மாவைப் பண்ணின அதே அச்சில் போட்டு அமுக்கித்தான் இவளையும் பிரம்மா செய்திருக்க வேண்டும் என்றே த்யாகு நினைப்பான். அதே கண்கள்; அதே நிறம்; எல்லாம் அதே...

பெரியவளானால் அப்படியே அம்மா மாதிரியேதான் வசுவும் இருக்கப் போகிறாள்.

சின்ன வயசில், ஒற்றைப் பையனாக இருக்கையில் தனக்குத் தம்பி, தங்கை என்று யாரும் இல்லாதது த்யாகுவுக்கு ஏகக் குறை.

தெரு பசங்கள் அத்தனை பேருக்கும் தங்கையோ தம்பியோ, இல்லை இருவருமே இருந்தபோது தனக்கு மட்டும் இல்லாதது ரொம்ப உறுத்தும்.

அம்மா மடியில் படுத்துக்கொண்டு எத்தனையோ நாட்கள் மழலை மாறாமல் கேட்டதுண்டு;

''அம்மா! நேக்கு தம்பிப் பாப்பா வேணும்...''

அம்மா சிரிப்பாள்;

''ஏன், தங்கச்சிப் பாப்பா வாண்டாமா?''

''அதுவும் வேணும்; ஆனா மொதல்லே தம்பிதான்...''

''ஏண்டா?''

''அவன்தாம்மா என்னோட கில்லி வெளையாடுவான். சடுகுடு வெளையாடுவான். தங்கச்சிப் பாப்பா பாண்டிதானே ஆடுவா.''



அவனுக்கு அடுத்தபடி இரண்டு முறைகள் ராஜம் உண்டாகி, இரண்டும் குறைப்பிரசவமாகிப் போனபோது அந்த விவரங்கள் எதுவும் அவனுக்குத் தெளிவாகவில்லை.

ஆனால் வசந்தாவை உண்டானபோது அப்படி இல்லை.

ஒரு நாள் விளையாடப் போனவன் வேர்க்க விறுவிறுக்க ஓடி வந்தான்:

''அம்மா...!''

கொல்லைப் பக்கம் இட்லிக்கு அரைத்துக் கொண்டிருந்தவளின் கழுத்தைப் பின்பக்கமாய்ச் சென்று கட்டிக்கொண்டான்:

''அம்மா! உனக்கு பாப்பா பொறக்கப் போறதுன்னு நாணா சொல்றானேம்மா... நிஜம்மாவா?''

''அவனுக்கு யார்டா சொன்னா?''

''அவனோட அம்மா...''

நாற்பத்தைந்து நாட்களைத் தாண்டவில்லை, அதற்குள் தெருவில் சமாசாரம் எப்படிப் பரவி விடுகிறது!

''என்னம்மா?''

''ஆமாண்டா....''

த்யாகுவின் கட்டல் இறுகியது.

கண்கள் ஆசையில் பளபளவென்றன.

''எப்ப பொறக்கும்மா?''

''ம்? இன்னும் எட்டு மாசம் கழிக்க...''

''எட்டு மாசமா? ஐயோ..! ஏம்மா அவ்வளவு தள்ளி?''

''பாப்பா வளரவாண்டாமாடா?''

ஒரு நிமிஷம் த்யாகு என்னமோ யோசித்தான்.

''அப்ப, இப்போ உன் தொப்பைக்குள்ள பாப்பாவோட தலை இருக்குமாம்மா? அடுத்து கால் வரும், அதுக்கப்புறம் கை மொளைக்கும்... அப்படித்தானேம்மா?''

ராஜம் சிரித்தாள்.

அதற்குப் பிறகு வந்த மாசங்களில் தனிமையில் அமர்ந்து எங்கம்மா வயத்துலே இப்போ பாப்பாவோட தலை இருக்கு. அதுலே கண், மூக்கு, வாய் எல்லாம் வந்தாச்சு, இன்னும் கை, கால்தான் பாக்கி என்று தனக்குத்தானே சொல்லிக் குதூகலித்துக் கொண்டதை இப்போது த்யாகு நினைத்துப் பார்த்தான்.

மனசு ஏங்கிய நிஜுசில் தம்பி பிறக்காதது அவனுக்கு ஆரம்பத்தில் குறையாக இருந்தாலும் போகப்போகச் சரியாகிவிட, பள்ளி போய் வந்து படிக்கும் நேரத்தைத் தவிர, பாக்கிப் பொழுது பூராவும் அவன் தங்கையோடே கழித்தான்.

அம்மா அவளைக் குறிப்பாட்டும்போது கூட நின்று ஜலம் விட்டான். அழஅழ மையிட்டுப் பொட்டிடும் நிமிஷத்தில் கீழ் உதட்டை வாய்க்குள் மடித்து ள்ளா ள்ளா என்ற சப்தம் உண்டாக்கிப் பராக்கு காட்டினான். 'சித்தடியே சித்தடியே, இத்தனை நாள் எங்கிருந்தாய்?' என்று நீலாம்பரியில் இனிமையாய்ப் பாடி அவளை அம்மா தூங்க வைக்கும் நாழிகையில் தானும் மெய்மறந்து போனான்.

குழந்தைக்குத் தலை நின்ற உடனேயே மடியில் அவளை வைக்கச் சொல்லி சந்தோஷித்தான்.

ஏழு, எட்டு மாசங்கள் ஆகி வசு தவழத் தொடங்கின பின், மார்பில் இரண்டு கைகளையும் கோத்து அவளைத் தூக்கிக்கொண்டு வாசலுக்கும், கொல்லைக்கும் அலைந்தான்.

சமையல்கட்டில் அம்மா சமைத்துக் கொண்டிருந்தால் இவன் அங்கேயே தங்கையோடு விளையாடினான்.

'வரகரைக்கறதும் - அவர்
வந்து நிக்கறதும் -
சக்கான் குத்தறதும் -
சோறு கொதிக்கறதும் -
பிள்ளை அழுகிறதும் -
பேசாதே என்கிறதும் -
வாடி என்கிறதும் -
வரலை போ என்கிறதும் -
மல்லுக்கு நிக்கறதும் - அவர்
தூங்க அழைக்கறதும்!'



அம்மா கற்றுக் கொடுத்த பாட்டை இவன் பாடினால் உழக்கு மாதிரி தரையில் உட்கார்ந்துகொண்டு வசு அபிநயம் பிடித்தது.

இரண்டு கைகளாலும் கேழ்வரகு அரைப்பதையும், சோறு கொதிப்பதையும், சக்கான் குத்துவதையும் பாவனையில் காட்டும். அசமுடையான் தூங்க அழைத்து வரலை போ என்கிற இடத்தைக் கையைத் தட்டிவிட்டு அலட்சியமாய்ச் செய்யும்.

''அம்மாடி! இது சரியான எமண்டா... எத்தனை அழகா அபிநயம் பிடிக்கிறது!'' என்று அம்மா வியந்தால், கூட வே த்யாகுவும் ஆச்சரியப்படுவான்.

வசு பிறந்த பிறகு குழந்தையோடு அதிகமாய்ப் பொழுதைக் கழித்ததில் அப்பாவிடம் உதை வாங்குவது அதிகமானாலும் அவன் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை.

''படவா - ராஸ்கல் - பொட்டக் குட்டிக்குச் சரியா சமையக்கட்டுலே வெளையாடறயே, வெக்கமாயில்லை? போய் பாவாடை கட்டிண்டு, தலைமயிரை வளர்த்துண்டு அம்மா புடவைத் தலைப்புலே ஒளிஞ்சுக்கோ... அபஸ்மாரம்...''

கோபம் அதிகமாக இருந்தால் வாய் வார்த்தைகளோடு நிற்க மாட்டார்.

குறுக்கே ஏதாவது பேசித் தடுக்க அம்மா வந்தால் அவளுக்கும் செம்மையாய்க் கிடைக்கும்.

''உங்காத்துக்காரர்க்கு சாமிநாதன்னு பேர் வைச்சிருக்கப் படாதுடீ ராஜம். துர்வாசர்னு இருந்திருக்கணும் - ஊர் உலகத்துலே மதிப்பா இருந்தா ஆச்சா? என்ன படிச்சு என்ன? பொண்டாட்டி குழந்தைகளை அனுசரணையா வைச்சிக்கத் தெரியாதவனுக்குப் படிப்பு எதுக்கு, பட்டம் எதுக்கு?''

அம்மாவின் வயசான பெரியம்மா ஒருத்திக்குத்தான் அப்பாவை விமரிசிக்கும் தைரியம் உண்டு.

அப்பாவை ஜடாமுடி, கமண்டலம், காவிக் கலர் வேஷ்டியில் கற்பனை பண்ணிப் பார்த்திருக்கிறான் த்யாகு. சிரிப்பு பொத்துக்கொண்டு வரும்.

சினிமாவில் வரும் முனிவர்கள் போல விறைப்பான தாடி, மீசை, காலில் சடக்சடக் என்று சப்தம் போடும் மரக்கட்டை செருப்பு.

துர்வாச முனிவர் பராக்....

''என்னடா, அப்படிச் சிரிப்புப் பொத்துண்டு வரது? எனக்குந்தான் சொல்லேன்?''

-சாப்பிட்டு முடித்துப் பாத்திரங்களைக் கழுவிக்கொண்டு வந்த ஹெட்மாஸ்டர் மாமி கேட்டாள்.

''ஒன்னுமில்லே மாமி...''

வகளை மடியைவிட்டுக் கீழே இறக்கிவிட்டு த்யாகு கையலம்பப் போனான்.

மேல்படியில் ஜாக்கிரதையாய் கால் ஊன்றி, குனிந்து, காவேரியில் கையை அளைந்தபோது இந்த நாளை ஆயுசுக்கும் மறக்க முடியாது என்றே அவனுக்குத் தோன்றியது.

ஆடிப்பெருக்கால் மட்டும் இல்லாமல் வசந்தாவுக்கு விபத்து நேர்ந்து அது மறக்க முடியாத நாளாகித்தானே போனது?

காவேரிக்கு வந்து, சாப்பிட்டு முடித்து வீடு திரும்பினவர்களுக்கு ஒரே அசதி. கூடத்தில் ராஜம் குழந்தைகளோடு படுத்து ஒரு தூக்கம் போட்டாள்.

**மா**லை ஆறு மணி இருக்கும். த்யாகு கிணற்றடியில் ஸந்தி பண்ணிக்கொண்டிருந்தான்.

நிசப்தமான சூழ்நிலையைப் பிளந்துகொண்டு வசந்தாவின் கத்தல்.

வாசத் திண்ணையில் நின்று எங்கேயோ பராக்கு பார்த்தபடி காலை வைத்ததில் வசந்தா அப்படியே குப்புற விழுந்திருக்கிறாள்.

திண்ணை ஒன்றும் அப்படி உயரமானதில்லை. இரண்டடி தான். பார்த்துத் தடவிய வரைக்கும் எங்கும் புடைத்துக் கொள்ளாததால் ராஜம் விஷயத்தை அதோடு விட்டு விட்டாள்.

மறுநாள் காலை தூங்கி எழுந்த குழந்தையிடம் விவரிக்கத் தெரியாத மந்தத்தனம்.

பால் குடிக்கவில்லை, சாப்பிடவில்லை, எழுந்து ஓடியாடவில்லை.

என்னாயிற்று?



ஜுரமா?

முதல் நாள் காவேரிக்குப் போய் வந்த அசதியா?

அன்று இரவு தூங்கிக்கொண்டிருந்த பெண் எழுந்து உட்கார்ந்து கொளகொளவென்று ஏராளமாய் வாந்தி எடுத்தாள். அப்புறம் தன் நினைவு இல்லாமல் விழுந்துவிட்டாள்.

மறுநாள் ஆஸ்பத்திரிக்கு எடுத்துப் போனார்கள். இருபதுநாள் போல வசந்தாவை அட்மிட் பண்ணி என்னென்னவோ சோதனைகளைச் செய்து பார்த்தார்கள்.

போன நினைவு போனதுதான்.

துருதுருவென்று ஒரு இடத்தில் நிற்காமல் அலைந்த குழந்தையிடம் ஒரு சலனம் இல்லை. அப்படியொரு ஆழ்ந்த கோமா.

''மூளையிலே ஓடற ரத்தக்குழாயை ரத்தக் கட்டி அடைச்சிருக்கும்னு நினைக்கிறோம். கீழே விழுந்த அதிர்ச்சியிலே ரத்தம் கட்டி தட்டிப் போய் சில கேஸ்ல இப்படி ஆறதுண்டு. நீங்க வேணா மெட்ராஸுக்கு எடுத்திட்டுப் போய் பெரிய டாக்டரைப் பாருங்க.. பட், வி கெனாட் காரண்டி எனிதிங்...''

-டாக்டர் கையை விரிக்க, நடைப்பிணமாய்க் கிடந்த வகளை வீட்டுக்கு அழைத்து வந்தார்கள்.

''மெட்ராஸுக்குப் போய் மட்டும் என்ன பண்ணப் போறோம் - அதான் டாக்டர் நம்பிக்கை இல்லேனு தீர்மானமா சொல்லிட்டாரே! எல்லாம் ஈஸ்வரன் செயல்னு பேசாம இருந்திட வேண்டியதுதான்.''

சாமிநாதன் சென்னைக்கு மகளை எடுத்துப் போய் வைத்தியம் பார்க்க மறுத்துவிட, உள் அறையின் மூலையோடு மூலையாய் வசு கிடக்கத் தொடங்கினாள்.

அடுத்து வந்து வருஷங்கள் அவலமான வருஷங்கள்.

எப்போது தூங்கினோம் என்று நிச்சமாய்ச் சொல்ல முடியாதபடி புரண்டுபுரண்டு தூங்கின அந்த நாட்களில் ஒரு சில இரவுகள் அப்பா, அம்மாவின் கிசுகிசுப்பான குரல்களால் த்யாகு எழுப்பப்பட்டிருக்கிறான்.

''வாடி...!''

''......''

''வாடிண்ணாக்க...''

''உங்களுக்கு மனசே கிடையாதாண்ணா?... பொண் இப்படிக் கிடக்கறப்போ... தூ...''

''எல்லாம் எனக்குத் தெரியும். பேசாம வாடி...!''

அப்பா ஏதுக்குக் கூப்பிடுகிறார் - அம்மா மாட்டேன் என்கிறாள்?

அரைகுறை யோசனையுடன் த்யாகு தூங்கிவிட்டாலும், அந்த வயசில் புரியாத விவரங்கள் வயசு ஏற ஏறத் தானாக விளங்கத் தொடங்கின.

## 4

வீடு வீடாகவா இருந்தது நாலு வருஷங்களாய்?

சத்திரமாய்? ஆஸ்பத்திரியாய்? சுடுகாடாய்? எல்லாமாய்?

பேச்சு, சிரிப்பு என்கிற நாமதேயமே மறைந்து போனநிழலில் வளைய வரும் அம்மா-

வேளா வேளைக்குச் சாப்பிட்டுவிட்டு, வெத்தலை பாக்கு போட்டுக்கொண்டு எந்த வீடு பத்தி எரிந்தால் எனக்கென்ன என்ற விட்டேத்தியான குணத்துடன் அப்பா-

இட்டவட்டமாய் என்ன பேசுவது, செய்வது என்றுகூடப் புரியாத நிலையில் த்யாகு-

இவர்களுக்கு மத்தியில் வசந்தா, மூடின கண்கள், தூக்கி விட்டால் தொப்பென்று விழும் கை, கால்கள், புரட்டி விடும் கோணத்திலேயே மணிக்கணக்கில் கிடக்கும் உடல்... உசிர் ஒட்டிக் கொண்டிருப்பதற்கு சாட்சியாய் சின்னதாய் மேலே ஏறி இறங்கும் மார்பு.

வசந்தாவா இவள்?

இப்படிப் பேச்சு மூச்சின்றி அசைவற்றுக் கிடப்பது வசுவா?

இந்த வசந்தாவைத்தான் அம்மா எத்தனை கண்ணும் கருத்துமாய்க் கவனித்துக்கொண்டாள்!



விடிகாலையில் எழுந்து ராத்திரி படுக்கையை வசந்தா நனைத்து அசுத்தம் பண்ணியிருப்பதை அகற்றுவாள். வெதவெதவென்று வென்னீரில் துண்டை நனைத்து தூக்க மாட்டாமல் கைகளைத் தூக்கி அக்கறையுடன் துடைத்து, மாற்றுப் பாவாடை, சட்டை உடுத்தி, தோய்த்த விரிப்பை விரித்துக் கிடத்துவாள். தலைமுடி சிக்காகிப் போகாமல் இரண்டு வேளையும் எண்ணெய் தடவி வாரிப் பின்னுவாள். அரை டம்ளர் பாலைப் பாலாடையில் ஊற்றிக் கொஞ்சம் கொஞ்சமாய்ப் புகட்டுவாள். அப்புறம் ஒழிந்த நேரங்களில் மகளுக்கு அருகில் அமர்ந்து கை, கால்களைத் தடவி விடுவாள். பெண்ணுக்கு நினைவு இருக்கும் பாவனையில் 'வசுக்குட்டி இன்னிக்கு எப்படி இருக்கா? அம்மா பால்லே திட்டமா சர்க்கரை போட்டிருந்தேனோ? வசுக்குட்டிக்குப் புதுப் பாவாடை கட்டிவிருக்கேனே, தெரிஞ்சிதோ?' என்று பாசத்தோடு நீளமாய்க் கேள்விகளைக் கேட்பாள்.

படுக்கையிலேயே படுத்துக் கிடந்ததால் இரண்டு மூன்று மாசங்கள் ஆவதற்குள் உடம்பில் அரிப்பு கண்டு புண்கள் தோன்றத் துவங்கினதும் த்யாகுவை அனுப்பி டாக்டரை அழைத்து வரச் செய்தாள்.

''உடம்பைத் துடைச்சா மட்டும் போதாது, பவுடர் அல்லது யூடிகோலோன் போடறது ரொம்ப அவசியம். பெட்ஸோர் பெரிசாயிடுச்சின்னா தொந்தரவு. இந்த மாதிரி பேஷண்டுங்க எத்தனை வருஷம் உயிரோட இருப்பாங்கனு சொல்ல முடியாது. ஒரு வருஷமும் இருக்கலாம். இல்லை இப்படியே இழுத்துக்கிட்டு பத்து வருஷமும் இருக்கலாம்... அதனால ஜாக்கிரதையா இருந்திட்டா நாளைக்கு எல்லார்க்கும் சிரமம் குறையும்... பாருங்க...''

முதல் மாசம் ஒரு பாட்டில் யூடிகோலோனையும், ஒரு டின் பவுடரையும் வாங்கித் தந்தபோது சாமிநாதன் அதிகம் முகம் காட்டவில்லை.

ஆனால் இரண்டாம் மாசம் ராஜம் திரும்பக் கையை நீட்டினதும் கத்திவிட்டார்:

''இப்ப பவுடரும், கோலோனும் இல்லாமதான் அழுறதாக்கும்? அந்த டாக்டர் வேலை வெட்டி இல்லாம ஏதையோ சொன்னான்னாக்க, நீயும் கூத்தாடணுமா? அதான் ரெண்டுவேளை சோப்புப் போட்டுத் துடைக்க விடறியே, போறாதா?''

ராஜம் உடனே பதில் பேசவில்லை, கணவரை நிமிர்ந்து பார்த்தாள். பிறகு மெதுவாகப் பேசினாள்:

''போன ஜன்மத்துலே யாருக்கு என்ன பாவம் பண்ணி னேனோ, இப்போ என் குழந்தையை அது வாட்டறது. வாயைத் திறந்து பாலைக் கொண்டா, தயிரைக் கொண்டா, ஜிலேபியைக் கொண்டான்னா அந்தக் கொழந்தை கேக்கறது? பட்டுப் பாவாடை, ஜிமிக்கி வேணும்னா கேக்கறது? போட்ட இடத்திலே போட்டபடி ஸ்மரணை இல்லாம கிடக்கிறது. மூணு வேளை அரை டம்ளர் பால் சாப்பிடறது. அதுகூட நானா பார்த்துக் கொடுத்தாதானே? அதுவா வாயைத் திறந்து பசிக்கிறதுன்னா சொல்லறது? அது உடம்பாலே சித்ரவதை படறது போறும், இன்னும் படவாண்டாம்னுதான் இந்தப் பவுடரையும், யூடிக்கோலோனையும் கேக்கறேன். இந்தச் செலவு நமக்கு அதிகப்படின்னா, இதைச் சரிக்கட்ட இனிமே நா என் ராத்திரி சாப்பாட்டை விட்டுடறேன். எனக்கு சோப்பு வாண்டாம், பவுடர் வாண்டாம், பூ வாண்டாம், தலைக்கு எண்ணெய் வாண்டாம். இத்தனையும் விட்டுட்டா செலவு ஈடுகட்டிடுமோன்னோ? அப்புறம் செலவுசெலவுனு சொல்ல மாட்டேளோன்னோ?''

சொன்னபடி அம்மா செய்துதானே காண்பித்தாள்? இழைய இழையத் தலையைப் பின்னிப் பூ வைத்து முகத்தை அலங்காரம் பண்ணி, புதுப்புடவை கட்டித் தன்னைச் சிங்காரித்துக்கொள்வதை அந்த சின்ன வயசிலேயே விட்டுவிட்டு ஒரு சந்நியாசினி போலத்தானே அந்த நாலு வருஷங்களையும் கழித்தாள்?

இவளுடைய அவலம், கடவுளுக்கே பொறுக்காமல் போயிருக்க வேண்டும், இது என்ன துன்பம் என்று நினைத்திருக்க வேண்டும்.

அன்று காலை தூங்கி எழுந்து பெண்ணிடம் போன ராஜம் வழக்கம்போல மகளை ஒரு கையால் அணைத்துத் தூக்கி விரிப்புகளைச் சுருட்டி இழுத்தபோது அந்த மாற்றத்தைப் புரிந்து கொண்டாள்.

அதே சலனமில்லாத உடம்புதான். ஆனால் அதில் சூடு இல்லை. தொட்ட இடம் ஜில்லென்று இருந்தது. மடியில் கிடத்திக்கொண்ட உடலில் ஒரு அலாதி விறைப்பு. உதட்டோரத்தில் கோடாய் உறைந்திருந்த ரத்தம்.



எ...என்ன ஆயிற்று?

அமைதியாய் இருந்த மார்பின்மீது இரண்டாக மடிந்து காதை வைத்துப் பார்த்தவளின் வயிற்றில் பட்டாம்பூச்சிகள் ஏகமாய்ப் பறந்தன.

ரொம்ப நேரத்துக்குக் கண்களிலிருந்து நேர்கோடாய் ஜலம் வழிய, மகளை மடியில் கிடத்திக்கொண்டு ராஜம் உட்கார்ந் திருந்தாள்.

டாக்டர் வந்தார்.

''உள்ளுக்குள்ள ரத்தப்போக்கு உண்டாகி இருக்கலாம்; இல்லைன்னா ரத்தக்கட்டி நகர்ந்து முக்கியமான ரத்தக் குழாயை அடைச்சிருக்கலாம்... இன்னதுதான் காரணம்னு குறிப்பிட்டுச் சோதனை பண்ணாம இந்த கேஸ்ல சொல்லறது கஷ்டம்...''

வசந்தாவின் கதை முடிந்தது.

அவள் போய் கிட்டத்தட்ட ஒரு மாசம் ஆன அளவில் தான் அந்தச் சம்பவம் நடந்தது.

அம்மா வசந்தாவோடு இந்த நாலு வருஷங்களாய்ப் படுப்பது வழக்கமாகி இருந்ததால் தியாகுவுக்கு ரேழியில்தான் படுக்கை. இந்தப் பழக்கம் வசந்தா போயும் மாறவில்லை. இவன் ரேழியில், அம்மா உள்ளே, அப்பா வாச அறையில்.

நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தவன் தன் காலை யாரோ இடறிக்கொண்டு போவதை உணர்ந்து சட்டென்று விழித்துக் கொண்டான்.

அப்பா.

உள்ளே போகிறாரா? தாகம் எடுக்கிறதோ?

சாமிநாதன் சமையல்கட்டுக்குப் போகவில்லை. உள் அறையில் நுழைந்தார்.

இரண்டு நிமிஷத்தில் ராஜத்தின் குரல் அரசல் புரசலாய் ஒலித்தது.

''சீ... விடுங்கோன்னா...''

சாமிநாதனின் பதில் தியாகுவுக்குத் தெளிவாகப் புரியவில்லை. ஆனால் அந்தக் குரலில் ஒரு கெஞ்சல், ஒரு அசட்டுத்தனம்.

''விடுங்கோங்கறேன்... என்ன மேலேமேல பேல தொட்டுண்டு?''

''ஸ்...ஸ் ராஜம்... ஏன்கை கத்தறே?''

''அப்படித்தான் கத்துவேன்... உங்களுக்குத்தான் விவஸ்தை இல்லைன்னா எனக்கும் இல்லேனு நினைச்சேளா?''

''விவஸ்தை, கிவஸ்தைனு பேசினா பல்லைத் தட்டிக் கொடுத்துடுவேன். ஆமாம்...''

''கொடுங்கோ... பல்லை மட்டுமில்லை, உசிரையே எடுத்துக் கொடுத்துடுங்கோ... பொண்ணைப் பறிகொடுத்துட்டு நா தவிச்சுண்டு இருக்கறச்சே உங்களுக்குப் படுக்கை கேக்கறதா! அவ ஜடமாக் கிடந்த காலத்துலேகூட நீங்க பேயா இதுக்குத்தானே அலைஞ்சேள்? உங்களுக்குப் பொண் முக்கியமில்லே, பொண்டாட்டி, அவ வேதனை முக்கியமில்லே, இதுதானே முக்கியம்? நீங்க மனுஷன் இல்லேன்னா, மிருகம்... கேடு கெட்ட மிருகத்திலேயும் மோசமான மிருகம்...''

மேற்கொண்டு அம்மா கத்தியது த்யாகுவுக்குக் கேட்கவில்லை.

பளிச்பளிச்சென்று அறையும் சப்தம். 'தேவடியா நாயே, என்னயாடி மிருகம்னு சொல்றே? நீ இல்லாட்டா எனக்குப் போக்கிடம் இல்லேனு நினைச்சுத்தானே பேசறே? நா ஆம்பிளைடீ, உன்னைக் கொன்னு குழி வெட்டி புதைச்சா என்ன?''

குரலை அடக்காமல் கத்தின சாமிநாதன் விடுவிடுவென்று த்யாகுவைத் தாண்டிக்கொண்டு வாசலுக்குப் போனார்.

அடிவயிற்றைக் கிழிக்கொண்டு எழுந்த குமட்டல் த்யாகுவின் வாயில் கொப்பளித்தது. ஓடிச் சென்று அப்பாவைத் தூணில் கட்டிப் புளியவிளாறால் விளாற வெறி, அம்மாவை அணைத்து 'நீ அழாதேம்மா' என்று சமாதானப் படுத்த ஆசை.

ஒன்றும் செய்ய முடியாத கையாலாகாதத்தனத்துடன் குப்புறப் படுத்து சப்தமில்லாமல் அழுவதைத்தான் அவனால் அன்று செய்ய முடிந்தது.

வசு போன ஏக்கமா? இப்படி ஒரு வெறியன் தனக்குப் புருஷனாகி விட்டானே என்ற தவிப்பா?

எதைச் சொல்ல, எதை விட?



விவரம் எதுவும் வேண்டாம். வசந்தா போன ஏழாம் மாசம் குறிப்பிட்டுச் சொல்லும்படியாய் எந்த நோய் நொடியும் இல்லாமல் பொசுக்கென்று ராஜாம்பாளும் போய்விட, நினைத்த நினைப்பில்லாமல் தான் உயிருக்குயிராக நேசித்த அம்மாவையும் தங்கையையும் இழந்து அநாதை போல த்யாகு ஒண்டியாகிப் போனது நிஜம்தான்.

அம்மா போய்விட்டாளா?

கன்னங்குழிய இதமாய்ச் சிரித்து, பரிவோடு பார்த்துப் பார்த்துக் கவனிக்கும் அம்மாவா?

நெற்றடியில் முழங்கால்வரை புடவையைத் தூக்கிச் செருகிக் கால்களின் தாழம்பூ நிறம் பளபளக்கப் பத்துத் தேய்க்கும் அம்மா...

பொரித்த குழம்பை வடகம் போட்டு வைத்து, பெருங்காயம் நல்லெண்ணெய் மணம் ஜமாய்க்கச் சமைக்கும் அம்மா...

ரேழியில் அமர்ந்து பூ கட்டிக்கொண்டே த்யாகராஜாய நமஸ்தே பாடும் அம்மா...

வீட்டின் மூலை முடுக்கும் அம்மா அம்மா என்று முனக த்யாகு பரிதவித்துத்தான் போனான்.

வீட்டுக்கு வர மனசு சண்டி பண்ணியதால் அப்பா கோபித்தாலும் கோபிக்கட்டும் என்று பள்ளி முடிந்த பிறகு ஆத்தங்கரையில் பொழுதைக் கழித்தான். வயல் வரப்புகளில் திரிந்தான். மாந்தோப்பில் தனித்து அமர்ந்து குக்கூ குயில் கூவுவதை ரசிக்கத் தோன்றாமல் முழங்கால்களில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுதான்.

அவன் எஸ்.எஸ்.எல்.ஸி-யில் காலடி வைத்தபோது அம்மாவுக்கு வருஷாப்தி ஆனது.

ஒரு நாள் மாலை பள்ளியிலிருந்து திரும்பினவனை சாமிநாதன் அழைத்தார்.

பக்கத்தில் எதிராத்து மாமா, வக்கீல் மாமா, கிட்டத்தில் போய் நின்றான்.

''பார்த்தேளா...மணி ஆறாகப் போறது. இப்பத்தான் ஸ்கூல்லேந்து திரும்ப ஐயாவுக்கு மனசு வந்திருக்கு... 'பள்ளிக் கூடம் விட்டா நேரே வீட்டுக்கு வாடா, ஸந்தி பண்ணிட்டுப் படி. இது

ஸ்கூல் பைனல்'னு நா தினமும்தான் முட்டிக்கிறேன். என்ன பிரயோஜனம்? அவ போனதுலேந்து இப்படித்தான் இருக்கான். ஆத்திரம் தாங்காம ரெண்டு தட்டித் தட்டினா பொம்பளைபாட்டம் அழறான்... இவனை வெச்சிண்டு என்ன பண்றது, சொல்லுங்கோ; வேளைக்கு சாப்பிடறதில்லே, தூங்கறதில்லே... இதுக்காகத்தான், இவனுக்காகத்தான் நா இந்த முடிவுக்கு வந்திருக்கேன்... நா வேற என்ன பண்ணட்டும், சொல்லுங்கோ?''

அப்பாவின் குரலும் குழைவும் புதுசாக இருக்க, த்யாகு தலையை நிமிர்த்தி அவரைப் பார்த்தான்.

''என்னடா பாக்கறே த்யாகு? புரியலையா? தாயார் இல்லாம நீ அவஸ்தைப்படறது பொறுக்கமாட்டாம உங்கப்பா இன்னொரு கல்யாணம் பண்ணிக்க முடிவு எடுத்திருக்கார்டா... எல்லாம் உனக்காகத்தான்டா, புரியறதா?''

வக்கீல் மாமா சொன்ன வார்த்தைகளை நம்ப முடியாத திணுசில் த்யாகு கண்களை அகல விரித்தான்.

கல்யாணமா? அப்பாவுக்கா?

அம்மா இருந்த இடத்தில் இன்னொருத்தியா?

மளுக்கென்று நெஞ்சுக்குள் என்னமோ முறிந்த வேதனையில் கண்களில் ஜலம் தளும்பியது. எதுவும் பேசாமல் வேகமாகத் திரும்பி உள்ளே நடந்து விட்டான்.

கல்யாணி அந்த வீட்டுக்கு வந்து சேர்ந்தாள்.

நேசல் மூஞ்சி, காக்காய் நிறம், மண்டை தெரியும் அடர்த்தி இல்லாத பின்னல்.

எப்படி இருந்தால் என்ன? சரியாக மாசம் ஒன்று போவதற்குள் அப்பாவிடம் விவரிக்கத் தெரியாத மாற்றம் இருந்ததை த்யாகுவால் உணர முடிந்ததே!

சிடுமூஞ்சி மனுஷன் சிரிக்கிறார், பெண்டாட்டிக்குப் பூ வாங்கி உத்தரியத்தால் மறைத்துக்கொண்டுவந்து கொடுக்கிறார்.

சினிமாவுக்குப் போக அனுமதிக்கிறார்...

என்ன அதிசயம் இது!

தூர்வாச முனிவருக்கு என்ன ஆயிற்று?



சித்தி மருந்து வைத்தாளா? மாயம் செய்தாளா?

பள்ளியில் ஸ்பெஷல் க்ளாஸ் என்று போய் வாத்தியாருக்கு உடம்பு சரியில்லாமல் இருந்ததால் வகுப்பு கான்ஸல் ஆகி உடனே வீடு திரும்பிவிட்ட அன்று த்யாகுவின் தவிப்புக்கு விடை கிடைத்தது.

பிற்பகல் மணி பதினொன்று இருக்கும்.

சாப்பாடு ஆகி வீட்டில் வாசக்கதவை அடைத்துவிட்டார்கள். படுத்துத் தூங்குபவர்களை எழுப்பவேண்டாம் என்று கொல்லைப் பக்க குட்டிச்சுவரைத் தாண்டிக் குதித்து, எப்போதும் திறந்தே இருக்கும் பின்வாசல் வழியாக உள்ளே நுழைந்தவன் நின்றான்.

உள் அறையில் சிரிப்புச் சப்தம்.

கொஞ்சல் குரல்கள்.

முற்றத்தில் படர்ந்திருந்த மல்லிக்கொடியின் பின்னால் நின்று ஜன்னல் வழியாகப் பார்த்தான்.

கட்டிலில் அப்பா-

பக்கத்தில் சித்தி-

இரண்டு நிமிஷங்கள் பார்ப்பதற்குள் குடல் முடிச்சுப் போட்டுக்கொண்டது.

பட்டப்பகலில்...

திறந்த வீட்டில்...

தூத்தெறி...

சப்தமில்லாமல் த்யாகு வந்த வழியே வெளியேறினான்.

மனசு எரிமலையாய் ஆர்ப்பரித்தது.

நேரே மாந்தோப்புக்குப் போனான். காசு வைத்து மூணு சீட்டு ஆடிக்கொண்டிருந்த காசியின் பக்கத்தில் உட்கார்ந்தான்.

''நீ சரியான பொட்டைடா... முதுகெலும்பே கிடையாதுடா... பாப்பாரப் பிள்ளைன்னா இத்தனை கோழையாவா இருக்கணும்? திருட்டு தம் அடிக்கக்கூட உனக்குத் தைரியம் கிடையாதுடா...'' என்று எத்தனையோ தடவை காசி கேலி பண்ணியதற்கு அசைந்து கொடுக்காமல் இருந்தவன், இப்போது வலிய கையை நீட்டி, ''ஒரு சிகரெட் குடுடா காசி'' என்றான்.

# 5

சித்தி இரண்டு முறை அழைத்துவிட்டாள். இனியும் போகாமல் இருந்தால் வம்புதான்.

திண்ணைச் சுவரில் சாய்ந்து உட்கார்ந்திருந்த தியாகு எழுந்து உள்ளே போனான்.

கை கால்களை அலம்பிக்கொண்டு தட்டுடன் சமையலறைத் தரையில் உட்காருவதற்குள் சித்தி புலம்ப ஆரம்பித்துவிட்டாள்:

''எதுடா ஒருத்தி கார்த்தாலேந்து எருமை மாடாட்டம் லோலோனு உழைக்கறாளே, காலா காலத்துலே சாப்டுட்டு அந்தண்டை போனாத்தானே அவளுக்கு சமையக்கட்டு வேல ஒழியும்னு இந்தாத்துலே யாருக்கு அனுசரணையா நடத்துக்கத் தோணறது? நா தேஞ்சு ஓடாப் போனா என்ன? செத்து ஒழிஞ்சா என்ன? எல்லாருக்கும் அவா அவா நன்னா இருந்தா போறும் - அப்படித்தானே? வேளாவேளைக்கு வயிறு முட்டச் சாப்டுட்டு ஒரு கவலையும் இல்லாம திண்ணையைத் தேச்சிண்டு இருக்கறவாளுக்கு எவ எக்கேடு கெட்டுப் போனா என்ன?''

தட்டில் சாதம் பொதக்கென்று விழுந்தது. குழம்புக் கிண்ணம் பக்கத்தில் நக்கென்ற ஓசையுடன் வைக்கப்பட்டது.

தலை நிமிராமல் தியாகு சாதத்தைப் பிசைந்தான்.

''என்ன கலாட்டா அங்க?'' - ட்யூஷனுக்கு வெளியில் போயிருந்த சாமிநாதன் செருப்பை அவிழ்த்தபடி குரல் கொடுத்தார்.

''ஒண்ணுமில்லேன்னா, மத்யானத்திலேந்து ஒரே தலைவலி. பொழுதோட வந்து எல்லாரும் சாப்டுட்டுப் போனா எனக்கு வேலையாகுமே, சித்த படுத்துக்கலாமேனு அப்பப் பிடிச்சுக் கூப்பிடறேன்...ம்..என் பேச்சு யார் காதிலே விழறது?''

-கல்யாணியின் குரல் தழைந்து ஒலித்தது.

''லக்ஷ்மி, சாரதா எங்கே?''

''அதுகள் சாப்ட்டு, தூங்கி, ஒண்ணரை நாழி ஆயாச்சே...!''

பொய். ஐந்து நிமிஷங்கள் முன்னால்தான் சின்னவள் சாரதா ஊட்டி அடித்துவிட்டுத் தூளியில் தூங்கிப் போனாள். மூத்தவள்



லக்ஷ்மி 'கதை சொல்லுண்ணா' என்று இத்தனை நாழிகை தியாகுவிடம் உட்கார்ந்திருந்தவள் இவன் சாப்பிட உள்ளே வந்ததும் பாயில் படுத்தாள்.

சாமிநாதன் கிணற்றடிக்குப் போய்வந்து தியாகுவுக்குப் பக்கத்தில் மணையை எடுத்துப்போட்டுக்கொண்டு உட்கார, கல்யாணி தொடர்ந்தாள்:

''இன்னிக்கு ஆனாலும் அசாத்திய வெய்யில்னா... கிணத்துலேந்து தண்ணி மொண்டு தொட்டிய ரொப்பறத்துக்குள்ள திண்டாடித் தவிச்சுப் போயிட்டேன். தலைவலியோட திருகுவலியும் சேர்ந்துண்ட மாதிரி முதுகுவலி வேற சனியன்...''

சாமிநாதன் பெண்டாட்டியைப் பரிதாபமாய் ஒரு தரம் ஏறிட்டுப் பார்த்துவிட்டு மகன் பக்கம் திரும்பினார்.

''ஏண்டா, தண்டச்சோத்து தடிராமா கொட்டிக்கறத்துக்குக் கூடவா உன்னை வெத்தலை பாக்கு வைச்சு உபசாரம் பண்ணிக் கூப்பிடணும்? வேலைவெட்டி இல்லாம ஊர்மேயறத்துக்குப் பதிலா பத்து குடம் தண்ணி இழுத்துத்தந்து, ஒத்தாசை பண்ணினா ஒரோட மதிப்பு குறைஞ்சிடுமோ? மூண்டம்... எதுக்கும் உபயோகமத்த மூண்டம்.''

பிசைந்து வாயில் போட்ட குழம்புச் சாத உருண்டை உள்ளே போக மறுத்தது.

ஒரு வேலைக்கான விண்ணப்பத் தாளைத் தபாலாபீசுக்குச் சென்று போஸ்ட் பண்ணிவிட்டு வந்தபோது சித்தி கிணற்றிலிருந்து உச்சி வேளையில் தண்ணீர் இழுத்துக் கொண்டிருந்தது நிஜம்தான். அதிக பட்சம் நாலு குடம் சேந்தியிருப்பாள். அதற்குள் தியாகு வந்துவிட்டான்.

வாய் வார்த்தையாக எதுவும் பேசாவிட்டாலும் நாதொட்டிய ரொப்பறேன். நீங்க தள்ளுங்கோ என்கிற அர்த்தத்தில் குடத்தை அவன் வாங்கிக்கொண்டதும் கல்யாணி உள்ளே வந்துவிட்டாள்.

அந்த நாலு குடம்தான் இப்போது விஸ்வரூபம் எடுத்திருக்கிறது.

''அவனுக்கு எங்கேன்னா ஒழியறது? பாவம் - தபாலாபீசுக்குப் போறத்துக்கும், பேப்பர்லே வாண்டட் காலம் பார்த்து அப்ளிகேஷன் போடறத்துக்கும் தானே போது காணறது?''

வாழைப் பழத்தில் ஊசி.

நையாண்டிக்கு நையாண்டி, குட்டுக்குக் குட்டு.

''ஆமா - கிழிச்சான். ஆறு வருஷமா பி.காம்., எம்.காம்., படிக்கறேன்தகமனு குப்பை கொட்டினதைத் தவிர இவனால இன்னி வரைக்கும் என்ன ஆதாயம்? சொல்லு? ஒரு வருஷம் ஆறது படிப்பை முடிச்சு... குண்டுச் சட்டியிலே குதிரை ஓட்டிண்டு, சோத்தை வேளா வேளைக்கு மூக்கைப் பிடிக்கத் தின்னுண்டு... ஒரு கால் காசுக்கு வழியில்லாம... தூத்தேறி... இப்படிக்கூடவா ஒரு ஆம்பளை மானம், ரோஷம் இல்லாமல் இருப்பான்?''

நாலு வாயாகக் குழம்புச் சாதத்தை வாயில் திணித்து விழுங்கிய த்யாகு தட்டுடன் எழுந்து நின்றான்.

''ஜலதோஷமா இருக்கு, மோர் வாண்டாம்''- முனகலாகப் பேசினவன் தட்டைக் கழுவிக் கவிழ்த்துவிட்டுக் கண்களைக் கிறிக்கொண்டு பூத்த நீரை யாரும் பார்க்கும் முன் வாசலுக்கு வந்தான்.

''ஏன்னா பாதி சாப்பாட்டுலே அவனை விரட்டறேள்?''- போலிக் கரிசனத்தோடு சித்தி கேட்பதையும், ''இவன் சம்பாதிக்கக் கொட்டறதுக்கு இத்தனை சாப்ட்டா போறும் - பெரிய்ய ரோஷக்காரன்தான் போ - அடிக்கக்க நாலு கை போறாது...'' என்று அப்பா கோபத்துடன் பதில் சொல்வதையும் கேட்டுக்கொண்டே த்யாகு தெருவில் இறங்கினான்.

வேர்க்க விறுவிறுக்க யாரோ விரட்டிவிட்ட மாதிரி நடந்து, பிள்ளையார் கோவிலை அடைந்து பிராகாரத்தில் ஒரு பக்கமாய் அமர்ந்தபோது மனசு ரொம்ப வேதனைப்பட்டது.

இன்னும் எத்தனை நாட்களுக்கு?

இன்னும் எத்தனை முறைகள் இவர்களிடம் இப்படிப் பேச்சுக் கேட்கவேண்டும்?

நாக்கில் நரம்பில்லாமல், பெத்த பிள்ளை என்று பாராமல் சவுக்கடியாய் இந்த மனுஷன் வீசும் வார்த்தைகளை இன்னும் எத்தனை தரம் அனுபவிக்கவேண்டும்?

அப்பாவின் கோபத்தை ஓரளவுக்கு த்யாகுவால் புரிந்து கொள்ளவே முடிந்தது.



உப்பு பெறாத எஸ்.எஸ்.எல்.ஸி-யும், பி.யு.ஸி-யும் படித்தவனெல்லாம் வேலை பார்க்கறேன் பேர்வழி என்று நூறும், இருநூறும் கொண்டு வந்து கொடுக்கும்போது இவன் மூலம் - பெரிய படிப்பாய் எம்.காம்., படித்தவன் மூலம் - ஒரு ரூபாய்க்கு வழி இல்லையே என்ற ஆத்திரம் கிளம்புவது சகஜம்தான்.

அதற்காக? அதற்காக?

இப்படியா? சதா சர்வ காலமுமா? தேள் கொட்டுகிற தினுசில் தண்டச்சோறு, தண்டம் என்று எல்லார் எதிரிலுமா?

பி.காம்., முடித்த கையோடு அவர் யாரையோ பிடித்து பஸ் கம்பெனி ஒன்றில் க்ளார்க் வேலை வாங்கிக் கொடுத்ததை அன்றைக்கே, அப்போதே, மகா சந்தோஷத்தோடு, நன்றி உணர்வோடு இவன் ஒப்புக்கொள்ளாமல் போனதில் ஆரம்பித்த கோபம் இன்னும் ஓயவில்லைதான்.

அன்றைய தினம் த்யாகுவுக்கு நன்றாக ஞாபகம் இருந்தது.

வெளியில் போய்விட்டுத் திரும்பிய சாமிநாதனின் முகம் மலர்ந்திருந்தது.

''டே - த்யாகு...!'' - உரக்க அழைத்து, இவன் வந்ததும் தான் சம்பாதித்து வந்திருக்கும் வேலையைப் பற்றி நீளமாய்ப் பேசினார்-

''முதல் ஆறு மாசம் நூத்தி எழுபத்தி அஞ்சு ரூபாய் சம்பளம். அப்புறம் உன் வேலை பிடிச்சுப் போய் கன்பர்ம் ஆச்சுன்னா இருநூத்தி அம்பது தருவா. வருஷா வருஷம் இருபது ரூபா இன்க்ரிமெண்ட், பன்னெண்டு பர்ஸெண்ட் போனஸ் எல்லாம் உண்டு. அந்த கம்பெனி மானேஜர் என் ஓல்ட் ஸ்டூடண்ட்... 'இந்த வேலைக்கு ஏகப்பட்ட போட்டி இருக்கு ஸார், ஆனாலும் நீங்க கேக்கறப்போ நா எப்படி மாட்டேங்கறது'னு சொல்லிட்டான். நாளைக்கு தசமி. நல்ல நாள். போய் ஜாய்ன் பண்ணிடு, என்ன?''

தூணோடு தூணாய்ச் சாய்ந்து நின்ற த்யாகுவுக்கு திக்கென்றிருந்தது.

மூன்று வருஷங்களாய் நெஞ்சில் உருவான கற்பனைகள் எத்தனை? கண்ட கனவுகள் எத்தனை?

வெள்ளை டபிள் நிட் பாண்ட், வெள்ளை ஷர்ட், ராணிஸ்க் டை, பளபளக்கும் ஷூ, காரை அலட்சியமாய் ஓட்டி போர்ட்டிகோவில்


நிறுத்த, 'ஆபீஸர் வரார் ஸார்' என்று உட்பக்கமாய் ப்யூன் திரும்பிக் குரல் கொடுக்க, ஒரு பணக்கார, புத்திசாலித்தனத்துடன் இறங்கிப் படிகளில் ஏறும் த்யாகு...

ஆபீஸர் த்யாகு...

சீஃப் அக்கௌண்டண்ட் த்யாகு...

ரீஜினல் மானேஜர் த்யாகு...

அப்புறம்... லேசாய் தலை நரைத்த, கண்ணாடி போட்ட ஜெனரல் மானேஜர் த்யாகு...





இதை எல்லாம் விட்டுவிட்டு குமாஸ்தா வேலை பண்ணி, இருநூறுக்கும் முன்னூறுக்கும் ஆயுசுக்கும் பறக்கவா சிறப்பாக பி.கா.மில் தேறினேன்?

நோ...நோ...நெவர்...

என்ன முயன்றும் பஸ் கம்பெனி க்ளார்க் வேலையை மனை ஒப்புக்கொள்ள மறுத்ததால் ஹெட்மாஸ்டரைத் தேடி அவர் வீட்டுக்குப் போனான்.

"யாரு?"

''நான்தான் ஸார்!''

''த்யாகுவா? என்னப்பா சாயரட்ச வேளைல வந்திருக்கே அப்பா ஏதாவது சொல்லி அனுப்பிச்சாரா?''

த்யாகுவின் முகமும், அவன் கோலமும் அவருக்கு எதையோ உணர்த்தி இருக்க வேண்டும்.

''என்ன விஷயம் த்யாகு?'' என்றார் இதமாக.

அப்பா மீண்டும் கல்யாணம் பண்ணிக் கொண்டபிறகு, ஒரு முற்பகலில் பார்க்கக்கூடாத சமாசாரங்களைப் பார்த்துக் கொதித்த பிறகு, அன்றாடம் இரவில் தூங்காமல் புரண்டு உள் அறையிலிருந்து வரும் சிரிப்பு, வளையல் சப்தங்களைக் கேட்டு அவஸ்தைப்படத் தொடங்கின பிறகு, படிப்பில் நாட்டம் இல்லாமல் ஆன பிறகு, அத்தனையும் புரிந்து கொண்ட ஹெட்மாஸ்டர் அக்கறையுடன் தனியாய் அவனை அழைத்து 'அசடு மாதிரி வேண்டாததை நினைச்சுண்டு உன் எதிர்காலத்தைக் கெடுத்துக்காதே - நல்ல படிப்பு இருந்துட்டா எதுக்கும் கவலைப்பட வேண்டியதில்லை. படிக்கிற சமயத்திலே படிச்சுடு. புத்திய விளைக்காதே' என்று ஒரு தந்தையின் பாசத்தோடு புத்தி சொன்னதையும், ஏதோ ஒரு நல்லவேளை காரணமாய் அதை ஏற்றுக்கொண்டு சிறப்பாக எஸ்.எஸ்.எல்.ஸி-ஐ முடித்ததையும், தொடர்ந்து அவருடைய சிபாரிசோடு பி.யு.ஸி., பி.காம்., படிப்பை ஸ்காலர்ஷிப்பில் படித்துச் சிறப்பாகத் தேறியதையும் இப்போது த்யாகு நினைத்துப் பார்த்தான்.

''என்னப்பா?''

இனியும் தயங்கினால் எப்படி? உதவி பண்ணக்கூடியவர் இவர் ஒருத்தர்தானே?

திறுத்தி திறுத்தி அப்பா வேலை வாங்கி வந்திருக்கும் விஷயத்தைச் சொன்னான்.

''அந்த வேலைக்குப் போறதுலே உனக்கு இஷ்டம் இல்லையா த்யாகு?''

''இல்லை'' என்று அவன் தலை ஆட்டினான்.

''வொய்?''

''எனக்கு மேல படிக்கணும் ஸார். பிரின்ஸிபால் எம்.காம். ஸீட் தரேன்னு சொல்லி இருக்கார். ஸ்காலர்ஷிப் கண்டிப்பா



கிடைக்குங்குற நம்பிக்கை இருக்கு. ப்ளீஸ் ஸார்... எனக்கு க்ளார்க் உத்தியோகம் பார்க்க ஆசை இல்லே... ஆபீஸராகணும்னு இருக்கு ஸார்... ப்ளீஸ்!''

தொண்டை அடைத்துப் போனது. வார்த்தைகள் வெளி வராமல் அரைகுறையாய் அழிந்து போயின.

''ம்... அப்படியா விஷயம்?'' என்ற ஹெட்மாஸ்டர் முகவாயைத் தடவிக்கொண்டு கொஞ்ச நேரத்துக்கு யோசித்தார். அப்புறம், ''நீ போ, நா பாத்துக்கறேன்'' என்றார்.

அன்று இரவு வீட்டில் ஒரு பூகம்பம் வெடித்தது. மேற்படிப்பு எதற்கு? இருக்கிற படிப்புடன் கிடைத்த வேலையை ஒப்புக்கொள்வதுதான் புத்திசாலித்தனம் - இது சாமிநாதனின் கட்சி.

வலிய வரும் ஸ்ரீதேவியை யாராவது வேண்டாம் என்பார்களா? எம்.காம். ஸீட்டும் ஸ்காலர்ஷிப்பும் கிடைக்கும்போது அதை விடுவது அசட்டுத்தனம். நாளைக்கு ஆயிரக்கணக்கில் சம்பாதிக்க வழி இருக்கும்போது, இன்று அவசரப்பட்டுக் கொண்டு வேலையில் சேருவது எதற்காக? - இது ஹெட் மாஸ்டர் வாதம்.

''சாமிநாதன்! நா தெரியாமத்தான் கேக்கறேன், இப்ப பையன் வேலைக்குப் போய்த்தான் ஆகணும்னு உமக்கு என்ன முடை சொல்லும்? உமக்கு வயசு என்ன? நாப்பத்திநாலா? அடேயப்பா! ரிடையர் ஆக இன்னும் ஏக வருஷம் கிடக்கே! லக்ஷ்மி, சாரதாவுக்கும் வயசாகலை, நாலு வயசு, ரெண்டு வயசுச் சின்ன கொழந்தைகளா இருக்கறதனால கல்யாணம் அது இதுங்கற அவசரம் ஏதுவும் இல்லே, அப்புறம் என்னய்யா? பையன் படிக்கட்டுமே, காலணா செலவு இல்லாம இவன் படிச்சா உமக்கு என்ன கஷ்டம், சொல்லும்?''

ஆயிரம் இருந்தாலும் அவர் ஹெட்மாஸ்டர். இவர் அவருக்குக் கீழ் வேலை செய்யும் வாத்தியார் என்பதோடு அவர் வாதத்தில் கனம் இருப்பதும் புரிய சாமிநாதன் மௌனம் சாதித்ததும், த்யாகு எம்.காம். முடித்ததும், இப்போது படிப்பை முடித்து ஒரு வருஷமாய் வேலை வேட்டையில் இறங்கி எதுவும் குதிராததும், பொழுது விடிந்து பொழுது போனால் தண்டச்சோத்து ராமன் என்ற அடைமொழி வாங்கிக்கொள்வதும் இப்படித்தான்.

ட்ருச், ட்ரிச்சென்று கட்டினதும் கட்டாததுமான தொண்டையில் கவர்க்கோழி கத்தத் தொடங்கிவிட்டது.

கோவிலைப் பூட்ட குருக்கள் சாவியுடன் வந்துவிட்டார். மணி என்ன? ஒன்பதா?

த்யாகு எழுந்தான். கோவிலை விட்டு வெளியே வந்து கடைத்தெரு வழியாக வீட்டை நோக்கி நிதானமாக நடந்தான்.

பத்தடி சென்றவனைத் தொட்டுக்கொண்டு ஒரு வெஸ்பா வந்து நின்றது.

ஆத்மாராம் அவனோடு பி.காம். படித்தவன். படிப்பு ஏறாமல் பாதியில் நின்றவன். இப்போது அப்பாவின் வட்டிக் கடையைத் திறமையாக நிர்வகித்து சந்தோஷமாக இருப்பவன். சிவப்பு நிறம். இளந் தொந்தி. சுகமான வாழ்க்கை. தபாலாபீஸ் அங்கே, இங்கே என்று போய்வரும் வழியில் வட்டிக்கடைக்குச் சென்று ஆத்மாவோடு பேசுவது த்யாகுவுக்குப் பிடிக்கும்.

''ஒன்றுமில்லை ஆத்மா.. சும்மா ஒரு வாக்...''

''என்னப்பா எப்படியோ இருக்கே? வாட்ஸ் த மேட்டர்?''

''............''

த்யாகுவின் தோளில் ஆத்மா கையை வைத்தான்.

''என்ன த்யாகு, வேலை கிடைக்கலைனு வருத்தமா? ஆல் யூஷுவல் அப்பா திட்டினாரா?''

அன்போடு யாராவது ஒரு வார்த்தை என்னப்பா என்று கேட்க மாட்டார்களா என்று காத்திருந்த மாதிரி, கண்கள் கலங்கத் தொடங்கின.

''ஹேய்... த்யாகு... வாட் ஈஸ் ஆல் திஸ்?... சரி, சரி, பின்னாலேயே ஏறு, வீட்டுக்குப் போகலாம். இங்கே கடைத்தெருலே எதுவும் பேச வேணாம்.''

த்யாகு கொஞ்சம் நிதானித்தான்.

வீட்டுக்குப் போய் என்ன பண்ணப் போகிறேன்? வாசக் கதவைச் சாத்திக்கொண்டு அப்பாவும், சித்தியும், பெண்களுடன் படுத்திருப்பார்கள். நான் போய் திண்ணையில் அவர்கள் எறிந்திருக்கும் பாயை விரித்துப் படுக்கவேண்டும். அவ்வளவு தானே? ஆத்மாவோடு போனால் என்ன? படுக்கப் போய்விட்டால் அப்பாவாவது வெளியில் வருவதாவது?



த்யாகு பில்லியனில் ஏறி உட்கார்ந்தான்.

ஆத்மாவின் பெற்றோர் ராஜஸ்தானுக்கு ஒரு கல்யாணத்துக் காகப் போயிருக்கிறார்களாம்.

மாடிக்கு அழைத்துப் போனான்.

ஒரு தட்டு நிறைய வறுத்த முந்திரி, பேரிச்சம்பழங்களை எடுத்து வைத்துவிட்டு இரண்டு க்ளாஸ்களில் விஸ்கியை ஊற்றி ஐஸ் கட்டிகளைப் போட்டான்.

''ஐயையோ வாண்டாம் ஆத்மா... இது தப்பு....'' - பயந்து நடுங்கிய த்யாகுவின் கைகளில் ஒரு க்ளாஸைத் திணித்தான்.

''வாழ்க்கையை அனுபவிக்கணும் த்யாகு. பயந்து செத்துக் கிட்டே வாழறதைவிடத் தூக்கு மாட்டிக்கிட்டு ஒரேடியா போயிறலாம். சும்மா ஒரு பெக் அடி, ஒன்னும் ஆவாது. மனவேதனை குறையும். தெம்பும் வரும். உன்னை வாட்டிகிட்டு இருக்கிற அவஸ்தை ஓடிடும். இதைக் குடிச்சுட்டு ஒரு ஆம்பிளையா லட்சணமா பொம்பளை மாதிரி நினைச்சி நினைச்சி அழுவாம மாரை நிமிர்த்திக்கிட்டு உக்காரு பார்க்கலாம்... கமான் பி எ மேன் ஐ ஸே...''

ஆத்மாவின் வார்த்தைகள் விவரிக்கத் தெரியாத விதத்தில் ஆளை உசுப்ப, க்ளாஸை உதட்டருகில் எடுத்துச் சென்று மெல்ல உறிஞ்சத் தொடங்கினான் த்யாகு.

## 6

த்யாகு ஹௌரா ஸ்டேஷனில் காலடி வைத்தபோது கல்கத்தா நகரம் காளி பூஜைக்கான மேக்கப்பைப் போட்டுக்கொள்ளத் துவங்கிவிட்டிருந்தது.

தீபக் மிஸ்ரா த்யாகுவை அழைக்க ஸ்டேஷனுக்கு வந்திருந் தான்.

''ஆஷின்...ஆஷின்...ஐ பெல்கம் டு அவர் க்ரேட் கொல் கத்தோ, மிஸ்டர் த்யோகராஜன்... மை நேம் ஈஸ் தீபொக் மிஸ்ரோ...''

இரண்டு கைகளையும் பிடித்துக்கொண்டு மிருந்த அன்போடு வங்காள மண்ணை முதல் முறையாக மிதித்திருக்கும் தன்னை, 'வ'விற்குப் பதிலாய் 'ப'வையும், 'அ'விற்குப் பதிலாய் 'ஓ'வையும் பிரயோகித்து, வாய் கொள்ளாமல் கோலிகுண்டுகளை அடைத்து வைத்துக் கொண்டிருக்கும் திறுசில் பேசி வரவேற்கும் வங்காளியை த்யாகு நிமிர்ந்து பார்த்தான்.

வயசு இருபத்தைந்துக்குள்தான் இருக்கும். தார்ப்பாய்ச்சி கட்டின வெள்ளை மல் வேஷ்டி. தொளதொள லக்னோ ஜிப்பா. தடித்த கண்ணாடி, வாய் நிறைய வெத்தலை. ஒரு கையில் சிகரெட் டப்பா, தீப்பெட்டி.

இப்படி கல்கத்தாவில் திபக் மிஸ்ரா வரவேற்க, தான் வந்து இறங்குவோம் என்று யாராவது போன வருஷம் ஜோஸ்யம் சொல்லி இருந்தால், சரிதான், இந்த மாதிரி காதில் பூ சுற்ற வேறு ஆளைப் பாருங்கள் என்று த்யாகு எண்ணிக் கொண்டிருப்பான் நிச்சயம்.

அன்றொரு நாள் - ஏழு மாசங்கள் இருக்குமா? இருக்கும், இருக்கும். தண்டசோத்துத் தடிராமன் என்று அப்பா ஏசியதைத் தாளாமல் ஆத்மாவோடு அவன் வீட்டுக்குச் சென்று முதல் முறையாய் விஸ்கியை ருசி பார்த்து அலை பாய்ந்த மனசைத் தேத்திக்கொள்ள த்யாகு முயற்சித்த அன்றுகூட, இன்னும் ஒரு வாரத்தில் அருமையான வேலை வாய்ப்பு தன்னைத் தேடிவரப்போகிறது என்று நினைக்கத் துணியவில்லை.

அன்று சனிக்கிழமை. பதினொரு மணி இருக்கும், போஸ்ட் வந்தது.

பெங்கால் அலுமினியம் கம்பெனியிலிருந்து போக்குவரத்துச் செலவு கொடுத்து சென்னைக்கு இன்டர்வ்யூக்கு வரச் சொல்லி ஒரு கடிதம்....

''என்ன, இன்டர்வ்யூ கார்டா? ம்ம்... இதுக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லே... போக வர ரயில் சார்ஜ் கொடுக்கறான் - கை காசு தண்டமில்லே, அப்புறம் என்ன? போய் கரிய அப்பிண்டு வரவேண்டியதுதானே?''

அப்பாவின் வக்ரமான ஆசீர்வாதம் துணைக்கு வர, த்யாகு சென்னைக்குப் போனான்.



பெங்கால் அலுமினியம் கம்பெனி கல்கத்தாவில் ஹெட் ஆபீஸும், டெல்லி, பம்பாய், ஹைதராபாத்தில் கிளைகளும் கொண்ட - அலுமினியம் உற்பத்தியிலிருந்து எவர்ஸில்வர் தகடுகள் இறக்குமதி, அது இது என்று பல வியாபாரங்களிலும் தன் கால்களை ஊன்றிக்கொண்ட - நிறுவனம்.

சென்னையில் ஒரு கிளையைத் துவங்க வேண்டி, அதற்குத் தேவையான உத்தியோகஸ்தர்களுக்காக இரண்டு மாசம் முன் ஹிந்துவில் விளம்பரம் செய்திருந்ததற்கு த்யாகு அப்ளை செய்ய இப்போது நேர்முகத் தேர்வுக்கு அழைப்பு வந்திருக்கிறது.

ரீஜினல் மானேஜர் தாஸ் குப்தாவும், கல்கத்தாவிலிருந்து வந்திருந்த பர்ஸனல் மானேஜர் போஸும் தேர்வுகளை நடத்தினார்கள்.

கம்பெனி சம்பந்தமாக, அதன் பிரச்னைகள் சம்பந்தமாக, கேள்விகள் கேட்கப்பட்டவைக்கு த்யாகு யோசித்துப் பதில் சொன்னது அவர்களுக்குப் பிடித்திருக்க வேண்டும்.

அடக்கமாய் எதிரில் அமர்ந்து புத்திசாலித்தனத்துடன் பரபரப்பு இல்லாமல் அவன் பேசியதும், ஆடம்பரம், திமிர் எதுவும் கலக்காமல் தெரிந்ததற்குப் பதிலும், தெரியாததற்கு 'ஐ'ம் ஸாரி ஸார் - ஐ டோண்ட் நோ' என்று கூறியதும் அவர்களைக் கவர்ந்திருக்க வேண்டும்.

'முன் அனுபவம் எதுவும் கிடையாது ஸார் - ஆனால் எந்த வேலையானாலும் கவனத்துடன் கற்றுக்கொள்ளத் தயார்' என்றதும் - பி.காம்., எம்.காமில் சிறந்த மாணவனாகத் திகழ்ந்த சமாசாரமும், அவர்களுக்கு இவனிடம் நிறைய நம்பிக்கையைத் தோற்று வித்திருக்க வேண்டும்.

இல்லாவிட்டால் எதற்கும் ஏக சிபாரிசு தேவைப்படும் இந்தப் போட்டாப் போட்டி காலத்தில் அந்தஸ்தான வேலை த்யாகுவுக்குத் தானாகக் கிடைப்பது எப்படிச் சாத்தியம்?

அக்கௌண்ட்ஸ் டிபார்ட்மெண்டில் வேலை, எல்லாமாக எழுநூறு ரூபாய். கன்ஃபர்ம் ஆனால் தொள்ளாயிரம். மற்றதெல்லாம் வழக்கமான கம்பெனி விதிகள்படி.

வேலையில் சேருவதற்கான உத்திரவுடன் த்யாகு ஊருக்கு வந்து இறங்கியதும் ரொம்ப வருஷங்களுக்குப் பிறகு

சாமிநாதன் முகத்தில் பிள்ளை சம்பந்தமாய் கொஞ்சம் சிரிப்புத் தோன்றியது.

''அசட்டுப் பிசட்டுனு முழிக்காம அதிசயமா சமத்தா நடந்துண்டுட்டே போல இருக்கு! என்ன இருந்தாலும் என் பிள்ளை இல்லையா? அதான் என் புத்தியும், விஷய ஞானமும் வம்சாவளியா உனக்குக் கொஞ்சமாவது வந்திருக்கு. சரி... சரி... எவ்வளவு சம்பளம்? எழுநூறுதானா? என்னமோ ஆயிரக்கணக்குலே சம்பாதிச்சுடுவோம்னு கொட்டி முழக்கினியே... இப்ப எங்க போச்சு அந்த ஆயிரமெல்லாம்? ம்?''

எதற்கும் த்யாகு பதில் சொல்லவில்லை.

ஹெட்மாஸ்டரைப் பார்த்து விவரம் சொல்லி நமஸ்கரித்தான். அப்புறம் ஆத்மாவைத் தேடி அவன் கடைக்குப் போனான்.

சமாசாரத்தைக் கேள்விப்பட்ட ஆத்மா நிஜமாகவே சந்தோஷித்தான்.

''வெறுங்கையோட நியூஸைச் சொன்னா எப்படி த்யாகு? ஓ.கே. நா செலவழிக்கிறேன்... வி மஸ்ட் செலிப்ரேட்...''

கடையை, தம்பியைப் பார்த்துக்கொள்ளச் சொல்லிவிட்டு த்யாகுவோடு வீட்டுக்குப் போய் அலமாரியிலிருந்து ரெமி மார்டினியை எடுத்து இரண்டு க்ளாஸ்களில் ஊற்றினான்.

''வாண்டாம் ஆத்மா.. மணி ஏழுதான் ஆறது.. அப்பா கண்டு பிடிச்சிடுவார்..''

''ஒண்ணும் பிடிக்கமாட்டாரு.. இது ஃபாரின் சரக்கு.. உள்ளே வழுக்கிக்கிட்டு ஓடும். செண்ட் போட்டாப்பல மணக்கும். தட்ஸ் ஆல்.. ஆமா, சிகரெட் பிடிச்சிட்டு பாக்குப் போட்டு மறைச்சிட்டுப் போறவன்தானே நீ! அப்புறம் இதுக்கு மட்டும் என்ன பயம்? கமான் த்யாகு...!''

சும்மா சொல்லக் கூடாது. ரெமி மார்டினி, ரெமி மார்டினிதான். முதல் தடவை குடித்தபோது அனுபவித்த எரிச்சல், காரம் எதுவும் இதில் இல்லை. ஜிஞ்ஜர் பியர் குடிக்கிற தினுசில் லேசாய் தொண்டைக்குழியை வருடிக் கொடுத்தது. அப்புறம் கோடு போட்ட மாதிரி நெஞ்சு வழியாய் வயிற்றில் இறங்கியது.



அன்றும், அந்த வாரத்தில் மேற்கொண்டு இரண்டு நாட்களும் ராத்திரி ஒன்பது மணிக்குமேல் ஆத்மாவுக்குக் கம்பெனி கொடுத்த போது வழக்கத்துக்கு மாறாக, தான் அடிக்கடி சிரிப்பதையும், நன்றாய்ச் சாப்பிடுவதையும், நிச்சிந்தையாய்த் தூங்குவதையும் த்யாகு உணரவே செய்தான்.

சென்னைக்கு வந்து வேலையில் சேர்ந்து, நேரம் காலம் கணக்குப் பார்க்காமல் ஒருவித வெறியுடன் தன்னை மறந்து அவன் ஆபீஸில் உழைத்ததற்கு ஆறு மாசத்திற்குள் கைமேல் பலன்.

ஏழாவது மாசம் பிறந்து ஒரு வாரம் ஆகியிருக்கும். மானேஜர் அவனைத் தன் அறைக்கு அழைத்தார்:

''கங்க்ராட்ஸ் த்யாகு.. ஷார்ட் டைம்ல நல்லா உழைச்சி, திறமைசாலினு பேர் வாங்கிட்டீங்க... கொஞ்சம் முன்னாலே ஹெட் ஆபீஸ்லேந்து போன் வந்தது. அங்கே உதவி அக்கௌண்டண்ட் ஒருத்தருக்கு உடம்பு சரியில்லையாம். ஆறு மாச லீவுலே போறாராம். உங்களை கன்ஃபர்ம் பண்ணி அஸிஸ்டெண்ட் அக்கௌண்டண்டா கல்கத்தாவுக்கு மாத்தச் சொல்லிக் கேட்டுகிட்டாங்க... இரண்டு நாள்லே ஆர்டர் வந்திடும்... ஹௌ டு யு லைக் இட்?''

நினைத்த நினைப்பில்லாமல் தொள்ளாயிரம் ரூபாய் சம்பளத்தில் கல்கத்தாவுக்குப் பயணமா?

''தீபாவளிக்கு இன்னும் பத்து நாள் இருக்கு; நீங்க ஊருக்குப் போய் உறவு மனுஷங்களோட பண்டிகையைக் கொண்டாடிட்டு கல்கத்தா போகணும்னு விரும்பினா சொல்லுங்க.. ஐ ஷால் அரேஞ்ச் ஃபார் இட்...''

த்யாகு யோசித்தான்.

தீபாவளிக்கா? ஊருக்கா?

போய் என்ன பண்ணப்போகிறேன்?

அப்பாவுக்கும், சித்திக்கும் பணம் வந்தால் போதுமே. அப்புறம் நான் எதற்காகப் போகவேண்டும்?

நோ - அவசியமில்லை.

ஒரே ஒரு நாள் ஊருக்குப் போய் விஷயத்தை நேரில் சொல்லி விட்டு சென்னைக்குத் திரும்பி ஹௌரா மெயிலில் த்யாகு ஏறினான்.

"ஷால் வீ கோ?"

கேள்வி கேட்டுவிட்டு தீபக் மிஸ்ரா பெட்டியை எடுத்துக் கொள்ள, ஹோல்டாலைத் தூக்கிக்கொண்ட த்யாகு அவனைத் தொடர்ந்தான்.

டாக்ஸியில் போகும்போது மிஸ்ரா தான் அக்கௌண்ட்ஸ் டிபார்ட்மெண்டில் நாலு வருஷமாய் வேலை பார்ப்பதைச் சொன்னான். கல்கத்தாவை தான் மிகவும் அழுத்தமாக நேசிப்பதைச் சொன்னான். தன் தாய் ரபீந்திர சங்கீத் பாடுவதைப் பற்றிச் சொன்னான்.

லெனின் ஸரானியில் ஆபீஸ் இருந்தது.

"நீங்கள் தங்குவதற்கு இடம் தேர்ந்தெடுக்க உதவும்படி மிஸ்டர் போஸ் சொன்னார். ஆபீஸுக்குப் பக்கத்திலேயே ஒரு லாட்ஜில் உடனடியாக ஒரு அறை காலியாக இருக்கிறது. அதில் தற்காலிகமாக இருங்கள். அப்புறம், உங்களவர் அருகாமையில் வசிக்கவேண்டும் என்று விரும்பினால் ராஷ்பிகாரி அவென்யூவில் விசாரித்துப் பார்க்கலாம்... என்ன சொல்கிறீர்கள்?"

த்யாகு சம்மதித்தான்.

அடுத்து வந்த நாலு நாட்களும் விடுமுறை நாட்கள் என்பதால் மிஸ்ரா அவனை அழைத்துக்கொண்டு கல்கத்தா பூராவும் சுற்றிக் காட்டினான்.

பிர்லா பிளானடோரியம் பார்த்தார்கள். தக்ஷிணேஸ்வர் போனார்கள். பேலூர் மடத்தில் அக்கடா என்று உட்கார்ந்து அந்த மௌனத்தில் கரைந்தார்கள்.

கல்கத்தா மாநகரம் ஒரு இடம் விடாமல் கரியைப் பூசிக் கொண்டு, குளித்துப் பல வருஷங்கள் ஆன தினுசில் அழுக்காக இருந்தது. வயசான கட்டடங்கள். வதவதவென்று ஜனங்கள்.

தெருவுக்குத் தெரு காளி பூஜைக்கான பந்தல்களை எழுப்பி இருந்தார்கள். சின்னதாய், சுமார் சைசாய், ப்ரும்மாண்டமாய்...

நாக்கை ஓரடிக்கு வெளியே தொங்க விட்டு உக்ரமாய், விழிக்கும் கறுப்பு அம்மண காளிகள்... பன்னிரண்டு கைகள். ஒவ்வொரு கையிலும் சூலம். பட்டாகத்தி, கொடுவாள் இத்யாதிகள்.



மண்டை ஓட்டு மாலை. விரித்தமுடி, காலடியில் தப்பாமல் பரமசிவன் உருவம்.

இது என்ன கூத்து?

கணவனை மிதித்துக்கொண்டு காளி ஏன் நிற்கிறாள்?

பல காளிகளைப் பார்த்த பின் வியப்புத்தாள முடியாமல் த்யாகு கேட்டதும் மிஸ்ரா அதன் பின்னணிக் கதையைச் சொன்னான்.

மகா கோபத்துடன் எதிரில் கண்டவர்களைத் துவம்சம் பண்ணிக்கொண்டு திரிந்த காளியை யாராலும் அடக்க முடியாது போகவே, சிவன் ஒரு ட்ரிக் செய்தாராம். காளி வரும் வழியில் ஒரு கல்லாய்ப் படுத்துக்கொண்டு அவள் மிதித்ததும் சுயரூபத்தைக் காட்ட, கொண்ட கணவனை மிதித்து விட்டோமே என்ற பதைப்பில் காளி வேகம் குறைந்து அடங்கிப் போனாளாம்.

"இதிலிருந்து என்ன தெரிகிறது த்யாகு? பெண்டாட்டியை அடக்க வேண்டுமென்றால் அவள் காலில் கணவன் மிதிபட வேண்டும் என்பதுதானே?"

கண்களைச் சிமிட்டிக்கொண்டு மிஸ்ரா பேசியபோது த்யாகுவுக்குச் சிரிப்பு எழுந்தது.

அன்று காலை மிஸ்ரா வரும்போதே வெகு உற்சாகமாய் வந்தான்.

ராய் என்ற நண்பன் வீட்டு ஜ்வராத்திரி பூஜைக்கு இவனை அழைத்துப் போகப் போகிறானாம்.

"என்ன விசேஷம் இந்த பூஜையில்?"

"வந்து பாருங்களேன்.... அடடா! காணக் கிடைக்காத காட்சி ஆயிற்றே என்று ஆச்சரியப்பட்டுப் போவீர்கள்..."

த்யாகு மிஸ்ராவுடன் ராய் வீட்டுக்குப் போனபோது வீட்டின் நடுமுற்றத்தில் பூஜை துவங்கிவிட்டிருந்தது.

உயரமான துர்க்கை சிலை, காலடியில் தட்டுத் தட்டாய் தானியங்கள், பழங்கள்.

அலாதி நிசப்தம்.

டும்க்கு டும்க்கு டும்க்கு டுக். திடும்மென்று உடுக்கை, பறைகளின் சப்தம் மெல்ல ஒலிக்கத் தொடங்கின.

இதுநாழிகை முற்றத்தின் மத்தியில் கூட்டமாய் நின்றிருந்த பெண்கள் சட்டென்று விலக, த்யாகுவால் அந்த இடத்தை நன்றாகப் பார்க்க முடிந்தது.

துர்க்கைக்கு எதிரில் ஒரு களிமண் பீடம். பக்கத்தில் ஒரு குட்டி ஆடு. நெற்றியில் குங்குமம். கழுத்தில் மாலை.

பெண்மணி ஒருத்தி ஜலத்தை ஆட்டின்மேல் தெளித்தபின் அதன் தலை களிமண் திட்டுக்கு நேர் மேலாகப் பிடித்துக் கொள்ளப் படவும் த்யாகுவுக்கு பகீரென்றது.

ஏ... என்ன பண்ணப் போகிறார்கள்?

சில கணங்களுக்கு நிதானித்து படபடப்பில்லாமல் யோசித்து விஷயத்தை அவன் புரிந்து கொள்வதற்குள் 'மா' என்று பூசாரி கத்தினார்.

தொடர்ந்து அங்கு குழுமியிருந்த ஆண்களும் பெண்களும் வெறியோடு, 'மா' என்று கூவ, பூசாரி சிலையின் காலடியில் இருந்த பட்டாக்கத்தியை எடுத்தார்.

நடப்பது எதையும் புரிந்துகொள்ளாமல் தன் கழுத்து மாலையைப் பிய்த்து மென்றுகொண்டிருந்த அந்த ஆட்டுக்குட்டி பிடரியில் ஓங்கிப் போட்டார்.

ஒரே வெட்டு!

கத்தி கழுத்தைத் தாண்டிக்கொண்டு களிமண்ணில் புதைந்தது.

டபக்டபக்கென்று துடித்த முண்டத்தை அழுந்தப்பற்றி ஒரு கிண்ணத்தில் பீரிடும் ரத்தத்தை ஒருவர் பிடிக்க, தனியாய்த் துள்ளிக்கொண்டிருந்த தலையை எடுத்து, சிலையின் பாதத்தில் வைத்து, அதன் மேல் ஒரு நெய் தீபத்தை வைத்தார் இன்னொருவர்.

உயிர் போய் இரண்டு நிமிஷங்கள் ஆகியும் இப்படியும் அப்படியுமாய் அசையும் அந்தத் தலை... அதன் உச்சியில் ஆடும் தீபம்...ஹா! என்ன பயங்கரம் இது! த்யாகு அதிர்ந்து போனான்.

"நீங்கள் ரொம்ப அதிர்ஷ்டசாலி த்யாகு. தேவிக்குப் பலி கொடுக்கும் காட்சியைப் பார்த்து, இந்தப் பிரசாதத்தைச் சாப்பிடும் புண்ணியம் லேசில் யாருக்கும் கிடைக்காது தெரியுமா?"

புண்ணியமா? இதுவா?



பத்து நிமிஷத்தில் விருந்தினர்களுக்கு இனிப்பும், டீயும் கொடுக்கப்பட்டபோது ஆட்டின் ரத்தம் பீரிட்டது நினைப்புக்கு வர, எதையும் தொட த்யாகு மறுத்துவிட்டான்.

அறைக்கு வந்த பிறகும் அந்த ஆட்டின் சத்தமும், துண்டாகித் துடித்த முண்டமும், தீபத்துடன் அசைந்த தலையும் திரும்பத் திரும்பக் கண்முன் கூத்தாடி ஆளை விரட்டிய விரட்டலில், என்ன செய்வேன், என்ன செய்து இந்த வேதனையைக் குறைப்பேன் என்று த்யாகு அரண்டு போனான்.

'ஒரு பெக் சாப்பிட்டுப் பாரு... ஜிங்குனு இருக்கும். கமான் பி எ மேன்' - முன்பு ஒரு நாள் ஆத்மா சொன்னது ஞாபகத்துக்கு வர, அதீத ப்ரயத்தனத்துடன் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு எதிர்சாரியில் இருந்த மதுபான கடைக்குப் போய் அரை பாட்டில் விஸ்கி வாங்கி வந்து அவன் செய்தது போலவே திரவத்தை க்ளாஸில் ஊற்றிப் பாதித் தண்ணீரைக் கலந்து இரண்டு வாய் குடித்தான். நிஜமாகவே அரை மணிக்கெல்லாம் உடம்பின் பதட்டம் குறைந்து, மனசின் கொதிப்பும் அடங்கிப் போன மாதிரி தோன்ற, நிம்மதியாய் த்யாகு படுக்கையில் காலை நீட்டிப் படுத்தான்.

# 7

ட்ராமிலிருந்து இறங்கின த்யாகு எஸ்ப்ளனேட் மைதானங்களை நோக்கி நிதானமாய் நடந்தான்.

பரந்து விரிந்த மைதானங்கள். கண்ணுக்கு எட்டியவரை இதமான பச்சைப் புல்வெளிகள். மைதானங்களின் ஓரமாய்க் கரை கட்டி நிற்கும் அடர்ந்த மர வரிசைகள். அதை ஒட்டி அவசரமில்லாமல் ஊறும் ட்ராம் வண்டிகள்.

இந்த அழுக்கு கல்கத்தாவின் நட்ட நடுவில் இப்படி ஒரு அழகான இடமா?

கறுப்பு மேகங்கள் சூழ்ந்த வானத்தில் எதிர்பாராமல் கிடைக்கும் சின்னூண்டு இடைவெளி வழியே ஜொலிக்கும் நிலா மாதிரி இது என்ன அழகு!

கூட்டம் அதிகம் இல்லாத ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து அமர்ந்து, கையோடு கொண்டுவந்திருந்த பாரதியாரின் கவிதை களைப் பிரித்தான்.

கண்ணம்மா - என் காதலியில் பக்கம் விரிந்தது.

சுட்டும் விழிச் சுடர்தான் - கண்ணம்மா
சூரிய சந்திரரோ?

எத்தனையோ நூறு முறைகள் படித்துப்படித்து மனப்பாட மாகிப் போன பாடல்...

பாரதியாரின் கண்ணம்மா...

சூரியனையும் சந்திரனையும் கண்களாகக் கொண்டு, தன் விழிகளின் கருமையினால் வானத்து இருளைப் பழித்தவள், சோலை மலரின் ஒளி போலப் புன்னகை சிந்துபவள், நீலக் கடல் அலைகளையே நெஞ்சாகக் கொண்டவள், ஜரிகை பொட்டுக்களை இழைத்த கருநீலப் புடவை உடுத்திக் குயிலை ஒத்த குரலில் பாடுபவள், சிரிப்பவள், பேசுபவள்...

ஆஹா! என்ன இனிமையான கற்பனை!

நிஜமாகவே ஒரு பெண் இப்படி உடுத்தி, சிரித்து, கிட்டத்தில் நின்று பேசினால் எப்படி இருக்கும்?

பட்டுக் கருநீலப் புடவை பதித்த நல் வயிரம்
நட்ட நடுநிசியில் தெரியும் நட்சத்திரங்களடி...

கல்லூரியில் படிக்கும் நாட்களில் கொல்லைக்கட்டில், தோய்க்கும் கல்மேல் உட்கார்ந்து வானத்தையும், அதில் வாரி இறைந்திருக்கும் நட்சத்திரப் பூக்களையும் அலுக்காமல் சலிக்காமல் வெறித்து, பாரதியின் பட்டுக் கருநீலப் புடவை பதித்த நல் வயிரங்களோடு ஒப்பிட்டுப் பார்த்து மனசுக்குள் சிலிர்த்துக் கொண்டதை இப்போது த்யாகு நினைத்துப் பார்த்தான்.

பாரதியின் கண்ணம்மா மாதிரி ஒரு பெண் மனைவியாக அமைந்தால் வாழ்க்கை எப்படி இருக்கும்?

கருநீலப் புடவை உடுத்தி, தலை கொள்ளாமல் மல்லிகை வைத்து, மணக்கமணக்க நிற்பவளை அருகில் இழுத்து, அணைத்து, வானத்துக் கருமையைப் பழிக்கும் அந்தக் கண்களை ஊன்றிப் பார்த்தால் எப்படி இருக்கும்?



சோலை மலர் ஒளியாய்ப் புன்னகை சிந்தும் உதட்டில் முத்தமிட்டால் எப்படி இருக்கும்?

சட்டென்று த்யாகு தன்னை உலுக்கிக்கொண்டான்.

ஏன் இந்த ரீதியிலேயே சில நாட்களாய்க் கற்பனைகள் அமைகின்றன என்பதை நினைத்துப் பார்த்தவனுக்குக் கொஞ்சம் வெட்கமாக இருந்தது.

அப்பாவின் அந்த லெட்டர்தானே?

அதுதானே மனசு இப்படி அல்லாடுவதற்குக் காரணம்?

பத்து நாட்களுக்கு முன் சாமிநாதனிடமிருந்து த்யாகுவுக்கு ஒரு கடிதம் வந்தது.

வழக்கமாய், நாங்கள் இங்கு சௌக்கியம், வருகிற முதல் தேதி பணம் அனுப்பும்போது நூறு ரூபாய் சேர்த்து அனுப்பு; சித்திக்கு உடம்பு சரியில்லை, டாக்டரிடம் காட்ட வேண்டும் என்றோ, அவசியம் இந்த முறை உபரியாய்ப் பணம் அனுப்பு, சமையல்கட்டு ஓடுகளைப் பிரித்துப் புதுசு போட வேண்டும் என்றோதான் சாமிநாதன் எழுதி இருப்பார்.

த்யாகு வேலையில் சேர்ந்து சம்பாதிக்கும்வரை இந்தச் செலவுகளெல்லாம் எங்குதான் ஒளிந்து கொண்டிருந்தனவோ? மாசா மாசம் லொட்டு லொசுக்குக் காரணங்கள், கூட பணம் அனுப்பு என்று எழுதுவதற்கு. மற்றபடி நீ சௌக்கியமா, உன் உடம்பை நன்றாகக் கவனித்துக் கொள்கிறாயா? சாப்பாடு ஒத்துக்கொள்கிறதா? ஊருக்கு எப்போது வரப்போகிறாய்? அங்கெல்லாம் ஏகக் குளிராமே, கம்பளி உடை இருக்கிறதா? ம்ஹூம் - ஒரு வார்த்தை கிடையாது. கல்கத்தா வந்து வருஷம் ஒன்றாகப் போகிறது. இன்னும் ஒரு வார்த்தை கிடையாது.

இந்தத் தடவை வந்த கடிதம் வழக்கமாய் வருவதிலிருந்து மாறுபட்டிருந்தது.

இன்லாண்ட் லெட்டர் இல்லை. கவர், தடிமனாய் ஓரங்களில் மஞ்சள் தடவிக் கொண்டு...

என்ன சமாசாரம்?

பிரித்துப் படித்தான்.

மதுராந்தகம் பக்கத்தில் சேஷன் என்று ஒரு மிராகதாராம். அவருக்கு இரண்டே பெண்கள்தானாம். மூத்தவளுக்குக் கல்யாணமாகி விட்டதாம். கங்கா இளையவளாம். கண்ணுக்கு லட்சணமாய் இருக்கிறாளாம். எஸ்.எஸ்.எல்.சி. படித்திருக்கிறாளாம். கையில் இருபதாயிரம் ரொக்கமாய்க் கொடுத்து, அமர்க்களமாய்க் கல்யாணத்தை நடத்த சேஷன் தயாராம். 'போன மாசம் ஜாதகம் கைக்கு வந்ததை நம் ஜோஸியரிடம் கொடுத்துப் பொருத்தம் பார்த்தேன். நன்றாகப் பொருந்தியதால் நாலு நாட்களுக்கு முன் சித்தியும் நானும் பெண் பார்க்கப் போயிருந்தோம். வசதியான இடம். வலிய வந்து கேட்பதைச் செய்யக் காத்திருக்கிறார்கள். சித்திக்கும் எனக்கும் இந்த இடத்தை விடக்கூடாது என்றே தோன்றுகிறது. லீவு எடுத்துக்கொண்டு, கைக் காசைச் செலவழித்து வந்து, பெண்ணை நீ பார்க்க வேண்டிய அவசியம் இல்லை என்பதும், நான் பார்த்து சரி என்றால் நீ தட்டமாட்டாய் என்பதும் எனக்குத் தெரியாதா, என்ன? உன்னைப் பெற்ற எனக்குத் தெரியாதது உனக்கு ஒன்றும் தெரிந்துவிடப் போவதில்லை என்பது ஞாபகத்தில் இருக்கட்டும்...'

அப்பா நீளமாக எழுதியிருந்ததை த்யாகு நாலு முறைகள் படித்தான்.

கல்யாணமா? எனக்கா?

இது என்ன திடுதிப்பென்று?

எனக்கும் சித்திக்கும் இந்த இடத்தை விடக்கூடாது என்று தோன்றுகிறது... என்று எழுதி இருக்கிறாரே, இந்த சித்திக்கு என்ன அப்படி திகர் கரிசனை?

பணக்கார இடம் என்பதால் சட்டுப்புட்டென்று முடிக்கத் துடிக்கிறார்களா?

கங்கா...

எப்படி இருப்பாள் அவள்?

அம்மா மாதிரி சிகப்பாய், மொழு மொழுவென்று, பின்னல் தொடையை இடிக்க?

இல்லை, சித்தி மாதிரி நெருங்கலாய், தொட்டு இட்டுக் கொள்ளும் கறுப்பாய்?



எஸ்.எஸ்.எல்.சி. படிப்பு.

இந்தக் காலத்துக்குப் போதுமா?

நான் எம்.காம்., எனக்கு மனைவியாக வருபவள் அட்லீஸ்ட் ஒரு டிகிரி ஹோல்டராகவாவது இருக்க வேண்டாமா?

இதையெல்லாம் அப்பாவுக்கு எழுதினால் புரிந்து கொள்வாரா?

எனக்குப் பெண்ணைப் பார்க்கவேண்டும், அவள் பட்டப் படிப்பு படித்தவளாக இருக்க வேண்டும். பணம், காசு எல்லாம் அப்புறம்தான் என்று எழுதினால் புரிந்து கொள்வாரா?

அன்று இரவே பேப்பரையும் பேனாவையும் வைத்துக் கொண்டு த்யாகு உட்கார்ந்தான்.

அப்பாவுக்கு அநேக நமஸ்காரங்கள். உங்கள் கடிதம் கிடைத்தது. விஷயம் அறிந்து கொண்டேன்.

அப்புறம்? - பேனா ஓட மறுத்தது.

ராத்திரி பன்னிரண்டு வரை எட்டு கடிதங்கள் எழுதிக் கிழித்துப் போட்ட பின் அவன் சலித்துப் போனான்.

அப்பா வார்த்தைக்கு இன்றுவரை மறுத்துப் பேசிப் பழக்கம் இல்லாததால் எப்படி எழுதியும் லெட்டர் திருப்தியாக அமையாதது மாதிரியே தோன்றியது.

ஹெட்மாஸ்டருக்கு விபரமாக எழுதி, அப்பாவிடம் நம் கட்சியை எடுத்துப் பேசச் சொல்லலாமா?

ம்ஹூம் - இது சரிப்படாது.

படிப்பு, வேலை என்றால் சரி, ஆனால் இது குடும்ப சமாசாரம் ஆயிற்றே, அப்பா எப்படி எடுத்துக் கொள்வாரோ?

'தத்தாரியாயிட்டேடா' என்பார்.

'சம்பாதிக்கிற திமிராடா' என்பார்.

'எனக்குத் தெரியாததை நீ என்ன கண்டுட்டே?' என்பார்.

'அங்கயே எவளையாவது வைச்சிண்டு இருக்கியா?' என்பார்.

ஆகாசத்துக்கும், பூமிக்கும் குதிப்பார், நிச்சயம்.

எதற்கு வீண் வம்பு?

அதிகம் படிக்காத பெண்ணானால் என்ன? அம்மா எத்தனை படித்திருக்கிறாள்? அவள் அழகும், அவள் சமர்த்தும் இருந்தால் போதாதா?

சரி, பணக்கார இடம் என்றால் தோதுப்பட்டு வருமா?

ஏன் வராமல்? எனக்கென்ன கொஞ்சமாகவா சம்பளம் வருகிறது!

விடிய விடிய யோசனை பண்ணிவிட்டு 'உங்கள் இஷ்டம் போலச் செய்யுங்கள்' என்று இரண்டு வரி எழுதிப் போட்டான்.

அப்போதிலிருந்துதான் இந்த அவஸ்தை. கற்பனை எல்லாம்... கங்கா...

அவள் எப்படி இருப்பாள்?

பாரதியாரின் கண்ணம்மா மாதிரி இருப்பாளோ?

கங்கா த்யாகராஜன்... கங்கா த்யாகு... பேர் பொருத்தம் எப்படி?

யோசனை மாறாமலேயே மைதானத்திலிருந்து எழுந்து ட்ராம் பிடிக்க நடந்தபோது இருட்டு பரவத் தொடங்கிவிட்டது.

அறைக் கதவைத் திறந்தவன் கண்களில் முதலில் அந்த நீல கவர் பட்டது.

அப்பாவிடமிருந்துதான்.

உள்ளிருந்து பொத்தென்று மடியில் விழுந்த கங்காவின் போட்டோ.

எடுத்து, ஊன்றிப் பார்த்தவனுக்குச் சந்தோஷமாக இருந்தது.

நாட் பேட்...

நன்றாகவே இருக்கிறாள்!

சுமார் உயரமாய் இருக்கிறாள்... ரொம்ப ஒல்லியும் இல்லை... கண்கள் பெரிசாய் இருக்கின்றன...

ம்...ஷி ஈஸ் ஸ்வீட்...

விவரிக்கத் தெரியாத உணர்வுடன் சாப்பிடக்கூடப் போகாமல் கங்காவின் படத்தை மார்பின் மீது சாய்த்துக்கொண்டு த்யாகு உறங்கிப் போனான்.



கறுத்த நீல பட்டுப்புடவை, பொட்டுப் பொட்டாய் ஜரிகை புட்டாக்கள்... மல்லிகைப்பூ. அன்றும், தொடர்ந்த வந்த நாட்களிலும், கனவிலும், நனவிலும் கங்கா கலர் கலராய்த் தோன்றி மகிழ்விக்க, நிச்சயதார்த்தத்துக்கும் முஹூர்த்தத்துக்கும் இடையில் இருந்த நாட்களை த்யாகு தினுசு தினுசாய்க் கற்பனை பண்ணுவதிலேயே கழித்தான்.

கங்காவை சாந்தி நிகேதத்துக்கு அழைத்துப் போக வேண்டும். ரவீந்திரநாத் தாகூர் வாழ்ந்து நடமாடிய இடங்களைக் காட்ட வேண்டும். பேலூர் மடத்து ஆற்றங்கரையில் அவள் கைகளைப் பிடித்துக்கொண்டு மணிக்கணக்காய், நிச்சிந்தையாய் அமர வேண்டும்.

என் மடியில் தலைவைத்து அவள் படுத்திருப்பாள். நான் சின்னக்குரலில் பாரதியாரின் கவிதைகளைப் படித்துக்காட்டுவேன்.

நிலாக் காலங்களில் ஹூக்ளி நதிக்கரைக்கு அழைத்துப் போய் யாருமில்லாத இடமாகப் பார்த்து நின்று தண்ணீரில் நிலாவின் பிம்பத்தைப் பார்த்து நாங்கள் மகிழ்வோம்.

அவளுக்கு நான் ஆங்கிலம் கற்றுக் கொடுப்பேன். நான் குரு. அவள் சிஷ்யை. அப்பா சொல்லித் தந்த மாதிரி ஆளை ஓடஓட விரட்டாமல் அன்போடு, கனிவோடு சொல்லித் தருவேன்.

ஆபீஸிலிருந்து வரும்போது மறக்காமல் தினம் மல்லிகைப்பூ வாங்கி வருவேன்.

அவளுக்குப் பாடத் தெரியுமோ?

தெரிந்தால் பாடச் சொல்லி அன்றாடம் கேட்பேன். பாடத் தெரியாவிட்டாலும் ரேடியோ, ரெகார்டில் கச்சேரிகளை அவளோடு கேட்டு மகிழ்வேன்.

முதல் காரியமாக ஒரு ரெகார்டர் வாங்க வேண்டும். அப்புறம் அவளோடு சேர்ந்துகொண்டு கடைக்குப் போய் அவளுக்கு இஷ்டமான ரிக்கார்டுகளை வாங்கவேண்டும்...

ஆ! முக்கியமான சமாசாரத்தை மறந்துவிட்டேனே? இனி இந்த ட்ரிங்கைத் தொடக்கூடாது. நம்மூர் பக்கத்திலெல்லாம் குடிப்பது ரொம்ப தப்பான காரியம். சும்மா, ஒரு ஜாலிக்காக பத்து நாட்களுக்கு ஒரு முறை குடிப்பதையும் விட்டுவிட வேண்டும். பின்ரா, இல்லை

வேறு யார் கம்பெனிக்காக அழைத்தாலும் 'வேணாம்டா சாமி, அதுக்கெல்லாம் இனிமேல் வேறு ஆளைப் பாரு' என்று சொல்லிவிட வேண்டும்.

ஆமாம், வாட் அபௌட் சிகரெட்? இந்தப் பழக்கத்துக்கும் கங்கா ஆட்சேபணை சொன்னால்...?

சொன்னால், விட்டுத் தொலைத்துவிட வேண்டியதுதான். கங்காவைவிட, அவள் விருப்பு வெறுப்புகளைவிட எனக்கு இதெல்லாமா முக்கியம்?

கல்யாணத்துக்காக ஒரு மாச லீவில் ஊருக்குப் போய் இறங்கிய த்யாகு மனசில் அடுக்கடுக்காய் ஆசைகள்.

போட்டோவைவிட கங்கா நேரில் இன்னும் நன்றாகவே இருந்தாள்.

அழகுக்கு அழகு செய்கிற மாதிரி பளபளவென்று நகைகள் பட்டுப் புடவைகள்.

கல்யாணம் படு அமர்க்களமாக நடந்தது.

அழகும், அந்தஸ்தும் தந்த மயக்கத்திலிருந்து மீண்டு, யதார்த்தத்தைப் புரிந்துகொள்ள த்யாகுவுக்குப் பத்து நாட்கள் போலத் தேவைப்பட்டன.

கிருஹப்ரவேசத்துக்காகத் தங்கள் ஊருக்கு வந்துவிட்டு அங்கு தங்கின சில நாட்களில் மனைவியின் ரசனைகள் லேசாகப் புரியத் தொடங்கியதும் என்ன இது என்று த்யாகு தவிக்க முற்பட்டது நிஜம்.

ஆத்தங்கரைக்குப் போகலாமா என்றால், புதுப் படம் ரிலீஸ் ஆயிருக்கே அதுக்குப் போவோம் என்றாள்.

லால்குடி என்னமாய் வாசிக்கிறார் கேளு... என்றால் கொட்டாவி விட்டு எனக்குத் தூக்கம் வரது என்றாள்.

மல்லிப்பூ வாங்கிண்டு வந்தேனே வைச்சிக்கலியா? என்றால் ஐயே, எனக்கு மல்லி பிடிக்காது. கொஞ்சம் வைச்சிண்டாகூடத் தலைவலி வந்துடும். கனகாம்பரமும், டிஸம்பரும்தான் பிடிக்கும் என்றாள்.

கறுப்பு, பச்சை, நீலம் என்று அடிக்க வரும் கலர்களில் பட்டை ஜரிகை போட்டுப் புடவை கட்டிக்கொண்டாள். கழுத்துக்



கொள்ளாமல் இரட்டை வடம், நெக்லஸ் என்று கசகசவென்று அணிந்துகொண்டாள்.

பாரதி கவிதைகளைப் படித்துக் காட்டட்டுமா? என்றால், இருங்கோ, இந்தப் பத்திரிகைலே அந்த நடிகையைப் பத்தி என்னமோ எழுதியிருக்கு, படிச்சிட்டு வரேன் என்றாள்.

இதெல்லாம் போதாதென்று, கங்காவுக்கு இந்த கோடிக்கு அந்த கோடி வாய் நீளும் என்பதையும், தன் பிறந்தகத்துப் பெருமையைப் பற்றிப் பேசுவதைத் தவிர அழகாய் இதமாய் எதுவும் பேச அந்த நாக்குக்குத் தெரியாது என்பதையும் உணர்ந்த பிறகு த்யாகு அரண்டுதான் போனான்.

ஒரு மாச லீவு முடிந்து ஊருக்கு அவன் புறப்பட்ட போது கங்கா அவனோடு பயணமாகவில்லை.

''சங்கராந்திக்கு ரெண்டு மாசம்தானே இருக்கு. அது முடிஞ்சப்புறம் தனிக் குடித்தனம் வைச்சுண்டா போச்சு... கங்கா சின்னப் பொண்ணு, இப்ப அங்க குளிர் காலம், வந்து வீணா ஏன் கஷ்டப்படணும்?'' மாமனார் பேச்சுக்கு எதிர்ப்பேச்சுப் பேசி, மனைவியை உடன் அழைத்துச் செல்லத் தைரியமில்லாததால் தனியாகக் கிளம்பின நிமிஷத்தில் என்னமோ ஒருவித சங்கடம் த்யாகுவின் அடிவயிற்றைப் பிறாண்டவே செய்தது.

## 8

த்யாகு கண்களைத் திறந்தான். அறைக்குள் லேசாய் வெளிச்சம் ஊடுருவத் தொடங்கி இருந்தது. பக்கத்து வீட்டில் சளக்சளக் என்று வாசல் தெளிக்கும் சப்தம். பால் பாட்டில்கள் குலுங்க வேகமாக சைக்கிளைச் செலுத்தும் சப்தம். அரக் கீரே, மொளக் கீரே என்று குரல் எடுத்து ராகம் போட்டு கீரைக்காரி எழுப்பும் சப்தம். ட்ருய் ட்ருய் என்று நாக்கைப் புரட்டி மாடுகளைப் பால்காரன் விரட்டும் சப்தம்.

விடியப் போகிறதா? மணி என்ன?

இடக்கையைத் தூக்கி மணியைப் பார்த்தான். ஐந்து அடித்து பத்து நிமிஷம்.

கண்களை நீண்ட நேரத்துக்குத் திறந்து வைக்க முடியாதபடி யாரோ இமைகளை இழுத்து மூடுவது போல திரும்ப அவற்றை மூடிக்கொண்டான்.

தலை ரொம்ப பாரமாக இருந்தது. பெரிய பாறாங்கல்லை நெற்றியில் ஏற்றி வைத்த மாதிரி கனத்தது.

சின்னதாய் கழுத்தை ஒடித்து முகத்தைத் திருப்பினால் கூட அறை ஒருதரம் வட்டமடித்துவிட்டு நின்றது.

நேற்று வழக்கத்தைவிட அதிகம் குடித்து விட்டேனா? ஹாங்க் ஓவர் ஏகமாய் இருக்கிறதே!

இந்தக் கனம் குறையவேண்டும் என்றால் ஒன்று, ஒரு தம்ளர் ப்ளடி மேரி சாப்பிடவேண்டும், இல்லாவிட்டால் ஷவரின்கீழ் நிற்கவேண்டும்.

ப்ளடி மேரிக்கு எங்கே போவது? வெளியூருக்கு ஊர்போக நேர்ந்து நட்சத்திர ஹோட்டல்களில் தங்கும்போது வேணுமானால் ஸ்டைலாய் மணியை அடித்து 'பேரர் - கெட் மீ ஒன் ப்ளடி மேரி' என்று ஆர்டர் பண்ணலாம். இங்கே எப்படி? கங்காவைக் கூப்பிட்டு 'ஒரு க்ளாஸ் டொமாடோ ஜூஸ் கொண்டு வாயேன்' என்றால் கேட்கக்கூடாத எதையோ கேட்டுவிட்ட மாதிரி கண்களை இடுக்கிக்கொண்டு பார்ப்பாள்.

'ஜூஸா? இந்த விடிகார்த்தால நேரத்துலேயா?' என்பாள்.

'கெக்கபிக்கேனு ஏன்தான் உங்க புத்தி போறதோ? ஜூஸாம், ஜூஸ்' என்பாள்.

இதெல்லாம்கூட போன இரண்டாம் வருஷம்வரை பேசிய பேச்சுக்கள்தான். சென்ற இரண்டு ஆண்டுகளாய் அவள் வாயில் வார்த்தைகள் எங்கே வருகின்றன? எல்லாம் அக்னி துண்டங்கள் தானே?

வாக்குவாதம், சச்சரவு, சண்டை..... அழுகை... எட்செட்ரா...

சரி போறும். கங்கா பற்றின நினைப்பு இப்போது எதற்கு?

அதான் கீழே தயாராய்க் காத்துக்கொண்டிருப்பாளே, இவன் எப்போதடா வருவான் பிடித்துக்கொள்ளலாம் என்று.

அதிகக் குலுங்கல் இல்லாமல் எழுந்திருக்க முயற்சித்தும் தலை கிறுகிறுவென்று சுற்றவே த்யாகு வாய்விட்டு அம்மா என்று அரற்றினான்.



அம்மாவைத் தொடர்ந்து மனசில் அப்பா மின்னினார்.

அப்பா....

ஐயோ! அப்பா...

அப்பாவைப் பிணமாகக் கிடத்திவிட்டுத்தானே நான் மேலே வந்து குடிக்கத் தொடங்கினேன்!

ஏன் இன்னும் அவரை எடுக்க என்னைக் கூப்பிடவில்லை? சித்தி வந்து சேரவில்லையா?

விடியப் போகிறது. இன்னுமா வரவில்லை?

நோ... நோ... அப்படி இருக்காது, சித்தி வந்து சேர்ந்தபோது இருட்டி இருக்கும். இந்த இருட்டில் எடுத்து அவஸ்தைப்பட வேண்டாம், காலையில் பார்த்துக் கொள்ளலாம் என்று எல்லாரும் படுத்திருப்பார்கள்.

அப்படியே வைத்துக்கொண்டாலும், என்னை ஏன் கீழே சித்தி வந்ததும் கூப்பிடவில்லை?

த்யாகுவுக்குத் திடும்மென்று ரொம்ப படபடப்பாக இருந்தது.

தலையை இரண்டு கைகளாலும் பிடித்துக்கொண்டு அழுத்த யோசித்துப் பார்த்தான்.

அப்பா நீளமாய் கிடந்தது. கங்கா தன் தகப்பனாரை மட்டும் சாப்பிடக் கூப்பிட்டது. தான் மாடிக்கு வந்து பாத்ரூமில் குடிக்கத் துவங்கியது - எல்லாம் ஆடி அசைந்து கொண்டு சங்கிலித் தொடர்போல ஞாபகத்துக்கு வந்தன.

அப்புறம்? அப்புறம் என்ன ஆயிற்று?

நான் ஏன் கீழே போகவில்லை?

என்னை ஏன் யாரும் கூப்பிடவில்லை?

பாத்ரூமிலிருந்து எப்போது வெளியில் வந்து படுக்கையில் படுத்துத் தூங்கினேன்?

துருவித்துருவிப் பார்த்தவரைக்கும் எந்த நினைப்புக்கும் இடம் தராமல் தடிமனாய் ஒரு கறுப்புக் கம்பளியைப் போர்த்திக்கொண்டு கம்மென்று மூளை கிடக்க, த்யாகுவுக்குப் பயம் எழுந்தது.

ப்ளாக் அவுட் ஆ?

நடந்தது எதுவுமே நினைப்புக்கு வராதபடி முழுமையான இருட்டடிப்பா?

சனியன் - கொஞ்ச நாளாய் இது வேறு கழுத்தை அறுக்கிறது.

''என்ன கத்தல், என்ன ஆர்ப்பாட்டம்! குழந்தை எதிர்லே நேத்து ராத்திரி அப்படிச் சண்டைக்கு வந்தேளே, வெட்கமாயில்லே?''

''அதிசயமா ஊர்லேந்து அக்கா, அத்திம்பேர் வந்திருக்கா, அவா முன்னாலே அசிங்க அசிங்கமா ராத்திரி ஜோக் சொல்லி, பித்துக்குளியாட்டம் நடந்துண்டு, சாப்பிடமாட்டேன்னு கூத்தடிக்க.. தூ... வெட்கமாயில்லே?''

ம்ஹூம் இல்லையே!

கடுகத்தனையாவது, எதுவாவது ஞாபகம் இருந்தால் அல்லவா வெட்கம், மானம் எல்லாம்?

நேற்றும் இந்த மாதிரி ப்ளாக் அவுட் ஆகிவிட்டதா?

அளவுக்கு அதிகமாகக் குடித்து, நிதானம் இல்லாமல் நடந்துகொண்டு விட்டேனா?

அப்பாவின் பிணம் கிடக்கும்போதா?

என்ன கஷ்டகாலம் இது!

மனசு பதறிய பதறலில் உடம்பும் நடுங்கத் தொடங்கியது.

கைகளில் நடுக்கம். எழுந்து நிற்கக்கூட பலம் இல்லாத கால்கள்.

மிகுந்த ப்ரயத்தனத்துடன் எழுந்தவன், பாத்ரூமுக்குள் போய்க் கதவைச் சாத்திக்கொண்டான். துணிகளைக் களைத்துவிட்டு ஷவரைத் திருப்பி அதனடியில் மண்டையை நீட்டினான்.

சவுக்கடிகளாக விழுந்த ஜலம் மெள்ளத் தடவிக் கொடுக்கும் கரங்களாக மாறின.

ஹோ! வாட் எ ரிலீஃப்...

சோப்பை எடுக்க கை நீட்டியவனின் கண்களில் ஒரு பக்கமாய்க் கிடந்த காலி பாட்டில் விழுந்தது.

முந்தா நாள் இரவு க்ளப்பிலிருந்து மறைத்துமறைத்துக் கொண்டுவந்ததை ஒட்ட தீர்த்துவிட்டேனா?



ரொம்ப அதிர்ச்சியாக இருந்தது. ரொம்ப பயமாக இருந்தது.

அப்படியே சம்மணமிட்டு உட்கார்ந்தவனுள் இரண்டு நாட்களாய் வீட்டில் நடந்த சம்பவங்கள் திப்பிதிப்பியாய் எட்டிப் பார்த்தன. முந்தாநாள் மாலை ஆபீஸிலிருந்து வீடு திரும்பியபோது வாசலில் சேஷனின் கார் நின்று கொண்டிருந்தது.

சென்னைக்குக் குடி வந்துவிட்ட இந்த இரண்டு மாச காலமாய் நினைத்த நினைப்பில்லாமல் சேஷன் மதுராந்தகத்திலிருந்து இங்கே வருவதும், சனி, ஞாயிறு, ஒரு அரை நாள் லீவு என்றால்கூட கங்கா குழந்தையோடு பிறந்தகத்துக்கு ஓடி விடுவதும் அடிக்கடி நடப்பதுதானே.

ஹாலில் த்யாகு நுழைந்ததும், சோபாவில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த சேஷனும், கங்காவும் தங்கள் பேச்சைச் சட்டென்று நிறுத்தினர்.

கங்கா கண்களில் மாலைமாலையாய் ஜலம். சேஷன் முகத்தில் வண்டி கோபம்.

என்னாயிற்று?

''வாங்கோ... எப்ப வந்தேள்?''

த்யாகுவின் கேள்விக்கு சேஷனிடமிருந்து பதில் பிறக்கவில்லை.

அந்தப் பார்வையும் ஆத்திரமும் புரிபடாமல் போக மேற்கொண்டு எதுவும் பேசாமல் த்யாகு மாடிக்குப் போய்விட்டான்.

குளித்து க்ளப்புக்குப் போக உடை மாற்றின நிமிஷத்தில் சேஷன் தானாக வரவில்லை என்பதையும், தன் குடிக்கும் பழக்கத்தைப் பற்றிப் புகார் படிக்க கங்கா அவரை வரவழைத் திருக்கிறாள் என்பதையும் அவனால் ஊகிக்க முடிந்தது.

இப்போது என்ன செய்யவேண்டும்?

ஒன்றுமே நடக்காதது மாதிரி கீழே போய் அவர்களுடன் உட்கார்ந்து, சேஷன் குடிப்பழக்கம் பற்றிப் பேச்செடுத்தால் 'சீசீ... அத்தனையும் பொய்' என்று சாதிக்கலாமா?

இல்லை, அபிஷியல் டின்னர் இருக்கிறது என்று நைஸாக நழுவிவிடலாமா?

குடிக்குப் பறக்கத் தொடங்கிவிட்ட மனக இரண்டாவது முடிவை ஆமோதிக்க, கீழே இறங்கின த்யாகு ஹாலில் யாரும் இல்லாததால் நிம்மதியுடன் வாசலுக்கு வந்து, காரைக் கிளப்பி, ஜிம்கானா கிளப்பைப் பார்க்க ஓட்டினான்.

திரும்ப ராத்திரி ஒரு மணி சுமாருக்குத் திரும்பி, தன் சாவியைப் போட்டு வாசக்கதவைத் திறந்து உள்ளே அவன் நுழைந்தபோது, வீடு இருட்டில் ஆழ்ந்து கிடந்தது.

நல்லவேளையாக நிதானம் இழக்காமல் இருந்ததனால், சப்தமில்லாமல் மாடிக்குப் போய் படுக்க முடிந்தது.

காலை எழுந்து குளித்து டிபன் சாப்பிடக் கீழே செல்வதற்காக மேல்படியில் காலை வைத்தவன், உரத்த பேச்சுக் குரல்கள் கேட்க அப்படியே நின்றுவிட்டான்.

''அப்பாவும், பெண்ணுமா என்ன நினைச்சுண்டு இப்படி யெல்லாம் பேசறேள்? பணம், காசு இருக்குங்கற திமிரா? தெரியாமத் தான் கேக்கறேன் - இன்னாரைப் பத்தி இன்னது பேசறதுங்கற விவஸ்தைகூடவா உங்களுக்கு இல்லை? பொய் சொன்னால் பொருந்தச் சொல்லணும்... ஆமாம்... எனக்கு வர்ற கோபத்துக்கு...''

உரக்கக் கத்துவது யார்?

அப்பாவா? இது அப்பா குரல்தானே?

அவர் எங்கே இருந்து வந்தார்?

இவர்கள் என்ன சொல்லிவிட்டார்கள். அப்பா இப்படி காச்சுமூச்சென்று கத்துகிறார்?

''ரொம்ப கத்தாதேயும். உமக்கு மேல கத்தறத்துக்கு எனக்கும் தெரியும். நாங்க சொன்னதெல்லாம் சத்தியம்... உம்ம பொண்கள் மேல, என் பேரன் மேலே சத்தியம்... போதுமா? உமக்குத்தான் கோபம் வருமா? ஒரு அரிவாளை எடுத்துண்டு உம்ம பையனை ஒரே போடா போட்டுடலாமானு எனக்குக் கூடத்தான் ஆத்திரமா இருக்கு... மனுஷனாய்யா அவன்? பொண்ணைக் கொடுத்துட்டு மேனு தயதாட்சிண்யம் பாக்கறேன். இல்லாட்டா... இல்லாட்டா...'' ஒரு விநாடி நிறுத்திய சேஷன் உடனேயே திரும்ப தொடர்ந்தார்:

''எங்களை எல்லாம் வெட்கங்கெட்ட பேமானிநு நினைச்சுண்டு இருக்கானா உம்ம பிள்ளை? நா நினைச்சா அவனை



சந்திலே நிக்க வைச்சுடுவேன். கோர்ட் வரை இழுத்து சீச் சீனு நாற அடிச்சுடுவேன். தெரியுமா? கிளிய வளர்த்துப் பூனைகிட்ட கொடுத்த மாதிரி எங்க கங்காவை உம்ம பையனுக்குக் கொடுத்துப் பாழுங் கிணத்துலேதான் நா தள்ளிட்டேன்.. போனாப்போறது போனாப் போறதுனு பார்த்தா நாளுக்கு நாள் விஷயம் மோசமான்னா போறது? முதமுதல்ல போன வருஷமே கங்கா விஷயத்தைச் சொன்னப்போ நா அதிர்ந்து போயிட்டேன். மாப்பிள்ளையா? குடிக்கிறாராநு எனக்கு ஒரே ஷாக். இருந்தாலும், நாகரிக வாழ்க்கையிலே இதெல்லாம் சகஜம்னு இவளை நா தேத்தினேன். சரி, ஏதோ இப்ப அப்ப கம்பெனிக்குக் குடிக்கறாராக்கும்னு நினைச்சேன். சத்தியமா உம்ம பிள்ளை இப்படி ஒரு மடாக்குடியனா இருப்பான்னு நா நினைக்கல ஸ்வாமி... கனவுலேயும் நினைக்கல...''

சேஷன் நிறுத்தின கையோடு கங்கா ஆரம்பித்தாள்:

''ஒரு நாளைப்போல ராத்திரி ஒரு மணி, ரெண்டு மணிக்கு வீட்டுக்கு வரவேண்டியது. அந்த அர்த்த ராத்திரிலே தூங்கறவளை எழுப்பி தோசை வாரு, வடாம் பொரி, அதப்பண்ணு இதைப் பண்ணுனு ஏக அதிகாரம் பண்ண வேண்டியது. நன்னா குடிச்சுட்டு வந்து பாட்டுப் பாடறேன் கேளுனு தொந்தரவு, இல்லாட்டா செத்துப்போன அம்மாவை நினைச்சுண்டு ஒரு பாட்டம் அழுகை. வீட்டுக்கு யார் வந்தாலும் மதிக்கறதில்லை. குழந்தை குட்டியைக் கொஞ்சுவோம், பெண்டாட்டியைக் கவனிப்போம்... ம்ஹூம்... ஒண்ணும் இல்ல... இந்த கண்ராவி எல்லாம் அந்த தரித்திரம் பிடிச்ச கல்கத்தாலேதான் இருக்கும். சொந்த ஊருக்கு வந்துட்டா உறவுக்காரா பக்கத்துலே இருக்குற பயத்துலே ஒழுங்கா இருப்பார்னு நினைச்சேன். எங்கே? குழந்தைக்காகப் பாக்கறேன். இல்லைன்னா என்னிக்கோ இந்த நரகத்திலேந்து பிச்சுண்டு எங்காத்துக்கு ஓடியிருப்பேன். இத்தனையும் அனுபவிக்கணும்னு எனக்குத் தலை எழுத்தா? காசான காசு இருக்கற வீட்டுலே பொறந்து வளர்ந்திட்டு இப்படி மிருகங்களோட லோல்படணும்னு என் தலைலே எழுதியிருக்கே! யார்கிட்டப்போய் முட்டிப்பேன்?''

ஆங்காரத்தோடு கத்த ஆரம்பித்த கங்கா குரல் பிசிர் தட்ட அழ ஆரம்பித்ததும் சேஷன் கோபம் அதிகரித்தது.

''இப்படி இடிச்சபுளியாட்டம் உட்கார்ந்திருக்க உம்மைத் தந்தி அடிச்சி வரவழிக்கலை.... எந்திரும், மாடிக்குப் போய் அருமைப்

பிள்ளையாண்டானை எழுப்பி உறைக்கிற மாதிரி நாலு வார்த்தை கேளும். பெரிய எடத்துப் பொண்ணோட அருமை புரிஞ்சு அவளை நன்னா வைச்சிக்கோனு கண்டிக்கச் சொல்லும். உடனடியா குடிக்கற பழக்கத்தை இவன் விடலைன்னாக்க நா பொல்லாதவளா ஆயிடுவேன்னும் சொல்லும்...''

சேஷன் பேசி முடிப்பதற்குள் அவசரமாய் நாற்காலி தள்ளப் படும் ஓசை கேட்டது. அரக்கப் பரக்க மாடிப்படிகளை அடைந்து ஒருவித வேகத்துடன் படிகளை ஏறத் தொடங்கிய சாமிநாதன், பிள்ளை படிகளின் முடிவில் நிற்பதைப் பார்த்துப் பாதியில் நின்றார்.

முகம் ஜிவுஜிவு என்றிருந்தது.

கண்களில் ஜலம்.

''ஏண்டா, நாசமாப் போறவனே - இவா சொல்றதெல்லாம் நிஜமாடா? குடிகாரப் பாவி...! நீ நன்னா இருப்பியாடா? இந்தக் குடும்பத்துல பிறந்துட்டு இப்படியொரு ஈனத்தனமான காரியம் பண்ண உன்னால எப்படிடா முடிஞ்சுது? கடங்காரா.. மஹாபாவி...! குடிகார ராக்ஷஸா... உன் நடத்தையால இவா முன்னால என்னைத் தலை குனிய வைச்சுட்டயேடா பழிகாரா! நீ நாசமாத்தாண்டா போவே... உனக்கு அழிவு காலம் வந்துடுத்துடா... உருப்படாத பாவி...! நா.. நா..''

நடுங்கும் குரலில் பெரிசாய்க் கத்தியபடி நாலு தாவலில் த்யாகுவை நெருங்கி அவன் சட்டையைப் பற்றி உலுக்கிய சாமிநாதன் திடும்மென்று நாக்கும் கையும் இழுக்க அங்கேயே சரிந்து விழுந்தார்.

அவ்வளவுதான். சாமிநாதன் நினைத்த நினைப்பில்லாமல் பிணமானது இப்படித்தான்.

அழுகை வெடித்துக்கொண்டு எழுந்து ஷவர் ஜலத்தோடு கலந்தது. கைவிரல்களின் நடுக்கம் அதிகமாக அதிகமாக ரொம்பப் பழக்கமான மரங்கொத்தி பின்மண்டையின் ரத்தநாளங்களைக் கொத்தத் தொடங்கியது.

ஒரு ட்ரிங்க் வேண்டுமே...

ஒரே ஒரு வாய்...

சின்னதாய்...



எழுந்து நின்று ஷவரை நிறுத்தின த்யாகு தள்ளிக் கிடந்த காலி பாட்டிலைக் குனிந்து எடுத்தான். மூடியைத் திறந்து அதில் ஒட்டிக் கொண்டிருந்த நாலு சொட்டுக்களை வாயில் ஊற்றிக்கொண்டான். ரொம்ப களைப்பாக இருந்தது.

கதவைத் திறந்து, நீர் சொட்டும் ஈரத்தலையுடன் அவன் மெதுவாக வெளியே வந்தபோது அறையில் சேஷனும் கங்காவும் இவனுக்காகக் காத்து நின்றிருந்தனர். கதவோரமாய் சித்தி.

மூன்று முகங்களிலும் சரியான கடுமை.

அந்தக் கடுமையும் அந்தக் கோபமும் முதல் நாள், தான் பெரிசாய் ஏதோ தப்புப் பண்ணியிருக்க வேண்டும் என்ற உணர்வைத் தீர்மானமாக எழுப்ப, நிற்கமுடியாமல் போன இனுசில் த்யாகு சுவரில் சாய்ந்துகொண்டான்.

## 9

''என்ன பண்றேள் பாத்ரூம்குள்ள? சித்தி வந்தாச்சு, வெளியே வாங்கோ'' என்று கங்கா படபடப்புடன் அதட்டவும், இவள் என்ன என்னை விரட்டுவது, நானும் நாய்க்குட்டி போலப் பின்னால் ஓடுவது என்ற கடுஞ்சினம் எழுந்ததன் காரணமாய், வழக்கம்போலக் குடிபோதை அதிகமாகி விட்டால் சாதுவான த்யாகுவுக்குள்ளிருந்து ஒரு முரட்டு த்யாகு ப்ரபலமாகும் இனுசில் அந்தக் கணத்திலும் ஒரு ஜனனம் நிகழ, அவன் ஒருவித அவசரத்துடன் கதவைத் திறந்தான். வெளியே வந்தான்.

''சித்தி வந்தாச்சுனு சொல்லி அனுப்பினாக்க மளமளன்னு இங்கே வந்து ஆகவேண்டிய காரியத்தைக் கவனிக்காம ஏன் இப்படி அசமஞ்சமா இருக்கேள்? இன்னும் பொணத்தை எத்தனை நாழிக்குக் கிடத்தி வைச்சுண்டு இருப்பா? சுத்தமா பொறுப்பே இல்லாத புருஷனைக் கட்டிண்டு மன்னாடணும்னு என் தலைலே எழுதி இருக்கே?''

பேசிக்கொண்டே போன கங்கா ஒரு விநாடி நிறுத்திக் கணவனை ஏறிட்டாள்.

''மூஞ்சியும் கண்ணும் ஏன் இப்படி ஜிவுஜிவுனு இருக்கு?''

''எப்படி இருக்குடி?''

நிதானமாய், அழுத்தமாய் த்யாகு கேட்கவும், குப்பென்று எழுந்த வாடையில் கங்கா முகத்தைச் சுளுக்கிக்கொண்டாள்.

''என்ன இப்படி நார்றது? என்ன பண்ணேள் பாத்ரூம்லே இத்தனை நாழி?''

''நாத்தமா? இது வாசனைடீ கங்கா... அனுபவிக்க வேண்டிய வாசனை... கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனைங்கற மாதிரி, இதோட அருமை எல்லாம் உனக்கு எங்கடீ தெரியப்போறது?''

''என்ன, பேச்சு ஒரு தினுசா கழுதை, அது இதுனு போறது? குடிச்சேளா? அதான் வார்த்தைக்கு வார்த்தை டீ போட்டுப் பேசற துணிச்சல் வந்திருக்கா? இல்லேன்னா பொண்டாட்டி மொகத்தை நிமிர்ந்து பார்க்கக்கூட தைரியம் இல்லாத ஆம்பிளை ஆச்சே நீங்க... சரி, சரி... இப்போ உங்களோட விதண்டாவாதம் பண்ண எனக்கு நேரமில்லே..... மூஞ்சிய அலம்பிண்டு கீழ வந்து தொலையுங்கோ...''

திரும்பின கங்காவின் கையை த்யாகு எட்டிப் பிடித்துக் கொண்டான்.

''கீழ வந்து தொலைங்கோவா? என்னடீ ஆம்படையான்னு மரியாதைகூட இல்லாம?....ம்?...''

கிட்டத்தில் இழுத்து, முகத்திடம் குனிந்து பேசவும் கங்காவுக்குள் புருபுருவென்று கோபம் சீறியது.

''அட, தூ...! சரியான விவஸ்தைகெட்ட மனுஷரா இருக்கேளே! அப்பன் பொணம் கிடக்கறப்போ இங்க திருட்டுத்தனமா குடிச்சுட்டு இப்படிக் கையைப் பிடிச்சு வம்பு பண்றது உங்களுக்கு வெக்கமா இல்லே?''

ம்ஹூம் - என்று தலை ஆட்டினான் த்யாகு.

பின், பிடியை விடாமலே ''யார் கையை நா பிடிக்கறேன்டீ? என் பெண்டாட்டி கைதானே? என்னடீ, தப்பு?'' என்று இழுத்துஇழுத்துப் பேசினவன் தொடர்ந்து, ''ஹே - கங்கா, இந்த மாதிரி முரட்டுத்தனத்தோட கிட்ட வந்தா உனக்கு ரொம்ப



பிடிக்குமேடீ... ஒரு பெக் அடிச்சுட்டுப் படுத்துக்க வந்தா, இன்னிக்குத்தான் ஆம்பிளையா லட்சணமா நீங்க இருந்தேள்னு நீ சொல்லுவியேடீ... ஞாபகம் இல்லே?' என்றான்.

''சீ...!'' - கையைத் திருகி அவன் பிடியிலிருந்து கங்கா விடுபட்டாள்.

''சீ என்னடீ, சீ...! அன்னிக்கு, கல்கத்தாலே உனக்கு வேண்டி இருந்தது இன்னிக்கு வேண்டியிருக்கலையா?''

''இன்னது பேசறோம்னு புரியாம உளர்ற அளவுக்கா குடிச்சிருக்கேள்? ஏது அத்தனை ட்ரிங்கு?''

''வைச்சிருந்தேன்டீ!''

''எங்க? நாதான் ஞமைச் சல்லடை போட்டு அன்னாடம் தேடறேனே! எனக்குத் தெரியாம இங்க ட்ரிங்கு எப்படி நுழைய முடியும்? யார் வாங்கிண்டு வந்து கொடுத்தா? இன்னும் பாக்கி வைச்சிருக்கேளா? எங்க அந்த சனியன்? மொதல்லே அதைத் தேடி எடுத்துச் சாக்கடைலே கொட்டிட்டுத்தான் மறுவேலை.''

பதட்டத்துடன் அறையில் இங்கும் அங்கும் ஓடி தலை காணிகளைத் தூக்கி, அலமாரியைத் திறந்து பாட்டில் வேட்டை ஆடும் கங்காவைப் பார்க்கையில் த்யாகுவுக்குச் சிரிப்பு எழுந்தது.

''அதெல்லாம் உன் கைக்குக் கெடைக்காதுடீ... ஐயாவை என்னன்னு நினைச்சே... ஜீனியஸ் தெரியுமா?''

பாத்ரூமுக்குள் எட்டிப்பார்த்தவளின் கண்களில் காலி பாட்டில் விழுந்தது.

''இது ஏது! எனக்குத் தெரியாம எப்படி எடுத்துண்டு வந்தேள்? எங்க ஒளிச்சு வைச்சிருந்தேள்? அரைபாட்டிலையும் குடிச்சிட்டேளா? அதான் மூஞ்சியும் மொகரையும் பேச்சும் இப்படி இருக்கா?... இப்ப நா என்ன பண்ணுவேன்? கீழே இந்தக் கோலத்தோட நீங்க வந்து நின்னா என் மானம்னா போகும்? புத்தி இருக்கா உங்களுக்கு?''

''என்னடீ ஆளை விரட்டறே? மரியாதை இல்லாம பேசினா எனக்குக் கோபம் வந்திடும், ஆமாம்...''

''இப்ப மூஞ்சிய அலம்பிண்டு ஒழுங்கா கீழ வரப்போறேளா இல்லையா?''

''முடியாதும்.''

''சித்தி வந்தாக்க, இருட்டிண்டு வர்றது, காரியம் நடக்கணும்னு நா சொல்றது உங்க மரமண்டைடலே ஏறலை?''

''மரமண்டை, கிரமண்டைனா பளார்னு அறைஞ்சுடுவேன் - ஜிவேர்!''

சில கணங்களுக்கு என்ன பேசுவது என்று புரியாமல் கங்கா நிற்க, ''இன்னும் கிழ இறங்கி வராம என்னம்மா பண்றேள், இரண்டு பேரும்?'' என்று கேட்டுக்கொண்டு சேஷன் அறைக்குள் நுழைய, அப்பாவைக் கண்டதும் ஜலஜலவென்று கங்காவின் கண்களில் நீர் சுரக்க ஆரம்பித்தது.

''இங்க பாருங்கோப்பா! எப்படியோ அரை பாட்டில் ஒளிச்சு வைச்சுண்டு குடிச்சிட்டு, இப்ப ஆள் நிதானமே இல்லாம இருக்கறதைப் பாருங்கோப்பா. எனக்கு நாக்கப் பிடுங்கிக்கலாம் போல இருக்குப்பா...''

சப்தமில்லாமல் கங்கா விசும்பத் தொடங்கினாள். சேஷன் த்யாகு பக்கம் திரும்பினார்.

''என்ன கூத்து இது? உங்களுக்கே இது நன்னா இருக்கா?''

த்யாகு அவரை முறைத்தான்.

''எது நன்னா இருக்கு, எது நன்னா இல்லேனு எனக்குத் தெரியும். எனக்குப் புத்தி சொல்லவேண்டாம். புத்தி சொல்ற ஆளைப் பாரு... எங்கப்பா இப்படிக் கிழே கெடக்கறதுக்கு யார் லார் காரணம்? நீங்கதானே? அப்பாவும் பொண்ணுமா சேர்ந்துண்டு எங்கப்பாவை வரவழிச்சு, இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி அவருக்கு அட்டாக் வந்து சாகப் பண்ணிட்டு, இப்ப எனக்கு உபதேசம் பண்ண வரேளா? அ...?''

''இல்லாததையும், பொல்லாததையும் எங்க சொன்னோம்? அன்னாடம் குடிச்சிட்டு இவளை நீங்க கால்லே போட்டுத் தேய்க்கறது நடக்கலையா? அது மட்டும் நியாயமா?''

''பொய் சொன்னா எனக்குக் கோபம் வரும்... நா குடிக்கிறது நிஜம்தான், ஆனா இன்னி வரைக்கும் அவ மேல என் விரல் பட்டிருக்குமா? கை நீட்டி ஒரு தட்டுத் தட்டி இருப்பேனா? கால்லே போட்டுத் தேய்க்கிறேனாம், கால்ல. இத்தனை பெரியவரா இருந்துண்டு பொய் பேச உங்களுக்குக் கூச்சமா இல்லே?''



கங்கா கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

''இவர்கிட்ட பேச்சு கொடுக்காதீங்கோப்பா... நம்ம மரியாதைதான் கெட்டுப் போகும்...''

''ஆமாம்டீ... நீ ரொம்ப யோக்யை... எந்த நிமிஷமும் பிடுங்கி எடுக்கற மாதிரி வள்வள்னு நீ பேசறது மட்டும் ரொம்ப மரியாதையான காரியம்னு மனசுல நினைப்பா?''

''இப்ப மூஞ்சி அலம்பிண்டு கீழ வரப்போறேளா, இல்லையா?''

''வரப் போறதில்லை - என்ன பண்ணுவே?''

இந்தத் திமிரான பேச்சுக்கு என்ன பதில் சொல்வதென்று புரியாத தினுசில் கங்கா நின்றாள். அப்புறம் ''வந்தா வாங்கோ, வராட்டா போங்கோ.. எனக்கென்ன? பிள்ளையாச்சு, அப்பன் பொணமாச்சு'' என்று உறுமிவிட்டு மளமளவென்று வெளியே போக, சேஷன் அவளைத் தொடர்ந்தார்.

அழுதுகொண்டு போகும் மனைவியையும், பின்னாலேயே பேந்தப்பேந்த விழித்துக்கொண்டு போகும் மாமனாரையும் பார்த்துக்கொண்டு நின்றவனுக்கு சந்தோஷமாக இருந்தது.

திமிர் பிடித்தவர்கள். தங்களுக்குத்தான் பணம் இருக்கிறது என்று என்ன ஆட்டம் ஆடியிருக்கிறார்கள்!

கல்கத்தாவில் வாழ்ந்த வருஷங்களில் இரண்டு மாசம் தன்னோடு இருந்தால் பாக்கி பத்து மாசங்களைப் பிறந்தகத்தில் கழிக்க கங்கா ஓடினதை த்யாகு இப்போது நினைத்துப் பார்த்தான். அம்மாவுக்குத் தலை சுத்தல், பொங்கல், அறுவடை சமயம், அக்காவுக்கு உடம்பு சரியில்லை, கல்கத்தா குளிர் தாங்கவில்லை, பிள்ளையைப் பார்க்கணும் போல இருக்கிறது, மண்ணாங்கட்டி, தெருப்புழுதி என்று ஆயிரம் காரணங்களைச் சொல்லிக்கொண்டு ஊரைப் பார்க்க ஓடிவிட்டதை த்யாகு இப்போது நினைத்துப் பார்த்தான்.

கண்ணனுக்கு ஆறு வயசானதும் 'இவன் இங்க இருந்தா தத்தாரியாயிடுவான் - ஊர்ல எங்காத்துலே இருந்துண்டு படிக்கட்டும்' என்று பிடிவாதமாக, பிள்ளையைத் தன்னோடு வைத்துக்கொள்ள ஆசைப்படுவதை எத்தனை முறைகள் எடுத்துச் சொல்லியும் காதில்

வாங்காமல் - தன் இஷ்டப்படி ராணியாகச் செயல்பட்டதை நினைத்துப் பார்த்தான்.

திமிர் பிடித்த கழுதை.

இப்படி நாலு பெக் போட்டுவிட்டு, 'என்னை' என்று அதட்டி, வைக்கிற இடத்தில் வைத்தால்தான் ஒழுங்காக இருப்பாள்.

த்யாகு தட்டுத் தடுமாறிக்கொண்டு படுக்கையில் உட்கார்ந்தான்.

எம தூக்கம் ஆளை அசத்தியது.

பேசாமல் காலை நீட்டிப் படுத்து, ஒரு குட்டித் தூக்கம் போட்டால் என்ன?

"த்யாகு...!"

சித்தி.

"என்னப்பா இது? வந்த எடத்திலே அப்பா இப்படித் திடும்னு போயிட்டாரே. லக்ஷ்மி, சாரதாவை எப்படிப்பா கரை ஏத்தப் போறேன்? இனிமே நீதானேப்பா எங்களுக்கு எல்லாம்? என் தேகம் ஆடிப்போறதுப்பா... நா என்ன பண்ணுவேன்?"

அப்படியே தரையில் சரிந்து உட்கார்ந்து அழும் சித்தியை த்யாகு கண்சிமிட்டாமல் பார்த்தான்.

எத்தனை நாட்களுக்கு வாழைப்பழத்தில் ஊசி ஏத்தி இருக்கிறாள் இவள்? எத்தனை தடவைகள் அப்பாவிடம் கோள் சொல்லிக் கொடுத்து, திட்டும் அடியும் வாங்கித் தந்திருக்கிறாள்?

இப்போது மட்டும் பிள்ளை, தங்கை பாசம் பீறிடுகிறதாமா?

தலைப்பை வாயில் பொத்திக்கொண்டு கல்யாணி அழுவது விவரிக்கத் தெரியாத ஒரு இன்பத்தைக் கொடுக்க த்யாகு அப்படியே உட்கார்ந்திருந்தான்.

அன்றைக்கு, பட்டப் பகலில், திறந்த வீட்டில், நாய் மாதிரி புருஷனுடன் உறவு' கொண்டு அவனைக் கைக்குள் போட்டுக் கொண்டவள்தானே நீ? - அழு.

காலேஜில் படிக்கும்போதுகூட சின்ன தப்பைப் பெரிசாக்கி அப்பாவிடம் எனக்கு அடி வாங்கிக் கொடுத்தவள்தானே நீ? - அழு. நன்றாக அழு...



அழும் கண்களுடன் கல்யாணி நிமிர்ந்தாள்.

"இருக்கிற வேதனை போறாதுனு இவா வேற உன்னைப் பத்தித் தாறுமாறா என்னென்னமோ பேசறாளே, த்யாகு - கங்கா கீழ வந்து 'போய் உங்க குடிகாரப் பிள்ளையோட லட்சணத்தைப் பார்த்துட்டு, கீழ இழுத்துண்டு வந்து ஆகவேண்டியதைப் பாருங்கோ'னு சொல்றாளே. என்னப்பா இதெல்லாம்?"

எதற்கும் வாய் வார்த்தையாய் ஏதும் பேசாமல் கல்லுளி மங்கத்தனத்துடன் த்யாகு அமர்ந்திருந்ததால் அழுது ஓய்ந்த கல்யாணி மெதுவாய் எழுந்தாள்.

"நம்ப போறாத காலம் த்யாகு... இல்லாட்டா இப்படிப்பட்ட சத்புருஷரைப் பலி கொடுப்போமா? ம்... நீ கீழ வாப்பா... ஆகறதைப் பார்க்கலாம்..." முனகலாய்ப் பேசப்பட்ட அந்த வார்த்தைகளும், அந்த வேஷமும் தாங்கமுடியாது போக த்யாகு வெடித்தான்.

"சத்புருஷனா? எங்கப்பாவா? ஊர்ல போயி சொல்லு - குழந்தைகூடச் சிரிக்கும்... கொதிக்கக் கொதிக்க ரசத்தை எடுத்து எங்கம்மா மூஞ்சிலே விசிறி, தலைப்பிள்ளையை ரெண்டா வெட்டி, வகக்குட்டிக்கு வைத்தியம் பண்ணாம சாகடிச்சாரே, அவரா சத்புருஷன்? நீ மயக்கி மயக்கி அவரைக் கைக்குள்ள போட்டுண்ட மாதிரி எங்கம்மாக்கு இருக்கத்தெரியலைங்கறதுக்காக இந்த மனுஷன் அவளை ஓடஓட வெரட்டினது உனக்குத் தெரியுமா? சத்புருஷனாம் சத்புருஷன்... தூத்தேறி... இவரை எனக்கு அப்பானு சொல்லிக்கக்கூட கூசறது... உன்னையும் எனக்குப் பார்க்கப் பிடிக்கலை. மரியாதையா கீழே போயிடு.. தந்துப் பித்துனு இங்க நின்னுண்டு நீ ஏதாவது மேலேமேலே பேசினா நா என்ன பண்ணுவேன்னு எனக்கே தெரியாது.... கெட் அவுட்... கெட் லாஸ்ட் ஸம்ரி ஒன் ஆஃப் யூ..."

கடைசி வாக்கியங்களை முழுமையாகப் பேச இயலாமல் போதை எக்கச்சக்கமாய் ஏறிவிட குழறிக் குழறித் த்யாகு பேசவும், என்னமோ ஏதோ என்று பயந்து போன கல்யாணி ஓட்டமும் நடையுமாய் வெளியேறினாள்.

பத்து நிமிஷம் கழித்து சேஷனும் கங்காவும் மீண்டும் மாடிக்கு வந்தபோது என்ன உலுக்கியும் எழுப்ப முடியாத ப்ளாக் அவுட் தூக்கத்தில் த்யாகு அமிழ்ந்து போயிருந்தான்.

இப்போது என்ன பண்ணுவது? மணி ஐந்து. நாழியாகிறது... பிணத்தை யார் எடுப்பது, யார் கொள்ளி போடுவது?

கல்யாணி, சேஷன், கங்கா உள்அறைக்குச் சென்று யோசித்தார்கள்.

தண்ணீர் கொட்டி எழுப்பலாமா?

எழுந்து திரும்ப இப்படி நாலு பேர் நடுவில் கன்னாப்பின்னா என்று கத்தமாட்டான் என்பது என்ன நிச்சயம்?

பேரன் கொள்ளி போடலாம் என்றால் பெற்றவர் உயிரோடு இருக்கும்போது தலைச்சன் பிள்ளை கொள்ளி போடக்கூடாது.

சேஷன் புரோகிதரை உள்ளே அழைத்தார்: ''அப்பா நிடும்னு போனதுலே பிள்ளை ஷாக் ஆகி மயங்கிட்டார். நிலைமை சரியில்லே, அதனால பெண்டாட்டிகிட்ட கைப்புல் வாங்கி நீங்களே கொள்ளி போட்டுடுங்கோ'' - நம்பிக்கை தரும் விதத்தில் அவர் பேசியதால், அடுத்த அரை மணி நேரத்தில் முன்பின் தெரியாத ஒரு வாத்தியார் கையால் கொள்ளி வாங்கிக்கொண்டு சாமிநாதனின் சடலம் எரியத் தொடங்கியது.

நடந்தது இத்தனையும் கடுகத்தனைகூட நினைப்பில் பதியாதபடி ப்ளாக்அவுட் ஆகிவிட, விடிகாலையில் விழிப்புக் கண்டு எழுந்த த்யாகு, தன் முரட்டுத்தனத்தை இழந்து சாதுவாக பாத்ரூமிலிருந்து வெளியே வந்தபோது சேஷன், கங்கா, சித்தியின் கடுமையான முகங்களைப் பார்த்ததும் முதல் நாள் தான் பெரிசாய் ஏதோ தப்புப் பண்ணி இருக்கவேண்டும் என்ற உணர்வில், நிற்கமுடியாமல் சுவரில் சாய்ந்துகொண்டான்.

# 10

இன்னும் அரை மணியோ, ஒரு மணியோ அப்புறம் அந்த ராமபத்ரன் வந்துத் தொலைத்துவிடுவார்.

டாக்டர் ராமபத்ரன், கங்காவின் மாமா.

குள்ளமாய், அழித்தால் சாதாரண சைசில் நாலு ஆட்கள் பண்ணக்கூடிய பருமனாய், குச்சி குச்சியாய் நிற்கும் சம்மர்க்ராப்பும், வெங்கலத் தொண்டையுமாய் வந்துவிடுவார்.



அது என்ன குரல் அந்த மனுஷனுக்கு?

கண்டாமணியைத் தட்டிவிட்ட மாதிரி டணடணவென்று உரக்க எட்டு ஊருக்குக் கேட்கிற தினுசில் அத்தனை பலக்க அந்த மனுஷனால் எப்படிப் பேச முடிகிறது!

அந்த சரீரத்துக்குள் அப்படியொரு சாரீரமா?

மதுராந்தகத்துக்குப் பக்கத்தில் ப்ராக்டீஸ் பண்ணும் ராமபத்ரனுக்கு செமை வருமானம்.

ஒரு ஊசிக்கு ஒரு ரூபாய். மூன்று வேளை மருந்து, பிளஸ் ஆலோசனைக்கு மூன்று ரூபாய் மட்டுமே சார்ஜ் பண்ணியும் மனுஷனுக்குக் கழுத்துவரை பணம். ஸ்ரீதேவி கூரையில் ஓட்டை போட்டுக்கூடக் கொட்டவில்லை, கூரையையே பிய்த்துவிட்டுத்தான் கொட்டுகிறாள்.

தடபுடலான ப்ராக்டீஸுடன் வட்டாரத்துக்கே பெரிய மனுஷராய்த் தன் மாமா திகழ்வதில் கங்காவுக்கு ஏக பெருமை.

உலகத்திலேயே சிறந்த டாக்டர் தன் மாமாதான் என்ற பீத்தல் அவள் பேச்சில் அவ்வப்போது தப்பாமல் எட்டிப் பார்க்கும்.

தலைவலி, ஜுரம் என்று அவளுக்கெதிரில் யாரும் முக்கக் கூடாது, முனகக் கூடாது, அவ்வளவுதான். ஆரம்பித்துவிடுவாள்.

''என்ன மருந்து சாப்பிடறேள்? கண்டதைக் குடிச்சு உடம்பைக் கெடுத்துக்காதீங்கோ... இந்தக் காலத்து டாக்டர்களுக்கெல்லாம் என்ன தெரியறது? தும்மல்னு போனாக்கூட ஒண்ணரை முழ நீளத்துக்கு எழுதிக்கொடுத்து டெஸ்ட் எடுக்கச் சொல்லி நூத்துக் கணக்கிலே பணத்தைப் பழுக்க வைக்கறா... தண்டம்... தண்டம்... எங்க மாமா டாக்டர் ராமபத்ரனைப் பத்தி நீங்க கேள்விப் பட்டிருக்கலாமே... வைத்தியம் பார்க்கறதிலே புலி. ஒரு மிக்சர் கொடுப்பார் பாருங்கோ... இரண்டே வேளைலே வியாதி ஜுயோஜுயோனு ஓடிடும். நீங்க வேணா ஒரு நடை அவரைப் பாத்திட்டு வாங்களேன். அப்புறம் நீங்களே சொல்லுவேள்...''

எங்கே? கல்கத்தாவிலிருந்து மதுராந்தகத்துக்கா?

கேட்டுக்கொண்டு ஒரு பக்கமாய் அமர்ந்திருக்கும் த்யாகுவுக்குச் சிரிப்பு தொண்டையில் குதிக்கும். கஷ்டப்பட்டு அடக்கிக்கொள்வான்.

ராமபத்ரன் கொஞ்சம் விஷயஞானம், ஏராளமாய்க் கைராசி, அதிர்ஷ்டம் இவற்றின் கலவை என்பது த்யாகுவின் அபிப்ராயம்.

இவர் பேஷண்டுகளைப் பரிசோதிப்பதும், அவர்களுடன் பேசுவதும் ரொம்பவும் ஒரு சுவாரஸ்யமான சமாசாரம்.

காலை எட்டு மணி அளவில் டிஸ்பென்ஸரிக்குள் நுழையும்போதே குழுமியிருக்கும் நோயாளிகளிடம் ஊர் வம்புகளை விசாரித்துக்கொண்டு வருவார்.

ஒரே சமயத்தில் இரண்டு பேஷண்டுகளை, பக்கத்திற்கு ஒருவராக உட்கார வைத்துக்கொண்டு பரிசோதிப்பதில் மன்னன்.

''என்ன ராமசாமி, நிலத்தை விக்கப் போறேன்னு சொன்னியே, நல்ல விலைக்குத் தகஞ்சிதா?'' என்று கேட்ட வண்ணம் ஒருவன் மார்பில் ஸ்டெத் வைப்பார். அவன் சொன்ன பதிலைக் கேட்டுகொண்டவராய் அவனைத் திருப்பி முதுகைக் காட்டிக்கொண்டு உட்காரச் சொல்லிவிட்டு இந்தப் பக்க நபரிடம் திரும்புவார்:

''என்ன அய்யாக்கண்ணு, பொண்ணை மாப்பிள்ளை வீட்டுலே கொண்டு விட்டயா, இல்லையா?''

''எங்க டாக்டர்? இரண்டு சவரன்லே டாலர் போட்டு அனுப்பினா அனுப்பு, இல்லாட்டி அந்தப் பேச்சே வேணாங்கறாங்க. அறுப்பு ஆனப்புறம்தான் பார்க்கோணம்.'' - அய்யாக்கண்ணு பதில் சொல்லும் நாழிகையில் அவன் மார்பில் ஸ்டெத் வைத்துப் பார்ப்பார்.

இதுகூடப் பரவாயில்லையே! ஒரோர் சமயம் அவர் அஷ்டாவதானி மாதிரி நாலு பேஷண்டுகளைத் தாக்குப் பிடிப்பது தான் படு ஜோர்.

ஒருவனுடைய வாயில் தெர்மாமீட்டர் வைப்பார். இரண்டு பக்கமும் இரண்டு ஆசாமிகளுக்கு ஸ்டெத் வைப்பார். இடையில் ஒரு அழும் குழந்தைக்கு டெட்டனஸ் ஊசி போடுவார்.

மூட் இருந்தால் சிரிக்கச்சிரிக்கப் பேசுவது ராமத்ரனுக்குக் கைவந்த கலை.

''நாலு நாளா வவுத்துப் போக்கா இருக்குதுங்க... தண்ணி குடிச்சாக்கூட வவுத்துலே தங்கமாட்டேங்குது... வெலவெலனு வருது'' என்று சொல்லிக்கொண்டு வந்த பெண்ணுக்கு அடுத்த



நோயாளியாக ஒரு சமயம் வந்த இன்னொரு பெண் ''நாலு நாளா வெளிக்கே போகலிங்க... பசி இல்லே... வவுறு உப்புசமா இருக்குது'' என்றவுடன் ஸ்டெத்தை மேஜைமேல் போட்டு விட்டு ஹோஹோஹோ என்று ராமபத்ரன் சிரிக்க ஆரம்பித்துவிட்டார்.

'எய்தர் திஸ் ஆர் தட்' என்று சொல்லி நிறுத்தாமல் சிரித்தவர், அருகில் இருந்த த்யாகுவிடம் - தீபாவளிக்கென மாமனார் வீட்டில் சீராட வந்து கீழே விழுந்து காயம் பட்டுக் கொண்ட கண்ணனுக்கு மருந்து போட அழைத்து வந்திருந்தவனிடம், ''இப்ப ரெண்டு பேரும் தங்க தங்க சீட்டை எடுத்துண்டு கம்பௌண்டர்கிட்ட போனா, அவன் ஏதோ கவனத்துலே மருந்தை மாத்திக் கொடுத்துட்டா என்ன ஆகும்னு நினைக்கறேன், மாப்பிள்ளே?'' என்று கூறினவர் உட்பக்கம் திரும்பி 'மருந்தைப் பாத்துக் குடுங்கடா' என்று குரல் கொடுத்தபின் மீண்டும் சிரிக்கத் துவங்கிவிட்டார்.

இவருக்குத் திடும்மென்று கோபமும் நிறைய வரும்.

''குழந்தைக்கு உடம்பு நல்லா இல்லிங்க... இளப்பா இருக்குது... போன ட்ரிப் அந்த நீலக் கொளா மாத்திரை கொடுக்காதீங்களே, அத்தயே கொடுங்க, சரியாப்பூடும்'' என்னும் தகப்பனிடம், ''நீயே டாக்டராயிட்டே - அப்புறம் நானெதுக்கு?'' என்று முறைப்பார்.

எட்டு வயசுப் பெண்ணுக்கு வலிப்பு என்று வந்து நின்ற தாயிடம் ''பேர் என்ன'' என்பார்.

''அச்சிறுபாக்கங்க...''

''ஊர் பேரச் சொல்லாதே, ஆளு பேரைச் சொல்லு...''

பெண்மணி உடம்பை அஷ்ட கோணலாக்குவாள் - நெளிவாள் - வெட்கப்படுவாள். அப்பறம் ''பெருமாளுங்க...'' என்பாள்.

''பொம்பளை பேரா பெருமாளு?''

''இல்லிங்க, இவ அப்பா பேருங்க...''

மேற்கொண்டு இந்தப் பெண்மணியுடன் பேச ராமபத்ரனுக்குப் பொறுமை இருக்காது. 'டே - யாருடா அங்க. இந்த முண்டத்தை வந்து இழுத்திட்டுப் போ'' - என்று கத்துவார்.

இந்த ராமபத்ரனா இப்போது வரப் போகிறார்? அதுவும் என்னைப் பார்க்கவா?

மணி ஆகஆக த்யாகுவுக்கு இருப்புக்கொள்ளவில்லை.

கழுகுப் பார்வை பார்த்துக்கொண்டு இந்தண்டை, அந்தண்டை நகராமல் எதிரில் உட்கார்ந்திருக்கும் கங்காவிடமிருந்து எப்படியாவது தப்பி க்ளப்புக்குப் போய் ஜில்லென்று ஒரு பியர் சாப்பிட்டால், ஆ...! தட் வில் பி வொண்டர்ஃபுல்.

ஞாயிற்றுக்கிழமையை இப்படி யாராவது வீணடிப்பார்களா?

அரவிந்தன் பதினோரு மணிக்குப் போன் பண்ணி விட்டான்.

''என்ன த்யாகு - க்ளப்தானே? நீ வந்து பிக் அப் பண்ணிக்கறியா, இல்ல, நா வரட்டுமா?''

வழக்கமாய் சனி, ஞாயிற்றில் த்யாகு ஜிம்கானாவுக்குப் போய்விடுவான். பல்லைக் கூச வைக்கும் குளிர்ந்த பியரில் ஆரம்பமாவது பல சமயங்கள் மாலையில் விஸ்கிக்கு மாறி பின்னிரவுவரை நீண்டிருக்கிறது.

மனைவிகளின் எரித்துவிடும் பார்வைகள் இல்லாமல், 'சாப்பிட வாங்கோ'' என்ற தொணதொணப்பு இல்லாமல் அது ஒரு அலாதி உலகம் - அலாதி நிம்மதி.

இரண்டு ஞாயிறுகளாய் த்யாவுக்கு இந்த சுகம் கிடைக்க வில்லை. அப்பாவின் சாவு, தொடர்ந்து காரியங்களைக் கவனிக்க ஊருக்குப் பயணம் என்ற சமாசாரங்களோடு சேஷன், கங்கா இவன்மேல் அசாத்திய கோபத்தோடு வளைய வந்ததும் ஒரு முக்கியமான காரணம்.

அப்பாவுக்குக் கொள்ளி போட முடியாத அளவுக்குக் குடித்ததும் அல்லாமல், தன் குடிப்பழக்கத்தை அத்தனை பேருக்கும் நன்றாய் டாம்டாம் அடித்துவிட்டோம் என்ற குற்றஉணர்வு எழுந்த பிறகு சேஷனும், கங்காவும், சித்தியும் தலைக்குத் தலை வாயில் வந்தபடி ஏசியதை எல்லாம் மௌனமாகக் குனிந்த தலையுடன் த்யாகு ஏற்றுக் கொண்டான்.

அடேயப்பா! அன்றைக்குத்தான் கங்கா என்னமாய்க் குதித்தாள், கத்தினாள், ஆர்ப்பரித்தாள்?

அப்பாவும், சித்தியும் துணைக்கு நிற்கும் தைரியமா?

மாமனார் பிணம் கிடக்கையில் புருஷனால் நாலு பேர்களிடம் பட்ட அவமானமா?



இனி இந்தக் கையாலாகாத புருஷனுடன் வாழ்ந்து என்ன பிரயோஜனம் என்ற விரக்தியா?

''நேத்திக்கு அத்தனை ரஸாபாசமா பேசிட்டு இன்றைக்குச்சாது மாதிரி உக்காந்துண்டு இருக்கறதைப் பாருங்கோப்பா...'' என்றாள்.

''இனிமே என்னால தாங்க முடியாதுப்பா... இந்த துப்புக் கெட்ட மனுஷனோட வாழ என்னால முடியாதுப்பா... இப்பவே உங்களோட என்னைக் கூட்டிண்டு போயிடுங்கோ...'' என்றாள்.

''இந்த மாதிரி ஆம்படையானோட வாழறதுக்குப் பதிலா ஒரு மொழம் கயத்துலே தொங்கிடலாம்ப்பா...'' என்றாள்.

பத்து வருஷங்களாய் த்யாகுவிடம் உணர்ந்துவிட்ட ஒவ்வொரு குற்றத்தையும் சொல்லிச்சொல்லிக் கத்தினாள். தலையில் அடித்துக்கொண்டாள். மூக்கைச் சிந்தினாள். தரையில் படுத்து அரற்றினாள்.

மூலையாய்க் கிடந்த நாற்காலியில் உட்கார்ந்திருந்த த்யாகு எதற்கும் தலையைக்கூடத் தூக்கவில்லை.

முடிவில், உடனடியாய் ஊருக்குப் போய்க் காரியங்களைக் கவனிப்பது என்றும், அதற்குப் பிறகு நல்ல டாக்டர் ஒருவரிடம் அழைத்துப் போய் வைத்தியம் பார்க்கவேண்டும் என்றும் அவர்கள் தீர்மானித்தபோதுதான், அவன் பார்வையை லேசாய் நிமிர்த்தினான்.

டாக்டரா? வைத்தியா?

ஓ! ஹெல் -

''என்ன அப்படிப் பாக்கறேள்? இந்தக் காலத்துலே இதுக்கெல்லாம் வைத்தியம் பண்றாளு எங்களுக்குத் தெரியாதுனு நினைச்கட்டேளா?...ம்? ராமபத்ர மாமாகிட்ட ஆதியோடந்தமா அத்தனையும் சொன்னாக்கதான் எனக்கு நிம்மதி. அவர்கிட்ட உங்களை என்னிக்கோ ஒப்படைச்சிருக்கணும்... நா தான் புத்தி கெட்டுப் போயிட்டேன்.''

ராமபத்ரனா?

கடவுளே! வாட் டஸ் ஹி நோ அபௌட் ஆல்கஹாலிக்ஸ்?

நோ... அவர் வேண்டாம்...

''இங்கேயே...'' தயக்கத்துடன் தொடங்கினவனை கங்கா மடக்கினாள் :

''ஏன் நம்ம குடும்பத்து மானம் சந்தி சிரிச்சது போறாதுங்கற எண்ணமா? அன்னிய டாக்டர் ஒருத்தர்கிட்ட போய் வெக்கங்கெட்டு இந்தப் பேச்செல்லாம் பேசினாத்தான் உங்களுக்குத் திருப்தியா? ஐயோ... ஐயோ...! நா என்னடிம்மா பண்ணுவேன்...!''

த்யாகு அடங்கிப்போனான்.

அப்புறம் 'ம்' என்று சொல்லக்கூட அவன் வாயைத் திறக்கவில்லை.

அவனைக் கேட்காமலேயே ஏற்பாடுகள் நடந்தன.

ஊருக்குப் போனார்கள். ஆறு நாட்கள் அங்கு தங்கிக் காரியங்களைக் கவனித்தார்கள். திரும்பி வந்தார்கள்.

ஊரில் இருந்த நாட்களில் அம்மா, வகளைப் பற்றி நினைப்பதிலும், ஹெட்மாஸ்டரிடம் பேசுவதிலும் கூடுமான வரையில் மனசை ஈடுபடுத்த முயன்றான். முடியாத சமயங்களில் ஆத்மா வீட்டுக்கு ராத்திரி ஓடி வெறியுடன் ஓரிரு பெக் குடித்து. அந்த வாசனை வெளியில் தெரியாமல் மறைப்பதற்குத் திண்டாடினான்.

நல்லவேளையாக சென்னையில் இந்த அவஸ்தை இல்லை.

மாடி பாத்ரூம் வாட்டர் டாங்கின்மீது இத்தனை அமர்க்களத்துக்குப் பிறகும் கங்காவுக்குச் சந்தேகம் பிறக்காமல் இருந்தது த்யாகுவின் நல்ல நேரம்தான். பெரிசாய்க் கொண்டு வந்தால் மாட்டிக்கொள்வோம் என்று சின்னச்சின்ன புட்டிகளில் வாசனையைக் குறைக்க கோலாவுடனோ, ஆரஞ்சு க்ரஷுடனோ கலந்து மறைத்து எடுத்து வந்து க்ளாஸெட் டாங்கில் வைத்து, யாருக்கும் சந்தேகம் எழாதபடி குடித்தான். இது போதாது என்று ஆனால் மருந்து வாங்கவேண்டும் என்று சொல்லி வெளியில் போய் நண்பன் வீட்டில் ஒரு பெக் அடித்து விட்டு வந்தான்.

ஜி.எம்மிடம் அவசரமாய் ஆபீஸ் பற்றிப் பேசவேண்டும். அரை மணியில் வந்து விடுகிறேன் என்று சொல்லி க்ளப்புக்கு ஓட்டமாய் ஓடி இரண்டு க்ளாஸ் அருந்திவிட்டு வந்தான்.

அவசரம்அவசரமாக வீட்டுக்குத் திரும்பவேண்டிய நிர்ப்பந்தமும், நிறைய பயமும் இருந்ததால் அதிகமாகக் குடிக்கப் பறக்கும் மனசைக் கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்டான்.



அன்று காலை அதிசயமாய் கங்கா அவனிடம் வந்து நின்றாள்.

''நாளேலேர்ந்து நீங்க ஆபீஸுக்குப் போகப் போறதா அப்பாகிட்ட சொன்னேன். அதுக்கு முன்னால டாக்டரைப் பார்த்துடலாம்னு. அவர் அபிப்பிராயப்படறார். அதனால ராமபத்ர மாமாவைக் கூட்டிண்டு தானே அந்த மணிவாக்கிலே வரேன்னார்... இப்பவே சொல்லிட்டேன். எங்கயும் போகாதீங்கோ, ஆமா...''

பத்து மணி வரை சாதாரணமாக இருந்த த்யாகுவுக்கு அரவிந்தன் போன் பண்ணிய பிறகு லேசாகப் படபடப்பு உண்டாயிற்று. அதைச் சமாளிக்க ஒளித்து வைத்திருக்கும் ட்ரிங்கை எடுத்து ஒரு க்ளாஸ் போலக் குடித்தவன், இரண்டு வாயாக மதியச் சாப்பாட்டைச் சாப்பிட்டுவிட்டு மாடிக்குப் போய்ப் படுத்து ஒரு தூக்கம் போட்டான்.

நாலு மணிக்கு எழுந்தவனின் உடம்பும் மனசுமத் காபி வேண்டாம். ஜில்லென்று பியர் கொடு என்று அடம் பண்ண, அதைத் தாக்குப் பிடிக்கும் திறனில் ஹாலுக்கு வந்து உட்கார்ந்து கொண்டான்.

ஐந்தே காலுக்கு சேஷன் ராமபத்ரனோடு வந்து விட்டார். இந்த குண்டன் இப்போது என்னை டிஸெக்ட் பண்ணப்போகிறாரா?

என் பலவீனத்தை நாலு பேர் நடுவில் விமரிசித்து ஏகமாய்ப் புத்தி சொல்லப் போகிறாரா?

டிஸெக்ஷன் பலகைமேல் விரித்து கை கால்களில் ஆணி அடிக்கப்பட்ட தவளையின் நிலைமையில் இப்போது தான் இருப்பதை உணர்ந்தவண்ணம் எழுந்து நின்ற த்யாகுவுக்கு நெற்றிப்பொட்டில் விண்ணென்று வலிக்கத் தொடங்கியது.

## 11

''வாங்கோ மாமா...!''

வாசலுக்கு வேகமாய் வந்து வரவேற்ற கங்காவுக்கு மேலே பேசமுடியாத திணறலில் உதடு கோணிக்கொண்டது. குரல் கரகரத்தது. கண்களில் ஜலஜலவென்று நீர் இறங்கியது.

''என்னதிது அசடாட்டம்...?''

கிட்ட நெருங்கி அவன் தோளில் தட்டினார் ராமபத்ரன்:

''நாங்கள்ளாம் எதுக்கு இருக்கோம் கங்கா? உன் கண்ல ஜலம் வர்றதைப் பார்த்துண்டு கம்மா இருப்போம்னு நினைச்சியா? அசடு...! கண்ணைத் தொடச்சிக்கோ, அதான் நா வந்தாச்சே... அப்புறம் உனக்கு எதுக்குக் கவலை?''

கங்கா விசும்புவதையும், வாசு வராந்தாவிலேயே ராமபத்ரன் அவளைத் தேற்றுவதையும், ஹாலில் நின்றபடி கவனித்த த்யாகுவுக்கு சீ என்று ஆனது.

ட்ரைவர் நிற்கிறான். அதுகூடக் கவனமில்லாமல் இப்படித் தொண்டை கிழியக் கத்தவேண்டுமா? இத்தனை கரிசனம் காட்டுகிறவருக்கு நாளைக்கு இவன் மூலம் கிராமம் பூராவும் விஷயம் தெரிந்துவிடுமே என்ற பயம் இல்லையே!

கங்காவின் கையைப் பற்றின வண்ணம் ராமபத்ரன் உள்ளே வர, சேஷன் அவர்களைத் தொடர்ந்தார்.

''உட்காருங்கோ மாமா... என்ன சாப்பிடறேள்? காபி சாப்பிடறேளா, இல்லை டிபன் சாப்பிட்டுட்டு காபியா?''

''இருக்கட்டும்மா... அதுக்கு இப்ப என்ன அவசரம்...? முதல்ல வேலை... அங்க நூறு பேர் காத்திண்டு இருக்கா... 'நா மெட்ராஸுக்கு ஒரு நடை போயிட்டு வந்திடறேன். எங்க மாப்பிள்ளைக்கு உடம்பு சரியில்லை... காத்திண்டு இருக்க முடிஞ்சவா இருங்கோ, முடியாதவா போயிடுங்கோ'னு சொல்லிட்டு வந்திருக்கேன். அரை மணிலே வந்த காரியத்தை முடிச்சுண்டு உடனே ஓடினா ஏழு மணிக்குள்ள அங்க இருக்க முடியும்....''

சோபாவில் வசதியாய் உட்கார்ந்த ராமபத்ரன் அப்போதுதான் அருகில் நிற்கும் த்யாகுவைக் கவனிக்கிற மாதிரி அவன் பக்கம் திரும்பினார்.

''இங்கதான் இருக்கேளா! என்ன எல்லாரையும் இப்படி அழ அடிக்கறேள்? நல்லவர், நல்ல குணம், நல்ல குடும்பம்னு நினைச்சுண்டு இருக்கறதை எல்லாம் பொய்க்கிற மாதிரி என்ன காரியம் இதெல்லாம்? கொஞ்சம்கூட நன்னா இல்லையே!''

மனுஷன் முதலில் சகஜமாய்ப் பேசுவார். ஆயிரம் இருந்தாலும் மாப்பிள்ளை ஆயிற்றே என்ற தயக்கத்துடன் சுற்றிவளைத்துக்



கொண்டு மெள்ளமெள்ள டாபிக்கை எடுப்பார். எதையாவது சொல்லி சாமர்த்தியமாய்ச் சமாளித்து விடவேண்டும் என்று எண்ணிக்கொண்டிருந்த த்யாகுவுக்கு ராமபத்ரனின் கண் உருட்டலும், கோபப்பேச்சும் சங்கடத்தை எழுப்பின.

த்வாரபாலகர்கள் மாதிரி ராமபத்ரனின் பக்கத்துக்கு ஒருவராய் சேஷனும், கங்காவும் நின்று 'நீயும் ஒரு மனுஷனாடா, ஆம்பிளையாடா' என்று உதாசீனப்பார்வையாகப் பார்ப்பது விவரிக்கத் தெரியாத வெட்கத்தை உண்டாக்க கால்மாற்றிக் கால் வைத்து அவஸ்தைப்பட்டான்.

''இப்படியே நின்னுண்டு இருந்தா எப்படி? உட்காருங்கோ, உங்காத்திலே நா சொல்லித்தான் நீங்க உட்காரணுமா?''

இத்தனை வருஷங்களில் ராமபத்ரன் இப்படி அதட்டலாய் த்யாகுவிடம் பேசினதில்லை.

மாப்பிள்ளை என்று பார்க்கவேண்டாம், கறாராகவே இருங்கள் என்று சேஷன் சொல்லி இருப்பாரோ?

குடிகாரத் தடியனுக்கு மரியாதை என்ன வேண்டிக் கெடக்கிறது என்று நினைத்திருப்பாரோ?

த்யாகு மெள்ள ஒற்றை சோபாவில் அமர்ந்தான்.

''எப்ப பிடிச்சு இந்தப் பழக்கம் ஆரம்பிச்சது உங்களுக்கு? இதெல்லாம் நம்பளைப் போன்றவாளுக்கு சரிப்படாதுன்னு உங்களுக்குத் தெரியவேண்டாமோ? நெருப்பு சுடும்னு சின்ன கொழந்தைக்குக்கூடத் தெரியுமே? அப்புறம் உங்களுக்கு எப்படி விளங்காமப்போச்சு? பெத்தவருக்குக் கொள்ளி போட முடியாத அளவுக்கு அன்னிக்குக் குடிச்சிட்டேளாமே! என்ன அக்ரமம் இது! பந்தபாசம் இல்லாம போயிட்டாலும், ஐயா, கடமை உணர்ச்சி கூடவா இல்லாம போயிடுத்து? எங்க ஊர்ல மடாக் குடியன்கள் நிறையப் பேர் இருக்கா. ஏகமா குடிச்சிட்டு அடிச்சிப்பா, குத்திப்பா, கண்டபடி பேசுவா. அவா மாதிரிதானா நீங்களும்? படிச்ச படிப்பு, வளர்ந்த குடும்பம் இதுக்கெல்லாம் ஒரு அர்த்தம் இல்லாம நீங்க செய்ற காரியத்துக்கும் அந்த முட்டாப்பசங்க காரியத்துக்கும் வித்தியாசம் அதிகம் இருக்கறதா எனக்குத் தெரியலையே! சரி விடுங்கோ... ஏதோ போறாத காலம்னு நினைச்சுண்டு போனதை விட்டொழிச்சிட்டு இனிமேலாவது புது த்யாகுவா இருக்கறேன்னு

சபதம் எடுத்துக்கோங்கோ... செத்துப்போன அப்பாவை நினைச்சுண்டு சத்தியம் பண்ணுங்கோ.... ஸ்வாமி அலமாரி முன்னாடி நின்னுண்டு இனிமே குடிக்க மாட்டேன்னு சங்கல்பம் பண்ணிக்கோங்கோ... என்ன, நா சொல்றதை மூளைலே வாங்கிண்டேளா?''

குனிந்த தலையை நிமிர்த்தாமல் த்யாகு அமர்ந்திருக்க கங்கா பேசினாள்:

''அவரைப் பத்தி உங்களுக்குத் தெரியாது மாமா... மூளைலேயும் வாங்க மாட்டார். மூக்குலேயும் வாங்க மாட்டார். சத்தியம் பண்றதுக்கென்ன? ஆறா - ரூபாய்க்குப் பத்து கூட பண்ணித் தருவார். ஆனா அதைக் காப்பாத்துவாரானு முதல்லே கேளுங்கோ. என்னண்ட இவர் பண்ணாத சத்தியமா மாமா? கார்த்தால தூங்கி எழுந்து 'ரொம்ப ஸாரி, இனிமே குடியைத் தொடவே மாட்டேன்'னு தலைல அடிக்க சத்தியம் செய்யறதுக்குப் பஞ்சமே இல்லே... ஆனா அதுக்கு ஆயுசு அன்னி சாயங்காலம் வரைதான். அப்றம் அத்தனையும் காத்தோட பறக்க விட்டுட்டு க்ளப்பைப் பார்க்க ஓடிடுவார்.... சத்தியமாம், சங்கல்பமாம்... தூ... இவர்கூட நா படறபாட்டை வெளிலே சொன்னா வெட்கக்கேடு... என்னமோ என் தலையெழுத்து படறேன்...''

இதற்கெல்லாம் உன் பதில் என்ன என்பது போல ராமபத்ரன் பார்க்கவும் த்யாகு எச்சிலை விழுங்கிக்கொண்டு மெல்லப் பேசினான்:

''என்ன பேசணும்னாலும் மாடிக்குப் போய்ப் பேசலாமே... இங்க... நடு ஹால்லே... ஸர்வெண்ட்ஸ் வில் ஹியர் அஸ்...''

கண்ணீரைத் துடைக்காமல் கங்கா கத்தினாள்:

''ஸர்வெண்ட்ஸ் பயமா? அது என்ன புதுசா இருக்கு? குடிச்சிட்டு வந்து வார்த்தைக்கு வார்த்தை டீ போட்டு அனாசாரமா பேசறப்போ இந்த 'ஸர்வெண்ட்ஸ் இருக்கா' எங்க போயிடறதாம்? அப்ப மட்டும் சமையக்கார மாமியும், மத்தவாளும் ஓடி ஒளிஞ்சுண்டுடறாளா, இல்லே காதுல பஞ்சை வைச்சு அடைச்சுக்கறாளா?''

குரலை எழுப்பிக் கத்தியவளை சேஷன் நல்ல வார்த்தைகள் சொல்லி அடக்கப் பார்த்தார்.

''ஷ்...ஷ் கங்கா, இப்ப எதுக்காகம்மா நீ அலட்டிக்கறே? இந்த மனுஷனோட குணம்தான் எங்களுக்கு நன்னா தெரிஞ்சுபோச்சே!



ஆகற விஷயத்தைப் பத்திப் பேசலாம்னுதானே மாமாவைக் கூட்டிண்டு வந்திருக்கோம்? செத்த சும்மா இரும்மா... மாமா த்யாகுவோட பேசட்டும்....''

''பேசறத்துக்கு என்னப்பா இருக்கு? இவர் அடிச்ச கூத்துக்களை வேணா நா கதையா சொல்லலாம். அவ்வளவுதானே? முதல்லே உடனடியா ஏதாவது மருந்து கொடுத்து இந்தப் பழக்கத்தை ஒழிக்கணும்.... எனக்கு அதான் வேணும்...''

''ஒழிச்சுடலாம் கங்கா கவலைப்படாதே. ஆமா, நா கேட்ட கேள்விக்குப் பதிலே சொல்லலையே! என்ன த்யாகு, எத்தனை வருஷமா இந்தப் பழக்கம்?''

என்னவென்று த்யாகு பதில் சொல்லுவான்? ஒரு வரியில் கேட்கும் கேள்வியா இது? இல்லை, ஒரு வரியில் சொல்லும் பதிலா இது?

''குடிக்காத சமயத்துலே இவர் கிட்டேயிருந்து ரெண்டு வார்த்தை சேர்த்தாப்ல வாங்கிட முடியாது மாமா... ஆனா அதுக்கு சேர்த்து வைச்சு ராத்திரி கொட்டிடுவார்... நா சொல்றேன்... கல்யாணமாகி மூணு நாலு வருஷம் வரை இந்தப் பழக்கம் இவருக்கு இருந்ததா எனக்குத் தெரியலை... அப்புறம்தான் வந்திருக்கணும்... அதுவும் போன ரெண்டு வருஷமா ரொம்ப ஜாஸ்தி. பயந்துபோயி ஊருக்கு வந்தப்ப உங்ககிட்ட கூட சொன்னேனே, ஞாபகம் இருக்காப்பா? அதுக்கப்புறம் நாளுக்குநாள் கூடிண்டு போச்சே ஒழிய குறையக் காணோம். நாலும் உறவு மனுஷா நடுவுலே தாலி கட்டின வரை விட்டு கொடுக்கக் கூடாதுனு பல்லைக் கடிச்சிண்டுதான் இருந்தேன். இப்ப ஒரு வருஷமா என்னால தாக்குப் பிடிக்க முடியலை... அட்டஹாசம்னா அப்படியொரு அட்டஹாசம்... போன ஆறாம் மாசம் காசி, கயாக்கெல்லாம் போகணும்னு அத்திம்பேரோட அப்பா, அம்மா கல்கத்தாவுக்கு வந்தப்போ, இவர் ஒரு நாள் எப்படி கெக்கேபிக்கேனு நடந்துண்டார் தெரியுமா? வராதவா வந்திருக்காளேனு வடை தட்டி, பாயஸம் பண்ணி இருக்கேன் மாமா... இவர் நன்னா குடிச்சுட்டு வந்து வடையை எடுத்துச் சட்டை பாக்கெட்லேயும் பாண்ட் பாக்கெட்லேயும் போட்டுண்டு, வந்திருக்கற விருந்தாளிய மதிக்காம தான்பாட்டுக்கு ரூமுக்குப் போய் பாட ஆரம்பிச்சுட்டார்... எனக்கு மானம் போயிடுத்து... என் சாண் உடம்பும் கூனிப் போயிடுத்து மாமா...''

அடங்கியிருந்த கண்ணீர் திரும்பப் ப்ரவாகமெடுக்க கங்கா தலைப்பால் வாயைப் பொத்திக்கொண்டாள்.

த்யாகு கண்களை மூடிக்கொண்டான்.

எத்தனை தடவை?

பத்து, இருபது, இல்லை நூறு?

இந்த ஆறு மாசத்தில் - இந்தச் சம்பவம் நடந்து ஆறு மாசத்தில் திரும்பத்திரும்ப இதை இவள் எத்தனையோ முறைகள் சொல்லிக் காட்டியும் எனக்கு அது ஏன் நினைப்புக்கு வரமாட்டேன் என்கிறது?

ப்ளாக் அவுட்டின் ஆரம்ப நிகழ்ச்சியா?

அரை கணம் போல ஆடாமல் அசையாமல் அமர்ந்திருந்தவனுக்குக் கைகள் மெதுவாய் நடுங்குவது புரிந்தது.

பொட்டில் உண்டான வலி பின்மண்டைக்குத் தாவ, மரங்கொத்தியின் கொத்தல் எந்த நிமிஷமும் ஆரம்பித்து விடலாம் என்பதை உணர முடிந்தது.

இவர்கள் இன்னும் எத்தனை நாழிகைக்கு இப்படி உட்கார்ந்து என்னைக் கூறுபோடப் போகிறார்கள்?

ஓட்டமாய் மாடிக்கு ஓடி ஒருவாய் குடித்துவிட்டு வந்தால் என்ன?

பாத்ரூம் போகவேண்டும், அவசரமாய் வருகிறது என்று சொல்லி எழுந்து போனால் என்ன?

ஒரே ஒரு வாய்...

சின்னதாய்...

கொஞ்சம் குடித்தாலும் போதும், அப்புறம் இந்த ஏசல்களை, புகார்களை சுலபமாய் ஏற்றுக்கொள்ள முடியும்...

கை நடுக்கம் இல்லாமல், பின்மண்டைக் குடைச்சல் இல்லாமல் என்ன வேணும்னாலும் பேசுங்கள் என்ற அலட்சியத்துடன் இருக்க முடியும்...

''என்ன, தூங்கிட்டேளா, பேசறது காதுல விழலை?''

சட்டென்று த்யாகு கண்களைத் திறந்தான்.

''இப்படிக் கிட்டத்துலே வாங்கோ, லெட் மீ எக்ஸாமின் யூ''.



சிரமத்துடன் உடம்பு நடுக்கத்தை அடக்கிக்கொண்டு ராமபத்ரன் சொன்னபடி த்யாகு செய்தான்.

மார்பு, முதுகில் ஸ்டெத் வைத்தார். எலும்புகளில் டொக்டொக் என்று தட்டிப் பார்த்தார். நாக்கை நீட்டச் சொன்னார். நாபிக்குப் பக்கத்தில் அமுக்கி லிவரைப் பரிசோதித்துப் பார்த்தார். பி.பி. எடுத்தார்.

''பகவான் க்ருபையிலே எல்லாம் நார்மலா இருக்கிற மாதிரிதான் தெரியறது... ட்ரங்கர்டா ஆகாம, அப்பப்ப மட்டும் குடிக்கறதால உடம்பு ரொம்ப அஃபெக்ட் ஆகலைனு நா நினைக்கிறேன். என்ன, ஆம் ஐ கரெக்ட்?''

தினமும் குடிப்பதில்லை என்று இவராக ஒரு முடிவுக்கு வந்தால், அதை நான் ஏன் மாற்றவேண்டும்?

த்யாகு பூம்பூம் மாடு போலத் தலையை ஆட்டினான்.

''ஏதோ அந்த மட்டுக்கும் நீங்க பண்ண புண்ணியம் காப்பாத்தித்து... நா சொல்றதைக் கவனமா கேட்டு ஒழுங்கா ஃபாலோ பண்ணா பதினைஞ்சு நாள்லே, மிஞ்சிப் போனா ஒரு மாசத்துலே நீங்க புது மனுஷனாயிடலாம்... என்ன, கேப்பேளா?''

''அவர்கிட்ட என்ன கேள்வி ராமு... ஆக வேண்டியதைச் சொல்லு.''

''முதல்லே பதினைஞ்சு நாள் ஆபிஸுக்கு லீவு போடட்டும். லார்க் காட்டில்னு ஒரு மாத்திரை எழுதித்தரேன். அதை, கார்த்தாலே ரெண்டு, சாயங்காலம் ரெண்டு சாப்பிடட்டும். கூடவே மல்டி வைட்டமின் மாத்திரையும் தரேன். நன்னா சாப்டுண்டு, நன்னா தூங்கிண்டு இருந்தா போதும், வேற மருந்தே வேண்டாம். மனசுலே வில் பவர்வேணும், என் குடிப்பழக்கத்தை ஒழிக்கணும்னு கங்கணம் கட்டிண்டு, நா சொன்னபடி இருந்தா ஒரே மாசத்துலே எல்லாம் சரியாயிடும்.''

கங்கா கண்களை அகல விரித்தாள்.

''என்ன மாமா இது! இந்த ட்ரீட்மெண்ட் போறுமா?''

''ஏன் போறாம? குடிக்கறவாளுக்கு படபடப்பும் பயமும் இருக்கும். அதை அடக்கக் குடிக்கறா. அந்தப் படபடப்பை மாத்திரை மூலம் குறைச்சுட்டா இந்தப் பழக்கமும் தானா அடங்கிடறது...''

மேற்கொண்டு பதினைந்து நிமிஷங்கள் போல த்யாகுவுக்கு அட்வைஸ் பண்ணின ராமபத்ரன், கங்கா கொடுத்த டிபன் காபியைச் சாப்பிட்டுவிட்டு நாழிகையாகிவிட்டது என்று பறக்க, ''நானும் புறப்படறேன். ஊர்லே தலைக்கு மேலே வேல இருக்கு. இனிமே கவலைப்படாதே கங்கா - எல்லாம் சரியாயிடும்னு மாமா சொல்லிட்டார். நம்மைப் பிடிச்ச சனியன் விட்டுதுனு நிம்மதியா இரு. என்ன?'' என்று சொல்லிவிட்டு சேஷுவும் ராமபத்ரனுடன் புறப்பட்டுப் போனார்.

மாடிக்கு வந்த த்யாகுவுக்கு ரொம்ப ஆயாசமாக இருந்தது.

குடிப்பழக்கம் தப்புதான்.

அதுவும் குடித்துவிட்டுக் குடும்ப கௌரவம் காற்றில் பறக்கிற மாதிரி நடந்துகொள்வது ரொம்ப தப்புதான்?

அதற்காக? அதற்காக?

நாலு பேர் முன்னால அன்றைக்கு ராப் வீட்டில் பலிக்கு நின்ற ஆடு மாதிரி நான் நிற்க வேண்டுமா? இவர்கள் என் மனசைப் புரிந்துகொள்ளாமல் என் வேதனையை உணராமல் கிழிகிழி என்று என்ன கிழித்தாலும் மௌனமாய்த் தாங்கிக்கொள்ளவேண்டுமா?

கண்களில் நீர் ஊறியது. கைகளின் நடுக்கம் அதிகமானது. மார்புக் கூட்டுக்குள் பறவைகளின் படபடா.

அத்தனையும் பல்லைக் கடித்துக்கொண்டு அமுக்கிக் கொள்ள முயற்சித்த நிமிஷத்தில் போன் அடித்தது.

அரவிந்தன்-

மதியம் பூராவும் பியர் குடித்துவிட்டு, இப்போதுதான் விஸ்கி செஷனை ஆரம்பித்திருக்கிறார்களாம்.

''வாய்யா நீ இல்லாம கம்பெனி நல்லா இல்ல...''

விஸ்கியின் மணம் போன் மூலமாகவே நாசியை நிரப்ப, அதற்கு மேல தாக்குப்பிடிக்க முடியாமல் போனவனாய் 'முக்கிய மான க்ளையண்ட் ஊருக்கு வந்திருக்காராம். பார்த்துட்டு வந்துடறேன்' என்று சொல்லி மனைவியை நிமிர்ந்து பார்க்காமல் தயாராகி, காரில் ஏறினான்.

சாயங்காலம் தன் வீட்டில் நடந்த டிஸெக்ஷனை விரிவாக அரவிந்தனிடம் சொல்லி தன் அடிபட்ட மனசைத் தடவிக்கொண்டு



குடித்து, அவனுடைய பரிதாபத்தையும், பச்சாதாபத்தையும் ஏகமாகப் பெற்று, த்யாகு வீட்டுக்கு வந்தபோது இரவு மணி பதினொன்னரை.

உள்ளே நுழைந்தவன் மாடிக்குப் போகாமல் நேரே கங்காவின் அறைக்குள் சென்றான்.

தூங்கிக்கொண்டிருந்தவளை உலுக்கி எழுப்பினான்:

''ஆம்படையாங்கற மரியாத இல்லாம உங்காத்து மனுஷாளைக் கூட்டி வைக்கண்டு, சாயங்காலம் அந்தப் பேச்சு பேசிட்டு, இப்ப தூக்கமாடீ தூங்கறே?... உன்னை நா படுத்திண்டு சொன்னியே... என்னடீ படுத்திணேன்? அடிச்சேனா? உதைச்சேனா? சோறு போடாம வைச்சேனா? என்னடீ படுத்திணேன்? நா ஆம்பிளை; இப்படித்தான் குடிப்பேன், தெரிஞ்சுக்கோ... இன்னொரு தடவை உங்கப்பன் இந்தாத்துலே நுழைஞ்சு பல்லுலே நாக்கு போட்டு மரியாதை இல்லாம பேசட்டும்; அப்புறம் நா என்ன பண்ணுவேன்னு சொல்ல முடியாது... ஆமா... திரும்ப அந்தக் குண்டனோட அவர் இங்க வந்தாக்க ஐ வில் டெபனெட்லி ஆஸ்க் தெம் டு கெட் அவுட்... அண்டர்ஸ்டாண்ட்?....''

சாயங்காலம் ஒரு வார்த்தைகூடப் பேசத் தெரியாமல் தவித்த கையாலாகாதத்தனத்துக்கு ஈடு செய்துவிட்ட திருப்தியில் உரக்கப் பேசின த்யாகு கங்காவின் கோபப் பார்வையைத் துளியும் லட்சியம் செய்யாதவனாய் ஒருவிதத் திருப்தியுடன் அறையை விட்டு வெளியேறினான்.

## 12

ஒரு வாரமா?

எஸ். கிட்டத்தட்ட...

சுத்தமாய் ம் என்று பதில் சொல்வதைக்கூட கங்கா நிறுத்தி ஒரு வாரம் ஆகப்போகிறது.

இது மாதிரி இத்தனை வருஷங்களில் ஒரு தரமும் ஆனதில்லை. பெரிசாய்க் கத்துவான், சண்டை போடுவான், மூஞ்சியைத் தூக்கி வைத்துக்கொள்வான், சாமான்களை விட்டெறிவான், வெடி மாதிரி

வார்த்தைகளை வீசுவாள், அவ்வளவுதான். நாட்கணக்கில் த்யாகுவின் எதிரிலேயே வராமல், ஒரு வார்த்தை பேசாமல் அவள் இருந்ததே இல்லை.

இது என்ன பிடிவாதம்?

போன ஞாயிறு அன்று குடித்துவிட்டு வந்து 'உங்கப்பன் திரும்ப இங்கு வந்தால் கெட் அவுட் என்று சொல்லுவேன்' என்றதற்கா இத்தனை கோபம்?

குடித்துவிட்டுப் பேசுவதை எல்லாம் இவள் ஏன் இவ்வளவு சீரியஸாக எடுத்துக்கொள்கிறாள்?

'குடிச்சப்புறம் உங்க புத்தி மழுங்கிப் போயிடறது, உள்ளுக்குள்ளேந்து ஒரு அசாத்திய முரட்டுத்தனம் வெளியாயிடறது... அப்ப நீங்க சொல்றது எதுக்கும் அர்த்தம் இல்ல... வெறும் உளறல்... பித்துக்குளித்தனமான உளறல்' - என்று ஆரம்பகாலத்தில் எரிச்சலோடு பேசி ஒதுக்குவாளே, அந்த மாதிரி இப்போது ஏன் சொல்வதில்லை?

இது இவருக்கு ஒரு பலவீனம். சரி - ஒழிந்து போகட்டும் என்று நிறைய மனைவிகள் விட்டேத்தியாய் இருக்கிற மாதிரி ஏன் இவளால் இருக்க முடியவில்லை?

நான் குடித்துவிட்டு வரும்போது பதிலுக்குப் பதில் பேசி என்னை மேலும்மேலும் தூண்டிவிடாமல், ஏன் இப்படிப் புத்தி கெட்டு தானும் நிம்மதி இழந்து என்னையும் சித்ரவதை செய்கிறாள்!

குடிக்காத சமயங்களில் இவளை நிமிர்ந்து பார்த்து என்ன என்கிறேனா? இவள் வார்த்தையை என்றாவது மீறி இருக்கிறேனா? இவள் விருப்பப்படி நடப்பதை எப்பவாவது வேண்டாம் என்று தடுத்திருக்கிறேனா!

இவள் சினிமா போவதற்கும், காரணமில்லாமல் பட்டுப் புடவைகள், நகை வாங்கி அணிவதற்கும், வைக்கோல் வண்டிப் பொதிபோலக் கனகாம்பரம் சுமப்பதற்கும், நினைத்து நினைத்துப் பிறந்தகம் போய் மாசக் கணக்கில் தங்குவதற்கும், எல்லார் எதிரிலும் தன் வீட்டுத் தற்பெருமை பேசுவதற்கும், ஒரு வார்த்தை, ஒரே ஒரு வார்த்தை இன்றுவரை சொல்லி இருக்கிறேனா?

இல்லையே?-



இதையெல்லாம் இவள் ஏன் மனசில் நினைத்துப் பார்க்க மாட்டேன் என்கிறாள்?

ஒரு நாளில் முக்கால்வாசிப்போது வாயில்லாப்பூச்சியாக இருப்பவர், ஏதோ ஒரு நப்பாசையில் குடித்துவிட்டு இஷ்டத்துக்கு நடந்துகொள்கிறார் - சரி, போகட்டும் என்றுவிட்டுத் தொலைக்காமல் என்ன இதெல்லாம்?

தன் வீட்டு மனிதர்களிடம் பெரிசாய்ப் புலம்பி, வண்டி புகார் படித்து, அழுது, எல்லாரையும் விட்டு எனக்குப் புத்தி சொல்லச்சொல்லி... சே....! இரண்டாம் பேர் அறியாமல் இவளே சாதிக்கக்கூடிய காரியத்தை எதற்காக இப்படிச் சந்தி சிரிக்கப் பண்ணுகிறாள்?

சந்தி சிரிக்கப் பண்ணுகிறாளா? யார்? கங்காவா?

திடும்மென்று மனச்சாட்சி பதில் கேள்வி கேட்க, பொய்யாக சமாதானம் சொல்லிக்கொள்கிறோமே என்று ஒரு நிமிஷம் த்யாகு கூசிப்போனான்.

அப்பாவின் பிணம் கிடக்கும்போது குடித்துவிட்டு, ஊரட்டி அடித்தது நான்தானே? வீட்டுக்குள் இருக்கும் விஷயம் அம்பலத்துக்கு வர அன்று நான்தானே காரணம்?

அப்புறம் எதற்கு கங்காவைக் குற்றம் சாட்டுகிறேன்? இது தப்பு, ரொம்ப தப்பு. ஒரு ஆண் பிள்ளைக்கு அழகே இல்லை...

ஆண் பிள்ளையா? நானா?

எங்கே? அதுதான் இல்லை என்று ஆகிப்போய்ப் பல வருஷங்கள் ஆகின்றனவே!

குளவி கொட்டுகிற தினுசில் 'நீங்க ஒரு ஆம்பிள்ளையே இல்ல' என்று நாளுக்கு நாப்பது தரம் சொல்லி என்னை ஜடமாக்கி விட்டாளே கங்கா - அப்புறம் ஆம்பிளையாவது, மண்ணாங்கட்டியாவது...

போன வாரம் தான் பேசின பேச்சுக்கள் கங்காவை இத்தனை பாதிக்கும் என்று சத்தியமாய் த்யாகு எண்ணவில்லை.

திங்கள் காலை எழுந்து, பல் விளக்கிக் கீழே வந்து அமர்ந்தவனுக்கு அரை மணியாகியும் காபி வந்து சேரவில்லை.

மெதுவாக எழுந்து உள்ளே போனான்.

கீழ்ப் படுக்கையறையில் கங்கா இல்லை. சமையல் கட்டிலிரும் இல்லை. தோட்டத்து பெஞ்சில் பிள்ளையுடன் அமர்ந்திருந்தாள்.

கிட்டப்போய் நின்றான். 'காபி தரயா கங்கா?' என்றான்.

பதில் இல்லை.

ஒரு நிமிஷம் அப்படியே நின்றுவிட்டு 'உள்ளே போய் மாமி கிட்ட வாங்கிக்கட்டுமா?' என்றதற்கும் பதில் இல்லை.

என்ன விஷயம்? கோபமா?

பள்ளிப்பாடம் படித்துக்கொண்டிருந்த கண்ணனிடம் குனிந்தான்:

''என்னப்பா படிக்கிறே?''

நிமிர்ந்து அப்பாவை ஒரு பார்வை பார்த்தான் கண்ணன். அப்புறம் அம்மாவை நெருங்கி அமர்ந்து கொண்டான்.

''கங்கா!'' என்று திரும்ப இவன் அழைத்தபடி தோளில் வைத்த கையை அவள் தட்டிவிட்டாள்.

''தொட்டுகிட்டுப் பண்ணா எனக்குக் கோபம் வந்துடும். ஆமா...''

கோபம் இனிமேல்தான் வரவேண்டுமா?

''ஐ'ம் ஸாரி கங்கா... நீ இப்படிக் கோவிக்கக்கற அளவுக்கு நா என்ன சொல்லிட்டேன்? ம்?''

''...............''

''ஐ'ம் ரியலி ஸாரி கங்கா... உன்னைப் புண்படுத்தற மாதிரி நா பேசியிருந்தா, என்னை மன்னிச்சிடு, நா எதையும் மீன் பண்ணறதில்லேனு உனக்கே தெரியும்... ப்ளீஸ் கங்கா...!''

''யாருக்கு வேணும் ஸாரியும், பூரியும்? இவருக்குத்தான் ரோஷம், மானம் இல்லைன்னாக்க, நாமும் அத்தனையும் வழிச்சுப் போட்டுட்டோம்னு நினைக்கிறார் போல இருக்குடா, கண்ணா. உனக்கு இன்னும் பத்து நாள்லே எக்ஸாம் வரதேனு பாக்கறேன். இல்லாட்டா இந்த நரகத்தைவிட்டு உன்னையும் அழைச்சுண்டு தாத்தாவாத்துக்கு ஓடி இருப்பேன். இன்னும் இருபது நாள் - பல்லைக்



கடிச்சிண்டு பொறுத்துக்கோடா - அப்புறமும் இங்க இருக்கறத்துக்கு நாம என்ன விவஸ்தை கெட்டவாளா, என்ன?''

ஒன்பது வயசுக் குழந்தையை உட்கார வைத்துக்கொண்டு ஏன் இப்படி எல்லாம் பேசுகிறாள்?

''கங்கா ப்ளீஸ்...! நா சொல்றதைக் கொஞ்சம் கேளேன்...''

''நிறைய கேட்டு அலுத்தாச்சு. புதுசா என்ன இருக்கு கேக்கறதுக்கு? வாடா கண்ணா. இவர் இங்கேயிருந்து நகரலைன்னா நாம எழுந்து உள்ளே போயிடலாம்.''

கண்ணன் தப்பாமல் கங்காவின் பிள்ளைதான்.

எழுந்தான். கம்பளிப்பூச்சியைப் பார்க்கிற பார்வையாய் தியாகுவை ஒரு பார்வை பார்த்தான். அம்மாவின் கையைப் பிடித்துக்கொண்டு உள்ளே போய்விட்டான்.

இப்படி ஆரம்பித்ததுதான்.

இன்னும் கங்காவோ, இல்லை கண்ணனோ இவனை நிமிர்ந்து பார்த்து ஒரு வார்த்தை பேசிவிடவில்லை.

இவர்கள்தான் இப்படி என்றால் இவனிடம் கை நீட்டிச் சம்பளம் வாங்கும் ஆட்கள் இன்னும் மோசம்.

சாப்பிட உட்கார்ந்து பத்து நிமிஷம் போல ஆனபிறகு கடுகடுவென்ற முகத்துடன் சமையல்கார மாமி பரிமாற வந்தாள். அதுவும் ஆறிப்போன சாப்பாட்டை...

'மாடிக்குப் போய் என் கூலிங் க்ளாஸை எடுத்துண்டுவா' என்று வேலைக்காரனை ஏவினால் 'அம்மா கூப்பிடறாங்க, என்னனு பார்த்திட்டு வரேன்'னு அலட்சியமாய்ப் பதில் சொன்னான்.

எல்லாருக்கும் நான் நிஷித்தமாகப் போய்விட்டேனா? நண்டு சிண்டிலிருந்து வேலைக்காரன் வரைக்கும் நான் என்றால் அத்தனை மட்டமா?

முதல் இரண்டு நாட்களுக்கு இந்தப் பாராமுகத்தைத் தாங்க இயலாமல் தியாகு பரிதவித்தான்.

''தெரியாம பேசிட்டேன். கங்கா... ப்ளீஸ் மன்னிச்சுடு...'' என்று மனைவியின் கையைப் பிடித்துக்கொண்டு கெஞ்சினான்.

''மாமா சொன்ன ட்ரீட்மெண்டை ஆரம்பிக்கலாமா? ஆபீஸுக்கு லீவு போட்டுடட்டுமா?'' என்றான்.

''நா உனக்குப் பாடம் சொல்லித் தரட்டுமா கண்ணா? ஸ்கூல்லே கொண்டு விடறப்போ லாலிப்பப் வாங்கித் தரட்டுமா கண்ணா'' என்று வலியப் போய்ப் பிள்ளையிடம் ஈஷிக் கொள்ள முயன்றான்.

ஆபீஸிலிருந்து டாணென்று ஐந்தரைக்கெல்லாம் வீட்டில் ஆஜரானான். க்ளப்புக்கு வரச்சொல்லி போனில் அழைத்த நண்பர்களிடம் கங்கா காது கேட்க 'ஸாரி, என்னாலே வரமுடியாது' என்றான். ரஜினிகாந்த் படத்துக்கு நைட் ஷோவுக்கு புக் பண்ணிவிட்டு வந்து டிக்கெட்டை கங்காவின் முன் நீட்டினான். 'அம்மா - எனக்குக் குடி ஆசை எழாமல் இருக்கப் பண்ணு' என்று சதா மனசுக்குள் முணுமுணுத்தான். எல்லாவற்றுக்கும் பெப்பே காட்டிவிட்டு மாலை ஆனால் படபடக்கத் தொடங்கிய இதயத்தை அடக்க ராமபத்ரன் எழுதிக் கொடுத்த லார்க்காட்டில் மாத்திரை இரண்டை ஏழு மணிக்கே விழுங்கிவிட்டுத் தூங்கிப் போக எத்தனித்தான்.

என்ன பண்ணி என்ன?

எதற்கும் கடுகத்தனைகூடப் பலன் இல்லையே!

கங்காவின் தூக்கின மூஞ்சி தூக்கினபடிதான் இருந்தது. விலகிய கண்ணன் விலகியபடிதான் இருந்தான். சமையல்கார மாமி ஆறின பிறகுதான் தந்தாள். ரஜினிகாந்த் படத்துக்கு வாங்கிய டிக்கெட்டுகள் சிந்தப்படாமல்தான் கிடந்தன.

ஏழு மணிக்கெல்லாம் தூங்கப் போய் விடிகாலை இரண்டுக்கும், மூன்றுக்கும் எழுந்து கொட்டடா, குடைடா என்று த்யாகு அவஸ்தைப்பட்டதுதான் மிச்சம்.

ஒரு வாரத்தை முழுசாய்த் தாண்டுவதற்குள் தன் மேலேயே த்யாகுவுக்கு வெறுப்பு எழ ஆரம்பித்துவிட்டது.

நான் எக்கேடு கெட்டால் யாருக்கென்ன? என் வேதனையை யாரால் உணர முடிகிறது? நான் செய்யும் முயற்சிகளை யார் புரிந்துகொள்கிறார்கள்?



ஹெல் வித் எவ்ரிபடி...

டாம் திஸ் சொஸைடி....

நான் ஆயிரக்கணக்கில் சம்பாதிக்கும் ராஜா - என் இஷ்டம், குடிப்பேன்.

ஐ டோண்ட் கேர் எ ஹெக் ஃபார் எனிபடி...

கோபம் சுயபச்சாத்தாபமாக மாற, ஆறாம் நாளிலிருந்து வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டது.

பத்து நாட்கள் போல ஆகி இருக்கும். அன்று ஆபீஸில் நாய் உழைப்பு உழைத்துவிட்டு ஜிம்கானாவினுள் காரை ஓடித்து நிறுத்திய நிமிஷத்தில் பக்கத்துக் காரிலிருந்து இறங்கின நபர்மேல் த்யாகுவின் பார்வை விழுந்தது.

இவன் வயசுதான் இருக்கும்.

மூக்கும் முழியுமாய் ஆள் ஷோக்காய் இருந்தான்.

எதேச்சையாய் அவன் திரும்பியபோது அரை நிமிஷம் போல த்யாகு மேல் பார்வை நிலைத்து நின்றது. என்னமோ யோசிக்கிற பாவனையில் புருவம் முடிச்சுமுடிச்சாய் சுருங்கியது.

யோசனை மாறாமலேயே திரும்பி நடப்பவனை உற்றுப் பார்க்கையில் த்யாகுவுக்குள் ஒரு நிரடல்.

இந்தக் கண்களையும், பார்வையையும் எங்கோ பார்த்திருக்கிறேனே, எங்கு?

இதே சிந்தனை அவனுக்கும் வந்திருக்கவேண்டும். போர்ட்டிகோ வரை போனவன் நின்றான். திரும்பினான்.

''எக்ஸ்க்யூஸ் மி, ஹாவ் வீ மெட் பிஃபோர்?''

''ஃபன்னி, ஐ வாண்டட் டு ஆஸ்க் யூ தட் க்வெச்சின்...''

''ஐ'ம் நாராயணன்-''

''ஐ'ம் த்யாகராஜன்-''

''ஹே - த்யாகு!''

''காட்! நாணாவா, நீ!''

''ஆஃப்ட்டர் செவன்டீன் இயர்ஸ்.''

''நம்பளை மாதிரி மடையங்க யாராவது இருப்பாளா? அத்தனை வருஷம் ஒண்ணா பழகிட்டு இப்படி திருதிருனு முழிச்சோமே!''

''கமான் லெட் அஸ் கோ இன் - பேசறதுக்கு ஆயிரம் விஷயம் இருக்கு...''

நண்பர்கள் உள்ளே நுழைந்து பார் ரூமில் அமர்ந்தார்கள்.

''வாட் வில் யு ஹாவ்?''

''ஃப்ரஷ் லைம் வித் சோடா.''

வெளிநாட்டு விஸ்கி ஆர்டர் பண்ணு என்று சொல்லுவான் என்று எதிர்பார்த்த நண்பன் எலுமிச்சை சர்பத் என்றதும் த்யாகு அசந்துபோனான்.

''ட்ரிங்க் வேண்டாம்? டோண்ட டெல் மீ, யு டோண்ட் ட்ரிங்க்?''

''ஓ, யெஸ், ஐ டு. ஆனா, இப்ப வேண்டாம். எங்கயாவது பார்ட்டி அது, இதுனு போனாத்தான் கம்பெனிக்காக ட்ரிங்க் எடுத்துப்பேன்.''

''பின்னே க்ளப்புக்கு எதுக்கு வர்றே?''

நாணா சிரித்தான்.

''குடிக்கறதுக்கு மட்டும்தான் க்ளப்புக்கு வரணுமா த்யாகு? நா டென்னிஸ் விளையாட வரேன். ஸ்விம் பண்ண வரேன்...''

''நிஜமாகவா?''

நாணாவுக்கு லெமனும், தனக்கு விஸ்கியும் ஆர்டர் பண்ணியபோது விஸ்கியா, அதுவும் மாலை ஐந்துகூட ஆகாத நேரத்திலா? - என்று நாணா புருவத்தைத் தூக்குவது புரிந்தது.

சென்னைக்கு நாணாவின் குடும்பம் குடிபெயர்ந்துவிட்ட பிறகு, வேண்டாவெறுப்பாகக் கல்லூரியில் சேர்ந்தவனுக்குத் திடும்மென்று படிப்பில் நாட்டம் உண்டானதாம். விளையாட்டுப்பிள்ளையாக இருந்தவன் தன் போக்கை மாற்றிக்கொண்டானாம். பி.ஏ., முடித்து, ஜம்ஷெட்பூரில் எம்.பி.ஏ., முடித்து, இன்று அசோக்கன்ஸல்டன்ஸியில்



ஒரு ஆலோசகராய் இருக்கிறானாம். இரண்டாயிரத்து முன்னூறு சம்பளமாம், ப்ளஸ் அலவென்ஸாம். மூன்று மாசமாய் சிங்கப்பூர், மலேஷியாவுக்கு ஒரு க்ளையண்ட் வேலையாய் போய்விட்டு இரண்டு நாட்கள் முன்புதான் ஊர் திரும்பினானாம்.

நாணா பேசப்பேச த்யாகுவை ஆச்சரியம் பிடுங்கித்தின்றது.

படிக்காமல் கொள்ளாமல் சதா காசியுடன் ஆத்தங்கரையில் திரிந்த நாணாவா இவன்?

உன்பாடு என்பாடு என்று முக்கி முனகி செகண்ட் அட்டெம்ப்டில் எஸ்.எஸ்.எல்.சி - ஐத் தாண்டின நாணாவா இவன்?

உருப்படாத தறுதலை என்று பெற்றவர்களாலும், ஊராராலும் தண்ணீர் தெளித்துவிடப்பட்ட நாணாவா இவன்?

த்யாகுவின் திகைப்பு புரிந்த நிலுவில் நாணா சிரித்தான்.

அப்புறம் சன்னக்குரலில் பேசினான்.

''கண்டபடி ஊர் மேஞ்ச நா உருப்படியாயிட்ட கதை இருக்கட்டும்; உன்னைப் பத்தி நீ ஒண்ணுமே சொல்லலியே... ஹௌ ஆர் யூ? வேர் ஆர் யூ வொர்க்கிங்..? விவரமா சொல்லு...''

நாணாவின் கண்கள் தன் கைகளில் இருந்த சிகரெட் மேலும், முன்னால் உட்கார்ந்திருந்த விஸ்கி டம்ளர் மேலும் நிலைப்பதை உணர்ந்த த்யாகுவுக்குச் சட்டென்று எதும் பேசத் தெரியாமல் போயிற்று.

நானா? எப்படி இருக்கிறேனா?

சொன்னால் இவன் புரிந்துகொள்வானா?

இரண்டு வேளை ஸந்தி பண்ணி, நெற்றியில் விபூதியும், வாயில் ஸ்லோகமுமாய் இருந்த நான் இன்று விஸ்கியும் சிகரெட்டுமாய்ச் சீரழிகிறேன் என்று சொன்னால் புரிந்துகொள்வானா?

எத்தனை பிரயத்தனப்பட்டும் அடங்கமாட்டேன் என்று சண்டி பண்ணிய கண்ணீர் கண்களில் எட்டிப் பார்க்கத் தொடங்கியதும், த்யாகு தலையைக் குனிந்துகொண்டான்.

# 13

வித்யா, அமுல் சீஸ் க்யூபைச் சின்னச்சின்ன துண்டங்களாக வெட்டி, ஏற்கெனவே ஒரு பெரிய வெங்காயம், ஒரு குடமிளகாயை மெல்லியதாக நறுக்கி வைத்திருந்ததோடு கலந்தாள். ப்ரெட் ஸ்லைஸை எடுத்து ஒரு பக்கம் வெண்ணெயைத் தடவி, அதன்மேல் அடர்த்தியாக இந்தக் காய்கறிக் கலவையைத் தூவினாள். கடைசியில் டொமேடோஸாஸைத் தாராளமாக ஊற்றி, இன்னொரு வெண்ணெய் தடவின ரொட்டித் துண்டால் மூடினாள்.

தோசைக்கல்லை காஸ் அடுப்பில் ஏற்றிக் கொஞ்சம் நெய்யை விட்டாள். கல் காய்ந்ததும் மூடி வைத்திருந்த ஸாண்ட்விச்சை அதில் தூக்கி வைத்து, சுற்றிலும் இன்னும் கொஞ்சம் நெய் விட்டாள். அடிப்பக்கம் சிவந்ததும், தோசைத்திருப்பியின் உதவியுடன் லாவகமாக ஸாண்ட்விச்சைத் திருப்பிப் போட்டாள்.

இரண்டு நிமிஷத்தில் பீட்ஸா ஸாண்ட்விச் தயாராகிவிட்டது.

நாணாவுக்கு இப்படித் தயாரிக்கும் ஸாண்ட்விச் என்றால் அலாதி ப்ரியம். சுடச்சுட ஏலக்காய் டீயும், பீட்ஸா ஸாண்ட்விச்சும் கொடுத்தால், மனுஷன் ஒரு பிடி பிடிப்பான்.

மாலை இன்னும் மணி ஆறாகவில்லை. வாச லானில் கஷ்மாவும், ப்ரகாஷும் நண்பர்களோடு விளையாடும் சப்தம் சமையல்கட்டில் லேசாகக் கேட்க, ஸாண்ட்விச், டீயோடு வித்யா சாப்பாட்டு அறைக்கு வந்தாள்.

க்ளப்புக்குப் போய் ஒரு மணி ஸ்விம் பண்ணிவிட்டு வருகிறேன் என்று சொல்லிச் சென்ற கணவன், போன கையோடு திரும்பிவிட்டது வித்யாவுக்கு ஆச்சரியமாக இருந்தது.

சாதாரணமாக ஆபீஸிலிருந்து சுருக்க வீடு திரும்பிவிட்டால், ஜிம்கானாவுக்குப் போய் ஒரு ரவுண்ட் டென்னிஸ், அரை மணி நீச்சல், நண்பர்களுடன் குட்டி அரட்டை என்று அத்தனையும் முடித்துக்கொண்டு ஏழு வாக்கில்தான் நாணா வீட்டுக்குள் நுழைவது வழக்கம்.

இன்று என்ன ஆயிற்று?



டைனிங் டேபிள்மேல் கைகளை ஊன்றிக்கொண்டு, தலையை அதில் புதைத்த வண்ணம் அமர்ந்திருக்கும் கணவனைப் பார்க்கையில் ஸம்திங் ஈஸ் பாதரிங் ஹிம் என்று வித்யாவுக்குத் தோன்றியது.

என்ன சமாசாரம்?

ஆபீஸில் ஏதாவது பிரச்னையா?

இல்லை, உடம்பு, கிடம்பு சரி இல்லையா?

தட்டையும், டீ டம்ளரையும் டேபிள்மேல் வைத்தவள் நாணாவின் கலைந்த தலைமுடியை விரல்களால் அளைந்தாள்.

''எனிதிங் ராங், நாணா?''

சின்ன குரலில் அவள் பேசியதும் நாணா பார்வையை நிமிர்த்தினான்.

''உடம்பு சரியில்லையா? ஏன் எப்படியோ இருக்கேள்?''

''ஓ - ஐ'ம் ஆல்ரைட்...'' நாணா சாய்ந்து உட்கார்ந்து கொண்டான்.

''ஸாண்ட்விச் எடுத்துக்கோங்கோ, இல்லேன்னா ஆறிடும்...''

''வேண்டாம் வித்தி - பசிக்கலை, ஐ'ல் ஹாவ் ஜஸ்ட் டீ...''

''ஏன், ஜிம்லே ஏதாவது சாப்பிட்டேளா?''

''ம்ஹூம்...!'' - நாணா டீயை எடுத்து மெதுவாக உறிஞ்சத் தொடங்கினான்.

ஒரு நிமிஷம் வித்யா கணவனை முழுசாய்ப் பார்த்தாள். அப்புறம் ''ஆபீஸ்லே ஏதாவது ப்ராப்ளமா நாணா? ஷர்மா ஏதாவது சொன்னானா?''

நாணா, ''இல்லை'' என்று தலை ஆட்டினான்.

''தென்?''

டம்ளரை மேஜைமேல் வைத்த நாணா, ''இட்ஸ் அபௌட் த்யாகு... அவனை நினைச்சா ரொம்ப வேதனையா இருக்கு வித்யா!'' என்றபோது அவன் குரல் தழுதழுத்திருந்தது.

வித்யா பேசாமல் இருக்க, நாணாவே தொடர்ந்தான்:

''ரொம்ப வருஷம் கழிச்சு அவனை மீட் பண்ணப்போ நா ஏகமா சந்தோஷப்பட்டேன். ஆனா இப்ப ஏண்டாப்பா சந்திச்சோம்னு

இருக்கு. ஒவ்வொரு தடவையும் அவனைப் பாக்கறப்போ எனக்குள்ள ஒரு ஷாக் அடிக்கிறது வித்தி... எப்படி இருக்க வேண்டியவன், எப்படி இருக்கான்னு... அதுவும் இன்னிக்கு ரொம்ப மோசம். வொர்க்கிங் டே, ஆபீஸ் இருக்கு. ஆனா இவன்? பகல் பதினோரு மணிக்கே க்ளப்புக்கு வந்துட்டவன், இன்னும் அங்கதான் இருக்கான். போறஜோரைப் பார்த்தா, நடு ராத்திரியாகும் போல இருக்கு வீட்டுக்குப் புறப்படறதுக்கு. ஸ்விம்மிங்பூலுக்குப் போறவழிலே பார்லே எதேச்சையா எட்டிப் பாத்தேன் - கலைஞ்ச தலையும், சிவந்த கண்ணுமா உரக்கப் பேசி, சிரிச்சுண்டு உட்கார்ந்துண்டிருக்கான். கூடவே அரவிந்தன், குமார் அண்ட் அதர் யூஸ்லெஸ் ஃபெல்லோஸ்... என்னைக் கண்டதும் 'வாடா என் உயிர் ஸ்நேகிதா'னு தாவிக் கட்டிப் பிடிச்சுண்டான். 'பேரர், கெட் ஸ்காட்ச் ஃபார் மை ஃப்ரெண்ட்'ன்னான். 'இப்ப எனக்கு ட்ரிங் வேண்டாம், நா ஸ்விம் பண்ணப் போகணும்'னு சொன்னதைக் காதுல வாங்காம அசிங்கஅசிங்கமா ஜோக்ஸ் அடிச்சான் பத்து நிமிஷம்கூட அந்தக் கூட்டத்துலே என்னால உட்கார முடியலை. 'வீட்டுக்குப் போகலாம் வா'னு கூப்பிட்டேன். 'அதுக்குள்ளவா? மத்தியானம்தானே ஆரம்பிச்சோம், இட் இஸ் டூ எர்லி டு கோ ஹோம்'னு என்னென்னவோ அரவிந்தன் பேத்தறான்; இவனும் ஆமாம் சாமிங்கறான். ஸ்விம் பண்ணக்கூடப் பிடிக்காம நேரே வீட்டுக்கு வந்துட்டேன் வித்தி... அரவிந்தன், குமார் எக்கேடு கெட்டுப் போகட்டும். உட்கார்ந்துண்டு குடிக்க, சாப்பிட அவன்களுக்கு வேணா பணம் இருக்கு. ஆனா இவன்? இவன் சொந்த ஆபீஸா? இல்ல, மாமனார் பிஸினெஸ்ஸா இஷ்டப்படி போக வர? த்யாகு ஏன் இப்படிச் சீரழிஞ்சி போயிட்டான்! அவனை நினைக்கறப்போ வேதனையா இருக்கு வித்தி...''

ரொம்பவும் அவஸ்தைக்கு உள்ளாகிவிட்ட தினுசில் நாணா எழுந்தான். குறுக்கும் நெடுக்குமாய் நடந்தான். சாப்பாடு மேஜையை முஷ்டியால் தொட்தொட்டென்று தட்டினான்.

த்யாகுவைச் சந்தித்துவிட்ட இந்தச் சில நாட்களாய், தானே அடிபட்டு விட்டமாதிரி நாணா நடந்துகொள்வது வித்யாவுக்குக் கொஞ்சம் புதிராக இருந்தது. ஆல்ரைட், நல்லவன், நல்ல குடும்பத்துப் பையன். இப்படிச் குடிப்பழக்கத்துக்கு ஆளாகிவிட்டது வேதனைதான். அதற்காக இவர் ஏன் இப்படித் தவித்துப்



பறக்கவேண்டும்? மிளகாய் உறைக்கும் என்று குழந்தையிடம் சொல்லலாம்; வளர்ந்துவிட்ட ஒருவனிடமுமா? அப்புறம் அவனுக்குப் புத்தி இருந்து என்ன, மூளை இருந்து என்ன? தனக்கு எது நல்லது, எது கெட்டது என்று கூடவா படித்து, கௌரவமான உத்தியோகத்தில் இருக்கும் ஒருவனுக்குப் புரியாது!

வித்யாவுக்கு ஆச்சரியமாக இருந்தது.

இத்தனை நாட்களும் நாணா வேதனைப்படும்போது ஒரு புரிந்துகொள்ளும் புன்னகையுடன் ஓ! அப்படியா, ஐ'ம் ஸாரி என்ற பார்வையுடன் உட்கார்ந்திருந்தவளால் இன்று அப்படி இருக்க முடியவில்லை.

''உங்க அவஸ்தையை என்னால புரிஞ்சிக்கமுடியலை, நாணா... தன் நிலைமையைக் குறிச்ச த்யாகுவே வருத்தப் படாதப்போ, வொய் ஷுட் யூ பாதர் யுவர்செல்ஃப் ஸோ மச்? ம்? தான் அளவுக்கு அதிகமா குடிக்கறதும், வரவுக்கு மீறிச் செலவழிக்கிறதும் அவருக்குப் புரியாமலா இருக்கும்? அவரே தன்னை மாத்திக்க விரும்பாதப்போ நீங்க வருத்தப்படறதால ஆகப்போறது என்ன?''

ஜன்னலிடம் சென்று லானில் விளையாடும் குழந்தைகளை வெறித்துப் பார்த்த நாணாவுக்கு அம்மாவின் தலைப்பில் ஒளிந்துகொண்டு அப்பாவை வெறுப்பு நிறைந்த கண்களால் பார்த்த கண்ணனின் நினைப்பு வர, சட்டென்று மனசில் வலி அதிகமானது.

என்னாயிற்று?

எது எங்கு தப்பாகப் போயிற்று?

சின்னப் பிள்ளையும், பெண்டாட்டியும் ஆளை மதிக்காமல் ஒதுக்கும் அளவுக்கும் த்யாகுவை இந்தப் பழக்கம் எப்படி ஆக்கிரமித்துக்கொண்டது?

நினைக்கநினைக்க அடிவயிற்றை ரொம்ப சங்கடப்படுத்தியது.

எப்படி இருந்தான்?

பட்டைபட்டையாய் விபூதி இட்டுக்கொண்டு, அப்பாவின் வார்த்தைக்கு ஒரு வார்த்தை மறுப்புப் பேசாமல் இரண்டு வேளையும் சிரத்தையுடன் ஸந்தி பண்ணிக்கொண்டு, சூர்ய நமஸ்காரத்தில் ஆரம்பித்து ஒரு ஸ்லோகம் விடாமல் மனனம் பண்ணிக்கொண்டு,

சாதுவாய், சமர்த்தாய், நல்லவனாய் அன்று இருந்த த்யாகு எப்படி இந்தத் தினுசில் தடம் மாறிப் போனான்?

மாற்றியது எது?

இப்படிக் கூடவா அடியோடு ஒருவன் மாறுவான்?

நாணா திரும்ப நாற்காலியில் வந்து உட்கார்ந்துகொண்டான். தன் தவறு தனக்கே புரியாத, புரிந்தாலும் திருத்திக்கொள்ள விரும்பாத நண்பனுக்காக நீங்கள் ஏன் இப்படி அல்லாட வேண்டும் என்று கேட்டுவிட்ட மனைவியைப் பார்த்தான்.

இவளுக்கு நான் எப்படி எடுத்துச் சொல்வேன்? என்னவென்று சொல்லி அந்தக் காலத்து த்யாகுவைப் புரியவைப்பேன்?

''நீ கேக்கறது நியாயம்தான் வித்யா. பட் ப்ளீஸ் ரிமெம்பர் ஒன் திங். அன்னிக்கு மகா தத்தாரியாத் திரிஞ்ச நா, இன்னிக்கு ரொம்ப நிதானமா குடித்தனம் பண்றவனாயிட்டேன். படிக்காம, ஊர் காலிப்பசங்களோட சகவாசம் வைச்சிண்டிருந்த நா, இன்னிக்கு ரொம்பப் பொறுப்பு உணர்ச்சி உள்ளவனா ஆயிட்டேன். ஆனா த்யாகு? நீ அவனை அன்னிக்குப் பார்த்திருந்தா இப்ப இப்படிக் கேக்கமாட்டே - நிமிர்ந்து பெரியவாகிட்ட எதிர்த்துப் பேசி யிருப்பானா? சொன்ன சொல்லைத் தட்டி இருப்பானா? ஒரு நாளாவது படிக்காம ஊர் சுத்தி இருப்பானா? ம்ஹூம்... இல்ல... நெவர்...வீட்டுக்கு அடங்கின பையன். அதிசமர்த்து, க்ளாஸ்ல பர்ஸ்ட்... அப்படி இருந்த த்யாகுவா இப்படினு எனக்கு ஆற மாட்டேங்கறது வித்யா - ஐ கெனாட் ஸீ ஹிம் லைக் திஸ்.''

டேபிள் மேல் படிந்திருந்த கணவனின் கையை எடுத்துத் தன் கைகளுள் வித்யா வைத்துக்கொண்டாள்.

''கொஞ்ச நாளா த்யாகு அப்படி இருந்தான், இப்படி இருந்தான்னு நீங்க சொல்லியும் அவனா இப்படி மாறிட்டான்னு புலம்பியும் நா நிறைய கேட்டுட்டேன். புதுசா இன்னிக்கு என்ன நடந்திடுத்து, நீங்க இப்படி அவஸ்தைப்பட? எனக்குப் புரியலை நாணா...''

''ஆபீஸ் நேரத்துலே த்யாகு க்ளப்லே உட்கார்ந்துண்டு குடிக்கறது ரொம்ப தப்பான விஷயம் வித்யா... நாளைக்கு வேலை போயிட்டா இவன் என்ன பண்ணுவான்? நேத்து அவன் வீட்டுக்கு



முதல் தடவையா போயிட்டு வந்தப்பவே ஸம்திங் ஈஸ் வெரி ராங் ஸம்வேர்னு தோணித்து. இன்னிக்கு அந்த நிலைலே அவனைப் பார்த்தப்புறம்தான் ஹி ஈஸ் அன் ஆல்கஹாலிங்கறது புரியறது. இந்த ரீதியிலேயே போனா மானம், மரியாதை எல்லாத்தையும் அவன் ரொம்ப சிக்கிரம் இழந்துடப் போறான்...''

''.....................''

''குடிக்காதப்போ த்யாகு பழைய த்யாகுவாத்தான் இருக்கான். அதே சாதுத்தனம், அதே பயந்த ஸ்வபாவம், முளுக்குன்னா கண்ல ஜலம் வரும் அதே த்யாகுதான். பட் ஆஃப்டர் ஹி டேக்ஸ் எ ட்ரிங்க... கடவுளே! இந்த த்யாகு எனக்கு ரொம்பப் புதுசு வித்யா... என்னை ரொம்ப பயமுறுத்தறான் இவன். இவனோட பழகி, இந்த குடிப்பழக்கத்தோட தீவிரத்தைப் புரிஞ்சுண்ட பிறகு எதனால இவன் இப்படி ஆயிட்டான்னு தெரிஞ்சிக்கணும்னு, வலிய 'உங்க வீட்டுக்கு போகலாம் - ஐ வாண்ட் டு மீட் யுவர் வொய்ஃப் அண்ட் ஸன்'னு சொல்லி நானே நேத்திக்கு அவனோட போனேன். போய் ஹால்லே உட்கார்ந்து அரை மணி ஆயிடுத்து; ஈ, காக்கை எட்டிப் பார்க்கலை. இவன் மட்டும் உள்ளே போய் சின்னக் குரல்லே பெண்டாட்டிகிட்ட கெஞ்சிண்டு இருந்தான். அப்புறம் வேண்டா வெறுப்பா அவ வந்தா; பின்னாலேயே முயல் குட்டி மாதிரி கண்ணன். ரெண்டு பேர் கண்ணுலேயும் ஏகமா வெறுப்பு. இவனோட குடிகார சிநேகிதன்ல நானும் ஒருத்தன்னு நினைச்சிருப்பா போல இருக்கு... இரண்டு நிமிஷம் நின்னுட்டு பிள்ளையோட உள்ள போயிட்டா, 'கண்ணனுக்கு எல்லாம், பாடம் சொல்லிக் கொடுக்கறா, தப்பா எடுத்துக்காதே'னு இவன் மழுப்பினான். நோ வித்யா...த்யாகு இன்னிக்கு இப்படி ஆயிட்டத்துக்கு அந்த கங்கா முக்கியமான காரணமா இருக்கலாம்னே எனக்குத் தோணறது...''

வித்யா 'இல்லை' என்று தலை ஆட்டினாள்.

''விவரம் பூரா தெரியாம நீங்க இப்படி கங்காவைப் பத்தி அபிப்பிராயம் சொல்றது தப்பு நாணா. த்யாகு குடிச்சிட்டு அவளை எப்படியெல்லாம் ட்ரீட் பண்ணாரோ? எந்த மாதிரியாய் கேவலமாய்ப் பேசினாரோ! பட்டுப்பட்டு அந்தப் பெண் ஒடுங்கிப் போயிருக்கலாம் இல்லையா? மரத்துப் போயிருக்கலாம் இல்லையா? நோ - ஐ வோண்ட் அக்ரி வித் யு...''

''ம்? அப்படின்னா குடிச்சப்புறம் 'கங்காவுக்கு தான் பணக்காரிங்கற திமிர் உண்டு'னு த்யாகு ஏன் சொன்னான்? 'உன் பெண்டாட்டி பணக்காரியா, இல்ல, ஏழையா? பணம் இருக்குங்கற அகம்பாவம் அவளுக்கு உண்டோ?'னு ஏன் கேட்டான்? இதுக்கெல்லாம் என்ன அர்த்தம்?''

''ஹானஸ்ட்லி ஐ டோண்ட் நோ நாணா... ஆனா, ஒரு ஆம்பிளை கம்பீரமா, மனபலம் நிறைஞ்சவனா இருந்தாத்தான் எந்தப் பொம்பளையாலும் அவனை மதிக்க முடியும். சின்ன வயசுலே எப்படி இருந்தாலும், வயசு வந்தப்புறம் ரெஸ்பான்ஸிபிளா, விவேகத்தோட ஒருத்தன் நடந்துக்கணும். இது ரொம்ப முக்கியம்...ஏன், உங்களையே எடுத்துக்கோங்க... ஏதோ விளையாட்டுப்புத்தி, அப்போ அப்படி இருந்தேள். பட் நௌ? ஸ்மோக்கிங் கூட ஒரே நாள்ல நீங்க விடலியா? ஒரு ஆம்பிளை அப்படி இருக்கணும் நாணா.''

''நா சிகரெட்டை விட்டதுக்கு ஒரு பயமுறுத்தல் இருந்தது வித்தி... எங்க மாமா, செயின் ஸ்மோக்கர். திடீர்னு வாயிலே வலின்னார். டாக்டர் கான்ஸர் வந்திருக்குனு உடனடியா தாவாகட்டையே எடுத்துட்டார். ஆபரேஷன் ஆகி கட்டு பிரிச்சப்புறம்தான் முத முதல்ல அவரை நா பாத்தேன். கும்பிப் போய், தா இருந்த இடமே தெரியாம... காட்! தட் வாஸ் டெரிபிள். விடாம ஸ்மோக் பண்ணினா நமக்கும் இந்தக் கதி எந்த நிமிஷமும் வரலாங்கற பயம் உண்டாக்க, அட் தட் மொமெண்ட், சிகரெட்டை விட்டேன்...''

''பயமோ...பயங்கரமோ உங்களுக்கு வில் பவர் இருந்தது, விட்டேள். உங்க த்யாகுவுக்கு அந்த மனபலம் இல்லே... எனக்கு அப்படித்தான் தோணறது...''

மேற்கொண்டு ஐந்து நிமிஷங்கள் போல இருவரும் பேசாமல் அமர்ந்திருந்தனர்.

கண்களை மூடிக்கொண்டு உட்கார்ந்திருந்தபடியே நாணா மெதுவாய் முனகினான்:

''த்யாகு மனசால இன்னிக்கும் அதே நல்ல த்யாகுவாத்தான் இருக்கான்னு எனக்குப் புரியறது வித்யா... வைரத்துல பூச்சக்கானாம் படர்ந்துட்ட மாதிரி அவன்கிட்ட இப்படி ஒரு அசிங்கமான ஹாபிட் வந்துடுத்து... இதனால அவன் தானும் அழிஞ்சிண்டு, தன் குடும்பத்தையும் அழிக்கக்கறான். அவனோட ஆதி நாள்ல பழகின சிநேகிதன்ங்கற முறைலே, அந்த த்யாகுவை நன்னா புரிஞ்சிண்டவன்கற ரீதிலே ஐ வாண்ட் டு ஹெல்ப் ஹிம்... இப்போ அவன் ஒரு பாதாள குகையோட அடிவாரத்துலே நிக்கற மாதிரி எனக்குத் தோணறது. இன்னும் ஒரு சில படிகள் இறங்கிட்டான்னா, அப்புறம் மீட்க முடியாத அதல பாதாளத்துலே அவன் புதைஞ்சு போறது நிச்சயம்...ஐ மஸ்ட் ஸேவ் ஹிம் வித்யா... ஐ வாண்ட் டு... இப்படி அவன் அணுஅணுவா சாகறதைப் பார்த்துண்டு என்னாலே கம்மா இருக்கமுடியாது... என் வேதனை உனக்குப் புரியறதா வித்யா? ஐ வாண்ட் டு ஹெல்ப் த்யாகு... ஓ, காட்... ஐ டூ...''



கணவனின் கண்கள் லேசாகக் கலங்குவதையும், தன் கைக்குள் சிறைப்பட்டிருக்கும் விரல்கள் நடுங்குவதையும் பார்த்த வித்யாவுக்கு அவன் எவ்வளவு தீவிரமாகப் பேசுகிறான் என்பதோடு, இனியும் வாதம் செய்து அவன் மனசைப் புண்படுத்துவது நியாயமல்ல என்பதும் புரிய, கொஞ்ச நாழி யோசித்தாள்.

அப்புறம் ''ஹௌ அபௌட் ஸீயிங் டாக்டர் ரெட்டி, நாணா? சைக்கியாட்ரிலே அவரை மிஞ்ச இன்னிக்கு இன்னொருத்தர் கிடையாதே; அவர் கிட்ட நீங்க த்யாகுவை அழைச்சிண்டு போனா என்ன?'' என்றாள் நிதானமாக.

# 14

''த்யாகு?''

''யெஸ்...''

''திஸ் ஈஸ் நாணா... என்ன பண்றே இன்னிக்கு ஈவ்னிங்?''

த்யாகு அரை விநாடி யோசித்தான்.

தினம் என்ன செய்கிறேனோ, அதைத்தானே இன்றும் பண்ணப்போகிறேன்? ஜிம்முக்குப் போவேன். குடிப்பேன். அரைகுறை நினைவோடு வீட்டுக்கு வந்து யாருடைய மூஞ்சித் தூக்கலையும் லட்சியம் பண்ணாமல் படுத்துத் தூங்குவேன். அதுதானே?

''என்னடா?''

''ம்? நத்திங் இன் பர்டிகுலர்...''

''அப்ப, சாயங்காலம் வேலை முடிஞ்சதும் என் ஆபீஸுக்கு வாயேன்!''

''எதுக்கு?''

''சும்மாதான்... நீ என் ஆபீஸுக்கு வந்ததில்லை. தென், வி கான் டாக் வித்அவுட் எனி டிஸ்டர்பன்ஸ்...''

என்ன பேசவேண்டும் என்கிறான் இவன்? முந்தா நாள் ஜிம்மில் நான் பகல் பூராவும் குடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்ததைப் பார்த்துவிட்டு 'என்னடா இது' என்று அதிர்ந்து போனானே, அது விஷயமாய் ஏதாவது பேசப் போகிறானோ! ஏன்டா இப்படிக் குடிச்சு உடம்பைக் கெடுத்துக்கறே - என்று அட்வைஸ் பண்ணப் போகிறானோ! போகாமல் இருந்துவிடலாமா? வேலை இருக்கிறது என்று டபாய்த்துவிடலாமா?

''அஞ்சு மணிவாக்குல வாடா, ப்ளீஸ்!''

அந்த அழைப்பைத் தட்டமுடியாமல் சம்மதித்த பின் த்யாகு ரிஸீவரை வைத்தான்.

மாலையில் நாணாவைப் பார்க்கக் கிளம்பினவன் க்ளப்புக்குப் போய் ஒரு பெக் அடித்துவிட்டு போனால் என்ன, நாணாவோடு மனம்விட்டு பேசவும், அவன் ஏதாவது உபதேசம் பண்ணினால் பளிச்சென்று பதில் சொல்லவும் உதவியாக இருக்குமே என்று நினைத்துக் கொஞ்சம் தயங்கினான். அப்புறம் க்ளப்புக்குப் போய்விட்டால் அங்கிருந்து லேசில் தன்னால் கிளம்பமுடியாது என்ற உண்மையை உணர்ந்தவனாய் காரை நேரே நாணாவின் ஆபீஸுக்கே செலுத்தினான்.

நாணாவின் அறை ஷோக்காய்த்தான் இருந்தது. ஏ.ஸி. புஸுபுஸு கார்பெட், வெனிஷியன் ப்ளைண்ட், இளம் பச்சை சுவர். ஓரமாய் ஒரு க்ரோட்டன்ஸ் செடி.

இத்தனை சொகுசை த்யாகு எதிர்பார்க்காதது அவன் முகத்தில் வெளிப்படையாகத் தெரிந்தது.

''வாட் வில் யு ஹாவ்? ஸம் லைட் டிபன்? இங்கே மசால்தோசை நன்னா இருக்கும். அதுவும் காபியும் சொல்லட்டுமா?''



த்யாகு 'சரி' என்றான்.

பத்து நிமிஷங்களில் டிபன், காபி வந்தது. சாப்பிடும் நாழிகையில் தங்களது சின்ன வயசு நாட்களைப் பற்றி நாணா நிறையப் பேசினான்.

''பண்ணையார் தோப்புக்குப் போய் மாங்கா அடிச்சுத் திங்கறதுக்கு உன்னைக் கூப்பிடுவோம். நீ வரமாட்டேன்னுடுவே, ஞாபகம் இருக்கா?''

''அந்த காசி இப்ப எங்க இருக்கான், ஊர்லதானா? ஒரே ஒரு தடவை திருச்சிக்கு வேலையா போனப்போ, போற வழிலே அஞ்சு நிமிஷம் ஊருக்குப் போயிருந்தேன். ஊர் பழைய ஊராவே இல்லே... ரொம்ப மாறிடுத்து... எல்லாம் புதுமுகங்கள்... தெரிஞ்சவா ஒருத்தரைக்கூடப் பாக்க முடியலை...''

''புளியந்தோப்புலே சதா திருட்டு தம் அடிச்சு, மூணு சீட்டு தாய்க ஆடுவோம்... நீ கூட எஸ்.எஸ்.எல்.சி படிக்கறச்சே அங்கே வந்து உக்காந்துண்டு இருப்பே, இல்லே?''

''உங்க வகக்குட்டிய எனக்கு நன்னா ஞாபகம் இருக்கு த்யாகு... துறுதுறுனு எப்படி இருக்கும் அது!... உங்கம்மாவும்தான் ரவிவர்மா ஓவியம் மாதிரி பளிச்சினு இருப்பா... நீ ஒரு பாட்டுப் பாடினா வக உழக்காட்டம் தின்னுண்டு அபிநயம் பிடிக்குமே... அது என்ன பாட்டு?''

''சங்கிலிக்கும் சங்கிலிக்கும், சங்கிலி குண்டானா?''

''ம்ஹூம் இல்ல. ஸம்திங் எல்ஸ்!''

''வரகரைக்கறதும்...?''

''ஆ...யெஸ்... அதுதான்...!''

நண்பர்கள் இருவரும் பழைய நினைவுகளில் அமிழ்ந்து எதுவும் பேசாமல் இருக்க, நிமிஷங்கள் மௌனமாய் ஓடி மறைந்தன.

வகக்குட்டியுடன்தான் சமையல்கட்டில் உட்கார்ந்து 'வரகரைக் கறதும் - அவர் வந்து நிக்கறதும்' சொல்ல, அது அபாரமாய்க் கையை ஆட்டி கண்களை விழித்து, உதட்டைப் பிதுக்கியதும், அம்மா 'இது சரியான எமன்டா' என்று சொல்லி ஆச்சரியப்பட்டதும் இப்போது தான் நடந்த மாதிரி பசுமையாய்க் கண்முன் தோன்ற,

நின்றுக்கொண்டிருந்த தோசை நெஞ்சக் குழிக்குள் சிக்கிக் கொண்டது.

தட்டைத் தள்ளிவிட்டு த்யாகு கையலம்பினான்.

த்யாகு நெகிழ்ந்திருக்கும் இந்த கணத்துக்காகக் காத்திருந்த நினுசில் நாணா மெதுவாகப் பேசினான்:

''உன்னைப் பத்தி நீ என்கிட்ட எதையுமே விவரமா சொல்லமாட்டேங்கற த்யாகு... வொய்? முத நானே, உன்னைப்பத்தி சொல்லுடான்னப்போ, 'சொல்றேன், மெதுவா சொல்றேன் - என்ன அவசரம்'னு சாக்கு சொல்லிட்டே... ஐ வாண்ட் டு நோ எ லாட் அபௌட் யு த்யாகு... பதினைஞ்சு வயசு வரைக்கும் நா பார்த்த, பழகின த்யாகுவா நீ இப்போ இல்லே... இது வேற யாரோ மாதிரி எனக்குத் தோணறது... இந்த த்யாகுவைப் பத்தி நீயே விவரமா சொன்னாத்தான் என்னால அவனைப் புரிஞ்சிக்க முடியும். மனசு விட்டு நீயும் நானும் பேசிக்க வேண்டாமா, த்யாகு? டு யு அண்டர்ஸ்டாண்ட் மை பாயிண்ட்?''

டேபிள் மேல் ஒட்டி இருந்த ஃபார்மைகா ஷீட்டில் காணப்பட்ட டிஸைனில் விரலை வைத்து அதன் மேலேயே வரைந்து முடித்த த்யாகு தலையை நிமிர்த்தினான்.

திடுமென்று நெஞ்சக்குள் பறவைகள் பறக்கத் துவங்குகிற மாதிரி இருந்தது. பின்கழுத்தில் பூச்சி ஊர்கின்ற உணர்வு. நெற்றிப்பொட்டில் ஒரு துடிப்பு.....

உடம்பு பதறத் தொடங்கிவிட்டதை உணர்ந்தபோது இன்னதென்று காரணம் சொல்ல முடியாதபடி த்யாகுவினுள் சலிப்பு தலை தூக்கியது.

இந்த மாதிரி வெட்டியாய்ப் பேசுவதில் நாணாவுக்கு என்ன லாபம்? நான் குடிப்பழக்கத்துக்கு ஆளாகிவிட்டது இவனுக்கு நன்றாய்ப் புரிந்துவிட்டது இல்லையா? சரி, அப்புறம் இந்த த்யாகுவைப் பற்றி சொல்லு, என்ன சொல்லு! சொல்வதற்கு என்ன இருக்கிறது? வெட்ட வெளிச்சமாய்க் காட்டிவிட்ட சமாசாரத்துக்கு விளக்கம் என்ன வேண்டிக் கிடக்கிறது?

த்யாகு எழுந்தான், நாணாவை நேர் பார்வையாய்ப் பார்க்க வெட்கப்படுபவன் போலக் குனிந்துகொண்டான்.



''வாயேன் க்ளப்புக்குப் போய்ப் பேசலாம்... லெட் அஸ் டாக் ஓவர் எ ட்ரிங்க்.''

மேஜை மேல் ஊன்றி இருந்த நண்பனின் விரல்கள் நடுங்குவதை நாணாவால் தெளிவாகப் பார்க்கமுடிந்தது.

''உட்கார் த்யாகு... இந்த ட்ரிங்கைப் பத்தி எனக்கு உன்கிட்ட கொஞ்சம் பேசணும்... பேசி முடிச்சப்புறம் வி வில் கோ டு த க்ளப்...''

த்யாகு உட்காரவில்லை.

நாணா எழுந்து அவனிடம் சென்றான். தோளில் கை வைத்து இதமாய் அழுக்கிக் கொடுத்தான். ''ரிலாக்ஸ்டா... ரிலாக்ஸ்'' என்றான். ''ஐ வாண்ட் டு ஹெல்ப் யு த்யாகு... ஜோ ரிலாக்ஸ்'' என்றான் திரும்ப.

த்யாகு சட்டென்று நாற்காலியில் உட்கார்ந்து, மேஜை மேல் கவிழ்ந்துகொண்டான்.

நாணா ஒரு சிகரெட்டைப் பற்றவைத்து அவன் கைகளில் கொடுத்தான்.

''என் எட்டாவது வயசிலே நா முதமுதல்லே திருட்டு தம் அடிக்க ஆரம்பிச்சேங்கறது உனக்குத் தெரியும் இல்லையா? பட், ஒரு நாளைக்கு அம்பது சிகரெட் போலப் பிடிச்சிண்டு இருந்தவன் ஒரே நாள்லே இந்தப் பழக்கத்தை விட்டது உனக்குத் தெரியாதே, ஏன் அதைப் பத்தி நீ ஒண்ணுமே கேட்கலைடா? சிகரெட் பிடிக்காம நா இருக்கிறது உனக்கு ஆச்சரியமாவே இல்லியா? ஐ'ம் ஸர்ப்ரைஸ்ட் தட் யு டிண்ட் ஆஸ்க் மீ எனிதிங் அபௌட் இட்...''

''............................''

''எந்தப் பழக்கத்துக்கும் ஆளாயிடறது சுலபம் த்யாகு. ஆனா, அதை விடறது கஷ்டம்...ஐ நோ...அதுக்காக மனுஷனைப் பழக்கவழக்கங்கள் அடிமையாக்க விடறது ரொம்பரொம்ப தப்பு...நம்ம ஹாபிட்ஸ், நாம சொன்ன பேச்சைக் கேட்கணும்... அப்பதான் சந்தோஷம், நிம்மதி எல்லாம். நாட் வைஸ்வெர்ஸா.... இதயெல்லாம் புரிஞ்சிக்க எனக்கு நிறைய வருஷங்கள் தேவைப் பட்டது. பட், இப்பவாவது புரிஞ்சிதேனு மனசுக்கு ரொம்ப சந்தோஷமாயிருக்குடா... யு கெட் மை பாயிண்ட், டோண்ட் யு?''

பதில் ஏதும் பேசாமல் ஒருவித அவசரத்துடன் சிகரெட்டை இழுத்துப் புகையை நெஞ்சுக்குள் நிரப்பிக் கொள்வதிலேயே கவனமாய் த்யாகு இருக்க, நாணா பேச்சை நிறுத்திவிட்டுத் தீர்க்கமாய் அவனைப் பார்த்தான். பார்க்கப்பார்க்க மனசுக்குள் ஒரு பிறாண்டல்...

சின்ன வயசில் பொட்டைடா நீ என்று சதா கேலி பண்ணி இவனைச் சீண்டியதில் எனக்கும் பங்கு உண்டுதானே? ஒரு தம் அடிக்கக்கூட உனக்குத் தைரியம் கிடையாதுடா என்று காசியுடன் சேர்ந்து இவனை நாட்கணக்கில் மட்டம் தட்டியதில் எனக்கும் பங்கு உண்டுதானே? பல வருஷங்கள் எங்கள் தையாண்டிக்குத் தாக்குப் பிடித்தவன், ஏதோ ஒரு பலஹீனமான பொழுதில் 'எனக்கு ஒரு சிகரெட் கொடுடா' என்று வலிய எங்களிடம் வந்து கேட்ட போது 'இப்பத்தாண்டா நீ ஆம்பிளை' என்று முதுகில் தட்டிக் கொடுத்து சிகரெட்டைப் பற்றவைத்து இந்தப் பழக்கத்தை இவனுக்கு ஏற்படுத்தியதில் எனக்கும் பங்கு உண்டுதானே?

அன்று தெரியாத்தனமாய்ச் செய்த காரியத்துக்கு இன்று ஈடுகட்டத் தீர்மானித்துவிட்ட திருப்தியில் நாணா த்யாகுவின் கையைப் பிடித்துக்கொண்டான்.

''இந்தக் குடிப்பழக்கம் உனக்கு எப்படி வந்ததுடா த்யாகு? எங்கேயிருந்து, யார் மூலமா உன்கிட்ட தாவித்து?... விவரமா நீ எனக்கு சொல்லித்தான் ஆகணும்... ஐ வோண்ட் லீவ் யு அதர்வொய்ஸ்.''

''......................''

''சொல்லுடா... எதுவுமே பேசாம இப்படி நீ பாத்தாக்க எனக்குக் கஷ்டமா இருக்கு... உன் புண்ணைக் கிளறணும்னு நா இந்தக் கேள்விகளைக் கேட்கல... ஐ வாண்ட் டு ஹெல்ப் யூ... ப்ளீஸ் அண்டர்ஸ்டாண்ட்...''

த்யாகு வரட்சியாய்ச் சிரித்தான். அப்புறம் சன்னக்குரலில் பேசினான்:

''எனக்கு யாரும் உதவ முடியாதுடா நாணா... இதெல்லாம் நானே வரவழிச்சுண்ட பழக்கங்கள்... யாரையும் குத்தம் சொல்ல நா விரும்பலை... நௌ லெட் அஸ் கோ, ஐ வாண்ட் எ ட்ரிங்க்...''

சிகரெட்டை ஆஷ் ட்ரேயில் அமுக்கிவிட்டு எழுந்தவனை திரும்ப நாற்காலியில் அமுத்தினான் நாணா.



''மனசுலே உனக்கு என்னடா குறை....? எந்த வேதனையை மறைக்க இப்படிக் குடிச்சு உன்னை அழிச்சுக்கறே? நல்ல வேலை, நிறைய சம்பளம், லட்சணமான பெண்டாட்டி, பையன், சமூகத்துலே அந்தஸ்து. எல்லாம் இருக்கேடா! அப்புறம் எதுக்காக இந்தப் பழக்கம்? இது எப்படி உனக்குள்ள பூந்துது? சொன்னாத்தான் நா உன்னை விடப்போறேன்...''

''..............''

''கல்யாணமானப்புறம் குடிக்க ஆரம்பிச்சியா? இதுக்கெல்லாம் கங்கா காரணமா? சொல்லுடா? தப்பு எங்கே இருக்குனு கண்டுபிடிச்சுட்டா ஸால்வ் பண்றது சுலபம்... மனசைத் திறந்து பேசுடா த்யாகு... ப்ளீஸ்...!''

மூளைக்குள் மரங்கொத்தி கொத்தத் தொடங்கிவிட, அந்த வேதனை தாளமாட்டாமல் போக, நாணாவின் கையை உதறிக்கொண்டு த்யாகு எழுந்து நின்றான்.

''கங்காவும் காரணம் இல்ல, ஒரு மண்ணாங்கட்டியும் காரணம் இல்ல... எனக்கே பதில் தெரியாத கேள்விகளையெல்லாம் நீ கேட்டா நா என்ன பண்றது? ஆயிரம் தடவை நீ கேட்டாலும் ஐ வில் ஸே ஐ டோண்ட் நோ... இப்ப நீ வரப் போறயா இல்ல, நா போகட்டுமா?''

''ஆல்ரைட்..! ஒரே ஒரு கேள்வி. இதுக்கு மட்டும் பதில் சொல்லிடு. அப்புறம் நாம கிளம்பிடலாம்... இன்னிக்கு நீ சந்தோஷமா இருக்கயாடா த்யாகு? டெல் மி ஹானஸ்ட்லி... இந்த வாழ்க்கைலே நீ நிஜம்மா சந்தோஷமா இருக்கியா?....''

''வாட் டு யு மீன்?''

''நீ வாங்கற மூவாயிரம் ரூபா சம்பளத்தைப் பத்தியோ, கங்கா பத்தியோ நா கேட்கலை... எதையோ மறக்க விரும்பற மாதிரி குடிச்சிட்டு, கெக்கேபிக்கேனு இடியட்ஸ்கூடப் பழகிண்டு, உன் நினைவே இல்லாம படுக்கைலே தினமும் ராத்திரி விழறியே, இந்தப் பழக்கத்தாலே நீ சந்தோஷமா இருக்கியா? கார்த்தால எழுந்தா சத்தியமா உனக்குக் குத்த உணர்ச்சியே வரதில்லையா? சொல்லுடா... தைரியமா நிஜத்தைச் சொல்லு...''

அங்கே, இங்கே தொட்டு, கடைசியில் நெஞ்சிலேயே நாணா கை வைத்து விடவும், அந்தக் கேள்வியையும் அதன் தீவிரத்தையும்

தாங்கமுடியாதவனாக மேஜைமேல் த்யாகு சரிந்து உட்கார்ந்தான். அவசரமாய் சிகரெட்டைப் பற்ற வைத்துப் புகையை இழுத்தான்.

''ஆன்ஸர் மீ ஐ லே...!''

''ஓ.கே... யு ஆர் ரைட்... நா சந்தோஷமா இல்ல... போதுமா? இப்ப என்ன பண்ணணுங்கறே?''

பிரும்மப்ரயத்தனத்துடன் உண்மையை நண்பன் ஒப்புக் கொள்ளவும், நாணா அவனை இறுக அணைத்துக் கொண்டான்.

''தேங்க்ஸ்டா...! என்கிட்ட வேஷம் போடாம நீ பதில் சொன்னதுக்கு தேங்க்ஸ்டா...'' என்றவன், ''சந்தோஷத்தைத் தராத காரியத்தைத் தொடர்ந்து ஏன் பண்ணணும் த்யாகு?... அதை உடனடியா நிறுத்த வழி என்னனு யோசிக்க வேண்டாமா? குத்த மனப்பான்மை இல்லாம ஹெல்தியா வாழ என்ன வழினு யோசிக்க வேண்டாமா?'' என்றதும் த்யாகு இந்தப் பேச்செல்லாம் பிரயோஜனம் இல்லாத பேச்சு என்கிற தினுசில் தோள்களைக் குலுக்கினான்.

அப்புறம், ''போகலாம் வாடா - ஐ மஸ்ட் ஹாவ் எ ட்ரிங்க்...'' என்றான் கெகிகெப்பாக.

நாணா எழுந்தான். ப்ரீஃப் கேஸ் மேல் கை வைத்தவன் நின்றான். த்யாகுவை ஊன்றிப் பார்த்தான். நிதானமாய்ப் பேசினான்:

''நாம சொல்றேன்னு கோவிச்சுக்காதே த்யாகு. எனக் கென்னமோ உடனடியா நீ ஒரு நல்ல டாக்டரைப் பார்க்கணும்னே தோணறது. காலத்தை வீணா கடத்தறதுலே அர்த்தம் இல்லே... த்யாகு... ப்ளீஸ்டா லே, லஸ் டா!''

டாக்டரா! காட்! இவனுமா! கடைசியில் இவனுக்கும் கங்காவுக்கும் வித்தியாசம் கிடையாதா?

புருபுருவென்று ஆத்திரம் எழ த்யாகு நமுட்டாய்ச் சிரித்தான்: ''லோ, நீயும் கங்கா மாதிரிதானா? அவ, ராமபத்ர மாமாவை ஸஜெஸ்ட் பண்ணினா, நீ யாரைச் சொல்லப்போறே? குடிக்கறது மகா பாவம்; முட்டாள்தான் குடிப்பான். இப்படியொரு சனத்தன மான காரியம் பண்ணறவனுக்குப் போய் பெண்ணைக் கொடுத்துட்டோம்னு ஆயிரம் புலம்பல் புலம்பி அவர் அட்வைஸ் பண்ணின மாதிரி நீளமாய் உபதேசம் செய்ய யாரை ஸஜெஸ்ட்



பண்ணப்போறே? பதினைஞ்சு நாள் லீவு போடு, லார்க்காட்டில் சாப்பிடு. குடியை விடணும்னு சங்கல்பம் பண்ணிக்கோ... சனி... ரொம்ப சனினு என் நிலைமையோ, என் வேதனையோ புரியாம அவர் பேசின மாதிரி பேச நீ யாரை அனுப்பப் போறே? ம்...?''

ஓ! டாக்டர் என்றால் இவனுக்கு இத்தனை அலர்ஜியா? கங்கா இவனைப் புரிந்துகொண்டு அணுகாததில் டாக்டர் என்றாலே இவன் அரண்டு போயிருக்கிறானா?

இப்போது என்ன சொல்லி அவனுக்குப் புரியவைப்பது!

நாணா யோசித்து வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்தான்:

''ஐ' ம் ஸாரி த்யாகு... டாக்டர்னா நீ இத்தனை தொட்டாச்சுருங்கியா இருப்பேனு நா நினைக்கலை... யு மஸ்ட் ஹாவ் ஹாட் பேட் எக்ஸ்பீரியன்ஸ் டு டாக் லைக் திஸ்... ஐ'ம் ரியலி ஸாரி! ஆனா, நா சொல்றவர் ஜெனரல் பிஸிஷியன் இல்ல. இவர் ஒரு சைக்கியாட்ரிஸ்ட்...''

''ஹோ! எ சைக்கியாட்ரிஸ்ட்! அப்ப நா பைத்தியம்னே நீ முடிவு பண்ணிட்டியா?''

''என்னடா, விவரம் தெரியாதவனாட்டம் பேசறே? பைத்தியம் பிடிச்சாத்தான் சைக்கியாட்ரிஸ்ட்கிட்ட போகணுமா? மனசுக்கு வர்ற எந்த வியாதியையும் அலசிப் பார்க்கறதுக்கு சைக்கியாட்ரினு பேரு, தெரியுமா? உடம்புக்குக் கோளாறுன்னா டாக்டர்கிட்ட போகற மாதிரிதானே இதுவும்? உடம்பு மாதிரிதானே மனசும்! சரியில்லாத மனசைச் சரி பண்ணிக்க எக்ஸ்பர்ட்டோட உதவியை நாடறதுலே என்ன தப்பு? இல்லாததையும் பொல்லாததையும் கற்பனை பண்ணின்டு குழம்பாதேடா த்யாகு.... ப்ளீஸ், லெட் அஸ் கோ அண்ட் ஸீ டாக்டர் ரெட்டி...''

த்யாகு விழித்துக்கொண்டு ஒரு நிமிஷம் நின்றான். பிறகு ''ஐ வாண்ட் எ ட்ரிங்க் ரைட் நௌ. நீ வந்தா வா, வராட்டா போ'' என்று சொல்லிவிட்டு கதவைத் திறந்துகொண்டு வேகமாய் வெளி யேறினான்.

# 15

அந்த நாலு நாட்களில்தான் த்யாகு, நாணாவை எப்படி யெல்லாம் சமாளிக்க முயன்றான்! கெஞ்சினான், கொஞ்சினான், புத்திசாலித்தனமாக வாதம் செய்து பார்த்தான், கோபித்துக் கொண்டான், கண்ணில் படாமல் ஒளிந்துகொண்டான். என்ன பண்ணி என்ன? நாணா அசைந்து கொடுத்தால்தானே?

முதல் இரண்டு நாட்கள் ரொம்பவும் சாதுர்யமாகப் பேசுவதாக எண்ணிக்கொண்டு வேண்டாத நொண்டிச்சாக்குகளைச் சொல்லிப் பார்த்தான்.

''நீ நினைக்கிற மாதிரி நா ஒரு அடிக்ட் இல்ல நாணா; நினைச்சா என்னால இந்தப் பழக்கத்தை விடமுடியும். நீ என்னைப் பார்த்த அத்தனை சந்தர்ப்பத்துலேயும் நா குடிக்கவே, ஓ! இவன் ஒரு ட்ரங்கர்ட்னு நீ தீர்மானிச்சுட்டே....யு ஆர் ராங்... டோடலி ராங். வேணா இன்னிக்குக் குடிக்காம இருந்து காட்டவா? அப்புறமாவது உன் முடிவை மாத்திண்டு, 'டாக்டர் கிட்ட வா'ன்னு தொண தொணக்காம இருப்பியா?''

''கங்கா கண்ணனோட ஊருக்குப் போயிட்டாடா. இனிமே லீவு முடிஞ்சுதான் வருவா. ஸோ, அவ வரட்டும், அப்புறமா இந்த டாக்டர் சமாசாரத்தை வைச்சிக்கலாம், ஓ.கே?''

''குடிப்பழக்கத்தை விடணும், அவ்வளவுதானே? கொஞ்ச நாள் டைம் குடு. விட்டுடறேன், இவ்வளவு பழகிப்போனத டக்குனு எப்படிடா விடமுடியும்? கிவ் மீ டைம் ஜஸே... பட், நோ டாக்டர்.''

எதற்கும் நாணா மசிந்து கொடுக்காமல் இருக்க, மூன்றாம் நாள் த்யாகுவின் இயலாமை கோபமாக மாறியது:

''என் இஷ்டம் நா குடிக்கிறேன், கெட்டு அழியறேன், உனக்கென்னடா? மைண்ட் யுவர் பிஸினஸ்'' என்றான் குடித்தபின் தைரியமாக.

''எனக்கு உபதேசம் பண்ணாம ஸ்நேகமா இருக்க முடியுமானா இரு. இல்ல, என்னை உனக்கு ஃப்ரெண்டுனு சொல்லிக்க வெட்கமா



இருந்ததுன்னா சொல்லிடு. இப்பவே குட்பை சொல்லிடலாம். திரும்ப நாம சந்திக்கவே வேண்டாம்...'' என்றான் அதற்கும் அடுத்த நாள்.

தொடர்ந்து வந்த நாளில் நாணாவிடமிருந்து போன் வந்தால் எடுத்துப் பேச மறுத்தான். க்ளப்பில் அவனைத் தூரத்தில் பார்த்துவிட்டாலே பாத்ரூமுக்குள் சென்று ஒளிந்துகொண்டான்.

அத்தனையையும் ஐ அண்டர்ஸ்டாண்ட் யூ - என்கிற புன்னகையோடு நாணா தாங்கிக்கொள்ளவே, முழுசாய்ப் பத்து நாட்கள் தாண்டுவதற்குள் மெள்ளமெள்ள தன் பிடிவாதத்தை இழந்து நண்பனிடம் சரணடையத் தொடங்கினான் த்யாகு.

''நீ ஏண்டா இப்படி எனக்காகப் பிராணனை விடறே... உனக்கு என்ன தலைவிதியா?'' என்றும்,

''என்னைப் புரிஞ்சிண்ட ஒரே ஆத்மா நீ ஒருத்தன்தாண்டா. நீயும் என்னை வெறுத்துட்டுப் போயிடாதடா...'' என்றும்,

''ஐம் ஸாரிடா... வெரி ஸாரிடா... இனிமே இந்தக் குடியைத் தொடக்கூடாதுன்னுதான் ஆசையா இருக்கு. ஆனா முடியலையே... ப்ளீஸ் ஹெல்ப் மீ நாணா... ஹெல்ப் மீ டு கெட் அவுட் ஆஃப் திஸ் மெஸ்'' என்றும் நண்பனின் கைகளைப் பற்றிக்கொண்டு வாய்விட்டுக் குமுறி அழுதான்.

இந்தப் பத்து நாட்களில் அவனை அடிக்கடி தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றதன் மூலம் கணவன், மனைவி நடுவில் இழைய வேண்டிய அன்யோன்யம், குழந்தைகள் பெற்றோர் இடையில் மலர்ந்திருக்கும் அன்பு, ஸ்வாதீனம், ஒரு முழுமையான குடும்பத்தின் இயல்பு, இத்தனையும் த்யாகு உணரவேண்டும் என்று மனதுக்குள் நாணா ஆசைப்பட்டது நிறைவேறாமல் போகவில்லை.

முதல் நாள் நாணாவோடு அவன் வீட்டுக்கு வந்த த்யாகு வித்யாவையும் குழந்தைகளையும் அந்த நேர்த்தியான வீட்டையும் பார்த்துப் பிரமித்துத்தான் போனான்.

கிளி கொஞ்சும் வீடு.

லட்டுருண்டைகளாய்க் குழந்தைகள்.

இந்த வீட்டின் ஆணிவேரே நான்தான் என்று கம்பீரமாய், அதே சமயத்தில் அந்தப் பெண்மை நிறைந்தவளாய், நடமாடும் வித்யா.

வளவளவென்று கொட்டலும் இல்லை. வேண்டாத நாணலும், கோணலும் இல்லை.

வாங்கோன்னா... பாருங்கோன்னா என்று சதவு பின்னாலிருந்து அழைக்காமல் நாணா என்று தேவைப்பட்டபோது பேர் சொல்லி அழைத்தாலும் கணவனை நிமிர்ந்து பார்க்கும் பார்வையில் வெளிப்படையாய்த் தெரிந்த மரியாதை. எனக்கு எல்லாம் இவர்தான் என்ற நம்பிக்கை. இவர் என்னவர் என்ற கர்வம்.

வித்யா கொடுத்த கட்லெட்டும் பில்டர் காபியும், வாயையும் நெஞ்சையும் மணக்கச் செய்ய, இரவு எட்டு மணிக்கு அங்கிருந்து புறப்பட்டவன், க்ளப்புக்குப் போகாமல் நேரே வீட்டுக்கே வந்தான்.

ஹாலில் ஆரம்பித்து ஒவ்வொரு அறையாக எதையோ தேடுவது போல நிதானமாகப் பார்த்தபோது வீட்டின் அலங்கோலமும் வெறுமையும் பளிச்சென்று இதயத்தைப் பிறாண்ட, மாடி பால்கனியில் உட்கார்ந்துகொண்டு இரண்டு பெக் குடித்தவனால் மனசின் அல்லாட்டத்தைத் தாங்க முடியாது போகவே ஒருவித வெறியுடன் பாட்டிலை பால்கனி சுவரில் மோதி உடைத்தான். கடவுளே! நான் ஏன் இப்படி இருக்கிறேன்? என் வாழ்க்கை ஏன் இப்படிச் சூன்யமாகிவிட்டது! - என்று புலம்பினான்.

அந்த வாரத்தில் நாணா, அவன் குடும்பத்துடன் த்யாகு இரண்டு முறை பீச்சுக்குப் போனான். ஒரு சினிமா பார்த்தான். டி.கே. ஜெயராமனின் கச்சேரிக்குப் போனான்.

கச்சேரி முடிந்து வீட்டுக்குத் திரும்பியதும், நாணாவின் நச்சரிப்புத் தாங்காமல் வித்யா வீணையை எடுத்து வைத்துக் கொண்டு வாசித்துக் காண்பித்தாள்.

த்யா... ஆ... க... ரா... ஆ... ஜ... க... வைபவம்... வைபவம்... பவம்... வம்...

அப்படியே பட்டம்மாள் பாடுகிறபடி, சற்று முன் ஜெயராமன் பாடியபடி...

வீணையில் இப்படி இழைய இழைய வாசிப்பது சாத்தியமா என்ன?

''வித்யா பாட்டும் நன்னா பாடுவா... கமான் வித்யா, பி ஏ ஸ்போர்ட். கூடப் பாடேன்... இவ ரேடியோலே வாசிச்சவ த்யாகு...



ப்ரகாஷ் பிறந்தப்பறம் ப்ராக்டிஸ் பண்ண நேரம் இல்லாம விட்டுட்டா... கல்யாணத்துக்கு முன்னால ஷி வாஸ் வொர்க்கிங் இன் அமெரிக்கன் கான்ஸலேட்... உனக்கு இஷ்டம்னா வேலை பாருனுதான் நா சொன்னேன். பட், ஷி ரெஃப்யூஸ்ட்... இனிமே குழந்தைகளைப் பெத்து, வளர்த்து ஆளாக்கினப்புறம்தான் பாட்டு, வேலை எல்லாம்னு சொல்லிட்டா. வித்யா டபிள் எம்.ஏ., தெரியுமா, த்யாகு?''

அடேயப்பா! நாணாவுக்குத்தான் எத்தனை பெண்டாட்டி பெருமை!

பாரதி கனவு கண்ட புதுமைப்பெண்தான் வித்யாவோ!

கணவனோடு சேர்ந்து நீச்சல் அடிப்பதிலிருந்து, கார் ஓட்டி, சமைத்து, குழந்தைகளை விசேஷமாய்த் தானே கவனிக்கும்வரை அத்தனையும் செய்வதோடு நம் பக்கத்துப் பழக்கவழக்கங்கள் மாறாமல், வெள்ளி, செவ்வாய் எண்ணெய் தேய்த்துக் குளித்து, ஒற்றைப் பின்னல் பின்னி, பூ வைத்து, ஸஹஸ்ரநாம பாராயணம் செய்வதுவரை எல்லாம் வித்யாவுக்கு அத்துப்படி என்பதை அறிந்து நிஜம் நாணாவை இறுக அணைத்துக்கொண்டு 'நீ அதிர்ஷ்டசாலிடா நாணா. நன்னா இரு - காட் ப்ளெஸ் யூ அண்ட் யுவர் ஃபேமிலி' என்று த்யாகு முனகின நிமிஷத்தில் நாணா தன் பிரம்மாஸ்திரத்தை எறிந்தான்.

''உனக்கும் இப்படி வாழ்க்கை அமைஞ்சு, நானும் உன்னை இந்தக் நிறுவலே வாழ்த்தணும்னு எனக்கு ரொம்ப ஆசையா இருக்கு த்யாகு...''

''அதெல்லாம் இனிமே பகல் கனவு. இந்த ஜன்மத்துலே நடக்காது...''

''ஏன் நடக்காது? நீ மட்டும் என்னோட டாக்டர் ரெட்டியைப் பார்க்க வா. அப்புறம் நடக்கறதா, இல்லையானு பாரு...''

த்யாகு சலிப்புடன் சிரித்தான்.

''நீ ஒரு பைத்தியம்டா நாணா. என் மேல அலாதி ப்ரியத்தை வைச்சிட்டு நடக்காதது நடக்கணும்னு ஆசைப்படறே...''

''நடக்காதுனு ஏன் பெஸிமிஸ்டிக்கா சொல்லணும்? டாக்டர்ஸ் ஹாவ் டன் வொண்டர்ஸ்... நீ நிறைய அது பத்தி எல்லாம் படிச்சிருக்கலாமே...?''

''ம்ஹும்... குடி பத்தியோ, இல்ல ட்ரங்கர்ட்ஸ் பத்தி டாக்டர்ஸ் சொல்ற கருத்துக்களையோ நா படிக்க முனைஞ்சது இல்ல.. எதையாவது படிச்சு நம்மைப் பத்தின நிஜத்தைத் தெரிஞ்சுண்டுடுவோம்ங்கற பயத்துலே எதையும் கையால நா தொட்டதில்ல... கதைலேகூட குடிகாரன் ஒரு காரெக்டரா வந்தா அந்தப் புஸ்தகத்தை மூடி வைச்சுடுவேன்...''

குழந்தைத்தனமாக பேசும் இவனுக்கு என்னவென்று சொல்லி யதார்த்தத்தைப் புரிந்துகொள்ள வைப்பது?

''நானும் கிட்டத்தட்ட பதினைஞ்சு நாளா உன்கிட்ட தினமும் டாக்டர்கிட்ட போற விஷயமா பேசறேன்... ஆனா நீதான் பிடி கொடுத்தே பேச மாட்டேங்கறே. உன் மனசுலே இருக்கிறது வேண்டாத பயம் த்யாகு. கெட் ரிட் ஆஃப் தட். ஒரே ஒரு தடவை டாக்டரைப் பார்க்க வரதுலே உனக்கு என்ன கஷ்டம், சொல்லு? நா இத்தனை கெஞ்சறதுக்காகவாவது, எனக்காகவாவது வரக் கூடாதா?''

''வந்து ஆகப்போறது என்ன நாணா?...''

''அதையும்தான் பார்க்கலாமே...''

த்யாகு கண்களை மூடிக்கொண்டான்.

''ஆல்ரைட், உனக்காக வரேன். பதினைஞ்சு நாளா நா கண்ட படி பிஹேவ் பண்ணினப்புறம்கூட, ஆத்மார்த்தமான அன்போடு டாக்டர்கிட்ட வாடானு பிடிவாதம் பிடிக்கிறியே, அந்த அஃபெக்‌ஷனுக்காக வரேன். பட், ஆன் ஒன் கண்டிஷன். அந்த டாக்டர் ரெட்டி பேசற விதம், சொல்ற ட்ரீட்மெண்ட் எனக்குப் பிடிக்கலைன்னா தட்ஸ் இட்... அப்புறம் இரண்டாம் தரம் அவரைச் சந்திக்க நா வரமாட்டேன். நீ அதை ப்ராமிஸ் பண்ணு. நா வரேன்...''

யோசிக்காமல் நாணா சட்டென்று 'ஐ ப்ராமிஸ்' என்றான்.

அந்த வெள்ளிக்கிழமை டாக்டர் ரெட்டி த்யாகுவைச் சந்திக்க அப்பாய்ண்ட்மெண்ட் கொடுக்க, முதல் நாள் அவரை நேரில் சந்தித்துத் தனக்குத் தெரிந்த விவரங்களை அவரிடம் தெரிவித்த விஷயத்தை த்யாகுவிடம் சொல்லாமலேயே நாணா நண்பனோடு கிளம்பினான்.



காலை எட்டுக்கு அப்பாய்ண்ட்மெண்ட்... ஏழரைக்கு நாணா வந்து கூட்டிக்கொண்டான். இருவரும் ஏழே முக்காலுக்கு க்ளினிக்கில் இருந்தனர்.

த்யாகுவுக்கு இருப்புக் கொள்ளவில்லை.

டாக்டர் எப்படி இருப்பார்? ராமபத்ரன் மாதிரியா, இல்லை வித்தியாசமாகவா? இவர் ரொம்ப கெட்டிக்காரர் என்பது ஏற்கெனவே கேள்விப்பட்ட சமாசாரம் என்றாலும், எனக்கு ஒரு சைக் கியாட்ரிஸ்டின் சிகிச்சை தேவையா?

யாராவது தெரிந்தவர்கள் பார்த்துவிட்டு 'உன் கணவனைப் பைத்தியங்களைப் பரிசோதிக்கும் டாக்டரின் க்ளினிக்கில் பார்த் தேன்' என்று ஊரில் இருக்கும் கங்காவிடம் போய்ச் சொல்லி விட்டால்!

என்ன அசட்டுக் காரியம் இது!

இந்த நாணா வற்புறுத்தினான் என்பதற்காக நான் ஏன் சம்மதித்தேன்?

திரும்பி நாணாவைப் பார்த்தான்.

அவன் இவனுடைய பதட்டம் புரிந்த மாதிரி 'ரிலாக்ஸ்' என்றான்.

''நாணா......?''

''யெஸ்....?''

''நா சொன்னது ஞாபகம் இருக்கா? இவர் ட்ரீட்மெண்ட் எனக்குப் பிடிக்கலைன்னா, நோ மோர் விஸிட்ஸ். ஓ.கே.?''

''ஓ.கே...!''

''நாணா...!''

''என்னடா?''

''நா சந்திச்சதை இவர் வேற யார்கிட்டயும் சொல்லமாட்டார் இல்லையா? கங்கா, ராமபத்ரனுக்கு விஷயம் எட்டிடுத்துன்னா ரசாபாசமாயிடும்...''

நாணா நண்பனின் கையைத் தட்டிக்கொடுத்தான்.

''சின்னக் குழந்தை மாதிரி பேசாதடா... ஐ ஸெட் ரிலாக்ஸ்...''

இன்னொரு முறை த்யாகு நாணா என்பதற்குள் ரிஸப்ஷனிஸ்ட் 'யு மே கோ இன்' என்றாள்.

உள்ளே போனார்கள்.

நிச்சயமாக டாக்டர் ரெட்டி இப்படி இருப்பார் என்று த்யாகு எதிர்பார்த்திருக்கவில்லை.

ஆறடி உயரம், அதற்கேற்ற பருமன், அகன்ற முகம், தீர்க்கமான மூக்கு, அளவான மீசை, பின்னால் இழுத்து வழவழவென்று வாரிவிடப்பட்ட முடி, வெளிர் நீலத்தில் கட்டம் போட்ட ஸுட், பொருத்தமான டை.

இவர்கள் உள்ளே நுழைந்ததும் கண்களும் உதடும் நட்பில் விரிய இயல்பாய்ச் சிரித்து, ''ஹலோ!'' என்றார்.

அறிமுகம் முடிந்தது.

உட்கார்ந்தார்கள்.

எங்கு ஆரம்பிப்பார், எப்படி ஆரம்பிப்பார் என்று த்யாகு தவித்துப் பறந்த நிமிஷத்தில் 'த்யாகு! ஐ லைக் யுவர் ஷர்ட் வெரி மச்... எங்கு வாங்கினீர்கள்?' என்று ரொம்ப தெரிந்த சிநேகிதன் போலப் பேசத் துவக்கின டாக்டர் ரெட்டி பத்து நிமிஷங்கள் போவதற்குள் தான் அமெரிக்காவில் வேலை பார்த்ததைப் பற்றிச் சொன்னார்; சென்னை தனக்கு மிகவும் பிடித்தமான ஊர் என்றார்; தன் வேலை எத்தனை ஸ்வாரஸ்யமான சமாசாரம் என்பதை விவரித்தார்; அப்புறம் பேச்சுவாக்கிலேயே த்யாகுவின் வயசைக் கேட்டார், வேலையைப் பற்றி விசாரித்தார்.

''பத்து வருஷம் கல்கத்தாவிலே இருந்தவர் ஏன் விட்டுட்டு வந்திங்க த்யாகு?''

''எனக்கு வர இஷ்டம் இல்லை டாக்டர். ஐ லைக்ட் இட் ஸோ மச். பட் கங்கா...''

''ஹு ஈஸ் கங்கா?''

''மை வொய்ஃப்.''

''அவங்க இப்ப உங்ககூட வரலியா?''

''இல்ல... லீவுக்கு ஊருக்குப் போயிருக்கா...''



''ம்.. எல்லா வீட்டுலேயும் லீவு விட்டாக்க பொம்பளைங்க பிறந்த வீட்டுக்குக் கிளம்பிடுவாங்க போலிருக்கு...'' கங்கா வராதது குறித்து த்யாகு வேதனைப்படாதிருக்க வேண்டி டாக்டர் கவனத்துடன் பேசுவதை நாணாவால் புரிந்துகொள்ள முடிந்தது.

''இப்போ வேற கம்பெனிலே வேலையா இருக்கறதா சொன்னீங்களே, வொய்? கல்கத்தா கம்பெனிக்கு இங்க ப்ராஞ்சு இருக்கு இல்லே?''

''இருக்கு... அதுக்காக நாம் நினைச்சப்போ ட்ரான்ஸ்பர் வாங்கமுடியுமா?, மோர் ஓவர்...''

''மோர் ஓவர்?''

''வந்து... மை ட்ரிங்கிங்.. நோ. வந்து அந்தக் கம்பெனி அதிகாரிகளுக்கு ஆஃப் லேட் என் ஹாபிட்ஸ் கொஞ்சம் பிடிக்காம இருந்தது அதனாலே...''

''கொஞ்சம் பிடிக்காமனா... வாட் டு யு மீன்? எந்த ஹாபிட்? குடிக்கறதா?''

''......................''

''உங்களுக்கு இஷ்டம் இல்லாட்டி அதைப்பத்தி நாம பேச வேணாம். ட்ரிங்க்ஸ் பத்தியும் ஹாபிட்ஸ் பத்தியும் பேச்சு வந்திட்டதாலே, உங்க கிட்ட சில உண்மைகளை நா சொல்ல விரும்பறேன்...''

இப்போது நாணா குறுக்கிட்டான்: ''எக்ஸ்க்யூஸ் மீ, நா வேணா வெளியே வெயிட் பண்ணட்டுமா த்யாகு?''

''நோ... ப்ளீஸ்... ஸ்டே...''

டாக்டர் தனக்கு ஆட்சேபணை இல்லை என்கிற தினுசில் பேச்சைத் தொடர்ந்தார்:

''சாதாரணமா தமிழ்லே நாம குடிகாரன்னு எல்லாரையும் சொல்றோமே, இது ரொம்ப தப்பு. குடிச்சுட்டு அதனால தன் புத்திக்கோ, அந்தஸ்துக்கோ, சுற்றி இருக்கறவங்களுக்கோ எந்த பாதிப்பும் இல்லாம ஒருத்தன் குடிக்க முடியுமானா, அதுக்கு அவன் பொருளாதாரமும் இடம் கொடுக்குமானா, அப்ப பிரச்னையே இல்லை - ஹி ஈஸ் ஜஸ்ட் அன் அகேஷனல் ட்ரிங்கர், அவ்வளவுதான். ஆனா குடிக்கறதால ஒரு மனிதனோட மனம், பேச்சு, நடத்தை,

கௌரவம் எல்லாம் எப்ப அடிபடத் தொடங்குதோ, தென் ஹி ஈஸ் கால்ட் அன் ஆல்கஹாலிக் - அதாவது குடிகாரன். குடியை என்ஜாய் பண்ணற ஒருவனையும், இந்தக் குடிகாரனையும் ஒண்ணா கம்பேர் பண்ணிப் பேசறது தப்பு. அவனுக்கு ட்ரீட்மெண்ட் வேண்டாம். அவனால எப்ப வேணா குடிக்க முடியும், எப்ப வேணா பாதிப்பு இல்லாம நிறுத்த முடியும். ஆனா ஆல்ஹாலிக் விஷயம் அப்படி இல்லை. இவனைப் பொறுத்தவரை இது ஒரு பழக்கம் இல்லை, ஒரு வியாதி. யெஸ், இட் ஈஸ் எ டிஸீஸ். நரம்பு மண்டலத்துலே ரசாயனப் பங்கீடு சரியாக இல்லாத மனிதன். குடிக்கும்போது அவன் நரம்பு மண்டலம் வித்தியாசமாகத் தாக்கப்படுவதால் பாதிப்பு மோசமாக இருக்கு. An alcoholic behaves differently because of the chemical imbalance in his nervous system. என்ன, புரியுதா?''

ஆரம்பத்தில் விளையாட்டாகப் பேசினவர் தீவிரமாக ஆனால் இதமாக விவரத்தை விளக்கவும் த்யாகு ஆச்சரியப்பட்டுப் போனான்.





நிஜமாகவா?

கெமிகல் இம்பாலன்ஸ் இருப்பதால்தான் நான் குடித்த பிறகு வித்தியாசமாக நடந்துகொள்கிறேனா?

ஸோ, என்னைப் பொறுத்தவரையில் இது ஒரு வியாதியா?

ஒருவர், அதுவும் ஒரு டாக்டர், என்ன தப்பான பழக்கம் இது என்று முகம் சுளிக்காமல், அருவருத்து ஒதுங்காமல், நண்பன் மாதிரி பேசும் அனுபவம் த்யாகுவுக்குப் புதுசு. ரொம்பப் புதுசு.

''லக்கிலி, கான்ஸர் மாதிரி இது தீராத நோய் இல்லே; மருந்து இல்லாத பயங்கரமானதும் இல்லே... கண்டிப்பா குணப்படுத்தக் கூடியதுதான். ப்ளீஸ் பிலீவ் மீ... உங்க ஒத்துழைப்பு இருந்தா, ரொம்ப சீக்கிரத்துலேயே இந்த நோயிலிருந்து நீங்க விடுபடலாம்... என்ன, ஷால் வி ட்ரை?''

நிஜமாகவா?

முடியுமா?

நம்பலாமா?

ராமபத்ரன் மாதிரி இல்லாமல் இவர் மனிதாபிமானத்தோடு பேசுகிறார். இது பழக்கம் அல்ல, ஒரு வியாதி என்கிறார். கண்டிப்பாய் க்யூர் உண்டு என்கிறார். முயற்சி செய்து பார்த்தால் என்ன?

த்யாகு கொஞ்சம் யோசித்தான். நாணாவைப் பார்த்தான். அப்புறம் சரி என்று சொல்லும் பாவனையில் தலையை அசைத்தான்.

## 16

நாணா நர்ஸிங் ஹோமுக்குச் சாப்பாட்டுடன் வந்தபோது த்யாகு ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தான்.

''கூடுமானவரை நீங்களோ, இல்ல மத்த உறவுக்காரங்களோ முதல் ஒரு வாரத்துக்காவது அடிக்கடி வந்து பேஷண்டைப் பாக்காம இருந்திங்கன்னா நல்லது. ட்ரிங்க்ஸ் இல்லாம இருக்கறப்போ இவங்க படற வேதனையும், வித்ட்ராயல் ஸிம்டம்ஸும் உங்களுக்குப் பாக்கக் கஷ்டமா இருக்கலாம். தவிர இந்தச்

சமயத்துலே ஒரு பெக் குடிக்கறதுக்காக இவங்க என்ன மாதிரி பொய்யும் சொல்லத் தயங்க மாட்டாங்க... தாங்க துன்புறுத்தறதா சொல்லுவாங்க; பட்டினி போடறதா சொல்லுவாங்க... அப்புறம் வேண்டியவங்களைப் பாத்துட்டா சிலர் அழத் தொடங்குவாங்க... வீட்டுக்கு அழைச்சிட்டுப் போயிடுங்க, நீங்க என்ன சொன்னாலும் கேக்கறோம்னு நடிப்பாங்க... எப்படியாவது ஒரு பெக் கிடைச்சாப் போதும்ங்கற நிலைமையால எது வேணா செய்ய ரெடியா இருப்பாங்க... த்யாகுவும் இப்படி பிஹேவ் பண்ணுவார்னு நா சொல்லலை... பட், பண்ணலாம். வொய் டேக் எ ரிஸ்க்?''

த்யாகு, டாக்டர் ரெட்டியின் நர்ஸிங் ஹோமில் இன்பேஷண்டாகச் சேருவது என்பது தீர்மானமான பிறகு டாக்டர் நீளமாகப் பேசியது நினைவுக்கு வர, சாப்பாட்டுக் கூடையை ட்யூடி நர்ஸிடம் கொடுத்துவிட்டு நாணா புறப்பட்டான்.

இன்பேஷண்டாகவா என்று முதலில் த்யாகு அதிர்ந்துதான் போனான்.

அதுவும் மூன்று வாரங்களுக்கா?

எப்படி?

ஹௌ ஈஸ் திஸ் பாஸிபிள்?

கங்கா ஊரில் இல்லை, அவளோடு சமையல்கார அம்மாளும் போய்விட்டாள். வீட்டை என்ன பண்ணுவது?

ஆபீஸில் என்னவென்று சொல்வது?

வேலைக்குச் சேர்ந்து மூன்று மாசங்கள்தான் ஆகின்றன - திடும்மென்று ஒரு மாசம் லீவு கேட்டால் கொடுப்பானா? ஏற்கெனவே அப்பா செத்ததற்காக லீவு கேட்டிருக்கிறேன்!

ஆமாம் - என்ன காரணம் சொல்லுவது? நிஜத்தையா?

ம்ஹூம் - வேண்டாம்ப்பா...

இதெல்லாம் நமக்குச் சரிப்படாது.

நர்ஸிங் ஹோமில் சேர்ந்து குடிப்பழக்கத்தை விட முயற்சிக்கிறேன் என்ற சமாசாரம் ஊரில் பரவிவிட்டதென்றால் வேறு வினையே வேண்டாம்.



கங்கா ஒப்புக்காக இங்கு குடித்தனம் பண்ணுவதும் கோவிந்தா ஆகிவிடும்.

ம்ஹூம் - வேண்டாம் சாமி, வேண்டாம்.

நாணாவிடம் தன் முடிவைச் சொன்னபோது அவன் இதை ஏற்றுக்கொள்ள அடியோடு மறுத்தான்.

''கங்கா இல்லாட்டா என்ன? சரி, அவகிட்ட விவரத்தைச் சொல்லி அழைச்சிண்டு வந்தாப் போறது.''

''என்ன, நீ போகமாட்டியா? நீ சொன்னா அவ நம்ப மாட்டாளா? ஓ.கே. நானும் வித்யாவும் போறோம்... அப்ப?''

''என்னடா பெரி...ய்ய ஆபீஸ் - உன் உடம்பைவிடவா அது முக்கியம்? பர்ஸனல் வேலையா ஊருக்குப் போகணும், அர்ஜெண்ட்னு சொல்லு. இல்ல, பெண்டாட்டி, குழந்தைகளுக்கு உடம்பு சரியில்லேனு சொல்லு. அதுவும் இல்லேன்னா உனக்கு அப்பெண்டிஸைடிஸ் ஆபரேஷன், ஊர்ல ராமபத்ரன் பண்ணப் போறார்னு சொல்லு. லே லம் டாம் எக்ஸ்க்யூஸ் ஐ லே... மனசு இருந்தா வழியா இருக்காது!''

நாணா கோபமாகப் பேசவும், த்யாகு அடங்கிப் போனான்.

அடிமனசில் தானும் நாலு பேர் மாதிரி மனைவி, குழந்தை யுடன் அமைதியாய்க் குடித்தனம் செய்யவேண்டும் என்ற ஆசை ஆட்டம் போட்டதில், என்னமோ காரணத்தைக் கூறி, எப்படியோ நாலு வார விடுப்பு எடுத்துக்கொண்டான்.

வேலைக்காரனிடம் வெளியூர் போவதாகச் சொல்லி வீட்டைப் பூட்டினான்.

கண்ணனுக்கு இன்னும் பதினைந்து நாட்கள் போல விடுமுறை இருந்ததால் உடனடியாய் கங்கா வந்துவிடுவாள் என்ற பயம் இல்லை.

ஊருக்குப் போய் அவளிடம் விவரமாக எல்லாவற்றையும் சொல்லி அழைத்து வருகிறேன் என்று கிளம்பிய வித்யாவை 'இப்போ வேண்டாம். ஒரு வாரம் கழிச்சு ஹௌ ஐ ஃபீல்னு தெரிஞ்சுண்டு போய்ச் சொல்லலாம்' என்று தடுத்து நிறுத்திய பின் நர்ஸிங் ஹோமில் சேர்ந்தான்.

நர்ஸிங் ஹோம் திருவான்மியூரை அடுத்த பகுதியில் கடற்கரையை ஒட்டி இருந்தது.

த்யாகுவின் அறையிலிருந்து பார்த்தால் தூரத்தில் நீல விரிப்பாய்க் கடல் தெரிந்தது.

நிறைய சவுக்குத் தோப்புகள், தென்னைமரங்கள், பூச்செடிகள், ஒழுங்காய் வெட்டி விடப்பட்டுப் பச்சைக் கம்பளங்களாய்ப் புல்வெளிகள்.

இரவின் அமைதியில் ஒஷ்...ஒஷ் என்று பின்னணி பாடும் அலைகள்.

உனக்கு என்னய்யா தெரியும், நீ பேஷண்ட்; நான் டாக்டர் - லோ கீப் கொயட் - என்ற தோரணையுடன் இருக்காமல், சிகிச்சையைத் துவங்குமுன் படிப்படியாகத் தான் அளிக்க இருக்கும் ட்ரீட்மெண்டைப் பற்றி த்யாகுவிடம் முதல் நாள் டாக்டர் பேசினார்:

''உங்களுக்கு உடனடியாகத் தேவை ரெஸ்ட் அண்ட் பீஸ். காம்போஸ் ஐ.வி. கொடுக்கறதன் மூலம் உங்களைப் பல மணி நேரங்கள் நா தூங்க வைக்கப்போறேன். பசி எடுக்காம இருக்கவும், தெம்பா இருக்கவும் இன்ட்ராவீனஸ் க்ளுகோஸ் ட்ரிப், அப்புறம் சிலருக்கு ட்ரிங்கை நிறுத்தினா நிமோனியா வாறதுண்டு. அதையும் வேறு ஏதாவது இன்பெக்‌ஷன் இருந்தா அதையும் தடுக்க முன்னேற்பாடா ஆன்டிபயாடிக்ஸ் - அப்கோர்ஸ், பதட்டம் இல்லாம இருக்க லிப்ரியம், நரம்புகளுக்காக பி காம்ப்ளெக்ஸ் போன்ற ரொடீன் ட்ரீட்மெண்ட். தட்ஸ் ஆல். மூணு நாள்லே நீங்க வித்தியாசமா ஃபீல் பண்ணப் போறீங்க, பார்த்துக்கிட்டே இருங்க.''

ட்ரிங்க் இல்லாமல் முழுசாய் மூன்று நாட்களா? கடவுளே! இது ரொம்ப கஷ்டமான விஷயம் ஆயிற்றே!

டாக்டர் கோபித்துக்கொண்டாலும் பரவாயில்லை என்று த்யாகு கேட்டுவிட்டான்:

''த்ரீ டேஸ் வித் அவுட் ட்ரிங்க்ஸ் இருக்கறது சிரமமாக இருக்கும் டாக்டர். வந்து - அதனாலே... சாயங்காலம் தினம் இரண்டு பெக்காவது குடிக்க பர்மிஷன் கொடுங்களேன், ப்ளீஸ்!''

டாக்டர் நட்புடன் சிரித்தார்.



''இரண்டு பெக் குடிக்கணும்னா வீட்டுலேயே இருந்திருக்கலாமே த்யாகு. வொய் கெட் அட்மிட்டட் இன் நர்ஸிங் ஹோம் அட் ஆல்?''

''இல்லை... டாக்டர்... ப்ளீஸ்...!''

''அதப்பத்தி இப்பவே நினைச்சிக்கிட்டு அவஸ்தைப் படாதீங்க. ட்ரிங்க்தானே? தேவைப்பட்டா தரேன்... ஓ.கே..?''

பெட்டியில் பாட்டிலை மறைத்து வைப்பவர்களும் உண்டு என்பதால் அட்மிட் ஆன கையோடு த்யாகுவின் உடமைகள் அறையிலிருந்து அகற்றப்பட்டன. போட்டுக்கொண்டு வந்த சட்டை, பாண்ட்டைக் கழற்றச் சொல்லி நர்ஸிங் ஹோமின் கவுனை அணிவித்தார்கள். குடி வேண்டும் என்ற வெறியில் வெளியிலே செல்லாமல் கொள்ளாமல் பேஷண்டுகள் ஓடிவிடுவதைத் தடுக்க இந்த உடை மாற்றம்.

த்யாகு முறைப்படி சோதிக்கப்பட்டான். தலையிலிருந்து கால்வரை அங்கம் அங்கமாக இரண்டு டாக்டர்கள் மாஸ்டர் செக் அப் செய்த பின் எக்ஸ்ரே, ஈ.ஸி.ஜி. எடுக்கப்பட்டு, ரத்தம், மூத்திரம், மலம் பரிசோதனைச்சாலைக்கு அனுப்பப்பட்டு, கிட்னி, லிவர் ஃபங்ஷன் டெஸ்டுகளும் செய்யப்பட்டன.

உதவியாளர்கள் உதவியுடன் மேற்சொன்ன சோதனைகளைச் செய்து முடித்ததும் டாக்டர் ரெட்டி காம்போஸ் ஐ.வி. இஞ்செக்‌ஷனை த்யாகுவின் நரம்பினுள் செலுத்தினார். க்ளுகோஸ் ட்ரிப் ஆரம்பிக்கப்பட்டது.

''பெஸ்ட் ஆஃப் லக் த்யாகு - எவ்ரிதிங் ஈஸ் கோயிங் டு பி ஃபைன்... நிம்மதியாய்த் தூங்குங்க.'' சின்னக் குரலில் டாக்டர் பேசின பேச்சைக் கேட்டுக்கொண்டே த்யாகு ஆழ்ந்து உறங்கிப் போனான்.

முதல் இரண்டு நாட்கள் மூன்று முறைகள் தூக்க மருந்தை ரத்த நாளங்களில் செலுத்தி, லிப்ரியம், ஆன்டிபயாடிக், க்ளுகோஸ் ட்ரிப் கொடுத்ததில் இருபத்தி நாலு மணி நேரங்களில் பதினெட்டு மணிகளைப் பசி, தாகமின்றி, உறங்கியே த்யாகு கழித்தான்.

விழித்துக்கொண்டிருந்த ஒரு சில மணி இடைவெளிகளிலும் முழுசாய் கண்களைத் திறக்க முடியாதபடி ஒரு மயக்கம், மசமசப்பு, மந்தத்தனம்.

தொண்டையில் ஒரு வரட்சி, கை கால்களில் உதறல்.

சின்ன சப்தம்கூடத் தூக்கிவாரிப்போட வைத்தது. காதுக்குள் ஹிருதயம் தப்தப்பென்று துணி துவைத்தது.

உட்கார வைத்துச் சூடாக ஹார்லிக்ஸ் அல்லது போன்விடா கொடுக்கப்பட்டபோது அதை உடனடியாய் வாந்தி எடுத்த பிறகு அந்த மயக்கத்திலும் ''ஐ வாண்ட் எ ட்ரிங்க் - ஒரே ஒரு வாய் ப்ளீஸ்!'' என்று கிட்டத்தில் யார் நின்றாலும் அவரிடம் த்யாகு கெஞ்சினான்.

ஒரு சமயம் நன்றாய்த் தூங்கிக்கொண்டிருந்தவன், யாரோ அடித்து எழுப்பின மாதிரி உட்கார்ந்தான். உடம்பில் தெப்பமாக வேர்வை. இருட்டு. பகலா? இரவா?

நான் எங்கே இருக்கிறேன்?

எதுவும் புரியாமல் போக, பயம் மட்டும் நெஞ்சைக் கவ்வ - ''ஹா...! எனக்குக் கண் தெரியலை, ஒண்ணுமே தெரியலையே! ஹெல்ப்... ஆ.... அம்மா!'' என்று உரக்கக் கத்த, மறு நிமிஷம் நர்ஸ் ஓடி வந்தாள்.

பெரிய விளக்கைப் போட்டதும் கண்களை மூடிக்கொண்டு ''கூசறது... கண் எரியறது... எனக்கு ட்ரிங்க் உடனே வேணும்...'' என்று விடாமல் அலறியதும், நைட்ட்யூடி டாக்டர் உடனடியாக இன்னொரு காம்போஸ் ஐ.வி. கொடுக்க, பத்து நிமிஷங்களில் அவன் அடங்கினான்.

அந்த இரண்டு நாட்களும் ஏதேதோ கனவுகள்.

வசுக்குட்டி வருகிறாள்...

'சங்கிலிக்கும் சங்கிலிக்கும் சங்கிலி குண்டான்,

இந்த சாமியாரு பண்ணி போட்ட வெண்கல குண்டான்,

வெங்கலப்பன் தாலிக்கு எங்கேட போனே?

பாக்கு மரத்துலே பாக்கு இல்லே-

வெத்திலை கொடியிலே வெத்திலை இல்லே-

இந்த சந்திரத்து சோத்துலே உப்பும் இல்லே-

சங்கிலிக்கும் சங்கிலிக்கும் சங்கிலி குண்டான்-'



அண்ணா பாரு என்று முகவாயைப் பற்றிப் பாடுகிறாள். அபிநயம் பிடிக்கிறாள். சிரிக்கிறாள். ஓடி ஆடின குழந்தை திடும்மென்று ரத்த கலராகிப் போகிறாள். கோரப்பற்கள் வளர ஹோஹோ என்று ராட்சஸத்தனமாய்க் குதிக்கிறாள்.

த்யாகுவின் கழுத்தைக் கடிக்கிறாள். பீரிடும் ரத்தத்தைக் கோப்பையில் விட்டுக் குடிக்கிறாள்.

ஹா - என்ன பயங்கரம் இது!

அண்ணா குடி - ட்ரிங்க் - என்று இவனிடமும் நீட்டுகிறாள்...

தோ...ஓ...

ஈரத்துண்டுடன் அப்பா கிணற்றடியில் குளிக்கிறார்.

நக்ரோதோ நசமாத்ஸர்யம்-

புருஷோத்தமனைத் துதிப்பவர்களுக்குக் கோபம் வராது. ஆத்திரம் வராது. அசூயை வராது. சொல்லு... ம் சொல்லு - பேசிக்கொண்டே நகம் தொடையில் பதியக் கிள்ளுகிறார்.

கோபம் வராது... ஆத்திரம் வராது...

சொல்லு... படவா ராஸ்கல் சொல்லுடா... ம்.. குடிக்கிறயாமேடா? பேமானிப் பயலே... இவா சொல்றாளேடா... நீ நாசமாப் போவேடா... அழிஞ்சு போவேடா... நீ... நீ...

கிட்ட வந்து வாளியால் தலையில் நெத்துகிறார். முகம், கண், வாய் எல்லாம் ரத்தம்... சிவப்பு ரத்தம்...

முகம் தெரியாத யார் யாரோ சுற்றி நின்று கோப்பைகளை இவன் முன் நீட்டி ம்... குடி...குடி... என்கிறார்கள்.

அத்தனையும் ரத்தம்...

அம்மா ரத்தம்... வசு ரத்தம்... அவனுடைய ரத்தம்...

ஆ...ஆ... வேண்டா... ஆ...ம்...

இரண்டு நாட்கள் கத்தலும், வெறியும், கோர ஸ்வப்னங்களுமாய்க் கழித்தபின், மூன்றாம் நாள் த்யாகு உடம்பாலும் மனசாலும் அடங்கிப்போனான்.

முதல் முறையாகச் சூடான இட்லிகளில் இரண்டையும், அரை தம்ளர் பாலையும் அவனால் வாந்தி எடுக்காமல் சாப்பிட முடிந்தது.

மூன்றாம் நாளிலிருந்து காம்போஸ்... ஐ.வி. இரண்டாகக் குறைக்கப்பட்டது.

நாலாம் நாள் காலையில் சுமார் இரண்டு மணி நேரங்கள் போல த்யாகுவிடம் டாக்டர் ரெட்டி பேசினார்.

''நான் உங்க நண்பன் த்யாகு - உங்களுக்கு ஹெல்ப் பண்ணறத்துக்காகத்தான் நா பாடுபடறேன். இதை நீங்க நம்பணும்... உங்க ஒத்துழைப்பு இல்லாம என்னால எதையும் சாதிக்க முடியாது. அதனால ஐ மஸ்ட் ஹால் யுவர் ஃபுல் கோ-ஆபரேஷன். முதல் மூணு நாட்கள்தான் கஷ்டமான நாட்கள். அதை நீங்க தாண்டிட்டீங்க... இனிமே எல்லாம் ஈஸியா இருக்கும்... இந்தப் பழக்கத்தை, ஐ மீன் நோயை அடியோடு குணப்படுத்தணும்னா, இது உங்களுக்கு ஏன் வந்தது, எப்படி வந்ததுன்ற காரணத்தை நாம ஆராயணும்... நீங்க மனம் விட்டு எங்கிட்ட பேசினீங்கன்னா காரியம் ரொம்ப சுலபமா முடிஞ்சிடும்... புரியுதா த்யாகு? ஐ'ம் யுவர் ஃப்ரெண்ட்... நா டாக்டர்ங்கறதை மறந்திடுங்க... உங்களுக்கு உதவ ஆசைப்படற நாணா மாதிரி நானும் உங்க நண்பன்; அண்டர்ஸ்டாண்ட்? நௌ, லெட் அஸ் டாக் ஃப்ராங்க்லி. முதல்லே உங்களைப் பத்திப் பேசலாமா? உங்களைப்பத்தி நீங்களே என்ன நினைக்கிறீங்க? நீங்க சாதுவா, முரடனா? அதிகம் பேசறவரா, இல்ல ரிஸர்வ்ட் டைப்ஆ? மனசுலே வக்ரங்கள் உண்டா? பொய் சொல்றது உண்டா? சின்ன வயசுலே நீங்க எப்படி இருந்தீங்க? சாப்பாட்டுலே எந்த அயிட்டம் ரொம்பப் பிடிக்கும்? பிடிக்காத சமாசாரங்கள் என்னென்ன? உங்க மூணு, நாலு வயசுலே நடந்த விஷயங்கள் ஞாபகத்திலே இருக்கா? ஷால் வி ஸ்டார்ட் ஃப்ரம் யுவர் தேர்ட் இயர்? என்னெல்லாம் நினைவு இருக்கு? கமான், ஸ்பீக்... நா உங்க நண்பன். ஸோ பேசுங்க த்யாகு... மூணு வயசு த்யாகுவைப் பத்திப் பேசுங்க...''

-சீரான குரலில் ஹிப்னடைஸ் செய்யும் விதமாய் டாக்டர் பேசினார்.

அறை அமைதியாக இருந்தது. காலைவேளை இதமாக இருந்தது. ஜன்னல் வழியாகப் பார்க்கும்போது வியூகம் அமைத்துக் கொண்டு கடல் நாரைகள் பறப்பது தெரிந்தது.

எங்கே ஆரம்பிப்பது?

முதல் முதலாய் நினைப்பில் பதிந்தது எது? யார்?



அம்மா... அந்த அழகான முகம்... தாழம்பூ நிறம்... சாட்டை பின்னல்... நாணா சொன்ன மாதிரி ரவிவர்மா ஓவியம் போன்ற அம்மா.

மடியில் படுத்திருக்கும் த்யாகுவுக்கு அம்மாவின் முகம் கீழ் கோணத்திலிருந்து தெரிகிறது. மழமழவென்ற தாவாங்கட்டை. அதில் பளிச்சென்று பூசப்பட்ட மஞ்சள்.

நேக்கு தம்பிப் பாப்பா வேணும்மா... குண்டா, கப்புணி ஆத்துலே பொறந்திருக்கற மாதிரி...

நெஞ்சோடு அணைத்துச் சிரிக்கும் அம்மா...

''ஓ! ஐ லவ் மை மதர் டாக்டர்...''

அப்புறம், ஒரு நாள் அம்மா குனிந்து பரிமாறிக் கொண்டிருக்கிறாள். கதவோரமாய் நான்... திடும்மென்று அம்மாவின் பின்னல் இலையில் விழ, அப்பா விழிகளை விழித்துக்கொண்டு உறுமுகிறார்:

தேவடியாநாயே...

அரிவாள்மனை பின்னலை இரண்டாக்குகிறது... அறுத்தெறியப்பட்ட பின்னலைத் தலைகாணிக்கு அடியில் யாருக்கும் தெரியாமல் வைத்துக்கொண்டு ராத்திரி பூராவும் அழுதேன், டாக்டர்...

தோசை விண்டு போயிற்று என்பதால் விறகுக் கட்டையால் அப்பா அடிக்க, நெற்றியில் ரத்தம் வழிய நிற்கும் அம்மா...

கொதிக்கும் ரசம் முகத்தில் பட்டதில் கொப்பளங்களுடன் ஸ்...ஸ்... என்று பின்கட்டில் அவஸ்தைப்படும் அம்மா...

ந க்ரோதோ ந ச மாத்ஸர்யம்

ந லோபோ நாசுபாமதி...

புருஷோத்தமனை ஆராதிப்பவனுக்குக் கோபம் இல்லை. ஆத்திரம் இல்லை...

பொய்.... பொய்... பொய்... அப்பா சொன்னது பொய், ப்ளடி லை - அவரே பொய்யானவர்... ஐ ஹேட் மை ஃபாதர்... ஐ ஹேட் ஹிம் டாக்டர்...''

சன்னக்குரலில் நிறுத்திநிறுத்தி மனசின் அடிவாரத்தில் புதைந்துபோன சம்பவங்களை நினைவுக்குக் கொணர்ந்து

பேசிக்கொண்டு வந்தவனின் த்வனி சட்டென்று மாறிப்போனது. குரலில் ஒரு துவேஷம் வெறி.

''ஐ ஹேட் தட் ப்ளடி மேன்.'' என்று திரும்பச் சொன்னபோது மூளைக்குள் புழு ஒன்று நெளிந்து குடைய முற்பட்ட வேதனை உண்டாக - ''வலிக்கிறது டாக்டர். மண்டையைக் குடையறது. ப்ளீஸ்! கிவ் மீ எ ட்ரிங்க்... கொஞ்சமாய், ஒரே ஒரு பெக், ப்ளீஸ்...!'' - த்யாகு உரக்கக் கத்த முற்பட்டான்.

## 17

''குட் மார்னிங் த்யாகு...!''

''குட் மார்னிங் டாக்டர்!''

''ஹௌ டு யு ஃபீல் டுடே?''

''பெட்டர்!''

''பெட்டர்னா?''

என்னவென்று சொல்லி அவருக்கு விளக்குவான் த்யாகு?

கண்களைப் பிரிக்கும்போது தினமும் ஆளை அமுக்கும் மசமசப்பு இல்லை, மூளையைச் சுற்றிப் படர்ந்திருக்கும் போர்வையின் அழுத்தம் இல்லை. முக்கியமாய் நேற்று இரவு என்னென்ன பேசி, எப்படியெப்படி நடந்துகொண்டேனோ என்ற உதறல் இல்லை என்பதையெல்லாம் இவரிடம் எப்படி எடுத்துச் சொல்லுவான்?

ஒருவிதத் தயக்கத்துடன் த்யாகு நிற்க, ஐ அண்டர்ஸ்டாண்ட் என்கிற தினுசில் டாக்டர் ரெட்டி சிரித்தார்.

''இன்னிக்குச் சில சைகலாஜிகல் டெஸ்ட் பண்ணிப் பார்க்கலாம்னு நினைக்கிறேன். என்ன சொல்றீங்க?... நீங்க ஏன் குடிகாரனா மாறினீங்கங்கறதைத் தெரிஞ்சிக்க உங்க இளமைப் பிராயத்தைப் பத்தி நிறைய கேக்கறேன் இல்லையா, அதே மாதிரி உங்க இப்பத்திய மைண்டைப் புரிஞ்சிக்க இந்த டெஸ்டுகள் உதவும். ஷால் வி ஸ்டார்ட்?''



கையோடு கொணர்ந்திருந்த பேப்பர் சுருள்களை டாக்டர் ரெட்டி படுக்கை மேல் வைத்தார். ''முதல்ல வி வில் ஸ்டார்ட் வித் அஸோஸியேஷன் ஆஃப் வோர்ட்ஸ் டெஸ்ட்ஸ். நா ஒரு வார்த்தை சொல்லுவேன். அதைக் கேட்ட உடனே உங்க மனசுல தோணற வார்த்தைய நீங்க சொல்லணும். யோசிச்சுப் பதில் சொல்லக்கூடாது. சின்னக் குழந்தைகிட்ட கேக்கற மாதிரி என்ன கேள்வி இதெல்லாம்னு சலிக்காம பதில் சொல்லுங்க, ஓ.கே.?'' என்றவர், ''ரிலாக்ஸ் த்யாகு'' என்று சொல்லிச் சிரித்துவிட்டு, ''வானம்?'' என்றார்.

த்யாகு சட்டென்று, ''மேகம்'' என்றான்.

''குட் - ரோஜா?''

''முள்.''

''தாகம்?''

''விஸ்கி.''

''பணம்?''

''திமிர்''

''செக்ஸ்?''

''அசிங்கம்.''

மேற்கொண்டு பத்து வார்த்தைகள் போல் டாக்டர் ரெட்டி கேட்க, பக்கத்தில் நின்ற உதவியாளர் அத்தனையும் குறித்துக் கொண்டார்.

''இப்ப ஸெண்டன்ஸ் கம்ப்ளீஷன் டெஸ்ட் - நா ஒரு வாக்கியம் சொல்லுவேன், நீங்க அதைப் பூர்த்தி செய்யணும் - நெள - அந்தப் பெண் ஒரு ஓரமாய் உட்கார்ந்து?''

த்யாகு ஒரு கணம் யோசித்தான். அப்புறம் ''குலுங்கிக் குலுங்கி அழுதாள்'' என்றான்.

''அவள் அற்புதமாகப் பாடிக் கொண்டிருந்தபோது உள்ளே நுழைந்த அவன்...?''

''போதும் - நிறுத்து என்றான்.''

''தாம்பத்தியம் என்பது?''

''சண்டை சச்சரவுகள் நிறைந்தது.''

இன்னும் நாலைந்து வாக்கியங்களை த்யாகு பூர்த்தி செய்த பின் டாக்டர் ஆறு, ஏழு எண்களை வரிசையாகக் கூறி, அவனைத் திருப்பிச் சொல்ல வைத்து மெமரி டெஸ்டை முடித்தார்.

''கடைசியா டி.ஏ.டி. டெஸ்ட். இந்தப் படங்களைப் பாத்திட்டு, உங்களுக்குத் தோணின விதத்துலே கதை சொல்லுங்க பார்க்கலாம்...''

டாக்டர் எட்டு படங்களைக் காண்பித்தார். ஒன்றில் ஒரு ஆண், பெண்... ஒன்றில் தலை விரித்துக்கொண்டு பெண் மட்டும்; இன்னொன்றில் இரண்டு குழந்தைகள் - அத்தனையிலும் வித விதமான முக பாவங்கள்.

ஒவ்வொரு படத்துக்கும் ஒவ்வொரு பின்னணியை உருவாக்கிக் கதை சொல்வது சிரமமாக இருக்க, மூன்றுக்குச் சொல்லிவிட்டு அப்புறம் த்யாகு இருப்புக்கொள்ளாமல் தவிக்கத் தொடங்க, டாக்டர் உதவியாளருக்குச் சைகை காட்டினார்.

உதவியாளர் பேப்பர் சுருள்களையும், குறிப்புகளையும் எடுத்துக்கொண்டு வெளியே போனார்.

''இந்த டெஸ்ட்டுலேந்து உங்களுக்கு என்ன புரிஞ்சிது டாக்டர்?''

''நிறையப் புரியுது த்யாகு - பட் ஐ வோண்ட் டெல் யு எனிதிங் நௌ. இன்னும் உங்ககிட்ட பேசவேண்டியது பாக்கி இருக்கு. அதையும், வேறு சில டெஸ்ட்டுகளையும் முடித்த பிறகு விளக்கமா அத்தனையும் நானே சொல்வேன். இப்ப நீங்க டயர்டா இருப்பீங்க... ப்ரேக் ஃபாஸ்ட் சாப்டாச்சி இல்லே? ஒரு கிளாஸ் ஜூஸ் தரச் சொல்றேன். குடிச்சிட்டு, காம்போஸ் போட்டுகிட்டு ஜம்முனு தூங்குங்க. ஈவ்னிங் பார்க்கலாம்.''

டாக்டர் ரெட்டி போய்விட்டார்.

உதவியாளர் ஜூஸ், இன்ஜெக்ஷன் சகிதம் வந்தார்.

''இன்னிலேந்து உங்க மருந்துகளைக் குறைக்கப் போறோம் த்யாகு. கொஞ்சம் கொஞ்சமா டேப்பர் பண்ணச் சொல்லிட்டார் டாக்டர். தட் மீன்ஸ் யூ ஆர் வெல் அட்வான்ஸ்ட் இன் தி பாத் ஆஃப் ரிகவரி...''

உதவியாளரை பேசினதைக் கேட்டுக்கொண்டு த்யாகு தூங்கிப்போனான்.

முதல் சில நாட்கள் மாதிரி பயங்கரக் கனவுகள், ஆளை உலுக்கும் கற்பனைகள் எதுவும் இல்லாமல் - நிச்சிந்தையாய் அன்று



உறங்க முடிந்ததால் மதியம் இரண்டு மணிக்குக் கண் விழித்தவன், வித்யா மணக்க மணக்கச் சமைத்து அனுப்பியிருந்த சாப்பாட்டை ரசித்துச் சாப்பிட்டான். வெயில் கொஞ்சமும் தெரியாமல், சோலையாய்க் கவிழ்ந்திருந்த மரங்களூடே நடந்தான். அங்கேயே ஒரு மரத்தடி மேடையில் உட்கார்ந்து கடந்த ஆறு நாட்களாய் எப்படி ஒரு சொட்டுக் குடி இல்லாமல் தன்னால் இருக்கமுடிகிறது என்று ஆச்சரியப்பட்டான்.

முதல் மூன்று, நான்கு நாட்கள் ட்ரிங்க் இல்லாமல் தொண்டை வரண்டு போனதும், உடம்பு முறுக்கிக் கொண்டதும், கத்தியதும், குதித்ததும் நிஜம்தானே!

அப்புறம் இந்த இரண்டு நாட்களாய் அந்தத் தவிப்பும், ஆர்ப்பாட்டமும் சட்டென்று எப்படி அடங்கிப்போயின?

டாக்டர் சொன்ன மாதிரி முதல் மூன்று நாட்கள்தான் கஷ்டமானவையா?

ஆனாலும், குடி வேண்டும் என்று ஏன் அலறமாட்டேன் என்கிறேன்!

மருந்துகளின் உதவியா, இல்லை மனசின் வலிமையா?

எது காரணம்?

யோசனையில் ஆழ்ந்திருந்தவன் டாக்டர் ரெட்டி அருகில் வந்து நின்றதைக் கவனிக்கவில்லையாதலால் 'ஹலோ தேர்' என்று அவர் சொன்னது அவனைத் தூக்கிவாரிப்போட வைத்தது.

டாக்டர் வந்துவிட்டாரா?

மணி நாலாகிவிட்டதா?

அத்தனை நாழியாகவா இங்கு உட்கார்ந்திருக்கிறோம்?

அவசரத்துடன் த்யாகு எழ முற்படவும், டாக்டர் அவன் தோளில் கை வைத்து உட்கார் என்று அழுத்தினார்.

''இங்கயே ப்ளெஸண்டா இருக்கு. வி வில் ஸிட் ஹியர் அண்ட் டாக்'' என்றபடி அவரும் த்யாகு பக்கத்தில் உட்கார்ந்தார்.

இரண்டு நிமிஷங்கள் மௌனம்.

மஞ்சள் நிறக் குட்டியூண்டு குருவி ஒன்று அடர்த்தியாய் இருந்த கானா வாழைச் செடியின் பூ மேல் உட்கார்ந்து சின்ன அலகால் அதன்

அடிப்பக்கத்தில் கொத்தித் தேனைக் குடித்துவிட்டு, அடுத்த பூவிடம் பறந்தது.

''வெல்...?''

த்யாகு டாக்டர் பக்கம் திரும்பினான்.

''உங்களைப் பத்தி நீங்க சொன்ன விவரங்கள் பத்தாதுனு எனக்குத் தோணுது த்யாகு - தயக்கமில்லாம உங்களைப் பத்தியே நீங்க இன்னும் பேசணும், தட் வில் ஹெல்ப் மீ... உங்களையே நீங்க விமர்சிக்கப் பாருங்களேன்...''

என்னையேவா? நானேவா?

த்யாகு வரட்சியாய்ச் சிரித்தான்.

''என்னைப் பத்தி புதுசா சொல்ல ஒண்ணுமே இல்ல டாக்டர். தெரிஞ்சதெல்லாம் ஏற்கெனவே சொல்லிட்டேனே...''

''நாட் இஸீப் த்யாகு... நீங்க ரொம்ப சாதுவா, நல்ல பிள்ளையா இருந்திருக்கீங்கனு புரியுது... இன்னும் ஏதாவது சொல்லுங்களேன்... ப்ளீஸ் ட்ரை...''

த்யாகு யோசிக்கிற பாவனையாய் உட்கார்ந்திருந்துவிட்டு நிதானமாகப் பேச முற்பட்டான்:

''நா சாது மட்டும் இல்ல டாக்டர். ரொம்ப பயந்தாங் கொள்ளிகூட! என் ஃப்ரெண்ட்ஸ் எல்லாம் என்னைப் பொட்டைனு தான் கூப்பிடுவா... நா உண்டு, என் புஸ்தகங்கள், படிப்பு உண்டுனு இருந்ததைக்கூட கேலி பண்ணுவா. இன்பாக்ட், சின்ன வயசுலே 'ஒருநாள் இல்லாட்டா ஒரு நாள் நீ புஸ்தகப் புழுவாவே மாறிடுவேடா'னு நாணாவும், காசியும் கேலி பண்ணதை அப்படியே எடுத்துண்டு எத்தனை நாட்கள் பாதித் தூக்கத்திலே அலறி இருக்கேன் தெரியுமா? நடு ராத்திரி எழுந்தா, உடம்பெல்லாம் கருக்கருக்கமா கருங்கிப் போய் புழு உடம்பாட்டம் ஆயிட்டாப்பல தோணும்... நடுங்கிப் போயிடுவேன்... விடிஞ்சப்புறம்தான் அந்தப் பயம் தெளியும்... வாட் எ டாம் இடியாடிக் ஃபூல் ஐ வாஸ் பீன்...''

தன் சின்ன வயசு அசட்டுப் பயத்தை இப்போது எண்ணி ஒருவிதச் சிரிப்போடு பேசினவனின் சிரிப்பில் டாக்டரும் பங்கெடுத்தார்.



''இந்த பயத்துக்கு அடிப்படைக் காரணம் என்னனு நீங்க சிந்திச்சதுண்டா த்யாகு?''

த்யாகு கொஞ்சம் யோசித்தான். பிறகு ''இல்லை'' என்று உதட்டைப் பிதுக்கி, ''ஸ்வபாவமா இருக்கலாம்'' என்றான்.

''போகட்டும், இதுக்குப் பதில் சொல்லுங்க. சின்ன வயசுலேந்தே நீங்க படிப்பிலே கெட்டிக்காரனா இருந்திருக்கீங்க - க்ளாஸ்லே பர்ஸ்ட், பார்க்கறத்துக்கும் நல்லா இருப்பீங்கன்னு நாராயணன் சொல்றார். அப்படி இருக்கறப்ப, நா புத்திசாலி, நா அழகுனு ஃப்ரெண்ட்ஸ் மத்தியிலே உங்களுக்குக் கர்வம் வந்ததில்லியா த்யாகு? யோசிச்சுச் சொல்லுங்க... எப்பவும் இப்படிப் பயந்துகிட்டேதான் இருப்பீங்களா? படிப்புக்காக மேடையேறிப் பரிசு வாங்கினப்ப கூடவா நா புத்திசாலினு திமிர் உண்டாகலை?''

''திமிரா? கர்வமா? காட் - அதெல்லாம் கடுகத்தனை கூடக் கிடையாது டாக்டர். இருந்தா அப்பா திமித்திடுவாரே! 'மா குரு தனஜன யௌவன கர்வம்'ங்கற பஜகோவிந்த ஸ்லோகத்தை ஒரு நாளைக்கு நூறு தரம் சொல்லி, 'பணம், அழகு அந்தஸ்துனு கர்வப்படாதே - இதெல்லாம் க்ஷணத்துலே அழியக் கூடியது'னு எனக்கு எத்தனை அறிவுரை வழங்கின மனுஷன் அவர்! அவர் முன்னால கர்வமாவது, திமிராவது...ஓ! நோ...''

திடும்மென்று எதையோ நினைத்துக்கொண்டு த்யாகு சிரித்தான். டாக்டர் பேசாமல் இருக்க, அவனே தொடர்ந்தான்:

''இதுலே வேடிக்கை என்னான்னா, கர்வமா இருக்காதேனு பிறத்தியாருக்கு உபதேசம் பண்ணினவருக்கு உடம்பு முழுக்க கர்வம். தான்ங்கற அகம்பாவம். என்னைப் போல படிப்பாளி உண்டா, புத்திசாலி உண்டானு வெளிப்படையா மார் தட்டிப்பார்... இந்த அகம்பவாம் காரணமாத்தான் அம்மா அவரைவிட அழகா சமர்த்தா இருந்தது பிடிக்காம அம்மாவை அவர் கரிச்சுக் கொட்டினார் டாக்டர்... அம்மா எத்தனை அழகா ஓவியம் மாதிரி இருப்பா தெரியுமா? பாடினா இன்னிக்கெல்லாம் கேட்டுண்டே இருக்கலாம்... ஆனா இந்த மனுஷன் விடுவாரா? 'தேவடியா வீடு மாதிரி என்ன பாட்டு எப்பப் பாத்தாலும்'னு கத்துவார். யாரு? அம்மாவா? தேவடியாளா? அவளுக்கு அதெல்லாம் சுத்தமா தெரியாது டாக்டர்... தேவடியாத்தனமெல்லாம் சித்திக்குத்தான் அத்துப்படி... அவ போட்ட வேஷமும் நீலித்தனமும் - சே டிஸ்கஸ்டிங், அத்தனையும்

அவருக்கு வேண்டியிருந்ததால வாய மூடிண்டு அவளே சரணம்னு இருந்தார். வெட்கங்கெட்ட மனுஷனுக்கு ஏத்த விவஸ்தை கெட்ட மனுஷி...''

மூச்சு பெருமூச்சாக வெளிவர, கண்களை மூடிக்கொண்டு எங்கோ நினைப்புகள் ஆழ்ந்துவிட, அடிக்குரலில் பேசும் த்யாகுவின் தோளில் கை வைத்த டாக்டர், ''யாரைத் திட்டுறீங்க த்யாகு? உங்க அப்பா, சித்தியையா?'' என்று வினவ. த்யாகு கண்களைத் திறக்காமலேயே ''ஆம்'' என்று தலை ஆட்டிவிட்டு, ''எ டெரிபிள் பிட்ச்'' என்றான் திரும்ப.

''அவ ஒட்டின மூஞ்சியும், வழுக்கை விழுந்த தலையும்! காட்! எங்கம்மா இருந்த இடத்துலே அவளா! இவகிட்ட அந்த மனுஷன் மயங்கிப் போனாரே, அது எப்படி டாக்டர்? தேவடியாத்தனம் பண்ணிப் பண்ணித்தானே அவரைக் கைக்குள்ள போட்டுண்டா? பட்டப்பகல்லே, நேரங்கெட்ட வேளைலே, விவஸ்தை கெட்டத்தனமா... கடவுளே! அவ ஒரு அசிங்கமான மனுஷி, நடத்தை கெட்டவ...''

ரொம்ப வருஷங்களாக மனசில் புதைந்து தன் பாரத்தால் வேதனைப்படுத்திக் கொண்டிருக்கும் சமாசாரங்களைக் கொட்டித் தீர்த்துவிடும் வெறி அந்தப் பேச்சில் காணப்பட்டது.

''எங்கப்பாவருக்கு உபதேசம் பண்ணுவார்னு சொன்னேனே, அதுக்கு இன்னொரு எக்ஸாம்பிள் இந்த செக்ஸ். 'நாரிஸ்தனபர நாபீதேஸம் - த்ருஷ்ட்வா மா கா மோஹா வேஸம், - ஏதன்மாம்ஸவசாதி விகாரம், மனசி விசிந்த்ய வாரம் வாரம்' - ஸ்திரீயினுடைய ஸ்தனம், நாபி ஆகிய இடங்களைப் பார்த்து மோகிக்காதே, அத்தனையும் வெறும் மாமிசம் என்று அடிக்கடி எண்ணிப் பார்' -னு மேடைலே பிரமாதமா பிரசங்கம் பண்ணுவார். ஆனா? ஆனா? வீட்டுல அதுக்கு நேர் மார். வசக்குட்டி படுத்துண்டு இருக்கறப்போ, செத்தப்போக்கூட நாய் மாதிரி இதுக்குத்தானே அலைஞ்சார்? இந்த அலைச்சலுக்கு சித்தியோட தேவடியாத்தனம் ஏத்தமாதிரி போக, இரண்டு பேருக்கும் கொண்டாட்டம். அவ நிஜம்மா ஒரு வேசி... அப்பட்டமான வே...''

அதிகமாய்ப் பேசிவிட்டோம் என்ற உணர்வு எழ, சட்டென்று த்யாகு பேச்சை நிறுத்தினான். பேந்தப்பேந்த விழித்தான். அப்புறம்



தன் மேலேயே கோபம் வந்த நினுசில் நெற்றியில் ஓங்கி அறைந்துகொண்டான். வெடித்துக்கொண்டு எழுந்த அழுகையைச் சிரமப்பட்டு அடக்க முயற்சித்தான்.

டாக்டர் இருக்கையை விட்டு எழுந்தார். பத்தடி இப்படியும் அப்படியும் நடந்தார். துடிக்கும் உதடுகளும், நடுங்கும் கைகளுமாய் அமர்ந்திருந்த த்யாகுவின் தோளில் தட்டிக் கொடுத்து ''கமான் ரிலாக்ஸ்... நீங்க தப்பா எதுவும் பேசிடலை. இவ்வளவு பதட்டப்பட இதுலே என்ன இருக்கு?'' என்று மெதுவான த்வனியில் பேசி அவனை ஆசுவாசப்படுத்தினார்.

சில நிமிஷங்களில் த்யாகு அமைதியாகிவிட்டான் என்று புரிந்த பிறகு அவன் எதிரில் வந்து நின்றுகொண்டார்.

''உங்க சித்திய நீங்க தப்பான கோணத்துலேந்து பார்க்கக் கத்துக்கிட்டீங்கன்னு நா நினைக்கிறேன் த்யாகு... அவங்களை, அவங்க சிரமங்களை நீங்க சரியாய்ப் புரிஞ்சிக்காமலேயே ஒரு தீர்மானத்துக்கு வந்து, அவங்களை வெறுக்கக் கத்துக்கிட்டீங்கனே எனக்குத் தோ...''

அவரை முடிக்கவிடாமல் த்யாகு சற்றே உயர்ந்த குரலில் பேசினான்:

''நோ... டாக்டர்... நீங்கதான் சரியாகப் புரிஞ்சிக்கலை... அவளுக்கு என்னைக் கட்டோட பிடிக்காது. சமயம் கிடைச்சப்ப எல்லாம் அப்பாகிட்ட புகார் பண்றதுலே ராஜாத்தி! சரியான வேஷதாரி, நேர்மை இல்லாதவ, அவ ரொம்ப கெட்டவ டாக்டர், ஹானஸ்ட்லி...''

''எதனால கெட்டவங்கனு சொல்றீங்க? அப்பாகிட்ட உங்களைப் பத்திக் கோள்மூட்டிக் கொடுத்ததாலயா? இல்ல, புருஷன் கேட்டப்ப எல்லாம் அவரைத் திருப்தி பண்ண முனைஞ்சதாலயா? எதனால த்யாகு?''

''...............''

''லிஸன் த்யாகு. உங்கம்மா ஒரு பேரழகினு நீங்க, நாராயணன் எல்லாரும் சொல்றீங்க... உங்கம்மா கெட்டிக்காரி, சமர்த்துனும் சொல்றீங்க... அந்த மனுஷி இருந்த இடத்துக்கு உங்க சித்தி வந்திருக்காங்க. ரைட்! முன்கோபக்காரக் கணவன், பதினாறு வயசுப்

பிள்ளை, இவங்களோட அழகான, புத்திசாலி மூத்த மனைவி வேற... திங்க் ஆஃப் ஹர் பொஸிஷன் த்யாகு... அவங்க அழகும் இல்லே, பணக்காரியும் இல்லே, பத்தாததுக்கு ரெண்டாம் தாரம்... இந்த நிலைலே உங்க சித்தி புருஷனைத் தன் பக்கம் கவரணும்னா என்ன பண்ணுவாங்க, சொல்லுங்க? அவங்களுக்கு இருக்கிற, தெரிஞ்ச, ஒரே வழி செக்ஸ்தானே? உங்கப்பாவுக்கு செக்ஸ்லே அதிக நாட்டம் இருந்ததுனு நீங்க பேசறதிலேந்து நல்லா புரியுது... ஸோ... கணவனைத் தன்கிட்ட இழுக்கறத்துக்கு உங்க சித்தி அவருக்குத் தேவைப்பட்ட விதத்திலே நடந்துகிட்டதுலே என்ன தப்பு? தாம்பத்தியத்துலே செக்ஸ் ஒரு முக்கியமான விஷயம் த்யாகு... உங்க சித்தி உங்கப்பாகிட்டதானே இப்படி நடந்துகிட்டாங்க? கணவன் கிட்டத்தானே? இதுலே அசிங்கம் என்ன? உங்கப்பாவை விரோதிச்சுக்கிட்டா அவங்களுக்குப் போக்கிடம் ஏது? இல்லாமை யாலத்தானே ரெண்டாந்தாரமா வாழ ஒத்துக்கிட்டாங்க? உங்கப்பாவைப் பகைச்சுக்கிட்டு உங்கம்மா வாழ்ந்தாப்பல அடியும், உதையுமா வாழறதைவிட உங்க சித்தி நடந்துகிட்ட முறை சரின்னே எனக்குத் தோணுது... தனியா அமர்ந்து நிதானமா யோசனை செய்து பாருங்க த்யாகு. நா சொல்ற கோணம் உங்களுக்கு நிச்சயம் புரியும்.''

த்யாகு பதில் ஏதும் பேசவில்லை.

நிஜமாகவா?

சித்தி உண்மையில் தேவடியாத்தனம் பண்ணவில்லையா?

அப்பாவுக்குத் தேவைப்பட்ட தினுசில் நடந்து கொண்டு அவரை ஒரு நல்ல மனைவியாகத் திருப்தி பண்ண முயன்றாளா?

நிஜமாகவா?

மூடியிருந்த கண்களைத் திறந்தபோது சூரியன் அஸ்தமன மாகத் தயாராகி வானத்துக்கு சிவப்பு கலந்த மஞ்சள் நிறத்தைப் பூச ஆரம்பித்தான்.

சட்டென்று காற்றில் குளிர் கலந்துவிட்ட மாதிரி தோன்றியது.

அவன் பார்வையை நிமிர்த்தினான்.

''அப்பா, அம்மா, சித்தி இவங்களைப் பத்தி எல்லாம் நிறைய சொல்லிட்டீங்க. பட் உங்க கங்காவைப் பத்தி நீங்க எதுவுமே சொல்லலியே, வொய்? உங்க மாரிட் லைஃப் பத்திக் கொஞ்சம் பேசலாமா த்யாகு? ஆர் யு ரெடி?''



கங்கா பற்றியா?

ஓ... நோ...

வேண்டாம்... என்னால அது குறித்து வெளிப்படையாகப் பேசமுடியாது...

பின்மண்டையில் புழு நெளிய ஆரம்பிக்க எழுந்து நின்றான்.

''ஐ ஃபீல் கோல்ட் - உள்ளே போலாமா?'' என்றான்.

டாக்டர் அசையாமல் இருக்கவே, அவர் கையைப் பற்றிக்கொண்டு, ''ப்ளீஸ் டாக்டர்! ஒரு வாரமா உங்க பேச்சுக்குக் கட்டுப்பட்டுக் குடிக்காம இருந்துட்டேன். ஆனா, இப்போ, நெர்வ்ஸ் ரொம்ப படபடப்பா இருக்கு. காதுக்குள்ள ஹோய்னு சத்தம்... ப்ளீஸ்! ஒரே ஒரு பெக் விஸ்கி கொடுங்களேன். ப்ளீஸ்!'' என்ற போது த்யாகுவின் குரல் கெஞ்சலாய், மிகமிகச் சன்னமாய் ஒலித்தது.

## 18

''கங்கா...!''

''............''

''க...ங்க்...கா...ஆ...!''

''ப்ச்... என்ன?''

''இங்க வா கங்கா...''

''எதுக்கு?''

''இங்க வந்தாதான் சொல்வேன்... வாம்மா...!''

''என்னன்னா, தொணதொணனு படிக்கவிடாம?''

''அப்படி என்ன அத்தனை சுவாரஸியமா? ம்...?''

''ஒரு எட்டெழுத்து நடிகையைப் பத்தி நீளமா கிசுகிசு போட்டிருக்கான். ரெண்டு தரம் படிச்சுட்டேன். இன்னும் யாருனு புரியலை...''

''முதல்ல அந்தச் சனியனைத் தூக்கி எறிஞ்சுட்டு இங்க வா கங்கா... தங்கத் தாம்பாளம் மாதிரி நிலா காயறது... லைட்டை அணைக்கட்டு...''

''அணைக்கட்டு?''

''இந்த நிலா வெளிச்சத்தையும், இதம்மா வீசற காவேரி காத்தையும் அனுபவிக்கலாம் வாயேன். பாரதி என்ன சொல்லி இருக்கார் தெரியுமா கங்கா? 'சந்திரனொளியில் அவளைக் கண்டேன், சரணம் என்றே புகுந்து கொண்டேன்'னு மஹா சக்தியைப் பத்திப் பாடறார் பாரு - அடேயப்பா! கவிஞர்னா அவர் கவிஞர். நீ குயில் பாட்டு படிச்சிருக்கியோ? அதுலே ஒரு இடத்...''

''ஐயே... இந்த பாரதியையும், இன்னும் எவனெவன் பேரையோ அடிக்கடி சொல்றேளே, இவாளையும் விட்டா உங்களுக்கு உலகமே கிடையாதான்னா? எனக்கு வாண்டாம்பா பாரதியும் குயில் பாட்டும்... நிலா வெளிச்சத்துலேனு நீங்க ஆரம்பிச்சதும் நா வேற என்னமோதான் ஆசைப்படறேளாக்கும்னு நினைச்சுட்டேன். அத விடுங்கோ... இந்த எட்டெழுத்து நடிகை யாராய் இருக்கலாம்? இவ என்ன பண்ணாளாம் தெரியுமா? அவுட்டோர் ஷூட்டிங்குக்குப் போன இடத்துலே... ஹையோ, ஹையோ! மஹா வேடிக்கை! என்னன்னா, கேக்கறேளா?''

கல்யாணமாகி ஒரு மாசம் பூர்த்தி ஆகறதுக்குள்ள இந்த மாதிரி நிறைய சம்பாஷணைகள்... அவ டேஸ்ட் வேற, என்னது வேறனு அன்னிக்கே புரிஞ்சுபோயிட்டது என்னமோ வாஸ்தவம்தான், ஆனா அதுக்காகக் கல்யாணம் பண்ணிண்டப்புறம் எனக்கு உன்னைப் பிடிக்கலைன்னு தள்ளிடறது எப்படி சாத்தியமாகும் டாக்டர்?

''இங்க பாருங்கோ...''

''என்னம்மா?''

''நா இந்தாத்துலே தொடர்ந்து இருக்கணும்னா, முதல்ல உங்க சித்தியக் கொஞ்சம் வாய மூடிண்டு இருக்கச் சொல்லுங்கோ... டஞ்சன் மாதிரி சமையக்கட்டுலே வேலை பண்ணணும்னு இவளுக்குத் தலை எழுத்து, எனக்கு என்ன? இந்தா, இந்தப் பாலைக் காய்ச்சு, தோசை வாருனு அதிகாரம் பண்றதெல்லாம் எங்கிட்ட வாண்டாம். அப்புறம் உங்க தங்கைகள் - சரியான திருடிகள். நா அந்தண்டை போனா என் ஸ்னோவை எடுத்து அப்பிக்கறதுகள்; என்



சென்ட் பாட்டிலை எடுக்கறதுகள்... அதுகளையும் கண்டிச்சு வையுங்கோ... இந்த மாதிரி பறக்காவெட்டித்தனமெல்லாம் எனக்குப் பிடிக்காது. பேசாம எங்காத்துக்குப் போயிட்டா என்ன? உங்க லீவு முடியற வரைக்கும் அங்கயே இருந்துட்டா என்ன? ம்?''

இந்தப் பேச்சை அவ பேசினப்ப எங்களுக்குக் கல்யாணமாகி ஒரு வாரம்கூட ஆகி இருக்கலை டாக்டர். இவளையும் சமாளிக்க, சித்தி, அப்பாக்கும் ஈடுகொடுக்கறதுக்குள்ளே திண்டாடிப் போயிட்டேன்.

''கங்கா...!''

''கங்கம்மா...?''

''உனக்காக ஆபீஸ்லேந்து சீக்கிரம் ஓடி வந்துட்டேன், பத்தியா?''

''வர்றப்போ பார்த்தசாரதி மாமியாத்துலேந்து இந்த மாசப் பேசும்படமும், பொம்மையும் வாங்கிண்டு வந்தேளா?''

''ஓ! ஸாரிம்மா, மறந்து போயிடுத்து...''

''நா எதாவது சொன்னா மறக்கறது கலைமாச்சே...''

''இப்ப வேணா ஓடிப்போய் வாங்கிண்டு வரட்டுமா?''

''..............''

''கங்கம்மா - இந்தா, நீ கேட்ட புஸ்தகம். கால் மணி கூட ஆகலை; ஓடி வந்துட்டேன், இப்பவாவது சிரியேன் கங்கா...''

''ஆமா, என்ன உங்ககிட்ட சிகரெட் வாசனை வர்றது?''

''அது...அது...வந்து கங்கா...''

''ஐயே.... பிடிச்சா பிடிச்சேன்னு சொல்லிட்டுப் போங்களேன் - இதுல என்ன பொம்பளை மாதிரி தயக்கம்? வந்துன்னா, ஒரு சினிமாலே, பேர் மறந்து போச்சு - நடிகர் திலகம் என்ன ஸ்டைலா வாயிலே சிகரெட் வைச்சுண்டு ஒரு முழு பாட்டுக்கும் பாவம் காட்டுவார் தெரியுமா? 'யார் அந்த நிலவு ஏன்...'னு கேட்பார். நம்ப மனசு டபக் டபக்குனு அடிச்சுக்கும்... நீங்க அவர் மாதிரி ஸ்டைலா பிடிப்பேளா, இல்ல எங்காத்து தனுக பிடி குடிக்கிற மாதிரி குடிப்பேளா? ம்...?''

அது வரைக்கும் கங்கா முன்னால சிகரெட் குடிக்க நா பயந்தேன். ஆனா அன்னிலேந்து அவளுக்கு எதிர்லே படாஸ்டை லோட பிடிக்க ஆரம்பிச்சேன். இப்ப ரஜினிகாந்த் பண்றாரே, அத்தனை சேஷ்டைகளையும் செய்து கங்காவை நா நிறைய சந்தோஷப்படுத்தியிருக்கேன் டாக்டர்.

''கங்கா...!''

''கங்கு...!''

''கங்கம்மா...!''

''ஐயே - என்ன இது! என் பேரை எதுக்காக இப்படிக் கொலை பண்றேள்?''

''கொலை பண்றேனா? நானா? கங்கம்மா, உன்னை நா கொஞ்சறேம்மா...''

''அடிக்கக்க இரண்டு கை போறாது... கங்கு, கங்காருனு ஒரு கொஞ்சல்; இல்லைன்னா அம்மா, பாட்டீனு இன்னொரு வகை...து...! நன்னாவேயில்லை...''

''சரி - எப்படிக் கூப்பிடணும்னு சொல்றே?''

''எங்க அத்திம்பேர் எங்க அக்காவை கண்ணம்மா, கண்ணாட்டி, டார்லிங்னு நிறுகநிறுசா பேர் சொல்லிக் கொஞ்சுவார் தெரியுமா? எங்கக்கா சதா அதைச் சொல்லி பீத்திப்போ...''

''தனியா இருக்கறச்சே ஆம்படையான் பேசற பேச்சை எல்லாமா உன்கிட்ட உங்கக்கா சொல்லுவா?''

''ஏன்? சொன்னா என்னவாம்? வெறும் கொஞ்சலோட நிறுத்திக்க மாட்டாராம். இன்னும்...''

''இன்னும்...?''

''துருவித்துருவிக் கேட்கறதைப் பாரு. அத்திம்பேருக்கு அக்கா இல்லாட்டா ஒரு நா சரிபடாது தெரியுமா? சக்கு சக்குனு பின்னாடியே சுத்துவார். தூங்கறத்துக்கு பாதி ராத்திரி ஆயிடுமாம். எங்கக்கா சொல்லுவாளே...''

கல்யாணமான ரெண்டாம் நாள்லேந்து இவ தன் பிறந்தாத்துப் பெருமையை ஏகமா பீத்திண்டு நா கேட்டுட்டேன். ஆனா, நானும் அவளும் தனியா இருக்கறப்போ அவ தன் அக்கா, அத்திம்பேர்



பழக்கங்களோட எங்களை கம்பேர் பண்ணத் தொடங்கினதை என்னால நிஜம்மா டாலரேட் பண்ணவே முடியலை. வந்து...வந்து... டாக்டர், அன்பா இதமா மனைவிகிட்ட நடந்துக்கணும்னு நா எனக்குத் தெரிஞ்ச கற்பனைகளோட அவளை அணுகுவேன். ஆனா அவ ஒரே வார்த்தைலே 'ஐயே, எங்க அக்கா இந்த மாதிரி சொல்லலியே'னு சொல்லுவா, இல்லாட்டா ஆயிரம் இருந்தாலும் எங்க அத்திம்பேர் அத்திம்பேர்தான்னு ஏதாவது சொல்லுவா.

''ஏன்னா...!''

''ம்...''

''தூங்கிட்டேளா?''

''ம்.. என்ன கங்கா?''

''ஒண்ணுமில்லே!''

''தூக்கம் வர்றது கங்கா... ஆபீஸ்லே இன்னிக்கு செமை வேலை...''

''தூங்கறதைத் தவிர உங்களுக்கு வேற என்ன தெரியும்? கல்யாணமாகி ஆறு மாசமே ஆற ஆம்பிளை மாதிரியா நீங்க நடந்துக்கறேள்! என் தலை எழுத்து. ஆறு வருஷம் ஆகியும் 'சக்கு நாத்தம் கொண்டா...' 'சக்கு என் மூக்குக்கண்ணாடி எங்கே'னு நொடிக்கு ஒருதரம் சக்குவைக் கூப்பிடறார் எங்க அத்திம்பேர்... ஹூம்...''

தாம்பத்தியம்னா செக்ஸ், அந்த திருப்தி மட்டும்தானா டாக்டர்? எத்தனையோ மத்த இனிமையான விஷயங்கள் இல்லையா? எ...எனக்கு செக்ஸ் சமாசாரங்கள்லே அ... அதிகமா ஈடுபாடு இருந்ததே இல்லையே. வொய் டாக்டர்? தப்பு அவ பேர்லயா? இல்ல என் பேர்லயா?

''என்னன்னா! என்னாச்சு உங்களுக்கு இன்னிக்கு?''

''என்ன கங்கா?''

''உங்களுக்குள்ள ஒரு புது முரட்டு மனுஷர் புகுந்துண்ட மாதிரி... என்ன அதிசயமான்னா இருக்கு!''

''உனக்கு சந்தோஷம்தானே கங்கா?''

''....................''

''ஏய் - என்ன வெட்கம்? சொல்லேன்...''

''உங்ககிட்ட என்னமோ புதுசா வாசனை வர்றதே, அது என்ன?''

''அ...அதுவா? ஒரு புது செண்ட் ஃப்ரெண்ட் குடுத்தான்.''

''தினம் இந்த செண்ட்டை போட்டுக்கோங்களேன்னா...''

ஃப்ரெண்ட் வீட்டுலே ஒரு பார்ட்டி, ட்டிரிங்க்ஸ் இருந்தது. கல்யாணமானப்புறம், அதுவரைக்கும் குடிக்காம இருந்தவன் அன்னிக்கு இரண்டு பெக் போட்டுட்டு கங்காகிட்ட வந்தப்போ... நா வந்து... அன்னிக்கு... வந்து...ஹௌ கான் ஐ எக்ஸ்பிளெயின் டாக்டர்? குடி என்னை அதிக பலசாலியாக்கறதுங்கற எண்ணம் எனக்குள்ள அப்ப உண்டாக்க... அப்புறம், அப்புறம்... நிறுத்தியிருந்த பழக்கம் திரும்ப இப்படித்தான் ஒட்டிண்டது டாக்டர்.

''இப்ப எதுக்கு ஊருக்கு கங்கா? பிள்ளையாண்டு இருக்கேன்னு ஆறாம் மாசம் போனவ, கண்ணனுக்கு எட்டு மாசமானப்புறம்தான் வந்திருக்கே... வந்து ஒரு மாசம்கூட ஆகலை, அதுக்குள்ள திரும்ப ஊரா?''

''அதுக்கு நா என்ன பண்ணறது? இந்த ஊரோட லட்சணம் அத்தனை திவ்யமா இருக்கு... ஒரு ஆள் உண்டா, ஒரு சௌகரியம் உண்டா? என்ன இருக்கு இங்கே? ஊர்லே எங்காத்துலே பத்து ஆள் - விரலசைக்கக்கூட வேண்டாம். நீங்கதான் பாத்தேளே இங்க ஒருத்தி கார்த்தால கொஞ்ச நாழி, சாயங்காலம் கொஞ்ச நாழினு தலைய காட்டிட்டு ஓடடறா... என் இடுப்புன்னா முறிஞ்சு போறது? ஊர்லேந்து யாரையாவது ஒத்தாசைக்குக் கூட்டிண்டு வரலாம்னா 'கல்கத்தாவா? அத்தனை தொலைவுலேயா?'னு வரமாட்டேங்கறா... நம்மூர் பக்கம் வேலையை மாத்திக்கோங்கோன்னா, நீங்க காதுலே வாங்கிண்டாத்தானே?''

அவளுக்கு ஏனோ கல்கத்தா, அதுலே என்னோட வாழறதுங்கற விஷயமே பிடிக்கலை டாக்டர். ஐ ட்ரைட் மை பெஸ்ட் டு ப்ளீஸ் ஹர்... பட் ஐ பெயில்ட்.

''என்னா, இங்க வாங்கோ!''

''என்ன, கங்கா?''

''இன்னிக்கு பாஸ்'ஆத்துலே நீங்க குடிச்சது பழரசம் இல்ல, வேற ஏதோ தானே?''



''அ......அது......''

''கொஞ்ச நாளாகவே எனக்கு சந்தேகம்தான், நீங்க குடிக்கறேள்னு என் மனகலே தோணித்து. இன்னிக்குக் கண்கூடா பாத்துட்டேன். எத்தனை நாளா இந்தப் பழக்கம்? எங்காத்து கௌரவம் என்ன, அந்தஸ்து என்ன! மாப்பிள்ளை குடிக்கிறார்னு காதுலே விழுந்தா எங்கப்பா துடிச்சிப் போயிடுவார்னு தெரியாது! இப்படித் தப்பான காரியம் பண்ணறேளே. உங்களுக்கு மூளை இருக்கா?... உங்களோட சேர்ந்து குடித்தனம் பண்ண நம்மால ஆகாதுப்பா... எனக்கும் கண்ணனுக்கும் டிக்கெட் எடுத்துடுங்கோ, நாங்க ஊருக்குப் போறோம்... இங்க உங்களோட இந்த தரித்திரம் பிடிச்ச ஊர்ல இருந்தா அவன் கெட்டுப் போயிடுவான். அவன் எங்காத்துல இருந்துண்டு அங்கயே படிக்கட்டும், அவனாவது உருப்பட்டா சரி.''

''கங்கா ப்ளீஸ்..! ஒண்ணுமே இல்லாததை ஏன் பெரிசு பண்ணறே? நா குடிக்கக் கூடாது, அவ்வளவுதானே? ஓ.கே, இனி குடிக்கலை. கண்ணன் இங்க நம்மளோடயே இருக்கட்டும் கங்கா, ப்ளீஸ்...!''

ஆயிரம் ப்ளீஸ் போட்டுக் கெஞ்சுவேன், ம்ஹூம் ப்ரயோஜனம் இல்லே. ஊர்லே கண்ணனை விட்டுட்டு வந்துட்டு அவனைப் பார்க்கறது சாக்குனு வருஷத்துலே பாதி நாள் மதுராந்தகத்துலேதான் இருப்பா. மீதி நாள்லே கல்கத்தாவுக்கு வந்து என்னோட சண்டை பிடிப்பா.

''குடிச்சுட்டுத்தானே வந்திருக்கேள்? மூஞ்சியும், முகரையும் சொல்லறதே!''

''சும்மா ஒரு பெக் கங்கா.''

''பொய் சொல்லாதீங்கோ. உங்களுக்கு வெக்கமா இல்லே?''

''எனக்கு என்ன வெட்கம்? நா ஆம்பிளை, இஷ்டப்படி குடிப்பேன். சரிதான், படுத்துக்க வாடி...''

குடிச்சப்புறம் என் சாதுத்தனம் மறைஞ்சி போயிடறதை என்னால புரிஞ்சுக்க முடிஞ்சுது டாக்டர். கங்காவை அதட்டிப் பேசத் தைரியம் வந்துடுத்துனு எனக்கு அலாதி குஷி பிறந்துடும். ஆனா, மறுநாள் கார்த்தால ஐ யூஸ்டு டு ஃபீல் டாம் சில்லி.

''கங்கா...!''

''கிட்ட வராதீங்கோ, என்கிட்ட பேசாதீங்கோ!''

''ஸாரி கங்கா.''

''உங்க ஸாரியை உடைப்புலே போடுங்கோ. தூ! நீங்களும் ஒரு ஆம்பிளையா?''

''ப்ராமிஸா இனிமே குடிக்கமாட்டேன் கங்கா. உன்மேலே சத்தியமா...''

நிஜமாவே இனிமே குடிக்கக் கூடாதுன்னுதான் நா ட்ரை பண்ணுவேன் டாக்டர். ஆனா அவளோட பாராமுகத்தை, இன்ஸல்டிங் பேச்சுக்களைத் தாங்கமுடியாம திரும்பக் குடிச்சுடுவேன். ப்ராமிஸ் அம்போ ஆயிடும். எத்தனையோ நாள் கங்கா வாசக்கதவைத் திறக்காம இருந்திருக்கா. பெட்ரூம்குள்ளே என்னை விடமாட்டா. விடியவிடிய வெளில நின்னுண்டு கெஞ்சுவேன். மத்த ப்ளாட்காரங்கள்ளாம் வேடிக்கை பார்க்க பார்க்க, கதவைத் திற. இனிமே ஒழுங்கா இருக்கேன்னு கெஞ்சுவேன். காட்! தோஸ் டேஸ் வேர் டெரிபிள். எதுக்கும் பலன் இருக்காது. வெரி ஷார்ட்லி ஐ பிகேம் தி லாஃபிங் ஸ்டாக் ஆஃப் தி என்டயர் பில்டிங். தொட்டுத் தாலி கட்டின பெண்டாட்டியால நிஷித்தமா நடத்தப்படறதைவிட அதிகமா வேதனை தர்றது ஒன்னும் இல்லே டாக்டர். சொந்த வீட்டுக்குள்ள, சொந்த பெட்ரூம்குள்ள நுழைய நாய் மாதிரி கெஞ்சின, புழு மாதிரி நெளிஞ்ச அனுபவம் உங்களுக்கு இருந்திருக்கா டாக்டர்? கடவுளே! தட் வாஸ் ஹெல். டோட்டல் ஹுமிலியேஷன்.

''உன் மாரிட் லைஃப் பத்தி சொல்லுனு கேட்டேள், சொல்லிட்டேன். நௌ யு ஆர் ஸாடிஸ்பைட்? என்னை அனு அனுவா பிச்சு உங்க முன்னால போட்டுட்டேன். போதும் இல்லையா? நௌ, வில் யு லீவ் மீ அலோன்?''

திப்பித்திப்பியாய், நினைவில் கூத்தாடிய சம்பவங்களை, தன் பதினோரு வருஷ தாம்பத்ய வாழ்க்கையை விவரித்து விட்ட பின், இனி என்னால் எதுவும் சொல்லமுடியாது, மனசு வலிக்கிறது. நினைப்புகள் நெஞ்சைக் குடைகின்றன என்பதைப் புரியவைக்கும் விதமாக, மறுநிமிஷம் விக்கி, விக்கி தியாகு இரண்டாக மடிந்துகொண்டு பெரிசாய் அழத் தொடங்கினான்.

# 19

**அது** ரொம்ப அவலட்சணமான ஓணான். அகன்ற தாவாங் கட்டை, நிலையாய் நிற்காமல் ஆடும் குடிகாரக்கிழவன் தலை. என்னமோ தனக்குத்தானே பேசிக்கொள்கிற பாவனையில் கீழ்த்தாடையை உள்ளுக்குள் இழுத்துஇழுத்து அசைத்தது. யாரோ ஆர்டர் போட்ட தினுசில் கன காரியமாய் நாலு தண்டால் பஸ்கி எடுத்துவிட்டுக் கொஞ்சம் இளைப்பாறியது. துறுதுறுவென்று அந்தப் பக்கமாய் ஓடிவந்த அணில் ஒன்று ஓணானைப் பார்த்துச் சற்று நிதானித்தது. நீ நம் ஆளா, இல்லை வேறு யாரோவா என்று கேட்கிற மாதிரி மூக்கை நீட்டி அரைக் கணம் ஓணானை முகர்ந்து பார்த்த பின், வாலைத் தூக்கிக்கொண்டு காச்காச் என்று கத்திக்கொண்டே ஓடியது.

''ஹலோ நாராயணன்! ரொம்ப நாழியாகக் காத்திட்டு இருக்கீங்களா? ஸாரி, ஐ வாஸ் இன் ரவுண்ட்ஸ்.''

ஜன்னலருகில் நின்று தோட்டத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த நாணா திரும்பினான்.

''குட் மார்னிங் டாக்டர்! நா இப்பத்தான் ஃபைவ் மினிட்ஸ் முன்னால வந்தேன்.''

''கம், ஸிட் டௌன் ப்ளீஸ்.''

நாணா உட்கார்ந்தான்.

மனசு சொல்லத் தெரியாமல் கனத்தது.

டாக்டர் ரெட்டி ஏன் கூப்பிட்டு அனுப்பியிருக்கிறார்?

என்ன சொல்லவேண்டும் என்று தனியாக அழைத் திருக்கிறார்?

உன் நண்பனுக்கு வைத்தியம் முடிந்துவிட்டது. கூட்டிப்போய் விடு என்பாரா?

இல்லை - த்யாகு கோ - ஆபரேட் செய்ய மறுக்கிறார். ஐ'ம் ஸாரி என்பாரா?

முதல் நாள் த்யாகுவை விஸிட் பண்ணியபோது 'நாளைக்குக் காலைல ஒரு ஒன் அவர் வரமுடியுமா நாராயணன்? உங்ககிட்ட சில

பாயிண்ட்ஸை டிஸ்கஸ் பண்ணனும்.....' என்று தனியாய் நின்ற நிமிஷத்தில் சொன்னதிலிருந்தே அடிவயிற்றில் சங்கடம்.

நாணாவின் அவஸ்தை அவன் முகத்தில் வெளிப்படையாய்த் தெரிந்திருக்கவேண்டும்.

என்ன இது சின்னப்பிள்ளை மாதிரி தவிப்பு என்று கேட்கும் பார்வையாய் டாக்டர் பார்த்தார்.

''தனியாப் பேசணும்னு சொன்னஉடனேயே அப்செட் ஆனா எப்படி நாராயணன்? அதான் அப்பப்ப, ஹி இஸ் ப்ராக்ரஸிங் வெல்னு சொல்லறேனே அப்புறம் வொய் டூ யு வொரி? ம்?'' டாக்டர் மென்மையாய் கேட்டுச் சிரிக்கவும், சட்டென்று மனசை இறுக்கின இறுக்கம் இளக, நாணா புன்னகைத்தான்.

''தி ரீஸன் ஐ கால்ட் யூ டுடே ஈஸ் திஸ். இன்னியோட த்யாகு இங்க அட்மிட் ஆகிப் பத்து நாள் பூர்த்தி ஆகுது. வந்தப்ப இருந்த த்யாகு இன்னிக்கு அவர் இல்லே. அந்த மௌனம், அந்த அழுத்தம் எதுவும் இப்ப இல்லே. பத்து நாளா அவரோட நல்லா பழகி, பேசி, கூட்டுக்குள்ளேயிருந்து வெளியே கொண்டு வந்து, தேவையான அளவு அவரை நா தெரிஞ்சிகிட்டேன்னே நினைக்கிறேன். டெஸ்ட்ஸ் அண்ட் ஆப்ஸர்வேஷன் இனி தேவை இல்லன்றதால ட்ரீட்மெண்டை மாத்தப் போறேன். அதுக்கு முன்னால நா த்யாகுவைப் பத்தி அனலைஸ் பண்ணியிருக்கிற விஷயங்களை உங்ககிட்ட, ஆஸ் எ பர்ஸன் ஹூ ஈஸ் ரியலி இண்ட்ரஸ்டட் இன் ஹிம்ன்ற முறைலே, டிஸ்கஸ் பண்ண விரும்பறேன்.''

ட்ரீட்மெண்டை மாற்றப் போகிறாரா? அப்படியென்றால் த்யாகு நல்லவிதமாய் ரெஸ்பாண்ட் பண்ணுகிறான் என்றுதானே அர்த்தம்?

நாணாவுக்குச் சந்தோஷமாக இருந்தது.

டாக்டர் ரெட்டி டேபிள்மேல் இருந்த பேப்பர் வெயிட்டைக் கையால் உருட்டிக்கொண்டே பேசினார்:

''மனிதர்களை அவங்க குணப்படி பல ரகமா பிரிக்கலாம்னறது உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும். இதுலே, பிறவிலேந்தே தன் கால்ல நிக்க விரும்பாம, தெரியாம, இன்னொருத்தர் மேல சாய்ஞ்சு நிற்க விரும்பறவங்க ஒரு டைப். சுயமா சிந்திச்சி, தன் பிரச்னைகளுக்குத்



தானே தீர்வு காண அவங்களால முடியாது. த்யாகு அந்த ரகம்தான். சின்ன வயசுலே அவர் சரியான அம்மா பிள்ளையா இருந்திருக்கார். அம்மாதான் த்யாகுவோட உலகம் எல்லாத்துக்கும் - சமைக்க, பாட, பேச, அழகாய் இருக்கன்னு எல்லாத்துக்கும் - த்யாகு மனசுலே அவங்க அம்மாதான் உதாரணம். அந்தம்மாவும் பையனைத் தலைப்புக்குள்ளே வைச்சி பொத்தி வளர்த்திருக்கணும். கணவன் கிட்ட ஒரு ராப்போர்ட் இல்லாம போனதால் பிள்ளையே சர்வமும்னு இருந்திருக்கணும். அங்கதான் கோளாறே ஆரம்பிச்சிருக்குனு நா நினைக்கிறேன். ஸ்வபாவத்துலே சாதுவா, மனபலம் இல்லாம பிறந்த த்யாகுவை அம்மாவோட இந்த ஓவர் அரவணைப்பு பாதிக்கக் கேட்கணுமா? த்யாகுவோட அப்பா நிஜத்துலேயே மோசமான மனிதரா, கோபம் நிறைஞ்சவரா, தற்பெருமை கொண்டவரா, மனைவி குழந்தைகிட்ட இதமான அன்பைக் காட்டத் தெரியாதவரா, இல்லே, விரும்பாதவரா இருந்திருக்கலாம். ஐ'ம் நாட் கோயிங் இன்டு தட் நௌ. ஆனா இதைவிட மோசமான அப்பாக்களை எல்லாம் பிள்ளைங்க லவ் பண்ணி நா பாத்திருக்கிறேன். த்யாகு ஹேடட், ஸ்டில் ஹேட்ஸ் ஹிஸ் ஃபாதர். அடிமனசுலே அவர் மேல ஏக வெறுப்பு. அம்மாவை அப்பா சரியா நடத்தலைன்ற எண்ணம் குழந்தையா இருக்கறப்ப மனசுலே பதிஞ்சி அப்பவே அவரை வெறுக்க ஆரம்பிச்சிட்டார். சின்ன வயசுலே அப்பா சொன்ன பேச்சைத் தப்பாம, எதிர்த்து வாயாடாத நல்ல பிள்ளையா த்யாகு இருந்தார்னா அதுக்குக் காரணம் பயம், நாட் லவ்...''

டாக்டர் நிறுத்தி, நாணா ஏதாவது சொல்லுவானா என்று காத்திருந்து பார்த்துவிட்டு மேலே தொடர்ந்தார்:

''த்யாகுவை அவர் அப்பாவோட டபிள் லைஃப், அதாவது வெளியே உபதேசம் பண்றது ஒண்ணு, வீட்டுலே நடந்துக்கறது ஒண்ணுன்ற குணம் பயங்கரமா தாக்கி இருக்கணும். இந்த மனுஷனுக்கு அவமானம் வர்ற மாதிரி, இவர் மனசை நோக அடிக்கிற மாதிரி ஏதாவது செய்யணும்ன்ற ஆசை, அதை வெறினுகூடச் சொல்லலாம், த்யாகுவுக்கும் தெரியாம அவரோட அடிமனசுலே புதைஞ்சிருக்கணும். சிகரெட் பிடித்து, குடித்து, தன் இமேஜை மாத்திக்கிட்டு, அப்பாவுக்குப் பிடிக்காத பிள்ளையா இருக்க, தனக்குத் தெரியாமலேயே அவர் முயன்றிருக்கிறார்னுதான் தோணுது...''

"நாணா சற்றே முன்னுக்கு வந்து மேஜைமீது கைகளை ஊன்றிக்கொண்டு மெதுவாகக் கேட்டான்:

''நீங்க இப்ப சொன்னது, அதாவது அடிமனசின் ஆசையை இப்ப த்யாகு இந்த விதமா நிறைவேத்திருக்கறான்ங்கறது உண்மைன்னா, அவன் சந்தோஷமான்னா இருக்கணும் டாக்டர்? குடிச்ச நிமிஷத்துலே ஹி ஈஸ் ஹாப்பி, அப்புறம்? ஹோ! குடிச்சுட்டோமேனு அவன் எவ்வளவு வேதனைப்படறான்! இந்த வருத்தத்துக்கு நீங்க சொல்ற காரணம்?''

''ஷியர் செல்ஃப் ஸிம்பதி - நம்புங்க நாராயணன். சுயபச்சாத்தாபம்! சின்ன வயசிலேந்தே த்யாகுகிட்ட பூதமா வளர்த்திட்ட இன்னொரு பலவீனம் இந்த சுயபச்சாத்தாபம். அம்மாவை அப்பா அடிக்கிறாரேன்ற எண்ணத்தைவிட ஐயோ, இதை நம்மால தடுக்க முடியலையேன்னு அவர் நிச்சயம் அதிகம் வருத்தப்பட்டிருப்பார். அப்புறம் வசு செத்துப் போயிட்டதும் எனக்கு விளையாடத் தங்கை இல்லையே, இனி நா ஒண்டிக் கட்டையானு வருந்தியிருப்பார். தென், அம்மாவின் சாவு, எனக்கு அம்மா இல்லே, இனி நா அநாதைன்ற தவிப்பு. சித்தியை அப்பா கட்டிக்கிட்டதும் இந்தக் காரியத்தை எனக்காகச் செய்யலை, அவருக்காகச் செய்திருக்கார்ன்ற வேதனை... எவ்ரிதிங் ரிசல்டட் இன் இன்க்ரீஸிங் ஹிஸ் செல்ஃப் ஸிம்பதி - என்ன நாராயணன் நா சொல்லறது விளங்குதா?''

நாணா பதில் ஏதும் பேசாமல் அமர்ந்திருக்க, டாக்டர் பெல் அடித்துப் பையனை வரவழைத்து இரண்டு டீ கொண்டு வரச் சொன்னார்.

''சுயபச்சாத்தாபத்தைவிடக் கொடிய விஷம் இன்னொண்ணு இருக்கமுடியாது நாராயணன். அணு அணுவா ஆளைக் கொல்றதுலே அது சரியான எமன்...''

''அப்போ.... த்யாகு இப்படி ஆனதுக்கு அவனோட அப்பாவோ, கங்காவோ, இல்லை வேறு யாருமோ காரணம் இல்லேன்னு நீங்க சொல்றேளா, டாக்டர்? ஈஸ் இட் ஜஸ்ட் செல்ஃப் ஸிம்பதி?''

காலிக் கோப்பையை டாக்டர் கீழே வைத்தார்.



''ஓ - நோ - அப்படித் தள்ளிவிட முடியுமா என்ன? எல்லாம் சேர்ந்து ஆளைத் தடம் புரட்டிடிச்சினு நா சொல்லவரேன். மனசுலே தைரியம், பிடிவாதம், தன்னம்பிக்கை இருக்கிறவங்க இந்த சிக்கல்களிலே எதிர்நீச்சல் போட்டு, கரை ஏறி இருப்பாங்க... நிச்சயம்... ஏன், உங்களையே எடுத்துக்குங்க... டிண்ட் யு ஸர்வைவ் யுவர் சைல்ட்ஹுட் பேட் டேஸ்? மனசுலே தோஞ்சானா இருக்கறவங்களுக்கு இப்படி அட்ஜஸ்ட் செய்ய மறுக்கும் அப்பா, மனைவினு அமையும்போது அவங்க திண்டாடித்தான் போறாங்க. கிணத்து விளிம்புலே ஒருத்தர் நிக்கறப்போ தள்ளறது சுலபம் இல்லியா, ஜஸ்ட் லைக் தட்...''

நாணா எழுந்து ஜன்னலிடம் சென்று நின்று கொண்டான். அவலட்சண ஒணான் இன்னும் அந்த இடத்திலேயே நின்று தண்டால் பஸ்கி எடுத்துத் தன் பிரார்த்தனையை நிறைவேற்றிக் கொண்டிருந்தது.

நாணா திரும்பி டாக்டரை வெறித்தான்.

''ஹௌ ஈஸ் ஹி நௌ, டாக்டர்? கிணத்து விளிம்புலேந்து இனியாவது நகர்ந்து வருவானா, மாட்டானா?''

''வொய் நாட்? அவசியம் வருவார். வந்துகிட்டே இருக்கார். த்யாகு ஒரு சாதாரண மடாக்குடியர் இல்லே, ப்ளீஸ் ரிமெம்பர் தட்... அவர் ஒரு ஆல்கஹாலிக். இது அவருக்கு ஒரு நோய், வெறும் பழக்கம் மட்டும் இல்லே... நா ஏற்கெனவே சொன்னபடி நரம்பு மண்டலத்துலே ரசாயனப் பங்கீடு சரியா இல்லாம இருக்கறவங்க ஒரு பெக் குடிச்சாக்கூடப் போதும். அவங்க மனநிலை கண்டிப்பா பாதிக்கப்பட்டு விடும். அன் ஆல்கஹாலிக் ஈஸ் ஆல்வேஸ் அன் ஆல்கஹாலிக்னு சொல்லுவாங்க. சர்க்கரை வியாதி உள்ளவங்க எப்படி சர்க்கரைகிட்ட போகக்கூடாதோ, அப்படி இவங்க ட்ரிங்கை விரலாலகூடத் தொடக்கூடாது. அது ஒண்ணுதான் இவங்களுக்கு சிகிச்சை. கம்மா ஒரு பெக் - சந்தோஷமா இருக்க, தூக்கம் வரலைன்ற பேச்சு இவங்களுக்கு இல்லே... நோ, மீன்ஸ் டோடல் நோ....''

நாணா டாக்டரை நெருங்கி வந்து நின்றான்.

''த்யாகுவால தொடர்ந்து ஆன் தி வேகன் இருக்க முடியும்னு நீங்க நம்பறீங்களா?''

''பத்து நாளா இருக்காரே, ஸோ, ரொம்ப நம்பலான்னுதான் தோணுது. ஆனா, அவர் மனசுலே சுயபச்சாத்தாபத்தோட வக்ரமும் நிறைய இருக்கு. அதையெல்லாம் அவர் பிரச்னையோட ஒழிக்கப் பாடுபடணும். திஸ் ஈஸ் வெரி இம்பார்ட்டண்ட்...''

வக்ரமா?

த்யாகுவின் மனசுக்குள்ளா?

நம்புவதற்குக் கஷ்டமாக இருக்க தன் சந்தேகத்தை நாணா வெளியிட்டான்.

''வக்ரம்னா உங்களுக்கும் எனக்கும் இருக்கற வக்ரம் இல்லே... இது வித்தியாசமானது. சாதாரணமா வானம் - னா நாம என்ன சொல்லுவோம். நிலவு - னுதானே லைக்வொய்ஸ், ரோஜா - னா அழகு இல்ல, மணம்தானே நினைப்புக்கு வரும்? ஆனா த்யாகு என்ன சொன்னார் தெரியுமா? வானம் - மேகம். ரோஜா - னா முள், பணம் - திமிர், செக்ஸ் - அசிங்கம், இப்படி அவர் மனசைப் பழைய சம்பவங்கள் பூதாகாரமா அடைச்சிக்கிட்டு இருக்கு. அம்மா, அப்பா, வசனு இவங்களையே சுத்திச்சுத்தி வரார். ஒரு பொம்பளைன்னா உடனே அவ அழறதுதான் அவர் நினைப்புக்கு வருது. அப்பப்ப லேசா கங்காவும் மனசுக்குள்ளே எட்டிப் பார்க்கறாங்க, ஆனா ஹெல்தியா இல்லே... எடுத்த அத்தனை டெஸ்ட்டுகளும் அவர் மனசு ஒரு குறிப்பிட்ட வக்ரமான பாதையிலே போறதைத்தான் க்ளியரா காட்டுது. பிறத்தியாரை அவங்க கோணத்திலேந்து பார்த்துப் புரிஞ்சிக்க மறுப்பதும் ஒரு வக்ரம்தானே? மத்தவங்களை அவங்க கண்ணோட்டத்துலேந்து பார்க்கக் கத்துக்கணும்னு த்யாகு சாதாரணமா ஹெல்தியா நினைக்கப் பழகிக்கிட்டாரினா, அப்புறம் அவருக்கு வேற பிரச்னையே இருக்காது...''

திடுமென்று நாணாவுக்கு ரொம்ப அசதியாக இருந்தது.

மனசில் பலம் இல்லை, அதை வளர்க்க உதவி பண்ணி குடிப்பழக்கத்தை டாக்டர் திருத்திவிடுவார் என்று எதிர்பார்த்தது ரொம்ப அசட்டுத்தனமோ! இதில் இவ்வளவு இருக்கிறதா? நடக்குமா? இதெல்லாம் த்யாகுவுக்குச் சாத்தியமா?

''நௌ லெட் மீ டெல் யூ ஹௌ ஐ'ம் கோயிங் டு சேஞ்ச் தி ட்ரீட்மெண்ட்.. நாளையிலிருந்து ஆண்டப்யூஸ்னு ஒரு மருந்து



கொடுக்கத் தீர்மானிச்சிருக்கேன். குடிமேல் அவருக்குத் தீராத பயத்தையும், வெறுப்பையும் உண்டாக்க இது உதவும். ஆனா, இந்த சிகிச்சையை ஆரம்பிக்கறதுக்கு முன்னால அவர் சம்சாரத்தைச் சந்திக்க நா பேச விரும்பறேன். அவங்களைப் பத்தி நீங்களும் சொன்னீங்க. த்யாகுவும் அதிகமா சொல்லிட்டார். ஆனாலும் அவங்களை நானே சந்திச்சு அவங்ககிட்ட கணவன் இனி எப்படி நடந்துப்பார், இவங்க அவர்கிட்ட எப்படி நடந்துக்கணும்ங்கறதைப் பத்திப் பேச விரும்பறேன். அவங்களை வரவழைக்க முடியுமா நாராயணன்?''

நாணா டாக்டரை நிமிர்ந்து பார்க்கமுடியாமல் பார்வையைத் தழைத்தான். இருக்கையில் நெளிந்தான்.

''நானே கங்காவை ஒரே ஒரு தரம்தான் பார்த்திருக்கேன் டாக்டர். கண்டிப்பா ஊருக்குத் தகவல் தெரிவிக்க வேண்டாம்னு த்யாகு சொன்னதாலே மேற்கொண்டு எதுவும் நா பேசலை...''

''ம்...? த்யாகு இங்க இருக்கற பத்து நாளா வீட்டுலே தபால், போன் எதுவும் அவங்ககிட்டயிருந்து வரலியா?''

''லெட்டர் வரலை டாக்டர். போன் வந்துதா இல்லையானு தெரியாது. வீட்டுலே யாரும் இல்ல, இட் ஈஸ் லாக்ட்...''

டாக்டர் யோசனையில் ஆழ்ந்தார், பிறகு வேதனையுடன் பேசினார்.

''அம்மா மேல வைச்சிருந்த பாசத்தை மனைவிமேல கொட்ட த்யாகு தவியாத் தவிச்சிருக்கார்... பாவம், ஆரம்பமே கோணலாப் போயிடிச்சி... சின்னச்சின்ன ஆசைகள்கூட நிறைவேறாம போனதுலே தாம்பத்தியம்னா சண்டை, சச்சரவுகள் மட்டுமே நிறைஞ்சதுன்ற முடிவுக்கு அவர் வந்திருக்கார். கங்கா கொஞ்சம் விட்டுக்கொடுத்து நடந்துக்கிட்டு இருந்தாங்கன்னா த்யாகுவைச் சுண்டுவிரலால் ஆட்டி வைச்சிருக்கலாம். அப்படியொரு அடிமையா மனைவி கால்லே விழ அவர் ரெடியா இருந்தார்... ஹூம்... அந்தம்மா வளர்ந்த விதம் வேற, அவங்க ருசிகள் வேற.... குட்டைமாட்டையும், நெட்டை மாட்டையும் சேர்த்து ஏறு கட்டின மாதிரி எல்லாமே கோணல் மாணலாயிடிச்சி...'' சின்னக்குரலில் பேசின டாக்டர் சிந்தனைவயப்பட்டுவிட்ட தினுசில் பேச்சை நிறுத்தி இரண்டு நிமிஷங்கள் மௌனமாய் டேபிளில் தாளம் போட்டார்.

அப்புறம் எழுந்து நின்றார். ''த்யாகுவைப் பார்த்து நாளை லேந்து புது ட்ரீட்மெண்ட் ஆரம்பிக்கிற விவரத்தை சொல்லிட்டு, அவர் சரியான மூட்லே இருந்தார்னா அவரைப் பற்றின என் கருத்துக்களைச் சொல்லணும்...''

நாணா எழுந்தான். லேசான தயக்கத்துடன் டாக்டரை ஏறிட்டான்.

''உங்ககூட நானும் வரட்டுமா? கங்காவை எப்ப அழைச்சிண்டு வர்றதுனு த்யாகுகிட்ட கேட்கணும்...இல்லே, நீங்க தனியா பேசணும்னா நா சவ்னிங் திரும்ப வரேன்...''

கதவைப் பிடித்துக்கொண்டு அரை நிமிஷம் தாமதித்து, ''வொய் நாட்? டு கம்...'' என்று சொல்லிவிட்டு அறையிலிருந்து வெளியேறிய டாக்டரை நாணா தொடர்ந்தபோது குருகுருவென்று அவன் வயிற்றில் பட்டாம்பூச்சிகள் பறக்க ஆரம்பித்தன.

## 20

அன்று த்யாகுவுக்கு ஆண்டப்யூஸ் மாத்திரைகள் முதல் முறையாகக் கொடுக்கப்பட்டன.

காலையில் ஒரு கிராம். மாலையில் திரும்ப இன்னொரு கிராம்.

த்யாகுவுடைய குடிப்பழக்கத்துக்கான காரணங்களையும், அவனுடைய குணத்தையும் தன் கண்ணோட்டத்திலிருந்து டாக்டர் விவரித்தபின் சுருக்கமாக 'நாளைக்கு உங்களுக்கு ஆண்டப்யூஸ் கொடுக்கப் போறேன்' என்றாரே தவிரவும், அது என்ன சிகிச்சை, என்ன செய்யும், அதன் விளைவுகள் என்ன என்பது பற்றியெல்லாம் ஏதும் கூறவில்லை.

''ஆண்டப்யூஸ்னா என்ன டாக்டர்?''

''டைஸல்ஃப்ராம்னு ரசாயன ரீதிலே இந்த மருந்தைக் குறிப்பிடுவோம். குடியை நிறுத்த விரும்பற ஆல்கஹாலிக்ஸ்கு இது பெருமளவுக்கு உதவும்...''

''அப்படீன்னா, முதல்லே, நா இங்க வந்த அன்னிக்கே நீங்க இதைக் கொடுத்திருக்கலாமே டாக்டர்?''



''அது பாலிஸின் இல்லே த்யாகு. வந்தப்ப நீங்க எத்தனை நெர்வஸா இருந்தீங்க? எத்தனை பலஹீனமா இருந்தீங்க? அப்ப இந்த மருந்தைத் தாங்கற சக்தி உங்க மனசுக்கும் இல்லே, உடம்புக்கும் இல்லே. நௌ யு ஹாவ் இம்ப்ருவ்ட் வெரி மச். படபடப்பு, நிதானமின்மை இதெல்லாம் குறைஞ்சி, சாதாரணமா இப்ப நீங்க இருக்கற கண்டிஷன்தான் ஆண்டப்யூஸ் கொடுக்கச் சரியான சமயம்.''

த்யாகு ஒரு நிமிஷம் கை நகங்களை ஆராய்ந்தான். பிறகு மெதுவாக ''இந்த ஆண்டப்யூஸ் என்ன பண்ணும் டாக்டர்?'' என்றான்.

''ஒண்ணும் பண்ணாது. அதை நினைச்சி வீணா வொர்ரி பண்ணிக்காதீங்க. நாளைலேந்து நாலு நாளைக்கு இந்த மருந்தைக் கொடுத்துட்டு அப்புறம் ஒரு சின்ன பெக் ட்ரிங்கை குடிக்கக் கொடுக்கப் போறேன், என்ன த்யாகு, ஹௌ டு யு லைக் இட்?''

ட்ரிங்கா?

குடிக்கவா?

ட்ரிங்கை நிறுத்தவேண்டும் என்று பாடுபடும்போது குடிப்பதற்கு ட்ரிங்கை டாக்டரே கொடுக்கப்போகிறாரா?

டாக்டர் சிரித்தார்.

''நா சொல்லவேண்டியதைச் சொல்லிட்டேன். அதை நம்பறதும் நம்பாததும் உங்க இஷ்டம்...''

டாக்டர் போன பிறகு நாணா, ''வர்றயாடா, ஒரு வாக் போகலாம்'' என்று கூப்பிட த்யாகு கிளம்பினான்.

தோட்டத்தைக் கடந்து மணலில் கால்கள் புதையப் புதைய நடந்தார்கள்.

புதர்புதராய் ராவணன் மீசைகள், பர்மா ஷெல் சின்னங்கள்.

''உட்காரலாமா?''

''ம்!''

உட்கார்ந்தார்கள்.

த்யாகு எது குறித்தோ பேச ஆசைப்படுவது புரிய, ''என்ன த்யாகு?'' என்றான் நாணா.

''ஆண்டப்யூஸ்னு ஒரு மருந்து கொடுக்கப் போறேங்கறாரே, அது என்ன நாணா? ட்ரிங்க் வேற நாலு நாளைக்கப்புறம் தரப்போறேங்கறார். எனக்குப் பயமா இருக்குடா. ஒரு பெக்கோட நா நிக்கமாட்டேன். இதான் சாக்குனு நிறையக் குடிக்க ஆரம்பிச்சிடு வேன். டாக்டர்கிட்ட எனக்கு எப்படிச் சொல்றதுன்னு தயக்கமா இருக்கு நாணா... நீ வேணா பேசிப் பாக்கறியா?''

நாணா ஸ்நேகபாவத்துடன் சிரித்தான்.

''எதுக்குத்தான் பயப்படறதுன்னு இல்லையாடா த்யாகு? டாக்டர் ட்ரிங்க் கொடுக்கறதுக்கு ஏதாவது அர்த்தம் நிச்சயம் இருக்கும். நீ வீணா குழம்பாதே... ரிலாக்ஸ்டா...''

த்யாகு கடலைப் பார்த்தான். தூரத்தில் கரும்புள்ளிகளாய்க் கட்டுமரங்கள்....

காலடியில் நண்டு ஒன்று கொடுக்கைத் தூக்கிக் கொண்டு ஓடியது.

''டாக்டர் என்னை எத்தனை கரெக்டா அனலைஸ் பண்ணி இருக்கார் தெரியுமா, நாணா? அவர் ஒவ்வொண்ணா விவரிக்க சொல்லச் சொல்லத்தான் அடேடே! என்னோட இந்த நடத்தைக்கு இதுதான் காரணமானு எனக்கே புரியறது... படிக்க, புத்திசாலியா ஒரு விஷயத்தை க்ரஹிச்சுக்கக்கூடிய நமக்கு இதெல்லாம் ஏன் முன்னாலேயே புரியலை நாணா?''

''அது சரி - அப்புறம் எல்லாரும் சைக்கியாட்ரிஸ்ட்தான். இதுக்குனு படிப்பு எதுக்கு, பட்டம் எதுக்கு?''

நாணா சிரிக்க, அவனோடு சேர்ந்துகொண்ட த்யாகு என்னமோ நினைத்துக்கொண்ட தினுசில் சிரிப்பை நிறுத்திவிட்டுப் பேசினான்:

''டாக்டர் ரெட்டிகிட்ட எனக்குப் பிடிச்ச குணம் அவரோட ஃப்ரெண்ட்லி நேச்சர் நாணா... உனக்கு என்ன தெரியும்னு அலட்சியப்படுத்தாம ஒவ்வொண்ணா எக்ஸ்ப்ளெயின் பண்ண அவர் எத்தனை சிரமம் எடுத்துக்கறார்! நேத்து பல விஷயங்களை அவர் எனக்கு விளக்கினப்போ, ஒரு ஆல்கஹாலிக் அனுபவிக்கக்கூடிய மூணு ஸ்டேஜ்களைப் பத்தி விரிவா சொன்னார்... குடியை என்ஜாய் பண்ணறது முதல் கட்டம். இதுலே சந்தோஷம், குஷி மட்டும் உண்டு. அப்புறம் நாளாக ஆக சந்தோஷம் மறைஞ்சு, ஒருவிதக் குற்றஉணர்வு வர ஆரம்பிக்கிறது செகண்ட் ஸ்டேஜ். வாந்தி எடுக்கறது, கை நடுக்கம், அனாவசிய பயம் எல்லாம் இந்தக் கட்டத்துல வரும். குடியை விடணும், இது நமக்குக் கெடுதல் பண்ணறதுங்கற எண்ணம் இந்த ஸ்டேஜ்லதான் தோணுமாம். இதையும் மீறிப்போனா, மீளமுடியாத மூணாவது ஸ்டேஜ். இப்ப நா டாக்டர்கிட்ட வைத்தியத்துக்கு வந்திருக்கலைன்னா மூணாவது கட்டத்துக்கும் போய் இந்தப் பழக்கத்துலேயே அழுந்திப் புதைஞ்சு போயிருப் பேங்கறதை ராத்திரி நினைச்சுப் பாத்தப்போ 'பகீர்'ன்னுது நாணா... ரொம்ப நாழி தூங்கவே முடியலை...''



நாணா த்யாகுவின் தோளைத் தட்டிக் கொடுத்தான்.

''இனிமே இதையெல்லாம் நினைச்சுப் பயப்படறதுலே அர்த்தமே இல்லேடா... யு ஹாவ் க்ராஸ்ட் ஆல் ஆஃப் தெம்... இன்னும் நாலு நாளோ, இல்ல அஞ்சு நாளோ, அப்புறம் வீட்டுக்குத் திரும்பி, ஜம்முனு நீ நியூ லைஃப் ஆரம்பிக்கப் போறே பாரு...''

நாணாவின் பேச்சு கேட்கப் பரவசமாக இருக்க, த்யாகு கண்களை மூடிக்கொண்டான்.

புது வாழ்க்கையா?

எனக்கா?

கிட்டத்தில் வந்து நிற்கிறதா?

குடிக்காமல், சிகரெட் பிடிக்காமல், மனசு அலைபாயாமல், உடம்பு பரபரக்காமல், நிதானமாகப் பேசி, சிரித்து, கங்காவோடு வெளியில் போய் வந்து, கண்ணனைப் பக்கத்தில் உட்கார வைத்துப் பாடம் சொல்லிக் கொடுத்து, மெக்கானோ செட்டில் ட்ராக்டர் பண்ண கற்றுத் தந்து, குடும்பமாய் சினிமா, கல்யாணம், பொது இடங்கள் என்று போய் வந்து...

ஆகா...! கற்பனையே இனிக்கிறதே... நடக்குமா? இத்தனையும் நிறைவேறுமா?

''என்ன யோசனைடா?''

த்யாகு கண்களைத் திறந்தான்.

''ம்? ஒண்ணுமில்லே...''

வெட்கத்தோடு நண்பன் சிரிக்கவும் அவன் மனசு புரிந்த மாதிரி நாணாவும் புன்னகைத்தான். அப்புறம் நிதானமாகப் பேசினான்:

''கங்காவைப் பாத்து விவரத்தைச் சொல்லி அவளை இங்க கூட்டிண்டு வரவேண்டாமா த்யாகு? ஆயிரம் இருந்தாலும் அவ உன் பெண்டாட்டி. அவளுக்கும் அவாத்து மனுஷாளுக்கும் தெரியாம நீ இப்படி க்ளினிக்கிலே சேர்ந்து ட்ரீட்மெண்ட் எடுத்துக்கறதே தப்பு. இனியாவது சொல்லவேண்டாமாடா...''

''.....................''

''பேசாம இருந்தா என்ன அர்த்தம் த்யாகு? வித்யாவும் நானும் நாளைக்குப் போய் அவளைக் கூட்டிண்டு வரவா, டாக்டர் வேற கங்காகிட்ட கொஞ்சம் பேசணுங்கறார்? என்ன சொல்றே?''

என்ன பண்ணலாம்?

த்யாகு யோசித்தான்.

நாளைக்கு ஆண்டப்யூஸ் கொடுக்கப் போவதாக டாக்டர் சொல்கிறார். அது என்ன மருந்தோ, என்ன செய்யுமோ? தவிரவும், நாலு நாள் கழித்து குடி வேறு தருவாராம்; அதைக் குடித்துவிட்டுப் பழைய குருடி கதவைத் திறடி என்று நான் தாறுமாறாக நடந்துகொள்ளமாட்டேன் என்பது என்ன நிச்சயம்?

மெனக்கெட்டு வித்யாவும், நாணாவும் மதுராந்தகத்துக்குப் போய் கங்காவை கன்வின்ஸ் பண்ணி அழைத்து வருவதை என் நடத்தை கெடுத்துவிட்டால்?

ம்ஹூம், வேண்டாம்.

நாட் நௌ.

இன்னும் சில நாட்கள் போகட்டும். அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்.

ஊருக்குப் போன பதினைந்து நாட்களாய் ஒரு லெட்டர் கூடப் போடாததிலிருந்து கங்காவின் கோபம் இன்னும் தணியவில்லை என்றே தோன்றுகிறது. தென் வொய் டேக் எ ரிஸ்க்?

கண்ணனுக்குத் திரும்ப ஸ்கூல் என்று திறக்கிறார்கள்?

பதினாறா?

இன்று தேதி எட்டு. ஸோ இன்னும் எட்டு நாட்கள். அதற்குள் டாக்டர் ஆண்டப்யூஸ் கொடுத்து, ட்ரிங்க் கொடுத்து, நான் எப்படி நடந்துகொள்கிறேன் என்பது புரிந்துவிடாதா?



நாணாவிடம் தன் எண்ணத்தை த்யாகு சொல்லி, அவனைத் தன் பாயின்டை ஏற்றுக்கொள்ள வைப்பதற்கும், சுள்ளென்று வெயில் உறைக்கத் தொடங்குவதற்கும் சரியாக இருக்க, இருவரும் எழுந்து க்ளினிக்கைப் பார்க்க நடந்தார்கள்.

ஆண்டப்யூஸ் சாப்பிட்ட பிறகு குறிப்பிடும்படியான எந்த மாற்றத்தையும் த்யாகுவால் உணர முடியவில்லை.

குடியை விட விரும்புபவர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதம் என்றாரே டாக்டர், எப்படி?

மூன்று நாட்களை இந்த எண்ணத்துடனே கழித்து, புது மருந்துமேல் ஒருவித அவநம்பிக்கையை வளர்த்துக்கொண்டுவிட்ட த்யாகுவுக்கு, நாலாம் நாள் காலையில் கையில் ஒரு கால்பாட்டில் விஸ்கியுடன் டாக்டர் ரெட்டி வந்து நின்றதும் நெற்றிப்பொட்டில் விண்ணென்று துடிப்பு எழுந்தது நிஜம்.

ட்ரிங்க்!

விஸ்கி!

கடவுளே! எத்தனை நாட்களாயிற்று இதைக் கையால் தொட்டு!

டாக்டர் முன்கூட்டியே சொல்லி இருக்கிறாரா? அதுதான் நாணாவும் இத்தனை கருக்க வந்துவிட்டானா?

''நீங்க ரொம்ப சமர்த்தா நடந்துக்கறீங்கன்னு நா உங்களுக்கு ட்ரிங்க் கொடுக்கற நாளை ஒரு நாள் அட்வான்ஸ் பண்ணிட்டேன் த்யாகு... என்ன ஆர் யு ரெடி?''

டாக்டர் சீண்டுகிறாரா?

இதில் என்ன விளையாட்டு?

த்யாகுவுக்கு ரொம்பவும் படபடப்பாக இருந்தது.

அடுத்த ஐந்து நிமிஷங்களுக்குள் ஆக்ஸிஜன் ஸிலிண்டர் அந்த அறைக்குக் கொண்டுவரப்பட்டது; இரண்டு உதவியாளர்கள் தட்டு நிறைய இஞ்செக்ஷன் ஸிரஞ்ச், மருந்துகளுடன் வந்து நின்று கொண்டனர்.

எ... எதற்கு இந்த ஏற்பாடெல்லாம்?

''வழக்கமா நீங்க சோடா கலந்துப்பீங்களா? தண்ணியா? இல்லே, ஸ்ட்ரெய்ட்டாவா?''

டாக்டர் க்ளாஸ் ஒன்றில் விஸ்கியை ஊற்றினார். கொஞ்சம் தண்ணீர் கலந்தார். த்யாகுவிடம் நீட்டினார்.

க்ளாஸை வாங்கமுடியாதபடி த்யாகுவின் கரம்நடுங்கியது.

''எ...எதுக்காக ட்ரிங்க் டாக்டர்? ஓ...! வேண்டாமே... ப்ளீஸ்!''

''பரவாயில்லே, வாங்கிக் குடிங்க... திரும்ப குடிக்கத் துவங்கிடுவோமோன்னு பயப்படாம குடிங்க... நா பக்கத்துலேயே இருக்கேன்.''

த்யாகு டாக்டரை நிமிர்ந்து பார்த்தான். வேண்டாம் என்று சொல்லிவிட்டேன். கேட்கமாட்டேன் என்கிறீர்கள். சரி, உங்கள் இஷ்டம் - என்கிற பாவனையுடன் டம்ளரைக் கையில் வாங்கினான். வாயருகில் எடுத்துச் சென்றான்.

விஸ்கியின் மணம் நாசியில் சுருக்கென்று ஏறியது.

அம்மா...

என்ன மணம் இது...!

என்ன இன்பம் இது...!

இத்தனை நாட்களாய் எப்படி இதைப் பிரிந்து இருந்தேன்?

கால் டம்ளர் இருந்த பானத்தை ஒரே வாயாகக் குடித்தபின் அந்த சுகத்தை அனுபவிக்கும் தினுசில் கண்களை மூடிக்கொண்டான்.

தொண்டையை வருடிக் கொடுத்த விஸ்கி சீராகக் கோடு போட்ட மாதிரி நெஞ்சுக்குள் இறங்குவதை அவனால் உணர முடிந்தது.

மெல்லமெல்ல தொண்டையில் ஆரம்பித்த சூடு உணவுக் குழாய் வழியாக வயிற்றை அடைந்து, பின், உடம்பு பூராவும் வியாபிப்பதையும் அவனால் புரிந்துகொள்ள முடிந்தது.

இரண்டு நிமிஷங்கள் கழித்துக் கண்களைத் திறந்து தன்னையே உற்று நோக்கிக்கொண்டிருந்த டாக்டரிடம் 'இன்னொரு பெக் கொடுங்களேன்' என்று கேட்கலாமா, வேண்டாமா என்று யோசித்தவன், வேண்டாம் என்ற தீர்மானத்தோடு மீண்டும் கண்களை மூடிக்கொண்டான்.

எத்தனை நிமிஷங்கள் அந்த மிதப்பை, சுகத்தை த்யாகு அனுபவித்தான்?



ஐந்து?

ஆறு?

ஏழு?

எட்டாவது நிமிஷத்தைக் கடிகாரம் தொட்டபோது இதயத் துடிப்பு சரேலென்று வேகமாக, அவன் பதற்றத்துடன் கண்களைத் திறந்தான்.

இதயம் ஏன் இத்தனை வேகமாகத் துடிக்கிறது?

காதுக்குள் ஏன் பெரிசாய் இரைச்சல் கேட்கிறது?

உடம்பு கொதிக்கிற மாதிரி இருக்கிறதே, ஏன்?

மண்டைக்குள் ஓடும் ரத்த நாளங்கள் எதற்காக இப்படித் துள்ளுகின்றன?

ஆறாய் வேர்வை பெருகுகிறது எதனால்?

மார்பில் பாறாங்கல்லைத் தூக்கி வைத்தது யார்?

மூச்சு... ஹா.... மூச்சு... அடைக்கிறதே... சீராக ஸ்வாசிக்க முடியவில்லையே...

''ஹெல்ப்.... மீ...ப்ளீஸ் ஹெல்ப் மீ... டாக்டர்... எ... எனக்கு என்னமோ பண்ணறது... என் ஹார்ட் வெளிலே வந்துடற மாதிரி குதிக்கிறது டாக்டர்; மண்டைக்குள்ள சாதம் கொதிக்கிற மாதிரி கொளகொளங்கறது... டாக்டர் ப்ளீஸ்...! ஸேவ் மீ...ஆ...நா... சாகப்போறேனா டாக்டர்....ஐ...யோ...ஓ...ஓ!''

விஸ்கி குடித்த பத்தாவது நிமிஷம் த்யாகு நாராசமாக அலற முற்பட, நாவை திடுக்கிட்டுப் போனான்.

''வாட் ஈஸ் ராங் வித் ஹிம் டாக்டர்?''

''....ஷ்...ஷ்...சும்மா இருங்க...நா அப்புறமா விளக்கிச் சொல்றேன்...''

மேற்கொண்டு சில நிமிஷங்கள் த்யாகுவை வேண்டுமென்றே மரணபயத்தில் தவிக்கவிட்டபின், டாக்டர் ரெட்டியும் உதவியாளர் களும் பரபரவென்று காரியத்தில் இறங்கினார்கள்.

ஆன்டிடோட் மருந்துகளை ஊசி மூலம் உள்ளே செலுத்தினார்கள், ஆக்ஸிஜனைப் பொருத்தினார்கள், கணம்கூட

இந்தப்பக்கம் அந்தப்பக்கம் திரும்பாமல் த்யாகுவின் உடம்பின் அறிகுறிகளைப் பார்த்துச் சிகிச்சை அளித்தார்கள்.

கால் மணியில் கத்தலும் துடிப்பும் குறைய த்யாகு தன் நினைவை இழந்து துவண்டுபோனான். அப்புறம் ஆழ்ந்த உறக்கத்தில் அமிழ்ந்துபோனான்.

மதியம் மூன்று மணி சுமாருக்கு அவன் திரும்பக் கண்விழித்தபோது டாக்டர் ரெட்டியும், நாணாவும் அருகில் நின்றிருந்தனர்.

''ஹெள டு யு ஃபீல் த்யாகு?''

''.....................''

''திரும்ப ட்ரிங்க் பண்ணணுங்களா? விஸ்கி தரட்டுமா?''

விஸ்கியா?

காலையில் அனுபவித்த மரணபயம் நினைப்பில் கூத்தாட த்யாகு அரண்டுபோனான்.

வேண்டாம்... நோ...

''இந்த ஆண்டப்யூஸோட மகிமை இப்ப உங்களுக்குப் புரிஞ்சுதா த்யாகு? ஆல்கஹாலை அல்டிஹைட்ன்ற விஷமா மாத்தி உடனடியா இதயத்தைத் தாக்குற சக்தி இதுக்கு உண்டு. அதனால ஆண்டப்யூஸ் சாப்பிட வரைக்கும் நீங்க குடியைத் தொடமாட்டீங்க... மீறிக் குடிச்சா என்னாகும்னு காட்டத்தான் இந்த டெஸ்ட் டோஸ். நாங்க கிட்ட இருந்ததால பிழைச்சிங்க... இல்லாட்டி அவ்வளவுதான்... புரியுதா?''

டாக்டர் கூறினது மிக நன்றாகப் புரிய, அன்று இரவு நாணாவின் கைகளைப் பிடித்துக்கொண்டு, ''நாளைக்கு கங்காவைக் கூட்டிண்டு வந்துடு நாணா. நா இனிமே நிச்சயமா குடிக்கமாட்டேன். ஆயுசுக்கும் குடிக்கமாட்டேன்'' என்று த்யாகு சொன்னபோது சந்தோஷ மிகுதியால் இருவர் கண்களிலும் பூக்கள் பூத்துக் கன்னத்தில் சிதறின.



# 21

''என்ன மிஸஸ் த்யாகு, நா சொன்னதை எல்லாம் மனசுலே வாங்கிக்கிட்டீங்களா?''

''ம்''

''நாங்க மருந்து கொடுத்து உங்க புருஷனோட குடிப் பழக்கத்தை நிறுத்திட்டோம். இனி அவரை மத்த ஆம்பிளைங்க மாதிரி மாத்தறது உங்க கையிலதான் இருக்கு. அவரோட பலவீனங்களை, இயலாமைகளைப் புரிஞ்சிக்கிட்டு கொஞ்சம் விட்டுக்கொடுத்து நடத்துக்கிட்டீங்கன்னா அப்புறம் எந்தப் பிரச்னையுமே இருக்காது... என்னம்மா?''

''ம்...''

''மாஜிக் மாதிரி ஒரே நாளிலே அவர்கிட்ட பல மாற்றங்களை எதிர்பார்த்தீங்கன்னா நீங்க ஏமாந்துதான் போவீங்க... விட்டுப் பிடியுங்க... இது முக்கியம். டைபாய்ட் ஜுரத்துலே படுத்து எழுந்தவங்களை மறுநாளே ஓடு, ஆடுனு சொன்னா அது உடனே ரிலாப்ஸ் ஆயிடற மாதிரிதான் இதுவும். கொஞ்சம்கொஞ்சமா சத்தான ஆகாரங்களோட, எக்ஸர்ஸைஸ்களையும் கூட்டற விதத்துலேதான் த்யாகுவையும் நீங்க கவனிக்கணும். குடின்ற நோயிலேந்து இன்னிக்கு அவர் விடுபட்டிருக்கிறது மெய்; ஆனா இந்த ப்ராஸஸ்லே அவர் ரொம்ப பலவீனமாயிட்டார். ஆல் ஹிஸ் வொய்ஃப், அவரை திடமா, தெம்பா தேத்தறது இப்ப உங்க கையிலதான் இருக்கு. குடியை விட்டுட்டாலும், இன்னும் பல மாசங்களுக்கு அந்த ஆசை த்யாகுவோட அடிமனசுலே இருந்துகிட்டேதான் இருக்கும். ஆண்டப்யூஸ் மாத்திரையைத் தொடர்ந்து சாப்பிட்டு, அதே சமயத்துலே மனசையும் தேத்திக்கிட்டார்ன்னா பயப்பட எதுவும் இல்ல. அதுவரைக்கும் ஜாக்கிரதையா இருக்கிறது பெட்டர். என்ன, மிஸஸ் த்யாகு?''

''ம்...''

நீளநீளமாய் டாக்டர் ரெட்டி அக்கறையுடன் பேசுவதற்கு ஒற்றை வார்த்தையாய் பதில் சொல்லிக்கொண்டு வரும் கங்காவைப் பார்க்கையில் எதிரில் அமர்ந்திருந்த வித்யாவுக்கு ஆயாசம் எழுந்தது.

என்ன பெண் இவள்?

இவளுடைய அமைதியான இல்வாழ்க்கைக்காக டாக்டர் சொல்லும் விஷயங்களைச் சிரத்தையுடன் கேட்டு, இன்னும் வேறு சில சந்தேகங்கள் இருந்தால் அதையும் நிவர்த்தி செய்துகொள்ளாமல் ஏன் இப்படி இருக்கிறாள்? இப்படி, ம்,ம் என்று விட்டேத்தியாய்ப் பதில் சொல்லும் அளவுக்கா த்யாகுவிடம் இவள் பிடித்தம் இல்லாமல் இருக்கிறாள்?

மறுநிமிஷமே மிகுந்த சிரமத்துடன் வித்யா தன்நினைப்பை மாற்றிக்கொண்டாள்.

பதினோரு வருஷங்களாய் என்னென்ன எதிர்பார்த்து அடிபட்டுப் போனாளோ?

எதையெல்லாம் கோட்டைகட்டி ஏமாந்து போனாளோ?

பாவம், அதுதான் இப்படி விட்டேத்தியாக இருக்கிறாளா?

த்யாகு மறுபடி நல்ல புருஷனாய், இதம் தரும் கணவனாய் நடந்து காட்டினால்தான் இவளுடைய இந்தப் போக்கு மாறுமோ?

கங்காவா? மாறுவாளா? த்யாகு, டாக்டர், நாணா மூலம் அறிந்துகொண்ட விவரங்களிலிருந்தும், முதல் நாள் நேரே மதுராந்தகம் போய் வந்த அனுபவத்திலிருந்தும் தெரிந்து கொண்ட கங்காவை முழுசாய் மனசில் நிறுத்திப் பார்த்த வித்யாவுக்குச் சந்தேகம் எழுந்தது என்னமோ வாஸ்தவம்தான்.

முந்தின நாள் காலை காரில் கிளம்பின நாணாவும் வித்யாவும் மதுராந்தகம் பக்கத்தில் உள்ள கங்காவின் கிராமத்தில் நுழைந்தபோது மணி எட்டரை என்றது.

ஏற்கெனவே பேசிக்கொண்டபடி முதலில் டாக்டர் ராமபத்ரனைத் தேடிப் போனார்கள். விவரத்தைப் பக்குவமாக எடுத்துச் சொன்னார்கள்.

''ம்...அப்படியா சேதி...'' என்றவர் கொஞ்சம் சும்மா இருந்துவிட்டுப் பேசினபோது குரலில் கோபம் கலந்திருப்பதை இவர்களால் புரிந்துகொள்ள முடிந்தது.

''த்யாகு ஒரு அகேஷனல் ட்ரிங்கர்னு நா நினைச்சேன். அதான் அப்படி ட்ரீட்மெண்ட் சொன்னேன். அவன் ஒரு ஆல்ஹாலிக்கா?



ராமராமா! எங்கிருந்து இப்படியொரு மாப்பிள்ளையை சேஷு பிடிச்சான்னு எனக்கு ஆச்சரியமா இருக்கு! சரி, விடுங்கோ, டாக்டர் ரெட்டி கெட்டிக்காரர்தான். அதனால கவலை இல்லை. த்யாகுவை வழிக்குக் கொண்டு வந்துட்டார்னு சொல்றேன். பகவான் புண்ணியத்துலே இனிமேயாவது எங்க கங்கா சந்தோஷமா இருக்கணும்... ம்...ம்... இப்ப நா என்ன பண்ணணுங்கறேள்? கங்கா, சேஷு கிட்ட எடுத்துச் சொல்லி அவளை உங்களோட அனுப்பணும்னுதானே? வாங்கோ, அவாத்துக்குப் போகலாம்... ஆனது ஆயாச்சு, இனிமே பயந்தா எப்படி?...''

டாக்டர் ராமபத்ரன் சேஷுவுக்குச் சொல்ல, அவர்கள் இருவருமாய் கங்காவிடம் பேச... விஷயம் அனுமார் வால்மாதிரி நீண்டுகொண்டே போய் ஒரு வழியாய் கங்கா கத்தி, அழுது, மூக்கைச் சிந்தி, சமாதானமடைந்து 'அவராவது குடியை விடறதாவது, எனக்கு நம்பிக்கை இல்லை' என்று முனகிக்கொண்டே சேஷன், கண்ணனுடன் இன்னொரு வண்டியில் இவர்களைத் தொடர, எல்லோருமாக சென்னையை அடைந்தபோது நிலா நன்றாகவே வானில் ஏறிவிட்டது.

**கா**லையில் முதல் காரியமாக க்ளினிக்குக்கு வந்தார்கள்.

த்யாகுவை கங்கா சந்திக்கும்முன் டாக்டர் ரெட்டி அவளுடன் பேச விரும்பவே முதலில் டாக்டரின் அறைக்குச் சென்றார்கள்.

த்யாகுவின் அடிப்படை பலவீனங்கள், ஏன் இப்படி நடந்து கொண்டான் என்பதை விளக்க முற்பட்ட இரண்டு நிமிஷங்களுக் கெல்லாம் ஏனோதானோ என்றே கங்கா அவற்றைக் கேட்கும் எண்ணம் டாக்டருக்கு உண்டாக, விஸ்தாரமாக எதையும் அலசாமல் தேவையானவை பற்றி மட்டுமே அவர் பேசினார்.

எல்லாவற்றுக்கும் ம்...ம்... என்றே கங்கா பதில் சொல்லுவது டாக்டருக்கு எரிச்சலை உண்டாக்குமோ என்று வித்யா பயந்த மாதிரியே டாக்டர் ரெட்டி தான் பேசுவதை நிறுத்தினார். கங்காவை ஊன்றிப் பார்த்தார்: ''என்ன மிஸஸ் த்யாகு, நா பேசினதெல்லாம் உங்களுக்கு நல்லா விளங்கிச்சி இல்லே? ஒண்ணுமே குறுக்கப் பேசாம நீங்க இருக்கறதால எனக்குச் சந்தேகம் வருது.''

கங்கா கண்களை விரித்தாள், சூள் கொட்டினாள், சன்னக்குரலில் பேசினாள்:

"நா கேக்கறதுக்கு என்ன இருக்கு டாக்டர்? நீங்க சொல்றபடி அவர் நடந்துண்டா எனக்குச் சந்தோஷம்தான்... ஆனா நடந்துப்பாரா? அதான் எனக்குச் சந்தேகமா இருக்கு..."

இத்தனை வெளிப்படையாக கங்கா பேசுவாள் என்று டாக்டர் எதிர்பார்க்காதது அவர் முகபாவனையில் தெளிவாகத் தெரிந்தது.

"அப்படி அவநம்பிக்கையோட பேசக்கூடாதும்மா... இது த்யாகுவுக்கு எந்த விதத்துலேயும் உதவாது. ஞாபகம் வைச்சிக்குங்க..."

"..................."

"இப்ப அவர் புது வாழ்க்கையைத் தொடங்க ஆவலா இருக்கார். இந்தச் சமயத்துலே உங்க அனுசரணை, அன்பு எல்லாம் அவருக்கு ரொம்ப முக்கியம். நா திருப்பித்திருப்பி இதைத்தான் சொல்ல விரும்பறேன்..."

கங்கா முகத்தைச் சுளுக்கிக்கொண்டாள்.

"அப்ப அனுசரணையா, அன்பா நா இத்தனை வருஷமா நடந்துக்கலைனா அவர் உங்ககிட்ட சொல்லி இருக்கார்?"

பேச்சு தப்பான பாதையில் போவதை உணர்ந்து அவசரமாக டாக்டர் ரெட்டி பேசினார்:

"ஓ-நோ... அவர் அப்படி எதுவுமே சொல்லலை. இன்ஃபாக்ட் அவர் உங்கமேல அளவு கடந்த பிரியம் வைச்சிருக்கார். உங்களைச் சந்தோஷமா வைச்சிக்கலியேனுதான் வருத்தப்படறார்."

"அதானே பார்த்தேன். தப்பு என்மேலனு சொல்லி தான் தப்பிச்சிக்கப் பார்த்தாரோனு நினைச்சேன்..." கங்காவின் குரலில் திருப்தி இழைந்தது.

இவனிடம் தொடர்ந்து என்ன பேசுவது என்று டாக்டர் திதானிக்க, கங்கா சொன்னாள்:

"எனக்கு இத்தனை நாழி புத்தி சொன்ன மாதிரி அவருக்கும் நிறையச் சொல்லி அனுப்புங்கோ டாக்டர். பெண்டாட்டி அருமை பெருமை தெரிஞ்சு நடந்துக்கணும்னு அழுத்தமா சொல்லுங்கோ..."

"சொல்லியிருக்கேன் மிஸஸ் த்யாகு, நிறையச் சொல்லி இருக்கேன். நிச்சயமா ஒரு புது த்யாகுவைத்தான் நீங்க பாக்கப்



போறீங்க... அவர் மனசுலே இப்ப ஏராளமான கனவுகள் இருக்கு. கண்ணன், உங்களைச் சுத்தி இனிமையான வாழ்க்கையைப் பின்னறதுக்கு அவர் துடிச்சிட்டு இருக்கார். இந்தச் சமயத்துல அவருக்கு நீங்க வெறும் மனைவி மட்டும் இல்ல... ஒரு ஊன்றுகோல் கூட... அமெரிக்காவுலே ஆல்கஹாலிக்ஸ்லோட மனைவிகள் எப்படி நடந்துக்கணும்னு ஒரு கோர்ஸே நடத்தறாங்க... அவங்க, உற்சாகமான மனநிலையில் இருந்தா எப்படி நடந்துக்கணும், டல்லா இருந்தா என்னென்ன பேசி, செய்து அவங்களைத் தேத்தணும்னு அழகாப் பாடம் மாதிரி சொல்லித்தராங்க... இதையெல்லாம் ஏன் சொல்றேன்னா, உங்களோட பொறுப்பு உங்களுக்கு நல்லாப் புரியறதுக்காகத்தான், என்ன மிஸஸ் த்யாகு..."

புடவைத் தலைப்பின் குஞ்சங்களை விரலால் திரித்துக் கொண்டிருந்த கங்கா தலை நிமிராமலேயே பேசினாள்:

"அமெரிக்காவிலே நடக்கறதெல்லாம் இங்க நடக்கணும்னு எதிர்பார்த்தா எப்படி? முதல்லே அவர் குடிக்காம ஒழுங்கா இருந்து காட்டட்டும். அப்புறம் பாத்துக்கலாம். சும்மா குனியக்குனியக் குட்டுவேன்னு அவர் ஆகாத்தியம் பண்ணா நா குனிஞ்சுண்டே போகமுடியுமா? சொல்லுங்கோ..."

கண்ணைக் கட்டிவிட்ட குதிரையாகத் தன் பாயின்ட்டையே திருப்பித்திருப்பி கங்கா பேச, இனி இவளுடன் சம்பாஷிப்பதால் ஆகப்போவது ஒன்றுமில்லை என்பது தெளிவாக, 'வாங்க, த்யாகுவைப் பார்க்கலாம்' என்றபடி டாக்டர் ரெட்டி எழுந்தார்.

அன்று மாலை த்யாகு டிஸ்சார்ஜ் செய்யப்பட்டான்.

புறப்படுமுன் த்யாகுவைத் தன் அறைக்குள் தனியாக அழைத்து டாக்டர் நிறையப் பேசினார்:

"நீங்க இன்னிலேந்து புது த்யாகுன்றதை ஞாபகம் வைச்சிக்குங்க... பழைய நினைப்புகளை, கசப்புகளை, வேதனைகளை இங்கயே உதறிட்டுப் புறப்படற புது த்யாகு நீங்க. தைரியமா இருக்கணும். நம்பிக்கையோட சித்திக்கணும். நல்லதையும், கெட்டதையும் செய்யற சக்தி நம்பகிட்டயே இருக்குனு புரிஞ்சு செயல்படணும், என்ன த்யாகு?"

அவன் "சரி" என்று தலை ஆட்டினான்.

''முதல்ல மருந்துகள் பத்தி சொல்லிடறேன், நாளைலேந்து தினம் மெயின்டனன்ஸ் டோஸாக ஒரு ஆண்டப்யூஸ் மாத்திரை சாப்பிட்டா போதும். இந்த மாத்திரையோட வீர்யம் உங்க ரத்தத்துல பல நாட்களுக்கு இருக்கும்ன்றதை மறக்காதீங்க. மாத்திரையை நிறுத்தின பிறகுகூட மனிதர்களின் உடல்வாகுக்குத் தகுந்தபடி பதினாலுலேந்து முப்பது நாள் வரைக்கும் இதோட சக்தி ரத்தத்துலே இருக்கும். அதனாலே, ஆண்டப்யூஸை நிறுத்திட்டு நடுவுலே ட்ரிங்க் எடுத்துக்கிட்டா உங்களை யாரும் காப்பாத்த முடியாது. யு மஸ்ட் ரிமெம்பர் திஸ் ஆல்வேஸ்...''

த்யாகு உன்னிப்பாக அத்தனையும் கேட்டுக்கொண்டான்.

''சத்தான உணவாச் சாப்பிடுங்க... வேளையோட சாப்பிட்டு, பொழுதோட படுக்கப் போங்க... மனசுக்கு இதம் தர்ற நடவடிக்கைகளிலே ஈடுபடுங்க... முதல்ல உங்க பலவீனங்களை நீங்க ஒழிக்க முயலணும்... நடந்துபோன சம்பவங்களை நினைச்சு ஏங்கறது தப்பு. செல்ஃப் ஸிம்பதி கூடாது. சுயபச்சாத்தாபம் உள்ளயே உட்கார்ந்து ஆளை அழிக்கும். பிவேர். பிறத்தியாரை அவங்க கோணத்துலேந்து பார்க்கப் பழகிக்கிங்க. இது ரொம்ப முக்கியம். அப்புறம், உங்க ப்ளஸ்பாயின்டுகளை நினைச்சி சந்தோஷப்பட நீங்க கத்துக்கணும் த்யாகு. உங்க புத்தி, உங்க பர்ஸனாலிடி எத்தனை பேருக்கு அமையும்னு நினைக்கறீங்க? தென், யுவர் வொய்ஃப். அவங்க ஒரு வெகுளி த்யாகு. தெரியாத்தனத்தால்தான் வெடுக்கு வெடுக்குனு பேசறாங்கனு எனக்குத் தோணுது. கண்ணுக்கு நிறைஞ்ச மனைவி, அந்தஸ்தான வாழ்க்கை, இது அத்தனையும் அடிக்கடி நீங்க நினைச்சுப் பார்க்கணும். இல்லாததை நினைச்சு ஏங்கறதைவிட, இருக்கறதை எண்ணி சந்தோஷப்படறதுதானே புத்திசாலித்தனம்?''

''எஸ் டாக்டர், ஐ அக்ரி வித் யூ...''

''குட். நௌ - கொஞ்சம் பர்ஸனலா பேசலாமா? உடனடியா உங்க மனைவிகிட்ட அதிகமா எதிர்பார்த்தா நீங்க ஏமாந்து போவீங்கனே எனக்குத் தோணுது த்யாகு. அவங்க குணத்தைப் புரிஞ்சிக்கங்க... தென், டேக் திஸ் ஈஸி. ஓ.கே? இரண்டு பேர்ல நீங்கதான் விவரம் தெரிஞ்சவர். அதனாலே நீங்கதான் முதல்லே விட்டுக்கொடுக்கணும். நா என்ன சொல்றேன்னு புரியுதா?''

த்யாகுவுக்குப் புரிகிற மாதிரி இருந்தது. சரி என்று தலையை அசைத்தான்.



''உங்கம்மாவை நினைச்சுக்கிட்டு கங்காகிட்ட பழகறதை முதல்ல நீங்க நிறுத்தணும். அது அவங்களுக்குப் பிடிக்கலை. சரியா த்யாகு? டோண்ட் கம்பேர் கங்கா வித் யுவர் மதர் எவர்...''

''ம்... ... ...''

''ஐ'ல் கம் டு த மோஸ்ட் இம்பார்டண்ட் பாயிண்ட் - செக்ஸ். இது அசிங்கமானது இல்லே த்யாகு. பிலீவ் மீ. இது பத்தி நா ஏற்கெனவே நிறைய உங்ககிட்ட பேசியாச்சு. அதெல்லாம் நினைப்புல வைச்சிக்குங்க. கங்காவின் ஆசாபாசங்களுக்கு மதிப்புக் கொடுத்து அவங்க போக்குப்படி நடந்துக்க முயற்சி பண்ணுங்க... முதல் சில நாட்கள், ஏன் மாசங்கள் கூட ஆகலாம். உங்களால அவங்களைப் பரிபூரணமா திருப்தி பண்ணமுடியாது போனா என்னவோ ஏதோனு பயந்துடாதீங்க.... திஸ் ஈஸ் கொயட் நாச்சுரல். ஆஸ் டேஸ் கோ பை - நீங்களே வித்தியாசத்தைப் புரிஞ்சிப்பீங்க... என்ன த்யாகு?''

நிமிர்ந்து டாக்டரைப் பார்த்த த்யாகுவின் கண்கள் பளபளத்தன.

டாக்டர் எழுந்து வந்து அவன் தோள்களைத் தட்டிக் கொடுத்தார்:

''மதர் தெரஸாவைப் பத்திக் கேள்விப்பட்டிருக்கீங்க இல்லியா? அவங்க அன்பினால் சாதிக்கமுடியாதது ஒண்ணுமே இல்லைனு அடிக்கடி சொல்லுவாங்க. நீங்க இதை எப்பவும் நினைப்புல வைச்சிருக்கணும். எல்லார்கிட்டயும் பலனை எதிர்பார்க்காம அன்பு செலுத்தக் கத்துக்கிட்டவங்களுக்கு எந்த ப்ராப்ளமும் இருக்காது த்யாகு. அப்புறம் கங்கா, உங்க சித்தி, கண்ணன், நண்பர்கள் எல்லாரையும் அவங்க குறை நிறைகளோட ஏத்துக்கப் பழகிக்குங்க... யு மஸ்ட் லவ் பீபிள் வித் தேர் ப்ளஸ் அண்ட் மைனஸ் பாயிண்ட், அதான் நிஜ அன்பு. ரைட். இனி நீங்க புறப்படலாம். திரும்ப என் க்ளினிக்குக்கு பேஷண்டா வரமாட்டீங்கன்ற நம்பிக்கை எனக்குப் பூரணமா இருக்கு... கம் ஆஸ் மை ஃப்ரெண்ட்... பெஸ்ட் ஆஃப் லக் த்யாகு...''

''தேங்க்யூ டாக்டர், தேங்க்யூ ஃபார் எவ்ரிதிங்.'' கண்ணத்தில் கோடாக இறங்கிய ஜலத்தைத் துடைக்காமலேயே வெளியில் வந்தபோது காற்று தனக்காகவே தென்றலாக வீசுகிற மாதிரி த்யாகுவுக்குத் தோன்றியது. பூக்கள், 'இங்கே பார் த்யாகு, உனக்காக நாங்கள் மலர்ந்திருக்கிறோம்' என்று சொல்வதாகப் பட்டது. வானம்

நீலமாக இருந்தது. கடலலைகள் 'சந்தோஷமாகப் போய் வா' என்று கைகளாகிய அலைகளை வீசுகிறதாய்த் தோன்றியது.

பாரதி சொன்னாரே-

'காற்றே, வா
மகரந்தத் தூளை சுமந்து கொண்டு
மனத்தை மயலுறுத்துகின்ற இனிய வாசனையுடன் வா
இலைகளின் மீதும், நீரலைகளின் மீதும்
உராய்ந்து மிகுந்த ப்ராண ரஸத்தை எங்களுக்குக்
கொண்டு கொடு.
காற்றே வா-'

அது இந்தத் தென்றலைத்தானா?

காற்று, நீர், வானம், அழகு, எல்லாம் இனி எனக்குத்தானா? எனக்கே எனக்குத்தானா?

நினைவுகள் இனித்தன.

அந்த இனிய உணர்வுடனேயே அடுத்துவந்த நாட்களை த்யாகு கழிக்கப் பாடுபட்டான்.

கங்காவின் ஆமா, உங்களால என்ன முடியும், என்ற பேச்சுக்களாலும், பாராமுகத்தாலும் புண்பட்டுப் போகாமல், அவற்றை இனம் கண்டு ஒதுக்க விழிப்புடன் இருந்ததால் பெரும்பகுதியை இனிமையாகவே தள்ள முடிந்தது.

கங்காவுக்குத் தெரியாத்தனம் உண்டு. அவள் வேண்டுமென்றே இப்படிப் பேசவில்லை; நடந்து கொள்ளவில்லை; டாக்டர் சொன்னபடி நான்தான் அனுசரித்துப் போகவேண்டும் - என்று சதா மனசுக்குள் முணுமுணுத்துக்கொண்டு விட்டுக்கொடுக்க த்யாகு பழகிக் கொண்டான்.

சினிமாவுக்கு கங்கா, கண்ணனைக் கூட்டிப் போனாள். பெரியத்தை, மாமா வீடு என்று அவள் பட்டியல் போட்ட இடங்களுக்கு அவளோடு போய் நின்றான். யார் எது சொன்னாலும் சின்ன சிரிப்போடு அவற்றை ஏற்றுக்கொள்ளவும் முயன்றான்.

இத்தனை கட்டுப்பாட்டையும் மீறி மனசு பேதலிக்கிற சமயங்களில் நாணாவிடம் ஓடிப்போனான்.



வித்யாவையும் நாணாவையும் கண் குளிரப் பார்த்து அவர்களை விட்டு இங்கு அங்கு நகராமல் நிதானம், மென்மை, அன்பை நெஞ்சுக்குள் வளர்த்துக்கொண்டான்.

முடிந்தபோதெல்லாம் கங்காவையும் வித்யாவையும் சந்திக்கச் செய்தான்.

கங்காவின் நுனிநாக்குப் பேச்சையும், எங்காத்துலே, எங்க மதுராந்தகத்துப் பீத்தலையும் புன்னகையோடு தாங்கி, பக்குவமாய்ப் புத்தி சொல்லி வித்யா சமாளிப்பாள் என்று நம்பிக்கையை இழக்காமல் இருந்தான்.

இந்த நம்பிக்கையும், தானே கூட்டிச்சேர்த்துக்கொண்ட மனபலமும் வாழ்க்கையை வித்தியாசமாகச் சித்தரிக்க, அந்த இனிமையில் முழுசாய் மூன்று மாசங்களை த்யாகு குடியைத் தொடாமல் கழித்தது நிஜம்தான்.

## 22

''த்யாகுகிட்ட விவரத்தைச் சொல்லிட்டேளா நாணா?''

ரொட்டித் துண்டில் வெண்ணெயைத் தடவிக்கொண்டிருந்த நாணா தயக்கத்துடன், இல்லை என்று தலை ஆட்டினான்.

''சொல்ல வேண்டாமா? டோண்ட் யூ திங்க் இட்ஸ் டைம்?''

''சொல்லணும்... ஆனா அவன் இந்த நியூஸை எப்படி எடுத்துப்பானோனு நினைச்சா சங்கடமா இருக்கு...''

வித்யா கண்களைச் சிமிட்டாமல் கணவனைப் பார்த்தாள். பிறகு சன்னக் குரலில் நிதானமாகப் பேசினாள்;

''இப்படி சங்கடப்படறவர் அந்த ஆஃபருக்கு ஒத்துண்டு இருக்கக்கூடாது நாணா... கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசைனா எப்படி? ம்?''

கத்தி, ரொட்டித் துண்டை நாணா தட்டில் வைத்தான். ஆயாசத்துடன் சேரில் சாய்ந்துகொண்டான்.

''இந்த ஆஃபர் என் வேலை சம்பந்தப்பட்டது வித்யா... ஐ காண்ட் ஸே நோ டு தட்... எத்தனை பேருக்கு இப்படி ஒரு

ஆப்பர்சூனிடி வரும்? த்யாகுகிட்ட சொல்ற விதத்துலே சொன்னா அவன் புரிஞ்சிப்பாங்கற நம்பிக்கை எனக்கு இருக்கு...''

''அப்போ சொல்லுங்கோ... இன்னும் ரெண்டு வாரம்கூட இல்லே... வீணா தாமதப்படுத்தறதுலே என்ன லாபம்?''

''அவன் அடிபட்டுப் போவான் வித்யா... நிச்சயம்...''

''சரி... போவார்... ஐ அக்ரி வித் யூ... அதுக்காக சொல்லாமலேயே இருந்தா எப்படி? கடைசிலே அவருக்குத் தெரியாமலா போயிடும்? இப்படி என்னை அன்னியமா நினைக்க ஒதுக்கிட்டயேனு அப்ப மட்டும் அவர் வருத்தப்படமாட்டாரா? இப்பவே சொல்லிட்டா, இன்னும் ரெண்டு வாரத்துக்குள்ள தன்னைத் தேத்திண்டு தயார் பண்ணிக்க டைம் இருக்கில்லையா நாணா?''

நாணா சிந்தனையுடன் டோஸ்ட்டை எடுத்துக் கடித்தான். ஒன்றைத் தின்றுவிட்டு இரண்டாவது வேண்டாம் என்பது போலத் தட்டை நகர்த்தினான்.

''பசிக்கலை வித்யா... ஜஸ்ட் கிவ் மீ காபி...''

காபியுடன் வந்து நின்றவளைப் பார்த்து சின்னதாய்ப் புன்னகைத்தான்.

''யு ஆர் ரைட்... வீண் காலதாமதம் செய்யறதுலே பெனிஃபிட் எதுவும் இல்லதான். ஐ'ல் டெல் ஹிம் டுடே. சாயங்காலம் ஆபீஸுக்கு வரச்சொல்லி அங்கயே பேசிடறேன். ஓ.கே?''

சொன்னபடி த்யாகுவை மாலை ஐந்துக்கு அலுவலகத்துக்கு வரச்சொல்லி நாணா போன் செய்தான்.

த்யாகு இவன் அறையில் நுழைந்தபோது மணி ஐந்து பத்து.

''என்னடா. என்ன விசேஷம்? ஆபீஸுக்கு வானு போன் பண்ணினே?''

நாணா மென்மையாய்ச் சிரித்தான்.

''விஷயம் இருக்கு - சொல்றேன், உட்கார். என்ன சாப்பிடறே? ஆஸ் யூஷுவல் மசால்தோசை அண்ட் காபி?''

த்யாகு ''ஆமாம்'' என்று தலையை ஆட்டினதும், பையனை அழைத்து டிபன் வாங்கிவரச் சொன்னான்.



டிபன் வந்தது.

ஊர்க் கதைகளை பேசிக்கொண்டு தோசையைத் தின்றார்கள். காபி கப்பைக் கையில் எடுத்தபோது த்யாகு, ''இந்த மாதிரி வம்பு அடிக்கறத்துக்காகத்தான் மெனக்கெட்டு ஆபீஸுக்கு வரச் சொன்னயா? இந்தப் பேச்சை விட்டுலேயே பேசி இருக்கலாமே...!'' என்றதும் நாணா எழுந்து நின்றான்.

ஏ.ஸி. மெஷினிடம் சென்று அதன்மேல் மெல்லியதாய் படிந்திருந்த தூசியில் நாணா நாணா என்று இரண்டு தரம் எழுதினான். பின் சட்டென்று பேசினான்:

''த்யாகு... நா பிலிப்பைன்ஸ் போகப் போறேன்டா...''

வாயருகில் கொண்டுபோன கோப்பையைத் த்யாகு தழைத்தான்.

''எதுக்குடா இப்ப பிலிப்பைன்ஸுக்கு திடீர்னு! எத்தனை நாளைக்கு?''

''எத்தனை நாளைக்குனு கேக்காதே, எத்தனை மாசங் கழிச்சுனு கேளு...''

''வாட்?''

த்யாகுவின் அதிர்ச்சி வெளிப்படையாகப் பளிச்சிட்டது.

நின்ற இடத்தைவிட்டு நகராமலேயே நாணா பேசினான்:

''பிலிப்பைன்ஸ்லே ஒரு முக்கியமான க்ளையண்டோட வேலையைக் கவனிக்க நா போறதுதான் சரினு கம்பெனிலே ஃபீல் பண்றா... அதனால...''

''அதனாலே?''

''நானும் சரினு சொல்லிட்டேன் த்யாகு.''

காபிக் கோப்பையை ஓசையுடன் த்யாகு மேஜைமேல் வைத்தான்.

''எத்தனை மாச வேலை?''

நாணா கொஞ்சம் தயங்கினான்.

''மே பி ஸிக்ஸ் மன்த்ஸ், ஆர் மோர்.''

''என்...னது...! ஆறு மாசமா? அதுக்கும் மேலயேவா? நாணா... என்னடா இது இப்படித் திடீர்னு குண்டைத் தூக்கிப் போடறே!''

பேசிக்கொண்டே இரண்டு எட்டில் நண்பனை நெருங்கிய த்யாகு அவன் தோளில் கை வைத்து உலுக்கினான்.

தான் எதிர்பார்த்த நினுசிலேயே த்யாகு அடிபட்டுப் போய்விட, நாணா அவன் கையைப்பற்றி அழுத்தினான்.

''டேக் இட் ஈஸி த்யாகு... இப்ப நீ இத்தனை பதட்டப்படற மாதிரி நா என்ன சொல்லிட்டேன்? ம்?''

''உன் சமாதானத்தைத் தூக்கிக் குப்பையிலே போடு நாணா... டெல் மீ. ஏன் இந்தத் திடீர் முடிவு? சொல்லுடா.''

''திடீர் டிஸிஷன் இல்லே த்யாகு... ஒரு மாசமாவே கம்பெனியிலே பேசிண்டிருக்கிற சமாசாரம்தான்...''

''ஒரு மாசமாவா? அப்ப, உடனடியா என்கிட்ட நீ ஏன் சொல்லலை?''

''டிஸைட் பண்ணப்புறம் சொல்லலாம்னுதான்...''

''எப்படி டிஸைட் பண்ணினே?''

''..........''

த்யாகு வேகமாக அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்தான்; நின்றான். நண்பனின் கைகளைப் பற்றிக் கொண்டான்.

''ஒரு மாசமா தெரிஞ்ச விஷயத்தை ஏன் நாணா என்கிட்ட அப்பவே சொல்லலை? நா உன்னைத் தடுத்துடுவேன்னு நினைச்சியா? நா கொஞ்ச நாளா உன்னை ரொம்ப தொந்தரவு பண்ணறேனாடா? அதுதான் என்னை விட்டுட்டு எங்கயாவது தூரதேசமாப் போயிடலாம்னு தீர்மானம் பண்ணிட்டியாடா? என்னடா இது திடீர் ஃபாரின் ட்ரிப்! நாணா... நா... வந்து...''

மேலே பேசமுடியாதது போலக் குரல் அடைத்துப் போக, த்யாகு சட்டென்று மேஜைமேல் சரிந்து உட்கார்ந்தான்.

நாணா கிட்ட வந்து அவன் தோள்களைத் தட்டினான்:

''வாட் ஈஸ் ஆல் திஸ் த்யாகு? சின்னக் குழந்தை மாதிரி வேண்டாததை எல்லாம் கற்பனை பண்ணிண்டு இப்படிப் பேசறே? தொந்தரவு அது. இதுனு என்டா பெரியபெரிய வார்த்தை எல்லாம்



சொல்றே? திடீர் ட்ரிப் இல்லடா த்யாகு. என் கம்பெனி ஒரு இன்டர்நாஷனல் ஆர்கனைசேஷன்னு உனக்குத் தெரியும். இதுக்கு முன்னால மூணு தரம் நா கம்பெனி விஷயமா அப்ராட் போனவன் தான்டா. இன்ஃபாக்ட் நாம்ப முதமுதல்ல சந்திச்சப்போகூட நா அப்பத்தான் மூணுமாசம் சிங்கப்பூர் க்ளையண்ட் வேலைகளைக் கவனிச்சுட்டுத் திரும்பி இருந்தேன், டோண்ட் யு ரிமெம்பர்?''

சில நிமிஷங்கள் மௌனம். மீண்டும் பேசத் துவங்கியபோது த்யாகுவின் குரல் தழுதழுத்திருந்தது.

''நீ ஏற்கெனவே இப்படிப் போய்ப் பழக்கம் உள்ளவன்தான், ஆனாலும்... வந்து இப்போ... நீதான் போகணுமா நாணா? வேற யாரையாவது இந்த தரம் மட்டும் போகச் சொல்லக் கூடாதாடா? ப்ளீஸ்டா... ப்ளீஸ்... இன்னும் கொஞ்ச நாளைக்கு நீ என்கூடவே இருந்தா எனக்கு ரொம்ப தெம்பா இருக்கும்டா நாணா... ப்ளீஸ்... நா... நா... சொல்றது புரியறதாடா?''

கடைசி வாக்கியத்தை முழுசாய்ப் பேசமுடியாதவிதமாய்ப் பேச்சு கிசுகிசுப்பாய் வெளிவந்தது.

இந்தத் தவிப்பும், கலங்கலும் அடிவயிற்றில் வேதனையை உண்டுபண்ண, என்ன பதில் சொல்லி இவனைத் தேற்றுவது என்று புரியாமல் நாணா அப்படியே நின்றான். பிறகு யோசித்து வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்துப் பேசினான்:

''ஐ'ம் ஸாரிடா த்யாகு... ஐ அண்டர்ஸ்டாண்ட் யுவர் ஃபீலிங்ஸ் வெரிவெல்... ஆனா த்யாகு, இனிமேலயும் நீ இப்படிப் பயப்படறத்துக்குக் காரணமே இல்லடா... நிஜம்மா சொல்றேன், நீ கலங்கறத்துக்கு ரீஸனே இல்லே.. நீ இப்ப பழைய த்யாகு இல்லே... புது த்யாகு... மனசுலே தன்னம்பிக்கை, தைரியம் நிறைஞ்ச த்யாகு. லோ, பழைய த்யாகுவை நினைச்சு அனாவசியமா நீ வேதனைப்படறது தப்பு... மோர் ஓவர், அளவுக்கு மீறி நீ யார் மேலயும் சாஞ்சிக்கிறது கூடாதுனு டாக்டர் சொல்லி இருக்காரே, ஞாபகம் இல்லே? உனக்கு இனிமே நானோ, இல்ல டாக்டர் ரெட்டியோ தேவை இல்லைடா... யு ஹாவ் லேர்ண்ட் டு ஸ்டாண்ட் ஆன் யுவர் ஓன் லெக்ஸ்... அப்புறம் இந்த அசட்டுப் பயம் எதுக்கு, இல்ல இந்தத் தவிப்புதான் எதுக்கு? ம்...?''

த்யாகு பேசாமல் இருக்க, நாணாவே தொடர்ந்தான்:

''நீ எனக்கு பாரம் ஆயிட்டேன்னோ, உன்னை விட்டு ஓடணும்னோ நா வலிய இந்த ட்ரிப்பை ப்ளான் பண்ணலை. ப்ளீஸ் பிலீவ் மீ. இந்த மாதிரி நல்ல சந்தர்ப்பங்களெல்லாம் அடிக்கடி ஒரு மனுஷனுக்கு அமைஞ்சுடாது. வர்றப்போ அதை உபயோகப் படுத்திக்கிறவன்தான் புத்திசாலி. என்னத்யாகு, ஆம் ஐ நாட் கரெக்ட்? இப்ப பிலிப்பைன்ஸ் போயிட்டு வந்தேன்னா, அந்த வேலையை ஸக்ஸஸ்ஃபுல்லா முடிச்சுட்டேன்னா, நாளைக்கு இந்தக் கம்பெனியிலே பார்ட்னர் ஆற சான்ஸ் எனக்கு இருக்குடா... அதை நா நினைக்கப் பார்க்கணும் இல்லையா? வித்யா, குழந்தைகளுக்கு இன்னும் உசந்த வாழ்க்கையைக் கொடுக்கக்கூடிய வாய்ப்பு இருக்குன்னா, ஐ மஸ்ட் ட்ரை இட்... இல்லையா த்யாகு? நா சொல்றது உனக்குப் புரியுதா?...''

சின்னக் குரலில் நிறுத்திநிறுத்தி, தீவிரமாகப் பேசும் நாணாவை த்யாகு நிமிர்ந்து பார்த்தான்.

எத்தனை விவேகத்தோடு பேசுகிறான் இந்த நாணா?

என் மனசு புண்படாமல் இருக்க எத்தனை அழகாய் நிலைமையை விளக்குகிறான்?

தன் குடும்பத்துக்குத் தான் செய்ய வேண்டிய கடமையிலிருந்து நழுவுவது முட்டாள்தனம் என்பதை எத்தனை பக்குவமாய் எடுத்துச் சொல்கிறான்?

இந்த திடமும், விவேகமும் எனக்கு ஏன் இல்லை?

இவனோடு இத்தனை நெருங்கிப் பழகியும் இதை எல்லாம் கொஞ்சமாவது நான் கற்றுக் கொள்ளவிட்டால் எப்படி?

டாக்டர் ரெட்டி சொன்னது போல் அவரவர் பிரச்சினைகளை அவரவரே தீர்வு செய்து கொள்வதுதானே புத்திசாலித்தனம்!

அதை விட்டுவிட்டு ஆயுசுபர்யந்தம் நாணா என்கூடவே இருக்கவேண்டும் என்று நான் எதிர்பார்ப்பது குழந்தைத்தனமான ஆசை அல்லவா?

தவிர, நாணா சொல்லுகிற மாதிரி நான் இப்போது பழைய குடிகார த்யாகு இல்லையே? ஐ'ம் எ நியூ த்யாகு... நல்லது கெட்டதை இனம் கண்டு ஏற்க, ஒதுக்கத் தெரிந்த த்யாகு... அப்புறமும் கலக்கம் எதற்கு? பயம் எதற்கு?



யோசிக்கயோசிக்க த்யாகு தெளிந்துபோனான்.

தன் தெளிவை நண்பனுக்கு உணர்த்தும் வகையில் அழகாய்ப் புன்னகைத்தான்.

''யூ ஆர் செண்ட் பர்ஸெண்ட் கரெக்ட் நாணா... நா அனாவசியமா அவஸ்தைப்படறத்துக்கு அவசியமே இல்லே... திடும்னு நீ போகப்போறேன்னு கேள்விப்பட்டதும் ஒரு நிமிஷம் ஷாக் அடிச்சமாதிரி ஆயிடுத்து. அதான் நடுங்கிப் போயிட்டேன். நௌ, ஐ அண்டர்ஸ்டாண்ட் தி சிச்சுவேஷன் க்ளியர்லி. சொல்லு... என்ன அஸைன்மெண்ட் இது. எத்தனை நாளாகும்? எல்லாம் விவரமா சொல்லுடா...''

நாணா சொன்னான். சந்தோஷத்தோடு, த்யாகு நிலைமையைப் புரிந்துகொண்டு ப்ராக்டிகலாக நடந்து கொள்கிறான் என்கிற சந்தோஷத்தோடு சொன்னான்.

ஆறிலிருந்து எட்டு மாசங்கள் ஆகும் என்பதால் குடும்பத்தை அழைத்துப் போக கம்பெனி அனுமதி வழங்கி இருக்கிறதாம். இன்னும் இரண்டு வாரங்களில் வித்யா, குழந்தைகளோடு ஒன்றாகவே புறப்பட எண்ணமாம். பாஸ்போர்ட், விசா, மற்ற ஏற்பாடுகளை கம்பெனி கவனிக்கிறதாம். பிலிப்பைன்ஸின் தலைநகரமான மணிலா நகரத்தில்தான் வேலையாம். ஒருவாரம் போல ஹோட்டலில் தங்கிக்கொண்டு வீடு பார்த்து செட்டில் ஆகத் திட்டமாம்.

''ஆமாம் குழந்தைகளோட படிப்பு?''

அதையும் யோசித்துவிட்டார்களாம். ஆறு மாசத்துக்கு வித்யா வீட்டிலேயே கோச் செய்து இங்கு வந்து தகுந்த வகுப்பில் சேர்த்துவிட்டால் படிப்பும் பாழாகாதாம்.

அன்றிரவும், அதை அடுத்து வந்த இரவுகளும் நாணா வெளிநாட்டுக்குப் போகப் போகிறான், மனசு சங்கடப்படும் போதெல்லாம் கிட்டத்தில் இருந்து தைரியம் சொல்ல அவன் இருக்கமாட்டான் என்பதை நினைத்துநினைத்து த்யாகு நிறைய தவித்துத்தான் போனான்.

பகலில் பிசாசாய் ஆபீஸ் வேலைகளில் கவனத்தைச் செலுத்தியோ, மாலையில் கங்காவோடு வெளியில் போய் வந்தோ, நாணா வித்யாவைச் சந்தித்தோ மனசைக் கட்டுப்படுத்திக்

கொண்டவனுக்கு இரவு நேரங்களைத்தான் நிம்மதியாய்க் கழிக்கத் தெரியாமல் போயிற்று.

என்னென்னவோ அசட்டுத் தர்க்கங்கள். என்னென்னமோ சமாதானங்கள் என்று தனக்குத்தானே விவாதித்துக்கொண்டான்; தேற்றிக்கொண்டான்.

அந்த சனிக்கிழமை நாணா குடும்பத்துடன் பிலிப்பைன் ஸுக்குக் கிளம்பினான்.

அன்று காலை த்யாகுவை நாணா தனிமையில் அழைத்துச் சென்றான்.

''நீயும் நானும் வேணா டாக்டர் ரெட்டியைப் போய்ப் பார்த்துட்டு வரலாமா த்யாகு?''

த்யாகு 'ஏன்' என்று ஜாடை காட்டினான்.

''இல்லே... வந்து... நா பிலிப்பைன்ஸ் போறதை அவர்கிட்ட இன்னும் சொல்லலை. ஒரு தரம் போன் பண்ணினேன், அவர் கிடைக்கலை, அதான்...''

நாணா இந்தக் காரணத்துக்காக மட்டுமில்லாமல் 'நான் வெளிநாட்டுக்குப் போகிறேன் டாக்டர், இனி இவனுக்கு நீங்கள்தான் எல்லாம்' என்று கோடி காட்டுவதற்காகவும்தான் டாக்டரைப் பார்க்கப் போகலாம் என்று சொல்கிறான் என்பதைப் புரிந்துகொள்ள முடியவே, த்யாகு பதில் ஏதும் பேசாமல் சும்மா நின்றான். அப்புறம் நம்பிக்கை தரும் சிரிப்பு ஒன்றைச் சிரித்து,, ''டோண்ட் வொர்ரி நாணா... ஐ'ல் பி ஆல்ரைட்!'' என்றான்.

''உனக்கு இஷ்டம் இல்லாட்டா வேண்டாம்டா. ஆனா, ஏதாவது ப்ராப்ளம்னா நீ அவரை உடனே போய்ப் பார்க்கணும். தயங்கக்கூடாது. ஓ.கே.?''

''ஓ.கே...!''

''அடிக்கடி எனக்கு லெட்டர் எழுது. நானும் எழுதறேன். வருத்தம், சந்தோஷம்னு எதைப் பத்தியும் ஃப்ராங்கா நீ எழுதலாம், என்ன த்யாகு?''

''ம்.........''



த்யாகு புறப்பட்டுப் போன பிறகு நாணா, டாக்டர் ரெட்டியுடன் போனில் தொடர்புகொண்டு தான் புறப்படுவதைப் பற்றிக் கூறினான். த்யாகு நல்லவிதமாய் இருப்பதைப் பற்றிச் சொல்லி, ''ப்ளீஸ் டேக் கேர் ஆஃப் ஹிம் டாக்டர்'' என்றும் கேட்டுக்கொண்டான்.

ஏர் - போர்ட்டுக்கு கங்கா, கண்ணன் சகிதம் வந்து நின்ற த்யாகுவுக்குப் படபடப்பு ஏகமாய் இருந்தது. இரண்டு வார்த்தை பேசமுடியாதபடி தொண்டை இறுகிப்போனது. கண்கள் நொடிக்கொரு தடவை கலங்கிப் போக, காதுக்குள் ஙிமுக்ஙிமுக்கென்று என்னவோ இரைச்சல்.

அத்தனை பேர்கள் எதிரில் எதுவும் காட்டிக் கொள்ளாமல் இருந்தவன், வீட்டுக்கு வந்த பிறகு தன் இதயத்திலிருந்து எதையோ யாரோ கழட்டிக்கொண்டு போய்விட்ட சூன்ய உணர்வைத் தாங்கமாட்டாமல் பாத்ரூம் கதவைச் சாத்திக்கொண்டு விசித்துவிசித்து அழுதான்.

தொடர்ந்து வந்த நாட்களை நாணா இல்லாமல், அவன் வீட்டுக்குப் போகாமல், வித்யா, குழந்தைகளோடு விளையாடாமல், பேசாமல் கழிப்பது த்யாகுவுக்குப் ப்ரும்மப்ரயத்தனமாகவே இருந்தது.

அப்புறம், நாணாவிடமிருந்து வாரம் ஒரு லெட்டர் வர ஆரம்பித்த பிறகு, மற்ற விஷயங்களில் ஈடுபாட்டை வளர்த்துக் கொண்டபிறகு, அந்த பாரம் கொஞ்சம்கொஞ்சமாகக் குறையத் தொடங்கியது.

நாணா போய் ஒரு மாசம் ஆகியிருக்கும்.

அன்று ஆபீஸிலிருந்து த்யாகு சீக்கிரமாகத் திரும்பி விட்டான். ம்யூஸிக் அகாடமி ஹாலில் நேதனூரி கச்சேரி. கங்கா வந்தால் அதற்கு அவளையும் அழைத்துப் போகலாம். இல்லை அவள் வேறு ஏதாவது ப்ளான் வைத்திருந்தால்? என்ன பெரிய ப்ளான் இருக்கப் போகிறது? ஒன்று, புதுசாய் ரிலீஸான மசாலா தமிழ்ப் படம் அல்லது மாமா வீடு, எட்லெட்ரா தானே? - அதற்குப் போகலாம் என்ற நினைப்பில் சீக்கிரம் வந்துவிட்டான்.

போர்டிகோவில் நிறுத்திவிட்டு உள்ளே நுழைந்தவன் கங்காவை ஹாலில், உள் படுக்கை அறையில் காணாமல் பின்கட்டுக்குப் போனான்.

தாழ்வாரத்தில் மாவு அரைத்துக்கொண்டு சமையற்கார மாமி, அவள் பக்கத்தில் இவனுக்கு முதுகைக் காட்டிக் கொண்டு கங்கா.

இவன் வந்தது அவர்களுக்குக் கேட்காமல் இருந்திருக்க வேண்டும்.

சுவாரஸ்யமான சம்பாஷணையில் இரண்டு பேரும் இருந்தார்கள்.

"நவரத்ன வளை பண்ணிப் போட்டுமானு அம்மா நச்சரிக்கிறா... யாருக்கு வேணும் நவரத்ன வளையும் மண்ணாங் கட்டியும்? இருக்கறதைப் போட்டுக்கவே இங்க பொண் குழந்தையைக் காணோமாம்... வளையாம் வளை... அக்காக்கு பண்ணிப்போடு, அவளுக்கு ரெண்டு பொண் குழந்தைகள் இருக்கு; எனக்கு என்ன கேடு இப்பனு சொல்லிட்டேன்..."

கங்கா அழுகிறாளா?

குரல் பிசிறடிக்கிறதே!

"ஊகூம்... உன் அழகுக்கும், சமத்துக்கும், பணத்துக்கும் நாலு பெண் குழந்தைகள் உன்னைக் கொண்டு பொறந்தாக்கூடத்தான் நன்னாதான் இருக்கும். வைரமா உன்னைப் பெத்தவ அதுகளுக்கு இழைப்பா... ஆனா இங்க ஒண்ணுக்கே வழியைக் காணோமே! இது என்ன அநியாயமோ..."

மாமி ஏத்துகிறாளா, இல்லை சமாதானம் செய்கிறாளா?

"அதுக்கு என்ன பண்றது மாமி... எல்லாம் அவா அவா தலை எழுத்துப்படிதானே நடக்கும்? ஆம்படையான் கெட்டி ஆம்பளையா இருந்தா கவலை இல்லே... ஆனா... இங்கே? விடுங்கோ மாமி..."

"இப்படிச் சதா மருகிமருகி உடம்பைக் கெடுத்துக்காதே கங்கா... உனக்கு என்ன அப்படி வயசாயிடுத்து? உன் தங்கமான குணத்துக்கு பகவான் ஒரு குறையும் வைக்கமாட்டான்... பாத்துண்டே இரேன்..."

மேற்கொண்டு அந்தச் சம்பாஷணையைக் கேட்கப் பிடிக்காமல் த்யாகு ஓசைப்படாமல் திரும்பி நடந்தான்.



பெண் குழந்தை இல்லை என்ற ஆதங்கத்தை கங்கா இப்படி வெளிப்படுத்தி அவன் கேட்பது இது மூன்றாம் முறை.

முதலில் டாக்டர் ராமபத்ரனிடம்,

அப்புறம் பெரியம்மாவிடம்,

இப்போது சமையல்கார மாமி...

கடவுளே! இந்தப் புலம்பலை நிறுத்த வழி என்ன?

நான் என்ன பண்ணுவேன்?

ஒரு நல்ல கணவனாக கங்காவிடம் என்னால் நடந்து கொள்ள முடியவில்லை என்பது நிஜம்தானே? அவளைத் திருப்தி பண்ண என்னால் இயலவில்லை என்பது வாஸ்தவம் தானே?

நாளடைவில் சரியாகிவிடும் என்று டாக்டர் சொன்னாரே, ஏன் அது பலிக்கவில்லை?

இப்போது சமையல்கார மாமி...

நாளைக்கு, தோட்டக்காரன், ட்ரைவர் என்று ஒருவர் விடாமல் அங்கலாய்ப்பாளோ?

இதை நிறுத்த என்ன வழி?

எ....ன்...ன...வ...ழி?

## 23

கடவுளே, கடவுளே...!

நான் என்ன செய்வேன்?

எப்படி இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண்பேன்?

எத்தனை முயன்றும் என்னால் இயலவில்லையே!

நான் என்ன செய்வேன்?

டாக்டர் ரெட்டியைச் சந்தித்து விவரத்தைச் சொல்லலாமா?

சொன்னால் சரியாகப் புரிந்துகொள்வாரா?

ஆமாம், என்னவென்று சொல்வது?

வந்து...வந்து... டாக்டர், என் மனைவி ஒரு பெண் குழந்தை வேண்டும் என்று ரொம்ப ஆசைப்படுகிறாள். என்னால் வந்து... வந்து

டாக்டர், ஹௌ எவர் ஹார்ட் ஐ ட்ரை, ஐ' ம் நாட் ஏபிள் டு ஹால் ரிலேஷன் வித் ஹர்... எனக்கு உங்களால உதவ முடியுமா டாக்டர்... ப்ளீஸ்...ப்ளீஸ் - என்றா?

சே...! இந்த மாதிரி வெட்கம் இல்லாமல் டாக்டரிடம் எப்படிப் பேசுவது?

ஏன், க்ளினிக்கில் அட்மிட் ஆகயிருந்தபோது பேசவில்லை? அத்தனையும் ஒன்று விடாமல் கொட்டவில்லை?

அ...அது...அப்போது விஷயம் வேறு. ஐ வாஸ் எ பேஷண்ட் தென்.. ஆனால் இப்போது நான் ஒரு நார்மலான மனிதன்... அதனால அன்று செய்ததை எல்லாம் இன்றும் செய்யமுடியும் என்று எதிர்பார்ப்பது டூமச்...

அதுவும் தவிர, அன்று டாக்டர் என்ன சொன்னார்?

உடனடியா எந்தப் பிரச்னையும் எதிர்பார்க்காதே; நீ நல்ல கணவனாக நடந்துகொள்ள ஆறு மாசங்களோ, அதற்கு மேலேயோ... ஆகலாம்... ஸோ, உன்னால் இயலாததைக் குறித்து என்னவோ ஏதோ என்று பயந்து போகாதே - என்றுதானே?

நான் டிஸ்சார்ஜ் ஆகி எத்தனை மாசங்கள் ஆகின்றன?

நாட் ஈவன் - ஃபைவ் மன்த்ஸ்...

இப்போது டாக்டரிடம் இந்தப் ப்ராப்ளத்துடன் போனால் என்ன அவசரம் த்யாகு, டேக் இட்ஸ் ஈஸி என்பாரோ?

கங்கா இதுக்காக ரொம்ப அலைகிறாள் என்று மனசுக்குள் தப்பாக நினைத்துக்கொள்வாரோ?

என்ன இழவு இது...

இப்போது நான் என்ன பண்ணவேண்டும்?

டாக்டர் ரெட்டி வேண்டாம் என்றால் ஹூ எல்ஸ்?

திடுமென்று தமிழ்ப் பத்திரிகைகளில் காணப்படும் விளம்பரங்கள் த்யாகுவுக்குள் எட்டிப் பார்த்தன.

வயோதிக வாலிபர்களே-

சின்ன வயசு கிழவர்களே-

தாம்பத்தியத்தை அனுபவிக்க இயலாது ஏங்கும் ஆண்களே-



இந்த விளம்பரங்களெல்லாம் நிஜம்தானா?

போய்ப் பார்க்கலாமா?

பலன் இருக்குமா?

நாலு நாட்களுக்குக் குழம்போ குழம்பு என்று குழம்பிவிட்டு ஐந்தாம் நாள் மாலை இருட்டின பிறகு விளம்பரத்தில் கண்ட ஒரு விலாசத்தைத் தேடி த்யாகு போனான்.

வைத்தியர் ஊரில் இல்லையாம், ஊர் போயிருக்கிறாராம். அடுத்த அட்ரஸ்.

சரியான சந்து. அதில் ரூக்கோட்டை அளவு ஒரு சின்ன அறை. ஓட்டுக் கட்டடம்.

வைத்தியன் என்று தன்னைச் சொல்லிக்கொண்டு கருட்டை பாகவதர் ஜில்பா கிராப்பும், இறங்கின கிருதாவுமாய் உட்கார்ந்திருந்தவனைச் சுற்றி ஜகஜகவென்று கூட்டம்.

அந்தக் காட்சியே மனசுக்குப் பிடிக்காமல் போக, மேற்கொண்டு இது விஷயமாய் அலையாமல் த்யாகு வீட்டை நோக்கி வண்டியைச் செலுத்தினான்.

சிட்டுக்குருவி லேகியம், தங்கபஸ்பம், அது, இது என்கிறார்களே, ட்ரை பண்ணிப் பார்க்கலாமா?

பேசாமல் ஒரு நாட்டுமருந்துக் கடைக்குப் போய் 'என் நண்பன் ஒருவன் இந்தக் குறைபாடால் அவஸ்தைப்படுகிறான், இதற்கு மருந்து கொடுங்கள்' என்று கேட்டால், ஏதாவது மூலிகை, பஸ்பம் தரமாட்டானா?

வாங்கி வந்து ஒரு பதினைந்து நாட்களுக்குச் சாப்பிட்டுப் பார்ப்பது, பலன் இருந்தால் தொடர்வது, இல்லாவிட்டால் தலையைச் சுற்றிப் போடா சாமி என்று தூர எறிவது...

செய்தால் என்ன?

திஸ் ஸீம்ஸ் டு பி த பெஸ்ட் மெதட்...

தெரிந்தவர்கள் பார்க்கும் தொல்லை இல்லை, யாருக்கும் தெரியும் என்ற பயம் இல்லை...

ஆ...இதிலும் ஒரு சிக்கல் இருக்கிறதே..?

நான் இப்போது தினம் ஆண்டப்யூஸ் சாப்பிடுகிறேன். இதோடு இந்த நாட்டுமருந்து ஒத்துக்கொள்ளுமா? ஆல்ஹாலை விஷமாக மாற்றுவது போல இதையும் ஏடாகூடமாக மாற்ற, அது உசிருக்கு ஆபத்தாக முடிந்தால்?

ஐயோ...! நான் என்ன பண்ணுவேன்?

இந்தத் தவிப்புக்கு எப்படி முடிவு கட்டுவேன்?

நாணா தடியன் இருந்து தொலைந்தாலாவது, டேய் இதுக்கு ஒரு வழி சொல்லு என்று கேட்கலாம்.

அவனும் போய்த் தொலைந்துவிட்டான்.

மணிலாவில் இதற்கு ஏதாவது மருந்து இருக்குமோ? எழுதலாமா?

சட் - என்ன கஷ்டகாலம் இது...!

முள் மீது உட்கார்ந்துவிட்ட அவஸ்தையுடன் அடுத்து வந்த நாட்களைக் கழித்த த்யாகு, கங்காவின் புலம்பலை இன்னொரு முறை காதுபடக் கேட்க நேர்ந்ததும் சீர்செய்ய முடியாதபடி உடைந்துதான் போனான்.

ரொம்ப வருஷங்களாக த்யாகுவிடமிருந்து விலகித் தனி அறையில் மகனுடன் படுப்பதைப் பழக்கமாகக் கொண்டுவிட்ட கங்கா, க்ளினிக்கிலிருந்து த்யாகு வந்ததும் வித்யா சொல்லியோ, இல்லை தானாகத்தானோ மாடி அறைக்கே தங்கள் படுக்கைகளையும் மாற்றிக்கொண்டாள்.

புதுசாய் வாங்கின ஸ்டீரியோவில் இசைத்தட்டுகளைப் போட்டுவிட்டு இரவு சாப்பாடு ஆன பிறகு, அப்பாவும் பிள்ளையுமாய் ட்ரேட் விளையாடி, மெக்கானோ செட்டில் உருவங்கள் செய்யும் நாழிகையில் கங்காவும் அந்த வாரத்துப் பத்திரிகை ஒன்றுடன் அங்கேயே இருப்பாள்.

இந்த நாலரை மாசங்களில் பல தடவை இல்லாவிடினும் சில தடவையாவது த்யாகு கங்காவை நெருங்க முயன்றதுண்டுதான்.

பகிரதப் ப்ரயத்தனம் பண்ணிக்கூட எந்த வகையிலும் தன்னால் நினைத்ததைச் சாதிக்கமுடியாமல் போன பிறகு கங்காவை மீண்டும் நெருங்கக்கூட த்யாகு பயப்படுவது நிஜம்.



முதல் ஓரிரு முறைகளுக்கு முகம் காட்டாமல் இருந்த கங்கா, 'ப்ச்.., என்றும், 'என்தலை எழுத்து' என்றும் 'ஐயோ... ஐயோ!' என்று அரற்றியும் மனசில் தோன்றிய ஏமாற்றத்தை வார்த்தைகளாக வெளியில் கொட்ட ஆரம்பித்ததும் த்யாகுவின் மிரட்சி அதிகமாயிற்றே ஒழியக் குறையவில்லை.

மனசு சந்தோஷமாக இருக்கும் நாளில் - ஆபீஸில் பளிச்சென்று வேலை செய்து பாராட்டுகளைப் பெற்று, வீட்டிலும் கண்ணனுக்குப் புரியாத பாடத்தை அழகாக விளக்கி 'ஹை... உனக்கு நிறைய புத்திதாம்ப்பா' என்று பிள்ளையின் மதிப்பைப் பெற்று உள்ளம் துள்ளிக் கொண்டிருக்கும் நாளில் - இன்று கண்டிப்பாய் என்னால் வித்தியாசமாக நடந்துகொள்ள முடியும் என்று நினைக்கவே செய்வான்.

ஆனால் மனைவியை நெருங்கி 'கங்கா' என்று அழைக்கும் போது பட்டென்று அத்தனை துள்ளலும் அடங்கிப்போய்விடும்.

ஐயே - எங்க அத்திம்பேர் இப்படி இருக்கமாட்டாராம், எங்கக்கா சொல்லுவா - என்பாளோ?

நீங்கல்லாம் கல்யாணமே பண்ணிண்டு இருக்கக்கூடாது. சன்னியாசியா வாழ்ந்திருக்கணும் - என்பாளோ?

வேண்டாத பயங்கள் அடிவயிற்றில் முடிச்சுப் போட, சட்டென்று பால்கனிக்குப் போய் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொள்வான்.

இன்று கங்கா பேசியது அதிகம்தான். ஓவர்தான்.

சாயங்காலத்திலிருந்தே கங்காவின் முகம் நன்றாக இல்லை.

இவன் ஆபீஸிலிருந்து வந்த பிறகு காபி டம்ளரை ஓசையுடன் டேபிளில் வைத்தவள், ஒரு பத்திரிகையைத் தப்பென்று மடியில் தூக்கிப் போட்டாள்.

நடன அரங்கேற்ற அழைப்பிதழ்.

முதல் பக்கத்தில் மூக்கும் முழியுமாய் ஒரு பத்து வயதுக் குழந்தை - ஆண்டாள் உடையில்.

''யாரு கங்கா?''

''என் சிநேகிதி பொண். நமக்குக் கல்யாணமான நாலாம் மாசம் இவளுக்குக் கல்யாணமாச்சு... இப்பப் பொண்ணுக்கு அரங்கேத்தம்

பண்ணறா. பெரி...ய்ய பீத்தலா எனக்குப் பத்திரிகை அனுப்பிச்சிட்டா.''

ஓஹோ! விஷயம் இங்கு வருகிறதா?

த்யாகு பதில் ஏதும் பேசாமல் காபியைக் குடித்தான்.

அப்போது அத்துடன் பேச்சை நிறுத்திக்கொண்டு விட்டாலும் திரும்ப கங்கா ராத்திரி தொடர்ந்தாள்.

கண்ணன் தூங்கிவிட்டான்.

''ஏன்னா?''

''என்ன கங்கா?''

''இப்படியே ஜடமா ஆளுக்கொரு பக்கமா படுத்துக்கறத்துக்கு, நா எதுக்கு இங்கே? துணையா?''

''..............''

''நாளைலேந்து நா கீழே படுத்துக்கப் போறேன்... விடிகாலைல எழுந்து வேலையைக் கவனிக்கவாவது சௌகரியமா இருக்கும்...''

த்யாகு எழுந்து அவளிடம் வந்து அமர்ந்தான்.

''கங்கா ப்ளீஸ்...! இத்தனை நாள் பொறுத்துண்டவளுக்கு இன்னும் கொஞ்ச நாள் தாங்கறதாம்மா கஷ்டம்? டாக்டர் ஆறு மாசத்துலே எல்லாம் சரியாயிடும்னு சொல்லியிருக்கார் கங்கா...ப்ளீஸ்...!''

''இப்படிப் பேசியே ஆயுசையும் நீங்க கழிச்சுடுவேள் - எனக்குத் தெரியும். நா உங்க பேச்சை நம்பத் தயாரா இல்லே... இன்னிக்கு அந்த அரங்கேத்த பத்திரிகையைப் பார்த்ததும் என் மனசு எப்படி பொங்கிப் போயிடுத்து தெரியுமா? கல்யாணத்துக்கு முன்னால நானும் அவளும் பேசிப்போம். 'எனக்குப் பொண் பிறக்கணும். அதுக்கு ஆறாவது வயசுலே டான்ஸ் கத்துத்தர ஆரம்பிச்சு பத்து வயசுலே ஜாம்ஜாம்னு அரங்கேத்தம் பண்ணுவேன்'னு நா சொல்வேன். அவ சிரிப்பா.. இன்னிக்கு நா ஆசைப்பட்டதை அவ நடத்திக் காண்பிக்கறா. ஆனா, நா? நா? ஒண்ணுத்துக்கும் பிரயோஜனம் இல்லாம வளைய வரேன்...''

''நமக்குத்தான் கண்ணன் இருக்கானேம்மா...''



''பகவான் புண்ணியத்துலே அவன் எப்படியோ பொறந்துட்டான். ஏதோ நா பண்ண பூர்வ ஜென்ம பலன்...''

''கவலைப்படாதே கங்கா... அடுத்த வருஷத்துக்குள்ள நிச்சயம் உன் ஆசை நிறைவேறும், பாரேன்.''

''ஆமா... கிழிஞ்சுது... இந்தப் பணத்தையும், நகையையும் பாக்கறச்சே எனக்கு வயிறு எரியறது... தலை நரைக்க, பல்விழுந்தப் புறம் பொண் என்ன பொண்... நா நாசமாப் போனேன்...''

இதோடு நிற்காமல் அக்கா, அத்திம்பேரின் வளமான வாழ்க்கையை விவரித்து, தன் மற்ற உறவுப் பெண்களின் சந்துஷ்டியான நிலைமையை விவரித்து, கொஞ்சம் கத்தி, நிறைய அழுது - ஒரு வழியாய் கங்கா படுத்தபோது மணி பன்னிரெண்டைத் தாண்டிவிட்டது.

அவள் தூங்கி ரொம்ப நேரம் ஆன பிறகும் த்யாகு சிகரெட்டுடன் பால்கனியிலேயே உட்கார்ந்திருந்தான்.

உடனடியாய் இதற்கு ஒரு வழி பண்ணவேண்டும். இல்லாவிட்டால் கஷ்டப்பட்டு நெருங்கி வந்த கங்கா நிமிஷமாய் அவனிடமிருந்து தள்ளி, ரொம்பத் தள்ளி ஓடிவிடுவாள், நிச்சயம்.

என்ன செய்யலாம்?

நாளைக்கே, ஏதாவது செய்து இந்த வேதனைக்கு முடிவு காண வேண்டுமே!

என்ன...ஓ. காட்! என்ன?

ஏண்டா மடையா தவிக்கிறாய்? நான் இருப்பது ஞாபகம் இல்லையா என்று கேட்டபடி திடுமென்று விஸ்கி நெஞ்சுள் எட்டிப் பார்க்க, த்யாகு நிமிர்ந்து உட்கார்ந்தான்.

ட்ரிங்க்...?

விஸ்கி...?

அது ஒன்றுதான் இதற்கு விமோசனமா?

சின்னதாய் இரண்டு பெக் போட்டுவிட்டால் ஆளை ஜிவ்வென்று உசுப்பிவிடும் சர்வ வல்லமை வாய்ந்த மருந்து அது.

குடிக்கலாமா?

கொஞ்சமாய், தேவையான அளவு மட்டும்...

சில நாட்களுக்கு மட்டும்...

இரண்டே இரண்டு பெக் - தட்ஸ் ஆல்.

ஒரு மருந்தாகக் குடிக்கவேண்டும் - நாட் ஃபார் ப்ளெஷர்.

டாக்டர் ரெட்டி, நாணாவுக்குத் தெரிந்தால் என்ன நினைப்பார்கள்?

ஏன்? வாட் அபௌட் கங்கா?

எதற்குத் தெரியவேண்டும்? பிறருக்கு ஏன் தெரிய வேண்டும்?

ஒரு வாரமோ, இல்லை இரண்டு வாரமோ மருந்தாகக் குடித்துவிட்டு நிறுத்தப் போகிறேன், அப்புறம் வொய் ஷுட் ஐ டெல் எனி ஒன் அட் ஆல்? வாட் ஈஸ் த நெஸஸிடி?

வேறு எந்த வழியும் சரிப்பட்டு வராமல் போக, விஸ்கி அருந்துவதன் மூலம் இழந்த ஆண்மையைப் பெறுவது திண்ணம் என்பது புரிந்து போக, அன்றிரவே த்யாகு வரிசையாகச் செய்யவேண்டியவற்றைக் குறித்துக் கொண்டான்.

முதலில் ஆண்டாப்யூஸை நிறுத்தவேண்டும். பதினாலிலிருந்து ஒரு மாசம் வரை அதன் பாதிப்பு ரத்த ஓட்டத்தில் இருக்கும் என்பதால் இதில் விளையாட்டு கூடாது.

அப்புறம் சோட்டாவாக ஒரு ட்ரிங்க் அடித்துப் பார்க்க வேண்டும். அதனால் தீமை ஏதும் இல்லை என்றால் தைரியமாகக் குடிக்க ஆரம்பிக்கலாம்.

தினம் சத்தியமாய் இரண்டு பெக். அவ்...வள...வு...தான். ஒரு சொட்டு உபரி கிடையாது.

குடித்துவிட்டு க்ளப்பிலேயே குளித்து, சாப்பிட்டு, சிகரெட் பிடித்து, பாக்குபோட்டு, செண்ட் பூசி, கொஞ்சங்கூட வாசனை தெரியாதபடி கங்காவை அணுகவேண்டும்.

தென், தேவையான பலன் கிடைத்துவிட்டது என்பது புரிந்த பிறகு ஐ மஸ்ட் ஸ்டாப் இட்... உ...ட...னே...

முடியுமா? குடி பழக்கமான பிறகு நிறுத்துவது சாத்தியமா?

ஏன் முடியாமல்?

மனபலம் வேண்டும். அதுதான் எனக்கு இப்போது நிறைய இருக்கிறது. அப்புறம் இருக்கவே இருக்கிறது ஆண்டாப்யூஸ்! ஒரு



மாத்திரை முழுங்கிவிட்டால் அலறிக்கொண்டு நிறுத்தித்தானே ஆகவேண்டும். வேறு வழி?

அலசிஅலசிப் பார்த்தவரைக்கும் தன் திட்டத்தில் குறை ஏதும் தெரியாததால் மறுநாள் ஆண்டாப்யூஸை த்யாகு நிறுத்தினான்.

படபடப் உண்டானால் வைத்தியத்துக்கும் ஓடிவிடும் எண்ணத்தில் இருபதாம் நாள் டாக்டர் ரெட்டி க்ளினிக்குக்கு அருகில் வண்டியை நிறுத்திக்கொண்டு, கார் க்ளவ் கம்பார்ட்மெண்டில் வாங்கி வைத்திருந்த கால் பாட்டில் விஸ்கியைத் திறந்து ஒரு சொட்டை விரலால் எடுத்து நாக்கில் தடவிக்கொண்டான்.

ஜிவ்வென்று ஒரு உணர்வு ஆளைத் தூக்கியது.

நாவெல்லாம் மணத்தது.

மூளைக்குள் ஜலஜலவென்று சிற்றோடை ஒன்று கிளர்ந்து எழுந்து ஓடியது.

மேனி சிலிர்த்தது.

வயலினில், மிகமிக இனிமையாய், மென்மையாய் மாயாமாளவகௌள ராகம் வாசிக்கும் சந்தோஷம் உள்ளே பிறிட்டது.

ம்ம்மா...

ஐந்து நிமிஷங்கள் பறந்தன.

ஒன்றும் ஆகவில்லை.

சின்ன வாயாய் ஒன்று ஊற்றிக்கொண்டான்.

இன்னும் பத்து நிமிஷங்கள் பறந்தன.

இப்போது கொஞ்சம் பெரிய வாய்.

ஹா... மை விஸ்கி...

மை டார்லிங்...

என் உயிரே....

என் இன்பமே....

என் உலகமே...

உன்னைப் பிரிந்து இத்தனை மாசங்களாய் நான் எப்படி இருந்தேன்?

அந்த அரைமணிப்போதில் விவரிக்கத் தெரியாத உணர்வுகளை எல்லாம் த்யாகு அனுபவித்தான்.

காலிலிருந்து பிரவாகமாக ஏதோ பொங்கி நெஞ்சுக்குள் கொப்பளித்தது.

உடம்பு திமிறியது.

இதயம் பரபரத்தது.

நிதானத்தோடு பாட்டிலை அழுந்த மூடி வைத்தவன், நேரே க்ளப்புக்குப் போனான். குளித்தான். உடுத்தி செண்ட் பூசி, வாயில் பீடாவுடன் கங்காவைத் தேடி ஓடினான்.

இரவு எட்டுகூட ஆகவில்லை.

டி.வி. பார்த்துக்கொண்டு கண்ணன் அமர்ந்திருக்க, இவன் தாளமாட்டாத வேகத்துடன் கங்காவை மாடி அறைக்கு அழைத்தான்.

கங்கா வந்தாள்.

அப்புறம் சிரித்தாள் குழைந்தாள், உருகினாள், மெய் மறந்தாள்.

மறுநாள், மறுநாள், மறுநாள்.

பத்து நாட்கள் ஓடின ஓட்டம் தெரியவில்லை.

## 24

''கங்கா...!

''அட, அப்பாவா? வாங்கோப்பா... எப்ப வந்தேள்? நல்ல வெயில் நேரமாயிருக்கு...''

''கார்த்தாலயே வந்துட்டேம்மா. டவுன்லே கொஞ்சம் வேலை இருந்தது. ட்ராக்டர் ரிப்பேராயிடுத்து. ஸ்பேர் பார்ட்ஸ் மதுராந்தகத்தில் கிடைக்கல... சரி, ஒரு நடை பட்டணத்துக்கு வந்து அதை வாங்கிண்டு, உரம் விஷயமா விசாரிக்க வேண்டியதையும் கவனிக்கலாமேனு புறப்பட்டு வந்தேன். ஸ்... அப்பாடா! என்ன வெயில்ம்மா...''

''என்னப்பா சாப்பிடறேள்? சாப்பிட்டாச்சா? மாமிய இலை போடச் சொல்லட்டுமா? குழம்பு, ரசம், கறி, சாதம் எல்லாம் இருக்கு...''



''வேண்டாம்மா... டவுன்லியே சாப்டுட்டேன். ஜில்லுனு தீர்த்தம் குடு... சித்த நாழி கழிச்சு ஸ்ட்ராங்கா காபி... தலைவலி மண்டையைப் பிளக்கிறது...''

கங்கா கையில் இருந்த பத்திரிகையை டீபாயில் வைத்துவிட்டு உள்ளே சென்று தண்ணீருடன் திரும்பினாள்.

இரண்டு டம்ளர் ஜலத்தைக் குடித்துப் பெருமூச்சு ஒன்றை வெளியிட்டு, தன் அலுப்பை சேஷன் குறைத்துக் கொண்டார்.

''ஃபேனைப் பெரிசா வைம்மா... வேர்த்து ஊத்தறது'' என்றவர், மகளை நிமிர்ந்து பார்த்து, ''எப்படிம்மா இருக்கே... மசக்கை ரொம்ப படுத்தறதா? உங்கம்மா அங்கே என்னை சதா தொணதொணங்கறா. 'பத்து வருஷம் கழிச்சு உண்டாயிருக்கிற பொண்ணை கிட்ட வைச்சுண்டு கவனிக்காம இப்படித் தனியா லோல்பட விட்றோமே'னு அவ புலம்பற புலம்பல் சகிக்கலை. பேசாமேன்னு இந்த மசக்கை அடங்கற வரைக்கும் அங்க வந்து அக்கடானு இருக்கக் கூடாதாம்மா?''

கங்கா சிரித்தாள். அம்மாவும் அப்பாவும் இப்படிக் கரிசனத்தோடு விழுந்துவிழுந்து உபசரிப்பது மனசுக்குச் சந்தோஷத்தைத் தர அவள் பெரிசாய்ச் சிரித்தாள்.

''காலம் மாறிப்போச்சுன்னா அம்மா கேட்க மாட்டேங்கறாப்பா... இந்தக் காலத்துலே மசக்கைப் படுத்தலுக்காக அம்மா வாத்துக்குப் போறேன்னு சொன்னாக்கூட எல்லாரும் சிரிப்பா... இந்த அம்மாக்கு எத்தனை சொன்னாலும் ஏற மாட்டேங்கறது...''

''அவ பழங்காலத்து மனுஷி கங்கா. இனி அவளை மாத்தமுடியாது... சரி, எப்ப ஊருக்கு வரப்போறே? அந்த விவரம் உன்னண்ட கேட்டுக்காம ஊர் திரும்பினா என்னை வீட்டுப்படி ஏற விடமாட்டா உங்கம்மா... போன்லே கேட்டா மழுப்பறயாம்...''

''என்னமோ மாசக் கணக்கா ஆத்துக்கு நா வராத மாதிரி அம்மா புகார் பண்ணாக்க நீங்களும் அதை சீரியஸா எடுத்துக்கறது எனக்குச் சிரிப்பா இருக்குப்பா... போன பதினைஞ்சாம் நாள் கண்ணனுக்கு நாலு நாள் லீவு இருந்தப்ப நாங்க வரலியா? அப்புறம் போன மாசம் இவர் கல்கத்தா, டெல்லி போனப்ப அந்த சனி, ஞாயிறுக்கு வந்திருந்தோமே!''

''பிறந்தாத்துக்கு வர்றதுக்கு கணக்குப் பார்க்கறியா கங்கா?''

''நானப்பா கணக்குப் பார்க்கறவ? கல்யாணமான இத்தனை வருஷத்துலே பாதிப் போது ஊர்ல உங்களோடதான் இருந்திருக்கேன். இப்பத்தான் அதிசயமா, இவர் ஒழுங்கானப்புறம், கொஞ்சம் இங்க நிலைச்சு இருக்கேன். முக்கியமா கண்ணன் ஸ்கூல்லே அடிக்கடி லீவு எடுத்தா இட்டறாங்கறது ஒரு காரணம். அப்புறம் எதிர்பார்க்காம வயத்துலே பிள்ளை வந்ததும் அடிக்கடி ட்ராவல் பண்ணாதேனு லேடி டாக்டர் சொன்னது ஒரு காரணம். அதுக்கு முன்னாடி நினைச்சா அங்க ஓடி வந்துடுவேனேப்பா...''

சமையல்காரம்மாள் காபியுடன் போர்த்திக்கொண்டு வந்து நின்றாள். டம்ளர் டபராவை கங்காவிடம் கொடுத்து விட்டு சேஷனிடம், ''ஆத்துலே மாமி, சௌக்கியமா?'' என்று பவ்யமாய்க் கேட்டு அவர் தலை ஆட்டினதும் திரும்ப உள்ளே போனாள்.

காபியை இரண்டு தரம் ஆற்றி, சர்க்கரை கரைந்து விட்டதா என்று பார்த்து, கங்கா தகப்பனாரிடம் டம்ளரை நீட்டினாள்.

''டவுன் வரைக்கும் போறோமே, மாப்பிள்ளை ஃப்ரீயா இருந்தா, அவரையும் கூட்டிண்டு சாப்பிடப் போலாமேனு அவரோட ஆபீஸுக்குப் போயிருந்தேன் கங்கா... ஆனா, அவர் ஆபீஸ்லே காத்தாலேந்து வரலைனு அங்க சொன்னா... வெளி வேலைக்குப் போயிருக்காராம்மா?''

கங்கா கண்களை அகல விரித்தாள்.

''ஆபீஸுக்குப் போகலியா? இருக்காதேப்பா! ஆபீஸுக்குப் போறேன்னு சொல்லிட்டுத்தானே போனார்...''

''திடும்னு வெளி வேலை வந்திருந்தாக்கூட ஆபீஸுக்குத் தெரியாமப் போகாதேங்கற சந்தேகம் வந்தது. அதான் உன்னண்டை கேட்டேன்.''

காலி தம்ளரை சேஷன் மேஜையில் வைத்தார். புருவங்களை லேசாகச் சுருக்கிக்கொண்டார்.

''மாப்பிள்ளை இப்பல்லாம் அடிக்கடி வெத்திலை போடறார், இல்லே?''

இது என்னப்பா சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் ஒரு கேள்வி என்று கங்கா விழிக்க, சேஷன் மேலே பேசினார்:



''இரண்டு மூணு தடவையா த்யாகுவைப் பாக்கறப்போ அவர்கிட்ட ஏதோ சென்ட் இருக்கிற மாதிரி எனக்குப்பட்டது கங்கா... உனக்கு என்னம்மா தோணறது?''

இந்த அப்பா எதை மனசில் வைத்துக்கொண்டு இப்படி பூடகமாகப் பேசுகிறார்?

''என்னப்பா சொல்றேள்? எனக்கு ஒண்ணும் புரியலையே...''

''வந்தும்மா, அது வந்து...'' - சேஷன் சமையற்கட்டைப் பார்த்தார். மாமி நிச்சயம் கிட்டத்தில் இல்லை என்பதை ஊர்ஜிதப்படுத்திக்கொண்டு மெதுவாகக் கேட்டார்:

''மாப்பிள்ளைகிட்ட அந்த வாசனை வர்ற மாதிரி எனக்குத் தோணித்து கங்கா. பிரமையா, இல்ல நிஜமானு ஏகக் குழப்பமா இருக்கு... நீ கவனிச்சியா?''

கங்கா முழுசாய் ஒரு நிமிஷம் எதுவும் பேசாமல் இருந்து ஏதோ யோசிக்கிற மாதிரி முகத்தைச் சுளுக்கிக்கொண்டாள்.

''கொஞ்சநாள் முன்னாடியே எனக்கு இந்தச் சந்தேகம் வந்ததுப்பா... அவர்கிட்ட வெளிப்படையா கேட்டுட்டேன். அவர் ஒரேயடியா இல்லவே இல்லைனு சொல்றாப்பா...''

''கொஞ்ச நாள்னா?''

''ம்ம்ம்... போன மாசமோ அதுக்கு முந்தின மாசமோ... சரியா நினைப்பு இல்லே...''

சேஷன் லேசாக அதிர்ந்து போய்ப் பெண்ணை ஏறிட்டார்.

''உடனே என்கிட்ட ஏம்மா சொல்லலை? ம்?''

''இவர் இல்லைனு சாதிக்கறப்போ நா எப்படிப்பா உங்ககிட்ட புகார் பண்ணமுடியும்? லேசாத்தான் வந்தது... கேட்டதுக்கு மசாலா பான் வாசனைனுட்டார். அவர் சொன்னாப்பல அந்த பீடா அப்படி வாசனை அடிச்சமாதிரிதான் எனக்கும் தோணித்து...'' - பேசிக்கொண்டு போன கங்கா நிறுத்தி, என்னமோ நினைத்துக்கொண்டது போல் குரலை உயர்த்திக் கேட்டாள்:

''ஆ! உங்க கிட்டயோ, வேற யார்கிட்டயோ நா ஏன் சொல்லலைன்னா அவர்தான் ஆண்டப்யூஸ் மருந்து சாப்பிடறாரே, மீறி எப்படிக் குடிக்க முடியுங்கற நம்பிக்கைதாம்ப்பா... அந்த

மாத்திரை சாப்டுண்டு இருக்கறப்போ, கொஞ்சம் குடிச்சாக்கூட ஆள் க்ளோஸ்னு டாக்டர் ரெட்டி, ராமபத்ர மாமா எல்லாரும் சொல்லி இருக்காளே!''

சேஷனின் முக இறுக்கம் சட்டென்று குறைந்தது.

''அட... ஆமாம்மா... அந்த விஷயத்தை மறந்துட்டு நானும் அசடாட்டம் என்னென்னவோ நினைச்சுட்டேன். ஆண்டப்யூஸ் தினமும் சாப்பிடறாரோல்லியோ? உனக்கு நிச்சயமா தெரியுமோன்னோ?''

''தெரியும்ப்பா... நான்தானே முப்பது மாத்திரையை எண்ணி முதல் தேதியானா பாட்டில்லே போட்டு வைக்கறேன்.''

''அப்படியா! அப்ப கவலைப்பட வேண்டாம். எதுக்கும், கிட்ட இருந்து இனிமே நீயே அன்னாடம் அவர் கைல எடுத்துக் கொடுத்துடு. வம்பு எதுக்கு?''

கங்கா சரி என்று கூறிவிட்டு உள்ளே போய் மாமியிடம் டிபன் என்ன பண்ணுவது என்று சொல்லி மீண்டும் அப்பாவிடம் வந்து அமர்ந்தாள்.

''நாளைக்கு இவர் பம்பாய் போகப் போறார்ப்பா... நாலு நாளாகும் திரும்ப...''

''மாப்பிள்ளை இப்பல்லாம் அடிக்கடி வெளியூர் போறார் இல்லே, கங்கா?''

''வேலைல கெட்டிக்காரரா இருக்கார்னு வெளியூர் வேலைகளையும் இவரைக் கவனிக்கச் சொல்றாளாம்.''

கங்காவின் குரலில் பெருமை எட்டிப் பார்த்தது.

''என்னமோ அவர் ஒழுங்கா இருந்து நீ சந்தோஷமா இருந்தா எங்களுக்குப் போதும், வேற என்னம்மா வேணும்?'' - கொஞ்சம் சும்மா இருந்த சேஷன், ''அது சரி, இன்னிக்கு ஆபீஸுக்கு வரலைனு அவா ஏன் சொன்னா?'' என்றதும், ''அதானே!'' என்ற கங்கா எழுந்து டெலிபோனிடம் போனாள் - த்யாகுவின் ஆபீஸ் நம்பரைச் சுழட்டி அவன் பேரைச் சொல்லிக் கூப்பிட்டாள்.

சில நொடிகளில் கணவனின் குரல் அந்தப் பக்கம் ஒலித்ததும் முகம் சிரிப்பில் விரியப் பேசினாள்:



''ஒண்ணுமில்லேன்னா, அப்பா வந்திருக்கார், உங்களோட சாப்பிடப் போலாம்னு ஆபீஸுக்கு வந்திருந்தாராம். நீங்க அங்க வரவேயில்லேனுட்டாளாம். என்னடாதுனு தோணித்து. அதான்... என்ன? வக்கீலைப் பாக்கப் போயிருந்தேளா? பம்பாய் ட்ரிப் விஷயமாவா? ஓ...சரி...சரி... வெச்சுடட்டுமா?''

ரிஸீவரை வைத்துவிட்டுத் திரும்பின மகளை நேர்பார்வையாகப் பார்க்க முடியாமல் சேஷன் அசட்டுச் சிரிப்பை உதிர்த்த அதே நிமிஷத்தில் த்யாகு ஆபீஸில் சின்ன உதறலுடன் உட்கார்ந்திருந்தான்.

சேஷன் இங்கு வந்திருந்தாரா?

நல்லவேளையாக சமர்த்தாய் இப்போது வேலைக்கு வந்துவிட்டதால் மாட்டிக்கொள்ளாமல் தப்பிக்க முடிந்தது... இல்லாவிட்டால்?

காட் - எப்படி இத்தனை அசட்டுத் துணிச்சலுடன் நடந்துகொண்டேன்?

எல்லாம் இந்த அரவிந்தனால்...

வாய்யா த்யாகு... நீ இல்லாம க்ளப் க்ளப்பாவே இல்லே - என்று சதா சொல்லி க்ளப் பக்கம் பகல் நேரத்தில் குடிக்கப் போகக்கூடாது என்று தீர்மானமாக இருந்தவனை மாற்றியவன் அவன்தானே!

இரண்டு பாட்டில் பியர் குடித்துவிட்டு, பன்னிரண்டு மணி வக்கீல் அபாய்ண்ட்மெண்டை ரத்து செய்ய முடியாமல் கிளம்பினதுதான் சமயத்தில் கை கொடுத்திருக்கிறதா?

இல்லாவிட்டால்?

சேஷன் போய்ச் சொல்ல, கங்கா இங்கு போன் பண்ண... அப்புறம் வீட்டுக்குப் போய் எந்தச் சமாதானத்தைச் சொன்னாலும் ஏற்காமல் அவள் கத்த...

உட்காரப் பிடிக்காமல் த்யாகு பாத்ரூமுக்கு எழுந்து போனான்.

வாஷ் பேசின் கண்ணாடியில் முகத்தைப் பார்த்தவனுக்குச் சொரேர் என்றது.

சிவந்த கண்களும், பளபளத்த மூக்குமாய்... என்ன இது!

இந்தக் கோலத்தோடு வக்கிலைச் சந்தித்திருக்கிறேனே, அவர் என்ன நினைத்துக்கொண்டிருப்பார்?

வாட் அபெளட் மை கலீக்ஸ் இன் ஆபீஸ்?

ஸீனியர் ஊரில் இல்லை - சங்கர், க்ளையண்ட்டோடு டிஸ்கஷனில் இருக்கிறான். வேறு யாரையும் அதிர்ஷ்டவசமாய் இன்னும் சந்திக்கவில்லை. வக்கீலிடமிருந்து திரும்பின கால்மணிக்குள் கங்காவின் போன் வந்துவிட்டது. அதர் வொய்ஸ்?... ஓ வாட் எ ஃபூல் ஐ ஹாட் பீன்...

பச்சைத் தண்ணீரை வாரி அடித்து த்யாகு முகத்தைக் கழுவிக்கொண்டான். கண்களையும், கன்னங்களையும் அழுந்த வழித்துவிட்டுக் கொண்டான். சீப்பினால் தலைமுடியைப் படிய வாரினான்.

உள்ளங்கைகளை முகர்ந்து பார்த்தான். வியர்வை குடியின் மணத்தைக் காட்டிக்கொடுத்துவிடுமே என்கிற பயத்தோடு கக்கங்களில் விரல்களைத் தேய்த்து மீண்டும் வாசனை எடுத்துப் பார்த்தான். ம்ஹூம் இல்லை... பியர் நாத்தம் அத்தனை இல்லை.

வெளியில் வந்து மேஜைமுன் அமர்ந்து ப்ரீஃப் கேஸில் தயாராய் வைத்திருக்கும் மசாலா பான்களில் ஒன்றை எடுத்துப் போட்டுக்கொண்டான்.

கங்கா, மற்றவர்களை எத்தனை புத்திசாலித்தனத்துடன் ஏமாற்றுகிறோம் என்பதை நினைக்கநினைக்கப் பெருமையாக இருந்தது.

எத்தனை கெட்டிக்காரத்தனம்?

எத்தனை ப்ளானிங்?

யாருக்கு வரும் இத்தனை சாமர்த்தியம்?

கங்காவைத் திருப்தி பண்ணுவதை ஒரு சாக்காக வைத்துக்கொண்டு குடிக்க ஆரம்பித்த த்யாகு, மூன்று வாரங்கள் கழித்து அந்தப் பழக்கத்தை நிறுத்திவிட்டால் என்ன என்று யோசித்தது வாஸ்தவம்தான்.

ட்ரிங்க் மாலையிலிருந்து கிடையாது என்ற எண்ணமே சின்னதாக ஒரு படபடப்பை உண்டாக்க, சரி இன்று வேண்டாம், நாளை; நாளை வேண்டாம், நாளை மறுநாள் என்று விஷயம் நீண்டுகொண்டே போய்ச் சீக்கிரமே இது இல்லாமல் தனக்குச் சரிப்படாது என்பது த்யாகுவுக்குத் தீர்மானமாகப் புரிந்துபோயிற்று.



எதற்காக ட்ரிங்க் பண்ணுவதை விடவேண்டும்?

ஐ என்ஜாய் இட்...

என் பணம், என் இஷ்டம்.

ஸோ?

அளவுக்கு மீறிப் போகாதவரை, யாருக்கும் தொந்தரவு இல்லாதவரை ஏன் நிறுத்தவேண்டும்?

அடுத்து வந்த நாட்களில் வெளியூர் வேலைக்காக த்யாகுவை கம்பெனி போகச் சொன்னது இந்த முடிவுக்கு ஜோராய்த் தூபம் போட்டது.

கவனமாய் ஆண்டப்யூஸை தினம் ஒரு மாத்திரையாகத் தூர எறிந்தான். பகலில், எக்காரணத்தைக் கொண்டும் குடிக்கக் கூடாது என்பதை சென்னையில் இருக்கும் நாட்களில் தீவிரமாகக் கடைப்பிடித்தான். சம்பாதிக்கும் பணத்தில் கணிசமான பகுதியை மசாலா பான், ஜர்தா பீடா செண்ட்களாக்கினான்...

அப்புறம் என்ன? போன மச்சான் திரும்பி வந்தான் பூமணத்தோட - கதைதான் - பூரணமாய்.

அன்று மாலை ரொம்ப கவனத்துடன் எட்டு மணிக்கெல்லாம் க்ளப்பிலிருந்து த்யாகு வீட்டுக்குத் திரும்பிவிட்டான்.

கங்கா, கண்ணனோடு டி.வி பார்த்தான். தன் தகப்பனார் சொன்ன விஷயங்களைத் திரும்ப மகா பெருமையுடன் கங்கா லொடலொடத்ததைக் கேட்டுக்கொண்டான்.

ஒன்பதுக்கு சாப்பிட்டுவிட்டு, அதி சமர்த்தாக பத்துக்குள் தூங்கிப்போனான்.

மறுநாள் காலை அப்பாவின் புத்திமதி ஞாபகத்துக்கு வர, த்யாகு டிபன் சாப்பிட்ட நாழிகையில் கங்கா ஆண்டப்யூஸ் மாத்திரை புட்டியுடன் கிட்ட வந்து நின்றாள்.

''என்னம்மா?''

"இல்லே... இனிமே தினம் நானே இதைக் கொடுக்கலாம்னு..."

இது என்ன திடீர் கரிசனம்?

அப்பாவின் உபதேசமா?

கருகருவென்று எழுந்த கோபத்தை த்யாகு கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்டான்.

"வொய் நாட்? குடு..."

அவள் கொடுத்த மாத்திரையை வாயில் போட்டு, தண்ணீர் ஊற்றும்முன் சட்டென்று நாக்கைப் புரட்டி நாக்குக்கு அடியில் அதைத் தள்ளினான். ஜலத்தை மட்டும் கவனத்துடன் குடித்தான்.

பின் திருப்தியா என்கிற நினுசில் கங்காவைப் பார்த்துப் புன்னகைத்துவிட்டு மாடிக்கு வந்து, பாத்ரூமுக்குள் சென்று மாத்திரையை டாய்லெட்டில் துப்பி, வாயை நன்கு கொப்பளித்தான்.

கங்காவை ஏமாற்ற இன்னொரு புது வழி என்ற குஷியுடன் கீழே வந்து காரில் ஏறினான்.

மறுநாள் பம்பாய்க்குப் போனான். நாலு நாளைப் பத்து நாளாகச் சந்தோஷத்தோடு இழுத்தடித்துவிட்டு ஊர் திரும்பினான். மறு மாசம் கண்ணனின் பெரிய பரீட்சை முடிந்து லீவு ஆரம்பித்து விட, ரெஸ்டாய் இருக்கவேண்டி கங்கா பிள்ளையோடு பிறந்தகம் போனாள்.

அப்புறம்தான் த்யாகுவின் காட்டில் செமை மழை பெய்தது.

## 25

...இதுவரை ஒரு இன்பத்துக்காகக் குடித்து வந்த குடிகாரன் இனி தன்னை அமைதியாக வைத்துக்கொள்ளும் நிர்ப்பந்தத்துக்காகக் குடிக்கத் தொடங்குகிறான். இந்த கட்டத்திலிருந்து குடி இவனுக்கு ஒரு அத்யாவசியமான சமாசாரமாகிப் போகிறது.

...தான் அளவுக்கு மீறி, நிறுத்த இயலாத விதத்தில் குடிப்பது சதா நெஞ்சத்தைப் பிறாண்டுவதில் இவன் விரைவில் குற்ற உணர்ச்சிக்கு அடிமையாகிறான். இதனால், குடியைப் பற்றின பேச்சு



எழுந்தால் அந்த சம்பாஷணையை உடனடியாக வேறு திசையில் திருப்ப இவன் முயற்சிக்கிறான்.. குடியைப் பற்றியோ அல்லது தன் குடிப்பழக்கத்தைப் பற்றியோ மற்றவர்கள் பேசுவது இவனுக்கு அளவில்லாத எரிச்சலைத் தருகிறது.

... வேலையில் இருக்கும்போதும், வீட்டில் இருக்கும்போதும் இவன் சிந்தனை குடியைச் சுற்றிப் பின்னத் தொடங்குகிறது. செய்யவேண்டிய காரியங்களில் புத்தி செல்ல மறுப்பதுடன் இன்று மதியம் பியரை எத்தனை குளிர வைத்துச் சாப்பிடவேண்டும்; மாலை உள்நாட்டு விஸ்கியா, வெளிநாட்டுச் சரக்கா; அதை ஐஸ் போட்டுச் சாப்பிடலாமா, இல்லை நீட்டாகக் குடிக்கலாமா என்று எண்ணிப் பார்த்து மனசு குதூகலிக்கும் கட்டம் இது.

...காத்திருந்து கையில் எடுக்கும் முதல் ட்ரிங்கை ஒரே மடக்காகக் குடிக்கவே இவன் விரும்புகிறான். நிதானமாய், கொஞ்சம்கொஞ்சமாய், பானத்தை உறிஞ்சிக் குடிப்பது என்பது இனி இவனால் முடியாத விஷயம். குடி தரும் சுகத்தை மெதுவாக அடைய விருப்பம் இன்றி, சீக்கிரமாய் அந்த உஷ்ணத்தை அந்தப் புல்லரிப்பை உணர இவன் துடிப்பதாலேயே இந்த அவசரம். உன்னை இந்தச் சில மணி நேரங்களாக எப்படிப் பிரிந்திருந்தேன் என்ற தாபம் பிரவாகமெடுக்க, க்ளாஸைக் கையில் எடுத்து ஒரே வாயாய் இவன் குடிக்கும்போது உடம்பின் பரபரப்பை நொடியில் அடக்கும் மருந்தாக குடி உதவுகிறது.

...குடி இல்லாமல் தன்னால் இருக்கமுடியாது என்ற முடிவுக்கு வந்துவிடுவதால் இவன் எப்படியாவது ட்ரிங்க்ஸ் தன் கைக்கு வரப் பாடுபடத் தொடங்குகிறான். குடியைத் தடை செய்யும் ஊரில் வசிப்பவனாக இருந்தால் எந்த டாக்டரையாவது எப்படியாவது சரிக்கட்டி ஒரு பர்மிட்டை வாங்கிக்கொள்கிறான். பணக்கார, குடிகார நண்பர்களுடன் சிநேகிதத்தை நிலை நாட்டுகிறான். வெட்கம், மானம் என்று எதையும் லட்சியம் பண்ணாமல் அந்தப் பணக்காரன் கூப்பிட்ட இடத்துக்கு ஓடி, அவனுக்கு இதம் தரும் சிநேகிதனாக இருந்து, தனக்குத் தேவையான குடியைக் குடித்துக்கொள்கிறான். பணக்காரர்களிடம் ஒட்டுண்ணியாக இவன் அழுந்திக்கொள்வது இப்போதுதான். பணக்காரன் நிற்கச் சொன்னால் நின்று, ஆடச் சொன்னால் ஆடி, நாலு கால்களில் தவழச் சொன்னால் தவழ்ந்து அவனுக்குத் தாளானுதாளனாகத் திகழ்ந்தாவது தன் தாகத்தை இவன் தணித்துக்கொள்ளும் கட்டம் இது.

...பகல் நேரங்களிலும் போதை அவசியமாகி விடுவதால் இவன் ஒளித்து வைத்து நடுநடுவில் ஒரு வாய் ஊற்றிக்கொள்ளக் கற்றுக்கொள்கிறான். ஆபீஸ் நேரத்தில், வீட்டில் பெரியவர்கள் முன்னிலையில் - இப்படிப் பல சந்தர்ப்பங்களில் ஏற்படும் படபடப்பைக் குறைக்க இவனுக்குக் குடியின் உதவி தேவைப் படுகிறது. தனிமையில் அமர்ந்து சாதுர்யத்துடன் குடியை எங்கெல்லாம் ஒளித்து வைக்கலாம் என்று திட்டம் தீட்டத்துவங்கும் இவன், மனைவி, உற்றோர், பெற்றோர், மேலதிகாரிகள் இவர்கள் கண்களில் மிளகாய்ப்பொடி தூவிவிட்டு பாட்டிலை ஒளித்து வைப்பதில் மன்னன். பெரிய புட்டிகளாக எடுத்துவந்தால் மாட்டிக்கொள்வது திண்ணம் என்பதால் சின்னச்சின்ன மருந்து பாட்டில்களில் ட்ரிங்கைக் கொட்டி பாண்ட் பாக்கெட், ப்ரீஃப்கேஸ், புத்தகங்கள் நடுவில், மேஜை ட்ராயரில், பாத்ரூம் தொட்டிகளில் வைக்கும் பழக்கம் இவனுக்கு உண்டாகிறது. புதுசாக ஒரு இடத்துக்குப் போக நேரும்போது அங்கு குடி கிடைக்காதோ என்ற பயத்தில் கையோடு பாட்டிலைக் கொண்டுபோவது இவனுக்கு சகஜமான ஒன்று. பிடிபடாமல் இருக்கவேண்டி பனியனுள் பாட்டிலைப் பதுக்குவதும், தொடை, ஆட்டுச்சதை, இப்பகுதிகளை ஒட்டின மாதிரி பட்டை பாட்டில்களை அகலமான துணியால் இறுகக்கட்டி மேலே பாண்ட்டை மாட்டிக்கொள்வதும், இவன் தப்பாமல் செய்யும் திருட்டுத் தனங்களில் சில. ட்ரிங்க் தன் கூடவே இருக்கிறது என்ற தெம்பினால் நிதானம் இழக்காமல் இருப்பவன், குடி தேவை என்று உணரும்போது அடிக்கொரு தடவை பாத்ரூம் போவதாகச் சொல்லிக் கழிவறைக்குச் சென்று அங்கே காலில் கட்டி வைத்திருக்கும் பாட்டிலை எடுத்து ஒரு வாய் குடித்து, பின் பாட்டிலைப் பழையபடி வைத்துக் கட்டிக்கொண்டு எதுவுமே அறியாதவன் மாதிரி சமர்த்தாக நாலு பேர் நடுவில் வந்து அமர்வதில் எமகாதகன்.

...அடுத்து, பார்ட்டி, மற்றும் நண்பன் இல்லத்தில் குடிக்கப் போகும்போது, ஒத்தாசை செய்ய இவன் வலிய முன்வரத் தொடங்குகிறான். 'நான் ட்ரிங்க் கலந்து எடுத்து வருகிறேன். நீ வீணாய்ச் சிரமப்படாதே' - என்று நண்பனிடம் இவன் பரிவோடு சொல்வதற்குக் காரணம் இல்லாமல் இருக்குமா? மற்றவர்களுக்கு விடும் அளவைப் போல தனக்கு இரண்டு பங்கு ஊற்றிக்கொள்ள இவனுக்கு ஒரு சந்தர்ப்பமே. தவிர, எவருடைய டம்ளர் காலியாக இருப்பினும் விழுந்தடித்துக்கொண்டு எழுந்து அதை நிரப்பிவர



இவன் ஓடுவதும், இந்த சாக்கில் தன் க்ளாஸிலும் ஊற்றிக்கொண்டு வருவதற்காகவே.

...இந்தகட்டத்தில் சுயக்கட்டுப்பாடு என்பது இவனிடமிருந்து அடியோடு விடைபெற்று மறைகிறது. என்ன செய்யப் போகிறோம் என்று புரியாத நிலையில் சதா தவிக்கும் இவன், 'இன்று மாலை குடிக்கக் கூடாது; வீட்டில் குழந்தைக்கு உடம்பு சரி இல்லை, டாக்டரிடம் அழைத்துப் போகவேண்டும்' என்று நினைத்துக்கொள்வான். ஆனால் இந்த எண்ணமே படபடப்பை உண்டாக்க, சற்றைக்கெல்லாம் க்ளப்பை நோக்கி காரை விரட்டுவான். 'இன்று இரண்டு பெக்தான்; நிச்சயமாய்' - என்று சத்தியம் செய்துகொள்வது என்னமோ பெரிசாக இருந்தாலும் பார் மூடும்வரை இருக்கும் கடைசி நபராக இவனே இருப்பான். நேரம், காலம், இடம் போன்றவற்றின் மதிப்பு குறையத் தொடங்கி, குடி இவனை முழுசாய்த் தனக்கு அடிமையாக்கிக்கொள்கிற காலம் இதுதான்.

...குடிப்பழக்கம் அதிகரிக்கஅதிகரிக்க இவனுடைய குற்ற உணர்வும் ஏறுகிறது. இந்த உணர்வின் பாரம் தாங்காமல் எளிதாக சுயபச்சாத்தாபத்தில் மூழ்கவும், ஐயோ, நான் பாவம்... என்று தன்னை எண்ணியே அழவும் இவன் கற்றுக் கொள்கிறான். தன் குடிப்பழக்கத்துக்கு யார் யாரையோ காரணமாக்க இவன் முனைவது இப்போதுதான். 'என் பிள்ளைப் பருவம் ரொம்ப மோசம், சதா சண்டை போடும் தாய் தகப்பன் - சின்ன வயசிலேயே வாழ்க்கை வெறுத்துவிட்டது. நான் குடிப்பதற்கு இதுவே காரணம்' என்பான். 'என் தாய் வேறொருத்தனுடன் ஏன் ஓடினாள்? என் தந்தை என்னை ஏன் அடித்தார்? என் உணர்ச்சிகளை அவர்கள் ஏன் மதிக்கவில்லை?'' என்று எதிர் கேள்வி கேட்பான். நண்பர்கள் நடுவில் முகத்தைப் பரிதாபமாக வைத்துக்கொண்டு தான் ஏழ்மையில் அவஸ்தைப் பட்டதைச் சொல்லுவான். மனைவி கொஞ்சம்கூட அனுசரணை இல்லாமல் இருப்பதைக் கூறுவான். 'எனக்கு வந்திருப்பவள் பெண் அல்ல, பேய். வீட்டில் எந்நேரமும் சண்டைதான். உழைத்துவிட்டு வீட்டுக்குப் போகும் மனிதனுக்கு நிம்மதி இல்லாவிட்டால் எப்படி? அதுதான் குடிக்கிறேன்' என்பான். ஆக, நொண்டிச் சாக்குகள், மற்றவர்கள் பரிதாபத்துக்கு ஆளாகவேண்டும் என்று இவன் இட்டுக்கட்டும் கதைகள் ஏராளம், ஏராளம்.

...பொய் என்பது இவனுக்கு அன்றாடப் பேச்சாகிறது. நின்றால் பொய், உட்கார்ந்தால் பொய், மேலதிகாரியிடம் பொய்.

'உங்களிடம் குடி வாசனை வருகிறதே' என்னும் மனைவியிடம் கண்ணீர் விட்டு 'ஐயோ! நானா? குடிப்பேனா? என் ஃப்ரெண்ட் குடித்தான், சத்தியமாய் நான் இல்லை. ஊற்றிக்கொடுத்தேன். அவ்வளவுதான்' - என்று நாடக வசனம் பேசுவான். ஆபீஸில் 'என்ன உங்கள் அறைக்குள் வந்தால் என்னமோ நெடி வருகிறதே?' என்றால் 'ஹி...ஹி... அதுவா ஸார், உடம்பு பலவீனமா இருக்கிறது என்று டாக்டர் டானிக் கொடுத்திருக்கார். அதில் கொஞ்சம் ஆல்கஹால் கலந்திருக்கிறது. அதுதான்' என்று நெளிவான். போலியான பணிவு, குழைவுக்கு இவனிடம் பஞ்சமே இல்லை. சத்தியம் இவனுக்கு இப்போது தண்ணீர்பட்ட பாடாகிறது.

...மற்றவர் தன்னை உயர்வாக நினைப்பதில் இவன் அதிகக்கவனமாக இருக்க முயற்சிக்கும் கட்டம் இது. மனைவி, குழந்தைகளுக்கு உயர்ந்த பரிசுகள், நண்பர்களுக்கு அடிக்கடி பார்ட்டி, கடன் வாங்கியாவது இழுந்துவரும் அந்தஸ்தை இவன் நிலைநிறுத்தப் பாடுபடும் அவஸ்தை எல்லாம் இப்போதுதான்.

...ஆனால் இந்த நடிப்பெல்லாம் ஆரம்பகாலத்தோடு சரி. போகப்போக, உண்மை நிதர்சனமாய் மற்றவர்களுக்கு விளங்கி விட்டது என்பது புரியப்புரிய, 'போடா ஜான்டான் - நீ என்ன நினைத்தாலும் ஐ டோண்ட் கேர்' என்ற மனப்பான்மை இவனுக்குள் புகுந்துகொள்கிறது.

...பெருந்தன்மை வேஷம் மறைந்ததும் முரட்டுத்தனம் விஸ்வரூபம் எடுக்கிறது. வலிய சண்டைகளில் மூக்கை விட்டுக் கொள்ளுவதும், சின்ன தப்பையும் பெரிசாக்கிக் கத்துவதும், காரணமே இல்லாமல் திட்டவும், அடிக்கவும்கூட இவன் முற்படுவது இப்போதுதான்.

...தூங்கி எழுந்ததுமே இந்தக் கட்டத்தில் இவனுக்குப் போதை தேவைப்பட ஆரம்பித்து விடுகிறது. உடம்பின், மனசின் பரபரப்பை அடக்கவும், அந்த நாளை நிம்மதியுடன் துவக்கவும் இவனுக்குக் கண் விழித்ததுமே, விடிகாலையிலேயே குடி அத்யாவசியமாகிறது.

...இந்தச் சமயத்தில், மற்றவர்களின் தொந்தரவும், பிடுங்கல்களும் அதிகமானால் இவன் தன் வழக்கமான குடிப்பழக்கத்தை லேசாக மாற்ற முயல்கிறான். விஸ்கியை விடுத்து, ஜின் சாப்பிடுகிறான். பிராண்டியைத் தவிர்த்து பியர் குடிக்கப் பழகுகிறான். என்ன பழகி என்ன? எல்லாம் மறுநாளே பழைய குருடி கதவைத் திறடி என்றல்லவா மாறிவிடுகின்றன!



...தன் மேலேயே ஏகமாய் வெறுப்புத் தோன்ற காலை இல்லை, பகல் இல்லை, இரவு இல்லை என்று நாட்கணக்கில் இவன் தொடர்ந்து குடித்து சுயநினைவு இல்லாமல் இருக்கப் பார்ப்பது இப்போதுதான். ட்ரிங்கஸுக்காக இவன் மற்றவரைக் கெஞ்சுவதும், பணம் இல்லாவிட்டால் உடைமைகளை அடகு வைக்கவும் விற்கவும்கூட முனைவது இப்போதுதான். எக்கச்சக்கமாய்க் குடித்து வயிற்றைச் சாப்பாடு இல்லாமல் காயப் போட்டு, உடம்பைப் பலஹீனமாக்கிக்கொள்வதும் இப்போதுதான்.

...அடுத்து குடியின் முற்றின பக்குவத்தில் இவன் காலடி எடுத்து வைத்துவிடுகிறான். Delirium Tremors உண்டாகின்றன. கை நடுக்கம், உடம்பு நடுக்கம், தூக்கிவாரிப் போடல் எல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக ஓடிவந்து இவனிடம் தொத்திக் கொள்கின்றன. குடி கிடைக்க ஒரு நிமிஷம் தாமதமாகி விட்டாலும் இந்தப் பிசாசுகள் தலைவிரித்து ஆடத்துவங்கி விடுகின்றன. எங்கள் அமிர்தத்தைக் கொண்டு வா - என்று சதா காதுக்குள் கத்தும், ஆளைப் புரட்டி எடுக்கும். நிலைகொள்ளாமல் ஓட வைக்கும். இந்த டெலிரியம் ட்ரெமர்ஸ் வரத் துவங்கின பிறகு இவனுக்குப் பயங்கள் உண்டாகின்றன. தனியாக இருக்கப் பயம். விளக்கு இல்லாமல் இருக்க பயம், தூங்கினால் கனவுகள் வரும் என்ற பயம். எதற்கும் பயம்...பயம்...பயம்தான். இன்னும் கொஞ்சம் அதிகமானால், கூடவே யாரோ உட்கார்ந்து தொணதொணவென்று பேசுகிற பிரமை, மூளையை மரங்கொத்திகள் கொத்தித் தின்கிற வேதனை, மார்புக்கூட்டுக்குள் பல பறவைகள் பட படவென்று இறக்கை விரித்துப் பறக்கும் ஓசை, சப்தமில்லாமல் வெள்ளை, கறுப்பு உருவங்கள் அறையில் குறுக்கும் நெடுக்குமாய் ஓடும் உணர்வு...ஹோ...! இந்த கட்டத்தில் இவன் படும் அவஸ்தை இருக்கிறதே - அது ரொம்ப பரிதாபத்துக்குரியது.

...மனைவியின் நடத்தையில் இப்போது இவனுக்குச் சந்தேகம் பிறக்கத் துவங்குகிறது. நண்பர்கள், உறவினர், வேலைக்காரன் என்று யாரிடம் அவள் சாதாரணமாகப் பேசிப் பழகினாலும் அடி மனசில் அவளிடம் ஒரு வெறுப்புத் தோன்றுகிறது. சமயம் கிடைத்தபோதெல்லாம் அசிங்கமாக அவளை மற்ற ஆண்களுடன் இணைத்துப் பேச முற்படுவதால், மோசமான தாம்பத்தியம் இன்னும் விரிசல்

கண்டு போக இவனுடைய இந்த நடத்தையே முக்கியக் காரணமாகிறது.

...வாழ்வின் அர்த்தமே குடிதான் என்ற உணர்வு இவனிடம் வியாபிக்கும் கட்டம் இது. குடும்பம், மனைவி, குழந்தை, வேலை, இதர சமூக நடவடிக்கைகளில் ஈடுபாடு குறைந்து குடி தரும் போதையைச் சுற்றியே இவன் வாழ்க்கை பின்னத் தொடங்குவதால், குடி இவனுடைய தாரக மந்திரமாகிறது.

...நிதானமில்லாமல் குடிப்பதால், உள்ளும் வெளியிலும் ஆள் மாறிப் போகிறான். குடிக்காவிட்டால் மிருகம்; குடித்தால்தான் மனிதன் என்கிற நிலை உண்டாவது இப்போதுதான். அன்லஸ் ஆல்கஹால் ஈஸ் இன் தி ஸிஸ்டம், ஹி ஃபீல்ஸ் அப்நார்மல்.

...அடுத்து, தனிமையில் குடிக்க, அதை ரசிக்க இவன் பழகிவிடுகிறான். 'போதும் நிறுத்து' என்று சொல்லவோ, 'இன்று அதிகமாகிவிட்டது. ஸோ, லெட் அஸ் ஸ்டாப்' என்று தடுக்கவோ யாரும் இல்லாமல் தனிமையில் குடிப்பதில், அதில் அமிழ்ந்து போவதில் இவன் ஏக இன்பம் காண முற்படும் காலம் இது.

...இப்போதெல்லாம் இவனுக்குச் சரிவரச் சிந்தித்துச் செயல்படும் திறமை குறைந்து போகிறது. எக்கச்சக்கமான போதை எப்போதும் மூளையை ஆக்கிரமிப்பதில் இவனுடைய ஞாபக சக்தி, நல்லது கெட்டதை ஆராயும் சக்தி, புத்திசாலித்தனம் எல்லாமே துருப்பிடித்து மழுங்கிப் போவது ரொம்பவும் வேதனைக்குரிய விஷயம். இரவா, பகலா என்ற குழப்பம் தோன்றுகிறது. யார் எவர் என்ற சந்தேகம் உண்டாகிறது. இன்னும்... கடவுளே! எவ்வளவோ வருத்தம் தரும் மாற்றங்கள்! சுறுசுறுப்பான மூளை மந்தமாகிச் சதா தூங்க முற்படுவதால், மற்றவர்களுக்கு இவன் மேல் சந்தேகம் எழுந்து, 'பிரமை பிடித்துவிட்டதா, இல்லை பைத்தியமாகி விட்டானா?' என்று இவன் பின்னால் உற்றாரும் சுற்றாரும் முணுமுணுத்து அதிர்ந்து நிற்பது இந்தச் சமயத்தில்தான்.

...இப்போது உதவி செய்ய வருபவர்களை விஷமாகக் கொட்டி விரட்டவும், டாக்டராவது, மண்ணாவது, எவனுக்குத் தெரியும் என் வேதனை என்று கிட்ட வந்தாலே உறுமவும் இவன் கற்றுக் கொள்கிறான். 'என் உடம்பு கெட்டுவிட்டதா? லிவரும், ஸ்டமக்கும் பாதிக்கப்பட்டுவிட்டனவா? ஒழியட்டும் - எல்லாம் ஒட்டு



மொத்தமாய்க் கெட்டு ஒழியட்டும். அறுபது வயசில் சாவதற்குப் பதிலாக நாற்பது வயசில் சாக நான் தயார்தான். சாவு என்னை என்ன செய்யும்? ஐ ரியலி டோண்ட் கேர். குடியை மட்டும் என்னால்விட முடியாது. நோ, ஐ காண்ட் கிவ் அப் மை ட்ரிங்க்ஸ்...' என்றெல்லாம் அழுத்தம்திருத்தமாகப் பேசுவதும், புலம்புவதும், அழுவதும், கத்துவதும் இவனுக்குச் சகஜமாகிப் போகிறது.

...இவனுடைய இந்த நடத்தை குடும்பத்தை, வேலையை, சுற்றி உள்ள சமூகத்தைப் பாதிக்க ஆரம்பிக்கும் பழுத்த கட்டம் இது! நண்பர்கள் மெள்ளமெள்ள விலகுகிறார்கள். 'ஐயோ, இவனா? மடாக்குடிகாரனாயிற்றே! அவனோடு சகவாசம் வைத்துக் கொண்டால் நம் பேரும் கெட்டுவிடும்' என்ற வெறுப்பில் இவனை உதறுவதில் தெரிந்தவர்கள் கவனமாய் இருக்கிறார்கள். கடைசியில், பொறுத்துப்பொறுத்துப் பார்த்துவிட்டு, தாளமுடியாமல் 'உங்கள் புத்திசாலித்தனத்துக்காக இத்தனை நாள் பொறுத்துப் பார்த்தோம். இனியும் உங்களை வேலைக்கு வைத்துக்கொள்வதென்பது சாத்தியமில்லை. வி ஆர் வெரி ஸாரி' - என்று சொல்லி ஆபீஸில் சீட்டுக் கிழித்து வீட்டுக்கு அனுப்புகிறார்கள். வீட்டுக்கு வந்தால் மனைவியும்...

அமெரிக்க வைத்தியரான டாக்டர் இ.எம். ஜெலினெக் (E.M. Jellineck) ஒரு குடிகாரன் எப்படிப் படிப்படியாக கீழ்மையடைந்து குடி என்னும் புதைசேறில் அழுந்திப் போகிறான் என்று ஆராய்ச்சி மூலம் குறிப்பிட்டிருப்பதற்குத் தானே ஒரு உதாரணமாக வாழ்ந்து காட்டுவதுபோல, கடந்த சில மாசங்களாய் தியாகு நடந்துகொண்டதில் -

அன்று-

அவனுக்கு-

வேலை-

போயிற்று.

# 26

சேஷன் மஹாமஹா கோபத்தில் இருந்தார். சென்னையி லிருந்து ஊர் திரும்பிய பத்து நிமிஷமாகவே இத்தனை கோபம்தான். சிவந்து விழித்த கண்கள்; துடிக்கும் உதடுகள்; உஷ்ணமாய், வேகமாய் வெளியேறும் மூச்சு.

'ராஸ்கல்... பொறுக்கி ராஸ்கல்' - என்றார்.

'இவனைக் கண்டந்துண்டமா வெட்டிச் சுண்ணாம்புக் காளவாய்லே போட்டா என்ன?' - என்றார்.

'தாலி கட்டின பெண்டாட்டி, கொழந்தையை வைச்சு சம்ரட்சிக்கத் துப்பு இல்லாத பேமானிக்குக் கல்யாணம் எதுக்கு?' - என்றார்.

சிலவற்றை உரக்கக் கேட்டார்; சில வார்த்தைகளை முணகிக்கொண்டார்.

பொறுக்கமுடியாமல் போனதும் ஊஞ்சலில் அமர்ந்து, நெற்றியில் ஓங்கி அறைந்துகொண்டார்.

அத்தனையும் பார்த்துக்கொண்டு ஒரு ஓரமாய் நின்றிருந்த மங்களம் ஏற்கெனவே நாலு தரம் கேட்டுவிட்ட கேள்வியை பதறிக்கொண்டு மீண்டும் கேட்டாள்:

''என்னாச்சுன்னா? ஒரு விவரத்தையும் சொல்லாம நீங்களாவே இப்படி அலட்டிண்டா எனக்கு ஒண்ணும் புரியலையே... கங்காவப் பாத்தேளா? சாதாரணமாத்தானே இருக்கா? அவ ஏதாவது சொன்னாளா? என்னத்துக்காக இப்படி இடிஞ்சி போயிருக்கேள்? சொல்லுங்கோன்னா...''

சேஷன் மனைவியை வெறித்துப் பார்த்தார்.

''சொல்லறத்துக்கு என்ன இருக்கு மங்களம்? அந்த மாபாவி நம்ப மூஞ்சிலே சேத்த வாரி அப்பிட்டான்டீ...''

''யாருன்னா? மாப்பிள்ளையா?''

''அந்த நாசமாப் போறவனேதான்.''

''விவரமா சொல்லுங்கோன்னா. எனக்குப் படபடப்பா இருக்கு...''



''மானம், மரியாதை கப்பல் ஏறிடுத்து மங்களம்... மாப்பிள்ளைனு நமக்கு ஒருத்தன் வாச்சிருக்கானே; அந்த ராஸ்கலாலே நம்ப குடும்ப மரியாதை, கௌரவம் எல்லாம் இன்னிக்குக் கை கொட்டிச் சிரிக்கறதுடீ.''

சேஷன் அடித்தொண்டையில் உறுமினார்.

''அவர் திரும்பக் குடிக்கற விஷயம்தானேன்னா? இப்படித் தாம்தூம்னு குதிக்கறத்துக்கு இதுலே என்ன இருக்கு? சில மாசமாவே தெரிஞ்ச சமாசாரம்தானே?''

''குடிக்கறாங்கறதை என்னால புரிஞ்சிக்க முடிஞ்சது வாஸ்தவம்தான் மங்களம். ஆனா விஷயம் இத்தனை அசிங்கமா உள்ளே புரையோடியிருக்கும்னு நா நினைக்கலை... நம்ம அருமை மாப்பிள்ளைக்கு வேலை போயிடுத்துடீ மங்களம்; போயிடுத்து...''

''என்...னது?''

''இதக் கேட்டே இப்படி அதிர்ந்து போறயே, இன்னும் பாக்கியக் கேட்டா என்ன பண்ணுவே? கொஞ்ச நாளா இங்க அறுப்பு அது. இதுனு வேலை சரியா இருந்துதுனு நா பட்டணத்துக்குப் போய்த் தங்காம, ஓட்டமா ஓடி, அவாளை எட்டிப் பார்த்துட்டு வந்தது தப்பா போயிடுத்துடீ. நம்ம கங்காவோட குடி மூழ்கிப் போறத்துக்கு நாமும் காரணமாயிட்டோம் மங்களம்...''

''ஏன்னா விவரத்தை கங்கா நமக்கு உடனே தெரிவிக்கலை? ஒரு லெட்டர் எழுதப்படாதா? இல்லே போன் பண்ணிச் சொல்லக்கூடாதா? ரெண்டு நாள் முந்தி எப்படி இருக்கேடிம்மானு கேட்கலாம்னு நா போன் போட்டப்ப லைன் எனக்குக் கிடைக் கலை.''

''போனே வீட்டுலே இல்லாதப்போ லைன் மட்டும் எங்கேயிருந்து கிடைக்கும்?''

''எ...ன்னது...?''

''ஆமாண்டி - வேலை போன மறு வாரமே போன் கனெக்‌ஷனை எடுத்துட்டானாம். கம்பெனி போன், கார், வீடு இல்லையா? வீட்டையும், காரையும் மட்டும் ஐயோ பாவம்னு மேற்கொண்டு ஒரு மாசம் வைச்சுக்கச் சொல்லி இருக்கானாம். 'இப்ப போன் போச்சப்பா, அடுத்த ட்ரிப் நீங்க இங்க வர்றப்போ வீடும்

போயிடும் - நானும், கண்ணனும் நடுத்தெருலே நின்னுண்டு இருப்போம்'னு சொல்லி கங்கா பிழியப்பிழிய அழுதப்போ என் தேகம் ஆடிப்போச்சம..."

இப்போது கணவனின் கோபம் மங்களத்தையும் ஆட்கொண்டது:

"அவ ஏன்னா நடுத்தெருலே நிக்கணும்? கோட்டை மாட்டமா பங்களா, தோட்டம், தோப்புனு எல்லாம் இங்க இருக்கறச்சே அவளுக்கு நடுத்தெருலே நிக்கணும்னு என்ன தலை எழுத்து? பேசாம உடனே போய் அவளையும் கண்ணனையும் கூட்டிண்டு வந்துடலாம், வாங்கோ. நிறைமாச பிள்ளைத்தாச்சிப் பொண் மனசு வேதனைப்பட்டு அழுதுண்டு இருந்தா உடம்புக்கு ஆகாது. பட்டணத்துலே பிரசவத்தை வைச்சிக்கலாம், வசதியா இருக்கும், கண்ணன் படிப்பும் கெடாதுனு அவ சொன்னதொட்டு பேசாம இருந்தேன். இனிமேயும் நாம சும்மா இருந்தா அது அசிங்கம்... ஆமா, மாப்பிள்ளைக்கு வேலை போன உடனே இவ நமக்கு சேதி தெரிவிக்க வேண்டியதுதானே, ஏன் பேசாம இருந்தாளாம்?"

"வேற என்ன? இதப்போய் பொறந்தாத்துலே எப்படிச் சொல்லறதுங்கற அவமானம்தான். 'அக்கா, அத்திம்பேர் ஓஹோனு இருக்கா, என்னால ஆதிநாள்லேந்து உங்களுக்கு சுகம் கிடையாது. இங்க மெட்ராஸிலே பெரிய்ய நர்ஸிங் ஹோம்லே பிரசவத்தை நடத்திண்டு, ஆம்படையான் அந்தஸ்தா இருக்கார்னு காட்டிண்டு, அப்புறமா நாலு பேர் மெச்சற மாதிரி பிறந்தாத்துக்கு வரணும்னு ஆசைப்பட்டேன். அது நடக்கக்கூட எனக்குப் ப்ராப்தம் இல்லையே'னு குழந்தை அடிச்சுண்டு அழறா. அவ வேதனையைப் பாக்கறப்போ எனக்கும் கண்ணால ஜலம் வந்துடுத்து..."

சேஷனின் குரல் தழுதழுத்தது.

"நா என்ன பாவம் பண்ணேனோ? போன ஜென்மத்துலே யார் குடியைக் கெடுத்தேனோ, இன்னிக்கு அது என் குழந்தையை வாட்டறது... தாயே...! லோகமாதா...! பரமேஸ்வரி...!"

சில நிமிஷங்களுக்கு மங்களம் அழ, சேஷன் அழ, ரேழியில் நின்று அத்தனை பேச்சையும் கேட்டுக்கொண்டிருந்த ஆட்கள் அழ, அந்த இடம் சோகத்தால் பீடிக்கப்பட்டது.



"அன்னிக்கே கங்காகிட்ட நா கேட்டேன். இவன் மூஞ்சியும் மொகரையும் நன்னா இல்லையேம்மா; என்னமோ வாசனை வர்றதேம்மா; அடிக்கடி வெத்திலை போடறானேம்மா - இதெல்லாம் என்ன?னு ரொம்ப நாள் முந்தியே நா அவகிட்ட கேட்டேன். 'எனக்கும் சந்தேகம் வந்ததுப்பா, நா கேட்டேன், அவர் சத்தியமா குடிக்கலைனு சொல்றார். தவிர, ஆண்டப்யூஸ் மாத்திரை சாப்பிடறாரே, எப்படிப்பா குடிக்க முடியும்'னு - அவ வெகுளியா பதில் சொன்னதை நா அப்படியே எடுத்துண்டுட்டேன். அப்பத்தான் சும்மா இருந்தேன், சரி. போன ரெண்டாம் மாசம் நிச்சயம் குடிக்கறார்னு தெரிஞ்சப்புறமாவது நேருக்கு நேரா அந்த படவா ராஸ்கலை மடக்கி "என்னடா விஷயம்?"னு கேட்டேனா? இல்லையே! 'வாடா டாக்டர் கிட்டே'னு கையைப் பிடிச்சு இழுத்துண்டு போயிருக்கணும். போனேனா? இல்லையே! நா தப்பு பண்ணிட்டேன் மங்களம். இன்னிக்கு என் குழந்தை மனசு வேதனைப்படறதுக்கு நானே காரணமாயிட்டேன்."

கண்களைத் துடைத்துக் கொண்டு மங்களம் நிமிர்ந்தாள்.

"இப்பத்தான் கூட்டிண்டு போறது, அந்த டாக்டர் ரெட்டிகிட்ட உடனடியா கூட்டிண்டு போறது..."

சேஷன் கோபத்துடன் சிரித்தார்.

"ஆ... நன்னா போகலாமே! வாடா மாப்பிள்ளைன்னதும் அவன் ஆஹா மாமானு ஓடிவரப் போறான்... போடி பைத்தியம். நேத்து ராத்திரி என்ன நடந்துதுனு தெரியாம நீ விவரம் கெட்டத்தனமா பேசற..."

சேஷனுடைய இந்தக் கோபம், ஆத்திரம், படபடப்பு எல்லாம் நியாயமானதுதான்.

சில நாட்களாய் வேலை மும்முரத்தில் சென்னைப் பக்கம் போகாமல் இருந்துவிட்டவர் முதல்நாள் சாயங்காலமாக கங்காவின் வீட்டை அடைந்து படியேறினபோது வீடு இருளில் மூழ்கி இருந்தது.

ஹாலில் நுழைந்து "வாசக்கதவு திறந்திருக்கு. ஒரு இடத்துலயாவது லைட் இல்லே... கங்கா...! கங்கா..." என்று குரல் கொடுத்தபோது, உள்ளே இருந்து வெளியில் வந்து 'வாங்கோ' என்று சொல்லிச் சமையல்காரம்மாள் விளக்கைப் போட்டாள்.

''கங்கா எங்கே?''

''உள்ளே படுத்துண்டு இருக்கா...''

''ஏன் எல்லாரும் இப்படி அழுது வழிஞ்சிண்டு இருக்கேள்? சாயரட்சையிலே விளக்கே ஏத்தாம என்ன பண்ணிண்டு இருக்கேள்? ம்?... கங்கா ஏன் படுத்துண்டு இருக்கா? உடம்பு சரியில்லையா? கண்ணன், மாப்பிள்ளை எங்கே?''

-நீளமாய்க் கேட்டுக்கொண்டே படுக்கை அறையில் நுழைந்தவர் திடுக்கிட்டு நின்றார்.

கங்காவின் முகமும், கோலமும்...

''கங்கா...! என்னம்மா? என்னாச்சும்மா?''

இனியும் உள்ளே வைத்துக்கொண்டு புழுங்கத் தெரியாமல் கங்கா கொட்டித் தீர்த்தாள்:

''அவர் பழையபடி குடிக்கறார்னு எனக்கு ரெண்டு மாசமா நிச்சயமா தெரிஞ்சு போச்சுப்பா... ஆனா.... ஆனா உங்ககிட்டயோ மத்த யார்கிட்டயோ இதப்பத்தி சொல்ல எனக்கு வெக்கமா இருந்துதுப்பா... க்ளினிக்குல சேர்ந்து அத்தனை பணம் செலவழிச்சுச் சரியான மனுஷன் திரும்பப் பழைய மாதிரி ஆயிட்டார்னா நீங்க, அத்திம்பேர், ராமபத்ர மாமா எல்லோரும் மனசுலே கேலியா நினைக்கப்போறேளோனு பயம்ப்பா...''

''அதட்டினேன், சண்டை போட்டேன், முதல்ல குடிக்கவே இல்லேனு அழிச்சாட்டியம் பண்ணார். அப்புறம் இன்னிக்கு ஒரே ஒரு நாள் மட்டும்தான் குடிச்சேன்னார்... டாக்டர் ரெட்டிய நாளைக்குப் பார்க்கறேன்னார்... அவரைப் பாத்திட்டேன், மருந்து கொடுத்திருக்கார், சாப்பிடறேன், கவலைப்படாதேன்னார்... நாளுக்கு ஒன்னா அழகா பொய் சொன்னார்... நானும் நம்பி ஏமாந்துட்டேன்ப்பா...''

''இப்ப வேலை போற அளவுக்கு வந்தப்புறம்தான் நிஜ நிலைமை எனக்குப் புரியறது. 'இதோ வேற வேலை கிடைக்கப் போறது, அதோ வேற வேலை'னு சொன்னதையும் நம்பி நா ஏமாந்துட்டேன்ப்பா... நன்னா ஏமாந்துட்டேன்ப்பா.''

''ஊருக்கு வந்து எந்த மூஞ்சியோட உங்களையெல்லாம் நா பார்ப்பேன்ப்பா? டம்பமா பட்டணத்துலேதான் ப்ரசவம் பாக்கணும், எங்காத்துக்காரர் கம்பெனியிலே அத்தனை செலவையும்



ஏத்துண்டுடுவானு ஏகமா ஊர் ஜனங்ககிட்ட பீத்திண்டுட்டப்புறம் இப்ப நா எந்தப் பவிஷோட திரும்ப அங்க வருவேன்ப்பா? இந்த மனுஷன் ஆம்பிளையே இல்ல... இவரை நம்பி நா வாழறதும், மண்குதிரையை நம்பி ஆத்துலே இறங்கறதும் ஒண்ணுதாம்ப்பா... கண்ணனுக்காகவும், வயத்துல இருக்கிறதுக்காகவும் பாக்கறேன். இல்லாட்டா எப்பவோ, எதையோ செஞ்சுண்டு என் கதையை நா முடிச்சுண்டு இருப்பேன்...''

கங்கா கதறினாளாம் - முட்டிக்கொண்டாளாம். புலம்பினாளாம்.

மகளின் வேதனையைத் திரும்ப மனைவியிடம் எடுத்துரைப்பதற்குள் பரிதவித்துத்தான் போனார்.

துக்கம் நெஞ்சை அடைக்க அவர் பேசி முடிப்பதற்குள் த்யாகு சொந்த மாப்பிள்ளை என்பதை மறந்து மங்களம் 'அடப்பாவி!' என்றாள், 'கட்டையிலே போறவனே' - என்றாள். கை விரல்களைச் சொடுக்கி 'எங்கொழந்தையை இப்படி அலைக்கழிக்கிறியே, நீ நாசமாத்தான் போவே' என்றாள்.

அப்புறம் ஏதோ நினைத்துக்கொண்டவள் போல, ''அந்த மனுஷனைப் பாத்து சூடா நாலு கேள்வி கேக்காம சும்மாவான்னா வந்திருக்கேள்? கன்னத்துலே அறையாத தோஷமா, நாக்கைப் பிடுங்கிக்கிற மாதிரி ரெண்டு வார்த்தையாவது கேட்டேளா, இல்லையா?'' எனவும், சேஷன் வேதனையுடன் சிரித்தார்.

''அந்த மாதிரி அவன் காலரைப் பிடிச்சுண்டு உலுக்கணும்னு தான் நாலும் அங்கயே ராத்தங்கினேன். ஆனா, தங்கினப்புறம், அவன் இருக்கற நிஜமான நிலையைப் பாத்தப்புறம், ஏண்டாப்பா தங்கினோம்னு எனக்கு ஆயிடுத்து, பன்னண்டு மணி சுமாருக்கு ஆடிண்டே வந்தான். பாட்டு, விசில் இதுக்கெல்லாம் ஒண்ணும் குறைச்சல் இல்லே... 'ஹாய் மாமா'ன்னான் என்னைப்பார்த்து, அப்புறம் 'உன் க்ராப் நன்னா இல்லேய்யா, மாத்து'ன்னான், 'பணம் இருக்கறதை அனுபவிக்கணும்... சும்மா சேத்து வைக்கப்படாது, ஹாய்யா நா அனுபவிக்கிற மாதிரி என்ஜாய் பண்ணு, என்ன?'ன்னான். 'மாடிக்கு வாய்யா... ஒரு பெக் ஊத்தித் தரேன்'னான். இன்னும் என்னென்னவோ திமிரா பேசினான். த்யாகுவா, இது நம்ம த்யாகுவானு எனக்கு ஷாக் அடிச்சாப்பல ஆயிடுத்து. இங்க வேலை

அதிகம்னு, மெட்ராஸுக்குப் போனா, பகல்லே ஒரு மணி நேரம் அவனை எட்டிப் பாத்துட்டு வந்துட்டதுலே அவனோட சொரூபம் எனக்குத் தெரிஞ்சிருக்கலை. இந்தப் பொண்ணும் பயந்துண்டு, அவமானப்பட்டுண்டு நம்மகிட்டே இருந்து விஷயத்தை மறைச்சிருக்கா... 'என்ன த்யாகு, இப்படி நடந்துக்கறதுக்கு உங்களுக்கு வெட்கமா இல்லை?'னு நா கேட்டா, 'அவன் 'வெட்கமா, எனக்கா? நோ'னு சொல்லிச் சிரிக்கிறான். 'டாக்டரை நாளைக்குப் பார்க்கலாமா? இப்படியே இருந்தா உடம்பு கெட்டுடும்' னேன். கெட்டுமே... உங்களை மாதிரி அறுபது வயசுலேயும் பெண்டாட்டி கிட்ட படுத்துண்டு, அவகிட்ட பயந்துண்டு வாழறத்துக்கு பதிலா நாப்பதுலே குடிச்சுண்டே சாக நா ரெடி'னு பதில் சொல்றான். மேற்கொண்டு அவன்கிட்ட நின்னு பேச எனக்குக்கூடப் பிடிக்கலை... தூர்த்தெறி - இவனும் ஒரு மனுஷனா? ஆம்பிளையா? பேமானி... பேமானி..."

"இப்ப என்னென்னா பண்ணறது? அவன் எக்கேடு கெட்டும் ஒழியட்டும்னு விட்டுட்டு நம்ப குழந்தையைக் கூட்டிண்டு வந்துடறதுதானே?"

"அதுதான் எனக்கும் தோணித்து. கங்காகிட்ட சொன்னா, அவ பதில் பேசாம ஹோனு அழறா... விடாம துருவினப்புறம் இந்த ராஸ்கலுக்கு அங்கே இங்கே கடன் இருக்கறது வெளில வந்தது. பணத்தை எடுத்துண்டு போய் அந்தக் கடன்காரா மூஞ்சிலே விட்டெறிஞ்சுட்டு, நம்ப பொண்ணையும், பேரனையும் கூடவே கூட்டிண்டு வந்துடணும். நீயும் புறப்படு மங்களம்... நா மட்டும் போனா கங்கா 'நா வரலை, எனக்கு அவமானமா இருக்கு'னு எதையாவது சொல்லுவா... கண்ணனை இங்கயே பள்ளிக்கூடத்துல சேர்த்துடலாம். அடுத்த மாசம் கங்காக்கு ப்ரசவ டைம் வேற... அதனால இனிமே தாமதிக்கறதுலே அர்த்தம் இல்லே... வீட்டை ஒழிச்ச, அவளுக்கு ஆறுதல் சொல்லக்கொள்ள நீயும் கூட இருந்தாத்தான் சரி! பணம் பத்தாயிரம் உள்ள இருக்கு பாரு, அதை எடுத்து வைச்சிக்கோ... சாமான் சஜ்ஜாவை ஏத்த அங்கேயே ஒரு லாரிய ஏற்பாடு பண்ணிக்கலாம்... ஆகட்டும்... கிளம்பு. நா ராமபத்ரன்கிட்டயும், லாலா கிட்டயும் ஒரு வார்த்தை சொல்லிட்டு வந்துடறேன். நீ தனுகளையும் முனுசாமியையும் நம்பகூட பட்டணத்துக்கு வரத் தயாரா இருக்கச் சொல்லு..."



திட்டமிட்டபடி சேஷனும், மங்களமும் ஆட்களோடு சென்னைக்குப் போனார்கள். இரண்டு நாட்கள் தங்கி, கொடுக்கவேண்டிய கடன்களை பைசல் பண்ணி, அத்தனை சாமான்களையும் லாரியில் ஏற்றினார்கள். குடிபோதையுடன் நின்றுகொண்டிருந்த த்யாகுவைக் கடுகத்தனைகூட லட்சியம் செய்யாமல் கங்கா, கண்ணனுடன் கிராமத்தைப் பார்க்கக் கிளம்பி வந்தார்கள்.

## 27

த்யாகு மெதுவாகக் கண்களைத் திறந்தான்.

மத்தியான வெயில் கண்களில் கத்தியாய்ப் பாய்ந்து மண்டையில் மத்தளம் அடிக்க, உடனே திரும்ப இமைகளை அழுத்திக்கொண்டான்.

வரவர வெயிலைப் பார்த்தால்கூடக் கண்ணும் மனசும் கூசிப்போவது அவனுக்குப் புரிந்தது.

சப்தம் ஆகவில்லை, வெளிச்சம் ஆகவில்லை - என்ன இதெல்லாம்?

படிப்படியாகப் பல விஷயங்கள் உடம்புக்கு ஒத்துக் கொள்ளாமல் போன மாதிரியா இவையும்? குடிகாரனின் அடுத்த கட்டமா?

என்ன இழவு இதெல்லாம்?

குளிர் ஜுரம் கண்ட ரீதியில் நடுங்கும் உடம்பை லேசாகச் சுருட்டிக்கொண்டு, அடக்கமாகப் படுக்க முயற்சித்தபோது த்யாகுவுக்கு அழவேண்டும் போல இருந்தது.

விசித்துவிசித்து அழுதால் என்ன?

வாய்விட்டு அம்மா... ம்மா என்று அழுதால் என்ன?

என்னை இப்படி அநாதையாக விட்டுவிட்டு அத்தனை பேர்களும் போய்விட்டார்களே என்று அம்மாவை, வசுக்குட்டியை, கங்காவை, கண்ணனை நினைத்து ஒரு பாட்டம் அழுதால் என்ன?

கண்களிலிருந்து புறப்பட்ட கண்ணீர் கோடாகப் பக்கவாட்டில் இறங்கி தலைகாணியை நனைத்தது.

சப்தமில்லாமல் விசும்பியதில் மூக்கு அடைத்துக் கொள்ள, த்யாகு சிரமத்துடன் எழுந்து உட்கார்ந்து கொண்டான்.

தலை பம்பரமாய்ச் சுற்றியது.

பெட்ஷீட்டிலேயே மூக்கைச் சிந்திக் கண்களைத் துடைத்துக்கொண்டான்.

நேர் எதிரில் இருந்த கண்ணாடியில் தன் பிம்பம் தெரிந்ததை உற்றுப் பார்த்தான்.

நானா?

இது நானா?

தோள்பட்டையைத் தொடும் முடியும், மீசையும், தாடியுமாய் இருப்பது நானா?

கன்னங்கள் ஒட்டி, காக்கச்சிக்காய் வத்தல் மாதிரி நெருங்கி, உலர்ந்து போயிருப்பது நான்தானா?

திடுமென்று நெஞ்சு ரொம்ப வலிக்க, அடங்கி இருந்த கண்ணீர் மீண்டும் ஊற ஆரம்பித்தது.

மெதுவாகத் தலையைத் திருப்பித் தன்னைச் சுற்றிப் பார்த்தான்.

பெரிய அறை, இரட்டைக் கட்டில், காற்றில் ஆடும் திரைச்சீலைகள், ட்ரெஸ்ஸிங் டேபிள், வாட்ரோப், அட்டாச்ட் பாத்ரூம்.

ஏதாவது குறை?

அரவிந்தனுடைய வீட்டில் த்யாகுவுக்கு எந்த செளகரியக் குறைச்சலும் இல்லை. வேளாவேளைக்கு விதவிதமாய் பானங்கள், சாப்பாடு, தங்க வசதியான அறை.

ஏதாவது குறை?

ம்ஹூம் இல்லை. ஒன்றே ஒன்றைத் தவிர.

மரியாதை. யெஸ். அதைத் தவிர பாக்கி எல்லாம் வக்கணையாய்க் கிடைப்பது உண்மைதான்.

ஏன் இந்த நிலை?



ஒரு மாசத்துக்கும் மேலாக டிகாணா போட்டு விட்டதாலா?

வேலை வெட்டி என்று எதுவும் இல்லாமல் அரவிந்தனுக்கு சதா ஜால்ரா போடுவதாலா?

இந்த ஆள் இனி பைசாவுக்குப் பிரயோசனம் இல்லை என்ற எண்ணம் எல்லாருக்கும் தோன்றிவிட்டதாலா?

எதனால்?

கழுத்தில் நிற்கமாட்டேன் என்று அழிச்சாட்டியம் பண்ணிய தலையைக் கைகளால் தாங்கிக்கொண்டு அழுந்த உட்கார்ந்தபோது போன மாசம் நிலைமை இவ்வளவு மோசமாக இல்லை என்றே த்யாகுவுக்குத் தோன்றியது.

சொல்லாமல் கொள்ளாமல் அப்பாவும் அம்மாவுமாய்ப் படையெடுத்து வந்து கங்காவையும், கண்ணனையும் கூட்டிக் கொண்டு போனார்களே, அப்போது அம்போ என்று நின்றவனைக் கைப்பிடித்து அணைத்து 'நான் இருக்கிறேன் உனக்கு' என்று அழைத்துப்போனவன் இந்த அரவிந்தன்தானே?

''நீ கட்டின தாலியக் கட்டிண்டு என் பொண் பன்னண்டு வருஷம் உன்னோட வாழ்ந்த தோஷத்துக்காக உன் கடனையெல்லாம் இப்ப நா அடைச்சிட்டேன். இனி உனக்கும் கங்காவுக்கும் ஸ்நானப்ராப்திகூட வேண்டாம். என் பொண்ணையும் பேரனையும் நா கூட்டிண்டு போறேன். ஆயுசு பர்யந்தம் அவளை ராணி மாதிரி உக்கார வைச்சுக் காப்பாத்த எனக்கு வக்கு இருக்கு... திரும்ப இங்க அங்க கடனை வாங்கிட்டு, 'கங்கா, என் கடனைத் தீர்த்துடு'னு நீ வெட்கம் மானம் இல்லாம ஊருக்கு வந்து நின்னா நா ரொம்பப் பொல்லாதவனாயிடுவேன். இனிமே வேலை தேடிக்கறதும், தேடிக்காததும் உன் இஷ்டம், நீ எக்கேடு கெட்டு எருக்கு முளைச்சுப் போனாலும் எனக்குக் கவலை இல்லே, குடிச்சு அழிஞ்சாலும் அழி, இல்லே டாக்டரைப் பாத்து உடம்பைச் சரி பண்ணிண்டாலும் சரி - எனக்கு சத்தியமா அக்கறை இல்லே, இன்னியோட உன்னை நா தலை முழுகியாச்சு... திரும்பச் சொல்றேன்... பெண்டாட்டி பிள்ளை உறவு கொண்டாடிண்டு எங்க ஆத்துல நுழைஞ்சா ரெண்டு காலையும் வெட்டிப்போடக் கூடத் தயங்க மாட்டேன். எனக்கு வர்ற ஆத்திரத்துக்கு அப்படியே ரெண்டு கையாலயும் உன் கழுத்தை நெரிக்கப் போட்டா என்னன்னு தோணறது. பழி பாவத்துக்கு அஞ்சி

உன்னை சும்மா விட்டுட்டுப் போறேன். கையிலே காசு இல்லாம, திங்கறத்துக்கு சோறு இல்லாம, மனுஷா உன்னை சீச்சீனு ஒதுக்க, நீ நடு ரோடில நின்னுண்டு சீரழியணும்; அதை நா கண் குளிரப் பாக்கணும். எங்குழந்தையோட வயித்தெரிச்சல் உன்னைச் சும்மா விடுமா? சத்தியமா விடாது. நீ நாசமாத்தான் போவே... சீரழிஞ்சு சிரிப்பா சிரிச்சாத்தான் எங்க அருமை உனக்குப் புரியும்...''

காரில் ஏறின பிறகும்கூட சேஷனது கத்தல் ஓயவில்லை. பெரிசாகக் கேட்டது. கார் கிளம்பும் ஓசையில் குறைந்து, மெள்ளமெள்ள தேய்ந்து மறைந்த பிறகு அரைமணி போல ஜடமாய் அப்படியே உட்கார்ந்திருந்துவிட்டு த்யாகு அரவிந்தனைத் தேடிக்கொண்டு போனான்.

அரவிந்தன் க்ளப்பில் இருந்தான். சுற்றிலும் வழக்கமான ஆமாம் சாமிகள்.

இவனைக் கண்டதும் ''வாய்யா, ஏன் இவ்வளவு லேட்?'' என்று தடபுடலாய் வரவேற்று, கையில் ஒரு விஸ்கி டம்ளரை அவன் கொடுத்ததும் அந்த அன்பும் கரிசனமும் நெஞ்சைத் தொட, த்யாகு அழ முற்பட்டான்.

''என்னய்யா? ஹேய்... த்யாகு... வாட் ஹேப்பண்ட்?''

அந்த நிமிஷம், அந்தக் கேள்வியும் ஈடுபாடும் தேவையா யிருக்க அத்தனையும் - சேஷன் வந்ததை, பேசியதை, கங்காவை அழைத்துப் போனதை - த்யாகு கொட்டித் தீர்த்தான்.

''எல்லாம் போச்சு அரவிந்த். மானம், மரியாதை, அந்தஸ்து எல்லாம் போச்சு'' என்றான்.

''வீட்டுலே இப்ப ஒரு சாமான் இல்லே... சமையல் கட்டுக்குப் போய் ஒரு டம்ளர் தண்ணி எடுத்துக் குடிப்போம்னா ஒரு டம்ளர் கிடையாது. பாத்திரம் கிடையாது. பானைகூடக் கிடையாது. அத்தனையும் மனுஷன் ஒழிச்சு எடுத்துண்டு போயிட்டார்'' என்றான்.

''கட்டில் அவர் வாங்கிக் கொடுத்ததாம். அதுக்காக ஒத்தைப் படுக்கையைத் தரையிலே தூக்கிப் போட்டுட்டு கட்டில், மெத்தை சோபானு ஒண்ணு விடாம எடுத்து லாரிலே அடைச்சுண்டு போயிட்டார்'' என்றான்.

''பைசா பணம் இல்லாம நா சீரழியணுமாம். அவர் பாக்கணு மாம். 'உன் சேவிங்க்ஸ் அக்கௌண்ட் பணத்தை வைச்சுண்டு நீ



எத்தனை நாளைக்குக் குப்பை கொட்டிக் கிழிக்கறேனு நா பார்க்கறேன்'னு கத்தினார் அரவிந்த். நா என்ன பண்ணுவேன்?'' என்றான்.

பீறிட்டு எழுந்த அழுகையை அடக்கத் தெரியாமல் த்யாகு தவிக்க, அரவிந்தன் எட்டி அவன் கையைப் பிடித்துக் கொண்டான்.

''கங்கா போயிட்டா... அவ்வளவுதானே? ஹெல் வித் ஹர் த்யாகு. அவ இல்லாட்டி குடி முழுகிடுமா? இப்ப நா இல்லே? மனைவி, குழந்தை குட்டினு சொந்த பந்தம் எதுவும் இல்லாம நா இல்லே? எனக்கு என்ன குறை? ஒண்ணுமில்லே... லோ, என் மாதிரி இனிமே நீயும் ஹாய்யா விட்டது சனினு இருய்யா...''

''எப்படி அரவிந்த் அது முடியும்? இன்னும் ஒரு வாரத்துலே வீடும், காரும் போயிடும். ஏற்கெனவே போன் போயாச்சு... அப்புறம் நா என்ன பண்ணுவேன்? இன்னொரு வேலை உடனே கிடைக்குமா? கிடைக்கற வரைக்கும்? வாட் கேன் ஐ டு... வேர் கேன் ஐ கோ?''

அரவிந்தன் ஹீரோ பார்வை ஒன்றைப் பார்த்தான்.

''அதென்ன அப்படிச் சொல்லிட்டே த்யாகு? நா இல்லே? நா உன் கண்ணுக்கு மனுஷனா தெரியலே? நா இருக்கறப்போ நீ எப்படிப்பா இந்த மாதிரி பேசலாம்...ம்? ஐ'ம் இன்ஸல்டட்...''

பேசிக்கொண்டு போன அரவிந்தன் நிறுத்தினான். மந்தி மாதிரி பக்கத்தில் உட்கார்ந்திருந்த குமார் பக்கம் திரும்பினான்: ''டேய் குமார்! நீ என்ன பண்ணு, உடனடியா என் கார்ல இவன் வீட்டுக்குப் போய் இவனோட சாமான்களை ரெண்டு பெட்டிலே போட்டு பாக் பண்ணு. வீட்டைப் பூட்டி சாவியையும், கார் சாவியையும் இவன் கம்பெனில விட்டெறிஞ்சிட்டு நேரா இவனோட நம்ம வீட்டுக்கு வந்திடு... ஓ.கே!'' என்றவன் த்யாகுவைப் பார்த்து, ''கிளம்புய்யா... போய் சாமான்களை எடுத்திட்டு என் வீட்டுக்கு வந்து ஜம்னு கால் மேல் கால் போட்டுக்கிட்டு இரு பாக்கலாம். வீட்டைக் காலி பண்ணு, கார் சாவி குடுனு உன் கம்பெனி கேக்கற வரைக்கும் நாம ஏன் காத்திருக்கணும்? நமக்கு மட்டும் மானம் இல்லையா? ரோஷம் இல்லையா? கெட் அப்...'' என்றதும் அந்த உத்வேகத்தால் பீடிக்கப்பட்ட த்யாகு அன்று இரவுக்குள் தன் உடைமைகளோடு அரவிந்தன் வீட்டில் குடியேறினான்.

முதல் பத்து நாட்கள் எல்லாம் பிரமாதமாகத்தான் இருந்தன.

கன மரியாதை, கன ஈடுபாடு, கன அன்பு.

மாளிகை மாதிரி வீடு, மூலைக்கொரு ஆள், ஸ்காட்ச் தண்ணீராக ஓட, நேரம் காலம் இன்றி த்யாகு அதில் முங்கிக் குளித்தான்.

ஆனால் எல்லாம் பத்து நாட்களுக்குத்தான்.

அப்புறம் கொஞ்ச கொஞ்சமாய் அரவிந்தனின் பேச்சில், நடத்தையில், உபசரிப்பில் மாற்றங்கள்.

தூக்கத்தில் எழுப்பி உட்கார வைத்து, ''என்னய்யா தூக்கம் உனக்கு? எனக்குத் தூக்கம் வரலை. நீயும் முழிச்சிக்க'' என்றான்.

காரை நீ ஓட்டுய்யா - என்றான்.

மாடிக்குப் போய் என் பர்ஸை எடுத்து வாய்யா - என்றான்.

என் கேர்ள் ஃப்ரெண்டுக்கு உன் மீசை பிடிக்கலை. எடுத்துடு - என்றான்.

நீ குடிக்கற வேகத்துக்கு ஸ்காட்ச் தாங்காது - உனக்கு இண்டியன் ஸ்டஃப் போதும் - என்றான்.

நா வர்றப்போ நீ மரியாதை இல்லாம உட்கார்ந்து இருக்கறது எனக்குப் பிடிக்கலை - என்றான்.

இன்னும்... இன்னும்...

ஒரு மாசம் முடிவதற்குள்ளாகவே ட்ரிங்க்ஸுக்காக அந்த வீட்டில் சுயமரியாதை இழந்து, அரவிந்தனை எல்லாவிதத்திலும் திருப்தி செய்பவனாகத்தான் இருக்கவேண்டும் என்பது த்யாகுவுக்கு நிதர்சனமாகிவிட்டது.

கைகளின் நடுக்கம் அதிகமாக த்யாகு எழுந்து நின்றான். மெதுவாக ஜன்னலிடம் சென்று திரைச்சீலையை விலக்கி எட்டிப் பார்த்தான்.

இருட்டிவிட்டதா?

மணி என்ன?

போய் ஒரு விஸ்கி அடிக்கலாமா?



சட்டென்று, இந்த போதைக்காக தான் எத்தனை தூரம் குட்டக்குட்டக் குனிகிறோம் என்ற வலி மனசைப் பிறாண்ட த்யாகு அப்படியே நின்றான்.

போய்விடலாமா?

நீயும் வேண்டாம், உன் மட்டமான ட்ரீட்மெண்டும் வேண்டாம் என்று போய்விடலாமா?

எங்கே?

யாரிடம்?

வாட் அபௌட் ட்ரிங்க்ஸ்?

யார் கொடுப்பார்கள்? இத்தனை? நினைத்த போதெல்லாம்?

அதற்காக? அதற்காக?

இருப்புக்கொள்ளாமல் த்யாகு இப்படியும் அப்படியுமாக நடக்கத் தொடங்கினான்.

முதல் நாள் ட்ரைவர் காரில் இருக்கும்போது, ஸ்டார்ட் ஆகாத வண்டியை அரவிந்தன் தள்ளச் சொன்னதை த்யாகு இப்போது நினைத்துப் பார்த்தான்.

என்ன சொன்னான் அவன்? இறங்கித் தள்ளப் போன ட்ரைவரிடம் என்ன சொன்னான் அவன்?

''இரு ட்ரைவர். இந்த ஆளு இறங்கித் தள்ளட்டும். சும்மா குடிச்சிட்டுத் தின்னுட்டு இருக்கறதுக்கு இந்த வேலையாவது பண்ணட்டும்'' என்றுதானே?

வேண்டுமென்றே சொன்னானா?

இல்லை, குடிபோதையில் பேசினானா?

குமாரும், ட்ரைவரும் நமுட்டாய் எப்படிச் சிரித்தார்கள்?

புழு மாதிரி என்னை எப்படிப் பார்த்தார்கள்?

அரவிந்தன் ட்ரிங்க் கொடுக்கிறான். ஸோ அவன் என்ன சொன்னாலும் பொறுத்துக்கொள்ளலாம். பட் இவர்களை? இந்தப் பொறுக்கிகளின் நிஷித்தங்களை?

வீட்டுக்கு வந்ததும் 'இறங்கி கேட்டைத் திறங்க' என்று ட்ரைவர் அரவிந்தன் முன்னாலேயே என்னை அதட்டினானே அதற்கு என்ன அர்த்தம்?

பேசாமல் டாக்டர் ரெட்டியோடு தொடர்பு கொண்டு மறுபடியும் க்ளினிக்கில் என்னைச் சேர்த்து சரியாக்குங்கள் என்று கெஞ்சலாமா?

சாத்தியமா?

நாலைந்து மாசங்களுக்குமுன் ஒருநாள் குடிப்பழக்கம் அதிகமாகிவிட்டது என்பதை உணர்ந்து, பயந்து போன நிமிஷத்தில் அவருக்குத் தான் போன் பண்ணியதும், அவர் 'த்யாகராஜனா? எந்த த்யாகராஜன்?' என்றதும் என் பேர்கூட ஞாபகமில்லாதவரிடம் நான் ஏன் திரும்பப் போகவேண்டும் என்ற வீம்பில் போன் தொடர்பைத் துண்டித்ததும் ஞாபகத்துக்கு வந்தன.

டாக்டர் ரெட்டி சொல்லுவாரே ஆல்கஹாலிக்கினுடைய மூன்றாவது கட்டம் என்று - அதில்தானே இப்போது நான் இருக்கிறேன்?

என்ன சொல்லுவார்? ஓ.யெஸ். பாரனாய்ட் ஸ்டேஜ் - இல்லை?

இந்த நிலையைப்பற்றி ஒரு நாள் பேச்சு எழுந்தபோது நாணாவும் டாக்டர் ரெட்டியும் பேசிக்கொண்ட விவரங்கள் த்யாகுவினுள் திடுமென்று எட்டிப் பார்த்தன.

''ஆபரேஷன் பண்ணி ஆல்கஹாலிக்ஸைச் சரி பண்ணலாம்னு ஒரு ரிபோர்ட்லே படிச்சேன் டாக்டர். வாட் ஈஸ் தட்?''

''யு மீன் ஸ்டீரியோடாக், ஸிலேஷன்? மூளையின் நடுபாகத்துலே லிம்குலம் பண்டில்ஸ்னு ஒரு பகுதி இருக்கு. இதுக்கும் உணர்ச்சிகளுக்கும், அதாவது எமோஷனல் ஃபீலிங்ஸுக்கும் சம்பந்தம் உண்டு. இரண்டு மெலிதான ஊசிகள் மூலம் 100 பர்செண்ட் ஆல்கஹாலில் சில துளிகளை இந்த லிம்குலம் பண்டில்களில் இன்ஜெக்ட் செய்யும்போது, சில திசுக்கள் பாதிக்கப்பட்டு, இதன் மூலம் குடி வேணும்ன்ற தவிப்பு, தாபம் கொஞ்சம் குறையும். கான்சர் பேஷண்ட் சிலருக்கு வலி தெரியாம இருக்க இந்த வைத்தியத்தைச் செய்யறதுண்டு. ஆனா இதை முழு வெற்றினு சொல்ல முடியாது. நூத்துக்கு நாப்பதிலிருந்து ஐம்பது வரைதான் வெற்றி கிடைக்கும். தவிப்பைக் குறைக்கற அதே சமயத்திலே அந்தத் திசுக்களோட தொடர்புகொண்ட வேறு சில உணர்வுகளும் பாதிக்கப்பட இடம் இருக்கிறதால, எல்லா டாக்டர்களும் இந்த ஆபரேஷன் முறையை ஏத்துக்கறதில்லே.. ஐ'ம் ஒன் இன் தெம்...''



ஸோ, ஆபரேஷன் இல்லை.

க்ளினிக்கில் சேர்ந்து பழையபடி சிகிச்சை பெற மனசில் தெம்பும் இல்லை.

முக்கியமாய் எதற்கும் கையில் பணம் இல்லை.

அப்புறம் யோசனை என்ன?

மண்ணாங்கட்டி என்ன?

மண்டைக் குடைச்சலும், காது இரைச்சலும் அதிகமாகிவிட, த்யாகு கதவைத் திறந்துகொண்டு ஹாலுக்குப் போனான்.

பாரிலிருந்து விஸ்கி எடுத்து ஊற்றிக்கொண்டு திரும்பும் போது அரவிந்தன் தன் ஸ்நேகிதி நிம்மியுடன் வெளியிலிருந்து வந்தான்.

இருவரும் நல்ல போதையில் இருப்பது புரிந்தது.

''ஏய் - கெட் விஸ்கி ஃபார் போத் ஆஃப் அஸ்.''

த்யாகு தன் க்ளாஸை வைத்துவிட்டுத் திரும்பினான்.

விஸ்கியைக் கையில் வாங்கிக்கொண்ட அரவிந்தன், ''அருமருந்து பாடுய்யா''என்றான்.

''இப்பவா?''

''ஏன், இப்பப் பாடினா என்ன? எனக்குக் கேக்கணும் போல இருக்கு...''

''அப்புறமா பாடறேன் அரவிந்த்...ப்ளீஸ்!''

''நோ - நௌ - நீ பாடினாத்தான் விஸ்கி குடிக்கலாம். கமான்யா!''

த்யாகு பாடினான்.

''அருமருந்தொரு தனி மருந்து
அம்பலத்தே கண்டேனே...!''

''உரக்கப் பாடுய்யா...!''

பாடினான்.

''டான்ஸ் ஆடிக்கிட்டு பாடுய்யா...''

என்ன இது! இன்று இப்படிக் கழுத்தை அறுக்கிறான்? சிநேகிதிக்கெதிரில் ஷோ ஆஃப் செய்கிறானா?

ஒரு நிமிஷம் தயங்கிவிட்டு த்யாகு இடுப்பை ஆட்டிக் கொண்டே சுற்றி வந்து பாடினான்.

நிம்மிக்கு ஏகக் குஷி...!

'திஸ் சாப் ஈஸ் எ டார்லிங் அரவிந்த்' என்று கை கொட்டிக்கொண்டு சிரித்தாள்.

''இன்னும் பாக்கறியா நிம்மி? ஒரு ட்ரிங்க் வேணும்னா இவன் என்னென்லாம் செய்வான்னு பாக்கறியா?''

என் பணம், என் ட்ரிங்க், என் வீடு - என்கின்ற அகம்பாவத் தோடு பேசிய அரவிந்தன் ''ஏய், வாய்யா இங்க!'' என்றான்.

த்யாகு வந்தான்.

''ஸ்காட்ச் சாப்பிடறியா?''

''ம்.....''

''ரெமி மார்ட்டினி வேணுமாய்யா? ஃபுல் பாட்டில் உனக்கே உனக்கு?''

''வேணும் அரவிந்த்..''

''நாயாட்டம் நாலு கால்லே ஓடிவந்து நிம்மிக்குக் குரைச்சிக் காட்டுறியா? தரேன்?''

ட்ரிங்க்! அதுவும் ரெமி மார்ட்டினி! அதற்காக என்ன வேணுமானாலும் செய்யலாமே!

உடம்பு தடதடவென்று உதற, நாக்கில் நீர் ஊற, த்யாகு மட்டிக்கால் போட்டான்.

நாலு தரம் தவழ்ந்து நிம்மியைச் சுற்றி வந்து 'லொள் லொள்' என்றான்.

நிம்மி இெருகிெருத்துச் சிரித்தாள்.

எழுந்து விஸ்கி டம்ளரை ஆர்வத்துடன் வாயிடம் த்யாகு எடுத்துப்போக, அரவிந்தன் தடுத்தான்.



''நாய் டம்ளரிலே குடிக்காதுய்யா... அந்த ஸாஸரை எடு. ஊத்தித்தரேன். நக்கிக் குடி.''

கையிலிருந்த டம்ளரைப் பிடுங்கி, டேபிள் மேல் அரவிந்தன் வைக்க, நிம்மி குலுங்கிக்குலுங்கி ''ஓ! மை டாக்; மை புவர் டாக்'' என்று சிரிக்க, த்யாகுவினுள் படபடவென்று கோபம் தலை தூக்கியது.

இது தவறு... ரொம்பத் தவறு...

ஒரு வாய்...

ஒரே ஒரு வாய்க்காக நான் தவித்துப் பறக்கும்போது இவன் இத்தனை சீண்டுவது அநியாயம்...

ஐ நீட் விஸ்கி...

இந்தப் படபடப்பும், மரங்கொத்திக் கொத்தலும் குறைய எனக்கு ட்ரிங்க் வேண்டும்... நெள... நெள...

அதைத் தராமல் இப்படி விளையாடும் இவனும் ஒரு மனிதனா?

என்ன செய்கிறோம் என்பது புரியாமல் போக த்யாகு அரவிந்தன்மேல் பாய்ந்தான். அப்புறம், 'யூ பாஸ்டர்ட்... யூ காண்ட் டீஸ் மீ லைக் திஸ்' என்று கத்தியபடி அவன் கன்னத்தில் அறைந்து காலரைப் பிடித்து உலுக்கினான்.

அப்புறம்...

அப்புறம் என்ன?

அடுத்த பத்தாவது நிமிஷம் அரவிந்தனின் ஆட்களிடம் செமத்தியாக வாங்கிக் கட்டிக்கொண்டு, பெட்டியோடு த்யாகு செத்த எலி மாதிரி தூக்கி எறியப்பட்டபோது 'நீ நடுத்தெருலே நின்னுண்டு மனுஷா இல்லாம சீச் சீனு நாறணும்.. நா பாக்கணும்' என்று அன்றொரு நாள் சேஷன் வயிறு எரியச் சாபமிட்டது பலித்ததுதான் நிஜம்.

# 28

''ஸார்...!''

''......''

''ஸார்... எந்திரிங்க ஸார் நேரமாச்சு...''

''ம்ம்ம்ம்....''

''அட... எந்திரிங்கண்ணா, என்ன ஸார் இப்படித் தூங்கறீங்க... மணி பதினொண்ணு ஆச்சு ஸார்... பாத்ரூம் காலியா இருக்குது... நாயர், சூடா புரோட்டா, குருமா போட்டிருக்காரு ஸார்... வாங்கிட்டு வரவா? எழுந்து குளிச்சிட்டுச் சாப்பிடறீங்களா?...''

த்யாகு கீற்றாகக் கண்களைத் திறந்தான்.

ஒட்டடை தொங்கும் விட்டம். வெள்ளை சுண்ணாம்பு திட்டுத்திட்டாக உதிர்ந்துவிட்டதில் ஜுரகோடர்மா வந்த சுவர்கள். கிட்டத்தில் குனிந்தபடி முத்துவின் முகம்...

''என்ன முத்து கால வேளைலே தொந்தரவு பண்ணறே...''

''கால வேளையா? சரியா போச்சு... அவனவன் ஆபீஸ், வேலைக்குப் போய் ரெண்டு மணி நேரம் ஆவுது, என்ன ஸார் நீங்க...! எந்திரிங்க...''

''தலை வலிக்கிறது முத்து... இன்னும் கொஞ்ச நாழி தூங்கவிடேன்.''

''பாத்ரூம் காலியா இருக்கு ஸார். எழுந்து பல் தேய்ச்சி குளிங்க... நா நாஸ்தா வாங்கிட்டு வரேன். தின்னுட்டுப்படுங்க... ராவுக்கிகூட ஒண்ணும் சாப்பிடல... ரெண்டு மசால் வடை தின்னதுதான்... வெறும் வயித்தோட இருந்தா தலை நோவும்னு எங்கம்மா சொல்லும்... எந்திரிங்க ஸார்..''

கரிசனத்தோடு முத்து பேசிய பேச்சுக்கள் நெஞ்சை நெகிழவைத்ததில் குபுக்கென்று த்யாகுவின் விழிகளில் ஈரம் பளபளத்தது.

மெதுவாக எழுந்து உட்கார்ந்துகொண்டான். தலை மரத்துப் போன மாதிரி கல்லாக இருந்தது. நெற்றியில் விழுந்த முடிக்



கற்றைகளைப் பின்னால் தள்ளி மசமசத்த பார்வையைச் சரி செய்யும் திணுசில் கண்களை விரல்களால் அழுந்தத் தேய்த்துக்கொண்டான்.

பிரஷ்ஷில் பேஸ்ட் போட்டு முத்து அவனிடம் நீட்டினான். ''குளிச்சிட்டு வர்றீங்களா? நா போய் புரோட்டா வாங்கியா ரட்டுமா?''

எண்ணெய் சொதசொதக்கும் புரோட்டாவையும், திரிதிரியாய் ஓடும் குர்மாவையும் நினைத்த மாத்திரத்தில் அடிவயிற்றில் ஒரு குமட்டல் தோன்றியது.

பரோட்டாவா?

இப்போதா?

ஹக்...

பேசாமல் ஒரு பெக் விஸ்கி குடித்தால் நன்றாக இருக்கும்!

ஜில்லென்று... ஐஸ் போட்டு.. சோடா விட்டு.. ஹா! எத்தனை நாளாயிற்று. அப்படி அனுபவித்துக் குடித்து!

விஸ்கி ஞாபகம் வந்த உடனேயே இதயம் பரபரக்கத் தொடங்கியது. தொண்டையில் ஒரு வறட்சி. மண்டைக்குள் சுத்தியல் கொண்டு ஓங்கி அறையும் வலி...

தலையைத் திருப்பிக் கட்டிலுக்குப் பக்கத்தில் இருந்த பாட்டிலைப் பார்த்தபோது அது காலியாக இருப்பது புரிந்தது.

அரை பாட்டில் போல இருந்ததை ஒரே ராத்திரியில் குடித்துவிட்டேனா?

இன்னும் கொஞ்ச நேரம் போனால் உடம்பு தூக்கிவாரிப் போடத் தொடங்கிவிடுமே... ரம்பம் கொண்டு மூட்டுக்களை அறுக்கிற மாதிரி அவஸ்தை தோன்றி விடுமே!... ஐயோ!... ட்ரிங்க் இல்லாவிட்டால் சரிப்பட்டு வராதே, என்ன பண்ணுவது?

அரை பாட்டிலையுமா குடித்துவிட்டேன்! காலைத் தேவைக்காக ஒரு பெக்காவது வைத்துக்கொண்டிருக்காமல் முட்டாள்தனமாக ஏன் அத்தனையும் குடித்தேன்?

வாட் கேன் ஐ டூ நௌ?

த்யாகு எழுந்து பாட்டிலைக் கையில் எடுத்துப் பார்த்தான். கவிழ்த்தான். நிமிர்த்தினான். ம்ஹூம், சொட்டுக்கூட இல்லை...

யு பாஸ்டர்ட்... இப்படிக் கொஞ்சங்கூட மீதி வைக்காமல் குடிக்கிற அளவுக்கு அப்படி என்னடா பறக்காவெட்டித்தனம்? என்று தன்னைத்தானே வைது கொண்டான்.

"வேலு இருக்கானா முத்து?"

பெட்ஷீட்டை உதறி மடித்து வைத்துக்கொண்டிருந்த முத்து உடனே பதில் பேசாமல் த்யாகுவை நிமிர்ந்து பார்த்தான்.

"எதுக்கு இப்ப வேலு சார்? பாட்டில் வாங்கிட்டு வரவா?"

"............"

"வயித்துக்குச் சாப்பிட்டு உடம்பைப் பார்த்துக்குங்கனா அதக் காதுலே வாங்க மாட்டேங்கறீங்க... சதா வேலுவைக் கூப்பிடு... வேலு எங்க... இந்த ஆளு உங்களை ரொம்பத்தான் கெடுக்கறாரு ஸார்... லாட்ஜில தங்கறவங்களுக்கு நா கூட இப்படி அப்படி புட்டி, அது, இது ஏற்பாடு பண்ண உதவறதுதான்... அதுக்காக ஒருத்தரு கண் முன்னால அழிஞ்சி போறதுக்கு நாமும் உடந்தையா இருக்கமுடியுமா ஸார்?"

பதினைந்து, பதினாறு வயசுகூட நிரம்பாத பையன் புத்திமதி சொல்லும் நிலையில் தான் இருப்பதை உணர்ந்து த்யாகு நெளிந்தான்.

"சரி...சரி, இப்ப நீ லெக்சர் அடிக்கத் தொடங்கிடாதே... நா குளிக்கப் போறேன். நீ பரோட்டா வாங்கின்டு வரச்சே, வேலுவைப் பார்த்து மேல வரச் சொல்லு..."

மேற்கொண்டு முத்து பேச இடம் கொடாமல் துண்டு, சோப், ப்ரஷ் சகிதம் த்யாகு அறையைவிட்டு வெளியேறினான்.

**அ**து ஒரு மகா மோசமான லாட்ஜ். மொத்தம் இருபது அறைகள். மாடியில் பத்து, கீழே பத்து. இத்தனைக்கும் பொதுவாய்க் கீழே ஒரு குளியல் அறை. இரண்டு கக்கூஸ்கள்.

காலை நேரங்களில் பாத்ரூம், கழிவறைகளுக்குப் போட்டா போட்டி இருக்கும் என்பதோடு, அத்தனை பேர்களும் கன்னாபின்னாவென்று உபயோகப்படுத்தி இருப்பார்கள் என்பதால் கூடுமானவரையில் பத்து மணி அமர்க்களங்கள் அடங்கும்வரை த்யாகு கீழே போகமாட்டான். பத்தரை மணி சுமாருக்கு லச்சி வந்து அறைகளைச் சுத்தம் பண்ணுகிறேன் பேர்வழி என்று நாலு பக்கெட்



ஜலத்தைக் கொட்டி, இரண்டு தரம் விளக்கமாறால் தேய்த்து அலம்பிய விவரத்தை முத்து வந்து சொன்ன பிறகே அறையைவிட்டு வெளியில் வருவான்.

தூசியும், தும்பட்டையுமாய்க் கிடந்த மாடிப்படிகளில் இறங்கி, பின் பக்கம் சென்று பாசி படர்ந்து கிடந்த தரையில் காலை ஊன்றி நடந்து பாத்ரூமுக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டபோது இந்த லாட்ஜுக்குக் குடிபெயர்ந்து கிட்டத்தட்ட இரண்டு மாசங்கள் ஆகப்போகின்றன என்ற நினைப்பு எழுந்தது.

இரண்டு மாசங்களா?

அப்படியென்றால் கங்கா ஊருக்குப் போய் எத்தனை மாசங்கள் ஆகின்றன?

இது இரண்டு, அரவிந்தன் வீட்டில் ஒன்று, ஆக மூன்று மாசங்களுக்கு மேலயா?

இந்த மூன்று மாசங்களில் என்னோடு தொடர்பு கொள்ள கங்கா முயற்சித்திருப்பாளோ?

லெட்டர் போட்டிருப்பாளோ?

லெட்டர் போட்டு, அதற்குப் பதில் இல்லை என்று புரிந்த பிறகு ஆள் அனுப்பி கம்பெனிப் பழைய வீட்டில் விசாரித்திருப்பாளோ?

இந்த மூன்று மாசங்களில் அடிக்கடி த்யாகு நினைத்துப் பார்த்துவிட்ட எண்ணம் திரும்ப இப்போதும் அவனுள் எட்டிப் பார்த்தது.

கங்கா என்னை விட்டுப் போகும்போது எட்டு மாசம், அப்படியென்றால் குழந்தை பிறந்து நாற்பது, ஐம்பது நாள் ஆகி இருக்கவேண்டுமே...

என்ன குழந்தை?

கண்ணன் மாதிரி மீண்டும் பிள்ளையா?

இல்லை, கங்கா ஆசைப்பட்டு ஏங்கின விதத்தில் பெண்ணா?

இந்தப் பெண் குழந்தை ஆசையை நிறைவேற்றத்தானே திரும்பக் குடிக்கத் தொடங்கி, அதை நிறுத்தத் தெரியாமல் வீடு, வாசல், மனைவி, வேலை என்று அத்தனையும் இழந்துவிட்டு நிற்கிறேன்!

பல்லைத்தேய்த்து முடித்ததும் த்யாகு விரலைத் தொண்டைக்குள் விட்டு வாந்தி எடுத்தான். வயிற்றிலிருந்து மஞ்சளாய்ப் பித்த நீர் வெளியானதில், மார்புக்கூடும் தொண்டைக் குழியும் கபகபவென்று எரிந்தன...

தகர டப்பாவினால் தொட்டித் தண்ணீரை மொண்டு தலையில் ஊற்றிக்கொள்ளத் தொடங்கினான்.



குளிர்ந்த ஜலம் மண்டையை ஊசியாகக் குத்த கால்கள் வெலவெலத்தன. நிற்கமுடியாமல் அப்படியே சம்மணமிட்டுப் பாசித்தரையில் உட்கார்ந்தான்.

சட்டென்று மனசில் வருத்தம் பூதமாய்ப் பரவியது.

என்ன வாழ்க்கை என்று இப்படி வாழ்ந்து கொண்டிருக் கிறேன்?

மாசம் எழுபத்தைந்து ரூபாய் லாட்ஜில் ஜாகை இருந்து கொண்டு வேளாவேளைக்குச் சரியான உணவு இல்லாமல்,



கிடைத்ததைக் குடித்துக்கொண்டு என்ன வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறேன்?

மூவாயிரம் ரூபாய சம்பளம், கார், வீடு, சமூகத்தில் அந்தஸ்து, அழகான மனைவி, பிள்ளை என்று ஒட்டுமொத்தமாக அத்தனையும் இழந்துவிட்டு என்ன வாழ்க்கை என்று இப்படி வாழ்ந்து கொண்டிருக்கிறேன்?

கயபச்சாத்தாபம் தந்த உளைச்சல் தாங்கமுடியாது போக மடிந்து உட்கார்ந்து சின்ன சப்தங்களோடு த்யாகு விசும்பத் தொடங்கினான்.

உடம்பு பதற ஆரம்பித்துவிட்டது.

குவளையைத் தூக்க முடியாதபடி கை நடுங்க முற்பட்டது. மளமளவென்று குளித்துவிட்டு வேலுவைப் பார்த்து பாட்டிலுக்கு ஏற்பாடு பண்ணவேண்டும் என்ற அவசரத்தோடு த்யாகு எழுந்து நிற்க முனைந்தபோது கால் பாசியில் வழுக்கிவிட, அப்படியே மல்லாந்து தரையில் விழுந்தான். தொட்டியில் இடிபட்ட முட்டி விண்ணென்றது. தகரக் குவளை வாயில் மோதியதில் உதட்டில் ரத்தம் கசிந்து நாவில் கரித்தது. அழுகை பீரிட்டுக்கொண்டு வெளிப்பட்டது.

ஐயோ...! அம்மா... ஆ...!

என் அவலத்தைப் பார்த்தாயா?

எப்படி இருந்தவன், எப்படி இருக்கிறேன் பார்த்தாயோ!

எனக்கு விமோசனமே இல்லையா?

ஆ...அம்மா... நான் என்ன பண்ணுவேன்... ஐயோ...! ஓ!

ஐந்து நிமிஷங்கள் போல அப்படியே குந்தி அழுதபோது மெதுவாகப் பக்கத்தில் யாரோ வந்து குனிந்து பார்க்கும் உணர்வு தோன்ற, த்யாகு சடக்கென்று தலையை நிமிர்த்தினான்.

இல்லை... ஒருவரும் இல்லை...

யாரோ கறுப்பு முகமூடி அணிந்து குனிந்து பார்த்த மாதிரி இருந்ததே!

சுற்றிப் பார்த்தபோது அரை இருட்டான பாத்ரூம் காலியாக இருப்பது புரிந்தது.

வெண்டிலேட்டர் என்று தக்குனூண்டு இருந்த ஜன்னலில் பார்வை பட்டதும் நெஞ்சு ஒரு முறை எகிறியது.

அ...அது...என்ன?

பாம்பா?

கறுப்பாய்... வெண்டிலேட்டர் கம்பியில் சுருண்டு இருப்பது பாம்பா?

மார்பு திடுக்திடுக்கென்று அடித்துக்கொள்ள, த்யாகு பரபர வென்று எழுந்தான். உடம்பைத் துடைக்காமலேயே, ஆணியில் மாட்டியிருந்த வேட்டியை எடுத்துச் சுற்றிக்கொண்டான். அவசரமாகக் கதவைத் திறந்தான்.

உள்ளே பாய்ந்த வெளிச்சத்தில் மீண்டும் வெண்டிலேட்டரை நிமிர்ந்து நோக்கினான்.

பாம்பு எங்கே?

கறுப்பாய், தடிமனாய்க் கம்பியில் சுற்றியிருந்த பாம்பு எங்கே?

பிரமையா?

கறுப்பு முகமூடி போட்ட ஆளையும் காணோம், பாம்பையும் காணோம்... என்ன வேடிக்கை இது!

நிஜமா, பொய்யா?

ராத்திரி அறைக்குள் கூட்டமாய் நின்று யார் யாரோ பாடுகிற மாதிரி, பேசுகிற மாதிரி, சண்டை போடுகிற மாதிரி தோன்றுகிறதே, அப்படித்தானா இவையும்?

படபடப்பு ரொம்ப அதிகமாகிவிட, த்யாகு கால்களை அகலஅகலமாய் வைத்துப் படிகளில் ஏறி மாடிக்கு வந்தான்.

''என்ன ஸார் உடம்பைத் துடைச்சிக்காம அப்படியே ஈரத்தோட வந்திருக்கீங்க..? துண்டு, சோப் பாக்ஸ் எங்க ஸார்?'' என்று எதிரில் வந்த முத்து கேட்டதும் அரை நிமிஷம் அப்படியே நின்று விழித்துவிட்டு, ''பாத்ரூம்லே பாம்பு இருக்கு முத்து.... எனக்குப் பயமா இருக்கு'' என்றான். அப்புறம் ''வேலுவைப் பாத்தியா? அவனை உடனே கூட்டிண்டு வாயேன், ப்ளீஸ்!'' என்று சொல்லிவிட்டு அறைக்குள் சென்று கட்டிலில் விழுந்தான்.



அரவிந்தனுடைய வீட்டிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட அன்று நடுத்தெரு நாராயணா என்று முழித்துக்கொண்டு த்யாகு நின்றபோது அவனுக்கு நண்பனான வேறு ஒரு சைக்கிள் ரிக்ஷாக்காரன்.

தொளதொளவென்று பிரிந்தும் பிரியாமலும் இருந்த படுக்கை, பெட்டிகளைச் சுமந்துகொண்டு ஒரு பர்லாங் போல நடந்த பிறகு இனி என்னால் முடியாது சாமி என்று உடம்பு ஸ்ட்ரைக் பண்ண, ப்ளாட்பாரத்தில் பெட்டி, படுக்கையைப் போட்டு அவற்றின் மேலேயே த்யாகு ஏறி உட்கார்ந்தான்.

நெஞ்சின் கொதிப்பு இன்னும் அடங்கவில்லை.

அயோக்கிய ராஸ்கல் - திமிர் பிடித்த பாஸ்டர்ட்....

வாய்யா - என் வீட்டுலே கால் மேல் கால் போட்டுக்கிட்டு ஹாய்யா உட்கார்ந்திருய்யா - என்று கையைப்பிடித்து இவன் அழைத்ததால்தானே போனேன்?

அழையா விருந்தாளியாகவா சென்றேன்?

இல்லையே...!

அப்புறம் ஹௌ கான் ஹி ட்ரீட் மீ லைக் திஸ்?

ஸ்கௌண்ட்ரல்...டர்ட்டி ரோக்...

சில நிமிஷங்கள் அப்படியே அமர்ந்து அரவிந்தனை ஆசை தீரத் திட்டித் தீர்த்ததும் இனி என்ன பண்ணுவது என்ற நினைப்பு மெதுவாகத் தலை தூக்கியது.

எங்கு போவது?

யார் இருக்கிறார்கள்?

வாடா த்யாகு - என்று இரண்டு கையையும் நீட்டி அணைத்து வரவேற்க யார் இருக்கிறார்கள்?

ம்ஹூம் இல்லை... ஒருத்தரும் இல்லை. நீ இருக்கிறாயா, செத்தாயா என்று கேட்க ஒரு பிராணிகூட இல்லை.

ஸோ... வாட் டு டூ?

கங்காவிடம் போய்விடலாமா?

ஸாரி கங்கா... திரும்ப நீயே டாக்டர் ரெட்டி க்ளினிக்கில் சேர்த்துச் சரியாக்கிவிடு. இனி நீ கிழித்த கோட்டைத் தாண்ட மாட்டேன் என்று அவளிடம் சரணாகதி அடைந்து விடலாமா?

கங்காவிடமா? நாணா?

இது நடக்கிற விஷயமாய்த் தோன்றவில்லையே!

தவிர, மதுராந்தகம் பக்கம் வந்தால் இரண்டு காலையும் வெட்டிவிடுவதாக மாமனார் மனுஷன் சொல்லி இருக்கிறாரே...!

நோ...ஐ வோன்ட் கோ...

இப்படியே நாதி இல்லாமல் செத்தாலும் சாவேனே ஒழிய அவர்கள் முகத்தில் விழிக்க மாட்டேன்.

நிச்சயமாய் மாட்டேன்.

ஓ.கே.... வேண்டாம்....அப்புறம் வேறு யார்?

அரவிந்தனுடைய நடத்தையில் மாற்றம் தெரிந்த பிறகு நாணா வந்துவிட்டால் அவன் உதவியை நாடலாம் என்ற நினைப்பில் பதினைந்து நாட்களுக்கு முன் அவன் ஆபீஸுக்கு த்யாகு போன் பண்ணவே செய்தான்.

''மிஸ்டர் நாராயணனா? அவர் சிங்கப்பூரில் ஒரு வேலையைக் கவனித்து விட்டு வருவதாக இருக்கிறார்...''

''எப்போது வருவார்?''

''நிச்சயமாய்ச் சொல்லமுடியாது. ஒரு மாசம் ஆகலாம். ஆர் சவன் மோர்...''

ஆக, நாணா, அவன் ஒத்தாசை இப்போதைக்கு இல்லை...

அப்புறம்?

வாட் எல்ஸ் டு டூ?

சேவிங்ஸ் அக்கௌண்டில் எத்தனை பணம் இருக்கிறது?

ஆயிரத்து முன்னூற்றிச் சில்லறையா?

இதை வைத்துக்கொண்டு எத்தனை நாள் தாக்காட்டமுடியும்?

சென்னை கம்பெனியில் சேர்ந்து ஒன்னரை வருஷங்கள் ஆவதற்குள் வேலையிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதால் பி.எஃப். க்ராஜுவிடி என்று எதுவும் கைக்கு வந்து சேரவில்லை.

இரண்டு மாசச் சம்பளம் மொத்தமாய்க் கொடுத்தார்கள். அவ்வளவுதான்.



அதுவும் க்ளப் கடன், அது, இது என்று கரைந்துபோன பிறகு இப்போது சேவிங்ஸ் கணக்கில் இருப்பதுதான் மிச்சம்.

எங்கே போவது?

என்ன பண்ணுவது?

மூளை குழம்பிப்போய், குடி வேண்டும் என்ற தாபத்தில் உடம்பு முறுக்கிப் போய், த்யாகு செய்வதறியாமல் பிரமை பிடித்து உட்கார்ந்திருந்தபோது தன் ரிக்ஷாவின் மணியை ஓசைப்படுத்திக் கொண்டு வேலு அங்கு வந்து சேர்ந்தான்.

''என்னா ஸாமி... ரொம்ப நாளியா இங்கேயே குந்திக்கினு கிறே... எங்க போவணும் சொல்லு...? நா இட்டுகினு போயி உட்றேன்...''

''..............''

''ஊர்லேந்து வர்றியா ஸாமி? அட்ரஸே தாரவாத்துக்கினியா? இன்னாத்துக்கு இங்க அம்போனு குந்திகினுகிறே... ம்?''

''..............''

''அட.... இன்னாப்யா... இவரு வாயத் தொறந்து பேச மாட்டேங்கறாரு... சரி... நா போகவா... ஸாமி?''

த்யாகு சிரமப்பட்டுத் தன் நினைப்புகளை நிதானத்துக்குக் கொண்டுவந்து யோசித்தான்.

மணி ஒன்பதாகப் போகிறது. நல்ல இருட்டு வேளை. தனியாக உட்கார்ந்து முழிப்பதைவிட ஒரு ஹோட்டலுக்குப் போய்விட்டால் என்ன?

''நல்லதா ஏதாவது ஹோட்டல் தெரியுமா உனக்கு?''

''நல்லதாவா? அப்படீன்னா? நூறு ரூபாய்ல வேணுமா, இல்ல அம்பது ரூபாய்லியா?''

''ஐயோ...! அத்தனை ஜாஸ்தி வேண்டாம்ப்பா.''

''ம்? சரி - ஒரு பதினைந்து இருபது ரூபாய்ல வேணுமா? ஏறி குந்து...''

த்யாகு பெட்டி, படுக்கையுடன் ஏறி உட்கார்ந்ததும், கால் மணி நேர சவாரிக்குப் பின் சாதாரணமான ஹோட்டல் ஒன்றுக்கு அவனை வேலு அழைத்துப் போனான்.

நாளொன்றுக்குப் பதினைந்து ரூபாய் அறை வாடகை. நாலு நாட்களுக்கு அட்வான்ஸாக அறுபது ரூபாயைக் கொடுத்துவிட்டு த்யாகு அறைக்கு வந்தான்.

கட்டில், பஞ்சு மெத்தை, மர மேஜை, நாற்காலி, பழைய ஃபான், ஓரமாய் மண்பானை, ஏகமாய் அழுக்கு.

வேலு மூலமாக விஸ்கி பாட்டில் ஒன்றையும் உபரியாய் இருபது ரூபாய் கொடுத்து வாங்கின பின் தற்காலிகமாக ஒரு திணுசாய் அங்கு செட்டில் ஆன த்யாகு, ஐந்தாம் நாள் காலை ஹோட்டல் பையன் அடுத்த நாலு நாட்களுக்கான அட்வான்ஸ் பணத்துக்காக வந்து நின்றதும், ஓ! இது நமக்குச் சரிப்படாதுப்பா என்ற நினைப்பு எழ, வேலுவின் உதவியுடன் மறுநாளே தற்போது இருக்கும் இந்த லாட்ஜுக்கு வந்து சேர்ந்தான்.

அப்புறம்? அப்புறம் என்ன?

ஒரு கோப்பையிலே என் குடியிருப்புதான் சதா சர்வ காலமும்.

ஆரம்பத்தில் அறுபது ரூபாய் கொடுத்து விஸ்கி பாட்டில் வாங்கி ஒரே நாளில் குடித்து முடித்தவன், பணம் குறையக் குறைய ஒரு பாட்டிலை இரண்டு நாட்களுக்கு வைத்துக்கொண்டு தடுடுதத்தம் பண்ணப் பார்த்தான். தண்ணீர் விட்டுக் குடித்துப் பார்த்தான், மலிவான விஸ்கியை வாங்கிப் பார்த்தான்.

சவாரி இல்லாத நாட்களில் அவன் அறைக்கு வந்து வேலு கம்பெனி கொடுப்பான். மற்றபடி வடையோ, வறுவலோ, சாப்பாடோ வாங்கி வந்து ஓரளவுக்குக் கரிசனத்துடன் அவனைப் பார்த்துக்கொள்வது லாட்ஜில் உள்ள பொடியன் முத்துதான்.

''சுப்பிட்டியா ஸாமி?''

த்யாகு தலையைத் தூக்கினான்.

வேலு.

''எங்கடா போயிட்டே சமயத்துக்கு இல்லாம?''

''என்ன ஸாமி வேணும்?''

த்யாகு தயங்கினான்.

அப்புறம் திருத்திதிருத்தி, ''கையிலே ரொம்ப பணம் இல்லே வேலு. இனி தினமும் பாட்டில் வாங்கமுடியாது போல இருக்கு.



அதுவும் தவிர, வரவர இந்த பாட்டில் விஸ்கி ஜோராவே இல்லே... வந்து, உன் பேட்டையிலே விக்கிற சாராயம் நல்லா 'கிக்' தரும்னு சொல்லுவியே! வந்...து... இன்னிக்கு வேணா அங்க நாம போகலாமா வேலு? எனக்கு இப்ப ட்ரிங்க் வேணும் வேலு... உடனே அழைச்சிண்டு போறியாடா ப்ளீஸ்?'' என்றபோது வார்த்தைகள் கிசுகிசுப்பாக வெளிப்பட்டன.

# 29

ஒமேகா ஸீ மாஸ்டர் - மாப்பிள்ளைக்கென அருமை பெருமையாய் சேஷன் வாங்கிப் போட்ட கடிகாரம்.

வாட்சைக் கழட்டின த்யாகு அதையே வெறித்துப் பார்த்தான்.

கல்யாணத்தின்போது வைரமோதிரமும், மைனர் செயினும் வாங்கித்தர சேஷன் ரெடியாய் நின்றதும், வேண்டாம் என்று தான் தடுத்துவிட்டதும் இப்போது நினைவுக்கு வந்தன.

ஆஹா கொடுங்கள் - என்று வாங்கிப் போட்டிருந்தால் இன்று எத்தனை உபயோகமாக இருந்திருக்கும்?

ஒன்று பின்னால் ஒன்றாக விற்றுவிட்டு, இருந்த இடத்தை விட்டு அசையாமல், நாளைக்குப் பணத்துக்கு என்ன பண்ணுவது என்ற அவஸ்தை இல்லாமல், இன்னும் கொஞ்ச நாட்களாவது ஜாலியாக இருக்க எத்தனை சௌகரியமாக இருந்திருக்கும்!

என்றைக்கோ நடந்து முடிந்துபோன சமாசாரத்துக்கு இன்று மனசு சப்புக்கொட்டுவதை உணர்ந்தபோது உதடுகள் ஒரு வரட்சியான சிரிப்பில் விரிந்தன.

அந்தச் சிரிப்பு மாறாமலேயே வாட்சைப் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த முத்துவிடம் நீட்டினான்.

நீட்டின கை வெடவெடவென்று நடுங்கியது.

''என்ன ஸார், கை இப்படி நடுங்குது?''

கை நடுக்கத்தைப் பார்த்ததும் அல்லாமல் அதைக் குறிப்பிட்டு அவன் கேள்வி எழுப்பவும் அவசரமாய்க் கடிகாரத்தைப்

படுக்கைமேல் வைத்துவிட்டு, த்யாகு கைகளைத் தொடைக்கு அடியில் செருகிக்கொண்டான்.

''என்ன ஸார்? கைய மறைச்சிகிட்டா நடுக்கம் போயிடுமா?''

தொணதொணவென்று பிடுங்காதே முத்து - என்று அதட்டத் தலையைத் தூக்கினவன், முத்துவின் கரிசனம் நிறைந்த முகபாவத்தைப் பார்த்துவிட்டு, சொல்ல நினைத்ததை வெளிப் படுத்தச் சக்தி இல்லாதவன் போலப் பார்வையைத் தரையில் படரவிட்டான்.

''சொல்றேன்னு கோவிச்சுக்காதீங்க ஸார், வரவர உங்க உடம்பு நல்லாவே இல்லே... இது உங்களுக்கே புரியுதுதானே ஸார்? வந்தப்ப இருந்த த்யாகு ஸாராவா நீங்க இப்ப இருக்கீங்க? பாதி உடம்புகூட இல்லே... கன்னு டொக்கு விளுந்து போய்... கை, கால் எப்பப்பாரு வெலவெலாட்டம் நடுங்கிக்கிட்டு... என்ன ஸார் இதெல்லாம்? அதுவும் அந்த ஆளு வேணுகூடச் சேர்ந்து சாராயம் குடிக்கத் தொடங்கிட்ட இந்த இருபது, இருபத்தஞ்சி நாளா சுத்தமா மோசமாயிட்டீங்க... வயித்துவலினு அலுவறீங்க துடிக்கிறீங்க... ஆனா டாக்டரண்ட போயி வைத்தியம் பண்ணிக்காம, அந்த சாராயத்தையே எந்நேரமும் குடிச்சிட்டு சோறு, தண்ணி இல்லாமக் கிடக்கறீங்க... உங்களைப் பாத்தா எனக்கு மனசு பதைக்குது ஸார். நல்ல குடும்பத்து ஆம்பிளை... படிச்சவரு... நீங்க இப்படி லோல்படலாமா ஸார்?''

''... ... ...''

''ஏதாச்சும் நா கேட்டா கம்முனு இருந்திடுவீங்களே... நா ஒரு புத்திகெட்ட பய... வீணா உங்ககிட்ட வந்து முட்டிக்கிறேன் பாருங்க...''

இதற்கும் பதில் ஏதும் சொல்லாமல் குத்துக்கல்லாக த்யாகு அமர்ந்திருக்கவே, சலிப்புடன் முத்து குனிந்து படுக்கையில் இருந்த கடிகாரத்தைக் கையில் எடுத்தான்.

''சரி...சரி...நா குடி பேச்சை எடுக்கலை... இந்த வாட்சை என்னத்துக்காவ என்னண்ட கொடுத்தீங்க? அடகுக்கா, இல்ல விக்கிறத்துக்கா?''

த்யாகு யோசித்தான்.



அடகு என்றால் வட்டி உண்டு. அதைக் கழித்துக் கொண்டுதான் பாக்கியைக் கையில் கொடுப்பான். வட்டி, முதலைக் கட்டி இதை மீட்கும் உத்தேசம் எனக்கு இல்லை, அப்புறம் அடகு எதற்கு?

''வித்துடு முத்து..''

''ஒஸ்தி வாட்ச் மாதிரி இருக்கே ஸார்?''

''ஒஸ்திதான். அன்னிக்கே கிட்டத்தட்ட ஆயிரம் ரூபா கொடுத்து வாங்கினது....''

''இந்த மாதிரிப் பொருளோட அருமையெல்லாம் இவங்களுக்குத் தெரியாதே ஸார்...''

''தெரியாட்டா பரவாயில்லை... கொடுக்கறதை வாங்கிண்டு சீக்கிரம் வாயேன் முத்து...''

கெஞ்சலாய் த்யாகு பேசவும் ஒரு நிமிஷம் அப்படியே நின்று அவனை வெறித்துப் பார்த்த முத்து, மேற்கொண்டு எதுவும் பேசாமல் அறையைவிட்டு வெளியேறினான்.

அவன் தலை மறைந்த கையோடு த்யாகு எழுந்து கதவைச் சாத்தினான். கட்டிலுக்கு அடியில் இருந்த சாராய பாட்டிலை எடுத்துக் கவிழ்த்துப் பார்த்தான்.

காலி.

இந்த வேணு எப்போது வருவான்?

இனி அவன் வந்தால்தானே குடி...

மணி பன்னிரண்டு ஆகிவிட்டது. சட்டுபுட்டென்று வந்து சேராமல் என்ன பண்ணுகிறான் இவன்?

குறுக்கும் நெடுக்குமாய் நடந்தவன் ஆணியில் மாட்டியிருந்த சட்டையை எடுத்துப் பைக்குள் விரலைவிட்டுத் துழாவினான்.

பத்து ரூபாயும் சில்லறையும் இருந்தன. மண்டியிட்டு உட்கார்ந்து கட்டிலுக்கடியில் தள்ளியிருந்த பெட்டியை வெளியே இழுத்தான்.

பூட்டைத் திறந்து பாண்டுக்கு அடியில் வைத்திருந்த கவரை எடுத்தான்.

பதினைந்து நாட்களுக்குமுன் சேவிங்ஸ் அக்கௌண்டை மூடி, அதில் இருந்த நூற்றி ஐந்து ரூபாயை ட்ரா செய்து வைத்ததில் செலவழிந்தது போக மீதி இருந்தது.

பத்து, இருபது, முப்பது... முப்பத்தி நாலு.

இவ்வளவுதானா?

ஐம்பதாவது தேறும் என்று நினைத்தேனே...!

வாட்சுக்கு எவ்வளவு வரும்?

முன்னூறு? நானூறு?

எத்தனை வந்தாலும் அதிலிருந்து எழுபத்தைந்தை முதல் காரியமாக வாடகைக்குக் கொடுத்துவிடவேண்டும். தேதி இரண்டாகிவிட்டது. இன்னும் ஏன் வாடகை கொடுக்கவில்லை என்று லாட்ஜ் சொந்தக்காரன் முறைத்துவிட்டான். இந்தப் பீத்தல் ரூமுக்கு ஏக டிமாண்டாம். தொண்ணூறு, நூறு கொடுக்க க்யூவில் நிற்கிறானாம். ஒன்றாம் தேதி வாடகை கொடுக்க இயலாதவர்கள் உடனே காலிசெய்வது நல்லதாம்.

மரியாதை தெரியாத ராஸ்கல்.

லாட்ஜில் இருக்கும் மற்ற கூறுகெட்டவர்கள் மாதிரி என்னையும் நினைத்துக்கொண்டு பேசினால் எப்படி?

என் படிப்பு என்ன? என் மூளை என்ன? நான் பார்த்த வேலை என்ன? நான்...

சட்டென்று த்யாகுவின் எண்ணம் தடைப்பட்டது.

அது சரி - என் பழைய கதை இந்த லாட்ஜ் சொந்தக்காரனுக்கு எப்படித் தெரியும்?

விவஸ்தைகெட்டத்தனமாக நான் இப்போது நடந்து கொள்வதைத்தானே இவன் பார்க்கிறான்?

வேலைவெட்டி என்று எதுவும் செய்யாமல்... வேலுவோடு சகவாசம் வைத்துக்கொண்டு, சதா சாராயம் குடித்துக்கொண்டு...

ஆயாசத்தோடு எழுந்த த்யாகு கட்டிலில் சாய்ந்தான்.

வயிறு ரொம்ப வலித்தது. முறுக்கி, முறுக்கி, திருகித் திருகி...

ஆ...! அம்மா...!



தலையணையை எடுத்து வயிற்றில் அழுத்திக்கொண்டு உட்கார்ந்தபோது அவஸ்தை தாங்காமல் விழியோரங்களில் நீர் எட்டிப் பார்த்தது.

இரண்டு தரம் கண்களைச் சிமிட்டி மங்கின பார்வையைச் சரிசெய்துகொண்டான்.

இந்த வேலுவை ஏன் இன்னும் காணோம்?

சனியன் பிடித்தவனுக்கு எத்தனை தரம் சொல்வது-நாழியாக்காதேடா, உடம்பு பரபரக்க ஆரம்பித்துவிடும் என்று?

விவரங்கெட்ட இவனை விட்டால் எனக்கு வேறு வக்கு இல்லையே!

வயிற்றுவலி அதிகமாக, த்யாகு தலையணைமேல் இரண்டாக மடிந்துகொண்டான்.

சாராயம், அதன் நெடி, அதன் விறுவிறுப்பை நினைத்துப் பார்த்து இதோ வந்துவிடும், இப்போது வந்துவிடும் என்று சமாதானம் செய்துகொள்ள முயன்றான்.

முதல் முறையாக, இருபது நாட்களுக்குமுன், இனி கையிருப்பைக் கொண்டு ஐம்பதும், அறுபதும் கொடுத்து விஸ்கி வாங்குவது நடக்காத காரியம் என்று தீர்மானமாகத் தெரிந்த பிறகு, வேலுவிடம் விவரத்தைச் சொல்லி 'உன் பேட்டைக்குப் போகலாமா?' என்று கேட்டதும் அவன் திடுக்கிட்டுப் போனது நிஜம்தான்.

''என்னா சாமி! நீ என் பேட்டைக்கு வர்றியா?''

த்யாகு ''ஆமாம்'' என்று தலை ஆட்டினான்.

''சாராயம் குடிக்கவா?''

திரும்ப த்யாகு ''ஆமாம்'' என்றான்.

''அட அக்குரும்பே! இன்னாடாது, கஸ்டகாலமா கீது... நீ எல்லாம் அங்க வர்லாமா சாமி? அதுவும் சாராயம் குடிக்க? இன்னா பேசறோம்னு புரிஞ்சிதான் பேசறியா? வ.. வ... வ... வ...'' - வேலு திறந்த வாயில் உள்ளங்கையால் அடித்துக்கொண்டான்.

''எ... என்னால் குடி இல்லாம இருக்கமுடியாது வேலு... ப்ளீஸ்...! ஹெல்ப் பண்ணமாட்டேனு மட்டும் சொல்லிடாதடா...''

அரை மணி போல வாதாடின பிறகும் த்யாகு தன் முடிவில் உறுதியாக இருப்பது தெளிவாக, ''அப்பால உன் இஷ்டம்... நா சொல்றத சொல்லிட்டேன்... சரி... சாராயம் வோணும்...அதானே? ரைட்? நீ இங்கியே இரு... நா எடுத்தாரேன்... நீ எல்லாம் அங்க வரவாணாம்... எத்தினி க்ளாஸ் வோணும்? ரெண்டு பத்தாது? உன் பாட்டில் சரக்கு மாதிரி இல்லே இது... சும்மா ஆள கடாசிப் புரட்டிடும் அஆங்...''

ஆறு ரூபாய்ப் பணத்தோடு போன வேலு ஒரு மணி நேரத்தில் கால் புட்டி சாராயத்தோடு வந்தான்.

வெள்ளையாய்... ஜலம் மாதிரி இருந்த திரவத்தின் மணமே, நாசியையும் கண்களையும் எரிய வைப்பதாக இருந்தது.

டம்ளரைக் கையில் எடுத்த த்யாகு கொஞ்சம் தயங்கினான்.

*கள்ளச் சாராயத்தையா?*

*நானா?*

*இந்த அளவுக்குத் தாழ்ந்துவிட்டேனா?*

தெறித்த புத்தியை முத்திக்கொண்டு உடம்பு - குடித்துவிடு எதுவானால் என்ன என்று ஆர்ப்பரிக்க, ஒரு வாய் மாந்தி விழுங்கினான்.

வாயும் தொண்டையும் பகபகவென்றன.

*இது விஸ்கி மாதிரி இல்லையே!*

*ஏன் இப்படி எரிகிறது?*

*உள்ளுக்குள் எதாவது தீய்ந்துவிட்டதா?*

*எதனால இந்தச் சூடு?*

*ஹா...!*

எல்லாம் சில நிமிஷங்களுக்குத்தான், அடுத்த வாய் உள்ளே போன உடனேயே மூளை ஜலதரங்கம் வாசிக்க முற்பட்டது.

மரங்கள் பச்சை பெயின்ட் அடித்துக்கொண்டன.

வானம் நீலமாய்ச் சிரித்தது.

கணத்தில் சுற்றியுள்ள அத்தனையும் இனிப்பாய் இனித்தன.

*ஆஹா!*



*வெளிநாட்டு விஸ்கிக்கு இல்லாத சக்தி இந்த மூன்று ரூபாய் சாராயத்துக்கு எப்படி வந்தது?*

கால் பாட்டிலும் காலி ஆன பிறகு த்யாகு வானவெளியில் பறந்தான், மிதந்தான், சிரித்தான், பாடிக்கொண்டே தூங்கிப் போனான்... அப்புறம்...

''இன்னா சாமி தூங்கிட்டியா?...''

த்யாகு கண்களைத் திறந்தான்.

வேலு.........

''என்னடா இத்தனை நாழியாக்கிட்டே.....?''

''ஆங்... ரூம்லே குந்திகினு நீ பேசறே... ஆனா நாம் அலச்சல் அலைஞ்சி நா இல்லே வாங்கிட்டு வரவேண்டியிருக்குது... இன்னிக்குத் தேதி என்னா? நினைப்புக்கிதா? அக்டோபரு... தேதி ரெண்டு.... காந்தி செயந்தி... சாராயம் விக்கிறவங்கள கண்டிஷனா மாமியா வூட்டுக்கு இட்டுகினு போயிடு வாங்கனு அவனவன் சரக்கு இல்லேனுட்டான். அப்பால உனக்காவ கெஞ்சிக் கூத்தாடி எப்படியோ வாங்கியாந்தேன்...''

நிஜாரிலிருந்து அவன் எடுத்துக் கொடுத்த பாட்டிலை வாங்கி அவசரத்துடன் குடித்த த்யாகுவின் முகம் கோணிப்போயிற்று.

''என்ன வேலு... டேஸ்ட் எப்படியோ இருக்கு?''

புட்டியை வாங்கி வேலு குடித்துப் பார்த்தான்.

''அட ஆமா... சளுப்பாகீது... தண்ணி கலந்த பழைய சரக்கைத் தள்ளிட்டது அந்தக் கசமாலம்... ஐயே...! இத்த குடிக்காதே சாமி... வவுறு கெட்டுப்பூடும்...''

''அப்புறம் வேற என்ன பண்ணறது?''

ட்ரிங்க் இருக்காதோ என்ற பரபரப்பில் த்யாகுவின் நெஞ்சம் பதறத் தொடங்கிவிட்டது.

''வேற எங்கயும் ஷ்டாக் இல்லே சாமி... இன்னிக்கு ஒரு போதுக்கு சமாளிச்சுடேன்...''

''அப்படிச் சொல்லிட்டா எப்படி வேலு? இது இல்லாட்டா எனக்கு சரிப்படாதுடா... இதப் பாரு...கை எப்படி நடுங்கறதுன்னு?''

''ம்ம்? அப்டின்னா காச்சற எடத்துக்குத்தான் போயாராணும்...''

''போலாம் வேலு... நீ வீணா யோசிக்காதே... அந்த இடம் எங்க இருக்கு?''

''ஐயோ...! அங்கெல்லாம் நீ வந்தா எப்டி சாமி?''

அவனைப் பேசவிடாமல் த்யாகு படபடத்தான்.

''பரவாயில்லேடா... நீ போயிட்டு வரவரைக்கும் எனக்குத் தாங்காது. நானும் வரேன்... புறப்படு....ம்...''

வேலுவின் பதிலுக்குக் காத்திராமல் த்யாகு பெட்டியிலிருந்து, இருபது ரூபாய்ப் பணத்தை எடுத்துக் கொண்டான்.

சட்டையை மாட்டிக்கொண்டான்.

கிளம்பிவிட்டான்.

சாராயம் காய்ச்சும் இடம் ஊருக்கு ஒதுக்குப்புறமாக ஒரு கருவேலங்காட்டுக்கு மத்தியில் இருந்தது.

''ஆர்ரா அது புச்சு ஆளு?'' உயரமும், பருமனுமாய், சிவந்த விழிகளும், முறுக்கு மீசையுமாய் நின்ற ஒருத்தன் கேட்க ''நாதான் மச்சான்... இவரு நம்ப ஆளுதான்'' என்று பதில் சொன்ன வேலு அறிமுகத்தைச் செய்தான்.

''சாமி, இவரு எம் மச்சான்... கெடா தலையன்... இந்த வட்டாரத்துக்கே ராசா. மச்சான்...! இவரு நமக்கு வேண்டப் பட்டவரு... லாட்ஜிலே இறாரு...''

இடம் ரொம்ப அழுக்கா இருந்தது. ஏக நாற்றம். நாலைந்து பெண்கள். பத்து, பன்னிரண்டு ஆண்கள், தடிதடியாய்..

இரண்டு அடுப்புகள். அவற்றின் மேல் பெரீ...ய்ய மண் பானைகள். அவற்றின் வாய்மேல் இன்னொரு பானை. அதன் தலையில் ஒரு குண்டான், அதில் கொதிக்கும் தண்ணீர்.

அடுப்பு ஜுவாலை விட்டு எரிந்தது. குண்டான் ஜலம் கொதிக்கக்கொதிக்க ஜலத்தை மாற்றிக்கொண்டே இருந்தார்கள்.

கையில் சாராய க்ளாஸோடு வேலு த்யாகுவுக்கு இடத்தைச் சுற்றிக் காண்பித்தான்.

பாசி படர்ந்த குட்டை. அதன் கரை ஓரங்களில் புதைக்கப்பட்ட ஊறல் பானைகள்.



பழத்தோல், அழுகின வாழைப்பழம், மிளகு, வெள்ளை வேலம்பட்டை, வேப்பம்பட்டை, வால்மிளகு, போஸ்ட்காய் எல்லாவற்றையும் இடித்து வெல்லத்தோடு கலந்து தண்ணீர் ஊற்றி, பானையில் போட்டுப் புதைத்துவிடுவார்களாம். ஒருவாரம் கழித்து ஊறலைத் திறந்து பார்த்தால் ஙொய் என்ற சப்தம் வருமாம். அதை அடுப்பில் ஏற்றி, மேலே இன்னொரு மண்பானையில் ஓட்டை போட்டு, அதற்குள் ஒரு பாத்திரம் வைத்து, அதற்கும் மேலே குண்டானில் ஜலம் வைக்க வேண்டுமாம். கீழ் கலவை கொதித்து, சூடு ஏறி, மேல் ஜலம் கொதித்தால் நடுப்பானையில் உள்ள பாத்திரத்தில் ஆவிபடர்ந்து கஷாயமாகக் குளிருமாம்.

ஒரு பங்கு கஷாயத்தில் ஐந்து பங்கு ஜலம் ஊற்றிக் கலந்தால் சாராயம் குடிக்க ரெடியாம்.

மூன்றாவது க்ளாஸ் குடிக்கும்போது நிற்கமுடியாமல் போக, த்யாகு அப்படியே ஒரு மரத்தடியில் உட்கார்ந்தான்.

மாலை வேளை வியாபாரம் சூடு பிடிக்கத்தொடங்கிவிட்டது போல், இங்கும் அங்குமாய் கையில் கண்ணாடி தம்ளர்களோடு ஆண்கள், நீளிக் கூடைகளோடு பெண்கள்.

''காரவடை துன்றியா, சாமி?''

-வேலு நீட்டிய வடையில் ஒன்றை எடுத்து த்யாகு கடித்தான். மிளகாய்க் காரம் மண்டைக்குத் தாவியது.

''ஐயோ...! எக்கச்சக்கமாய் உறைக்கிறதே!''

''சரி- இந்தா மூகன்னடை....''

நீய்ந்து போய்ச் சிவப்பு நிறத்தில் போண்டா ரூபத்தில் இருந்தது. அசட்டுத் தித்திப்பு தித்திக்க அதை த்யாகு தூரப் போட்டான்.

அரை மணி கழித்து நாலாம் க்ளாஸில் த்யாகு இருந்தபோது வேலு தோசை, மீன் குழம்புடன் வந்தான்.

''வேழு... என்னழா எழையாவழு திழ்ழுன்டே இழுக்கே?''

த்யாகுவுக்கு வாய் குழறியது. தொடர்ந்து 'ஹிக்' என்று விக்கியது.

''துன்னுகிட்டே குடிச்சாத்தான் வவுறு கெடாது சாமி... நா புள்ளக்குட்டிக்காரன்... ரத்தங் கக்கிச் சாவமுடியுமா?''

''ரத்தங் கக்கி சாவாங்களாமா? ஹிக்?''

''ஏன் சாவாமா? போஸ்ட் காய்க்குப் பதிலா சமயத்துலே ஊமத்தங்காய் போட்டுக் காச்சறானுவ... பல்லி, கரப்புனு பூச்சி, பொட்டு என்னெல்லாம் ஊறல்லே கிடோ...? பணத்துக்காவ அவனவன் அடாவடி பண்ணறதுலே நம்பள மாதிரி பேமானிங்க தானே மாட்டிட்டு சாவறோம்?... கண் போவுது... ரத்த வாந்தி வருது... உசிரு கூடத்தான் போவுது... அவனவனுக்கு விதி எப்படிக்கிதோ? சரி சாமி, அந்தப் பேச்சவுடு, ஊறுகா பட்டை தொட்டுகினு ரெண்டு தோசையாவது துன்னேன்... வெறும் வவுறு ஆவாது சாமி...''

தியாகு எதுவும் சாப்பிட மறுத்துவிட, ''சரி, குட்சது போதும்... வா, லாட்ஜுக்குப் போவலாம்'' என்று வேலு அவனைக் கிளப்பினான்.

நெஞ்சுக்குழியும் வயிறும் தீப்பந்தாய் எரிய, கண்கள் இருட்டிக்கொண்டு வர, அரைகுறை மயக்கத்தில் கிடந்தவனை ரிக்ஷாவில் போட்டு வேலு லாட்ஜுக்குக் கொண்டுவந்து சேர்க்கும்போது ஆங்கிலச் செய்தி முடிந்துவிட்டது.

வேலு கைத்தாங்கலாக இறக்க, அவன் தோளில் சாய்ந்தபடி மாடிப்படிகளில் தியாகு ஏறியபோது முத்து அரக்கப்பரக்க ஓடிவந்தான்.

''ஐயோ! எங்க ஸார் போயிட்டீங்க? மத்யானத்துலேந்து உங்களுக்காகவே காத்திட்டு இங்கியே நிக்கறேன்... ஸார்.. நா மோசம் போயிட்டேன் ஸார்... ஸேட் கொடுத்த நானூறு ரூபாய் எடுத்துகிட்டு வந்தேனா... எந்தக் களவாணி பய பார்த்துட்டு குறி வைச்சு பிக்பாக்கெட் அடிச்சானோ தெரியலை. லாட்ஜுக்கு வந்து பார்த்தா பாக்கெட்டுல இருந்த பணத்தைக் காணலை ஸார்! நா அப்பலேந்து அடிச்சுகிட்டு கலங்கறேன் ஸார், எங்க ஸார் போயிட்டீங்க? நா என்ன பண்ணுவேன் ஸா...ஆ...ஆ...ர்...?''

அத்தனை பணத்தையும் தாரை வார்த்துவிட்ட கிலியோடு தியாகு என்ன செய்யப்போகிறானோ என்ற பயமும் சேர, முத்து பெரிசாய் அழ ஆரம்பித்தான்.



''மேய்... முத்தா... என்னடா சொல்றே?'' இத்தனை நாழி கையாய் வெறும் வயிற்றில் குடித்ததன் விளைவு ஆளைப் பயங்கரமாய்ப் பாதிக்க, சற்றும் எதிர்பாராத திணுசில் முத்து சொன்ன விவரம் அடிவயிற்றை ஒரு கலக்கு கலக்க 'ஹோவ்' என்று அங்கேயே அப்படியே குடமாய் தியாகு வாந்தி எடுக்கத் தொடங்கினபோது அதில் திப்பித் திப்பியாய் ரத்தம் கலந்திருந்தது.

# 30

''ஹலோ, சங்கர் ஹியர்!''

''குட் மார்னிங் சங்கர்... நா, நாராயணன் பேசறேன். தியாகுவோட ஃப்ரெண்ட்... ஞாபகம் இருக்கா?''

''ஓ! நாராயணன்... அஃப்கோர்ஸ். மணிலாலேந்து எப்பத் திரும்பினீங்க? ஹௌ வாஸ் தி ஸ்டே?''

''ஃபைன்... தாங்க்யூ... ஒரு மாசத்துக்கும் மேல ஹாலிடே எடுத்துண்டு ஜப்பான், ஹாங்காங் எல்லாம் போயிட்டு நேத்துதான் ஊர் திரும்பினோம். வீடு பாத்து செட்டில் ஆற வரைக்கும் 'சோழா'லே தங்கி இருக்கோம்... நா எதுக்காக உங்களைத் தொந்தரவு பண்றேன்னா, வந்து... தியாகு பத்திப் பேசத்தான். அவன் வீட்டுக்கு போன் செய்தா, தியாகராஜன்னு அங்க யாருமே இல்லேனு ஒரு ஆசாமி சொல்றார். உங்க டெலிபோன் ஆபரேட்டரான்னா, அவன் இப்ப உங்க கம்பெனிலே இல்லேனு சொல்றா... எனக்கு ஒண்ணுமே புரியலை... வேர் இஸ் ஹி? கான் யு கிவ் மி தி டீடெய்ல்ஸ்?''

நீளமாய் நாணா பேசி நிறுத்தின பிறகு உடனே சங்கர் எதுவும் பேசாமல் மௌனம் சாதித்தான்.

''ஹலோ... சங்கர்! ஆர் யு தேர்?''

''ஸாரி... என்ன பேசறதுன்னு புரியாம ஸைலண்டா இருந்திட்டேன். எங்க ஆபரேட்டர் சொன்னது சரிதான் நாராயணன். தியாகு இப்ப இங்க இல்லே...''

''ட்ரான்ஸ்ஃபர் ஆயிடுத்தா? இல்ல வேற வேலைக்குப் போயிட்டானா?''

''ம்...வந்து...''

''எதுவானாலும் தயங்காம சொல்லலாம் சங்கர். நீங்க அவனோட வேலை பார்த்தவர், ஸோ உங்களுக்கு அவனைப் பத்தின விவரம் பூராவும் தெரியுங்கறதாலதான் ஸீனியரோட பேசாம நா உங்களை காண்டாக்ட் பண்ணினேன்... ப்ளீஸ்...!''

''த்யாகு தானா வேலையைவிட்டு நிக்கலை நாராயணன்.''

''வாட்?''

''எஸ்...ஹி வாஸ் டிஸ்மிஸ்ட்.''

''எ...எதுக்காக சங்கர்?''

''உங்களோடு அவர் கடிதத்தொடர்பு வைச்சுட்டிருந்தாரா நாராயணன்?''

''ஆமா... ஆனா, முதல்லே இருந்த மாதிரி கடைசிலே அத்தனை ரெகுலரா இல்லே... இன்பாக்ட் நாலஞ்சு மாசமா அவன் கிட்டேயிருந்து லெட்டரே இல்லே... நா ஊர்ஊரா போயிண்டிருந்தது காரணம்னு நினைச்சேன். அதான், வந்ததும் வராததுமா ஆளைப் பிடிக்கப் பாக்கறேன்.''

''ஐ ஸி, அப்ப த்யாகு திரும்பக் குடிக்க ஆரம்பிச்ச விஷயம் உங்களுக்குத் தெரியாதா?''

''எ...ன்னது?''

''ஐ'ம் ஸாரி நாராயணன். த்யாகுவோட குடிப்பழக்கம் அளவுக்கு மீறிப் போயிட்டது. ஸீனியர் எவ்வளவோ பொறுத்துத் தான் பார்த்தார். ஆபீஸுக்கே பாட்டில்களைக் கொண்டு வந்து குடிக்க ஆரம்பிக்க, போற இடங்களிலே க்ளையண்ட்ஸ்கிட்ட கெட்ட பேர் வாங்கத் தொடங்கினதும்தான் ஸீனியருக்கு அவரை வேலையை விட்டு நிறுத்தற நிர்ப்பந்தம் வந்தது...''

''ஆபீஸ்லே குடிக்கிற அளவுக்குப் போயிட்டானா! காட்! எப்ப டிஸ்மிஸ் ஆனான் சங்கர்?''

''ம்? நாலு மாசத்துக்கும் மேலேயே ஆயிருக்கும் நாராயணன்.''

''இப்ப அவன் எங்கே இருக்கான்னு தெரியுமா? நாலு மாசமா என்ன பண்றான்னு தெரியுமா?''



''எங்க பி.ஆர்.ஓ. ராமையா, க்ளப்பிலே ரெண்டு தரம் அவரைப் பார்த்ததா முன்னே சொன்னார். அரவிந்தன் தெரியுமா உங்களுக்கு? அவர் கூட பார்லே பாத்தாராம். பேச்சுக் கொடுத்தப்ப வொய்ஃப் பிள்ளையோட ஊருக்குப் போயிட்டதாகவும், தான் அரவிந்தன் வீட்டுலே இருக்கறதாகவும் சொன்னாராம். அதுக்கப்புறம் யாரும் எங்கயும் சந்திச்சதா தெரியலை. ஐ'ம் ஸாரி, ஐ டோண்ட் நோ எனிதிங் மோர்...''

''தாங்க்யூ சங்கர். ஸாரி பார் த ட்ரபிள்...''

போன் பேசி முடிந்த நாணா அசதியுடன் சோபாவில் சாய்ந்துகொண்டான்.

பக்கத்தில் அமர்ந்திருந்த வித்யா அவனை நிமிர்ந்து என்ன என்ற பார்வையாய்ப் பார்த்தாள்.

''ஒண்ணுமே புரியலை வித்தி... வேலைலேந்து டிஸ்மிஸ் ஆற அளவுக்கு த்யாகு ஏன் குடிக்கத் தொடங்கினான்? இப்ப அவன் எங்க? ஒண்ணுமே புரியலைம்மா...''

''உங்களுக்கு அவர் கடைசியா லெட்டர் எழுதினப்பகூட ரொம்ப சந்தோஷமாத்தானே எழுதியிருந்தார் நாணா?''

''ஆமா வித்தி... கங்கா பிள்ளையாண்டு இருக்கறதப்பத்தியும், பெண் குழந்தை வகக்குட்டி மாதிரி பிறக்கணும்னு ஆசைப்படறதைப் பத்தியும் அவன் எழுதி இருந்தானே ஒழிய, குடி பத்தி மூச்சுக்கூட விடலையே! வேலை போய் நாலு மாசத்துக்கும் மேலேயே ஆறதுனா, அவனுக்கு இந்தப் பழக்கம் அதுக்கும் முன்னாலேயே வந்திருக்கணும்... எப்ப ஆரம்பிச்சது? ஏன் ஆரம்பிச்சது? டாக்டர் ரெட்டிகிட்ட போகாம இவன் என்ன பண்ணினான்? கங்கா என்ன பண்ணா? ஓ ஹெல்... வித்யா எனக்கு வர்ற ஆத்திரத்துக்கு...''

நாணா இருப்புக்கொள்ளாமல் எழுந்து நடந்தான்.

''வேலை போயிட்ட இந்த நாலு மாசத்துலே அவர் டாக்டர்கிட்ட போயி தன்னைச் சரி பண்ணிண்டு இருக்கலாம் இல்லியா நாணா? விவரம் சரி தெரியாம வீணா ஏன் அவஸ்தைப் படறேள்? ரிலாக்ஸ்...''

''டாக்டர் ரெட்டியோட பேசிப் பாக்கட்டுமா வித்தி? வில் தட் ஹெல்ப்?''

வித்யாவின் பதிலுக்குக் காத்திராமல் நாணா டாக்டர் ரெட்டியின் நம்பரை டைரக்டரியில் தேடி, சுழற்றினான்.

ஒரு நிமிஷ தாமதத்திற்குப் பிறகு டாக்டர் ரெட்டி லைனில் வந்தார்.

''டாக்டர் ரெட்டி? குட் மார்னிங்...! நா நாராயணன் பேசறேன்... உங்க பேஷண்ட் த்யாகுவோட ஃப்ரெண்ட்...'' தொடர்ந்து நாணா தன் கம்பெனி பேர், மற்ற விவரங்களைச் சொன்னதும் டாக்டர் அவனைச் சட்டென்று இனம் கண்டு கொண்டார்.

''ஃபாரின்லேந்து நீங்க அனுப்பின க்ரீடிங்க்ஸ் கிடைச்சது. தாங்க்யூ... எப்ப வந்தீங்க? ஹௌ வாஸ் தி ட்ரிப்? த்யாகு எப்படி இருக்கார்? இங்கதானே இருக்கார்?''

தான் அவரைக் கேட்கவேண்டிய கேள்வியை அவரே தன்னைக் கேட்டதும் த்யாகு டாக்டரோடு தொடர்புகொள்ளவில்லை என்பது நாணாவுக்குத் தெளிவானது.

''டாக்டர் ரெட்டி'' என்றவன் சில கணங்கள் தாமதித்துவிட்டுத் தயக்கத்தோடு பேசினான்: ''நா நேத்துத்தான் இந்தியாக்கு வந்தேன். சில மாசமா த்யாகு எனக்கு லெட்டர் போடறதை நிறுத்திட்டான். வேலை அதிகமா இருக்கும்னு நினைச்சுட்டேன். பட், ஐ வாஸ் ராங் டாக்டர். இப்ப அவனோட கலீக்கிட்ட பேசினப்புறம்தான் விவரம் தெரிஞ்சது. வந்து... திரும்ப த்யாகு எக்கச்சக்கமா குடிக்க ஆரம்பிச்சுட்டதால, நாலு மாசம் முன்னால வேலையவிட்டு போகச்சொல்லிட்டாங்களாம் டாக்டர்... ஐ வாஸ் ஷாக்ட்... உங்களை சந்திச்சிருப்பானோனு ஒரு நப்பாசை. அதான்...''

''ஓ - காட் - வாட் எ பிட்டி! வேலை போற அளவுக்குக் குடிச்சானாமா? என்னை ஏன் காண்டாக்ட் பண்ணலை? ஐ'ம் ஸாரி நாராயணன். ஆல்ஹஹாலிக்ஸோட பெரிய வீக்னஸ் இதுதான்... ஒரே ஒரு பெக்குனு ஆரம்பிப்பாங்க... பட், அதுக்கே அவங்களைப் புதைசேறுலே தள்ளற வலிமை உண்டுன்றதை மட்டும் அவங்க புரிஞ்சிக்கவே மாட்டாங்க... ஐ'ம் ரியலி ஸாரி... இப்ப அவர் எங்கே? டு யூ வாண்ட் டு பிரிங் ஹிம் டு மீ?''

நாணா மென்று விழுங்கினான்.



''அவனோட வேர்அபௌட்ஸ் தெரியலை டாக்டர். மதுராந்தகத்துக்குப் போயிருப்பானோ என்னமோ! நாளைக்கு அங்க போய் பார்த்துட்டு திரும்ப உங்களைச் சந்திக்கட்டுமா?''

''ப்ளீஸ் டூ... என்ன உதவி வேணுமானாலும் தயங்காம கேளுங்க நாராயணன்... நா ஒரு டாக்டர்... ஐ கான் அண்டர்ஸ்டாண்ட்...''

ரிஸீவரை வைத்த நாணா கையால் முகத்தை அழுந்தத் துடைத்துக்கொண்டான்.

''லோ, அவர் டாக்டர்கிட்ட போகலையா?''

''ம்ஹூம்.''

''இப்ப என்ன பண்ண உத்தேசம் நாணா?''

''மதுராந்தகம் போய்ப் பாக்கலாமா வித்தி? டு யு மைண்ட்?''

வித்யா இல்லை என்று தலை ஆட்டினாள். ''த்யாகு மேல நீங்க வைச்சிருக்கற அஃபெக்‌ஷன் எனக்குத் தெரியும் நாணா. அவருக்கு என்ன ஆச்சுனு தெரியாட்டா நீங்க நிம்மதியா இருக்கமாட்டேள்... எப்ப போகலாம்? இன்னிக்கா நாளைக்கா?''

''நாளைக்கு வித்யா. இப்ப ஆபீஸுக்கு போகவேண்டிய வேலை இருக்கு. கம்பெனிலே சொல்லி கார் ஏற்பாடு பண்ணறேன். குழந்தைகளையும் அழைச்சுண்டு போயிட்டு வந்துடலாம்...''

மறுநாள் காலை சிற்றுண்டி ஆன பிறகு எட்டு மணி அளவில் கிளம்பினார்கள்.

சேஷனின் வீட்டு வாசலில் கார் நின்றபோது நன்றாக வெயில் கொளுத்தத் தொடங்கிவிட்டது.

இவர்களை முதலில் பார்த்தவன் கண்ணன்தான்.

''ஹை, நாணா மாமா! ஊர்லேந்து எப்ப வந்தேள் மாமா? ஹேய் ப்ரகாஷ்... நீ என் உயரம் வந்துட்டயேடா! ஏன் மாமா, எங்கப்பா எப்படி இருக்கார்? ஏன் லெட்டரே போட மாட்டேங்கறார்? உங்ககூட அவரும் இண்டியாக்கு வரலியா மாமா?''

கண்ணன் பழைய கண்ணனாகப் பதுங்கிப்பதுங்கி ஒளியாமல், கலகலப்பாகப் பேசுவது தந்த மகிழ்ச்சியை அவன் கடைசியாக

அப்பா வரலியா மாமா என்று கேட்ட கேள்வி ஒரே அமுக்காய் அமுக்கிவிட நாணா அர்த்தத்துடன் வித்யாவை நிமிர்ந்து பார்த்தான்.

த்யாகு இங்கேயும் இல்லை. அவன் ஃபாரினுக்குப் போயிருப்பதாகக் கண்ணனிடம் சொல்லியிருக்கிறார்கள். புரிந்து கொள் - என்றது அந்தப் பார்வை.

நாணா புன்சிரிப்பை வரவழைத்துக்கொண்டு கண்ணனை இழுத்து அணைத்தான்.

''ஹலோ, கண்ணா! ஒரு வருஷத்துலே எப்படி மாறிட்டே நீ..! பெரிய மனுஷனாட்டம் என்ன பேச்சு பேசறே... ஹௌ ஆர் யு? உனக்காக ஆன்ட்டி என்ன கொண்டு வந்திருக்கா பாரு... அம்மா எங்கே?''

கண்ணன் பதில் சொல்லுமுன் குரல் கேட்டு சேஷனும் மங்களமும் வாசலுக்கு வந்தார்கள்.

''யாரு? நாணாவா? வாங்கோ... வாங்கோ...! வாம்மா வித்யா...! எப்ப பிரயாணம் முடிஞ்சு திரும்பினேள்? உள்ள வந்து உட்காருங்கோ...''

கலகலப்பாக வரவேற்க முயன்றாலும் கூடவே குரலிலும், முகத்திலும் வருத்தம் அடியில் ஒட்டிக் கொண்டிருப்பதை நாணாவால் உணர முடிந்தது.

''எப்படி இருக்கேள் மாமா? வந்து ரெண்டு நாளாச்சு... கங்கா, குழந்தைகளைப் பார்த்துட்டுப் போகலாம்னு வந்தோம்... எல்லாரும் சௌக்கியம்தானே?''

''சௌக்கியத்துக்கு என்னப்பா குறைச்சல்? இருக்கோம்... புத்திகெட்டத்தனமா நடத்துண்டுட்டு இப்ப பண்ண தப்பை நினைக்கக் குமைஞ்சுண்டு... என்னமோ வாழ்ந்துண்டு...''

குரல் பிசிறடிக்க சேஷன் பேசவும், மங்களம் புடவைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

ஒரு நிமிஷம் யாருக்கும் என்ன பேசுவது என்று புரியவில்லை.

''கங்கா எங்க மாமி? வித்யா, நீ நாம வாங்கிண்டு வந்த சாமான்களை எடுத்துக் குடு...''

''கங்கா உள்ள இருக்கா... வாயேன்!''



கண்ணன் தன் புது விளையாட்டுச் சாமான்களை எடுத்துக் கொண்டு ப்ரகாஷோடு முன்ஹாலுக்குச் செல்ல, அங்கேயே சோபாவில் சேஷனோடு நாணா உட்கார்ந்துவிட, வித்யா மட்டும் உள்ளே மங்களத்தோடு போனாள்.

''யார் வந்திருக்கானு பாரு கங்கா... வித்யா, நாணா இருந்திருந்தா எனக்கு இந்த நிலை வந்திருக்காதேனு சதா புலம் பிண்டு இருந்தியே, அந்த வித்யா வந்திருக்கா பாரு...''

கட்டிலில் அமர்ந்து குழந்தையை மடியில் போட்டுத் தட்டிக்கொண்டிருந்த கங்கா சட்டென்று நிமிர்ந்தாள்.

கங்காவா இது!

அடையாளம் தெரியாமல் இளைத்துப் போய், கண்ணடியில் கருவளையமும், சோர்ந்த முகமுமாய் இருப்பது கங்காவா?

''வி...வித்யா...'' தொண்டை அடைக்க அழைத்தவள் குழந்தையைக் கீழே கிடத்திவிட்டு ஒரே எட்டில் பாய்ந்து அவள் கைகளைப் பிடித்துக்கொண்டாள். அப்புறம் அடக்கமாட்டாமல் விசித்துவிசித்து அழத் தொடங்கினாள்.

மாலை வெயில் உடம்புக்கு இதமாக இருந்தது. கிராமத்தி லிருந்து புறப்பட்டு, நெடுஞ்சாலையை அடைந்து, வண்டி வேகம் எடுக்கும்வரை எதுவும் பேசாமல் இருந்த வித்யா ஒரு பெருமூச்சுடன் சின்னக் குரலில் பேசினாள்:

''கங்காவைப் பார்த்தா பாவமா இருக்கு நாணா... ஆள் ரொம்ப மாறிப் போயிட்டா... என்னைக் கண்டதும் கட்டிண்டு கொட்டித் தீர்த்துட்டா... புவர் கேர்ல்... எல்லாத்துக்கும் தான்தான் காரணம்னு அவ புலம்பினப்போ என்ன சொல்லி அவளைத் தேத்தறதுனே எனக்குப் புரியலை... லோ... லாட்... த்யாகுவோட வாழ்ந்தப்போ இருந்த கங்காவா அவ நிச்சயம் இன்னிக்கு இல்ல... 'முன்னெல்லாம் அடிக்கடி அவரை விட்டுப் பிரிஞ்சி ஊருக்குக் கோச்சுண்டு மாசக் கணக்குலே நா வந்தவதான்... இப்படி அவரைப் பிரிஞ்சி இருக்கறது எனக்குப் புதுசு ஒண்ணுமில்லே... ஆனா, அப்போ அவர் எங்க இருக்கார், என்ன பண்ணறார்ங்கறது எனக்குத் தெரிஞ்சுருந்த தாலதான் பதட்டம் இல்லாம வெறும் கோபத்தோடு இருக்க முடிஞ்சதோ, என்னமோ. இப்போ அப்படி இல்லியே. அவர் எங்கே,

என்ன ஆனார்னு ஒரு விவரமும் தெரியாமப் போனப்புறம் சதா பயம்தான் ஆளைப்பிச்சுத் திங்கறது. முதல் ஒரு மாசம் ஒன்னையும் லட்சியம் பண்ணாம மூளை கெட்டு, திமிர் பிடிச்சுதான் இருந்தேன். ஆனா, குழந்தை பொறந்தப்புறம், ஊரார் எல்லாம் அவர் எங்கேனு கேட்க ஆரம்பிச்சப்புறம் என்னமோ நெரட ஆரம்பிச்சுடுத்து... கண்ணன் வேற தொணதொணக்கிறான்... வெளிநாட்டுக்குப் போயிருக்கார்னு இன்னும் எத்தனை நாளைக்குத்தான் ஏமாத்திண்டு, என்னையும் நா ஏமாத்திக்க முடியும்?'னு கேட்டு அவ பிழியப்பிழிய அழுதப்போ கங்காவா இத்தனை சமர்த்தாப் பேசறானு நா ஆச்சரியப்பட்டுப் போயிட்டேன் நாணா. த்யாகுவோட உசிருக்கு ஏதாவது ஆயிருக்குமோங்கற பயம் அவளுக்கு ஷாக் ட்ரீட்மெண்ட் மாதிரி ஆயிடுத்துனே நா நினைக்கிறேன்... 'ஆம்படையான் இல்லாத பொம்மனாட்டிக்கு ஒரு அந்தஸ்தும் இல்லேனு புரிஞ்சுடுத்து. அவர் இல்லாட்டா நா வெறும் பூஜ்யம்'னு கங்கா சொல்லணும்னா இந்த நாலு மாசத்தனிமை, இனி நிரந்தரத் தனிமையாயிடுமோங்கற எண்ணம் அவளுக்குள்ளே எந்த மாதிரி விழிப்பை உண்டாக்கி யிருக்குனு நன்னா புரியறது நாணா..."

"சேஷனும் தான் 'அவசரப்பட்டுட்டோம்'னே வருத்தப் படறார்... கண்டிப்பா இருந்தா வழிக்கு வந்துடுவார்னு அதிகமா நடந்துண்டேன்னு கலங்கறார்... குழந்தை பிறந்தப்புறம் சேதி சொல்லி அனுப்பிச்சதுக்குக்கூட பதிலே இல்லாமப் போனதும்தான் இவா முழிச்சுண்டிருக்கா... தேடின மட்டும் ஆள் அட்ரஸ் இல்லாம போயிடவே, என்ன பண்ணறதுனு தவிக்கறா... இன்னும் கொஞ்சம் பொறுமையா தானும் இருந்து, பொண்ணுக்குப் புத்தி சொல்லாமப் போனேனேனு இப்ப குத்த மனப்பான்மையிலே அவஸ்தைப்படறார்... ஹூம்.. கண் கெட்டப்புறம் சூரிய நமஸ்காரம் பண்ற கதையா ஆயிடக்கூடாதேனு எனக்குக் கவலையா இருக்கு... வித்யா..."

"த்யாகு திரும்பக் குடிக்க ஆரம்பிச்சதுக்கும் தானே காரணம்னு கங்கா நினைக்கிறா நாணா... வேலை போனப்புறம் இவ என்னமோ சொல்லி அழுதப்போ 'எல்லாம் உன்னாலதான் கங்கா, நீ மட்டும் பெண் குழந்தை வேணும்னு ஆசைப்படாம இருந்திருந்தா நா இந்த நிலைக்கு வந்திருக்கமாட்டேன்'னு த்யாகு கத்தினாராம்... 'இந்தப் பொண் குழந்தை முகத்தைப் பாக்கறப்ப எல்லாம் அவர் சொன்னது நினைப்புக்கு வந்து ஆளை ஓடஓட விரட்டறது'னு சொல்றா... நிஜமா



ஐ ஃபீல் வெரி ஸாரி ஃபார் கங்கா... இவ இத்தனை வருத்தப் படறதுக்காகவாது கடவுள் கொஞ்சம் இரக்கம் காட்டினாத் தேவலை..."

செங்கல்பட்டு தாண்டும்வரை இருவரும் எதுவும் பேசாமல் வந்தனர்.

அப்புறம் நினைத்துக்கொண்டு வித்யா பேசினாள்:

"குழந்தை எத்தனை அழகா இருக்கா பாத்தேளா நாணா?"

"ம்ம்... அப்படியே த்யாகுவோட அம்மா, தங்கைதான்... அவன் வக வகனு உசிரை விடுவானே, அந்த வகக்குட்டியே திரும்ப பிறந்திருக்கறப்போ, பாவி எங்கேயோ ஒழிஞ்சுட்டானேனு ரொம்ப வேதனையா இருக்கு. ஆனாலும் இது ரொம்ப அநியாயம் வித்தி... எங்க இருக்கான், என்ன ஆனான்னு தெரியாம, என்ன கஷ்டம் இது..."

"இவா ஏன் பேப்பர்லே விளம்பரம் கொடுத்துப் பார்க்கலை நாணா?"

"வேற என்ன? வெட்கம், அவமானம்தான்! ஊரார்கிட்ட வெளிநாட்டுக்குப் போயிருக்கான்னு சொல்லிட்டு பேப்பர்லே எப்படி விளம்பரம் கொடுக்கிறதுங்கற தயக்கம்தான்."

"எல்லாரும் தாங்க பண்ண தப்பைப் புரிஞ்சுண்டப்புறமும் இதெல்லாம் பார்த்தா சரிப்படுமா?"

"அவா நிலைலே நாம இருந்தா என்ன நினைப்போமோ? எதுக்கும் அரவிந்தனை மீட் பண்ணிப் பார்க்கறேன்... ஆனவரைக்கும் முயற்சி பண்ணாம நா விடப் போறதில்லை..."

சென்னையை அடைந்து ஹோட்டலுக்குப் போய்க் குளித்து வெளியே போக நாணா வேறு உடை மாற்றிக் கொண்டதும் வித்யா சின்னதாய்ப் புருவத்தைத் தூக்கினாள்.

"நேரமாகலியா நாணா? நாளைக்குப் பார்க்கக் கூடாதா?" என்றவளிடம், "இல்லேம்மா! எனக்கு இருப்புக் கொள்ளலை.. தவிர, இப்ப போனாத்தான் குடிகாரக் கும்பலை வளையா க்ளப்புலே பிடிக்கமுடியும்" என்றபடி நாணா புறப்பட்டான்.

க்ளப்பில் அத்தனை கூட்டம் இல்லை.

பார் மூடி இருந்தது.

எட்டு மணிகூட ஆகவில்லை - அதற்குள் மூடி விட்டார்களா? நாணாவுக்கு ஆச்சரியமாக இருந்தது.

அந்தப் பக்கமாகப் போன ஸ்டூவர்ட் ஒருவர் அவனை அடையாளம் கண்டுகொண்டு கிட்ட வந்தார்.

''குட் ஈவ்னிங் ஸார்... வெளிநாட்டுலேந்து எப்ப வந்தீங்க?''

''இரண்டு நாளாச்சு, ஆமா, என்ன அதிசயமா பார்மூடியிருக்கு? சாதாரணமா ராத்திரி ஒரு மணி ஆகுமே?''

''இன்னிக்கு அக்டோபர் செகண்ட் ஸார். காந்தி ஜெயந்தி. ட்ரை டே. அதனால பார் கிடையாது.'' - ஸ்டூவர்ட் சொன்னதும் எப்படி இந்த விவரத்தை மறந்து போனோம் என்ற கோபம் நாணாவுக்கு எழுந்தது.

''என் ஃப்ரெண்ட் த்யாகுவ உங்களுக்குத் தெரியுமே ஸ்டூவர்ட்... அவரை சமீபத்துலே பாத்தீங்களா?''

''யாருங்க? சிவப்பா, வெட வெடனு, மீசை வைச்சிகிட்டு, அவரா?''

''எஸ்...எஸ்...அவரேதான்.''

''இப்பல்லாம் அவர் இங்க வரதில்லை ஸார். அரவிந்தன் ஸார்கூடவே கொஞ்சநாள் இருந்தாரு... அப்புறம் காணோம். நா அரவிந்தன் ஸார்கிட்டே ஒரு நாள் கேட்டேன். 'அவுரு இப்ப எங்க வீட்லே இல்லே, போயிட்டாரு'னு சொன்னாரு... மூணு நாலு மாசமாச்சு நா அவர இங்க பாத்து...''

ஸோ - த்யாகு க்ளப்புக்கும் வருவதில்லை; அரவிந்தன் வீட்டிலும் இல்லையா?

அப்புறம் அவன் எங்கே?

இன்னும் தெரிந்த இரண்டு பேர்களிடம் பேச்சுக்கொடுத்த போதும் மூணு மாசங்களுக்கும் மேலாயிற்று த்யாகுவை யாரும் பார்த்து என்ற விவரமே கிடைத்தது.

நௌ வாட் டு டூ?

எங்கு போய்த் தேடுவது?

உயிருடன் இருக்கிறானா? இல்லை...?



நாளைக்கு போலீசுக்குப் போகவேண்டியதுதானா? வேறு வழி இல்லையா?

அசதி, வேதனையுடன் ஹோட்டலுக்கு நாணா திரும்பிய போது 'அண்ட் தட் ஈஸ் த எண்ட் ஆஃப் தி நியூஸ்' என்று ஜோதிகா ரத்தினம் முடித்துப் பத்து நிமிஷங்களாகிவிட்டன.

ஷூவைக் கழட்டிவிட்டுப் படுக்கையில் சாய்ந்தவனின் மனசு விவரிக்கத் தெரியாமல் கனக்க, கண்ணோரங்களில் ஜலம் ததும்பியது.

த்யாகு - நீ எங்கேடா? நாணா பதைத்துக் கலங்கிய அதே நிமிஷத்தில் பணம் பறி போய்விட்டது என்று முத்து சொன்ன சேதி தந்த அதிர்ச்சியும், ஏகமாய்க் குடித்த சாராயமும் ஆளை ஒரு கலக்குக் கலக்க, ரத்தம் கலந்த வாந்தியை எடுத்துவிட்டு லாட்ஜின் மாடிப்படிகளில் த்யாகு தடுமாறிக் கொண்டிருந்தான்.

# 31

அரைகுறையாக என்னமோ தூங்கினேன் என்று பேர் பண்ணிவிட்டு ஏழு மணிவாக்கில் த்யாகு கண் விழித்தவுடன் துக்கம் விசாரிக்கப் பக்கத்து அறைவாசிகள் வந்துவிட்டனர்.

''என்ன ஸார் - நானூறு ரூபாயா போயிடுச்சு''?

''இதுக்குன்னே மெட்ராஸ்லே ஒரு கும்பல் இருக்கு ஸார். எவன் பாங்க்லேந்து பணம் எடுக்கிறான், எவன் சம்பளம் வாங்கறான், எவன் அடகுக்கடைக்கு ஜாமான் எடுத்திட்டுப் போறான்னு கண்லே எண்ணெ விட்டுக்கிட்டுக் கவனிக்கிறதுக்குன்னே ஒரு கும்பல் இருக்கு ஸார்.''

''போலீஸ்லே சொன்னீங்களா?''

''ஆமா, அவங்க வந்து என்னத்தைப் பெரிசா கிளிச்சிடப் போறாங்க?''

சுற்றும்முற்றும் பார்த்து முத்து கிட்டத்தில் இல்லை என்று தீர்மானம் பண்ணிக்கொண்ட பிறகு ஒருவன் சொன்னான்:

''எனக்கென்னவோ இந்தப் பொடியன்கூட இதுக்குக் கையாளா இருப்பான்னுதான் தோணுது. விசாரிக்கிற முறைலே

விசாரிக்கப் பாத்திங்களா? ஏ - அம்மாடி - நானூறு ரூபானா சும்மாவா?''

எதுக்கும் த்யாகு ஒரு வார்த்தைகூடப் பதில் பேசவில்லை.

அவன் அவஸ்தையே தாளமுடியாமல் இருந்ததால், எவர் எது வேண்டுமானால் பேசிவிட்டு ஒழியட்டும் என்ற வெறுப்பில் இருந்தான்.

வயிற்றில் ஒரு வலி. தலையில் இன்னொரு தினுசான வேதனை. கண்களில் இருட்டு - தொண்டையில் வரட்சி. ஒட்டு மொத்தமாக உடம்பில் ஒரு சங்கடம்.

எட்டு மணி அளவில் வாட்ஜ் சொந்தக்காரன் வந்தான். கூடவே முத்து.

''என்னய்யா... உன் பணத்தைத் தொலைச்சிட்டதா இவன் சொல்றானே, மெய்தானா? இல்லே - வாடகைப் பணம் கொடுக்காம டபாய்க்க ரெண்டு பேருமா நாடகமாடறீங்களா?''

அவன் மேற்கொண்டு பேச இடம் கொடாமல் முத்து குறுக்கிட்டான்:

''நாலு வருஷமா வேலை பாக்கற எம் மேல உங்களுக்கு நம்பிக்கை இல்லாட்டி போவுது... வுடுங்க... ஆனா, ஸாரை இதுலே சேர்த்து மட்டமா பேசாதீங்க மொதலாளி... அவரு பெரிய ஊட்டு மனுஷன்... இந்தப் பேச்செல்லாம் அவரண்ட வேணாம்... ஆமா...''

''அடேயப்பா...! உன்னைச் சொன்னா... இவனுக்கு என்னா கோவம் வருது பாருய்யா...'' - சிரித்தவன் ''எனக்கென்னா... ரெண்டு பேரும் எப்படி வேணா போங்க... என் வாடகை எனக்கு வந்திருக்க... இனிமே அடுத்த மாசம்தானே திரும்ப இந்தப் பிரச்னை?'' எனவும், த்யாகு கண்களை விரித்து அவனைப் பார்த்தான்.

''ஆமாய்யா... உம் பணத்தைத் தொலைச்சிட்டது இவரு தப்பாம்... அதால, இந்த மாச சம்பளத்தை உன் வாடகைக்காவ எடுத்துக்கச் சொல்லிட்டாரு இந்த மஹா ரோஷக்காரரு...''

வாட்ஜ் சொந்தக்காரன் சிரித்துக்கொண்டே அந்தப் பக்கம் போனதும் த்யாகு முத்துவை அருகில் அழைத்தான்.

''என்னடா முத்து இது?''



''எது ஸார்?''

''வாடகை சமாசாரம்டா...''

''அதுக்கென்ன ஸார் இப்ப.. சரி, நீங்க எழுந்தாச்சா? போய் ஏதாச்சும் நாஸ்தா வாங்கியாரவா? தயிர் சாதமா உங்களுக்கு எடுத்தாரதா வேலு சொல்லியிருக்காரு; இப்படி வாந்தி எடுத்துக் காயற வவுத்துக்கு அதான் நல்லதாம். நா போயி பால் ஒரு க்ளாஸ் வாங்கியாரவா? குடிக்கிறீங்களா?''

''நா கேட்டதுக்கு முதல்லே நீ பதில் சொல்லுடா... உன் சம்பளத்தை எனக்குக் கொடுத்திட்டா நீ என்னடா பண்ணுவே? பணத்தை நீ வேணும்னா தொலைச்சே? இல்லியே... அப்புறம் இது நியாயமாடா?''

''வீணா பெரிய பேச்செல்லாம் பேசாதீங்க ஸார் - உங்களுக்கு நல்ல மனசு. அதான் நா தப்பு பண்ணியுங்கூட ஒரு வார்த்தை அதட்டலா கேக்கமாட்டேங்கறீங்க. இன்னொருத்தனா இருந்தா இந்நேரம் என்னைக் கம்பி எண்ண வைச்சிருப்பான்... அந்தப் பேச்ச வுடுங்க... இப்ப நீங்க எழுந்திருக்கப் போறீங்களா இல்லியா?''

அவனோடு வாதம் பண்ணத் தெம்பு இல்லாமல் த்யாகு படுக்கையில் சாய்ந்து உட்கார்ந்துகொண்டான்.

வயிற்றைக் காந்தியது.

பால் குடித்துப் பார்க்கலாமா? இந்த எரிச்சல் அடங்குமா?

கையும் காலும் துணி மாதிரி இருப்பதில் எழுந்திருக்க முடியாது போலிருக்கிறதே...

என்ன இழவு இது...?

செய்வதறியாது அவன் குழம்பிக்கொண்டிருக்கையில் ஒரு அலுமினியத் தூக்குடன் வேலு உள்ளே நுழைந்தான்.

''தூங்கறாராடா?''

''..................''

''எப்படி இதே சாமி? அங்கெல்லாம் நீ வரவாணாம்னா கேக்கறியா? நா சொல்லச்சொல்ல வெறும் வவுத்தோடு அளவுக்கு மீறிக் குடிச்சுட்டு இப்ப என்னா வேலைபடறே பாரு சாமி...''

''ஆமா - பெரிய கரிசனம்தான் இவருக்கு! நீ ஏன்யா சாராயம் வாங்கிக் கொடுக்க ஆரம்பிச்சே? சாராயமும் கள்ளும் குடிக்கிற ஆளாய்யா இவரு? அதெல்லாம் இவருக்கு ஒத்துக்குமா? நம்ம கும்பல்ல சேர்ந்த ஆளாய்யா இவரு? பண்ணறதையும் பண்ணிட்டு இப்பப் பேச்சு என்ன வேண்டிக் கெடக்கு?''

''அவுரு கேக்கறப்போ நா மாட்டேன்னு சொல்றது மருவாதியாடா? நீ மட்டும் என்னா ஒளுங்கு? அம்மாம் பணத்தையும் தாரவாத்த பொறவு பேசறத்துக்கு உனக்கு வெக்கமா இல்லே?''

''ஷ்...ஷ்... டேய் முத்து... வேலு... சத்தம் போடாதீங்கடா... டே....''

த்யாகு சிரமத்துடன் எழுந்து உட்கார்ந்தான்.

''ஏற்கெனவே நாரொம்ப நொந்து போயிருக்கேன்... நீங்களும் சண்டை போட்டுண்டு என் கஷ்டத்தை ஜாஸ்தி ஆக்காதீங்கடா...ப்ளீஸ்! பணம்தானே? போகட்டும்... உடம்பு கெட்டுப் போயிடுத்தா? ஒழியட்டும்... என்னை கொஞ்ச நாழி தனியா விட்டுட்டுப் போயிடுங்கடா... ப்ளீஸ்...!''

கண்களில் ஊறிய ஜலம் சரமாகக் கன்னத்தில் வழிய த்யாகு கெஞ்சியதும் மற்ற இருவரும் அடங்கிப்போனார்கள்.

''ஐயே...! என்னா சாமி இது பச்சப் புள்ளயாட்டம்...! கண்ணைத் தொடச்சிக்க... இத பாரு. நா உனக்காக ஓட்டலேந்து தயிரு சோறு கொணாந்திருக்கேன்... சாப்பிட்டுப் படு... தூங்கி எளுந்தா உடம்பு 'சிக்'குனு ஆயிடும்...''

தூக்கை வேலு திறக்க, முத்து ஓடிப்போய் த்யாகுவின் தட்டைக் கழுவி, டம்ளரில் நீர் எடுத்து வந்தான்.

புழுங்கல் அரிசிச் சோறு, புளித்த வாசனை நாற்றம் கண்ட தயிர். கடுகு, பச்சைமிளகாய் தாளிப்பு. கூடவே ஒரு பிளாஸ்டிக் பேப்பரில் எலுமிச்சை ஊறுகாய்.

கூடப்பிறந்தவர்களைப் போல உடன் இருந்து, மன்றாடி, சாப்பாட்டைச் சாப்பிடத்தூண்டும் அந்த இருவரின் அன்பு கண்ணீரை மேலும் பெருகச் செய்ய, த்யாகு மெதுவாக ஒரு வாய் சாதத்தை உருட்டி வாயில் போட்டுக் கொண்டான்.



வெந்தும் வேகாமலும் கொட்டை கொட்டையாய் முழித்துக் கொண்டிருந்த சோறு உள்ளே போகச் சண்டி பண்ணியது.

புழுங்கல் அரிசியின் மணம் வயிற்றுப் பிரட்டலை அதிகமாக்கியது.

கஷ்டப்பட்டு நாலு கவளம் விழுங்கித் தண்ணீரைக் குடித்த வன் 'போதும்' என்று சைகை காட்டிவிட்டுத் தட்டிலேயே கையைக் கழுவினான்.

கட்டிலில் காலை நீட்டிப் படுத்துக் கண்களை அவன் மூடவும், வேலு ''நா வரேன் சாமி.. அப்புறமா பாக்கறேன்'' என்று சொல்லிப் புறப்பட்டான்.

தட்டு, டம்ளரைக் கழுவி வைத்தபின் கதவைச் சாத்திக் கொண்டு முத்து கீழே போனான்.

ருசித்ததோ, இல்லையோ, வயிற்றுக்குள் தள்ளப்பட்ட தயிர் சோறால் எரிச்சல் கொஞ்சம் அடங்க, உடம்பின் அவஸ்தை குறைய, சீக்கிரமாய் த்யாகு உறக்கத்தில் ஆழ்ந்து போனான்.

திரும்ப அவன் கண்விழித்தபோது சூரியன் நடுவானத்தில் இருந்தான்.

மெள்ள எழுந்து தலையணையைச் சுவரில் நிமிர்த்தி வைத்துச் சரிந்தமாதிரி உட்கார்ந்தான்.

கையும், காலும் கல்லாகக் கனத்தன. உடம்பு மரத்துப் போன மாதிரி இருந்தது.

தூங்கி எழுந்தால் சரியாகிவிடும் என்றானே வேலு! ஆகவில்லையே!

உடம்பில் எதனால் இப்படியொரு மந்தத்தனம்?

சட்டையைத் தூக்கி வயிற்றைப் பார்த்தபோது அது ஒரு பக்கமாக வீங்கி இருப்பது தெரிந்தது.

கொஞ்ச நாளாய் வயிற்றுவலி... நேற்று ரத்த வாந்தி... இப்போது வீக்கம்...

என்ன இதெல்லாம்?

ஸிரோஸிஸ் ஆஃப் த லிவர் தலையைக் காட்டுகிறதா?

டாக்டரிடம் போய்க் காட்ட வேண்டுமா?

எந்த டாக்டரிடம்?

யாராலும் இலவசமாய்ப் பார்ப்பார்களா? பணம்?

பெட்டியில் முப்பத்திநாலு ரூபாய் இருந்ததில் நேற்று இருபது எடுத்துவிட்டேன். இனி அந்தப் பதினாலும், ஏதோ சில்லறையும்தானே பாக்கி? இதை வைத்துக்கொண்டு என்ன வைத்தியம் பார்க்கமுடியும்?

ஜி.எச் - க்குப் போகலாமா?

அங்கு இலவசமாய்ப் பார்ப்பார்களே

ஜி.எச் - க்கா?

அடேயப்பா...! அத்தனை தூரமா?

எப்படிப் போவது?

பஸ்ஸிலா?

ம்ஹூம்... அதுக்கெல்லாம் இப்போது உடம்பில் திராணி இல்லை...

ஆனது ஆகட்டும் என்றுவிடவேண்டியதுதான்.

சரி - இன்னும் கொஞ்ச நேரம் போனால் குடிக்காக உடம்பு பறக்கத் தொடங்கிவிடுமே... அப்போது என்ன பண்ணுவது?

திரும்ப சாராயமா?

வேறு ஏதாவது வாங்கலாம் என்றால், பணம்?

பதினாலு சொச்சத்தை வைத்துக்கொண்டு அஸ்வமேத யாகமா பண்ணமுடியும்?

த்யாகுவுக்குள் திடுமென்று வெடித்துக்கொண்டு அழுகை எழுந்தது.

முழங்காலில் முகத்தைப் பதித்துக்கொண்டு சில நிமிஷங்களுக்கு அழுதவன் தனக்குத்தானே சமாதானம் பண்ணிக்கொள்ளும் தினுசில் மூக்கை உறிஞ்சி, பின் தலையைச் சுவரில் வைத்துத் தேய்த்தான்.

பார்வை ஜன்னல் வழியாகத் தெருவை வெறித்தது.

மழையைக் காணாமல் புழுதி படர்ந்த சந்தில் ஜனநடமாட்டம் இல்லை... வெளுப்பாய்க் காய்ந்த வெயில் கண்களைக் கூசவைத்தது.



தூரத்தில் ஒரு குச்சி நாய். காலில் காயம் போலிருக்கிறது. நொண்டிக்கொண்டு மெதுவாக வந்தது. த்யாகுவின் ஜன்னலுக்கு நேராக இருந்த வெளியிடம் நின்று மூக்கைக் காற்றில் தூக்கி எதையோ மோப்பம் பிடித்தது.

சில கணங்களுக்குத் தயங்கிவிட்டு, வலது பக்கமாய் அடுக்கி வைத்திருந்த தார் ட்ரம்களிடம் போனது.

த்யாகு இங்கு வந்த நாட்களாய் அந்த தார் ட்ரம்கள் அங்குதான் இருக்கின்றன. எலெக்ஷன் சமயத்தில் ரோடு போடவென வந்தவையாம். என்ன காரணத்தாலோ முடிவு மாற்றப்பட்டுவிட, வெலியாரமாய் அப்படியே சீந்துவாரின்றிக் கிடக்கின்றன.

"இவங்க ரோடு போடக்கூட வேணாம் ஸார். இந்த ட்ரம்களை எடுத்துட்டுப் போயிட்டாங்கன்னா போதும்.... விஷமக்காரப் பய எவனோ கல்லால அடிச்சதுல ஒரு ட்ரம் ஓட்டையாகிப் பத்து நாளா ஒழுகுது. சுத்தி ஒரே தாருதான்... இருக்கிற அசிங்கம் பத்தாதுனு, இப்ப இது வேற... பாத்து கால வைக்க வேண்டி இருக்குது... இல்லேனா கால், வேஷ்டி தாருலே கப்புனு பிடிச்சுகுது..."

நாலு நாட்கள் முன்னால்கூட முத்து இது குறித்துப் புலம்பிக்கொண்டேதான் அறையைக் கூட்டினான்.

ஒரு அங்குலம் அளவுக்குத் தடிமனாய், கறுப்பாய்ப் பரவியிருந்த தாரின் மத்தியில் வெள்ளையாய் ஏதோ ஒன்று தெரிய, அந்தக் குச்சி நாய் அதன் வாசனையால் கவரப்பட்டு மெதுவாகக் கால்களைத் தார் மேல் வைத்துச் சென்று அதைக் கௌவி எடுக்க முயன்றது.

என்ன அது?

ரொட்டித் துண்டா?

இரண்டு நிமிஷங்கள் போல மன்றாடியும் அந்த வெள்ளைப் பதார்த்தம் தாரிலிருந்து விடுபடாமல் போகவே, சலித்துப் போனதாய் குச்சி நாய் திரும்ப எத்தனித்தது.

முதலில் லேசாகக் காலைத் தூக்கிப் பார்த்துவிட்டு, தொடர்ந்து கொஞ்சம் அழுத்தமாக அது முயலுவதைத் த்யாகுவால் புரிந்துகொள்ள முடிந்தது.

ம்ஹூம், முடியவில்லை.

நாலு கால்களும் ஒரு அங்குலத் தாரில் அழுந்தப் புதைந்து போனதில் நாயால் இப்படி அப்படித் திரும்பக்கூட முடியவில்லை.

என்ன, ஏது என்று விவரம் புரியாமல்போனதில் அந்த நாய் பயந்திருக்கவேண்டும்.

முரட்டுத்தனமாக, ஒரு முறுக்கலுடன் கால்களை விடுவிக்கச் செய்த முயற்சியில் பாலன்ஸ் தவறிப்போக, பொத்தென்று அது ஒரு பக்கமாய் தாரின் மேல் விழுந்தது.

கால்களோடு, உடம்பின் ஒரு பகுதியையும் தார்பிடித்துக் கொள்ள இப்படியும் அப்படியுமாய்ப் புரள முயற்சித்த நாய் பயங்கரமாய் ஊளையிடத் தொடங்கியது.

அந்த நாய் தாரில் வகையாய்ச் சிக்கிவிட்டது என்பது புரிந்து போக, த்யாகு ஒருவித அதிர்ச்சியோடு விழித்தான்.

போய் அந்த நாயைத் தூக்கிவிட்டால் என்ன?

இனி, தானாக அது வெளிவர முடியாது. யாராவது இழுத்து விட்டால்தான் உண்டு. போய் அதைக் காப்பாற்றினால் என்ன?

பரபரவென்று அவிழ்ந்த வேஷ்டியைக் கட்டிக்கொண்டு எழுந்தபோது பலவீனத்தின் காரணமாக இரண்டு கால்களிலும் சொரேர் என்று கொரக்களி வாங்க, அந்த வலி தாங்காமல் த்யாகு கட்டிலில் விழுந்தான்.

அ....ம்...மா...ஆ...!

வலிக்கிறதே...!

காலில் ஆரம்பித்த க்ராம்ப்ஸ் இடுப்பு வரைக்கும் வியாபித்துக் குடைந்ததில் பல நிமிஷங்களுக்குச் செயலிழந்து போனவன் தன்னைச் சுதாரித்துக்கொண்டு திரும்ப மெதுவாக ஜன்னல் வழியாகப் பார்த்தபோது அந்த நாய் பட்டையாகத் தாரில் படுத்திருப்பது தெரிந்தது.

சுற்றிலும் சில ஆசாமிகள் வேடிக்கை பார்த்துக் கொண்டு...

''நாய் மாட்டிக்கிடுச்சடா...''

''தூக்கலாமா...?''

''முடியாதுடா,... பிச்சுதான் எடுக்கணும்... சாவட்டும் விடு தெரு நாய்தானே...''



தீனமாக, கையாலாகாத்தனத்துடன் நாய் ஊளையிடுவது தாளமுடியாமல் போக, த்யாகு படுக்கையில் சாய்ந்தான்.

இதோ போய் நாயை மீட்க, தன் உடம்பில் வலு இல்லை என்பதை உணரமுடிந்ததால் கண்களை இறுக்கிக்கொண்டு கண்ணீர் புறப்பட்டது.

சே...!. என்ன உலகம் இது...!

ஒரு ஜீவனின் மரண அவஸ்தையில் இன்பம் காணுவது மனுஷனுக்கு எப்படிச் சாத்தியமாகிறது.

தெரு நாய் என்றால் மட்டும் துடிச்சுச் சாகலாமா?

எஸ்.பி.ஸி.ஏ-க்கு போன் செய்தால் வந்து மீட்பதற்கான முயற்சியில் இறங்குவாங்களே!

இந்த முத்து எங்கே?

சமயத்தில் அவனையும் காணோமே...!

ஐயோ...! நாயின் முனகல் ஆளைக் குடைகிறதே...

நினைப்பது எதையும் செய்யமுடியாது பலஹீனத்தோடு த்யாகு தலையணையை எடுத்து முகத்தில் வைத்து அழுத்திக் கொண்டான்.

இதயம் காதுக்குள் குதித்தது.

மூளையில் ஓடும் நாளம் 'வெடித்து விடட்டுமா?' என்று கேட்டது.

நாயின் அவலம் நெஞ்சை அறுக்க அறுக்க, டெலிரியம் ட்ரெமர்ஸ் அதிகமாகத் தொடங்கின.

கை நடுக்கம்... உடம்பு உதறல்...கண் இருட்டு... என்னென்னமோ பயங்கரக் கற்பனைகள்.

தார் குளம்... அதில் கழுத்துவரை சிக்கிக்கொண்டு த்யாகு...

''காப்பாத்துங்கோ... ப்ளீஸ்... ஹெல்ப்...!''

மனிதக் கூட்டம் சுற்றி நின்று வேடிக்கை பார்க்கிறது.

''என்னைக் காப்பாத்துங்கோ...''

''உன்னை எதுக்குக் காப்பாத்தணும்? உன்னால யாருக்கு என்னடா ப்ரயோஜனம்? செத்து ஒழி.... பூமிக்குப் பாரமாவது குறையும்... செத்து ஒழிடா குடிகாரப் பாவி...!''

முகவாய் தாருக்குள் போகிறது... வாய்...அப்புறம் மூக்கு...

மூச்சுத் திணறுகிறது.

ஹா...ஹா...ஐ...யோ...ஓ...!

விருக்கென்று த்யாகு எழுந்து உட்கார்ந்தான்.

தெப்பமாய் வியர்வை...

இதயம் எகிறிஎகிறிக் குதித்தது.

என்ன பயங்கரம்! எத்தனை கஷ்டம்...!

இல்லை... இந்த அவஸ்தையை இனி தாங்கமுடியாது. நோ... உடனே இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும்.

ட்ரிங்க் இல்லாமல், உடம்புக்கு வந்து படிப்படியாக க்ஷீணமடைந்து சாவதைவிட ஒரேயடியாகச் செத்துத் தொலைந்து விடுவது மேல் அல்லவா?

என்ன பண்ணலாம்?

தூக்குப் போட்டுக்கொள்ளலாமா?

விழி பிதுங்கி, நாக்குத் தொங்கி, விலுக்விலுக்கென்று உடம்பு உதறி....ஹா....நோ... இது வேண்டாம்...

கடலில் விழுந்துவிடலாமா?

தண்ணீர் வாய்க்குள்ளும், மூக்குக்குள்ளும் புகுந்து மூச்சுத் திணறி, சில நிமிஷங்களுக்கு மரண வேதனையை உணர்ந்து, தவித்து - ஹோ... இது மஹா அவஸ்தை; வேண்டாம்...

பேசாமல் தண்டவாளத்தில் தலையைக் கொடுத்து விடலாமா?

தலை சுக்குநூறாய்ச் சிதறி, ரத்தக்களரியாய்.... ஐயையோ...! நினைத்தாலே பயமாக இருக்கிறதே...?

வேதனை இல்லாமல் சாகவே முடியாதா?

வாட் அபௌட் ஸ்லீப்பிங் பில்ஸ்?

கிடைக்குமா?

முயற்சி செய்து பார்த்தால் என்ன?

இருபது மாத்திரைகளை முழுங்கி, படுத்துவிட்டால் ஹாய்யாகப் போய் விடலாமே...



ஒரு தீர்மானத்திற்கு வந்துவிட்ட தினுசில் த்யாகு எழுந்தான்.

வயிற்றுவலி மற்ற உபாதைகளைப் பல்லைக் கடித்துப் பொறுத்துக்கொண்டு, சட்டை மாட்டி, இருந்த பணத்துடன் கிளம்பினான்.

வேலியோரத்தில் செத்து, விரைக்கத் தொடங்கியிருந்த நாயைப் பார்த்தபோது திக்கென்றது... காலை எட்டிப் போட்டான்.

கொஞ்சம் நடந்து இரண்டு தெருக்கள் தாண்டினால் பஜார். அதில் நாலைந்து மருந்துக்கடைகள் உண்டு. எவனாவது மாத்திரைகள் தரமாட்டானா?

விவரிக்கத் தெரியாத வெறி, கோபத்துடன் நடந்தவன், கண்ணில் தெரிந்த முதல் மருந்துக்கடைக்குள் சென்றான்.

''மாண்ட்ராக்ஸ் இருக்கா?''

''ம்ஹூம், நோ ஸ்டாக்.''

''வாலியம்? காம்போஸ்?''

''ப்ரிஸ்க்ரிப்ஷன் இருக்கா? காட்டுங்க.''

''ப்ரிஸ்க்ரிப்ஷன் இல்லாமக் கொடுக்கமாட்டேளா?''

பிச்சைக்காரத் தோற்றத்துடன் இவன் நின்றிருந்தது கடைக்காரருக்குச் சந்தேகத்தைக் கிளப்பி இருக்கவேண்டும்.

''உங்க பேரு என்ன? எதுக்காக உங்களுக்குத் தூக்க மாத்திரை...ம்?''

அதட்டலாய் அவர் கேட்டதும் த்யாகு சட்டென்று இறங்கி நடந்தான்.

அடுத்துச் சென்ற இரண்டு கடைகளிலும் இதே அனுபவம்தான்.

லோ - தூக்க மாத்திரைகள் கிடைக்காதா?

உடம்பின் பதட்டம் எக்கச்சக்கமாய் அதிகரிக்க, நாக்கு ஒரு வாய் குடிக்காகக் கூவத் தொடங்கியது...

ட்ரிங்க்... ஐ வாண்ட் ட்ரிங்க்...

விஸ்கி கொடு... இல்லை, சாராயமாவது கொடு...

என்ன செய்வது என்று புரியாமல் தடுமாறிக் கொண்டிருந்த வனின் பார்வை ப்ளாட்பாரத்தில் எலிமருந்து விற்ற நபர்மேல் விழுந்தது.

வொய் நாட்?

எலிமருந்து சாப்பிட்டால் என்ன?

பரபரவென்று கிட்டப் போனான்.

"என்ன விலைய்யா?"

"ஒரு ரூபாய்ங்க..."

"நிச்சயமாய் எலி சாகுமா?"

"என்னங்க அப்படிக் கேட்டுட்டீங்க...! அரிசிப் பொரிலே கலந்து வைச்சுப் பாருங்க... ஒரே ராத்திரி. அத்தனை எலியும் அவுட்."

"எலிதான் சாகுமா, இல்லே... பெரிய ஜீவன்கூடவா?"

"பெருச்சாளியா லார்? ஓ, சாவுமே...!"

"நாலு பாக்கெட் குடு."

நாலு ரூபாய் கொடுத்து அந்தப் பொட்டலங்களை வாங்கிக் கொண்ட நிமிஷத்தில் கால் சட்டென்று துணி மாதிரி வெலவெலத்துப் போக, அங்கேயே ப்ளாட்பாரத்தில் ஒரு பக்கமாய் த்யாகு உட்கார்ந்துகொண்டான்.

கண்களை மூடி, பெருமூச்சாக விட்டுத் தன்னை ஆசுவாசப் படுத்திக்கொள்ள முனைந்தபோது, நாளைக்கு இந்நேரத்துக்கு உயிருடன் இருக்கமாட்டோம்; எல்லாம் முடிந்து அடங்கி விட்டிருக்கும் என்ற எண்ணம் மனசில் மின்னலாக வெட்டியது.

## 32

"வீட்டுலே எலித் தொந்தரவு அதிகமா என்ன?"

யாரோ யாரிடமோ பேசுகிறார்கள் என்ற எண்ணத்தில் கவிழ்ந்து உட்கார்ந்திருந்த த்யாகு திரும்ப அதே குரல் இன்னும் கிட்டத்தில் வந்து அதையே கேட்டதும் சடக்கென்று தலை நிமிர்ந்தான்.



அதிக உயரம், பருமனில்லாத ஒரு மனிதர்.

வெள்ளை பாண்ட், வெள்ளைச் சட்டை, அளவாக வெட்டி விடப்பட்ட கிராப். தெளிவான முகம். தடிமனாய் கண்ணாடி ஃப்ரேம். அதற்குப் பின்னாலிருந்து சிநேகபாவத்துடன் சிரிக்கும் கண்கள்.

யார் இவர்?

எரிச்சலுடன் முகத்தைச் சுளுக்கியவன், மருந்துப் பொட்டலங் களை வைத்திருந்த கை உதறுவதைப் பல்லைக் கடித்துச் சமாளிக்க முயன்றான்.

"முதல்லே ஸ்லீப்பிங் டேப்லட்ஸ் வாங்கப் பாத்தீங்க... அது கிடைக்காமப் போனப்புறம் எலிமருந்தை வாங்கிட்டீங்க... அப்படித்தானே...!"

மெதுவாக, ஆனால் தெளிவாக அந்த மனிதர் கேட்கவும், த்யாகு அரண்டுபோய் மெள்ள எழுந்து நின்றான்.

யா...யார் இவர்?

என் நடவடிக்கைகளை இவர் ஏன் கண்காணிக்கிறார்?

போலீஸா?

பயத்தில் இதயம் திடுக்திடுக்கென்று அடித்துக்கொள்ளத் துவங்கியது.

"யு ஆர் எஜுகேட்டட், ஆர்ன்ட் யூ?"

"..........."

"ட்ரிங்க் கிடைக்கலேன்றதுக்காக இப்படி ஒரு முடிவுக்கு வந்திட்டீங்களா?"

இப்போது த்யாகுவுக்கு நிஜமாகவே ரொம்ப பயமாக இருந்தது.

அடுத்தடுத்து எல்லாவற்றையும் துருவித்துருவிக் கேட்கிறாரே யார் இவர்?

ஜோஸியம் தெரியுமா?

படித்தவன்தானே என்கிறார்? குடி கிடைக்காததால் தற்கொலை முயற்சியா என்கிறார்... ஐயோ...! இவர் ஸி.ஐ.டி.-யா?

கண்ணோரங்களில் ஜலம் கட்டிக்கொள்ள, என்னை வார்த்தைகளால் ஏன் துன்புறுத்துகிறீர்கள் என்ற பார்வையுடன் நின்றவன், சின்னக் குரலில் ''யார் நீங்க?'' என்றான்.

அந்த மனிதர் புன்னகைத்தார். அப்புறம் ''உங்க ஃப்ரெண்ட்'' என்றார்.

''எனக்கு யாரும் ஃப்ரெண்ட் இல்லே... உங்களுக்கு என்ன வேணும்?''

''எனக்கு ஒன்னும் வேண்டாம்... முடிஞ்சா, நா உங்களுக்கு உதவ முடியுமானு பார்க்கறேன். தட்ஸ் ஆல்...''

''நோ, யு காண்ட் ஹெல்ப் மீ... அண்ட் ஐ டோண்ட் வாண்ட் எனி ஹெல்ப் ஃப்ரம் எனிபடி...''

சிடுசிடுப்புடன் பேசிவிட்டு நடக்க ஆரம்பித்தவன், இரண்டடி போவதற்குள் திடுமென்று கண்களை இருட்டினதில் தடுமாறிய போது அந்த மனிதர் தாங்கிக் கொண்டார். ''ரிலாக்ஸ்... வீணா பதட்டப்படாதீங்க!'' என்றார்.

கண்களை அழுந்த மூடித் திறந்த த்யாகு தன்னை ஆசுவாசப் படுத்திக்கொள்ள முயன்றான்.

உடம்பின் உபாதை தாங்கமுடியாததாய் இருந்தது. வெட்டி வெட்டி வலித்தது. மண்டைக்குள், வயிற்றுக்குள் நாலு பேர் ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் எதையோ ரம்பத்தால் அறுக்கிற வேதனையாய் இருந்தது.

அழவேண்டும்போல தொண்டை இறுகிப்போனது.

சமாளித்துக்கொண்டு எதிரில் நின்றவரை வெறித்தான்.

''யார் நீங்க? போலீஸா?''

அவர் இல்லை என்று தலை ஆட்டினார்.

''பின்னே என்னைப் பத்தின விவரங்கள் உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''பத்து நிமிஷம் முன்னால மருந்து வாங்க நீங்க கடைக்கு வந்தப்போ, நா அங்கே இருந்தேன். தூக்க மருந்து வேணும்னு கேட்டப்போ, நீங்க பதட்டத்தோட இருந்த மாதிரி தோணிச்சு... மருந்து இல்லேன்னதும் 'ட்ரிங்கும் கொடுக்க மாட்டாங்க, சாகவும் உதவி பண்ணமாட்டாங்க...'னு சரளமா இங்கிலீஷ்லே திட்டிக்கிட்டு என்னைத் தாண்டிப் போனீங்க... உங்களுக்கு ஏதோ ப்ராப்ளம் இருக்குனு பின்னாலேயே வந்தேன். எலி மருந்து வாங்கினீங்க. ரெண்டும் ரெண்டும் நாலுனு சொல்ல கம்ப்யூட்டரா வேணும்?...''



''அப்போ நீங்க நிச்சயம் போலீஸ் இல்லையா?''

''ம்ஹூம்...''

போலீஸ் இல்லை என்றதும் அடிவயிற்றில் தோன்றியிருந்த பயம் மறைந்து கோபம் லேசாகத் தலை தூக்கியது.

''சரி, நா தூக்க மாத்திரே கேட்டேன், கிடைக்கலை. இப்ப எலி மருந்து வாங்கிட்டேன். விஷயம் புரிஞ்சுடுத்து இல்லியா? இன்னும் ஏன் என்கூடவே நின்னுண்டு இருக்கேள்? உங்க வேலையைப் பாக்கப் புறப்பட வேண்டியதுதானே?''

அந்த மனிதர் த்யாகுவை ஊன்றிப் பார்த்தார். அப்புறம் ''உங்க பிரச்னை என்னனு நா தெரிஞ்சுக்கலாமா?'' என்றார் நிதானமாக.

''ஏன்? தெரிஞ்சுண்டு என்ன பண்ணப்போறேள்? தீர்த்து வைக்கப் பாப்பேளா?''

''ஐ'ல் ட்ரை...''

''கிழிச்சேன், ஆளாளப்பட்டவாளாலேயே என் ப்ராப்ளமைச் சரிபண்ண முடியலையாம்...''

''விவரம் தெரிஞ்சாத்தானே முடியுமா முடியாதானு சொல்லமுடியும்?''

''தெரிஞ்சாலும் உங்களால எதுவும் பண்ணமுடியாது. வீணா உங்க நேரத்தை விரயம் பண்ணிண்டு என்னையும் தொந்தரவு பண்ணாதீங்கோ... லெட் மீ கோ...''

''ஜஸ்ட் எ மினிட் ப்ளீஸ்!'' - திரும்பியவனின் தோளில் அந்த நபர் கை வைத்துத் தடுத்தார்.

அரை நிமிஷம் யோசிக்கிற தினுசில் நின்றவர் கவனத்துடன் வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்துப் பேசினார்.

''ஓ.கே. எதுவும் சொல்ல விருப்பம் இல்லாட்டி வேணாம்... பட், எனக்கு நீங்க ஒரு உதவி பண்ணமுடியுமா? மணி இப்ப அஞ்சாகுது.. இன்னிக்கு எனக்கு விரத நாள். சூரியன் அஸ்த

மனமானதும் ஒரு அந்நியருக்கு அன்னதானம் பண்ணிட்டு நா என் விரதத்தை முடிக்கிறது வழக்கம். என்கூட என் வீட்டுக்கு வந்து ஒரு வாய் சாப்டுட்டுப் போனீங்கன்னா, ஐ'ல் பீ தாங்க்ஃபுல்.''

த்யாகு கண்களை இடுக்கிக்கொண்டு அவரைப் பார்த்தான்.

விரதமா? இவரா? அதை நிறைவேற்ற இவர் வீட்டுக்கு நான் போய்ச் சாப்பிடவேண்டுமா? என்ன இது? இதெல்லாம் நம்புகிற சமாசாரமாய் இல்லையே? முதலில் சாகப் போகிறாயா - என்றார். அப்புறம் உன்னைப் பற்றின விவரங்களைச் சொல், உதவ முயற்சிக்கிறேன் - என்றார். இப்போது என் வீட்டுக்கு வந்து சாப்பிட்டுவிட்டுப் போ - என்கிறார்... என்ன இதெல்லாம்? ஒருவேளை பைத்தியமா?

த்யாகுவின் சந்தேகங்கள் புரிந்த மாதிரி அவர் மென்மையாய்ச் சிரித்தார்.

''என்னடா சம்பந்தா சம்பந்தம் இல்லாமப் பேசறானேனு யோசிக்கிறீங்களா? உங்களை என் பேச்சக் குழப்பி இருந்தா ஐ'ம் ஸாரி - உங்களைப் பாத்தா பசிச்சவர் மாதிரி தோணிச்சு..., அதான் கேட்டேன்... தப்புன்னா மன்னிச்சிடுங்க...''

த்யாகு யோசித்தான்.

நிஜமாகவேதான் சாப்பாடு போடக் கூப்பிடுகிறாரா? முகத்தைப் பார்த்தால் கண்ணியமானவராகத்தானே தெரிகிறார்? போய்ப் பார்க்கலாமா? பசி காதை அடைப்பது நிஜம்தானே? ஒருவேளை, சாப்பாட்டுடன் விஸ்கியும் கொடுப்பாரோ என்னமோ? போய் வயிறு முட்டச் சாப்பிட்டு, குடித்துவிட்டு ரூமுக்குப் போய் எலிமருந்தைச் சாப்பிடலாமா? சாகும்முன் ஒரு வேளையாவது திருப்தியாகக் குடித்து சாப்பிட்டுவிட்டுச் செத்தால் என்ன?

நப்பாசை எட்டிப் பார்த்ததும் த்யாகு முதல் தடவையாக அவரைப் பார்த்துப் புன்னகைத்தான்.

''ஆல்ரைட் - உங்க விருப்பத்தைக் கெடுப்பானேன் - பட் - ஐ காண்ட் ஈட் மச்... ஏதோ உங்க திருப்திக்குக் கொஞ்சம்...''

''தாங்க்யூ... ஐ'ம்... ராஜன்.''

நீட்டிய கையை த்யாகு தயக்கத்துடன் பிடித்தான். பின் ''ஐ'ம் த்யாகு'' என்று தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டான்.



''என் கார் அங்க நிக்குது, போலாமா?''

மெதுவாக நடந்து ராஜன் திறந்துவிட்ட கதவு வழியாக முன் ஸீட்டில் அமர்ந்து கொண்டபோது த்யாகுவுக்கு ட்ராமா, சினிமாவில் வருகிற மாதிரி என்ன இதெல்லாம் என்றே தோன்றியது.

முன்பின் தெரியாத நபர்... சாப்பிட அழைக்கிறார். விரதம் என்கிறார்... இவருக்குக் கிடைக்காத ஏழைகளா? வொய் மீ? நானும்தான் ஆகட்டும்... சாவதற்காக எலிமருந்தை வாங்கியவன், ட்ரிங்குக்கு ஆசைப்பட்டு இப்படி அறிமுகம் இல்லாதவர் காரில் ஏறுமளவுக்குத் துணிந்து விட்டேனே! கதையில்தானே இப்படிப் பட்ட நம்பமுடியாத சம்பவங்கள் வரும்...?

பத்து நிமிஷங்களில் வண்டி வீட்டை அடைவதற்குள் ராஜன் தன்னைப் பற்றின விவரங்களைச் சொன்னார். தான் ஒரு வசதியான பேச்சிலர் என்பதை, பெற்றவர்கள் நாலு வருஷங்களுக்குமுன் இறந்துவிட்டதை, ஒரே அக்கா யு.எஸ்-ஸில் இருப்பதை, சொந்தமாய் ஒரு விளம்பரக் கம்பெனி நடத்தி வருவதைச் சொன்னார்.

ராஜனின் வீடு சின்னதாய், அடக்கமாய் இருந்தது.

சுற்றிலும் சின்னத்தோட்டம்...

ரோஜா, பால்ஸம், ஹார்லிஹாக்ஸ் பூத்துச் சிரித்தன. புல் பச்சையாய்ப் பல்லைக் காட்டியது...

''வாங்க த்யாகு...உள்ள வாங்க...!''

வராந்தாவைக் கடந்து ஹாலுக்கு வந்து உட்கார்ந்தார்கள்.

அலங்காரம் சொல்லும்படியாக இல்லாவிட்டாலும் கச்சிதமாய், சுத்தமாய் இருந்தது.

''என்ன சாப்பிடறீங்க? ஹாட், ஆர் கோல்ட்? முதல்லே ஏதாவது குடிச்சிட்டுப் பொறுமையா சாப்பாடு சாப்பிடலாம், என்ன?''

குடிச்சிட்டு என்றதும் த்யாகுவின் நாவில் நீர் சுரக்க ஆரம்பித்தது.

குடி...ஹா...விஸ்கி...இவரிடம் கேட்டுப் பார்க்கலாமா?

''வந்து...எனக்கு...வ...ந்து... விஸ்கி இருக்கா உங்ககிட்டே?''

இவன் இப்படிக் கேட்பான் என்று எதிர்பார்த்த மாதிரி ராஜன் அனுசரணையாய்ப் பார்த்தார்.

''விஸ்கியா..? குடிக்கறதைப் பத்தி ஒண்ணும் இல்லே... ஆனா இன்னிக்கு விரதம் ஆச்சேனு பாக்கறேன்... நா லைசென்ஸ் ஹோல்டர்தான். ஆனா, கொஞ்சா நாளா குடிக்கறதில்லே... அதனால ஸ்டாக் எதுவும் வீட்டுலே இல்லே... வேணா நாளைக்குக் கடை திறந்ததும் உங்களுக்குத் தேவாயனதை நானே வாங்கித் தரேன்... இப்ப கோல்டா மில்க் தரச் சொல்லட்டுமா?''

''நாளைக்கு நிச்சயமா வாங்கிடலாமா?''

''ஓ எஸ்... நோ ப்ராப்ளம்... என் லைசென்ஸ் வீணாத்தான் போகுது.''

கைவசம் ட்ரிங்க் இல்லை என்கிறார். நாளைக்குத் தருகிறேன் என்கிறார்... வேறு என்ன செய்வது? பேசாமல் பாலைக் குடித்து விட்டு லாட்ஜுக்குப் போய்விடலாம். அங்கு வேலுவை சாராயம் வாங்கித்தரச் சொல்லலாம். காலையில் திரும்ப இவரைச் சந்தித்து விஸ்கி வாங்கிக் குடித்துவிட்டு, மத்தியானமாய் எலிமருந்து சாப்பிடலாம்... விஸ்கி கிடைக்கிறபோது அதை விடுவானேன்!

''எக்ஸ்கியூஸ் மீ!'' - ராஜன் எழுந்து உள்ளே போய்விட்டு இரண்டு நிமிஷத்தில் திரும்ப வந்தார். கையில் ஜில்லென்று ஒரு க்ளாஸ் பால்.

''நாளைக்குக் குடிக்கப் போற ட்ரிங்கை நினைச்சுக்கிட்டு இப்ப இந்தப் பாலைக் குடிச்சுடுங்க... அந்த பீடியை ஆஷ்ட்ரேல போட்டுடுங்க. இண்டியா கிங்ஸ் பாக்கெட் வாங்கி வர ஆள் அனுப்பியிருக்கேன்... இப்ப வந்துடும்...''

சொன்னபடி, சீக்கிரமே இண்டியா கிங்ஸும், ஒரு தட்டில் ஸாண்ட்விச்சுகளும் வந்தன.

ஒரு ஸாண்ட்விச்சைத் தின்றபின் சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்த த்யாகு புகையை நெஞ்சில் நிரப்பிக்கொண்டான்.

ஆ...ஹா..!

என்ன சுகம் இது...!

நல்ல சிகரெட்டைப் புகைத்துக்கூட எத்தனை நாட்களாகி விட்டன!

கண்களை மூடிப் புகையை உள்ளுக்குள் வாங்கி அனுபவித்த படி த்யாகு இருப்பதைக் கலைக்க விருப்பம் இல்லாதவர் போல



ராஜன் சில நிமிஷங்களுக்குப் பேசாமல் இருந்தார். அப்புறம் சன்ன த்வனியில் கேட்டார்.

''உங்களை ஒண்ணு கேக்கலாமா? தப்பா நினைச்சுக்க மாட்டீங்களே?''

''ம்..ம்..''

''நீங்க ஒரு ஆல்ஹஹாலிக்கா த்யாகு?''

மண்டையில் அடித்து எழுப்புகிற மாதிரி சுற்றி வளைத்துப் பேசாமல் ராஜன் கேட்டதும், த்யாகு திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தான். பதில் சொல்ல விருப்பம் இல்லாமல் பேந்தப்பேந்த விழித்தான். உதடுகள் கோணி, கைகள் நடுங்குவதைக் குறைக்க முயற்சிப்பதுபோல அவசரமாய் சிகரெட்டை இரண்டு தரம் இழுத்தான்.

''நா உங்களைப் புண்படுத்தணும்னு இந்தக் கேள்வியைக் கேட்கலை... ப்ளீஸ் அண்டர்ஸ்டாண்ட்...''

''..............''

''உங்களை நா முழுமையா தெரிஞ்சிக்க விரும்பறேன். எதனால எலிமருந்து வாங்குற அளவுக்கு வாழ்க்கை வெறுத்துப் போயிட்டீங்கனு நா தெரிஞ்சிக்க விரும்பறேன்... சொல்வீங்களா?''

இவரால் எல்லாவற்றையும் எப்படி ஊகிக்க முடிகிறது! என் நெற்றியில் நான் ஒரு ஆல்கஹாலிக் என்று எழுதி ஒட்டி விருக்கிறதா?''

ஓ.கே. தெரிந்துவிட்டது...ஸோ..வாட்...?

த்யாகு விரக்தியாகச் சிரித்தான்.

''என்னைப் பத்தின விவரம் தெரிஞ்சு என்ன பண்ண உத்தேசம்? சாப்பாடு போடறதுக்காக உங்களுக்கு என்கதையைச் சொல்லி நா எண்டர்டெயின் பண்ணணும்னு எதிர்பாக்கறேளா?''

''உங்ககிட்ட நா ஏற்கெனவே சொன்ன மாதிரி, ஐ வாண்ட் டு ஹெல்ப் யூ...''

''தட்ஸ் இம்பாஸிபிள்... ஆளாளைப்பட்ட டாக்டர் ரெட்டி வைத்தியத்துக்கே டிமிக்கி கொடுத்தவன் இந்த த்யாகு தெரியுமா?''

''எந்த டாக்டர் ரெட்டி... சைக்கியாட்ரிஸ்ட்டா?''

''எஸ்... அவரேதான். நாணாவோட தொந்தரவு சகிக்க முடியாம அவரைப் பாத்து ட்ரீட்மெண்ட் எடுத்துண்டு, அவன் மணிலாக்குப் போனதும் திரும்ப பழைய குருடி கத...'' சட்டென்று த்யாகு பேசுவதை நிறுத்திவிட்டு எழுந்து நின்றான்.

''வீணா என் வாய ஏன் கிண்டறேள்? இதனால உங்களுக்கு என்ன லாபம்? ம்..? சாப்பாடு போடறேன்னு அழைச்சுண்டு வந்தது, ஊர்க் கதைய பேசறதுக்கா? நா கிளம்பறேன்...''

காதுக்குள் இரைச்சல் கேட்பதை அடக்குவதுபோல த்யாகு கைகளால் காதுகளை மூடிக்கொண்டான்.

திரும்ப கண்களை இருட்டிக்கொண்டு வந்தது.

என்ன அவஸ்தை இது!

''உட்காருங்க த்யாகு. நிக்க முடியாம உடம்பு எப்படிப் பதறுதுனு பாருங்க... ப்ளீஸ் ரிலாக்ஸ்...!''

''இல்லே... நா போறேன்...''

''வந்தது வந்தீங்க... சாப்டுட்டுப் போயிடலாம்... இதோ ஆயிடுச்சு... ப்ளீஸ்...!''

த்யாகு இருப்புக்கொள்ளாமல் சோபாவில் சாய்ந்தான். சிகரெட்டை வாயில் வைத்து நீளமாய் இழுத்தான்.

''நீங்க கல்யாணம் ஆனவரா த்யாகு?''

''ம்ம்...''

''இப்ப உங்க வொய்ஃப் எங்கே? நாணானு சொன்னீங்களே, அவர் எங்கே?''

சுர்ரென்று கோபம் சீற, த்யாகு விலுக்கென்று எழுந்தான்.

மரங்கொத்தியின் கொத்தல் போதாது என்று இவரும் சேர்ந்துகொண்டு பிடுங்குகிறாரே!

''எங்கயோ? உங்களுக்கு என்ன ஸார்? சும்மா தொண தொணனு..! எனக்கு எந்த விவரமும் சொல்ல இஷ்டம் இல்லேனு நா சொல்லச்சொல்ல விடாம பிடுங்கினா என்ன அர்த்தம்? நா போறேன்...''

நெஞ்சும் உடம்பும் ஏகமாய் ஆட்டம் போட ''நா போறேன்... எனக்கு ட்ரிங்க் வேணும்... உங்க சாப்பாடும் வேண்டாம். ஒரு



மண்ணாங்கட்டியும் வேண்டாம்...'' என்று சொல்லியவண்ணம் த்யாகு கிளம்பின நிமிஷத்தில் இரண்டு ஆண்கள் வேகமாய் வெளியிலிருந்து உள்ளே வந்தார்கள்.

''போன் பண்ணா உடனே வராம என்ன இத்தனை லேட்டாக்கிட்டீங்க? இவரை நிறுத்தி வைக்கிறதுக்கு நா எத்தனை சிரமப்பட வேண்டியிருந்தது தெரியுமா?'' - ராஜனின் வரவேற்பைக் கேட்டு த்யாகு திடுக்கிட்டு நிமிர்ந்தான்.

போன் பண்ணி வரவழைத்தாரா?

யார் இவர்கள்?

என்னைத் திட்டம் போட்டு நிறுத்தி வைத்தாரா?

வொய்?

மண்டைக்குள் அருவியொன்று மகா சப்தத்துடன் கொட்ட முற்பட, த்யாகு அவசரமாய் வாசலைப் பார்க்க நகர்ந்தான்.

''எங்க கிளம்பிட்டீங்க?...சுந்தர் அவரைப் பிடிங்க... தாமஸ், இஞ்செக்ஷன் ரெடியா?''

தாமஸ் என்ற ஆள் கையோடு கொண்டுவந்திருந்த ப்ரீஃப் கேஸைத் திறந்து இஞ்செக்ஷன் சிரிஞ்சில் மருந்து ஏற்றவும் த்யாகு வெலவெலத்துப் போனான்.

எதற்காக இஞ்செக்ஷன்?

யார் இவர்கள்?

சட்டென்று முன்பு படித்திருந்த 'கோமா' புத்தகத்தின் நினைவு வந்தது.

நன்றாக இருப்பவர்களை ஊசி போட்டு மயங்க வைத்து சிறுநீரகம், இருதயம் போன்ற உறுப்புகளை வெட்டி விலைக்கு விற்கும் கும்பலைப்பற்றிப் படித்தது ஞாபகத்துக்கு வந்தது.

இவர்களும் அப்படிப்பட்டவர்களா?

என்னைக் கோமாவில் ஆழ்த்த முயல்கிறார்களா?

நோ...நோ...ஓ...ஓ...

''நா போறேன்... என்னை விட்டுடுங்கோ... ப்ளீஸ்... ப்ளீஸ்...!''

''சொல்றதைப் பதட்டப்படாமக் கேளுங்க த்யாகு... இது வந்து...''

''வேண்டாம், எதுவும் கேட்கவேண்டாம்... லெட் மீ கோ...''

முரட்டுத்தனத்துடன் திமிறிக்கொண்டு த்யாகு அலற, ராஜன், சுந்தர் அவனை அழுந்தப் பிடித்துக்கொண்டார்கள்.

ஊசி கைச் சதையில் சுருக்கென்று ஏறியது...

''யூ பாஸ்டர்ட்... நல்லவன் போல நடிக்க ஏமாத்திட்டயேடா... நீ ஒரு பொறுக்கி... ஸ்கௌண்ட்ரல்... வடிகட்டின அயோக்கியன்... நீ...நீ...''

குரல் எடுத்துக் கத்திய நிமிஷத்தில் உடம்பில் அவஸ்தை விவரிக்க முடியாத வகையில் விஸ்வரூபம் எடுக்க, அப்படியே சரிந்து தரையில் விழுந்த த்யாகு, பெரிசாய் அழ ஆரம்பித்தான்.

# 33

''த்யாகு...! என்ன இது! குழந்தை மாதிரி மனசு தளர்ந்து ஏன் இப்படி அழுவறீங்க?... த்யாகு கமான், கெதர் யுவர்செல்ஃப்... உங்களுக்கு ஒண்ணும் ஆகலை. உங்களுக்கு இப்ப தாமஸ் கொடுத்தது சாதாரண காம்போஸ் ஊசிதான். டாக்டர் ரெட்டிகிட்ட ட்ரீட்மெண்ட் எடுத்துகிட்டதா சொன்னீங்களே, அப்ப அவர் உங்க பதட்டத்தைக் குறைக்க இந்த மருந்தைக் கொடுத்திருப்பாரே... இங்க பாருங்க த்யாகு... நாங்க உங்க ஃப்ரண்ட், உங்களுக்கு உதவ விரும்பறோம். சத்தியமா எங்களுக்கு வேற எந்த நோக்கமும் இல்லே... கொஞ்சம் கண்ட்ரோல் பண்ணிகிட்டு நா பேசறதைக் கேளுங்க... த்யாகு... ப்ளீஸ்...!''

பக்கத்தில் மண்டியிட்டு அமர்ந்து, தோளில் ஒரு கை வைத்து, சீரான குரலில் ராஜன் பேசுவதைக் காதில் வாங்காமல் த்யாகு தன் அழுகையைத் தொடரவே செய்தான்.

''டாக்டர் தாமஸ் என் ஃப்ரண்ட். நா போன் பண்ணதால சுந்தர்கூட இவரும் வந்திருக்கார். உங்க பதட்டத்தையும் டெலிரியம் ட்ரெமர்ஸையும் குறைக்க மாத்திரைங்களுக்குச் சக்தி பத்தாதுனு



தெரிஞ்சிதான் தாமஸ் இஞ்செக்ஷன் கொடுத்திருக்கார். என்ன ஊசி இது, எதுக்காக கொடுக்கறார்னு நா உங்களுக்கு விளக்க முயற்சி பண்ணேன். ஆனா, அதுக்கு நீங்க இடம் கொடுக்கலை. நாங்க என்னமோ உங்களுக்குக் கெடுதல் பண்ணறோம்னு நினைச்சிட்டு கத்திட்டீங்க... இங்க பாருங்க த்யாகு... ப்ளீஸ் லிஸன் டு மீ... உங்க நிலைமை உங்க வேதனை, எங்க மூணு பேருக்குமே நல்லா புரியுது... உங்களை நாங்க புரிஞ்சிக்கிட்டதாலதான் இப்ப உங்களுக்கு உதவணும்னு ஆசைப்படறோம்... நிதானத்துக்கு வந்து நா பேசறதைக் கேளுங்க. ப்ளீஸ் காம் யுவர்செல்ஃப். மருந்து வேலை பண்ணி, உங்க படபடப்பை அடக்க இடம் கொடுங்க. வீணா முரண்டிக்கிட்டு வேதனையை அதிகரிச்சிக்காதீங்க. கமான் த்யாகு... லிஸன் டு மீ... நாங்க உங்க ஃப்ரண்ட்ஸ்... அதை நினைப்புல வைச்சிக்குங்க. நாங்க உங்களுக்கு உதவ விரும்பறோம். ரிலாக்ஸ் த்யாகு... ரிலாக்ஸ்.''

அன்றொரு நாள் நாணாவும், பிற்பாடு டாக்டர் ரெட்டியும் 'நான் உன் நண்பன் - ரிலாக்ஸ்' என்று சொல்லித் தன்னை அணுகிய விதத்திலேயே, மெதுவான, ஆனால் அழுத்தமான குரலில் ராஜன் பேசுவதாக மனசுக்குத் தோன்ற, த்யாகு பிரிட்டுக்கொண்டு எழுந்த கேவல்களை அடக்க முயற்சித்தான். நடுங்கும் கைகளைத் தொடைக்கடியில் செருகிக்கொண்டு மெள்ள பார்வையை நிமிர்த்தி ராஜனைப் பார்த்தான்.

நிஜம்தானா?

இவர் சொல்வதெல்லாம் நிஜம்தானா?

நம்பலாமா?

என்மேல் இவருக்கு என்ன அக்கறை?

சாயங்காலம் இவரை நான் சந்திக்கும்வரை இவர் கறுப்பா, சிவப்பா என்பது எனக்குத் தெரியாதே!

அப்புறம் இவருக்கு ஏன் இந்தக் கரிசனம்?

நாடகமாடுகிறாரா?

எதற்காக?

என்னிடம் என்ன எதிர்பார்த்து?

ஆனால் முகத்தையும் பேச்சையும் பார்த்தால் தப்பாக எதுவும் நினைக்கத் தோன்றவில்லையே...

த்யாகு லேசாக சமாதானமடைந்து யோசிக்கும் நிமிஷத்தைத் தனக்குச் சாதமாக்கிக்கொள்ள விரும்புவது போல ராஜன், இண்டியா கிங்ஸ் சிகரெட் ஒன்றை எடுத்துப் பற்றவைத்து அவனிடம் நீட்டினார்.

''எடுத்துக்குங்க த்யாகு... உங்க நரம்புகளுக்கு இந்த இதம் இப்ப தேவை. படபடப்பைக் குறைக்க இந்தப் புகை நிச்சயம் உதவும். எடுத்துக்குங்க.''

அவர் நீட்டிய சிகரெட்டை த்யாகு நடுங்கும் கரத்தால் வாங்கினான். அவசரமாக நாலு தரம் இழுத்தான். வாய் வழியாக உள்ளுக்குள் சென்ற புகை நுரையீரலில் பரவி கணத்தில் மூளைக்குப் பாய்ந்து, எகிறிக்கொண்டிருந்த நரம்பு மண்டலத்தை மென்மையாகத் தடவிக் கொடுக்க...

ம்...ம்...ம்...ம்...

உடம்பை இது நாழிகை முறுக்கியெடுத்த ராக்ஷஸன் தன் கனத்தைக் குறைத்தான். கண்களைக் கிறிக்கொண்டு எழுந்த நீர் அடங்கியது. மார்புக்கூட்டுக்குள் பறந்த பறவைகள் சப்தத்தைக் குறைத்துக்கொண்டு உட்காரத் தொடங்கின.

காம்போஸ் வேலைசெய்ய ஆரம்பித்துவிட்டதா? அதோடு இந்த சிகரெட் புகையும் சேர்ந்து உடம்பின் அவஸ்தைகளைக் குறைக்கப் பார்க்கின்றதா?

''எழுந்திருங்க த்யாகு; லெட் மீ ஸப்போர்ட் யூ... என்மேல சாஞ்சிகிட்டே எழுந்து சோபால சௌகரியமா உட்கார்ந்து ரிலாக்ஸ் பண்ண முயற்சியுங்க... ப்ளீஸ்...!''

மறுப்புத் தெரிவிக்கக்கூட வலுவின்றி உட்கார்ந்திருந்த த்யாகுவை, ராஜனும் சுந்தருமாய் எழுப்பி, சோபாவில் உட்கார வைத்தார்கள்.

யார் இவர்கள்?

என் மேல் இவர்களுக்கு அக்கறை எழக் காரணம் என்ன?

ஆதாயம் எதுவும் இல்லாமல் எனக்கு உதவி செய்ய ஏன் முன்வருகிறார்கள்?

ஏன்?

ஏனோ?



த்யாகு அயர்ச்சியுடன் ராஜனை ஏறிட்டான். அப்புறம் சின்னக்குரலில் ''வாட் ஈஸ் இட் யு வாண்ட் ஃப்ரம் மீ?'' என்றான்.

ராஜன் அவன் பக்கத்தில் அமர்ந்தார்.

அரை நிமிஷம்போலப் பேசாமல் இருந்துவிட்டு ''ஏ.ஏ. அதாவது - ஆல்கஹாலிக்ஸ் அனானிமஸ் பத்தி நீங்க கேள்விப்பட்ட தில்லையா த்யாகு?'' என்று பதில் கேள்வி எழுப்பினார்.

ஆல்கஹாலிக்ஸ் அனானிமஸா?

ஆல்கஹாலிக்... தெரியும்...

ஆனால் இதைத் தெரியாதே...!

குடிகாரனின் அடுத்த கட்டமா இது!

இல்லை... புது வியாதியா?

த்யாகு வெற்றுப்பார்வை பார்த்தான்.

''தெரியாதா த்யாகு? நிஜமாவா இந்த அமைப்பைப் பத்தி நீங்க கேள்விப்பட்டதில்லே? ஓ.கே. நா விளக்கறேன்... கவனமா கேளுங்க.. ஒரு காலத்துல குடிகாரர்களா இருந்து பிற்பாடு இந்தக் குடிப்பழக்கம் நமக்கு ஒத்துக்காது. இது நமக்கு நன்மையைவிடத் தீமையைத்தான் அதிகம் செய்யுதுனு புரிஞ்சு போய், எப்படியோ அந்தப்பழக்கத்துலேந்து விடுபட்டு வந்தவங்க எல்லாம் ஒண்ணு சேர்ந்து உண்டாக்கி இருக்கும் ஒரு அமைப்புதான் இந்த ஆல்கஹாலிக்ஸ் அனானிமஸ். நாப்பத்தியோரு வருஷம் முன்னால அமெரிக்காவுலே ஆரம்பிக்கப்பட்ட இந்த ஸ்தாபனத்துக்கு இப்ப தொண்ணூத்திரண்டு நாடுகளிலே ஒரு கோடிக்கும் மேற்பட்ட அங்கத்தினர்கள் இருக்காங்கன்னா, உங்களால அதை நம்ப முடியுதா த்யாகு?''

அலாதி சிரத்தையுடன் நிதானமாக ராஜன் கூறிய சமாசாரம் ஏதோ புள்ளிவிவரம்போல மனசில் பதிய த்யாகுவுக்கு மேற்கொண்டு அவர் பேச்சைக் கேட்கச் சலிப்பாக இருந்தது.

பள்ளிக்கூடத்தில் பாடம் எடுக்கிற மாதிரி இது என்ன கேள்வி?

ஏதோ ஒரு அமைப்பு, குடிகாரர்களாய் இருந்தவர்களுடன் சம்பந்தப்பட்டது.

இதற்குக் கோடி அங்கத்தினர் இருந்தால் என்ன, இல்லை பத்து கோடி இருந்தால்தான் என்ன?

எதற்காக இதைப்பற்றி என்னிடம் கூறி அறுக்கிறார்?

நான் ஒரு ஆல்கஹாலிக்... ரொம்ப சரி... ஆனால் குடித்துக் கொண்டிருக்கும் என்னிடம் குடியை விட்ட இந்த அமைப்பைப் பற்றி ஏன் பேசவேண்டும்?

ஒருவேளை - மெம்பர் ஆகிவிடு; நூறு ரூபாய் கட்டி அங்கத்தினராகி விடு - என்று ஆள் சேர்க்கத்தான் இத்தனை முஸ்திபோ?

பத்து ரூபாய்க்கு வழி இல்லாத தன்னிடம் எதையோ எதிர்பார்த்து ராஜன் மன்றாடுவது சிரிப்பை உண்டாக்க, 'ஆளை விடுகிறீர்களா?' என்ற பார்வையுடன் த்யாகு முன்னால் சாய்ந்து உட்கார்ந்தான்.

''ஸாரி... உங்க பேச்சைக் கேட்கற மனநிலைலே இப்ப நா இல்லே... வீணா நீளமா பேசி, உங்க எனர்ஜிய விரயமாக்க வேண்டாம்... காம்போஸ் போட்டு, சிகரெட் தந்து என் படபடத்தைக் குறைக்க உதவினதுக்கு தாங்க்ஸ். நா புறப்படறேன்...''

எழுந்தவனின் கையை ராஜன் பற்றினார்.

''ஏ.ஏ. பத்தி நீங்க தெரிஞ்சிக்க ஆவலா இருப்பீங்கனு பேசிட்டேன், ஸாரி... அதுக்காக நீங்க இப்ப கிளம்ப வேண்டாம்... உட்காருங்க... சாப்பாடு கொண்டுவரச் சொல்றேன். சாப்டுட்டுப் புறப்படுங்க...''

சாப்பாடு... சனியன் பிடித்த சாப்பாடு... ஒரு ட்ரிங்குக்கு வழி இல்லையாம்... அப்புறம் சாப்பாடு என்ன பெரிய்ய சாப்பாடு...

ராஜனை வெறித்துப் பார்த்த த்யாகுவுக்குக் கோபம் எழுந்தது.

சரியான அறுவைக்கேஸாக இருப்பார் போலிருக்கிறதே... போகிறேன் என்று கிளம்பினால்கூட விடாமல் இது என்ன க்ருஹச்சாரமாக இருக்கிறது!'

அவனுக்குள் உருவாகும் கோபத்தை உணர முடிந்த மாதிரி ராஜன் சமாதானமாகப் பேசினார்:

''ட்ரிங்க் வாங்கிக் கொடுத்து உங்களை நாளைக்கு அனுப்பலாம்னு நா நினைச்சேன்... காலைல எட்டு மணிக்குக் கடை



திறந்திடுவாங்க... நீங்க என்னடான்னா இப்பவே புறப்படறேன்னு சொல்றீங்க... அப்புறம் உங்க இஷ்டம்...''

த்யாகுவின் பலவீனமான இடத்தை ராஜன் வருடிவிட, அவன் மீண்டும் சோபாவில் சரிந்தான்.

ட்ரிங்க்...விஸ்கி... அதற்காக என்ன வேணுமானாலும் செய்யலாமே!

''முதல்ல சூடா இட்லி எடுத்துவரச் சொல்றேன்... பேசிக்கிட்டே சாப்பிடலாம். இன்னொரு சிகரெட் பாக்கெட் வாங்கிவரச் சொல்லட்டுமா?''

அவன் பதிலுக்குக் காத்திராமல் ராஜன் ஆளை அழைத்து இட்லி கொண்டுவரச் சொன்னார். சுந்தர், தாமஸூம் கூட உட்கார்ந்துகொள்ள, பேசிக்கொண்டே ஒரு தட்டில் இரண்டு இட்லிகளை வைத்து, சாம்பார் ஊற்றி த்யாகுவிடம் நீட்டினார்.

''என்னைப் பத்திக் கொஞ்சம் சொல்ல விரும்பறேன், கேட்கறீங்களா த்யாகு? நா பிறந்து வளர்ந்தது பம்பாய்ல... அப்பா வசதியானவர். நாங்க இரண்டு பசங்க... அக்கா, நா. அக்கா நல்லா படிப்பா, பாடுவா - ஆல் ரவுண்டர். நா அதுக்கு நேர் எதிர். சின்ன வயசுலேந்தே அக்கா மேல அப்பாக்கு அலாதி ஆசை. இதனால அக்கா, அப்பாவைக் கண்டா எனக்கு அடிமனசுலே ஒரு வெறுப்பு... நா காலேஜ் படிக்கிறப்போ அம்மா ஒரு ஆக்ஸிடெண்ட்லே இறந்துட்டாங்க... அதுக்கப்புறம் வீட்டுலே எனக்குக் கொஞ்சம் இருந்த அட்டாச்மெண்ட்டும் குறைஞ்சிப் போச்சி... பணத்துக்குப் பஞ்சமில்லே. நிறைய சிநேகிதங்க. குடி, சிகரெட், பெண்கள் இதெல்லாம் எனக்கு ரொம்பச் சின்ன வயசுலேயே பழக்கம்...''

ஒரு இட்லியைக் கஷ்டப்பட்டுத் தின்று முடித்துப் ப்ளேட்டைக் கீழே வைத்த த்யாகுவுக்குக் கொஞ்சங்கூடக் கூச்சமில்லாமல் நாலு பேர் நடுவில் இவர் எதற்காக அந்தரங்கமான விஷயங்களையெல்லாம் பேசுகிறார் என்று ஆச்சரியமாக இருந்தது.

''வீட்டுக்கு இஷ்டம் போல வருவேன். அப்பா, அக்கா ஏதாவது கேட்டா எதிர்த்துப் பதில் பேசுவேன்... இது நடுவுலே அக்கா கல்யாணமாகி யு.எஸ். - ஸுக்குப் போனதும் மனசுலே ஒரு நிம்மதி, சனியன் ஒழிஞ்சுதுனு! அந்த வருஷம் முன்னால ஒரு நாள்... ராத்திரி...

அன்னிக்கு நா ஏகமா குடிச்சிருந்தேன்... அப்பாக்கு திடீர்னு ஹார்ட் அட்டாக் வந்திடுச்சி... போன் வேலை பண்ணலை... டாக்டர்கிட்ட அழச்சிட்டுப் போடானு கெஞ்சறாரு. நா 'போய்யா கிழம், ஃபஸ் பண்ணாதே'னு சொல்லிட்டுத் திரும்பிப் படுத்துத் தூங்கறேன். என்னோட இந்த நடத்தைக்கு அடிமனசுலே அவர் மேல இருந்த கோபம் காரணமா - இல்லை முழுக்கமுழுக்க என் போதை காரணமானு இப்பவும் எனக்குத் தெரியலை - ஒரே பிள்ளை நா ப்ளாக் அவுட் ஆகிப் படுத்திருக்கிறப்போ நாதி இல்லாம அவர் செத்துப்போனார்.. சாவுக்கு வந்த அக்கா ஒண்டானு என்னை ஒரு வார்த்தை கேட்காட்டாலும் எனக்குள்ள இருந்த குத்தஉணர்வாலே அதிகமாகக் குடிக்க ஆரம்பிச்சேன்... அப்பத்தான்... என் நல்ல காலம், மிஸ்டர் அஷோக்குமாரைச் சந்திச்சேன்... அவர் ஏ.ஏ. மெம்பர்.. மெள்ளமெள்ள பொறுமையா அவரும், அக்காவுமா என்னோட பாடுபட்டுக் குடிப்பழக்கத்திலேந்து எப்படியோ என்னை மீட்டுட்டாங்க... நாலு வருஷமாச்சு நா இப்ப குடியை விரலால தொட்டு..."

ஓ! இந்த ராஜன் ஒரு காலத்தில் குடிகாரராக இருந்தவரா? அதுவும் அப்பா உடம்புக்கு முடியாமல் அவஸ்தைப்படுவதுகூடப் புரியாதபடி போதை ஏறும் அளவுக்குக் குடித்தவரா? பார்த்தால் நம்ப முடியவில்லையே! நோ...ஐ வோண்ட் பிலீவ் ஹிஸ் ஸ்டோரி.

ஆமாம் - எதற்காக இதையெல்லாம் இவர் என்னிடம் சொல்லவேண்டும்?

நான் விட்டுட்டேன், நீயும் விடு என்பதற்காகவா?

என்னிடம் இவருக்கு என்ன அப்படி ஈடுபாடு? இல்லை... இவர் மனசில் எதையோ வைத்துக்கொண்டுதான் இப்படிப் பேசுகிறார்.

"என் பேச்சைக் கேட்டே இப்படிப் பிரமிச்சுப் போயிட்டீங்களே.. இன்னும் சுந்தர் கதையைக் கேட்டா என்ன சொல்வீங்களோ! கமான் சொல்லுங்க சுந்தர்..."

சுந்தர் வயசில் சின்னவராக இருந்தார். முப்பது இருந்தால் அதிகம்.

சாதாரணக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவராம். அங்கங்கே த்யாகுவின் இளமைக்காலத்தின் சாயல்.



சண்டை போடும் அப்பா, அம்மா; மட்டம் தட்டும் சகோதரர்கள் - சதா தாழ்வுமனப்பான்மை.

பாண்டிச்சேரியில் வேலை பார்க்கத் துவங்கியபோது, மதுப்பழக்கம் உண்டாயிற்று. கல்யாணம் ஆகி, இரண்டு குழந்தைகள் பிறந்த பிறகு கூடவே வளர்ந்தது. ப்ரமோஷன் கிடைக்காமல் போன வருத்தத்தில் அதிகமாகி... ரொம்ப அதிகமாகி...

"வேலை போச்சு த்யாகு... மானம், மரியாதை எல்லாம் போச்சு... கையிலே பத்து காசு இல்லாத அளவுக்கு எல்லாம் போச்சு... ஒருநாள் என் மனைவி யார்கிட்டயோ அரைப்படி அரிசி கடன் வாங்கிச் சோறு பொங்கிக்கிட்டிருந்தா... குழந்தைங்க பசிலே துவண்டு உட்கார்ந்திருந்தாங்க... வொய்ஃப் உப்போ, எதுவோ எடுக்க அந்தப் பக்கம் போனப்போ நா என்ன பண்ணேன் தெரியுமா? அலுமினிய குண்டான்ல கொதிச்சுக்கிட்டிருந்த அரிசிய தரைல கொட்டிட்டு, குண்டானை எடுத்துப்போய் அடகு வைச்சு அந்த மூனு ரூபாய்க்குச் சாராயம் குடிச்சேன்... ராஜனோட தொடர்பு கிடைச்சித் திருந்திட்ட இன்னிக்கும்கூட 'அரிசி, சோறானதும் கொட்டிட்டுப் போயிருந்தா பசங்க பசியாவது தீர்ந்திருக்குமே, ஆனா அந்தப் பத்து நிமிஷம் பொறுக்காம அரிசிய வெந்ததும் வேகாததுமா கொட்டிட்டு சாராயம் குடிக்கப் போனேனே'ங்கறதை நினைக்கிறப்ப எல்லாம் நா துடிக்கிற துடிப்பு இருக்கு பாருங்க... காட்...! இட் ஈஸ் டெரிபிள்! கடவுள் புண்ணியத்துலே அனுசரணையான மனைவியோட நல்ல நேரமும் கூடிவந்ததால இன்னிக்குத் திரும்ப நா மனுஷனாகி வேலை பார்த்து, என் மனைவி குழந்தைகளுக்கு இதமான கணவன், தகப்பனா இருக்கேன்..."

பேசி முடிப்பதற்குள் சுந்தரின் விழியோரங்களில் ஈரம் கட்டிக்கொண்டது. குரல் தழுதழுத்தது.

"என் வேதனை உங்களுக்குப் புரியாதுனு சொன்னீங்களே, இப்பப் புரியுதா அத்தனையும் நாங்களே அனுபவிச்சிருக்கோம்னு? உங்களுக்கு எங்களால உதவ முடியும்னு நா ஏன் சொன்னேன்னு இப்பப் புரியுதா த்யாகு? உங்களைப் பத்தின விஷயங்களைச் சொல்லி நாங்க உங்களுக்கு உதவ அனுமதிப்பீங்..."

"நோ.. மாட்...டேன்.."

அவரை மேலே பேசவிடாது த்யாகு கத்தினான்:

''சொல்லமாட்டேன். எனக்கு உங்களால உதவ முடியாது. உங்களுக்கு உங்க அன்பான அக்கா, சுந்தருக்கு இதமான மனைவி இருந்தா... எனக்கு? எனக்கு யாருமே இல்லை... நா ஒரு அநாதை... க்ளினிக்ல சேர்ந்து வைத்தியம் பார்த்தும் சரியான நா விமோசனம் இல்லாத கேடுகெட்ட மனுஷன். எனக்கு உங்க இரக்கம் வேண்டாம்... இப்ப நா ரத்த வாந்தி எடுக்க ஆரம்பிச்சுட்டேன். இனியும் படிப்படியாக தேஞ்சு அவஸ்தைப்படறதுக்கு முன்னால நானே அழியறதுதான் சரி... குடி இல்லாமல் எனக்குச் சரிப்படாது. நா ரொம்ப முத்தின கேஸ். சாவுதான் எனக்கு விமோசனம்... லெட் மீ டை. லெட் மீ கோ... என்னைத் தடுக்காதீங்கோ... ப்ளீஸ்! நா போறேன், போறேன்..''

வெறி அதிகமாக, குளிர் ஜுரம் கண்ட நிஜுசில் உடம்பு நடுங்க, த்யாகு எழுந்து நிற்கவும், ராஜன் சட்டென்று பேசினார்:

''ஆல்ரைட்... எங்க உதவி உங்களுக்குத் தேவை இல்லாட்டி விட்டுடுங்க... ஆனா... இந்த ராத்திரி நேரத்துல இத்தனை படபடத்தோட நீங்க வெளியே போறது ஆபத்து... உங்களுக்கு இப்ப ட்ரிங்க் வேணும், அதானே? ஓ.கே. ஐ'ல் கெட் விஸ்கி ஃபார் யூ. இந்த உதவியாவது பண்ணி உங்க வேதனையை நா குறைக்கறேன். சுந்தர், இவருக்கு அரை டம்ளர் பாலோடு மல்டி வைட்டமின், வாலியம் கொடு, நா போய் சாந்திலால்கிட்டயிருந்து ஒரு பாட்டில் வாங்கிட்டு வரேன்... சீக்கிரமா நா வந்திடறேன்... அதுவரைக்கும் உங்க படபடப்பு குறைய, பாலும் டாப்லெட்ஸும் எடுத்துக்குங்க... என்ன த்யாகு?''

ராஜன் கார் சாவியுடன் அவசரமாக வெளியே வந்தார்.

ட்ரிங்க் வரப்போகிறது என்ற எண்ணம் நெஞ்சில் பரவி இனிப்பாய் இனிக்க த்யாகு, சுந்தர் கொடுத்த பால், மாத்திரைகளைக் கஷ்டப்பட்டு விழுங்கினான்.

நெஞ்சு எரிந்தது. வயிறு திருகித்திருகி வலித்தது.

பாட்டில் வந்ததும், அதை வாங்கிக்கொண்டு - தாங்க்ஸ்! நீங்கள் சொன்னதைப்பற்றி யோசித்துவிட்டு நாளைக்கு உங்களைச் சந்திக்கிறேன் என்று சாது மாதிரி சொல்லி லாட்ஜுக்குப் போய்விட வேண்டும்.

ஆசை தீரக் குடித்துவிட்டு, அந்த விஸ்கியிலேயே எலி மருந்தைக் கலந்து குடித்து, விடிவதற்குள் இந்த உலகத்திலிருந்து பறந்துவிட வேண்டும்.



இதுதான் சரி..

இதுதான் சரி..

சோபாவில் சாய்ந்து த்யாகு கண்களை மூடிக்கொண்ட நிமிஷத்தில், அசுரத்தனமான வைராக்கியம் அவன் நெஞ்சுக்குள் அழுத்தமாக, அசைக்கமுடியாமல் ஏறி உட்கார்ந்திருந்தது.

# 34

வசுக்குட்டி சிரிக்கிறாள்..

''அண்ணா வா''... என்கிறாள்.

கழுத்தைக் கட்டிக்கொண்டு 'அண்ணா, ஆனை வெள்ளாட்டுண்ணா' என்று கெஞ்சுகிறாள்.

த்யாகு முட்டிக்கால் போட்டு முதுகில் தங்கையை ஏற்றிக்கொள்கிறான்.

ஆனை ஆனை அழகர் ஆனை...
அழகரும் சொக்கரும் ஏறும் ஆனை
குட்டி ஆனைக்கு கொம்பு முளைச்சதாம்
பட்டணமெல்லாம் கொட்டி சிரிச்சிதாம்!

அண்ணாவின் முதுகில் சவாரி செய்யும் வசுக்குட்டிக்கு ஏகக் குஷி... கையைத் தட்டிக்கொண்டு கலகலவென்று சிரிக்கிறாள்.

வசு...

வசுக்குட்டி...

வசும்மா...

அ...ம்...மா...

எல்லாரும் என்னை விட்டுவிட்டு எங்கே போய் விட்டீர்கள் அம்மா?

அ...ம்...மா..

உட்கார்ந்த நிலையிலேயே தூங்கிவிட்ட த்யாகு நெளிந்தான்.

மூச்சு விடுவது ரொம்ப சிரமமாக இருந்தது.

நெஞ்சுமேல் திம்மென்று கனமாய் ஒரு பாறாங்கல்...

கண்களைப் பிரிக்கமுடியாமல் கம் வைத்து ஒட்டிவிட்டது யார்?

கண்ணைத் திறக்க முடியவில்லையே...

ஒரே இருட்டாக இருக்கிறதே...

ஐயோ... நா குருடாகி விட்டேனா...

பேச்சுக் குரல் கேட்கிறதே...

யார்? யார் குரல் அது?

தெ... தெரிந்த குரலாக இருக்கிறதே..

யா...யார் அது?

பிரயத்தனத்துடன் த்யாகு கண்களைத் திறந்தான்.

மசமசவென்று உருவங்கள்...

வாட்ட சாட்டமாய் அங்கே உட்கார்ந்திருப்பது யார்?

எழுந்து வந்து முகத்தருகில் குனிந்து 'த்யாகு' என்பது யார்?

கண்களில் நீர் பிரவாகமெடுக்க இரண்டு கைகளாலும் இறுக அணைத்துக்கொள்வது யார்?

யார்.. யார்?

''நா..நா.. நாணா..''

அடிவயிற்றிலிருந்து ஓலமாக எழுந்தது த்யாகுவின் குரல்.

''நாணா...டே நாணா.. இது நீதானேடா? இல்ல, செத்த முன்னாடி கனவுலே வசுக்குட்டிய பார்த்த மாதிரி நா கற்பனை பண்ணிக்கறேனா? நா..ணா.. என்ன விட்டுட்டு எங்கடா போயட்டே...? நா சீரழிஞ்சு சிரிப்பா சிரிக்கட்டேன்டா... நா..ணா... நா...ணா...ஆ...ஆ...''

மேலே பேசமுடியாதபடி த்யாகுவின் நாக்கு இழுத்துக் கொண்டது. உதடுகள் கோணின. நெஞ்சுக்கூட்டுக்குள் ஆயிரமாயிர மாய் பட்டாம்பூச்சிகள் பறந்தன. மண்டையைப் புழுக்கள் குடைய ஆரம்பித்தன.



''த்யாகு... நா உன்னோட நாணாதான்டா... நா வந்துட்டேன்டா. இனிமே உனக்கு ஒரு குறையும் இல்லே. உன் கையைப் பிடிக்கக்க வந்துட்டேன். எங்க, என்னப் பாரு.. ரிலாக்ஸ் த்யாகு... கன்ட்ரோல் யுவர்செல்ஃப்...வீணா பதட்டத்துக்கு இடம் கொடுக்காதடா... டே.. த்யாகு... லிஸன்... லுக் அட் மீ...''

ஒரு நிமிஷம் எதுவும் புரியாமல், எதுவும் பேசாமல் நண்பன் அணைப்பில் கட்டுண்டு பெரிசாய் அழுத த்யாகு நினைத்துக் கொண்டு சட்டென்று நாணாவின் பிடியில் இருந்து தன்னை விடுவித்துக்கொண்டான். நடுங்கும் கைகளை முன்னே ஆட்டி... ''நோ... நோ... நீ என்னை இந்த நிலைல பாக்கக் கூடாது... நா பாவி! மகா பாவி..! நீ ஏன் வந்தே? எப்படி வந்தே? உன்னை யார் இங்க அழைச்சுண்டு வந்தா? போயிடு... நாணா... நீ உடனே போயிடு... என்னோட பேசாமப் போயிடு... ப்ளீஸ்டா... போடா... நீ போகமாட்டேன்னா நா போயிடறேன்... நீ என்னைப் பாக்கக்கூடாது... நோ...'' பதட்டத்தோடு பேசின த்யாகு, முகத்தைக் கைகளால் மறைத்துக்கொண்டு இரண்டாக மடித்தான். ''ஏன்டா இன்னிக்கு வந்தே? ஒருநாள் தாமதமா வந்திருக்கப்படாதாடா நாணா? நா செத்து ஒழிஞ்சு மண்ணோட மண்ணானப்புறம் வந்திருக்கப்படாதாடா... ஏன்டா இப்ப வந்தே? கேவலமான மிருகமா என்ன இப்ப பார்த்துட்டயேடா நாணா... உன் சிநேகிதன் எந்த நிலைமைலே இருக்கான்கற உண்மை தெரிஞ்சு உன் மனசு உடைஞ்சு போச்சாடா? ஐயோ... நா...ணா... நா என்னடா பண்ணுவேன்! போயிடுடா... இல்லே, என்னப் போக விடுடா... ப்ளீஸ்... ப்ளீஸ்!'' ஓங்கித் தலையிலும் முகத்திலும் அறைந்துகொண்டு த்யாகு கட்டுக் கடங்காமல் வீறிடத் தொடங்கவும் அதிர்ந்துபோய் நாணா ராஜனைப் பார்த்தான்.

'நா எதிர்பார்த்த ரியாக்ஷன்தான் இது' என்று மெல்ல முனகின ராஜன் தாமஸிடம் 'கிவ் ஹிம் ஒன் மோர் ஷாட்' என்று சொல்லி, த்யாகுவை மற்றவர்களின் உதவியுடன் பிடித்துக்கொள்ள, இரண்டு நிமிஷத்தில் இன்னொரு ஊசியை தாமஸ் போட்டார்.

''நா...ணா..நா...ணா...'' வாய் ஓயாமல் அரற்றும் நண்பனை இறுக அணைத்து, ''ரிலாக்ஸ்டா... உனக்கு இனிமே ஒன்னுமே இல்லே... நா வந்தாச்சு பாரு... த்யாகு... தேத்திக்கோடா... கன்ட்ரோல் யுவர்செல்ஃப்...'' என்று சன்ன த்வனியில் நாணா திரும்பச் சொல்ல, கால்மணியில் த்யாகு கொஞ்சம் அடங்கினான்.

கைத்தாங்கலாக அவனைப் பிடித்து சோபாவில் படுக்க வைத்த பின் நாணா அவன் பக்கத்தில் அமர்ந்து கையைப் பற்றிக்கொண்டு நிதானமாகப் பேசினான்:

''நடந்தது அத்தனையும் எனக்குத் தெரியும்டா த்யாகு... நீ வீணா அலட்டிக்காதே... பேசாம அப்படியே படுத்துண்டு நா சொல்லறதைக் கேளு. வி ஓ எ லாட் டு மிஸ்டர் ராஜன்... நீ ஒரு சாகத் துணிஞ்ச ஆல்கஹாலிக்; தூக்கமாத்திரை இல்லாததால எலிமருந்து வாங்கறேங்கறதைப் புரிஞ்சுண்டு, சமயோஜிதமா விரதம், அது, இதுனு சொல்லி வீட்டுக்கு அழைச்சுண்டு வந்துட்டு, ட்ரிங்க் நாளைக்குத் தரேன்னு உனக்குள்ள ஆசையை மூட்டி பால் எடுக்க உள்ளே போனப்போ' சுந்தருக்கு போன் பண்ணி தாமஸோட வரச்சொல்லி, உன் படபடத்தைக் குறைக்க, உன்னைத் தன்னோட தங்க வைக்க பேச்சுக் கொடுத்து, விவரம் தெரிஞ்சுக்கறத்துக்காக பால்லே ட்ராங்குலைஸர் மாத்திரையைப் பொடி பண்ணிக் கலந்து குடிக்க வைச்சு... கடவுளே! அவர் செய்த இத்தனையும்கூடப் பெரிசில்ல த்யாகு... ஆனா, தான் ஏ.ஏ. மெம்பர்னு சொல்லியும், குடிகாரனா இருந்த தாங்க எப்படித் திருந்தினோம்னு சொல்லியும் நீ வழிக்கு வராம, ஒரு விவரமும் சொல்லாம, போறேன்னு சாகறேன்னு விடாம அடம் பண்ணப்ப, சாமர்த்தியமா 'ஃப்ரண்டுகிட்டேருந்து ட்ரிங்க் வாங்கிண்டு வரேன்'னு சொல்லிக் கிளம்பி வந்து என்னைப் பிடிச்சாரே அதுதான் ரொம்பப் பெரிசு... அர்த்த ராத்திரிலே, சரியா ரெண்டு மணிக்கு ஹோட்டலுக்கு அவர் வந்து விவரம் சொன்னப்போ நா அசந்து போயிட்டேன்! நா உனக்காக மன்னாடறதை விடுடா.. ஆனா... இவாள்ளாம்... உன்னை முன்பின் தெரியாதவாள்ளாம் - உனக்காக இப்படிப் பாடுபடறதை நினைச்சா வது உன்னை நிதானத்துக்குக் கொண்டுவர ட்ரை பண்ணுடா.. த்யாகு... ப்ளீஸ்...!''

நாணாவின் பேச்சை நம்புவது த்யாகுவுக்குக் கஷ்டமாக இருந்தது. விழிகளை விரித்து ராஜனை வெறித்தான்.

''உங்க...ளுக்கு... நா...ணாவைத் தெரியுமா?''

''ம்ஹூம் தெரியாது... ஆனா... நேத்து சாயங்காலம் உங்கிட்டப் பேச்சுக் கொடுத்தப்ப 'நாணா தொந்தரவுக்காக டாக்டர் ரெட்டிகிட்ட செய்துகிட்ட வைத்தியமே எனக்குச் சரிப்படலை'னு சொன்னீங்களே, நினைப்பு இருக்கா? நீங்க அடங்கமாட்டீங்கனு புரிஞ்சதும் ட்ரிங்க் கொண்டுவர்றதா சொல்லிட்டுக் கிளம்பின நா, நேரா டாக்டர் ரெட்டி வீட்டு அட்ரஸைத் தெரிஞ்சுகிட்டு அங்க போனேன். தூங்கிட்டிருந்தவர் எழுந்து வந்தார். நா விவரம் சொன்னதும் நாராயணன் எங்கே இருக்கார்னு சொல்லி உடனே அங்கே போகச் சொன்னதும், சோழா ஹோட்டல்லே நாராயணனை மீட் பண்ணி, கூட்டிக்கிட்டு வந்தேன்...''

நிஜமாகவா?

ராஜன் இத்தனை பாடுபட்டிருக்கிறாரா?

எனக்காகவா?

ஏன்?

விகம்பலாக த்யாகு கேட்டான்:

''ஏன் ஸார்? எனக்காக நீங்க எல்லாரும் எதுக்காக இத்தனை தொந்தர...?''

ராஜன் அவன் தோளைத்தட்டிக்கொடுத்தார்.

''உங்க வேதனையை, அவமானத்தை, கஷ்டங்களை நாங்க ஒருகாலத்துல உணர்ந்தது நிஜம்னா, இதுகூடப் பண்ணாட்டி எப்படி த்யாகு?''

ஒரு நிமிஷம் மௌனம்.

''நா இங்க வந்தப்போ நீ அசந்து தூங்கிண்டு இருந்தே... ஸோ.. உன்னை எழுப்ப விரும்பலை. டாக்டர் ரெட்டிகிட்டே பேசிட்டேன்... நாளைக்கே க்ளினிக்கிலே திரும்ப உன்னைச் சேர்த்துக்க அவர் ரெடிங்கறார்... ரொம்ப சுருக்க நீ பழைய த்யாகுவா மாறி...''

த்யாகு விலுக்கென்று தலையைத் தூக்கினான்.

திரும்ப க்ளினிக்கா?

டாக்டர் ரெட்டியா?

முடியுமா?

இல்லை... அன்று இருந்த நிலைமை வேறு... இன்று வேறு... நாணா புரியாமல் பேசுகிறான்...

அன்று கங்கா இருந்தாள். கண்ணன் இருந்தான். பணம் இருந்தது. உடம்பும் நன்றாக இருந்தது.

இன்று?

இன்று ஒன்றுமே இல்லை.

ஜ'ம் எ ஜீரோ...

எதற்கும் லாயக்கில்லாத பூஜ்யம்...

''இல்லே நாணா... நாக்ளினிக்கிலே சேரப் போறதில்லே.. இட்ஸ் இம்பாஸிபிள்.. ஏன்னா, ஆல்ரெடி என் உடம்பும், மனசும் சல்லடையா ஓட்டை விழுந்து ரிப்பேர் பண்ண முடியாத அளவுக்கு செல் அரிச்சுப் போயிடுத்து. நா...''

''டோண்ட் பி ஸில்லி... அசட்டுத்தனமா உளறாதடா. கண்டிப்பா உன்னைச் சரியாக்க முடியும்னு டாக்டர் ரெட்டி சொல்றார்.''

''நாராயணன் சொல்றதை நாங்களும் ஆமோதிக்கிறோம் த்யாகு... ரத்த வாந்தி எடுத்தா என்ன? உடனடியா கவனிச்சா அத்தனை கோளாறையும் சீர் பண்ணிடலாம். உங்களைவிட மோசமான கேஸ்களை எல்லாம் ஏ.ஏ-லே நாங்க பாத்திருக்கோம்...''

''நோ.... நோ... நா சொல்லறது உங்க யாருக்குமே புரியலை... நா பழைய த்யாகுவாகறது இனிமே இந்த ஜன்மத்துலே இல்லே... சத்தியமா இல்லே... மோர் ஓவர்... நா சரியாகி என்ன பண்ணப்போறேன்?... யாருக்காகச் சரியாகணும்? டே நாணா... கங்கா என்ன விட்டுப்போயிட்டாடா. 'உன் முகத்திலே இனிமே என் பொண்முழிக்கமாட்டா; எங்களைப் பொறுத்தவரை நீ செத்தாச்'னு சேஷன் சொல்லிட்டு அவளையும் கண்ணனையும் கூட்டிண்டு போயிட்டார்டா. இனிமே... இனிமே... நா...யா...யா... யாருக்காகா...?''

அடங்கியிருந்த அழுகை, பதட்டம் எல்லாம் ஒட்டு மொத்தமாக ஆளை ஆக்கிரமிக்க, த்யாகு பரிதவிக்கத் தொடங்கினான்.

''இல்லேடா... நீ நினைச்சுண்டு இருக்கறது அத்தனையும் தப்பு... கங்கா உனக்காக இப்ப ஏங்கிண்டு இருக்கா... இரும்ப



நல்லவிதமா உன்னோட குடும்பம் நடத்தமாட்டமானு தவம் பண்ணிண்டு இருக்கா...''

த்யாகு அவன் பேச்சை நம்பமுடியாமல் விழிக்க, நாணா மதுராந்தகத்துக்குப் போனது, பேசினது, வந்தது, இவனைத் தேடியது அத்தனையும் ஒன்றுவிடாமல் கூறினான்.

''நீ சுருக்க சரியாகணும்டா த்யாகு. கங்காக்காக, கண்ணனுக்காக, அப்புறம் நீ ஏங்கின வசுக்குட்டி உன் பெண்ணா பிறந்திருக்காளே அவளுக்காக, எங்க எல்லாருக்காக நீ சீக்கிரமே பழையபடி ஆகணும் த்யாகு.''

நாணா பேசப்பேச சந்தோஷம் ஒரு பக்கமும், சந்தேகம் ஒரு பக்கமும் த்யாகுவினுள் பிரவாகமெடுத்தன.

கங்கா மாறிவிட்டாளா?

எனக்காகக் காத்திருக்கிறாளா?

வசுக்குட்டி...

என் வசுக்குட்டி என்னிடமே வந்துவிட்டாளா?

ஆஹா...ஆஹா...

ஆமாம்... என்னால் மாறமுடியுமோ?

பழைய த்யாகுவாக மாறி வேலை பார்த்து, குடும்பம் நடத்தமுடியுமோ?

குடிக்காமல் இருக்கமுடியுமோ...?

முடியாதே... கண்டிப்பாய் முடியாதே...

நான் என்ன செய்வேன்?

தன் இயலாமை நன்றாய் உறுத்த த்யாகு தலையை வேகமாக ஆட்டினான்.

''இல்லே... என்னால குடிய விடமுடியாது. இன்னிக்கு சரினு சொல்லிடுவேன். நாளைக்குத் திரும்பக் குடிச்சிடுவேன். நா ஒரு கோழை, மனபலம் இல்லாதவன்... நா...''

ராஜன் இடைமறித்தார்:

''நீங்க பேசறது தப்பு த்யாகு... ஆல்கஹாலிஸம் ஒரு வியாதி. இதுக்கும் மனோபலத்துக்கும் நீங்க நினைக்கிற அளவுக்கு சம்பந்தம்

இல்லே... டாக்டர் ரெட்டிகிட்டே வைத்தியத்துக்கு சேருங்க, கூடவே இருந்து க்ரூப் தெரபி மாதிரி பேசி மனம் தெளியறத்துக்கு நாங்க உதவறோம். கழுத்து வரை சகதிலே புதைஞ்ச நாங்களே வெளியே வந்துட்டப்ப உங்களால ஏன் முடியாது? முடியும்... நமக்கு மேலே ஒரு சக்தி இருக்கு பாருங்க, அதைச் சரணடைஞ்சிடுங்க. 'உன்னை விட்டால் எனக்கு வேறு கதி இல்லே - என் கூடவே இருந்து என்னைக் காப்பாத்து'னு நீங்க வணங்கற கடவுள்கிட்ட வேண்டிக்கிடுங்க. கண்டிப்பா உங்களுக்குப் பலன் கிடைக்கும்.''

த்யாகுவுக்குக் கையைக் கொட்டிக்கொண்டு சிரிக்கத் தோன்றியது.

''கடவுளை நம்பறதா? சரணடையறதா? அப்படினு ஒருத்தர் இருந்தா வசு ஏன் அகாலமா செத்தா? எங்கம்மா என்னைத் தவிக்க விட்டுட்டு ஏன் செத்தா? ஒரு பாவமும் அறியாத என்னை ஏன் இத்தனை வருஷமா ஓட ஓட விரட்டறார்?''

''மடத்தனமா பேசாதடா த்யாகு... என்னமோ போறாத காலம், ஆக்ஸிடெண்ட் ஆகி வசு போனா... பின்னாடியே உங்கம்மாவும் போயிட்டா... குடிப்பழக்கத்துக்கு ஆளாகி கன்னாபின்னானு நடந்துண்டு உன் வாழ்க்கையை நீயே சீரழிச்சுண்டதுக்குக் கடவுள் மேல பழியைப் போடறியா? சரி. உன்னை ஒண்ணு கேக்கறேன், பதில் சொல்லுடா... எலிமருந்து வாங்கப் போனவனை ராஜன் ஏன்டா சந்திக்கணும்? அட் தட் லாஸ்ட் மோமெண்ட் மீட் பண்ணவர் அதோடு உன்னை விட்டுடாம, ஏன்டா தொடர்ந்து மன்னாடணும்? சொல்லி வைச்ச மாதிரி மூணு நாள் முன்னாடி வெளிநாட்டுலேந்து நான் ஏன் வரணும்? டாக்டர் ரெட்டிய ஏன் காண்டாக்ட் பண்ணணும்? ராஜன் அர்த்தராத்திரிலே டாக்டர் ரெட்டிய சந்திச்சப்போ என் ஹோட்டல் அட்ரஸை ஞாபகம் வெச்சிண்டு சரியா அவர் ஏன் சொல்லணும்? இதுலேந்தே நமக்கு மேல ஏதோ ஒரு சக்தி அத்தனையும் திட்டமிட்டு நடத்தறதுனு உனக்குப் புரியலையாடா? நீ சரியாகணும், ஆகிடுவேங்கறதை அந்தக் கடவுள் சூசகமா நமக்குத் தெரிய வைக்கிறார்ங்கறது உனக்குப் புரியலையாடா? கடவுள் இருக்கார்டா. ராஜன் சொல்ற மாதிரி அவரைச் சரணடைஞ்சுடு... பகவான் மேல பாரத்தைப் போட்டுடு... புதுத்தெம்போடு, நாளைக்கே புது த்யாகுவாகணும்னு கங்கணம் கட்டிக்கோ...''

த்யாகு எழுந்து குறுக்கும் நெடுக்கும் வேகமாய் நடந்தான்.



உடம்பு அசாத்தியமாக நடுங்கியது.

''இல்லே.. என்னால முடியாது... முடியாது...''

''முடியும் த்யாகு... நாங்க சொல்றோம் முடியும்... ஏ.ஏ. - லே நாங்க நாளையைப் பத்தி நினைக்கமாட்டோம். இன்னி பொழுதைப் பத்திதான் கவலைப்படுவோம். தூங்கி எழுந்து இன்னிக்கு ஒரு நாள் குடிக்கமாட்டோம்னு தீர்மானம் பண்ணிப்போம். ஒரேயடியா குடியை நிறுத்தணும்னா எந்தக் குடிகாரனும் சம்மதிக்கமாட்டான். ஒன் டே அட் எ டைம். இருபத்தி நாலு மணி நேரங்களை முதல்லே சமாளிக்கலாம். கொஞ்சம்கொஞ்சமாய் ஒவ்வொரு நாளா அடி எடுத்து வைக்கலாம். ஒரே ஒரு பெக் ட்ரிங்க்... அந்த ஒரு க்ளாஸ் குடி... அதுதான் இப்ப உங்களுக்கும், எங்களுக்கும் நடுவுலே உள்ள வித்தியாசம். ஒரு க்ளாஸ்னு ஆரம்பிச்சா இன்னிக்கே நாங்களும் உங்க நிலைக்கு வந்திடுவோம். அந்த ஒரு க்ளாஸை மட்டும் நோனு சொல்லக் கத்துக்கிட்டா நீங்க எங்களை மாதிரி மாறிடலாம்... அன் ஆல்கஹாலிக் ஈஸ் ஆல்வேஸ் அன் ஆல்கஹாலிக். குடி நமக்கெல்லாம் வியாதியாயிட்டது த்யாகு, ஞாபகம் வைச்சிக்குங்க... நாளை பத்தி நினைச்சு அவஸ்தைப் படாதீங்க... இன்னிக்கு அந்த முதல் பெக் குடி இல்லாம இருக்கலாம்... தட்ஸ் ஆல்... நாங்க மட்டுமில்லே, உலகத்தில் இருக்கிற கோடி ஏ.ஏ. மெம்பர்களும் இப்படித்தான் ஒவ்வொரு நாளா குடியை மறக்கப் பழகி வெற்றி கண்டாங்க...''

த்யாகு ஜன்னலிடம் சென்று கம்பியில் தலையை முட்டிக் கொண்டான்.

''உங்களால முடிஞ்சது... ஆனா... ஆனா... என்னால முடியாதே... எனக்குப் பயமா இருக்கே!''

''பயப்படவே வேண்டாம்... உங்களால ஈஸியா முடியும்... முதல் பெக்கை வேணாம்னு சொல்ல மட்டும் கத்துக்கிட்டா போதும்... அப்புறம் ரொம்ப சுலபம்...''

''நா உன்கூடவே இருக்கேன்டா... டாக்டர் ரெட்டி இருக்கார், கங்கா, குழந்தைகள் இருக்கா... அப்புறம் என்ன த்யாகு? உன்னால முடியும்டா...''

''நிச்சயம் முடியும் த்யாகு... நாங்க சொல்றோம் முடியும்...''

முடியுமா?

நிஜமாகவா?

சத்தியமாகவா?

ஜன்னலின் வழியாக த்யாகு வெறித்தபோது சூரியன் உதயத்துக்குத் தயாராகிக்கொண்டிருப்பது புரிந்தது.

கறுத்த வானம் கொஞ்சம் சிவக்கத் தொடங்கியது.

முடியுமா?

தெய்வம் என்று ஒன்று உண்டா?

அது கருணை காட்டுமா? தயை செய்யுமா?

அம்மா சொல்லுவாளே அது என்ன ஸ்லோகம்?

'யா தேவி சர்வ பூதேஷு தயா ரூபேணே ஸம்ஸ்திதா.

நமஸ்தஸ்மை, நமஸ்தஸ்மை, நமஸ்தஸ்மை நமோ நமஹ'

-எந்த தேவி சர்வ ஜீவராசிகளிடமும் கருணை வடிவில் உறைந்திருக்கிறாளோ, அவளுக்கு நமஸ்காரம். அவளுக்கு நமஸ்காரம். அவளுக்கு நமஸ்காரம்.

அ...ம்...மா...

உண்மையாகவே எனக்குக்கூட கருணை உண்டா?

நான் அத்தனை உள்ளங்களிலும் கருணாஸ்வரூபிணியாக வியாபித்திருக்கிறேன் என்பதை நாணா, ராஜன் இவர்கள் மூலமாக எனக்குக் காட்டுகிறாயா?

'ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ

அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுசஹ...'

-உன் கடமையெல்லாம் அறவே நீத்துவிட்டு என்னையே சரணடை, பாபங்களிலிருந்து உன்னை நான் விடுவிப்பேன். வருந்ாதே.

'தூயோமாய் வந்துநாம் தூமலர்தூ வித்தொழுது

வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க,

போயபிழையும் புகுதருவான் நின்றனவும்,

தீயினில் தூசாகும் செப்பேலோர் எம்பாவாய்...'

த்யாகு பார்த்துக்கொண்டிருக்கையிலே பூமியை உதைத்துக் கொண்டு தீப்பந்தாய், ஜ்வலிக்கும் செங்கோளமாய், முழுமையாய்,



பூரணமாய், இதமாய், ஆனந்தமாய் சூரியன் கிளம்ப, மலர் தூவி அவனை வரவேற்பது போல அடிவானம் சிவப்பாய் சிவந்து போயிற்று. ஆஹா! இது என்ன.

ஆகாசத்துக்கும், பூமிக்குமாய் விஸ்வரூபம் எடுத்து அபயஹஸ்தம் நீட்டுவது யார்?

தெய்வமே...!

கடவுளே...!

வாய் அரற்றியது...

தொண்டை இறுகியது.

கண்களில் நீர்ப் பூக்கள் பூத்தன.

அம்மா...

ஹே! தெய்வமே!

தான் வாழப்போகும் புது வாழ்க்கையின் பிரதிபலிப்பாக, நம்பிக்கையுடன் உதித்த சூரியனை நோக்கிக் கைகூப்பி வணங்கிய த்யாகுவின் கண்களிலிருந்து நீர் பொங்கிச் சரமாகக் கன்னங்களில் கோடு போட்ட நிமிஷத்தில், அவனை நெருங்கித் தோளைப் பற்றின நாணா - நான் இருக்கிறேன், இனி ஆயுசுபர்யந்தம் உன்னோடு - என்று சொல்லும் தினுசில் நண்பனை இறுக அணைத்துக்கொண்டான்.

(ஒரு மனிதனின் - த்யாகுவின் கதை
நம்மைப் பொறுத்தவரை முடிந்தது.)

## சில பாராட்டுரைகள்

1-3-81 ஆனந்த விகடன் இதழில் தாங்கள் ஆசிரியருக்கு எழுதிய கடிதம் கண்டேன். அதில் நீங்கள் குறிப்பிட்டுள்ள ஈரோட்டுக்காரர் எனது மைத்துனர்தான். தற்போது குடிப்பழக்கத்தைவிட்டு நன்றாக உள்ளார். இந்தப் பழக்கத்தை மன தைரியத்தால்தான் திருத்தமுடியும் என்று நினைத்தோம். ஆனால் டாக்டர் ராமச்சந்திரன் அவர்களின் பாலிகிளினிக்கில் சேர்ந்த பத்துப் பதினைந்தே நாளில் மாறிவிட்டார் என்று நினைக்கையில், நாங்கள் அடையும் சந்தோஷத்திற்கு அளவே இடையாது. கணவரின் குடிப்பழக்கத்தால் மனம் நொந்து கொண்டிருந்த எனது அக்கா தற்பொழுது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளார். தங்களின் அன்பான அறிவுரைகளாலும், டாக்டர் அவர்களின் திறமையாலும் இவ்வளவு விரைவில் குடிப்பழக்கத்தை மறந்துவிட்டதற்கு தங்களுக்கு எப்படி நன்றி சொல்வது என்றே தெரியவில்லை.

**சென்னிமலை**

**ஆர். ரமேஷ்**

எழுத்தின் மூலம் சமூகத்திற்குச் சிறந்த பணி செய்ய முடியும் என்பதை இந்த நாவலின் மூலம் நிரூபித்து விட்டீர்கள்.

சிறந்த காவியமாக நெஞ்சில் நிறைந்து நிற்கிறது தியாகுவின் கதை. இத்தகைய அருமையான கதையை எழுதிய உங்களது கரத்தைக் கண்களில் ஒற்றிக்கொள்ளவேண்டும் என விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல; உங்கள் கதையினால் பெண் எழுத்தாளர்கள் அனைவரும் பெருமை அடையும் விதத்தில் எங்களில் ஒருவர் செய்த சாதனை இது என்று மகிழ்ச்சியுடன் நிமிர்ந்து நிற்கிறோம்.

**சென்னை - 5**

**கமலா சடகோபன்**



ஆனந்த விகடனில் தாங்கள் எழுதிவரும் 'ஒரு மனிதனின் கதை' தொடர்கதையைப் படித்து வருகிறேன். பொதுவாகவே பல மாறுபட்ட சூழ்நிலைகளை நிலைக்களனாகக் கொண்டு எழுதுவதில் திறமைமிக்க தாங்கள், இந்தக் கதையில் மதுவுக்கு அடிமையான ஒருவனைச் சித்திரிக்கிறீர்கள். உண்மையில் இந்தக் கதையைப் பாதியிலிருந்துதான் படிக்கத் தொடங்கினேன். மதுவின் தீமையை எடுத்துக்காட்டுவது இருக்கட்டும்; மது ஒரு மனிதனை என்னென்ன செய்கிறது என்பதைத் தத்ரூபமாக எழுதுகிறீர்கள்.

நடை, சம்பவம், கற்பனை இவற்றுடன் சமூகத்திற்கு மிகவும் தேவையான நல்ல நாவல் ஒன்றைத் தாங்கள் எழுதி வருகிறீர்கள்.

**சென்னை - 1**

**விக்கிரமன்**

அன்றாடம் கிடைக்கும் அற்ப சொற்ப ஊதியத்தைச் சாராயக் கடைக்குப் போய்க் குடித்துவிட்டு, அறிவைத் தொலைத்துவிட்டு வீட்டிற்கு வருகிறான் கணவன். அடுப்பிலே பூனை தூங்கிக் கொண்டிருக்க, கொண்டுவருவான் கூலியை என்று மனைவி காத்திருக்க, பச்சிளங்குழந்தை பசியால் துடித்துத் தூங்கிவிடும் நேரத்திலே இவன் வருகிறான் - வெறுங்கையோடு. "ஒன்று மில்லையா?" என்று கேட்டு மனைவி அழுகிறாளே, அந்தக் கொடுமையை அனுமதிக்கவே கூடாது. எந்த நாட்டிலுமே குடிகாரன் குடிப்பது தவறு என்று ஒப்புக்கொள்ள மாட்டான். ஆனால் நமது நாட்டிலே குடிகாரன் ஒப்புக்கொள்வான். பையன் சாராயக் கடையண்டே இருந்தான் என்று சேதிவருகிறது அப்பனுக்கு. பையன் வீட்டுப் படியேறி வரும்பொழுது, "நில்லுடா! சாராயக் கடையில் பார்த்தாங்களாமே உன்னை?" என்பான் தந்தை. "ஆமாம், பார்த்தாங்க. நீங்கள் குடிக்கவில்லையா?" என்பான் மகன். "மகனே நான்தானடா குடித்துக் கெட்டேன், நீயாவது உருப்படுவேன்னு நினைச்சேன், நீயும் இப்படியாகி விட்டாயே!" என்று புலம்புவான் தந்தை. இப்படிப்பட்ட தந்தையரைப் பெற்ற நாடு தமிழ் நாடு. இங்கு மதுவிலக்கு வெற்றியடையாது என்றால் வேறு எந்த நாட்டில் வெற்றியடையும்? அதற்கு மனமாற்றம் தேவை. அதற்கு ஒரு வித்து, "ஒரு மனிதனின் கதை."

**காந்தி ஆசிரமம்.**

**என். முனியாண்டி.**

பொதுவாகக் கதைகளையோ, தொடர்கதைகளையோ படிக்கும் பழக்கம் எனக்கில்லையென்றாலும் 'ஒரு மனிதனின் கதை' என்ற உங்கள் தொடர்கதையைத் தொடர்ந்து படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

உடல்நலனுக்கு ஒவ்வாத பழக்கத்தை வெறித்தனமாகப் பின்பற்றி அதற்கு அடிமையாகும் அன்பர்கள் நம் பரிதாபத்துக் குரியவர்கள். சூழ்நிலைகளும் சந்தர்ப்பங்களும் அவர்களை இத்தகைய நிலைக்கு ஆளாக்குகின்றன. மனோவியாதி நிபுணர்களை அணுகினால் மாற்றம் பெற வழி உண்டு என்ற அடிப்படையில் மதுவுக்கு அடிமையான ஒருவனின் கதையைத் தரமாக எழுதி வருவதைப் படித்து மகிழ்கிறேன்.

***நீடூர்.***

***ஹாஜி ஏ.எம். சயீத்.***

மக்கள் நலனில் அக்கறையும், காந்தியின் கொள்கையில் பற்றும் உள்ளதாகக் கூறிக்கொள்ளும் நமது அரசு 'ஒரு மனிதனின் கதை'யைத் திரைப்படமாக எடுத்து, மக்கள் நலனில் அக்கறை காட்டுவதாகக் கூறிக்கொள்ளும் நம் சிறந்த முன்னணி நடிகர்கள் அதில் இலவசமாக நடித்து, அப்படத்தை நமது நாட்டில் எல்லா கிராமங்களிலும், பட்டிணங்களிலும் இலவசமாகப் போட்டுக் காட்டினால் நிச்சயமாக மதுவிலக்குக் கொள்கை ஓரளவாவது வெற்றி பெறும் என்பதில் ஐயமில்லை. அரசும் அந்த வழியில் தனது கடமையைச் செய்ததாகும். தேசப்பிதாவின் ஆன்மாவும் நிச்சயமாக சாந்தி அடையும். கடலலைகளால் அரிக்கப்பட்டுள்ள கரையைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்பதற்காக அப்பகுதி மக்களையே கடலலைக்குப் பலியிடுவது முறையல்ல. அதேபோல, மதுவிலக்குக் கொள்கை வெற்றி பெறவில்லை என்பதற்காக அதனைக் கைவிட்டு சமூகத்தை மது அரக்கனுக்குப் பலியிடுவது நீதியாகாது.

***ஸ்ரீவைகுண்டம்.***

***எஸ்.வி.ஆர். தாத்தாச்சாரியார்***

ராஜாஜி அவர்கள் மதுவிலக்கு விஷயத்தில் எவ்வளவு தீவிரமாக இருந்தார் என்பது தங்களுக்குத் தெரியாததல்ல. தமிழ்நாட்டில் 25 வருட காலம் மதுவிலக்கு அமல்படுத்தப்பட்டு மது என்றாலே என்னவென்று தெரியாத ஓர் இளம் சமுதாயம் வளர்ந்தது.



அத்தகைய சமுதாயத்துக்கு அன்றைய தமிழக அரசு மதுக் கடைகளைத் திறந்துவிட்டபோது ராஜாஜியின் உள்ளம் பட்ட வேதனை சொல்லி முடியாது. அந்த வேதனையே, நூறாண்டு காலம் உயிர் வாழ்ந்திருக்கக்கூடிய அவரது ஆயுளைப் பறித்தது என்று கூடச் சொல்லலாம். இந்துக்களாகிய நாம் 'இந்த உடல் மறைந்தாலும் ஆத்மா அழிவதில்லை' என்று நம்புகிறோம். எனவே, தாங்கள் இக்கதையின் மூலம் ஆற்றியுள்ள பணிக்காக ராஜாஜியின் ஆன்மா தங்களை நிச்சயமாக வாழ்த்தும்.

***சென்னை -35.***

***எஸ்.வி.எஸ்.***

*Let me offer my heartiest congratulations on your publication of the serial 'ஒரு மனிதனின் கதை' in the Ananda Vikatan, which has had a profound impression on me and my husband and the members of my family. It has been incisively expressive, graphically descriptive and sensitively impressive of the agony of the alcoholic struggling to bring the man out of the wreckage of his own self. I have been looking forward to the Vikatan issue every week and the reading has been extremely gratifying. Once again my many, many thanks. My husband also joins me in congratulating you.*

***New Delhi -10.***

***Mrs. Jaya Krishnasawamy***

*You have rendered the greatest service to mankind. I am confident that thousands of alcoholics will benefit and turn over a new leaf. Your story has had a tremendous impact on the minds of millions of people in Tamil Nadu and other States.*

*You have done more service to the people of Tamil Nadu by writing one story than what the government and the medical profession have done for ten years and more.*

*I have been reading the story every week for the last several months with great enthusiasm. I have admired with awe and wonder your tremendous ability to write in simple and moving language about the downward path taken by a decent, respectable person addicted to drink.*

*You have taken great trouble to write about medical and quasi - medical matters in the story without the slightest flaw. Even a qualified medical man could not have written this story without mistakes cropping up.*

***Madras - 28.*** ***Dr.V. Jayaraman***

T.T. Ranganathan Clinical Research Foundation (TTK Hospital, Chennai), a pioneer centre established in 1980, treating and rehabilitating persons addicted to alcohol and other drugs over the last two decades.
Our treatment and rehabilitation services include medical management (detoxification) and psychological therapy (1 month in-house programme) for the patient along with a mandatory 15 day programme for the family.

Address:
T.T. Ranganathan Clinical Research Foundation (TTK Hospital)
17, IV Main Road, Indira Nagar,
Chennai-600020.
India.
Telephone : 91-44-24918461, 24912948, 24416458, 24426193
Fax : 044-24456078
E-Mail : ttrcrf@md2.vsnl.net.in, ttrcrf@eth.net

Website : http://www.addictionindia.org/



**W**elcome to the web site of T.T. Ranganathan Clinical Research Foundation (TTK Hospital, Chennai), a pioneer centre established in 1980, treating and rehabilitating persons addicted to alcohol and other drugs over the last two decades.

**O**ur treatment and rehabilitation services include medical management (detoxification) and psychological therapy (1 month in-house programme) for the patient along with a mandatory 15 day programme for the family. This primary treatment is followed by after care, follow-up, and vocational rehabilitation services. Our other area of specilisation is conducting free rural camps

**W**e have been acknowledged as the Regional resource training centre and our publications have been in circulation not only in India but all over the South Asian region.

**C**lick on any of the above links for details.

# About Us

## The Genesis

The T T Ranganathan Clinical Research Foundation, "TTK Hospital", is a pioneer, voluntary organization dedicated to th treatment and rehabilitation of people addicted to alcohol and other drugs.

The TTK Hospital was born of Shanthi Ranganathan's personal experience and determination. At the prime of youth, her husband, Ranganathan, fell a victim to alcoholism. This prompted a determined Shanthi to prepare herself for the purposeful task ahead – establishing a mission born of compassion and personal grief. Her vision of giving a new life to thousands of individuals affected by addiction and rebuilding their broken families became a reality due to the generosity and support of the TTK group of companies.



The T T Ranganathan Clinical Research Foundation, as it was named had its beginnings in 1980 as a day care center fo treating alcoholics. In 1985, the therapeutic services were extended to drug dependent persons as well.

Addiction management, however, is essentially a group programme. As patients began to arrive from different parts of Indi Shanthi Ranganathan felt the need to change it to an in-patient programme, thus increasing the effectiveness of treatment. I 1987, the TTK Hospital was established, a 65 bed treatment and rehabilitation center offering a month-long residenti programme. Its ambience is one of unconditional support and hope for the patients, its charm, an abundance of empathy an compassion.

## The Mission and the Vision

| | | |
|---|---|---|
| ■ | Providing quality service with utmost dedication, commitment | |
| ■ | Sharing skills, knowledge and expertise. thereby equipping professionals to spread the concept of care. | |
| ■ | Creating awareness so that more and more people make sensible choice and the number of new drug users comes down | |
| ■ | This positive social change to be felt at the | |
| | | family level |
| | | peer level |
| | | community level |

# Treatment

## Primary Treatment Programme fo Patients and their Families



**Alcoholism or drug dependency is a disease. A chron and progressive disease that leads to severe physic emotional and social problems.**

Our authentic experience in having treated over 20,00 patients during the last 30 years, has strengthened ou belief that addicts, when provided timely treatment an support, can lead qualitative lives free of alcohol and drugs.

### Objectives

The objective of the treatment is to achieve the twin goals o

| | |
|---|---|
| ■ | Total abstinence from alcohol and other drugs for life |
| ■ | Effecting positive changes towards enhancing th quality of life |

### Residential Programme

The treatment programme is a residential, multi-disciplina therapeutic programme, conducted by a team of psychiatrist, physicians, psychologists, social worker counselors and nursing staff.

**Duration : 25 days**

### Detoxification

Patients are admitted to the detoxification unit where th required medical treatment is given. Withdrawal sympto due to sudden stoppage of drug usage and health proble associated with addiction are dealt with. When the physic condition of the patient stabilizes, he is transferred to th

psychological therapy programme.

### Psychological Therapy

Psychological therapy comprises the following techniques Individual care and attention are given to patients.



- Thought for the day through a story (sharing / reflection)
- Re-educative lecture sessions (information / practical guidelines)
- Group activities (to reinforce the educational components)
- Group therapy (open sharing / mutual understanding and support)
- Individual counselling (to deal with personal issues / develop individualised treatment plan)
- Relapse prevention programme for five days (half a day each)
- Exposure to AA / NA programmes

## Free Follow-up



Follow-up form an important pa of the treatmen and is maintaine for a period o five years Patients ar encouraged t meet the Docto and the counselors regularly to see medical advic and report o their progress.

**Duration : 2- years**

### Frequency

- First year : once or twice a month

| | |
|---|---|
| ■ | Next 2 years : once every third month |

## Follow-up Support Services

| | |
|---|---|
| ■ | Medical review |
| ■ | Individual and family counselling |
| ■ | Recovery Management programme |
| ■ | Alcoholics anonymous meetings |

### Support Groups : AA and Al-Anon

Patients and family members are encouraged to atten Alcoholics Anonymous (AA) and Al-Anon meetings. Meeting are also held at the hospital premises.

# Family Programme

## Objectives

| | |
|---|---|
| ■ | To provide information about addiction |
| ■ | To help the family in coping with their emotions and problems |
| ■ | To enable them to develop trust towards the recovering person |

## Duration

Residential or outpatien
**Duration : 14 days**

### The Process

| | |
|---|---|
| ■ | Prayer |
| ■ | Thought for the day through a story (sharing and reflection) |
| ■ | Lectures (information / practical coping methods) |
| ■ | Group therapy (open sharing / mutual support / reinforcement) |
| ■ | Individual counseling (discussing specific problems) |
| ■ | Al-anon (mutual assistance in handling problems) |

### What the family learn

| | |
|---|---|
| ■ | Not to hide alcohol bottles and not search for drugs |
| ■ | Not to argue or quarrel with the addict while he is under the influence of drugs / alcohol |
| ■ | Not to ask him reasons for his drug use |
| ■ | Not to attempt to punish, threaten, bribe, preach or try emotional appeal with the addict |

In the long run, none of these methods work

### The family members learn

- To accept that addiction is a serious problem which requires professional help
- To calmly discuss addiction and related problems openly
- To stop protecting him by covering up the consequences of his drug / alcohol use
- Not to feel or give the impression that the addict is doing them a favour by not 'using'
- To start communicating honestly and openly to the other members in the family about their concerns
- To plan one day at a time and start executing their plans
- To start looking after their own needs and the needs of other members in the family
- To accept that they are not alone and realize that help is available (through self-help groups)
- To identify healthy leisure activities

### Changes that will help the family in recovery

- Sharing responsibilities with the addict
- Developing trust towards him
- Overcoming the fear of relapse
- Avoiding high expectations
- Improving communication
- Making efforts to overcome one's own short comings

### Significant features of Primary Programme

- Patients helped in a group setting wherein mutual support facilitates deeper understanding of one's problems
- Medical and psychological aspects handled simultaneously
- Family members given emotional support
- Long-term follow-up maintained
- Use of disulfiram recommended for one year
- Specific programme conducted to deal with relapses
- Efforts taken to contact patients who do not maintain follow-up

### For tariff and all other details please contact

| Address | Phone | Fax | Email |
|---|---|---|---|
| **TTK HOSPITAL** | 044-2491 2948 2491 8461 | 044-24456078 | ttrcrf@md2.vsnl.net.in ttrcrf@eth.net ttrcrf@gmail.com |
| IV Main Road | 2441 6458 | | |
| Indira Nagar | 2442 6193 | | |
| Chennai - 600 020 | 2442 0846 2442 0821 | | |

## Contact Us


**T.T. Ranganathan Clinical Research Foundation (TTK Hospital)**

17, IV Main Road, Indira Nagar,

| | | |
|---|---|---|
| Chennai-600020. India. | | |
| Telephone | : | 91-44-24918461, 24912948, 24416458, 24426193 |
| | | 91-44-24420846, 24420821 |
| Fax | : | 044-24456078 |
| E-Mail | : | ttrcrf@md2.vsnl.net.in |
| | | ttrcrf@eth.net |
| | | ttrcrf@gmail.com |


## Persons to be contacted at the TTK Hospital

**Monday to Friday - 10.00 am to 5.00 pm**
**Saturday - 10.00 am to 1.00 pm**

### Primary care treatment

**Ms. Metilda - Intake Counsellor**

### After Care treatment

**Ms. Adeline Andrews**

### Camp Programme

**Ms. Jude Jacintha**

### Relapse ward

**Ms.Sudha and Reshma**

### RRTC (Regional Resource Training Centre)

**Ms. Jacqueline David**

### Training Programme for Students of Social Work, Psychology, Nurses

**Ms. Aditi Ghanekar**

### Publications

**Ms. Jayashree Ravishankar**